
மக்சீம் கோர்க்கி
கதைகள்





மக்சீம் கோர்க்கி

•

கதைகள்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
விற்பனையாளர்கள்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்
ஓவியர்: கி. நி. யூதின்
தயாரிப்பு: அ. இ. மொயிசேயெவ்

М. Горький

ИЗБРАННЫЕ РАССКАЗЫ

На тамильском языке

Г $\frac{70302-008}{016(01)-79}$ 799—79 4702010200

பொருளடக்கம்

ஜிப்ஸி

கடலிலிருந்து வீசிய ஈரித்த குளிர் காற்று கரையில் மோதிய அலைகளது ஓசையின் சிந்தனை நிறைந்த இசையையும் கரையோரப் புதர்களின் சலசலப்பையும் ஸ்தெப்பி வெளியில் பரப்பியது. சில வேளைகளில் காற்றின் வீச்சுக்கள் சுருக்கம் விழுந்த மஞ்சள் இலைகளை வாரி வந்து நெருப்பில் போட்டுத் தழலை மூண்டெரியச் செய்தன. அப்போது எங்களைச் சூழ்ந்திருந்த இலையுதிர் கால இரவின் இருட்டு திடுக்கிட்டு, மிரட்சியுடன் நகர்ந்தது. இடப்புறம் எல்லையற்ற ஸ்தெப்பி வெளியும் வலப்புறம் எல்லையற்ற கடலும் எனக்கு நேர் எதிரே ஜிப்ஸிக் கிழவன் மகார் சுத்ராவின் உருவமும் கணப்போது தோற்றம் அளித்தன. எங்களுக்கு ஒரு ஐம்பது அடி தூரத்தில் இருந்த தன் ஜிப்ஸி முகாமின் குதிரைகளை அவன் காவல் காத்துக் கொண்டிருந்தான்.

சில்லிடும் காற்று அலைகள் சட்டையை விரித்து அவனுடைய மயிரடர்ந்த மார்பை வெளிக்காட்டி இரக்கமின்றி அடித்தன. அவனோ, அதைப் பொருட்படுத்தாமல் என் பக்கம் முகத்தைத் திருப்பியவாறு அழகும் வலிமையும் மிளிரும் பாங்கில் பாதி படுத்து, தன் பிரமாண்டமான சுங்கானிலிருந்து புகையை ஒரு சீராக இழுத்து அடர்ந்த புகைப் படலங்களை வாயாலும் மூக்காலும் விட்டுக் கொண்டிருந்தான். அவனது விழிகள் என் தலைக்கு மேலாக ஸ்தெப்பியின் உயிரற்ற மௌன இருட்டில் எங்கோ அசைவின்றி நிலைத்திருந்தன. காற்றின் கடும் தாக்குதல்களிலிருந்து தப்பும் பொருட்டு

ஓர் அங்க அசைவுகூடச் செய்யாமல் அவன் வாய் ஓயாமல் என்னோடு பேசிக் கொண்டு போனான்.

''அப்படியானால், நீ சுற்றுப் பயணம் செய்கிறாயா? இது நல்லது! நீ தெரிந்தெடுத்தது அருமையான வேலை, தம்பீ. அப்படித்தான் செய்ய வேண்டும்: எங்கும் சுற்றிப் பார். திருப்தி ஆகிவிட்டதும் படுத்து உயிரை விடு. அவ்வளவு தான்!''

''அப்படித்தான் செய்ய வேண்டும்'' என்று அவன் சொன்னதை நான் மறுத்தேன். என் சொற்களை இகழ்ச்சியுடன் முடிவு வரை கேட்டு விட்டு அவன் தொடர்ந்தான்: ''வாழ்க்கையா? வேறு மக்களா? செக்கே! உனக்கு எதற்கு இதெல்லாம்? நீ யார், வாழ்க்கை இல்லையோ? மற்றவர்கள் நீ இல்லாமலே வாழ்கிறார்கள், மேற்கொண்டும் நீ இல்லாமலே வாழ்வார்கள். நீ யாருக்கேனும் வேண்டும் என்று எண்ணுகிறாயோ? நீ உணவு அல்ல, ஊன்றுகோல் அல்ல. உன்னுடைய தேவை ஒருவருக்கும் கிடையாது.

''கற்கவும் கற்பிக்கவும் வேண்டும் என்கிறாயா? மக்கள் இன்பம் பெறச் செய்யும் வித்தையைக் கற்க உன்னால் முடியுமா? ஊகும். முடியாது உன்னால். கொஞ்சம் தலை நரைக்கும் வரை பொறுத்திரு முதலில். அப்புறம் சொல்லு, என்ன கற்பிக்க வேண்டும் என்று. எதற்குக் கற்பிக்க வேண்டும்? தனக்கு வேண்டியது என்ன என்பது ஒவ்வொருவனுக்கும் தெரியும். புத்திசாலிகள் இருப்பதை எடுத்துக் கொள்கிறார்கள். அசடர்களுக்கோ, ஒன்றுமே கிடைப்பதில்லை. தவிர, அவனவன் தானே கற்றுக் கொள்கிறான்...

''வேடிக்கையானவர்கள், உன்னுடைய இந்த மனிதர்கள். ஒரே கும்பலாகக் குமைந்து ஒருவரை ஒருவர் நசுக்குகிறார்கள். உலகத்திலேயோ, பார், இடங்கள் எவ்வளவு நிறைய'' என்று ஸ்தெப்பியின் பக்கம் கையை அகல வீசினான். ''அப்புறம், ஓயாமல் வேலை செய்கிறார்கள். எதற்காக? யாருக்காக? ஒருவனுக்கும் தெரியாது. மனிதன் உழுவதைப் பார்க்கும்போது அவன் வியர்வைத் துளியோடு தன் சக்தியையும் நிலத்தில் பெருக்குகிறான் என்று எண்ணத் தோன்றுகிறது. பின்னால் அதிலேயே கிடந்து அதிலேயே மக்கிப் போகிறான். அவனைச் சேர்ந்தது எதுவும் மிஞ்சுவதில்லை. தனது

வயலிலிருந்து எதையும் அவன் பெறுவதில்லே. எப்படிப் பிறந்தானே அப்படியே—முட்டாளாக—இறந்து போகிருன்.

''அவன் என்ன, தரையை நோண்டவும் தனக்குச் சவக்குழி கூடத் தோண்டிக் கொள்ள நேரம் இல்லாமல் மடியவுமா பிறந்தான்? அவனுக்குத் தெரியுமா விடுதலே என்ன என்பது? ஸ்தெப்பி வெளியின் பரப்பு புரியுமா? கடல் அலேயின் பேச்சு அவன் நெஞ்சுக்குக் களிப்பூட்டுமா? அவன் அடிமை. பிறந்ததுமே அடிமை ஆகி விட்டான், வாழ்நாள் முழுவதற்கும். அதுதான் விஷயம்! அவனுல் என்ன செய்ய முடியும்? கொஞ்சம் புத்தி வந்தால் சுருக்குப் போட்டுக்கொள்ள முடியும், அவ்வளவுதான்.

''நானே, இந்த ஐம்பத்தெட்டு வயதுக்குள்ளே எவ்வளவோ பார்த்து விட்டேன். நான் கண்டதை எல்லாம் காகிதத்தில் எழுதிஞல் உன்னிடம் இருக்கிறதே, பை, இது மாதிரி ஆயிரம் பைகளில் கூடக் கொள்ளாது, தெரியுமா? எங்கே, சொல்லு பார்க்கலாம், எந்த இடங்களுக்கு நான் போகவில்லே என்று! உன்னுல் சொல்ல முடியாது. நான் போயிருக்கிற இடங்கள் உனக்குத் தெரியக் கூடச் செய்யாது.எப்படி வாழ வேண்டும் என்ருல் போய்க்கொண்டே இருக்க வேண்டும், அவ்வளவுதான். ஒரே இடத்தில் நிரம்ப நேரம் நிற்கக் கூடாது—அதிலே என்ன இருக்கிறது? பகலும் இரவும் ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டு பூமியைச் சுற்றி ஓடுகின்றனவே, அதே மாதிரி வாழ்க்கையைப் பற்றிய சிந்தனேயிலிருந்து ஓட வேண்டும்—அதன்மேல் கசப்பு ஏற்படாமல் இருப்பதற்காக. ஆழ்ந்து யோசனே செய்தோமோ, வாழ்க்கை கசந்து விடும். எப்போதும் இப்படி நடக்கும். எனக்கும் இப்படி நேர்ந்தது. கெக்கே! நேர்ந்தது, தம்பீ.

''நான் சிறையில் இருந்தேன், கலிச்சீனுவில். 'நான் உலகத்தில் எதற்காக வாழ்கிறேன்?' என்று சலிப்போடு எண்ணமிட்டேன். சிறையில் சலிப்பாய் இருந்தது, தம்பீ. அட, எவ்வளவு சலிப்பாய் இருந்தது, தெரியுமா? பலகணி வழியாகத் திடல் மேல் கண்ணேட்டிய போது ஏக்கம் என் நெஞ்சைக் கவ்விக்கொண்டது. கவ்விக் கொண்டு கிட்டி போட்டு நெருக்கிற்று. எதற்காக வாழ்கிருன் என்று எவன் சொல்லுவான்? ஒருவனும் சொல்ல மாட்டான், தம்பீ. நம்மிடம் இந்தக் கேள்வியைக் கேட்கவும் தேவையில்லே. வாழ்ந்து கொண்டிரு,

அவ்வளவுதான். அதோடு நடந்து கொண்டே இரு, சுற்றிலும் பார்வை செலுத்து, ஒருபோதும் ஏக்கமே உண்டாகாது. சிறைச்சாலையில் நான் இடுப்புக் கயிற்ருல் தூக்குப் போட்டுக் கொள்ளத் தெரிந்தேன், அவ்வளவு ஏக்கம்!

''ஏதோ! ஒரு ஆளிடம் பேசினேன். கண்டிப்பான மனிதன், உங்களவன், ருஷ்யன். நாம் விரும்புகிற மாதிரி வாழக் கூடாது, வேதாகமத்தில் சொல்லி இருக்கிறபடி வாழ வேண்டும் என்ருன். கடவுளைப் பணி, நீ கேட்பதை எல்லாம் அவர் தருவார் என்று சொன்ஞன். அவன் போட்டிருந்ததோ, ஒரே கந்தல், கிழிசல். கடவுளிடம் புத்தாடை கேட்டு வாங்கிக் கொள்ளேன் என்று சொன்னேன். அவனுக்குக் கோபம் வந்து விட்டது. என்னைத் திட்டி விரட்டி விட்டான். அது வரையிலோ, மனிதர்களை மன்னிக்க வேண்டும், நேசிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தான். என் பேச்சு துரைமகஞருக்கு உறைத்தது என்ருல் என்னையும் மன்னித் திருக்கலாமே அவன். உபதேசம் பண்ண வந்து விட்டான், பெரிதாக! உண்டியைச் சுருக்கு என்று உபதேசிப்பார்கள், தாங்களோ, நாளுக்குப் பத்து வேளை தின்பார்கள்.''

மகார் நெருப்பில் துப்பி விட்டு, சுங்கானில் புகையிலையை மறுபடி திணித்தவாறு பேசாதிருந்தான். காற்று முறையிடுவது போன்று மெல்லெனச் சீழ்க்கை அடித்தது. இருட்டில் குதிரைகள் கனைத்தன. ஆர்வம் பொங்கும், கனிவுள்ள பாட்டு ஜிப்ஸி முகாமிலிருந்து காற்றில் மிதந்து வந்தது. பாடியவள் அழகி நோன்கா, மகாரின் பெண். உள்ளத்திலிருந்து ஆழ்ந்து ஒலித்த அவளுடைய குரல் எனக்குப் பழக்கமானது. அவள் பாட்டுப் பாடிஞலும் சரி, ''வணக்கம்'' என்று சொன்ஞலும் சரி, அவளுடைய குரல் அதிருப்தியுடனும் பிடிவாதத்துடனும் எப்போதும் விந்தையாக ஒலித்தது. அவளுடைய பழுப்பேறிய மங்கலான முகத்தில் அரசிக்குரிய இறுமாப்பு குடிகொண்டிருந்தது. தனது அழகின் எதிர்க்க முடியாத கவர்ச்சி பற்றிய உணர்வும் தன்னைத் தவிர மற்ற எல்லோர் மேலும் இகழ்ச்சியும் ஒருவகை நிழல் படிந்து சுரித்த அவளுடைய கரும் பழுப்புக் கண்களில் சுடர்ந்தன.

மகார் சுங்கானை என்னிடம் கொடுத்தான்.

''புகை! குட்டி நன்ருகப் பாடுகிருள், இல்லையா? அப்படிச் சொல்லு! இந்த மாதிரிப் பெண் உன்னைக் காதலிக்க

வேண்டும் என்று ஆசைப்படுகிருயா? இல்லையா? நல்லது! அதுதான் சரி. பெண்களை நம்பாதே, அவர்களிடமிருந்து ஒதுங்கிப் பிழை. பெண்ணுக்கு முத்தம் கொஞ்சுவது எனக்குச் சுங்கான் புகைப்பதை விட இன்பமானது. ஆனல் பெண்ணை முத்தம் இட்டதுமே உன்னுடைய நெஞ்சில் விடுதலை மடிந்து விடும். கண்ணுக்குத் தெரியாத ஒன்ருல் அவள் உன்னைத் தன்னேடு கட்டிப் போட்டு விடுவாள். அதை அறுக்க முடியாது. உன் உள்ளம் முழுவதையும் நீ அவளுக்கு வழங்கி விடுவாய். மெய்யாக! பெண்களைக் கண்டால் தூர விலகு! எப்போதும் பொய் பேசுவார்கள்! உலகத்தில் எல்லாவற்றையும் விட அதிகமாக உன்னைக் காதலிக்கிறேன் என்பாள் ஒருத்தி. எங்கே, அவளைக் குண்டூசியால் கொஞ்சம் குத்திப் பார், அவள் உன் நெஞ்சை வகிர்ந்து விடுவாள். எனக்குத் தெரியும்! ஏகே, எனக்கு எவ்வளவோ தெரியும்! இந்தா, தம்பீ, நடந்த கதை ஒன்றைச் சொல்லுகிறேன், கேட்கிருயா? இதை நினைவில் வைத்துக்கொள். வைத்துக் கொண்டாயானல் வாழ்நாள் பூராவும் கட்டில்லாத பறவையாக இருப்பாய்.

''ஜொபார் என்று இருந்தான் ஒரு ஜிப்ஸி இளைஞன், லோய்க்கோ ஜொபார் என்று. ஹங்கேரி பூராவும், சேக்கியாவும் ஸ்லோவானியாவும் கடலைச் சுற்றி உள்ள எல்லாத் தேசங்களும் அவனை அறிந்திருந்தன. துணிச்சல்காரப் பையன்! ஜொபாரைக் கொல்லுவதாக ஐந்து, பத்துப் பெயர் சபதம் செய்யாத கிராமம் ஒன்று கூட அந்த வட்டாரங்களில் இருக்கவில்லை. ஆனலும் அவன் தன் போக்கில் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒரு குதிரை பிடித்து விட்டது என்ருல் அந்தக் குதிரைக்குக் காவலாக ஒரு முழுப் பட்டாளத்தை நிறுத்தினலும் சரி, அவன் அதன் மேல் சவாரி செய்தே தீருவான்! ஏகே! அவன் யாருக்காவது பயந்தான் என்று நினைக்கிருயா? கிடையாது. சாத்தான் தன் பேய்க் கூட்டம் முழுவதையும் திரட்டிக் கொண்டு ஜொபாரிடம் வந்தால் அவன் சாத்தானைக் கத்தியால் குத்தாவிட்டாலும் கடுமையாகத் திட்டி நொறுக்கியிருப்பான். பேய்களுக்கோ, ஒவ்வொன்றின் மூஞ்சியிலும் ஒரு உதை கட்டாயம் கொடுத்திருப்பான். இதில் சந்தேகமே கிடையாது.

''எல்லா ஜிப்ஸி முகாம்களும் அவனை அறிந்திருந்தன,

அல்லது அவனைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தன. அவனுக்குப் பிடித்தவை குதிரைகள் மட்டுந்தான், வேறு எதுவும் இல்லை. குதிரைகளும் கூட வெகு நேரத்திற்கு அல்ல. கொஞ்சம் சவாரி செய்வான், பின்பு விற்று விடுவான். பணத்தை யார் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். அவனுக்கு எதிலுமே ஆழ்ந்த பற்று கிடையாது. உனக்கு அவனுடைய நெஞ்சு வேண்டும் என்று வைத்துக்கொள். அவனே மார்பைப் பிளந்து நெஞ்சைப் பறித்து உன்னிடம் கொடுத்து விடுவான், அதனால் உனக்கு நன்மை ஏற்பட்டால் போதும். அப்படிப்பட்டவனுக்கும் அவன், தம்பீ!

''அந்தக் காலத்தில் எங்கள் முகாம் புக்கோவினுவில் சுற்றிக் கொண்டிருந்தது. இது ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. ஒரு நாள்—வசந்த கால இரவில்—நாங்கள் சில பேர் உட்கார்ந்திருந்தோம். நான், படை வீரன் தனீலோ—இவன் கோஷுத்தோடு* சேர்ந்து சண்டை போட்டவன்—கிழவன் நூர், மற்றவர்கள், தனீலோவின் மகள் ராத்தா எல்லோரும் இருந்தோம்.

''என் மகள் நோன்காவை அறிவாய் அல்லவா? பெண்ணரசி அவள்! ஊம், ஆனால் ராத்தாவை இவளோடு ஒப்பிடக்கூடாது, அது நோன்காவுக்கு நிரம்பப் பெருமை தருவதாகும். அவளை, இந்த ராத்தாவை, வார்த்தைகளால் வருணிக்கவே முடியாது. அவளுடைய அழகைப் பிடிலில் வேண்டுமானால் இசைக்கலாம். அதுவும் பிடிலைத் தன் சொந்த உள்ளம் போல அறிந்தவன்தான் இசைக்க முடியும்.

''எத்தனையோ வாலிபர்களுடைய நெஞ்சுகளைக் கருக்கி விட்டாள் அவள். அடேயப்பா, நிறைய நெஞ்சுகளை! மொராவாவில் ஒரு பிரபு, கிழவன், முன்குடுமிக்கார உக்ரேனியன், அவளைக் கண்டு பிரமித்துப் போனான். குதிரையில் உட்கார்ந்து, காய்ச்சல் வந்தவன் போல நடுங்கியபடி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். அழகன் அவன், திருநாளில் சாத்தான் போல. கோட்டில் தங்கச் சரிகைப் பூத்தையல். குதிரை காலை லேசாக அடித்தபோது இடையில் வாள்

---

* கோஷுத் லயோஷ் (1802 — 1894) — ஹங்கேரிய அரசியல் தலைவர். 1848 — 1849ல் நடந்த ஹங்கேரியப் புரட்சியின் போது ஹங்கேரிய மக்களது போராட்டத்தை ஒழுங்கமைத்த முதல்வர்.

மின்னல் போலப் பளிச்சிட்டது. வாள் முழுவதும் நன் மணி களால் இழைக்கப்பட்டிருந்தது. தொப்பியில் இளநீல மகமல் ஆகாயத்தின் துண்டு போல இருந்தது. கிழப் பிரபு பெரிய மிடுக்கன்! பார்த்துக் கொண்டே இருந்தவன், ராத்தாவிடம், 'ஏய், இந்தா, முத்தமிடு, பை நிறையப் பணம் தருகிறேன்' என்முன். அவளோ, மறு பக்கம் திரும்பிக் கொண்டாள், அவ்வளவுதான்! 'நான் உன் மனதைப் புண்படுத்தி விட்டேன் என்முல் மன்னித்துவிடு, கொஞ்சம் அன்போடு பார்க்க வாவது செய்' என்று கிழப் பிரபு பணிவாய்க் கெஞ்சி, பணப் பையை அவளுடைய காலருகே எறிந்தான். பெரிய பணப்பை, தம்பீ! ஆனல் அவளோ, தற்செயலாகப் போல அதைச் சேற்றில் உதைத்துத் தள்ளினுள், அவ்வளவுதான்.

'' 'அடி பெண்ணே!' என்று பெருமூச்செறிந்து குதிரை யைச் சவுக்கால் விளாறினுன் அவன். புழுதிதான் படலங் களாகக் கிளம்பியது.

''அடுத்த நாள் அவன் மறுபடி வந்தான். 'அவளுடைய தகப்பன் யார்?' என்று முகாமில் இடிபோல முழங்கினுன். தனீலோ வெளியே வந்தான். 'உன் மகளை விலேக்குக் கொடு. என்ன வேண்டுமானுலும் வாங்கிக்கொள்!' தனீலோ அவனிடம் சொன்னுன்: 'பிரபு வம்சத்தவர்கள் தாம் தங்கள் பன்றி கள் முதல் மனச்சாட்சி வரை எல்லாவற்றையும் விலேக்குக் கொடுப்பார்கள். நான் கோஷுத்தோடு சேர்ந்து சண்டை போட்டவன். எதையும் நான் விற்பனே செய்வதில்லே.' பிரபு இரைவதற்கு வாயெடுத்தான். அவன் கை வாளே உருவப் போயிற்று. ஆனல் எங்களில் ஒருவன் தீப் பிடித்த கற்றையைக் குதிரையின் காதில் நுழைத்து விடவே அது சவாரிக்காரனேடு பாய்ந்தோடிற்று. நாங்களும் முகாமைப் பெயர்த்துக் கொண்டு கிளம்பி விட்டோம். ஒரு நாள், இரண்டு நாள் நடந்தோம். பார்க்கிறேமோ, பிரபு எங்களே எட்டிப் பிடித்து விட்டான்! 'ஏய், ஆட்களே, ஆண்டவனுக் கும் உங்களுக்கும் முன் என் மனச்சாட்சி கறைபடவில்லே. பெண்ணே எனக்கு மணம் செய்து வையுங்கள். என் சொத்தை எல்லாம் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். நான் பெரும் பணக்காரன்!' என்முன். அவன் அனலாய்ச் சிவந்திருந்தான். காற்றில் ஆடும் இறகுப் புல் போலச் சேணத்தின் மேல் ஆடினுன். நாங்கள் யோசனே செய்தோம்.

" 'இந்தா, மகளே, பேசு!' என்று மீசைக்குள் சொன்னான் தனீலோ.

" 'பெண் கழுகு தானாக விரும்பிக் காக்கைக் கூட்டுக்குப் போனால் என்ன ஆகும்?' என்று ராத்தா எங்களிடம் கேட்டாள்.

"தனீலோ வாய்விட்டுச் சிரித்தான். நாங்களும் அவனோடு சேர்ந்து சிரித்தோம்.

" 'நன்றாய்ச் சொன்னாய் மகளே! கேட்டாயா, சீமானே? காரியம் பலிக்கவில்லை. நீ புறாக்களைத் தேடு. அவை இணங்கி வரக் கூடியவை' என்றான் தனீலோ. நாங்கள் மேலே நடந்தோம்.

"அந்தச் சீமானோ, தொப்பியைக் கழற்றித் தரையில் எறிந்து விட்டுப் பூமி அதிரக் குதிரையை விரட்டிக் கொண்டு போய் விட்டான். அப்பேர்ப்பட்டவளாக்கும் ராத்தா, தெரிந்து கொள், தம்பீ!

"ஆயிற்று! ஒரு நாள் இரவில் நாங்கள் உட்கார்ந்திருந்த போது ஸ்தெப்பி வெளியில் இசை பெருகுவதைக் கேட்டோம். அருமையான இசை! அதைக் கேட்டு நாளங்களில் இரத்தம் சூடேறியது. அந்த இசை எங்கோ அழைத்தது. ஏதாவது பெரிய காரியம் செய்ய வேண்டும் என்ற ஆசை அந்த சங்கீதத்தால் எங்கள் எல்லோருக்கும் உண்டாயிற்று. எதைச் செய்த பிறகு வாழ்வது அவசியம் இல்லையோ, அல்லது வாழ வேண்டும் என்றால் உலகம் பூராவையும் ஆள்பவர்களாக வாழ வேண்டுமோ அப்பேர்ப்பட்ட காரியத்தைச் செய்யும் ஆசை. இதை நாங்கள் உணர்ந்தோம்.

"கொஞ்ச நேரத்தில் ஒரு குதிரையின் உருவம் இருட்டில் கண்ணுக்குத் தென்பட்டது. அதன் மேல் ஒருவன் உட்கார்ந்து எங்கள் பக்கமாக வந்து கொண்டே பிடில் வாசித்துக் கொண்டிருந்தான். நெருப்பின் பக்கத்தில் குதிரையை நிறுத்தி, பிடில் வாசிப்பதை விட்டு விட்டுப் புன்னகையுடன் எங்களைப் பார்த்தான்.

" 'ஏகே, ஜொபார், நீயா அது!' என்று மகிழ்ச்சி பொங்க அவனைப் பார்த்துக் கூவினான் தனீலோ. 'இவன்தான் லோய்க்கோ ஜொபார்!'

"அவனுடைய மீசைகள் தோள்கள்மேல் படிந்து தலைமுடியோடு சேர்ந்திருந்தன. விழிகள் பளிச்சிடும் நட்சத்திரங்

கள் போலச் சுடர்ந்தன. புன்னகையோ, முழுச் சூரியன் போல ஒளிவீசிற்று, கடவுள் ஆணை! குதிரையோடு சேர்த்து ஒரே இரும்பு வார்ப்பில் வடித்தவன் போல் இருந்தான். நெகிடி நெருப்பின் வெளிச்சத்தில் குருதி படிந்தவன் போல நின்று பற்கள் மின்னும்படிச் சிரித்தான். அவன் என்னிடம் ஒரு வார்த்தை சொல்லவோ, இந்த உலகத்தில் நானும் வாழ்கிறேன் என்பதை வெறுமே கவனிக்கவோ செய்வதற்கு முன்பே என்னையே நேசிக்கிற அளவு அவன் மேல் அன்பு கொள்ளத் தொடங்கி விட்டேன்! இது உண்மை அல்ல என்றால் நான் கடைத்தேறாமல் போவேனாக!

''பார்த்தாயா தம்பீ, எப்பேர்ப்பட்ட ஆட்கள் இருக்கிறார்கள் என்று! இப்படிப்பட்டவன் நம் விழிகளைக் கூர்ந்து பார்த்ததுமே நம் உள்ளத்தை ஆட் கொண்டு விடுகிறான். இதனால் நமக்குக் கொஞ்சங்கூட வெட்கம் உண்டாவதில்லை. தவிரப் பெருமையும் ஏற்படுகிறது. இந்த மாதிரி ஆளோடு சேர்ந்து நாமும் மேலானவர்களாக மாறி விடுகிறோம். இந்த மாதிரி மனிதர்கள் கொஞ்சம் பேர்தான், நண்பா! அவர்கள் கொஞ்சம் பேர் என்றால் அதுவும் சரிதான். உலகத்தில் நல்லது நிறைய இருந்தால் அதை யாரும் நல்லதாக மதிக்க மாட்டார்கள். அப்படித் தான்! மேலே கேளு.

''ராத்தா சொன்னாள்: 'ஜொபார், நீ நன்றாக வாசிக்கிறாய்! இவ்வளவு நாதம் உள்ள, நுட்பமான பிடிலை உனக்கு யார் செய்து தந்தார்கள்?' அவனோ, சிரித்தான். 'நானே தான் செய்தேன். மரத்தால் செய்யவில்லை. நெஞ்சாரக் காதலித்த இளம் பெண்ணின் மார்புக் கூட்டால் செய்தேன். அவளுடைய இதயத்திலிருந்து நரம்புகள் முறுக்கிக் கொண்டேன். பிடில் இப்போதும் கொஞ்சம் அபஸ்வரம் பேசுகிறது, ஆனால் சரியாகவில் போட என்னால் முடியும்' என்றான்.

''பெண்ணினுடைய விழிகள் தன் உள்ளத்தில் காதல் நெருப்பை மூட்டிவிடக் கூடாது, ஆனால் தனக்காக ஏக்கத்தால் கலங்க வேண்டும் என்பதற்காக அவற்றை மங்கடிக்க முயல்வது நம்மவர்களின் வழக்கம் என்பது தெரிந்தது தான். ஜொபாரும் இப்படியே செய்தான். ஆனால் அவன் முயற்சி பலிக்கவில்லை. ராத்தா ஒரு பக்கம் திரும்பி, கொட்டாவி விட்டு, 'ஜொபார் புத்திசாலி, சாமர்த்தியசாலி என்றெல்லாம் கேள்விப்பட்டிருந்தேனே. ஆட்கள் எப்படிப் பொய்

சொல்லுகிறார்கள் பார்!' என்று கூறிவிட்டு அப்பால் போய் விட்டாள்.

''ஜொபார் குதிரையிலிருந்து இறங்கி, 'ஏகே, அழகீ, உனக்குப் பற்கள் கூர்மை!' என்றான். அவன் கண்கள் பளிச்சிட்டன. 'வணக்கம், அண்ணன்மாரே! நான் உங்களிடம் வந்திருக்கிறேன்!' என்று சொன்னான்.

'' 'விருந்தாளியை வரவேற்கிறோம்!' என்று அவனுக்குப் பதில் கூறினான் தனீலோ. முத்தமிட்டுக் கொண்டோம். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தபின் படுத்தோம்... அயர்ந்து தூங்கினோம். காலையில் பார்க்கிறோமோ ஜொபாரின் தலையில் துணியால் கட்டு போட்டிருந்தது. என்ன ஆயிற்று? தூங்கிக் கொண்டிருந்த போது குதிரை குளம்பால் காயப்படுத்தி விட்டதாம்.

'ஏ, ஏ, ஏ! அந்தக் குதிரை யார் என்று புரிந்து கொண்டு நாங்கள் மீசைக்குள் குறு நகை செய்தோம். தனீலோவும் புன் சிரிப்பு சிரித்தான். என்ன விஷயம்? ஜொபார் ராத்தாவுக்கு ஏற்றவன் அல்லவோ? அல்லவாம்! அட, பெண் என்னதான் அழகி ஆனாலும் அவள் மனது குறுகலானது, சின்னது. அவள் கழுத்தில் ஒரு மணங்கு தங்க நகைகள் பூட்டினாலும் இருப்பதை விட மேலானவள் ஆக அவளால் முடியாது. இது கிடக்கட்டும்!

''அந்த இடத்திலே நாங்கள் நெடுங் காலம் வசித்தோம். அந்தச் சமயத்தில் எங்கள் காரியங்கள் நன்றாக இருந்தன. ஜொபார் எங்களோடு இருந்தான். அருமையான தோழன் அவன்! விவேகம் உள்ளவன், கிழவன் போல. எல்லாக் காரியத்திலும் தேர்ந்தவன். ருஷ்ய எழுத்தும் மகயார் எழுத்தும் படித்துப் புரிந்து கொண்டான். சில வேளைகளில் அவன் பேசத் தொடங்கினால் ஆயுள் பூராவும் உறங்காமல் அவனுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கத் தோன்றும்! பிடில் வாசித்தான் என்றால், உலகத்தில் வேறு எவனாலும் அப்படி வாசிக்க முடியாது. இது பொய்யானால் என் தலையில் இடி விழட்டும்! பிடில் நரம்புகள் மேல் அவன் வில் போடுவதைக் கேட்டதும் நம் இருதயம் திடுக்கிடும். இன்னொரு இழுப்பு இழுப்பான், கேட்டு நெஞ்சுத் துடிப்பு நின்று விடும். அவனோ, பிடில் வாசித்துக் கொண்டே புன்னகை செய்வான். அவன் வாசிப்பதைக் கேட்டு ஒரே நேரத்தில் அழவும் சிரிக்கவும் ஆசை

உண்டாகும். ஒரு சமயம் யாரோ கசப்புடன் முனகுவது போலவும் உதவி கேட்பது போலவும் கத்தியால் அறுக்கிற மாதிரி நெஞ்சை வகிர்வது போலவும் இருக்கும். மறு சமயம், ஸ்தெப்பி வெளி ஆகாயத்துக்குக் கதைகள் சொல்லும், துயரக் கதைகள். அருமைக் காதலனுக்கு விடைகொடுத்து அனுப்பும் பெண் அழுவாள்! அருமைக் காதலன் ஸ்தெப்பி வெளியில் காதலியைக் கூவி அழைப்பான். திடீரென்று— ஹோய்! கட்டில்லாத, உயிர்த் துடிப்புள்ள பாட்டு இடி போல முழங்கும். இந்தப் பாட்டுக்கு இசைய வானத்தில் சூரியனே நடனம் ஆடுவது போல இருக்கும்! அப்படியாக்கும் தம்பீ அவன் வாசிப்பான்!

''கேட்பவனுடைய உடம்பின் ஒவ்வொரு தசைநாரும் அந்தப் பாட்டைப் புரிந்து கொள்ளும். அவன் அதற்கு அடிமை ஆகி விடுவான். ஜொபார் மட்டும் அப்போது, 'கத்திகளை எடுத்துக் கொண்டு கிளம்புங்கள், தோழர்களே!' என்று கூவி இருந்தால் நாங்கள் எல்லோரும் அவன் காட்டிய ஆளுடன் கத்திச் சண்டைக்குக் கிளம்பி இருப்போம். ஒருவனை என்ன வேண்டுமானாலும் செய்ய அவனால் முடிந்தது. எல்லோரும் அவனை நேசித்தோம். மனமார நேசித்தோம். ராத்தா ஒருத்திதான் அவனை மதிக்கவில்லை. அவ்வளவோடு விட்டிருந்தாலும் போகிறது என்கலாம். அவளோ, ஜொபாரை நையாண்டி வேறு செய்து வந்தாள். அவனுடைய நெஞ்சைக் கடுமையாகப் புண்படுத்தினாள், நிரம்பக் கடுமையாக! ஜொபார் பற்களை நெறுநெறுப்பான், மீசையைப் பிடித்து இழுப்பான். அவன் கண்கள் அடியற்ற பள்ளத்தைவிடக் கருமையாகத் தெரியும். சில வேளைகளில் அவற்றில் பளிச்சிடும் ஒளியைக் கண்டு உள்ளம் திகில் அடையும். ராத்திரி வேளையில் ஜொபார் ஸ்தெப்பியில் வெகு தூரம் போவான். அவனுடைய பிடில் காலை வரை அழுது கொண்டிருக்கும். அழுது கொண்டே ஜொபாரின் விடுதலையைப் புதைக்கும். நாங்கள் படுத்துக் கொண்டு இசையைக் கேட்டபடி என்ன செய்வது என்று யோசிப்போம். இரண்டு பாறைகள் ஒன்றின் பக்கம் மற்றது உருளும் போது அவற்றுக்கு நடுவே நிற்கக் கூடாது, காயப்படுத்திவிடும் என்று அறிந்திருந்தோம். இப்படிக் காலம் கழிந்தது.

''ஒரு நாள் நாங்கள் எல்லோரும் கூடி உட்கார்ந்து காரி

யங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அலுப்பு தட்டி விட்டது. 'ஜொபார், பாட்டுப் பாடு, நெஞ்சைக் குதூகலப் படுத்து!'' என்று கேட்டுக் கொண்டான் தனீலோ. தனக்குக் கொஞ்ச தூரத்தில் வானத்தை நோக்கியவாறு படுத்திருந்த ராத்தாவின் மேல் கண்ணோட்டி விட்டு, நரம்புகளை மீட்டினான் ஜொபார். மெய்யாகவே இளம் பெண்ணின் இருதயத்தால் ஆனது போலப் பிடில் இசை மொழி பேசத் தொடங்கிற்று. ஜொபார் பாடினான்:

'' 'எய்-யை! எரியுது நெஞ்சிலேதீ,
எல்லை அற்றது ஸ்தெப்பி!
கையிலே உறுதி, காற்றைப் போலே
கடுகிடும் என் புரவி!'

''ராத்தா தலையைத் திருப்பி, பாடியவனின் விழிகளை உற்றுப் பார்த்துச் சிரித்துக் கொண்டாள். அவனுடைய முகம் காலை வானம் போலக் குப்பென்று சிவந்தது.

'' 'ஏய், அப்பா-ஏய்! என்றன் அன்புத் தோழா!
ஏறிப் பாய்வோமா முன்னே?
மையிருள் போர்த்திட்ட ஸ்தெப்பிக்கப்பால்
வரவேற்கும் வைகல் நம்மை!
எய்-யை! பாய்ந்து எதிர்கொள்வோம் பகலை.
எழும்பிப் பறந்திடுவாய்!
மெய்யாய் நீ பிடரினால் மதியழகி
மேல் மட்டும் இடித்திடாதே!'

''அவன்தான் எப்படிப் பாடினான்! இப்போது யாரும் அந்த மாதிரிப் பாடுவதில்லை! ஆனால் ராத்தாவோ நீரை வடி கட்டுபவள் போல வார்த்தைகளைச் சொட்டினாள்:

'' 'நீ அவ்வளவு உயரே பறக்காதே, ஜொபார், சமநிலை தவறிக் குப்பற விழுந்து விடுவாய் சேற்றுக் குட்டையில். மீசை அழுக்காகி விடும், ஜாக்கிரதை.' ஜொபார் அவளை வன விலங்கு போல முறைத்துப் பார்த்தான், ஆனால் ஒன்றும் பேசவில்லை. பொறுத்துக் கொண்டு மேலே பாடினான்:

'' 'ஏய்-அப்பா! இருவரும் உறங்குகையில்
இங்கே நாள் புலர்ந்திடலாம்.
ஐயையோ! நாண நெருப்பிலே நாம்
அப்போது பொசுங்கிடுவோம்!'



'' 'இதுதான் பாட்டு!' என்ருன் தனீலோ. இந்த மாதிரிப் பாட்டை நான் ஒரு போதும் கேட்டதில்லே. நான் பொய் சொன்ஞல் சாத்தான் என்னைச் சுங்கான் ஆக்கிக் கொள்ளட் டும்!'

''கிழவன் நூர் மீசையைச் சிலுப்பினுன், தோள்களேக் குலுக்கினுன். ஜொபாரின் துணிச்சல் நிறைந்த பாட்டு எங்கள் எல்லோருக்கும் பிடித்திருந்தது! ராத்தா ஒருத்திக்குத் தான் அது பிடிக்கவில்லே.

'' 'கழுகின் கத்தலேக் கோரணி காட்டி இப்படித்தான் ஒரு தரம் கொசு ரீங்காரம் செய்தது' என்ருள் அவள், எங்கள் மேல் வெண்பனி உருண்டையை எறிவது போல.

'' 'ராத்தா, ஒரு வேளே உனக்குச் சவுக்கடி கேட்கிறதோ?' என்று அவளே நெருங்கினுன் தனீலோ. ஜொபாரோ, தொப்பி யைத் தரையில் வீசினுன். அவன் முகமெல்லாம் மண் போலக் கறுத்தது.

'' 'பொறு, தனீலோ! முரட்டுக் குதிரைக்கு எஃகுக் கடிவாளம் போட வேண்டும்! உன் மகளே எனக்குக் கட்டிக் கொடு!' என்ருன்.

'' 'இது முறையான பேச்சு!' என்று நகைத்தான் தனீ லோ. 'முடியுமாஞல் தாராளமாகக் கட்டிக் கொள்!'

'' 'நல்லது!' என்ருன் ஜொபார். பின்பு ராத்தாவிடம் சொன்னுன்: 'இந்தா, பெண்ணே, நான் சொல்லுவதைக் கொஞ்சம் கேள், பிகு பண்ணிக் கொள்ளாதே! உன் மாதிரிப் பெண்கள் நிறையப் பேரை நான் கண்டிருக்கிறேன், ரொம்ப நிறையப் பேரை! ஒருத்தி கூட என் உள்ளத்தை உன்போல வசீகரிக்கவில்லே. ஆ, ராத்தா, என் இதயத்தை ஆட்கொண்டு விட்டாய் நீ! நல்லது, அதஞல் என்ன? நடப் பது நடந்தே தீரும். தவிர... ஒருவன் தன்னேயே விட்டு விலகியோட உதவும் குதிரை எங்கும் கிடையாது! கடவுளும் என் மானமும் உன் தகப்பனும் இந்த எல்லா ஆட்களும் சாட் சிகளாக உன்னே மனேவியாக ஏற்றுக் கொள்கிறேன். ஆஞல் என் விடுதலேக்கு மட்டும் குறுக்கே வராதே. நான் கட்டற்ற மனி தன், என் விருப்பம் போல வாழ்வேன்!' இப்படிச் சொல்லி, பற்களேக் கடித்துக் கொண்டு கண்கள் பளிச்சிட அவளிடம் போஞன். அவள் பக்கம் அவன் கையை நீட்டியதை நாங்கள் கண்டோம். ராத்தா இந்த ஸ்தெப்பி வெளிக் குதிரைக்குக்

கடிவாளம் போட்டுவிட்டாள் என்று நினைத்தோம்! திடீரென்று பார்க்கிறேமோ, ஜொபார் கைகளை ஆட்டித் தடாலென்று தரையில் மல்லாக்க விழுந்தான்! அவன் பின் மண்டை தரையில் மோதிற்று...

''என்ன விந்தை? அவன் மார்பில் துப்பாக்கிக் குண்டு தாக்கியது போல் இருந்தது. உண்மையில் ராத்தாதான் சவுக்கு வாரை அவன் காலில் வீசி மாட்டி, அவனைத் தன் பக்கம் இழுத்தாள். அதனுல்தான் ஜொபார் விழுந்தான்.

''ராத்தா அதற்குள் மறுபடி படுத்து அசைவின்றி ஏளனமாக வாய்க்குள் சிரித்தாள். என்ன நடக்கும் என்று நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தோம். ஜொபார் தரையில் உட்கார்ந்து தலை வெடித்துவிடும் என்று அஞ்சுபவன் போல அதைக் கைகளால் அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தான். அப்புறம் எழுந்திருந்து ஒருவரையும் பார்க்காமல் ஸ்தெப்பி வெளியில் நடந்தான். 'அவனைக் கவனித்துக் கொள்!' என்று நூர் என்னிடம் கிசுகிசுத்தான். இரவின் இருட்டில் நான் ஜொபாரின் பின்னே ஸ்தெப்பியில் ஊர்ந்தேன். அப்படியாக்கும் சேதி, தம்பி!''

மகார் சுங்கானிலிருந்து சாம்பலைத் தட்டிக் கொட்டிவிட்டு அதில் மறுபடி புகையிலை திணிக்கலானுன். நான் மேல்கோட்டை இன்னும் நன்றுகப் போர்த்துக் கொண்டு படுத்தவாறே அவனுடைய முதிய வதனத்தை நோட்டம் இட்டேன். வெயிலாலும் காற்றுலும் அது கறுத்திருந்தது. அவன் கடுமையும் கண்டிப்பும் தோன்றத் தலையை அசைத்து வாய்க்குள்ளாக ஏதோ கிசுகிசுத்தான். அவனுடைய நரைத்த மீசை ஆடியது. காற்று அவன் தலை மயிரைப் பரத்தியது. மின்னல் தாக்கியதால் கரிந்து விட்டாலும் இன்னமும் விறலும் உறுதியும் தன் வலிமையில் பெருமையும் கொண்ட முதிர்ந்த ஓக் மரத்துக்கு நிகராகக் காணப்பட்டான் அவன். கடல் முன்போலவே கரையோடு இரகசியம் பேசிக் கொண்டிருந்தது. காற்று அதன் கிசுகிசுப்பை அதே போல ஸ்தெப்பி வெளியில் பரப்பிக் கொண்டிருந்தது. நோன்கா பாடுவதை நிறுத்தி விட்டாள். வானில் அடர்ந்திருந்த மேகங்கள் இலையுதிர் கால இரவை இன்னும் இருண்டது ஆக்கிக் கொண்டிருந்தன.

''குனிந்த தலையும் சாட்டை வார்கள் போலத் தொங்கிய கைகளுமாக ஜொபார் கால் போனதிக்கில் நடந்தான். ஓடைப்

பள்ளத்தை அடைந்ததும் கல்லின் மேல் உட்கார்ந்து பெருமூச்செறிந்தான். அதைக் கேட்டு இரக்கத்தால் என் நெஞ்சில் உதிரம் பெருகிற்று, ஆனாலும் நான் அவனை நெருங்கவில்லை. துயரத்தை வார்த்தைகளால் துடைக்க முடியாது அல்லவா? அதனால்தான்! ஒரு மணி, இரண்டு மணி, மூன்று மணி ஆகியும் அவன் அசையாமல் உட்கார்ந்திருந்தான்.

''நான் கொஞ்ச தூரத்தில் படுத்திருந்தேன். நிலாக் கால இரவு. சந்திரன் ஸ்தெப்பி முழுவதிலும் வெள்ளியாக ஒளி பரப்பிற்று. தூரத்திலும் எல்லாம் கண்ணுக்குத் தெரிந்தன.

''ராத்தா முகாமிலிருந்து வேகமாக வந்ததைத் திடீரென்று கண்டேன்.

''எனக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று! 'அடேயப்பா, என்ன மிடுக்கு! துணிந்தவள் இந்த ராத்தா!' என்று எண்ணிக் கொண்டேன். அவள் அவனை நெருங்கினாள். அவன் காதில் ஒன்றும் படவில்லை. அவள் அவனுடைய தோள் மேல் கையை வைத்தாள். ஜோபார் திடுக்கிட்டான் முட்டி பிடித்த கைகளை விரித்துத் தலையை நிமிர்த்தினான். அக்கணமே குதித்தெழுந்து கட்டாரியை உருவினான்! இதோ பெண்ணை வெட்டிப் போட்டு விடுவான் என்பதைக் கண்டேன். முகாமுக்குக் கேட்கும் படிக் கூச்சலிட்டு அவர்களிடம் ஓடிப்போக நினைத்தேன்.

'' 'எறிந்து விடு! தலையைச் சுக்கல் ஆக்கி விடுவேன்!' என்ற சொற்கள் அதற்குள் காதில் பட்டன. பார்க்கிறேனே, ராத்தாவின் கையில் ரிவால்வர், அவள் ஜோபாரின் நெற்றியைக் குறி வைத்து ரிவால்வரைப் பிடித்திருந்தாள். பேய் மகள்! 'இப்போது இரண்டு பேரும் பலத்தில் சமம், மேலே என்ன நடக்கும்?' என்று எண்ணமிட்டேன்.

''ராத்தா ரிவால்வரை இடைவாரில் செருகிக் கொண்டு ஜோபாரிடம் சொன்னாள்: 'கேள். நான் உன்னைக் கொல்ல வரவில்லை, சமாதானம் செய்து கொள்ள வந்தேன். கட்டாரியை எறிந்து விடு!' அவன் கட்டாரியை எறிந்து விட்டு அவளை முறைத்துப் பார்த்தான். அந்தக் காட்சி அதிசயமாய் இருந்தது, தம்பீ! இரண்டு பேர் நின்று ஒருவரை ஒருவர் காட்டு விலங்குகள் போலப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவ்வளவிற்கும் இரண்டு பேரும் நிரம்ப நல்லவர்கள், துணிவு உள்ளவர்கள். தெளிந்த நிலா அவர்களைப் பார்த்தது, நானும் பார்த்தேன் அவ்வளவுதான்.

" 'நான் சொல்வதைக் கேள், ஜொபார். நான் உன்னைக் காதலிக்கிறேன்!' என்றாள் ராத்தா. அவனோ கைகளும் கால்களும் கட்டப்பட்டவன் போல வெறுமே தோள்களை மட்டும் அசைத்தான்.

" 'நான் வீரர்களைப் பார்த்திருக்கிறேன். நீ அவர்களை விட அதிகத் துணிச்சல் உள்ளவன், அகத்திலும் முகத்திலும் அழகன். நான் கண் சாடை செய்தாலே போதும், அவர்களில் ஒவ்வொருவனும் தன் மீசையைச் சிரைத்துக் கொண்டிருப்பான். நான் விரும்பினால் அவர்கள் எல்லோரும் என் காலில் விழுந்திருப்பார்கள். ஆனால் பயன் என்ன? அவர்கள் ஏற்கெனவே பெரிய துணிச்சல்காரர்கள் அல்ல. நான் அவர்கள் எல்லோரையும் பெட்டைகள் ஆக்கி இருப்பேன். துணிந்த ஜிப்ஸிகள் உலகில் கொஞ்சம் பேர்தான் மீதி இருக்கிறார்கள், ஜொபார், கொஞ்சம் பேர்தான். நான் ஒருபோதும் எவனையும் காதலிக்கவில்லை, ஜொபார், ஆனால் உன்னைக் காதலிக்கிறேன். அதோடு விடுதலையையும் நான் விரும்புகிறேன்! ஜொபார், உன்னைக் காட்டிலும் அதிகமாக விடுதலை மேல் அன்பு கொண்டிருக்கிறேன். நீ இல்லாமல் எனக்கு வாழ முடியாது, அப்படியே நான் இல்லாமல் உன்னாலும் வாழ முடியாது. ஆகையால்தான் நீ உள்ளத்தாலும் உடலாலும் என்னுடையவன் ஆக வேண்டும் என்று ஆசைப்படுகிறேன், கேட்டாயா?' அவன் ஏளனச் சிரிப்பு சிரித்தான்.

" 'கேட்டேன்! உன் பேச்சைக் கேட்க உள்ளத்துக்கு மகிழ்ச்சியாய் இருக்கிறது. எங்கே, இன்னும் சொல்லு!'

'இன்னும் நான் சொல்வது இது தான். ஜொபார், நீ எவ்வளவுதான் போக்கு காட்டினாலும் நான் உன்னை வசக்கி விடுவேன், நீ என்னவன் ஆகி விடுவாய். ஆகவே நேரத்தை வீண் போக்காதே. என் முத்தங்களும் கொஞ்சல்களும் உனக்காகக் காத்திருக்கின்றன... நான் உன்னை ஆரத் தழுவி முத்தமிடுவேன், ஜொபார்! என் முத்தங்களின் மோகத்தில் உன் துணிச்சல் நிறைந்த வாழ்வை மறந்து விடுவாய்... ஜிப்ஸி வீரர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டும் உன் ஆவேசப் பாட்டுக்கள் அப்புறம் ஸ்தெப்பி வெளியில் முழங்க மாட்டா. கனிவுள்ள காதல் பாட்டுக்களை எனக்காக, ராத்தாவுக்காக, நீ பாடுவாய்... ஆகையால் நேரத்தை வீணாக்காதே. நான் இப்படிச் சொன்னேன். இதற்கு அர்த்தம் என்ன என்றால் நாளைக்கு

நீ மூத்த தோழருக்கு போல எனக்குப் பணிவாய். முகாம் முழுவதற்கும் முன்பாக என் காலைத் தொட்டு வணங்குவாய், என் வலது கையை முத்தமிடுவாய். அப்போதுதான் நான் உன் மனைவி ஆவேன்.'

''பேய் மகளுடைய ஆசையைப் பாரேன்! இது ஒரு போதும் கேள்விப்படாத சேதி. பழங் காலத்தில் கருமலை வாசிகளிடம் இந்த மாதிரி வழக்கம் இருந்ததாம், கிழவர்கள் சொல்லுவார்கள். ஆனால் ஜிப்ஸிகளிடம் ஒரு போதும் கிடையாது! தம்பீ, எங்கே, இதை விட வேடிக்கையானது எதையேனும் இட்டுக் கட்டிச் சொல்லு பார்க்கலாம்! ஒரு வருஷம் பூராவும் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டாலும் உன்னால் சொல்ல முடியாது!

''ஜொபார் ஒரு பக்கம் நகர்ந்து, நெஞ்சில் காயம் பட்டவன் போல ஸ்தெப்பி எங்கும் கேட்கும்படி வீரிட்டான். ராத்தா திடுக்கிட்டாள், ஆனால் பதைப்பை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

'' 'நல்லது, நாளைக்குச் சந்திப்போம். நான் சொன்னபடி அப்போது நீ செய்ய வேண்டும், கேட்டாயா, ஜொபார்!'

'' 'கேட்டேன்! செய்வேன்' என்று முனகி அவள் பக்கம் கையை நீட்டினான் ஜொபார். அவளோ, அவனைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. ஜொபார் காற்றில் முறிந்த மரம் போலத் தள்ளாடி, பொருமி அழுது கொண்டும் சிரித்துக் கொண்டும் தரையில் விழுந்தான்.

''இப்படி அவனை வதைத்து எடுத்தாள் பாழும் ராத்தா. நான் சிரமப்பட்டு அவனுக்கு மயக்கம் தெளிவித்தேன்.

''ஏகே! மனிதர்கள் துன்பத்தில் உழல்வது எந்தச் சாத்தானுக்குப் பிரீதி? மனிதனுடைய நெஞ்சு துயரத்தால் பிளந்து தேம்புவதைக் கேட்க யாருக்கு விருப்பம்? நீயே யோசித்துப் பார்!..

''நான் முகாம் திரும்பி எல்லாவற்றையும் பெரியவர்களுக்கு விவரித்தேன். அவர்கள் ஆலோசனை செய்து இதன் முடிவு என்ன ஆகிறது என்று பொறுத்திருந்து பார்க்கத் தீர்மானித்தார்கள். நடந்தது இதுதான். மாலையில் நாங்கள் எல்லோரும் நெருப்பைச் சுற்றிக் குழுமிய போது ஜொபாரும் வந்தான். அவன் கலங்கி, ராத்திரிக்குள் பயங்கரமாக மெலிந்து போயிருந்தான். அவனுடைய கண்கள் குழி

விழுந்திருந்தன. விழிகளைத் தாழ்த்திக் கொண்டு, தலையை நிமிர்த்தாமலே எங்களிடம் சொன்னான்:

'' 'சேதி இதுதான், தோழர்களே. நேற்று இரவு நான் என் நெஞ்சைத் துருவிப் பார்த்தேன். பழைய கட்டற்ற வாழ்க்கைக்கு அதில் இடம் இல்லை என்பதைக் கண்டேன். அதில் ராத்தா ஒருத்தி மட்டுமே வாழ்கிறாள்—அவ்வளவு தான்! இதோ பாருங்கள், அழகி ராத்தா புன்னகை செய்கிறாள், ராணி போல! என்னைவிட அதிகமாகத், தன் விடுதலையை அவள் நேசிக்கிறாள். நானோ, என் விடுதலையைக் காட்டிலும் மேலாக அவளைக் காதலிக்கிறேன். நான், துணிவுள்ள லோய்க்கோ ஜொபார், இவளைச் சந்திக்கும் வரை வாத்துக் களோடு வேட்டைப் பருந்து விளையாடுவது போலப் பெண் களோடு சரசமாடிக் கொண்டிருந்தேன். இவளுடைய அழகு என்னை எப்படிப் பணிய வைத்து விட்டது என்பதை எல்லோரும் பார்க்கும் விதத்தில் இவள் ஆணையிட்டபடி இவ ளுடைய காலைத் தொட்டு வணங்குவது என்று முடிவு செய்து விட்டேன். பிறகு இவள் என் மனைவி ஆவாள், என்னைக் கொஞ்சி முத்தம் இடுவாள். ஆகவே, உங்களுக்குப் பாட்டுக்கள் பாடவும் இப்போது எனக்கு விருப்பம் இல்லை. என் விடுதலை போய்விட்டதிலும் வருத்தம் இல்லை! அப்படித்தானே, ராத்தா?'—அவன் விழிகளை உயர்த்தி ராத்தாவைக் கூர்ந்து பார்த்தான். அவள் பேசாமல் கண்டிப்புடன் தலையசைத்துக் கையினால் தன் காலைச் சுட்டிக் காட்டினாள். நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தோம், ஆனால் ஒன்றையும் புரிந்து கொள்ளவில்லை. ஒரு பெண்ணின்—அவள் ராத்தா என்றாலும் கூட—காலில் லோய்க்கோ ஜொபார் விழுவதைப் பார்க்கா திருப்பதற்காக எங்கேனும் போய்விடலாமா என்று கூட நினைத்தோம். எங்களுக்கு எதனாலோ வெட்கமாக இருந்தது, வருத்தமும் ஏக்கமும் கூட ஏற்பட்டன.

'' 'ஊம்!' என்று ஜொபாரை அதட்டினாள் ராத்தா.

'' 'ஏகே, அவசரப்படாதே. நேரம் இருக்கிறது. அப்புறம் உனக்கு அலுத்துக் கூடப் போய்விடும்...' என்று நகைத் தான் ஜொபார். எஃகு கணகணப்பது போலக் கெக்கலித் தான்.

'' 'ஆக, விஷயம் எல்லாம் இவ்வளவுதான், தோழர் களே! என்ன பாக்கி இருக்கிறது? ஆமாம், என் ராத்தாவின்



இருதயம் அவள் எனக்குக் காட்டிய மாதிரி அவ்வளவு கடின மானதா என்று சோதித்துப் பார்ப்பது பாக்கி இருக்கிறது. சோதித்துத் தான் பார்த்து விடுகிறேனே, என்னை மன்னியுங் கள், சகோதரர்களே!'

" 'ஜொபார் என்ன செய்ய விரும்புகிறன் என்று ஊகிக்கக் கூட எங்களுக்கு நேரம் கிடைக்கவில்லை, அதற்குள் ராத்தா தரையில் கிடந்தாள். அவளுடைய நெஞ்சில் பிடிவரை பாய்ந்திருந்தது ஜொபாரின் வளை கத்தி. நாங்கள் மலைத்துப் போனோம்.

"ராத்தா கத்தியை உருவி ஒரு பக்கத்தில் எறிந்தாள். தன் கருங் கூந்தல் கற்றையால் காயத்தை அழுத்திக் கொண்டு புன்னகையுடன் கணீரென்று தெளிவாகச் சொன்னாள்:

" 'விடை கொடு, ஜொபார்! நீ இப்படிச் செய்வாய் என்பது எனக்குத் தெரியும்!..' — அப்புறம் அவளுடைய உயிர் பிரிந்துவிட்டது.

"புரிந்து கொண்டாயா அவளை, தம்பீ? அப்படிப்பட்ட வளாக்கும் — நான் என்றும் கடைத்தேற வகை இன்றிப் பாழாய்ப் போவேனாக—அந்தப் பேய் மகள்!

" 'ஆ! நானும் உன் காலில் விழுந்து வணங்குகிறேன், செருக்குள்ள அரசி!' என்று ஸ்தெப்பி வெளி அதிர முழங்கினான் ஜொபார். பின்பு தரையில் விழுந்து, உயிரற்ற ராத்தாவின் கால்களோடு உதடுகளைப் பொருத்திக் கொண்டு அசையாது கிடந்தான். நாங்கள் இறந்தவளுக்கு வணக்கம் தெரிவிப்பதற்காகத் தொப்பிகளைக் கழற்றிக் கைகளில் வைத்துக்கொண்டு பேசாமல் நின்றோம்.

"இந்த மாதிரி விவகாரத்தில் ஒருவன் என்ன சொல்ல முடியும் தம்பீ? ஒன்றும் முடியாது! 'இவனைக் கட்டிப் போட வேண்டும்!' என்று அரை மனதாகச் சொன்னான் நூர். லோய்க்கோ ஜொபாரைக் கட்டிப் போட ஒருவனுக்கும் கை வந்திருக்காது. யாருக்குமே கை வந்திருக்காது, நூர் இதை அறிந்திருந்தான். அவன் கையை உதறி விட்டு அப்பால் போய் விட்டான். தனீலோவோ, ராத்தா ஒரு பக்கம் விட்டெறிந்த கத்தியை எடுத்து, நரை மீசையைச் சிலுப்பிய வண்ணம் நீண்ட நேரம் அதைப் பார்த்துக் கொண்டிருந் தான். அந்தக் கத்தியில் ராத்தாவின் இரத்தம் இன்னும் சூடு ஆறவில்லை. கத்தி வளைவாகவும் கூர்மையாகவும் இருந்தது.

பின்பு தனிலோ ஜொபாரை நெருங்கி அவன் முதுகில் இருதயத்துக்கு நேராகக் கத்தியைச் செருகினன். ராத்தாவின் தகப்பன் ஆயிற்றே, கிழப் படைவீரன் தனிலோ!

''ஜொபார் தனிலோ பக்கம் திரும்பி, 'இதுதான் வேண்டும்!' என்று தெளிவாகச் சொல்லிவிட்டு ராத்தாவை எட்டிப் பிடிக்கப் போய்விட்டான்.

''நாங்கள் பார்த்தோம். மயிர்க் கற்றையுடன் கையை மார்பில் அழுத்தியபடிக் கிடந்தாள் ராத்தா. அவளுடைய திறந்த விழிகள் நீல வானத்தில் நிலைத்திருந்தன. அவள் காலருகே விழுந்து கிடந்தான் வீரன் லோய்க்கோ ஜொபார். தலைமயிர்ச் சுருள்கள் அவன் முகத்தில் விழுந்திருந்தன. முகம் தெரியவில்லை.

''நாங்கள் நின்றபடி யோசனை செய்தோம். கிழவன் தனிலோவின் மீசை துடித்தது. அடர்ந்த புருவங்கள் நெரிந்தன. வானத்தை நோக்கியவாறு பேசாதிருந்தான். நிலவு போல நரைத்திருந்த நூர் முகம் குப்புறத் தரையில் படுத்து விம்மி அழுதான். அவனுடைய முதிய தோள்கள் நடுநடுங்கின.

''அழுவதற்குக் காரணம் இருந்ததே, தம்பீ!

''...நீ போகிறாய். நல்லது, உன் வழியில் போ, அக்கம் பக்கம் திரும்பாதே. நேராகவே போ. ஒரு வேளை நீ வீணாக மட்கிப் போகாமல் தப்பி விடலாம். அவ்வளவு தான், தம்பீ!'

மகார் பேச்சை நிறுத்தி, புகையிலைப் பையில் சுங்கானை வைத்து விட்டு மேல் சட்டையை மார்பில் சேர்த்து இறுக்கிக் கொண்டான். மழை தூறியது, காற்று வலுத்தது, கடல் சீற்றத்துடன் ஆழ்ந்து முழங்கியது. குதிரைகள் அணையும் தறுவாயில் இருந்த நெருப்பின் அருகே ஒன்றன் பின் ஒன்றாக வந்து அறிவு சுடர்ந்த பெரிய விழிகளால் எங்களைப் பார்வையிட்டு, கெட்டியான வளையமாக எங்களைச் சூழ்ந்து அசையாமல் நின்றன.

''ப்பப் பா, ஹை!'' என்று அவற்றை நோக்கிக் கொஞ்சலாகக் கத்தி, தன் அன்புக்குரிய கரும் புரவியின் கழுத்தை உள்ளங்கையால் தட்டிக் கொடுத்தான் மகார். பின்பு என்னைப் பார்த்து, ''உறங்க நேரம் வந்து விட்டது!'' என்று சொல்லி, மேல் சட்டையால் தலைக்கு முக்காடிட்டுக் கொண்டு வலிய மேனியைத் தரையில் கிடத்தி மௌனமானன்.

எனக்குத் தூங்க விருப்பம் இல்லை. நான் ஸ்தெப்பியின் இருளில் பார்வையைச் செலுத்தினேன். அரசிக்குரிய எழிலும் பெருமிதமும் வாய்ந்த ராத்தாவின் உருவம் என் கண்களுக்கு முன் காற்றில் நீந்தியது. கருங் கூந்தல் கற்றையுடன் கையை மார்புக் காயத்தில் அழுத்திக் கொண்டிருந்தாள். அவளுடைய பழுப்பேறிய மெல்லிய விரல்களின் இடுக்கு வழியாக இரத்தம் துளித்துளியாகப் பெருகி நெருப்பாய்ச் சிவந்த நட்சத்திரங்களாகத் தரையில் சொட்டியது.

அவளை அடியொற்றிப் பின்தொடர்ந்து நீந்தினான் துணி வுள்ள வீரன் லோய்க்கோ ஜோபார். அடர்ந்த கரு மயிர்ச் சுருள்கள் அவனுடைய முகத்துக்குத் திரையிட்டிருந்தன. குளிர்ந்த பெரிய கண்ணீர்த் துளிகள் அவற்றுக்கு அடி யிலிருந்து சொரிந்தன...

மழை வலுத்தது. லோய்க்கோ ஜோபார், முதிய படை வீரன் தனீலோவின் மகள் ராத்தா என்னும் ஜிப்ஸி அழகர் களின் பெருமிதம் வாய்ந்த இணையைப் போற்றி ஏக்கம் ததும்பிய ஆழ்ந்த பாட்டைப் பாடியது கடல்.

அவர்கள் இருவருமோ, இரவின் இருளில் ஓசையின்றி நீந்தியவாறு சுற்றிச் சுற்றி வந்தார்கள். செருக்குள்ள ராத்தா வுக்கு இணையாக வர அழகன் ஜோபாரால் முடியவே இல்லை.

என் வழித் துணைவன்

ஒதெஸ்ஸாக் கப்பல் துறையில் நான் அவனைச் சந்தித்தேன். அவனுடைய கட்டமைந்த பருத்த மேனியும் அழகிய தாடியால் விளிம்பு கட்டப்பட்ட கிழக்கத்தி வகை முகமும் தொடர்ந்தாற் போல ஒரு மூன்று நாட்களாக என் கவனத்தை ஈர்த்தவாறு இருந்தன. அவன் அடிக்கடி என் முன் தோன்றி மறைந்து கொண்டிருந்தான். அவன் அலை தாங்கிக் கற்சுவர் மேல் மணிக் கணக்காக நின்று, கைத்தடிக் குமிழை வாயில் நுழைத்துக் கொண்டு வாதுமைக் கொட்டை வடிவான கருங் கண்களால் கப்பல் துறையின் கலங்கல் நீரை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்ததை நான் கண்டேன். கவலையற்ற உல்லாசப் பேர்வழியின் நடையில் நாள் தோறும் பல முறை அவன் என் அருகாகச் சென்றான். யார் அவன்?.. நான் அவனைக் கண்காணிக்கலானேன். அவனோ, எனக்குக் கோரணி காட்டுபவன் போல வர வர மேலும் அடிக்கடி என் கண்களில் படத் தொடங்கினான். அவனது நாகரிகமான கட்டம் போட்ட வெள்ளை சூட்டையும் கறுப்பு ஹாட்டையும் சோம்பிய நடையையும் மந்தமான, அலுத்த பார்வையையும் தொலைவிலேயே அடையாளம் கண்டு கொள்ள முடிவில் நான் பழகி விட்டேன். இங்கே, கப்பல் துறையில், கப்பல்கள், நீராவி எஞ்சின்களின் ஊதல்களுக்கும் சங்கிலிகளின் கணகணப்புக்கும் தொழிலாளர்களின் கூச்சல்களுக்கும் மனிதனை எல்லாப் புறங்களிலும் சூழ்ந்து பற்றும் வெறியும் நரம்பு இறுக்கமும் கொண்ட துறைமுகப் பரபரப்புக்கும் நடுவே அவன் இருப்பதற்கு நிச்சயமாக ஒரு காரணமும் இல்லை.

இங்கே எல்லா ஆட்களும் வேலைகளில் முனைந்திருந்தார்கள், களைத்திருந்தார்கள், ஓயாமல் ஓடிச் சாடினார்கள், புழுதி படிந்து வியர்த்திருந்தார்கள், இரைந்தார்கள், திட்டினார்கள். உழைப்பின் இந்தப் பரபரப்புக்கு நடுவே, உயிர்ப்பு அற்றுச் சலிப்பு தட்டிய முகம் கொண்ட, எதிலும் அக்கறை இல்லாத, எல்லோருக்கும் வேற்றான இந்த விந்தை உருவம் மெது நடை நடந்தது.

முடிவில் நான்காம் நாள், மதியச் சாப்பாட்டு வேளையில், நான் அவனைச் சந்தித்தேன். என்ன ஆனாலும் சரி, அவன் யார் என்று தெரிந்து கொண்டு விடுவது என முடிவு செய்தேன். அவனுக்கு அருகாமையில் உட்கார்ந்து தர்பூசனிப் பழத்தையும் ரொட்டியையும் வைத்துக் கொண்டு சாப்பிட்டவாறு அவனை நோட்டமிட்டேன். இவனிடம் நைச்சியமாகப் பேச்சு கொடுப்பது எப்படி என்று சிந்தனை செய்தேன்.

அவன் தேயிலைப் பேழைகளின் அடுக்கில் சாய்ந்தவாறு நின்று, இலக்கின்றிச் சுற்று முற்றும் கண்ணோட்டிய படி, புல்லாங்குழல் வாசிப்பவன் போன்று கைத்தடியில் விரல்களால் அடித்துக் கொண்டிருந்தான்.

நாடோடி உடை அணிந்து, முதுகில் சுமையாளுக்குரிய தோள் வாரும் மேலெல்லாம் நிலக்கரித் தூள் கறையுமாக இருந்த எனக்கு அந்தப் பிலுக்கனிடம் பேச்சு கொடுப்பது கடினமாக இருந்தது. ஆனால் அவன் என் மீதிருந்து விழிகளை அகற்றவே இல்லை என்பதையும் அவற்றில் இன்பமற்ற, பேராசை நிறைந்த விலங்கு உணர்வு கனல்வதையும் நான் வியப்புடன் கண்டேன். எனது நோக்குக்கு இலக்கானவன் பசித்திருக்கிறான் என்று முடிவு செய்து, சட்டென்று சுற்றிலும் கண்ணோட்டி விட்டு அவனிடம் தணிந்த குரலில் கேட்டேன்:

''சாப்பிட விரும்புகிறீர்களா?''

அவன் திடுக்கிட்டு, அனேகமாக நூறு நெருக்கமான வலிய பற்களைப் பேராசை தோன்ற இளித்து, என் போன்றே சந்தேகத்துடன் இங்கும் அங்கும் பார்வை செலுத்தினான்.

எங்களை யாரும் கவனிக்கவில்லை. அப்போது நான் பாதித் தர்பூசனிப் பழத்தையும் ஒரு துண்டு கோதுமை ரொட்டியையும் அவன் கைகளில் திணித்தேன். அவன் அவற்றை எடுத்துக் கொண்டு சரக்குக் குவியலின் பின்னே அமர்ந்து

மறைந்து விட்டான். அவனுடைய தொப்பி அணிந்த தலை சில வேளைகளில் அங்கிருந்து வெளியே துருத்தியது. தொப்பி பிடர்மீது நகர்த்தப்பட்டிருந்தது. இதனால் அவனது பழுப் பேறிய, வியர்த்த நெற்றி தெரிந்தது. மலர்ந்த முறுவலால் அவன்முகம் பளிச்சிட்டது. நொடிப் போது கூடச் சவைப்பதை நிறுத்தாமல் எதனாலோ எனக்குக் கண் சாடை செய்தான். எனக்காகக் காத்திருக்கும்படி அவனுக்குச் சைகையால் உணர்த்தி விட்டு நான் இறைச்சி வாங்கப் போனேன், வாங்கிக் கொண்டுவந்து அவனுக்குக் கொடுத்துவிட்டு மற்றவர்களின் பார்வைகளிலிருந்து அந்தப் பிலுக்கனை முழுவதும் மறைக்கும் விதத்தில் பேழைகளின் அருகே நின்று கொண்டேன். அது வரை அவன் வேட்டை விலங்கு போலச் சுற்றுமுற்றும் ஓயாமல் பார்த்தவாறு சாப்பிட்டான்—தன் கவளத்தை யாரேனும் பிடுங்கிக் கொள்வார்கள் என்று அஞ்சுபவன்போல. இப்போது அவன் அதிக நிம்மதியாகச் சாப்பிடலானான். ஆனாலும் பட்டினி கிடந்த அந்த மனிதன் அவக்கு அவக்கென்று பேராசையுடன் சாப்பிட்டதைக் காண எனக்கு வேதனை உண்டாயிற்று. நான் அவனுக்கு முதுகைக் காட்டித் திரும்பிக் கொண்டேன்.

ஜார்ஜிய ஒலி அழுத்தத்துடன் ருஷ்ய மொழியில் எனக்கு நன்றி தெரிவித்து என் தோளைப் பற்றிக் குலுக்கினான், பின்பு என் கையைப் பிடித்து நசுக்கி அதையும் இரக்கம் இன்றிக் குலுக்கத் தொடங்கினான்.

ஐந்து நிமிடங்கள் சென்றதும் தான் யார் என்ற கதையை அவன் எனக்குச் சொல்லி விட்டான்.

அவன் ஜார்ஜியன். சிற்றரசன் ஷக்ரோ ப்தாத்ஸே. குதயிசி நகரத்தைச் சேர்ந்த பணக்கார நிலப்பிரபுவான தகப்பனுக்கு ஒரே மகன். காக்கேஷியப் புகை வண்டி நிலையம் ஒன்றில் எழுத்தனாகப் பணியாற்றிக் கொண்டு ஒரு தோழனோடு சேர்ந்து வசித்தான். இந்தத் தோழன் சிற்றரசன் ஷக்ரோவின் பணத்தையும் விலை மிக்க பொருள்களையும் எடுத்துக் கொண்டு திடீரென்று கம்பி நீட்டி விட்டான். அவனை விரட்டிப் பிடிப்பதற்காகவே சிற்றரசன் கிளம்பி இருந்தான். தோழன் பத்தூமுக்கு டிக்கெட்டு வாங்கியதாக அவனுக்குத் தற்செயலாகத் தகவல் கிடைத்தது. சிற்றரசன் ஷக்ரோவும் அங்கே போனான். ஆனால் தோழன் ஒதெஸ்ஸா சென்று விட்

டதாக பத்தூமில் தெரிய வந்தது. அப்போது சிற்றரசன் ஷக்ரோ முடி திருத்தகம் வைத்திருந்த வானோ ஸ்வனீத்சே என்னும் மற்றொரு தோழனுடைய பாஸ்போர்ட்டை வாங்கிக் கொண்டு ஒதெஸ்ஸாவுக்கு வந்தான். முடி திருத்தும் தோழன் ஷக்ரோவின் சமவயதினன், ஆனால் அங்க அடையாளங்களில் வேறானவன். ஒதெஸ்ஸாவில் ஷக்ரோ திருட்டு பற்றிப் போலீசுக்கு மனுச் செய்து கொண்டான். போலீசார் திருடனைக் கண்டுபிடிப்பதாக வாக்களித்தார்கள். சிற்றரசன் இரண்டு வாரங்கள் காத்திருந்தான், பணத்தை எல்லாம் தின்று தீர்த்து விட்டான், சென்ற இரண்டு நாட்களாக ஒன்றுமே சாப்பிடவில்லை.

இடையிடையே வசவு திட்டுகளுடன் அவன் சொன்ன இந்தக் கதையை நான் கேட்டேன், அவனைப் பார்வையிட்டேன், நம்பினேன். அந்தப் பையன் மேல் எனக்கு இரக்கம் உண்டாயிற்று. அவனுக்கு இருபதாவது வயது நடந்து கொண்டிருந்தது. வெகுளித் தனத்தைப் பார்த்தால் அவனை இன்னும் இளையவனாக மதிக்கலாம். திருட்டுப் போன சாமான்களைத் தான் கண்டுபிடிக்காவிட்டால் தன்னுடைய கண்டிப்புள்ள தகப்பன் அவற்றுக்காகத் தன்னைக் ''கட்டாரியால் வெட்டிப் போட்டு விடுவான்'' என்று ஜார்ஜிய தோரணையில் ருஷ்ய மொழியில் கூறிய ஷக்ரோ, இத்தகைய பொருள்களைத் திருடிய கள்வனை தோழனுடன் தன்னைப் பிணைத்திருந்த உறுதியான நட்பை அடிக்கடியும் ஆழ்ந்த சீற்றத்துடனும் நினைவு கூர்ந்தான். இந்தச் சிறுவனுக்கு உதவி செய்யா விட்டால் பேராசை பிடித்த நகரம் இவனைத் தன் புதை சேற்றில் ஆழ்த்தி விடும் என்று நான் நினைத்தேன். எத்தகைய அற்பத் தற்செயல் நிகழ்ச்சிகள் நாடோடிகள் வர்க்கத்தின் எண்ணிக்கையை அதிகம் ஆக்குகின்றன என்பதை நான் அறிந்திருந்தேன். மதிப்புக்குரிய, ஆனால் மதிக்கப்படாத இந்த வகுப்பில் சேர்வதற்கு வேண்டிய எல்லா வாய்ப்புக்களும் சிற்றரசன் ஷக்ரோவுக்கு இருந்தன. அவனுக்கு உதவ எனக்கு விருப்பம் உண்டாயிற்று. நகரப் போலீஸ் தலைவனிடம் போய் பத்தூமுக்கு டிக்கெட்டு வாங்கித் தரும்படி வேண்டுமாறு யோசனை கூறினேன். அவன் குழப்பமடைந்து, போக மாட்டேன் என்றான். ஏன்? தான் தங்கிய விடுதியின் சொந்தக்காரனுக்கு அவன் பணம் செலுத்தவில்லையாம், பணம் கேட்ட

போது எவனையோ அடித்தானும். அப்புறம் மறைந்து கொண்டானும். பணம் கொடுக்காததற்கும் அடி கொடுத்ததற்கும் போலீசார் தனக்கு நன்றி தெரிவிக்கப் போவதில்லை என்று இப்போது நியாயமாகவே அனுமானித்தான். ஆனால் ஒன்று: தான் கொடுத்தது ஒரு அடியா இரண்டா, மூன்ற அல்லது நான்கா என்று அவனுக்குச் சரியாக நினைவு இல்லையாம்.

நிலைமை சிக்கல் ஆயிற்று. அவனுக்காக பத்தூம் பயணத்திற்கு வேண்டிய பணத்தைச் சம்பாதிக்கும் வரை வேலை செய்வது என்று நான் முடிவு செய்தேன். ஆனால், அந்தோ! இந்த நோக்கம் மிக விரைவில் ஈடேருது என்று தெரிய வந்தது. ஏனென்ருல் பட்டினியில் உழன்ற ஷக்ரோ மூன்ருள் உணவையும் அதற்கும் மேலும் விழுங்கினன்.

அந்தக் காலத்தில் ''பஞ்சைகளது'' பெருக்கின் விளைவாக, கப்பல் துறையில் நாட் கூலி விகிதங்கள் குறைவாய் இருந்தன. கூலியாகக் கிடைத்த எண்பது கோப்பெக்குகளில் அறுபதை நாங்கள் தின்று தீர்த்து வந்தோம். தவிரவும், கிரிமியா போவது என்று சிற்றரசன் வருவதற்கு முன்பே நான் முடிவு செய்திருந்தேன். ஆகையால் ஒதெஸ்ஸாவில் நீண்ட காலம் தங்கி இருக்க எனக்கு விருப்பம் இல்லை. பின்வரும் நிபந்தனைகளின் பேரில் என்னேடு நடந்து வரும்படிச் சிற்றரசன் ஷக்ரோவுக்கு அப்போது நான் யோசனை சொன்னேன்: திப்ளிஸ் வரை செல்லும் துணைப் பயணி ஒருவனை அவனுக்குத் தேடித் தர என்னால் முடியாவிட்டால் நானே அவனை அங்கே கொண்டு விடுவேன். தேடித் தர முடிந்தால் நாங்கள் பிரிந்து போவோம்.

சிற்றரசன் தன் பகட்டான பூட்சுகளையும் ஹாட்டையும் காற்சட்டையையும் பார்வையிட்டான், கோட்டைத் தடவினன், சிந்தித்தான், பல முறை பெருமூச்சு விட்டான், முடிவில் இசைந்தான், இவ்வாறு நாங்கள் இருவரும் ஒதெஸ்ஸாவிலிருந்து திப்ளிசுக்குப் புறப்பட்டோம்.

2

என் வழித் துணைவன் சிறு பிள்ளை, வெகுளி, காட்டுமிராண்டி, அறிவு வளர்ச்சியே அடையாதவன், வயிறு நிறைந்தபோது குதூகலமாகவும் பசித்தபோது சோர்வுடனும்

இருப்பவன் என்பதை நாங்கள் ஹெர்சோன் நகர் சேர்ந்த போது நான் அறிந்திருந்தேன். வலிமையும் நல்லியல்பும் வாய்ந்த விலங்காக அவனைத் தெரிந்து கொண்டிருந்தேன்.

காக்கேஷியாவைப் பற்றியும் ஜார்ஜிய நிலப்பிரபுக்களின் வாழ்க்கையைப் பற்றியும் அவர்களுடைய வேடிக்கை-விளையாட்டுக்களைப் பற்றியும் விவசாயிகள் பால் அவர்கள் கடைப்பிடித்த போக்குகளைப் பற்றியும் வழியில் அவன் எனக்கு விவரித்தான். அவன் சொன்ன கதைகள் சுவையாகவும் தம் வகையில் அழகாகவும் இருந்தன. ஆனால் கதை சொன்னவனைப்பற்றி என் மனதில் அவை ஏற்படுத்திய எண்ணம் அவனுக்குப் பெருமை தருவதாக இல்லை. உதாரணமாக, அவன் இந்த நிகழ்ச்சியை விவரித்தான்:

ஒரு பணக்காரச் சிற்றரசன் வீட்டுக்கு அண்டை அயலார் விருந்துக்கு வந்தார்கள். திராட்சை மது அருந்தினார்கள், சுரேக், ஷஷ்லீக், லவாஷ், புலாவ் முதலியவற்றை உண்டார்கள். பின்பு சிற்றரசன் விருந்தினரைக் குதிரை லாயத்துக்கு அழைத்துப் போனான். குதிரைகளுக்குச் சேணங்கள் பூட்டப்பட்டன. சிறந்த குதிரையைச் சிற்றரசன் எடுத்துக் கொண்டு அதில் ஏறித் திடலில் விரட்டினான். துடியான சாதிப் புரவி! அதன் உடல் வாகையும் விரைவையும் விருந்தாளிகள் புகழ்ந்தார்கள். சிற்றரசன் மறுபடி அதை விரட்டிச் சென்றான். திடீரென்று ஒரு குடியானவன் வெள்ளைக் குதிரை மேல் ஏறித் திடலில் வந்தான். அவனுடைய குதிரை சிற்றரசனின் குதிரையை முந்தி விட்டது. முந்தியதும் குடியானவன்... பெருமிதத்துடன் சிரித்தான். விருந்தாளிகளுக்கு முன் சிற்றரசனுக்கு வெட்கமாய்ப் போயிற்று!.. அவன் கடுமையாகப் புருவங்களை நெரித்து, குடியானவனைச் சைகையால் அழைத்து, அவன் பக்கத்தில் வந்ததும் வாள் வீச்சால் அவன் தலையை வெட்டி எறிந்து விட்டு, குதிரையின் காதில் ரிவால்வரால் சுட்டு அதைக் கொன்றபின் அதிகாரிகளுக்குத் தான் செய்ததை அறிவித்தான். அவனுக்கு சைபீரியக் கடுங்காவல் தண்டனை கிடைத்தது...

சிற்றரசன் மேல் அனுதாபம் தொனிக்க இந்தக் கதையை எனக்குச் சொன்னான் ஷக்ரோ. அனுதாபப்படுவதற்கு இதில் ஒன்றும் இல்லை என்று அவனுக்கு நிரூபிக்க நான் முயன்றேன். ஆனால், அவனோ எனக்கு அறிவுறுத்தும் பாங்கில் சொன்னான்:

''சிற்றரசர்கள் கொஞ்சம், குடியானவர்கள் நிறைய. ஒரு குடியானவனுக்காகச் சிற்றரசனைத் தண்டித்தது சரி அல்ல. குடியானவன் என்றால் என்ன? இது தான்!'' ஷக்ரோ மண் கட்டியை எனக்குக் காட்டினான். ''சிற்றரசனோ, நட்சத்திரம் மாதிரி!''

நாங்கள் விவாதித்தோம். அவன் எரிச்சல் அடைந்தான். எரிச்சல் அடைந்த போது அவன் ஓநாய் போலப் பற்களைக் காட்டினான். அவன் முகம் கூர்மை ஆயிற்று.

''பேச்சை விடு, மக்சீம்! காக்கேஷிய வாழ்க்கை உனக்குத் தெரியாது!'' என்று அவன் என்னை அதட்டினான்.

அவனுடைய வெகுளித்தனத்துக்கு முன் என் வாதங்கள் திறனற்றுப் போயின. எனக்குத் தெளிவாகப் புரிந்த விஷயம் அவனுக்குக் கேலிக்கு உரியதாக இருந்தது. என் கருத்துக்கள் மேலானவை என்று காட்டிய சான்றுகளால் நான் அவனைத் திக்கு முக்காட வைத்த போது அவன் சிந்தனையில் ஆழ்ந்துவிடவில்லை. மாறாக, பின் வருமாறு கூறினான்:

''காக்கேஷியாவுக்குப் போ. அங்கே வசி. நான் உண்மை சொன்னேன் என்பதைக் காண்பாய். எல்லோரும் இப்படிச் செய்கிறார்கள், எனவே, இப்படிச் செய்ய வேண்டும் என்று ஆகிறது. இது சரி அல்ல என்று நீ ஒருவன் மட்டும் சொல்கிறாய், ஆயிரக் கணக்கானவர்களோ, இது சரி என்கிறார்கள் என்றால் உன்னை நான் எதற்காக நம்பப் போகிறேன்?''

வாழ்க்கை இப்பொழுது உள்ள விதத்தில் முழுவதும் விதி முறைகளுக்கு இசைந்தது, நியாயமானது என்று நம்பும் இந்த மனிதனுக்குச் சொற்களால் அன்றி நிகழ்ச்சிகளால் மறுப்பு தெரிவிக்க வேண்டும் என்று புரிந்து கொண்டு அப்போது நான் பேசாது இருந்தேன். நான் பேச்சை நிறுத்தி விட்டேன், ஆனால் அவன் பண்படாத அழகு நிறைந்த, கனவும் மூலத் தன்மையும் நிறைந்த காக்கேஷிய வாழ்க்கையைப் பற்றி, உதடுகளைச் சப்புக் கொட்டிக் கொண்டு, பாராட்டு ததும்பக் கதைத்தான். இந்தக் கதைகள் எனக்குச் சுவாரசியமாக இருந்தன, என் கருத்தைக் கவர்ந்தன. அதே சமயம் அவற்றில் தொனித்த இரக்கமின்மையும் செல்வத்துக்கும் முரட்டு ஆற்றலுக்கும் தலை வணங்கும் தன்மையும் எனக்கு ஆத்திரமூட்டின, என்னை வெறிகொள்ளச் செய்தன. கிறிஸ்துவின்

போதனையை அவன் அறிவானு என்று ஒரு முறை நான் அவனிடம் கேட்டேன்.

அவன் தோள்களைக் குலுக்கி, வழக்கமான ஜார்ஜிய ஒலி அழுத்தத்துடன் ''நன்ருக!'' என்ருன்.

ஆனுல் அவன் அறிந்திருந்தது எல்லாம், கிறிஸ்து இருந்தார், எபிரேயச் சட்டங்களுக்கு எதிராக அவர் கிளர்ச்சி செய்தார், அதற்காக எபிரேயர்கள் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள், ஆனுல் அவர் கடவுளாகையால் சிலுவையில் மரிக்காமல் விண்ணுக்குச் சென்று மக்களுக்குப் புதிய வாழ்க்கைச் சட்டத்தை வழங்கினுர் என்பதுதான்...

''எந்தச் சட்டத்தை?''என்று கேட்டேன்.அவன் கேலியும் விளங்காமையும் தோன்ற என்னை நோக்கி வினவினுன்:

''நீ கிறிஸ்தவன்தானே? ஊம்! நானும் கிறிஸ்தவன்தான். உலகத்தில் அனேகமாக எல்லோரும் கிறிஸ்தவர்கள். ஊம், அப்படியானுல் என்னைக் கேட்பானேன்? எல்லோரும் எப்படி வாழ்கிருர்கள் என்று பார்க்கிருய் அல்லவா?.. அதுதான் கிறிஸ்துவின் சட்டம்.''

நான் கிளர்ச்சி அடைந்து கிறிஸ்துவின் வாழ்க்கை பற்றி அவனுக்கு விவரிக்கலானேன். முதலில் அவன் கவனத்துடன் கேட்டான். பின்பு கவனம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. கடைசியில் கொட்டாவியில் முடிந்தது.

அவனுடைய இதயம் எனக்குச் செவி சாய்க்க மறுத்ததைக் கண்டு நான் அவனுடைய மூளையை இலக்காகக் கொண்டேன். பரஸ்பர உதவியின் நன்மைகள், அறிவின் நன்மைகள், சட்ட முறைமையின் நன்மைகள் ஆகியவற்றைப் பற்றி, நன்மைகளை, மீண்டும் மீண்டும் நன்மைகளைப் பற்றி அவனிடம் பேசினேன்... ஆனுல் உலகம் பற்றிய அவனுடைய புரிவு என்னும் கற்சுவர் மேல் மோதி என்னுடைய வாதங்கள் நொறுங்கித் தூளாகி, விட்டன.

''வலியவன் தனக்குத் தானே சட்டம்! கற்பது அவனுக்குத் தேவை இல்லை.அவன் குருடனுய் இருந்தாலும் தன் வழியைக் கண்டு கொள்வான்!'' என்று எனது வாதங்களைச் சோம்பலுடன் மறுத்தான் சிற்றரசன் ஷக்ரோ.

தன் கோட்பாடுகளில் உறுதியாக இருக்க அவனுல் முடிந்தது. இந்தப் பண்பு அவன் மேல் எனக்கு மரியாதை ஏற்படுத்தியது. ஆனுல் அவன் காட்டான், குரூரமானவன் ஷக்ரோ

மேல் வெறுப்பு எனக்குள் சில வேளைகளில் பொங்கியதை நான் உணர்ந்தேன். எனினும் எங்களுக்கு இடையே தொடர்புப் புள்ளியை, நாங்கள் நெருங்கி வரவும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும் வகை செய்யும் ஆதாரத்தைக் கண்டு கொள்ளலாம் என்ற நம்பிக்கையை நான் இழந்துவிடவில்லை.

நாங்கள் பெரிகோப்பைக் கடந்து யாய்லாவை நெருங்கினேம். நான் கிரிமியாவின் தென் கரை பற்றிக் கனவு கண்டு கொண்டிருந்தேன். சிற்றரசனே, பற்களின் ஊடாக விந்தையான பாட்டுக்கள் பாடியவாறு உர்ரென்று முகத்தை வைத்துக் கொண்டிருந்தான். எங்கள் பணமெல்லாம் செலவாகிவிட்டது. வேலை செய்து சம்பாதிக்கத் தற்போது வழி எதுவும்இல்லை. நாங்கள் பியதோசியா என்னும் நகரத்தை நோக்கிப் போனேம். அங்கே அப்போது கப்பல் துறை கட்டும் வேலை தொடங்கி இருந்தது.

தானும் வேலை செய்யப் போவதாகவும் பணம் சம்பாதித்துக் கொண்டு கடல் வழியே இருவரும் பத்தூம் போவோம் என்றும் சிற்றரசன் என்னிடம் கூறினன். பத்தூமில் அவனுக்குத் தெரிந்தவர்கள் நிறையப் பேராம். வீட்டு வாசல் பெருக்குபவனுகவோ காவற்காரனுகவோ எனக்கு அவன் உடனே வேலை வாங்கித் தருவானும். அவன் என் தோளைத் தட்டிக் கொடுத்து, நாக்கை இனிமையாகச் சப்புக் கொட்டியவாறு பரிவு காட்டும் தோரணையில் மேலே சொன்னன்:

''உனக்கு எப்பேர்ப்பட்ட வாழ்க்கைக்கு ஏற்பாடு செய்கிறேன் பார்! த்ஸெ, த்ஸெ! சாராயம் எவ்வளவு வேண்டுமானுலும் குடிப்பாய், ஆட்டிறைச்சி — வேண்டிய அளவு! ஜார்ஜியப் பெண்பிள்ளையை, கொழுத்த பெண்பிள்ளையை, கலியாணம் கட்டிக் கொள்வாய், த்ஸெ, த்ஸெ, த்ஸெ!... அவள் உனக்காக லவாஷ் ரொட்டி சுடுவாள், குழந்தைகள் பெறுவாள், நிறையக் குழந்தைகள், த்ஸெ, த்ஸெ!''

இந்த ''த்ஸெ, த்ஸெ!'' முதலில் எனக்கு வியப்பளித்தது, பின்பு எரிச்சலூட்டத் தொடங்கிற்று, முடிவில் சொந்த ஊர் பற்றிய ஏக்கம் நிறைந்த வெறியை ஏற்படுத்தியது. ருஷ்யாவில் இந்த ஒலியால் பன்றிகளை அருகே அழைப்பது வழக்கம். காக்கேஷியாவிலோ, பாராட்டு, வருத்தம், திருப்தி, துயரம் ஆகியவற்றை வெளியிடுகிருர்கள்.

ஷக்ரோவின் நாகரிகமான சூட்டு அதற்குள் நைந்து

கசங்கிப் போயிற்று. அவனுடைய பூட்சுகள் பல இடங்களில் பிய்ந்து போயின. கைத்தடியையும் ஹாட்டையும் நாங்கள் ஹெர்சோனில் விற்று விட்டோம். ஹாட்டுக்குப் பதிலாக ரெயில்வே அலுவலனின் பழைய தொப்பியை ஷக்ரோ வாங்கிக் கொண்டான்.

அவன் அதை முதல் தடவை அணிந்த போது—மிகவும் சாய்வாக மாட்டிக் கொண்டான்—''எனக்குப் பொருந்து கிறதா? அழகாய் இருக்கிறதா?'' என்று என்னிடம் கேட்டான்.

3

ஆக, நாங்கள் கிரிமியாவில் இருந்தோம். செம்பெரோப் பலைத் தாண்டி யால்டாவை நோக்கி நடந்தோம்.

கடலினுல் சீராட்டப்பட்ட பூமியின் இந்தப் பகுதியின் இயற்கை அழகைப் பேச்சின்றி வியந்து பாராட்டியவாறு நான் நடந்தேன். சிற்றரசன் பெருமூச்செறிந்தான், துன் புற்ருன், ஏங்கிய விழிகளால் சுற்றிலும் பார்வை செலுத்தி, தன் வெறும் வயிற்றை எவையோ காட்டுப் பழங்களால் நிறைக்க முயன்ருன். அவற்றின் ஊட்டப் பண்புகளை அறிமுகம் செய்து கொண்டது அவனுக்கு எப்போதும் நலமாக முடியவில்லை. வன்ம நகைச் சுவையுடன் அவன் என்னிடம் அடிக்கடி கூறினுன்:

''எனக்கு உள்ளே இருப்பது எல்லாம் வெளியே வந்து விட்டால் நான் மேலே நடப்பது எப்படி? ஊம்? சொல்லு—எப்படி?''

வேலை செய்து ஏதேனும் சம்பாதிக்கும் வாய்ப்புக்கள் எங்களுக்கு எதிர்ப்படவே இல்லை. ரொட்டி வாங்க ஒரு காசுகூட எங்களிடம் இல்லாததால் பழங்களையும் வருங்கால நம்பிக்கைகளையுமே நாங்கள் உணவாகக்கொண்டோம். சோம் பேறித் தனத்துக்காகவும் ''அங்காந்த வாய்த் தனம்'' என்று அவன் குறித்த இயல்புக்காகவும் ஷக்ரோ என்னைக் கடிந்து கொள்ளத் தொடங்கினுன். அவனைச் சகிப்பது பொதுவாகவே கடினம் ஆயிற்று. ஆனல் எல்லாவற்றையும் விட அதிகமாக, நம்ப முடியாத தன் கடும் பசியைப் பற்றிய கதைகளால் அவன் என்னைக் கொடுமைப் படுத்தினுன். பகல் பன்னிரண்டு மணிக்குச் ''சிறு ஆட்டுக் குட்டியைக்'' காலை உணவாக

உண்டு மூன்று புட்டி மது அருந்திய பின், இரண்டுமணிக்கு மூன்று தட்டு ''சகாஹ்பீலி'' அல்லது ''சிகிர்த்மா,'' ஒரு தட்டு புலாவ், ஷஷ்லீக் என்னும் வாட்டல் கறித் துண்டுகள் ஒரு கோல் ஆகியவையும் ''வேண்டிய அளவு தோல்மா'' வும் இன்னும் பல வகை வகையான காக்கேஷிய உணவுப் பண்டங்களும் அனாயாசமாகச் சாப்பிட்டு, இவற்றோடு ''எவ்வளவு வேண்டி இருந்ததோ அவ்வளவு'' மதுவும் அருந்தி மதிய உணவு கொள்ள அவனால் முடிந்ததாம். தனக்குப் பிடித்த உணவு வகைகள் பற்றியும் சுவையுணவுக் கலையில் தான் அறிந்தவற்றைப் பற்றியும் அவன் நாள் முழுதும் எனக்கு விவரிப்பான். அப்போது அவன் நாக்கைச் சப்புக் கொட்டுவான், அவனுடைய கண்களில் உற்சாகம் கனல் வீசும், பற்களைக் காட்டுவான், அவற்றை நெறு நெறுப்பான், சொல்வன்மை மிக்க வாயிலிருந்து பேரளவில் தெறிக்கும் உமிழ் நீரை ஓசையுடன் உறிஞ்சி விழுங்குவான்.

ஒரு முறை, யால்டாவின் அருகில், வெட்டிக் கலைந்த கொப்புகளை அகற்றிப் பழத் தோட்டத்தைத் துப்புரவாக்கும் வேலையை நான் கூலிக்கு ஏற்று, ஒரு நாள் கூலியை முன்பணமாகப் பெற்றுக் கொண்டு, அந்த ஐம்பது காசுக்கும் ரொட்டியும் இறைச்சியும் வாங்கினேன். வாங்கியவற்றை நான் கொண்டுவந்ததும் தோட்டக்காரன் என்னை அழைத்தான். தலைவலி என்ற சாக்கில் வேலை செய்ய மறுத்த ஷக்ரோவிடம் கடையில் வாங்கிய இந்தப் பண்டங்களைக் கொடுத்து விட்டு நான் போனேன். ஒரு மணி நேரம் பொறுத்துத் திரும்பியதும் ஷக்ரோ தன் பசியைப் பற்றிச் சொன்ன போது உண்மையின் வரம்பைத் தாண்டவில்லை என்பதை நேரில் கண்டு அறிந்தேன். நான் வாங்கி வந்த பண்டங்களில் ஒரு துணுக்குகூட மிஞ்சவில்லை. இது தோழமை அற்ற செயலாக இருந்தது, எனினும் நான் பேசாதிருந்தேன். இது எனக்கே கேடாக முடிந்ததை அடுத்து நேர்ந்த நிகழ்ச்சிகள் காட்டின.

எனது மௌனத்தைக் கவனித்த ஷக்ரோ அதைத் தனக்கே உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டான். வியப்பூட்டும் விதத்தில் முட்டாள் தனமான ஒன்று தொடங்கியது. நான் வேலை செய்தேன். அவனோ, வெவ்வேறு சாக்குகள் சொல்லி வேலை செய்ய மறுத்து, உண்பதும் உறங்குவதும் என்னை ஓட ஓட விரட்டுவதுமாக இருந்தான். உடல் நலம்

வாய்ந்த அந்த இளைஞனைக் காண எனக்கு வேடிக்கையாகவும் வருத்தமாகவும் இருந்தது.

நான் வேலையை முடித்து விட்டுக் களைப்புடன் அவனிடம் திரும்புவேன். எங்கேனும் நிழல் அடர்ந்த மூலையில் எனக்காகக் காத்திருக்கும் அவன் பேரார்வத்துடன் என்னை விழிகளால் நோட்டம் பார்ப்பான். இதைவிட அதிக வருத்தமும் மனப் புண்ணும் ஏற்படுத்திய விஷயம் என்ன என்றால் நான் வேலை செய்ததற்காக அவன் என்னை எள்ளி நகையாடியது ஆகும். அவன் இயேசுவின் பெயரால் பிச்சை கேட்கப் பழகி விட்டதால் என்னைக் கேலி செய்தான். பிச்சை கேட்க ஆரம்பித்த புதிதில் என் முன்னே கூச்சப்பட்டான். ஆனால் பிறகு, நாங்கள் தாத்தார் கிராமம் ஒன்றை நெருங்கியதும், பிச்சை எடுப்பதற்கு என் கண் முன்பே ஏற்பாடுகள் செய்து கொண்டான். இதற்காகத் தடியை ஊன்றியவாறு, கால் வலிப்பது போன்ற பாவனையில் அதைத் தரையில் இழுத்து இழுத்து நடந்தான், ஏனென்றால், சிக்கனக்காரத் தாத்தார்கள் நோய் நொடி அற்ற இளைஞனுக்குப் பிச்சை போட மாட்டார்கள் என்பதை அவன் அறிந்திருந்தான். நான் அவனுடன் விவாதித்தேன். இந்த மாதிரித் தொழில் எவ்வளவு வெட்கக் கேடானது என்பதை அவனுக்குச் சான்றுகள் காட்டி விளக்கினேன்...

''எனக்கு வேலை செய்யத் திறமை கிடையாது!'' என்று அவன் எனக்குச் சுருக்கமாக மறுப்புக் கூறினான்.

அவனுக்குப் பிச்சை சொற்பமாகவே கிடைத்தது. அந்த சமயத்தில் எனக்கு உடம்பு சரியாய் இல்லை. பயணம் நாளுக்கு நாள் அதிகக் கடினம் ஆகிக் கொண்டு போயிற்று. ஷக்ரோவுடன் எனது உறவு அதிகச் சிக்கல் அடைந்தது. நான் அவனுக்கு உணவு தேடித் தர வேண்டும் என்று அவன் இப்போது விடாப் பிடியாகக் கோரத் தொடங்கினான்.

வழக்கமான ஜார்ஜியப் பாங்கில் ருஷ்ய மொழியை உச்சரித்தவாறு அவன் சொன்னான்: ''நீ என்னை அழைத்துப் போகிறாய் அல்லவா? அழைத்துப் போ! கால்நடையாக இவ்வளவு தூரம் போக என்னால் முடியுமா என்ன? எனக்குப் பழக்கம் இல்லை. இதனால் நான் செத்து விடலாம்! எதற்காக என்னைத் தொல்லைப்படுத்துகிறாய், வதைக்கிறாய்? நான் மண்டையைப் போட்டு விட்டால் அப்புறம் என்ன ஆகும்?

அம்மா அழுவாள், அப்பா அழுவார், தோழர்கள் அழுவார்கள்! எவ்வளவு கண்ணீர், பார்!''

இந்த மாதிரிப் பேச்சுக்களைக் கேட்டு நான் கோபம் கொள்ளவில்லை. அந்தச் சமயத்தில் என் உள்ளத்தில் புகுந்த விந்தையான ஓர் எண்ணம் இதை எல்லாம் பொறுத்துக் கொள்ள என்னைத் தூண்டியது. சில வேளைகளில் அவன் உறங்கிக்கொண்டிருப்பான், நான் அவன் அருகே உட்கார்ந்து அவனுடைய நிம்மதியான, அசைவற்ற முகத்தைப் பார்த்தபடி எதையோ குறித்து ஊகம் செய்தவாறு மனதுக்குள் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொள்வேன்:

''என் வழித் துணைவன்... என் வழித் துணைவன்...''

நான் தனக்கு உதவவும் தன்னைப் பற்றிக் கவலை எடுத்துக் கொள்ளவும்வேண்டும் என்று மிகுந்த தன்னம்பிக்கையுடனும் துணிவுடனும் கோரும் பொழுது ஷக்ரோ தன்னுடைய உரிமையைத் தான் பயன்படுத்திக் கொள்கிறான் என்ற எண்ணம் எனது மனத்திலும் சில வேளைகளில் எழுந்தது. இந்தக் கோரிக்கையில் மனோதிடமும் வலிமையும் இருந்தன. அவன் என்னை அடிமை கொண்டான். நான் அவனுக்குப் பணிந்தேன். அவனை ஆராய்ந்தேன், அவனது முகத்தின் ஒவ்வொரு சிறு அசைவையும் உற்றுக் கவனித்தேன். மற்றவனுடைய ஆளுமையை ஆக்கிரமிக்கும் இந்தச் செயல் முறையில் எந்த இடத்தில் அவன் நிற்பான் என்று புரிந்து கொள்ள முயன்றேன். அவனோ மகிழ்ச்சி பொங்கும் மன நிலையில் இருந்தான், பாடினான், உறங்கினான், விரும்பிய போது என்னைக் கேலி செய்து நகையாடினான். சில சந்தர்ப்பங்களில் நாங்கள் ஒருவரை ஒருவர் பிரிந்து இரண்டு, மூன்று நாட்களுக்கு வெவ்வேறு திசைகளில் செல்வோம். இருந்தால் பணமும் ரொட்டியும் அவனுக்குக் கொடுத்து எனக்காக அவன் எங்கே காத்திருக்க வேண்டும் என்பதைச் சொல்வேன். சந்தேக நோக்குடனும் துயர் ததும்பும் புன்னகையுடனும் எனக்கு விடை கொடுக்கும் அவன் நாங்கள் மீண்டும் சந்திக்கையில் களி பொங்க, வெற்றித் தோற்றத்துடன் என்னை எதிர் கொண்டு ஒவ்வொரு தடவையும் சிரித்தவாறு கூறுவான்:

''நீ என்னை விட்டு விட்டுத் தனியாகப் போய் விட்டாய் என்று நினைத்தேன்! ஹா, ஹா, ஹா!..''

நான் அவனுக்குச் சாப்பிடக் கொடுத்து நான் கண்ட

அழகிய இடங்களை விவரிப்பேன். ஒரு முறை, பக்சிசராய் என்ற இடத்தை வருணித்த போது அதைக் களமாகக் கொண்டு காவியம் எழுதியுள்ள ருஷ்ய மகாகவி பூஷ்கினைப் பற்றிச் சொல்லி அவருடைய கவிதைகளை மேற்கோள் காட்டினேன். இவை எல்லாம் அவன் மீது எவ்வித உளப் பதிவையும் ஏற்படுத்தவில்லை.

''ஏ,செய்யுள்களாம்!இவை செய்யுள்கள் அல்ல,பாட்டுக் கள்! எனக்கு ஒரு ஜார்ஜியனைத் தெரியும். அவன் பாடுவான் பாட்டு! அதுதான் பாட்டு!.. பாடத் தொடங்குவான்— அப்பப்பா!.. சத்தம் போட்டு... ரொம்பச் சத்தம் போட்டுப் பாடுவான்! யாரோ அவன் குரல்வளையைக் கட்டாரியால் குடைவது போல!.. அவன் ஒரு கடைக்காரனை வெட்டிக் கொன்று விட்டு இப்போது சைபீரியாவுக்குப் போ யிருக்கிறான்.''

ஒவ்வொரு தரம் அவனிடம் திரும்பிய பிறகும் நான் அவனது மதிப்பில் முன்னிலும் அதிகமாகவும் கீழேயும் விழுந்து கொண்டு போனேன். அவனால் இதை என்னிடமிருந்து மறைக்க முடியவில்லை.

எங்கள் விவகாரங்கள் மோசமாக நடந்து கொண் டிருந்தன. வாரத்துக்கு ஒரு, ஒன்றரை ரூபிள் சம்பாதிக்கும் வாய்ப்பு கிடைப்பதே எனக்கு அரும் பாடாக இருந்தது. இந்தப் பணம் இரண்டு பேருக்கு மிகக் குறைவாக இருந்தது என்று சொல்ல வேண்டியதில்லை. ஷக்ரோ எடுத்த பிச்சை அவனது உணவில் சிக்கனம் ஏற்படுத்தவில்லை. முந்திரிப் பழம், முலாம் பழம், உப்பிட்ட மீன், ரொட்டி, உலர் பழங்கள் முதலிய எல்லாவற்றையும் வித்தியாசம் பாராட்டாமல் உள்ளே தள்ளும் சிறு கிடங்காக இருந்தது அவனுடைய வயிறு. நேரம் கழியக் கழிய அது அளவில் பெரிதாகிக் கொண்டு போனது போலவும் அதிக இரை கேட்பது போலவும் தோன்றியது.

ஏற்கெனவே இலையுதிர் காலம் தொடங்கி விட்டது என்றும் வழிப் பயணம் இன்னும் நீளமானது என்றும் தர்க்க பூர்வ மாகக் கூறி, கிரிமியாவிலிருந்து என்னை விரைவில் புறப்படச் செய்ய ஷக்ரோ முயற்சி தொடங்கினான். நான் அவன் கருத் துக்கு இணங்கினேன். தவிர, கிரிமியாவின் இந்தப் பகுதியை நான் இதற்குள் பார்த்து விட்டேன். ஆகவே எங்களிடம்

இல்லாத ''பணத்தைத் திரட்டும்'' பொருட்டு நாங்கள் பியதோசியா சென்ருேம்.

அலூஷ்தாவிலிருந்து ஒரு இருபது வெர்ஸ்டாக்கள் சென்ற பின் இரவைக் கழிப்பதற்காகத் தங்கிஞேம். கடற்கரை ஒரமாக நடக்க ஷக்ரோவை நான் இணங்க வைத்திருந்தேன். இது யாவற்றிலும் நீண்ட பாதை. ஆனுலும் கடற் காற்றைச் சுவாசிக்க எனக்கு விருப்பம் உண்டாயிற்று. நாங்கள் நெருப்பு மூட்டி அதன் அருகே படுத்தோம். மாலே அற்புதமாக இருந்தது. கரும் பச்சைக் கடல் எங்களுக்குக் கீழே பாறைகள் மீது மோதிக் கொண்டிருந்தது. இள நீல வானம் மேலே கம்பீர மௌனத்தில் ஆழ்ந்திருந்தது. எங்களேச் சுற்றிலும் செடிகளும் மரங்களும் தணிவாக இரைந்து கொண்டிருந்தன. சந்திரன் உதித்தது. சிஞர் மரத்தின் சித்திரக் கோலப் பசுந் தழையின் நிழல்கள் தரையில் விழுந்தன. உற்சாகமாகவும் கணீரெனவும் ஒரு பட்சி பாடிக் கொண்டிருந்தது. அதன் வெள்ளி மணி இசையொலிகள் அலேகளின் சீராட்டும் தணிந்த சரசரப்பால் நிறைந்திருந்த காற்றில் கரைந்தன. அவை அடங்கியதும் ஏதோ ஒரு பூச்சியின் பதற்றமுள்ள சிலம்பல் கேட்டது. நெருப்பு குதூகலமாக எரிந்தது. அதன் தழல் சிவப்பு, மஞ்சள் மலர்களின் தகதகக்கும் பெரிய செண்டு போலக் காட்சி அளித்தது. அதுவும் நிழல் வீசிற்று. இந்த நிழல்கள் நிலவின் சோம்பிய நிழல்களுக்கு முன் தங்கள் உயிர்த் துடிப்பிஞல் கருத்தை ஈர்ப்பவை போன்று எங்களேச் சுற்றிலும் குதித்தாடின. கடலின் அகன்ற எல்லே வட்டம் வெற்ருய் இருந்தது. அதற்கு மேலே வானம் மேகங்கள் இன்றித் தெளிவாய் இருந்தது. உள்ளத்தை மயக்கும் புதிரான விண் வெளி மீது மனத்தை ஈடுபடுத்தியவாறு பூமியின் விளிம்பில் இருப்பவன் போன்று நான் உணர்ந்தேன்... மாண்பு மிக்க ஒன்றின் அருகே இருக்கும் அச்சமூட்டும் உணர்வு என் உள்ளத்தை நிறைத்தது, நெஞ்சு திகிலால் உறைந்து போயிற்று.

திடீரென்று ஷக்ரோ உரக்கக் கெக்கலித்தான்.

''ஹா, ஹா, ஹா!.. உன் மூஞ்சி எப்படி அசடு வழிகிறது! அப்படியே ஆட்டுக் கடாவின் மூஞ்சி போல! ஆ, ஹா, ஹா, ஹா!..''

திடீரென்று இடியால் தாக்குண்டவன் போல நான் பயந்து போனேன். ஆனல் இது இடியின் திடீர்த் தாக்கைக் காட்டி

லும் மோசமாக இருந்தது. இது கேலி என்பது உண்மையே. ஆனாலும் இதனால் மனம் எப்படிப் புண்பட்டது!.. ஷக்ரோ சிரிப்பினால் கண்ணீர் பெருக்கினான். எனக்கோ, வேறு காரணத்தால் அழுகை வந்து விடும் போல் இருந்தது. என் தொண்டையைக் கண்ணீர் அடைத்துக் கொண்டது. என்னால் பேச முடியவில்லை. வெறித்த விழிகளால் அவனை நோக்கினேன். இதனால் அவனுடைய சிரிப்பு அதிகம் ஆயிற்று. அவன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு தரையில் உருண்டான். என்னாலோ, எனக்குச் செய்யப்பட்ட அவமதிப்பிலிருந்து இன்னும் விடுபட முடியவில்லை... என் மனம் கொடுமையாகப் புண் படுத்தப்பட்டது. தாங்களே இது போன்ற அவமதிப்புக்கு ஒருகால் ஆளான காரணத்தால் என்னைப் புரிந்து கொள்வார்கள் என நான் நம்பும் ஒரு சிலர் இந்தக் கொடுமையைத் தங்கள் மனத்தில் மீண்டும் சீர்தூக்கிப் பார்ப்பார்கள்.

''நிறுத்து!'' என்று வெறியுடன் கத்தினேன்.

அவன் பயத்தால் திடுக்கிட்டான், ஆனால் இன்னும் அவனால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. சிரிப்பு அலைகள் அவனை இன்னமும் ஆட்டிப் புடைத்தன. அவன் கன்னங்களை உப்பி, கண்களைப் பரக்க விழித்தவன், திடீரென்று குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான். அப்போது நான் எழுந்து அவனிடமிருந்து விலகிச் சென்றேன். காந்தும் மனத்தாங்கல் நஞ்சினால் நிறைந்தவனாக, எண்ணங்கள் இன்றி, அனேகமாகத் தன்னுணர்வு இன்றி நெடு நேரம் நடந்தேன். நான் இயற்கை அனைத்தையும் தழுவி, அதன் மீது என் காதலை, ஓரளவு கவிஞனான மனிதனின் ஆர்வம் நிறைந்த காதலை, மௌனமாகவும் உளமாரவும் வெளியிட்டேன். இயற்கையோ, என்னை எனது காதலுக்காக ஷக்ரோவின் வடிவில் எள்ளி நகையாடியது! இயற்கைக்கும் ஷக்ரோவுக்கும் வாழ்க்கையின் எல்லா ஒழுங்கு முறைகளுக்கும் எதிராகக் குற்றப் பத்திரிகை படிப்பதில் நான் வெகு தூரம் முன்னேறி இருப்பேன், ஆனால் என் பின்னே விரைந்த காலடி ஓசைகள் கேட்டன.

''கோபப் படாதே!'' என்று என் தோளை மெல்லத் தொட்டுத் தயக்கத்துடன் சொன்னான் ஷக்ரோ. ''நீ பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாயா? எனக்குத் தெரியாது.''

குறும்பு செய்து விட்ட சிறுவனின் பயந்த குரலில் அவன் பேசினான். குழப்பத்தாலும் அச்சத்தாலும் வேடிக்கையாகக்

கோணியிருந்த அவனுடைய இரங்கத் தக்க முகத்தைப் பாரா திருக்க அந்த ஆத்திரத்திலும் கூட என்னால் முடியவில்லை.

''இனிமேல் நான் உன்னைச் சீண்ட மாட்டேன். மெய் யாக! ஒரு போதும்!''

அவன் மறுப்பைக் காட்டும் விதத்தில் தலை அசைத்தான்.

''நான் பார்த்தேன், நீ சாது, உழைக்கிறாய், என்னைக் கட்டாயப் படுத்துவதில்லை. எண்ணிப் பார்த்தேன், எதனால்? எதனால் என்றால், இவன் அசடன், ஆட்டுக் கடா போல...''

அவன் எனக்கு ஆறுதல் சொன்ன அழகு இது! என்னிடம் அவன் மன்னிப்பு கேட்ட விதம் இது! சந்தேகம் இல்லாமல், இந்த மாதிரித் தேறுதல்களுக்கும் மன்னிப்பு கோரல்களுக் கும் பிறகு, அவனுடைய சென்ற காலக் குற்றங்களை மட்டும் அல்ல, வருங்காலக் குற்றங்களையும் மன்னிப்பதைத் தவிர நான் செய்வதற்கு ஒன்றும் இருக்கவில்லை.

அரை மணி நேரத்தில் அவன் ஆழ்ந்து தூங்கி விட்டான். நான் அவன் அருகில் உட்கார்ந்து அவனை நோக்கினேன். வலியவன் கூட உறக்கத்தில் தற்காப்பு இல்லாதவனாகவும் திக்கற்றவனாகவும் தோற்றம் அளிப்பான். ஷக்ரோ இரங்கத் தக்கவனாக இருந்தான். பருத்த உதடுகளும் உயர்த்திய புரு வங்களும் சேர்ந்து அவனுடைய முகத்தைக் குழந்தைமையும் மிரட்சியும் வியப்பும் கொண்டதாகக் காட்டின. அவன் சீராக, அமைதியாக மூச்சு விட்டான், ஆனால் சில வேளைகளில் சஞ்சலம் அடைந்து பிதற்றினான், கெஞ்சும் பாவனையில் ஜார்ஜிய மொழியில் விரைவாகப் பேசினான். எங்களைச் சுற்றிலும் இறுக் கம் நிறைந்த நிசப்தம் கொலு வீற்றிருந்தது. இத்தகைய நிசப்தத்திலிருந்து நாம் எப்போதும் எதையேனும் எதிர் பார்ப்போம். இது வெகு நேரம் நீடிக்க முடிந்தால் தனது முழு அமைதியாலும் சந்தடி இன்மையாலும்—இயக்கத்தின் பளிச்சிடும் நிழலாலும்—மனிதனைப் பைத்தியம் ஆக்கி விடும். அலைகளின் தணிந்த சலசலப்பு எங்கள் காதுகளுக்கு எட்ட வில்லை. நாங்கள் ஒரு கிடங்கில் இருந்தோம். ஒட்டிக் கொள் ளும் ஒரு வகைப் புதர்ச் செடிகள் அதில் அடர்ந்திருந்தன. கல்லாகி விட்ட விலங்கின் மயிரடர்ந்த மிடறு போல இருந்தது அது. நான் ஷக்ரோவைப் பார்த்துப் பின்வருமாறு எண்ணமிட்டேன்:

''இவன் என் வழித் துணைவன்... நான் இவனை இங்கே

விட்டு விடலாம், ஆனுல் இவனிடமிருந்து அப்பால் செல்ல முடியாது, ஏனென்ருல் இவனுக்குப் பெயர்கள்—எண்ணிறந் தவை... இவன் என் வாழ்நாள் முழுவதற்கும் வழித் துணை வன்... கல்லறை வரையில் இவன் என் உடன் வருவான்...''

பியதோசியா எங்கள் எதிர்பார்ப்பைப் பொய்யாக்கி விட்டது. நாங்கள் அங்கே போன போது எங்களைப் போலவே வேலை தேவைப்பட்டவர்களும் அலைதாங்கிக் கட்டுமானத்தின் பார்வையாளர்களாக இருப்பதிலேயே திருப்தி அடையுமாறு கட்டாயப்படுத்தப்பட்டவர்களுமான சுமார் நானூறு பெயர் அங்கே இருந்தார்கள். துருக்கியர்களும் கிரேக்கர்களும் ஜார் ஜியர்களும் ஸ்மலேன்ஸ்க் வாசிகளும் பல்தாவாக்காரர்களும் வேலை செய்து கொண்டிருந்தார்கள். ''பஞ்சைகளின்'' மகிழ் வற்றுச் சோர்ந்த உருவங்கள் நகரிலும் அதைச் சுற்றிலும் — எங்கும் — கூட்டங்களாக அலைந்து திரிந்து கொண் டிருந்தன. அஸோவ், தவ்ரியா நாடோடிகள் ஓநாயின் கெச்சை நடையில் ஓடியாடிக் கொண்டிருந்தார்கள்.

நாங்கள் கெர்ச்சுக்குப் போனேம்.

என் வழித் துணைவன் தன் சொல்லைக் காப்பாற்றினுன். அவன் என்னைச் சீண்டவில்லை. ஆனுல் அவன் கடும் பட்டினி கிடந்தான். யாராவது சாப்பிடுவதைக் கண்டு வெளிப்படை யாக ஓநாய் போலப் பற்களை நெறு நெறுத்தான். தான் விழுங்க ஆயத்தமாய் இருந்த வெவ்வேறு உணவுப் பண்டங் களின் அளவுகளை விவரித்து என்னைப் பெருந் திகிலில் ஆழ்த் திஞன். சிறிது காலமாக அவனுக்குப் பெண்கள் நினைவு வரத் தொடங்கி இருந்தது. முதலில் சாடைமாடையாக, வருத்தப் பெருமூச்சுக்களுடன் பெண்களைப் பற்றிப் பேசினுன். பின்பு அடிக்கடி, ''கிழக்கத்திப் பேர்வழியின்'' பேராசை ததும்பும் புன்னகையுடன் பேசலானுன். கடைசியில், ஒரு பெண்பால் அருகாகச் சென்ருல் அவளுடைய வயதும் வெளித் தோற்றமும் எத்தகையனவாக இருந்தாலும் அவளுடைய உடல் வாகின் ஏதேனும் ஓர் அம்சம் பற்றி நடைமுறைத் தத்துவ ஆபாசக் கருத்தை என்னேடு பகிர்ந்து கொள்ளாமல் அவன் விடுவதில்லை என்னும் அளவுக்கு விவகாரம் முற்றி விட்டது! பெண்களைப் பற்றி அவன் நாக்கில் நரம்பின்றியும் விஷய ஞானத்துடனும் பேசியதைக் கேட்டும் வியப் பூட்டும் வெளிப்படையான நோக்குடன் அவன் பெண்களைப்

பார்த்ததைக் கண்டும் அருவருப்புடன் காறித் துப்புவது தான் என்ஞல் முடிந்தது... பெண் அவனுக்கு எந்த விதத்திலும் குறைந்தவள் அல்ல என்று அவனுக்குச் சான்று காட்டி விளக்க ஒரு தரம் நான் முயன்றேன். ஆஞல் என் கருத்துக்களுக்காக அவன் என்மேல் மனத் தாங்கல் கொண்டதோடு நில்லாமல் நான் தன்னை இழிவுபடுத்துவதாக எண்ணி வெறி கொள்ள முற்பட்டதைக் கண்டு, அவன் வயிரூர உண்ணும் வரை என் முயற்சிகளைக் கட்டி வைக்க முடிவு செய்தேன்.

பயணப் பாதையைக் குறுக்கும் நோக்கத்துடன் கெர்ச்சுக்குக் கடற்கரை ஓரமாகப் போகாமல் ஸ்தெப்பி வழியே நடந்தோம். எங்கள் கடைசி ஐந்து காசுக்கு ஒரு தாத்தார் மாதிடம் வாங்கிய மூன்று ராத்தல் எடையுள்ள ஒரு வாற்கோதுமை அடை மட்டுந்தான் எங்கள் பயணப் பையில் இருந்தது. ஊர் ஊராக உணவுப் பிச்சை எடுக்க ஷக்ரோ செய்த முயற்சிகள் ஒரு பயனும் விளைக்கவில்லை. ''நீங்கள் நிறையப் பேர்!..'' என்ற சுருக்கமான பதில் எங்கும் கிடைத்தது. இது பேருண்மை. அந்த நெருக்கடி ஆண்டில் ஒரு துண்டு ரொட்டி கிடைக்காதா என்று தேடி அலைந்தவர்களின் எண்ணிக்கை அச்சந்தரும் அளவுக்கு அதிகமாய் இருந்தது.

பிச்சை எடுப்பதில் தன்னுடன் போட்டிக்கு வந்த ''பஞ்சைகளை'' என் வழித் துணைவஞல் சகிக்க முடியவில்லை. பயணம் கடினமாகவும் ஊட்டம் மோசமாகவும் இருந்தாலும் உயிராற்றல் சேமிப்பு காரணமாக நொய்ந்த, பரிதாபகரமான தோற்றத்தை வருவித்துக் கொள்வது அவனுக்கு இயலவில்லை. அவர்களோ, நியாயமாகக் கூறிஞல், இதில் தங்களுக்கு ஏற்பட்டிருந்த தேர்ச்சியைக் குறித்துப் பெருமை கொள்ள முடிந்தது. அவர்களைத் தொலைவில் கண்டதுமே அவன் சொல்வான்:

''மறுபடி வருகிருர்கள்! த்தூ, த்தூ, த்தூ! எதற்காக வருகிருர்கள்? எதற்காகத் திரிகிருர்கள்? ருஷ்யாவில் இடம் பற்ற வில்லையோ? எனக்குப் புரியவில்லை! ருஷ்ய மக்கள் பெருத்த அசடர்கள்!''

ரொட்டியைத் தேடிக் கிரிமியா செல்லுமாறு அசட்டு ருஷ்ய மக்களைத் தூண்டும் காரணங்களை நான் அவனுக்கு விளக்கிய போது அவன் நம்பிக்கை இன்றித் தலையை அசைத்து, என் பேச்சை மறுத்தான்:

''எனக்குப் புரியவில்லை! இது எப்படி முடியும்?.. எங்கள் ஜார்ஜியாவில் இந்த மாதிரி அசட்டுத்தனங்கள் கிடையாது!''

நாங்கள் கெர்ச் போய்ச் சேர்ந்த போது இருட்டி விட்டது. ஆகவே நாங்கள் கப்பல் துறையை ஒட்டிக் கரையோரத்தில் அமைந்த இடைவழியின் அடியில் இரவைக் கழிக்க வேண்டியதாயிற்று. மறைந்து கொள்வது எங்களுக்கும் அவசியமாக இருந்தது. நாங்கள் வந்ததற்குச் சற்று முன்பு தேவையற்றவர்களான நாடோடி மக்கள் அனைவரும் கெர்ச்சிலிருந்து வெளியேற்றப்பட்டதை நாங்கள் அறிந்திருந்தோம். போலீசிடம் அகப்பட்டுக் கொள்வோமோ என்று பயந்தோம். ஷக்ரோ வேற்றுனுடைய பாஸ்போர்ட்டுடன் பயணம் செய்த படியால் எங்கள் விவகாரம் இதனால் பெரிதும் சிக்கலாகி இருக்கலாம்.

கெர்ச் ஜலசந்தியின் அலைகள் இரவு முழுவதும் எங்கள் மீது தாராளமாகத் தூவானம் தெறித்த வண்ணமாக இருந்தன. அதிகாலையில் நாங்கள் நனைந்து, குளிரால் விரைத்தவர்களாக இடை வழியின் அடியிலிருந்து வெளி வந்தோம். பகல் முழுதும் கரையோரமாக நடந்து கொண்டிருந்தோம். சந்தையிலிருந்து ஒரு மூட்டை முலாம் பழங்களை வீடு வரை சுமந்ததற்காகப் பாதிரிச்சி ஒருத்தி எனக்குப் பத்து கோப்பெக்கு கொடுத்தாள். நாங்கள் சம்பாதிக்க முடிந்தது எல்லாம் அவ்வளவு தான்.

ஜலசந்தியைக் கடந்து தமான் போய்ச் சேர வேண்டி இருந்தது. நான் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் எங்களைத் துடுப்பு வலிப்பவர்களாக மறு கரைக்கு இட்டுச் செல்லப் படகுக்காரன் எவனும் இணங்கவில்லை. நாங்கள் வருவதற்குச் சற்று முன்பு நாடோடிகள் இங்கே பல ''வீர தீரச்'' செயல்கள் புரிந்திருந்ததால் எல்லோரும் அவர்களுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்திருந்தார்கள். எங்களையும் இத்தகைய நாடோடிகள் என்று காரணத்துடனேயே அவர்கள் எண்ணினார்கள்.

மாலை ஆனபோது எனது தோல்விகள் மீதும் உலகு அனைத்தின் மீதும் உண்டான ஆத்திரத்தால் ஓரளவு ஆபத்தான செயலை மேற்கொள்ள நான் முடிவு செய்தேன். இருட்டியதும் அதை நிறைவேற்றினேன்.

4

இரவில் நானும் ஷக்ரோவும் சந்தடி செய்யாமல் சுங்கக் காவற் கப்பலை நெருங்கினோம். அதன் அருகே மூன்று படகு கள் கரையோரக் கற்சுவரில் திருகாணிகளால் பொருத்தப் பட்டிருந்த வளையங்களில் சங்கிலிகளால் இணைக்கப்பட்டு நின்றன. இருட்டாக இருந்தது, காற்று வீசிற்று, படகுகள் ஒன்றன் மேல் ஒன்று மோதின, சங்கிலிகள் கணகணத்தன... வளையத்தை ஆட்டிக் கற்களிலிருந்து பிடுங்குவது எனக்குச் சௌகரியமாக இருந்தது.

எங்களுக்கு மேலே, ஒரு பன்னிரண்டு அடி உயரத்தில் சுங்கப் பாராச் சேவகன் பற்களின் ஊடாகச் சீழ்க்கை அடித் தவாறு நடந்து கொண்டிருந்தான். அவன் எங்கள் அருகாமை யில் நின்ற போது நான்வேலையை இடை நிறுத்தினேன். ஆனால் இது தேவையற்ற எச்சரிக்கை, கீழே கழுத்தளவு நீரில் ஒருவன் உட்கார்ந்திருப்பதாக அனுமானிக்க அவனால் முடிந்திராது. தவிரவும் சங்கிலிகள் என் உதவி இல்லாமலே இடையறாது ஒலித்துக் கொண்டிருந்தன. ஷக்ரோ படகின் தளத்தில் ஏற்கெனவே படுத்து என்னிடம் எதையோ கிசுகிசுத் தான். அலைகளின் ஓசை காரணமாக அவன் சொன்னதைப் புரிந்து கொள்ள என்னால் முடியவில்லை. வளையம் என் கையோடு வந்து விட்டது... அலை படகைத் தூக்கிக் கரை யிலிருந்து அடித்துச் சென்றது. நான் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு படகின் அருகே நீந்தினேன், பின்பு அதில் ஏறிக் கொண்டேன். இரண்டு அடிப் பலகைகளைப் பிடுங்கித் துடுப்பு களுக்குப் பதிலாகக் கொண்டிகளில் பொருத்திப் படகைச் செலுத்தினோம்...

அலைகள் அடித்தன. படகின் பின் பகுதியில் உட்கார்ந் திருந்த ஷக்ரோ ஒரு முறை பின் பகுதியோடு சேர்ந்து தாழ்ந்து என் பார்வையிலிருந்து மறைந்தான், மறு முறை எனக்கு மேலே உயரே எழும்பிக் கூச்சலிட்டவாறு அனேகமாக என் மேல் விழுந்தான். பாராச் சேவகன் காதில் அவனுடைய குரல் பட வேண்டும் என்று விரும்பாவிட்டால் கூச்சலிடாமல் இருக்கும்படி அவனுக்கு 'யோசனை சொன் னேன். அதன் பின் அவன் மௌனமானான். அவன் முகத்தின் இடத்தில் வெண் புள்ளியை நான் கண்டேன். அவன் ஓயாமல்

சுக்கான் பிடித்திருந்தான். வேலைகளை மாற்றிக் கொள்ள எங்களுக்கு நேரம் இல்லை. படகில் ஓர் இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற நாங்கள் அஞ்சினோம். படகை எப்படிச் சரியான திசையில் திருப்ப வேண்டும் என்று நான் கத்தி அவனுக்குப் போதித்தேன். அவன் உடனே என்னைப் புரிந்து கொண்டு மாலுமியாகப் பிறந்தவன் போல எல்லாவற்றையும் துடியாகச் செய்தான். துடுப்புகளுக்கு மாற்றாக இருந்த பலகைகள் எனக்கு அவ்வளவாக உதவவில்லை. காற்று எங்களுக்கு இசைவாக வீசிற்று. படகு எங்கே போகிறது என்பது பற்றி நான் வெகுவாகக் கவலைப் படவில்லை. படகின் முன் முனை ஜலசந்திக்குக் குறுக்காக இருக்கும்படி பார்த்துக் கொள்ள மட்டுமே நான் முயன்றேன். கெர்ச் விளக்குகள் இன்னும் தெரிந்தபடியால் இதைத் தீர்மானிப் பது எளிதாய் இருந்தது. அலைகள் படகின் பக்கங்களைத் தாண்டி எங்களை எட்டிப் பார்த்துச் சீற்றத்துடன் இரைந்தன. ஜலசந்தியில் படகு மேலே போகப் போக அலைகள் வர வர உயரமாயின. தொலைவில் காட்டுத்தனமான பயங்கர முழக்கம் கேட்டது... படகு மேலும் மேலும் விரைவாக முன்னேறியது. படகைச் சரியான திசையில் செலுத்துவது மிகக் கடினமாக இருந்தது. நாங்கள் நொடிக்கு ஒரு தரம் ஆழ்ந்த பள்ளங்களில் விழுவதும் நீர் மேடுகள் மேல் ஏறுவது மாக இருந்தோம். இரவு வர வர அதிக இருட்டாயிற்று. மேகங்கள் கீழே தாழ்ந்தன. படகின் பின் பகுதிக்கு அப்பால் சுடர்ந்த விளக்குகள் இருளில் ஆழ்ந்தன. அப்போது திகில் பற்றிக் கொண்டது. சீற்றம் பொங்கிய நீர்ப் பரப்பு எல்லை அற்றது போலத் தோன்றியது. இருளிலிருந்து பாய்ந்து வந்த அலைகள் தவிர வேறு எதுவும் பார்வைக்குப் புலப்படவில்லை. அவை ஒரு பலகையை என் கைகளிலிருந்து பிடுங்கிச் சென் றன. மற்றதை நானே படகின் தளத்தில் போட்டு விட்டு இரு கைகளாலும் படகின் பக்கங்களை இறுகப் பற்றிக் கொண் டேன். படகு எம்பிக் குதித்த ஒவ்வொரு தடவையும் ஷக்ரோ விலங்குக் குரலில் ஊளையிட்டான். இந்த இருளில், சீற்றம் பொங்கிய இயற்கைச் சக்திகளாலும் காதைச் செவிடாக்கும் அவற்றின் இரைச்சலாலும் சூழப்பட்டு நான் அற்பனாகவும் திக்கற்றவனாகவும் இருப்பதை உணர்ந்தேன். நெஞ்சில் வருங் கால நம்பிக்கை இன்றி, வன்மம் நிறைந்த புகலின்மையால்

ஆட்கொள்ளப்பட்டுச் சுற்றிலும் பார்வை செலுத்தியவன், உப்பு நீர்த் தூவானத்தைத் தெறித்துக் கொண்டிருந்த வெண் பிடரிகள் கொண்ட இந்த அலேகளைத் தான் கண்டேன். எனக்கு மேலே அடர்ந்த, பறட்டை மேகங்களும் அலேகளை ஒத்திருந் தன... ஒன்றை மட்டும் நான் புரிந்து கொண்டேன். என்னேச் சுற்றி நிகழ்ந்தவை எல்லாம் அளவுகடந்து அதிக வலிமை யும் அதிக பயங்கரமும் உள்ளவையாக இருந்திருக்கலாம், ஆனுல் அவை அவ்வாறு இருக்க விரும்பாமல் தங்களேக் கட்டுக் குள் வைத்திருக்கின்றன என்பது அது. இதனுல் என் மனம் புண்பட்டது. சாவு தவிர்க்க முடியாதது. ஆனுல் உணர்ச்சி வேகம் அற்ற, எல்லாவற்றையும் சமப்படுத்துகிற இந்த விதியை எதனுலாவது கவர்ச்சி உள்ளது ஆக்குவது அவசியம் —இது மிக மிகக் கடுமையானது, முரடானது. நெருப்பில் வெந்தோ சதுப்பு நிலப் புதை சேற்றில் ஆழ்ந்தோ நான் சாக வேண்டி இருந்தால் நான் நெருப்பைத் தெரிந்தெடுக்க முயல்வேன். என்ன ஆனுலும் அது அதிகக் கண்ணியமானது...

. . . .

''பாய் விரிப்போம்!'' என்று கத்திஞன் ஷக்ரோ.

''எங்கே பாய்?'' என்று வினவினேன்.

''என் மேல் சட்டையால் செய்வோம்...''

''அதை இப்படிப் போடு! சுக்காஜ விட்டு விடாதே!..''

ஷக்ரோ பேசாமல் படகின் பின் பகுதியில் தன் வேலேயில் முனேந்தான்.

''இந்தா, பிடி!..''

தன் மேல் சட்டையை என்னிடம் எறிந்தான். படகின் தளத்தில் எப்படியோ ஊர்ந்து இன்னெரு அடிப்பலகையைப் பெயர்த்து எடுத்தேன். அழுத்தமான சட்டையின் கைக்குள் அதை நுழைத்தேன், அதைப் படகின் பெஞ்சி அருகில் நாட் டினேன், கால்களால் அழுத்திக் கொண்டு சட்டையின் மற்றக் கையையும் தலேப்பையும் கையில் எடுத்துக் கொண்டேன். அப்போது எதிர்பாராதது நிகழ்ந்தது... படகு வழக்கத்தை விட அதிக உயரத்தில் துள்ளி அதே விரைவுடன் கீழே பாய்ந்தது. நான் ஒரு கையால் சட்டையையும் மறு கையால் படகின் பக்கப் பகுதி மேல் இழுத்துக் கட்டப்பட்டிருந்த கயிற்றையும் பிடித்துக் கொண்டு நீரில் மிதந்தேன். அலேகள் இரைச்சலுடன் என் தலேக்கு மேல் தாவின. உவர்ப்பும்

கைப்பும் கொண்ட நீரை விழுங்கினேன். அது என் காது களையும் வாயையும் மூக்கையும் நிறைத்தது... கைகளால் கயிற்றை இறுகப் பற்றிக் கொண்டு நீரில் எழுவதும் தணிவதுமாக இருந்தேன். என் தலை படகின் பக்கப் பகுதி மேல் இடித்துக் கொண்டது. சட்டையைப் படகின் அடித் தளத்தில் எறிந்து விட்டு நானும் அதன் மேல் துள்ளி ஏற முயன்றேன். எத்தனையோ தடவைகளுக்குப் பின் ஒரு முயற்சி பலித்தது. நான் படகின் மேல் ஏறி அமர்ந்தவன், அப்போது தான் நான் விட்ட கயிற்றை இரண்டு கைகளால் பற்றிக் கொண்டு ஷக்ரோ நீரில் குட்டிக் கரணம் போடுவதைக் கண்டேன். இந்தக் கயிறு பக்கப் பகுதியில் இருந்த இரும்பு வளையங்களில் கோக்கப்பட்டுப் படகு முழுவதையும் வளைத்துக் கட்டப்பட்டிருந்தது என்று தெரிய வந்தது.

''உயிரோடு இருக்கிறாயா!'' என்று அவனை நோக்கிக் கத்தினேன்.

அவன் நீருக்கு உயரே துள்ளிப் படகின் அடித் தளத்தில் தடாலென்று விழுந்தான். நான் அவனைப் பிடித்துக் கொண்டேன். இருவரும் எதிர் எதிராக இருந்தோம். நான் குதிரைச் சவாரி செய்பவன் போலப் படகின் மேல் அமர்ந்து, அங்க வடியில் போன்று கயிற்றில் கால்களை நுழைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இது உறுதியற்றதாக இருந்தது. எந்த அலையும் என்னை இருக்கையிலிருந்து எளிதில் அடித்து வீழ்த்தி விடலாம். ஷக்ரோ என் முழங்கால்களைக் கைகளால் கட்டிக் கொண்டு என் மார்பில் தலையை அழுத்திக் கொண்டிருந்தான். அவன் உடல் நடுங்கியது. அவனுடைய தாடைகள் கடகட வென்று அடித்துக் கொண்டதை நான் உணர்ந்தேன். ஏதேனும் செய்வது அவசியமாக இருந்தது! படகின் அடித் தளம் எண்ணெய் பூசியது போல வழுக்கியது. மறுபடி தண்ணீரில் இறங்கிப் படகின் ஒரு பக்கத்தில் கயிற்றைப் பற்றிக் கொள்ளும் படியும் நான் அப்படியே மறு பக்கம் பிடித்துக் கொண்டு நீரில் மிதப்பதாகவும் அவனிடம் சொன்னேன். விடை அளிப்பதற்குப் பதிலாக அவன் தலையால் மார்பில் இடித்து என்னைத் தள்ளத் தொடங்கினான். அலைகள் வெறியாட்டம் ஆடியவாறு ஓயாமல் எங்களைத் தாவின. படகில் நிலைத்திருப்பது எங்களுக்கு அரும் பாடாக இருந்தது. என் ஒரு காலைக் கயிறு பயங்கரமாக அறுத்துவிட்டது. சுற்றிலும்

பார்வைப் புலத்தில் உயரமான நீர்த் திட்டுகள் தோன்றுவதும் இரைச்சலுடன் மறைவதுமாக இருந்தன.

ஏற்கெனவே சொன்னதை ஆணையிடும் தோரணையில் திரும்பக் கூறினேன். ஷக்ரோ என் மார்பில் தலையால் இன்னும் வலிவாக இடிக்கலானான். சுணங்குவது கூடாததாக இருந்தது. என் மீதிருந்து அவன் கைகளை ஒன்றன் பின் ஒன்றாக விலக்கி அவனை நீரில் தள்ள முற்பட்டேன். அவன் கைகளால் கயிற்றைப் பற்றிக் கொள்ளும் படிச் செய்ய முயன்றேன். அந்த இரவில் எனக்கு வேறு எதையும் விட அதிகமாக அச்சம் ஊட்டிய ஒன்று அப்போது நிகழ்ந்தது.

''என்னை மூழ்கடிக்கிறாயோ?'' என்று கிசுகிசுத்து என் முகத்தை உறுத்துப் பார்த்தான் ஷக்ரோ.

இது மெய்யாகவே அச்சம் ஊட்டியது! அவனுடைய கேள்வி பயங்கரமாக இருந்தது. கேட்ட மாதிரியோ, இன்னும் அதிகப் பயங்கரமாக இருந்தது. மிரண்டு பணியும் தன்மையும் இரக்கம் காட்டும்படி வேண்டும் இறைஞ்சலும் அழிவைத் தவிர்க்கும் நம்பிக்கையை இழந்து விட்ட மனிதனின் இறுதிப் பெரு மூச்சும் அதில் ஒலித்தன. செத்தது போல் வெளிறி நனைந்திருந்த முகத்தில் விழிகள் எல்லாவற்றையும் விடப் பயங்கரமாக இருந்தன!..

''கெட்டியாகப் பிடித்துக் கொள்!'' என்று கத்தி விட்டு நான் கயிற்றைப் பிடித்துக் கொண்டு நீரில் இறங்கினேன். என் கால் எதிலோ இடித்துக் கொண்டது. வலி காரணமாக முதற் கணத்தில் எனக்கு ஒன்றையும் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் பின்பு புரிந்து கொண்டேன். எனக்குள் சூடான' ஒன்று ஊற்றெடுத்துப் பொங்கியது. நான் இன்ப வெறி கொண்டேன். நான் வலியவன் என்ற உணர்வு ஒருபோதும் இல்லாத அளவு எனக்கு ஏற்பட்டது...

''தரை!'' என்று ஆர்ப்பரித்தேன்.

புதிய பிரதேசங்களைக் கண்டு பிடித்த மாபெரும் கடற் பயணிகள் அவை தென்பட்ட போது இந்தச் சொல்லை என்னை விடப் பெருத்த உணர்ச்சியுடன் ஒருவேளை கத்தி இருப்பார்கள். ஆனால் என்னை விட உரக்கக் கத்தி இருப்பார்களா என்பதில் எனக்குச் சந்தேகந்தான். ஷக்ரோ ஊளையிட்டான், நாங்கள் நீரில் குதித்துக் கூத்தாடினோம். ஆனால் விரைவில் எங்கள் உற்சாகம் தணிந்து விட்டது. தண்ணீர் இன்னும் எங்

கள் மார்பளவு இருந்தது, உலர்ந்த கரையின் அதிகத் திண்ண மான அடையாளம் எதுவும் எங்கும் தென்படவில்லே. இங்கே அலேகள் பலம் குன்றி இருந்தன. அவை எம்பிக் குதிக்கவில்லே, சோம்பலுடன் எங்களேத் தாண்டி உருண்டு சென்றன. நல்ல வேளேயாக நான் படகை விட்டு விடவில்லே. ஷக்ரோவும் நானும் இப்போது அதன் இரு மருங்கிலும் நின்று காப்புக் கயிறுகளேப் பிடித்துக் கொண்டு படகை உடன் இழுத்தவாறு ஜாக்கிரதையாக எங்கோ நடந்தோம்.

ஷக்ரோ ஏதோ முணுமுணுத்து வாய் விட்டுச் சிரித்தான். நான் கவலேயுடன் நாற் புறமும் கண்ணேட்டினேன். இருட்டாய் இருந்தது. எங்கள் பின்னேயும் வலப் புறமும் அலேயோசை அதிகப் பலமாய் ஒலித்தது. முன்னேயும் இடப் புறமும் சந்தடி குறைவாய் இருந்தது. நாங்கள் இடப் புறம் சென்ருேம். மணல் தரை உறுதியாக இருந்தது. ஆனுல் அதில் எங்கும் கிடங்குகள். சில இடங்களில் அடித் தரை கால் களுக்கு எட்டவில்லே. அங்கே, ஒரு கையால் படகைப் பற்றிக் கொண்டு மறு கையாலும் கால்களாலும் நீரைத் துழாவி நீந்திஞேம். சில இடங்களில் தண்ணீர் முழங்கால் அளவு தான் இருந்தது. ஆழமான இடங்களில் ஷக்ரோ ஊளேயிட் டான், நான் பயத்தால் நடுங்கினேன். திடீரென்று உய் வழி கிடைத்து விட்டது! எங்களுக்கு முன்னே நெருப்பு பளிச்சிட்டது...

ஷக்ரோ முடிந்த வரை உரக்கக் கூச்சலிடத் தொடங்கி ஞன். ஆனுல் படகு அரசாங்கத்தின் சொத்து என்பதை நான் நன்ருக நினேவு வைத்திருந்தேன், அவனுக்கும் நினேவு படுத்தி னேன். அவன் சற்று நேரம் பேசாதிருந்தான், ஆயினும் சில நிமிடங்களுக்குப் பின் அவன் தேம்பி அழுவது கேட்டது. என்னுல் அவனேத் தேற்ற முடியவில்லே. தேற்ற வகை இல்லே.

நீர் வர வரக் குறைந்து கொண்டு போயிற்று... முழங் கால் வரை... கணுக்கால் வரை... நாங்கள் அரசாங்கப் படகைத் தள்ளிக் கொண்டு முன்னே சென்ருேம். இப்போது எங்களுக்குத் திராணி இல்லே, ஆகவே நாங்கள் அதை விட்டு விட்டோம். நாங்கள் நடந்த வழியில் கரிய மரக் கிளே ஒன்று நீரில் ஆழ்ந்திருந்தது. நாங்கள் அதைத் தாண்டிக் குதித் தோம். முள் உள்ள ஏதோ புல்லின் மேல் இருவரும் வெறுங் கால்களால் மிதித்து விட்டோம். எங்களுக்கு வலித்தது.

தரை எங்களை வரவேற்ற விதம் விருந்தோம்பும் தன்மை அற்றதாக இருந்தது. ஆனால் நாங்கள் இதைப் பொருட்படுத் தாமல் நெருப்பை நோக்கி ஓடினோம். அது எங்களுக்கு ஒரு வெர்ஸ்டா தொலைவில் இருந்தது. அது குதூகலமாகத் தழல் வீசி எங்களை எதிர் கொண்டு முறுவலித்தது போல் இருந்தது.

5

... பிரமாண்டமான மூன்று சடை நாய்கள் இருட்டில் எங்கிருந்தோ எங்களை நோக்கிப் பாய்ந்தன. ஓயாமல் தேம்பி அழுது கொண்டிருந்த ஷக்ரோ ஊளையிட்டுத் தரையில் விழுந் தான். நான் நனைந்த மேல் சட்டையை நாய்கள் மேல் எறிந்து விட்டுக் குனிந்து கற்களோ கழியோ தட்டுப்படுகிறதா என்று கையால் தேடித் துழாவினேன். ஒன்றும் இல்லை. புல் தான் கைகளில் குத்தியது. நாய்கள் தாவிவந்தன. நான் வாயில் இரண்டு. விரல்களை நுழைத்துக் கொண்டு முழு பலத்தையும் ஈடுபடுத்திச் சீழ்க்கை அடித்தேன். அவை அப்பால் துள்ளிச் சென்றன. காலடிகளின் ஓசையும் ஓடிவந்த மாந்தர்களின் குரல்களும் கேட்டன.

சில நிமிடங்களில் நாங்கள் ஆட்டு ரோமக் கம்பளி மேலுடைகள் அணிந்திருந்த நான்கு மேய்ப்பர்களின் குழுவில் நெருப்பின் அருகே இருந்தோம்.

இருவர் தரையில் அமர்ந்து புகைத்துக் கொண்டிருந்தார் கள். அடர்ந்த கருந்தாடி வைத்த நெட்டையன் ஒருவன், கஸாக்கிய ஆட்டுத் தோல் நெடுந் தொப்பி அணிந்து நுனி யில் பெருத்த வேர்க் கூம்புள்ள தடியை ஊன்றிப் பின்னால் நின்றான். சணல் முடி இளைஞனை நான்காமவன் அழுது கொண்டிருந்த ஷக்ரோவுக்கு உடை களைய உதவினான். எங்களுக்கு ஒரு பத்து மீட்டர் தொலைவில் அடர்ந்து சாம்பல் நிறமான அலை படிந்த கனத்த பாளத்தால் பெரிய நிலப் பரப்பு மூடப்பட்டிருந்தது. இளகத் தொடங்கி விட்ட வசந்த கால வெண்பனி போன்று இருந்தது அது. நீண்ட நேரம் உற்றுப் பார்த்த பின்னரே ஒன்றோடொன்று அடையாக ஒட்டிக் கொண்டிருந்த செம்மறிகளின் தனி உருவங்களைக் கண்டுகொள்ள முடிந்தது. இங்கே பல ஆயிரம் செம்மறிகள்

இருந்தன. உறக்கத்தாலும் இரவின் இருளாலும் அடர்ந்த வெதுவெதுப்பான பருத்த பாளமாக இறுக்கப்பட்டு ஸ்தெப்பியை மூடி இருந்தன அவை. சில வேளைகளில் அவை மிரட்சியுடனும் முறையிடுபவை போன்றும் மே என்று கத்தின...

மேல் சட்டையை நெருப்புச் சூட்டில் உலர்த்தியவாறு நடந்தவற்றை எல்லாம் நடந்தபடி மேய்ப்பர்களுக்கு விவரித்தேன். படகைக் கைப்பற்றிய விதத்தையும் கூறினேன்.

''எங்கே அது, அந்தப் படகு?'' என்று கேட்டான் கடுத்தமான நரை முடிக் கிழவன். என் மீதிருந்து பார்வையை அவன் அகற்றவே இல்லை.

நான் சொன்னேன்.

''மிகால், போய்ப் பார்!''

மிகால் — அவன்தான் கருந்தாடிக்காரன் — தடியைத் தோள் மேல் சாத்திக் கொண்டு கடற்கரைக்குச் சென்றான்.

குளிரால் நடுங்கிய ஷக்ரோ வெதுவெதுப்பாக, ஆனால் இன்னும் ஈரமாக இருந்த மேல் சட்டையைத் தனக்குக் கொடுக்கும்படி என்னிடம் கேட்டான். ஆனால் கிழவன் சொன்னான்:

''பொறு! முதலில் ஓடி இரத்தத்தைச் சூடாக்கிக் கொள். நெருப்பைச் சுற்றி ஓடு, ஊம்!''

ஷக்ரோ முதலில் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் அப்புறம் திடுமென்று துள்ளித் தாவி, வெற்றுடம்போடு காட்டுத்தனமான நடனம் ஆடத் தொடங்கினான். பந்து போல நெருப்பைத் தாண்டிக் குதித்தான், ஓர் இடத்தில் சுழன்றான், தரையைக் கால்களால் தொப்புத் தொப்பென்று அடித்தான், முழுக் குரலெடுத்து உரக்கக் கத்தினான், கைகளை வீசி ஆட்டினான். அது வேடிக்கையான காட்சியாக இருந்தது. இரண்டு மேய்ப்பர்கள் ஓகோகோவென்று உரக்க நகைத்தவாறு தரையில் உருண்டார்கள். கிழவனோ, கலங்காமையைக் காட்டிய ஆழ்ந்த முகத்துடன் நடனத்துக்கு ஏற்பக் கைகளால் தாளம் கொட்ட முயன்றான். ஆனால் தாளம் அவனுக்குப் பிடிபடவில்லை. அவன் தலையை ஆட்டி மீசையை அசைத்தவாறு ஷக்ரோவின் நடனத்தை உற்றுக் கவனித்து, கனத்த கட்டைத் தொண்டையால் ''ஹாய்-ஹா! அப்படித்தான், ஆகா! ஹாய்-ஹா! பேஷ், பேஷ்!'' என்று இடை விடாமல் ஆர்ப்பரித்தான்.

நெருப்புத் தழல் ஷக்ரோ மீது ஒளி பாய்ச்சியது. அவன் பாம்பாய் நெளிந்தான், நொண்டி அடித்தான், இரு கால் களாலும் தாள வரிசைகள் அடித்துக் காட்டினுன். நெருப்பு வெளிச்சத்தில் பளிச்சிட்ட அவனுடைய மேனி முழுவதிலும் பெரிய பெரிய துளிகளாக வியர்வை துளித்திருந்தது. அவை குருதி போன்று சிவப்பாகத் தோற்றம் அளித்தன.

இப்போது மூன்று மேய்ப்பர்களும் தாளம் போட்டார் கள். நான் குளிரால் நடுங்கியவாறு நெருப்பருகே உடலைச் சூடுபடுத்திக் கொண்டேன். எங்களுக்கு நேர்ந்துள்ள அனுபவம் கற்பனைக் கதை ஆசிரியர்களான கூப்பர், ஜூல்ஸ் வெர்ன் ஆகியோரின் ஆர்வலர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி இருக்கும் என்று எண்ணினேன்: கப்பல் விபத்து, விருந்தோம் பும் பண்புடைய ஆதிவாசிகள், நெருப்பைச் சுற்றிக் காட் டானின் நடனம்.

ஷக்ரோ மேல் சட்டையை முக்காடிட்டுப் போர்த்துக் கொண்டு ஏற்கெனவே தரையில் உட்கார்ந்து எதையோ தின்ற வண்ணம் கரிய விழிகளால் என்னை அடிக்கொரு தரம் பார்த்துக் கொண்டிருந்தான். என் உள்ளத்தில் மகிழ்வற்ற உணர்ச்சியைத் தூண்டிய ஏதோ கருத்து அந்த விழிகளில் சுடர்ந்தது. நெருப்பின் அருகே தரையில் நாட்டிய கழி மீது தொங்க விட்டிருந்த அவனுடைய உடை உலர்ந்துகொண் டிருந்தது. மேய்ப்பர்கள் ரொட்டியும் உப்பிட்ட கொழுப்பும் எனக்கும் உண்ணக் கொடுத்தார்கள்.

மிகால் வந்து பேசாமல் கிழவன் பக்கத்தில் உட்கார்ந் தான்.

''ஊம்?'' என்று வினவினுன் கிழவன்.

''படகு இருக்கிறது!'' என்று சுருக்கமாகச் சொன்னுன் மிகால்.

''அதை அலை அடித்துக் கொண்டுபோய் விடாதே?''

''போய் விடாது!''

பின்பு அவர்கள் எல்லோரும் என்னை ஏற இறங்கப் பார்த்தவாறு பேசாதிருந்தார்கள்.

''என்ன, இவர்களை ஊரில் மூப்பனுரிடம் அழைத்துப் போவதா? இல்லாவிட்டால் ஒரு வேளை சுங்கச் சாவடிக்கே கூட்டிப் போவோமா?'' என்று குறிப்பாக யாரையும் பார்க் காமல் கேள்வியைக் கிளப்பினுன் மிகால்.

ஒருவரும் அவனுக்கு மறு மொழி கூறவில்லை. ஷுக்ரோ நிம்மதியாகச் சாப்பிட்டான்.

''மூப்பனூரிடம் அழைத்துப் போகலாம்... சுங்கச் சாவடிக்கும் கூட்டிப் போகலாம்... இரண்டுமே சரிதான்'' என்று சிறிது நேரம் பேசாதிருந்த பின் சொன்னுன் கிழவன்.

''பொறு, தாத்தா...'' என்று ஆரம்பித்தேன் நான். ஆனல் அவன் என்னைக் கவனிக்கவே இல்லை.

''ஆக, அப்படியாக்கும்! மிகால்! படகு அங்கே இருக்கிறதா?''

''ஆமாம், இருக்கிறது...''

''பின் என்ன... அதை அலை அடித்துப் போய் விடாதே?''

''ஊகும்... போய் விடாது.''

''அப்படியானல் அது அங்கே நிற்கட்டும். நாளை படகுக்காரர்கள் கெர்ச் போகும்போது அதை இழுத்துப் போவார்கள். வெற்றுப் படகை அவர்கள் ஏன் இழுத்துப் போகக் கூடாது? ஊம்? அது தானே... இப்போது நீங்கள் சொல்லுங்கள்... கந்தலாண்டித் தம்பிகளே... அது தான்... என்ன தெரியுமா? நீங்கள் இரண்டு பேரும் பயப்படவில்லையா? இல்லையா?பலே-பலே!..இன்னும் ஒரு அரை வெர்ஸ்டா விலகி இருந்தால் கடலில் போயிருப்பீர்கள். கடலில் இழுத்துப் போயிருந்தால் என்னதான் செய்திருப்பீர்கள்? ஊம்? முழுகி இருப்பீர்கள் கற்கள் போல, இரண்டு பேரும்!.. முழுகி இருப்பீர்கள், அவ்வளவுதான்.''

கிழவன் பேச்சை நிறுத்தி விட்டு மீசைக்குள் கேலியாகப் புன்னகைத்தவாறு என்னை நோக்கினுன்.

''என்ன பேசாதிருக்கிருய், தம்பீ?''

அவனுடைய எண்ணங்கள் எனக்குப் புளித்துப் போயின. அவற்றைப் புரிந்து கொள்ளாமையால் அவன் எங்களை நையாண்டி செய்கிருன் என்று நினைத்தேன்.

''அது தான் நீ சொல்வதைக் கேட்டுக் கொண்டிருக்கிறேனே!'' என்று கடுகடுப்பாகச் சொன்னேன்.

''நல்லது, அதனுல் என்ன?'' என்று உசாவினுன் கிழவன்.

''என்ன, ஒன்றும் இல்லை.''

''எதற்காகக் கோரணி காட்டுகிருய்? உன்னை விட வயதில் பெரியவனுக்குக் கோரணி காட்டுவது முறையாகுமா?''

நான் பேசாதிருந்தேன்.

''இன்னும் கொஞ்சம் சாப்பிட நீ விரும்பவில்லையா?'' என்று தொடர்ந்தான் கிழவன்.

''விரும்பவில்லை.''

''நல்லது, சாப்பிட வேண்டாம். விரும்பவில்லை என்றால் சாப்பிட வேண்டாம். வழிப் பயணத்துக்கு ஒரு வேளை எடுத்துப் போகலாம் அல்லவா?''

மகிழ்ச்சியினால் நான் பூரித்தேன், ஆனால் காட்டிக் கொள்ளவில்லை.

''வழிப் பயணத்துக்கு என்றால் எடுத்துப் போகிறேன்...'' என்று நிதானமாகக் கூறினேன்.

''ஏகே!.. அப்படியானால் இவர்களுக்கு ரொட்டியும் கொழுப்பும் வழிப் பயணத்துக்குக் கொடுங்கள்... ஒருவேளை வேறு ஏதேனும் இருக்கிறதோ? இருந்தால் அதையும் கொடுங்கள்.''

''இவர்கள் என்ன, போகிறார்களா?'' என்று கேட்டான் மிகால்.

மற்ற இருவரும் கிழவனை ஏறிட்டுப் பார்த்தார்கள்.

''இல்லாவிட்டால் நம்மிடம் இவர்களுக்கு என்ன வேலை?''

''இவர்களை மூப்பனாரிடம் அழைத்துப் போவதாய் இருந்தோமே... இல்லாவிட்டால் சுங்கச் சாவடிக்கு...'' என்று ஏமாற்றத்துடன் கூறினான் மிகால்.

ஷக்ரோ நெருப்பின் அருகே ஏதோ செய்து கொண்டிருந்தவன் மேல் சட்டையிலிருந்து தலையை நீட்டினான். அவன் அமைதியாக இருந்தான்.

''மூப்பனிடம் இவர்களுக்கு என்ன வேலை? ஒரு வேலையும் இல்லை என்று நினைக்கிறேன். அப்புறம் அவனிடம் போய்க் கொள்வார்கள்... விரும்பினால்.''

''ஆனால் படகை எப்படி?'' என்று விடாமல் தொடர்ந்தான் மிகால்.

''படகா?'' என்று திருப்பிக் கேட்டான் கிழவன். ''படகுக்கு என்னவாம்? அது அங்கே நிற்கிறது அல்லவா?''

''நிற்கிறது...'' என்று பதிலளித்தான் மிகால்.

''அப்படியானால் அதை நிற்க விடு. காலையில் இவாஷ்கா அதைத் துறைக்கு இழுத்துப் போவான்... அங்கே அதைக் கெர்ச்சுக்குக் கொண்டுபோவார்கள். படகை வேறு எதுவும் செய்ய வேண்டியதில்லை.''

முதிய மேய்ப்பனை நான் கவனமாகக் கூர்ந்து நோக்கினேன். வெயிலிலும் காற்றிலும் அடிபட்டுப் பழுப்பேறிய அவனுடைய கமுக்கமான முகத்தில் நெருப்பிலிருந்து விழுந்த நிழல்கள் துள்ளிக் கொண்டிருந்தன, ஆனால் அதில் சிறு அசைவைக் கூடக் காண என்னால் முடியவில்லை.

''நம் மேல் ஏதேனும் குற்றம் சாராதா...'' என்று இணங்கிவரத் தொடங்கினான் மிகால்.

''நீ நாக்கை அடக்கி வைத்திருந்தாயானால் ஒரு குற்றமும் சாராது. மாறாக இவர்களை மூப்பனிடம் அழைத்துப் போவதால் நமக்கும் தொல்லை, இவர்களுக்கும் சங்கடம். நமக்கு நம் வேலையைச் செய்ய வேண்டி இருக்கிறது, இவர்களுக்கோ, போக வேண்டும். ஏய்! நீங்கள் இன்னும் ரொம்பத் தொலை போக வேண்டுமோ?'' என்று கேட்டான் கிழவன், எங்கு போக வேண்டும் என்று நான் ஏற்கெனவே சொல்லி இருந்த போதிலும்.

''திப்ளிஸ் போக வேண்டும்...''

''நெடும் பயணம்! பார்த்தாயா? மூப்பன் இவர்களைச் சுணக்கப்படுத்துவான். அவன் சுணக்கப்படுத்தினால் இவர்கள் எப்போது ஊர் சேர்வார்கள்? ஆகையால் இவர்களைத் தங்கள் வழியில் போக விடு. ஊம்?''

கிழவன் தனது நிதானமான பேச்சை முடித்து விட்டு உதடுகளை இறுக மூடிக் கொண்டு சாம்பல் நிறத் தாடியை விரல்களால் முறுக்கியவாறு எல்லாத் தோழர்களையும் கேள்விக் குறியுடன் பார்த்தான். ''அதற்கென்ன? போகட்டும் இவர்கள்!'' என்று அவர்கள் இசைவு தெரிவித்தார்கள்.

''நல்லது, அப்படியானால் போங்கள் ஆண்டவனிடம், தம்பிகளா!'' என்று கையை ஆட்டினான் கிழவன். ''படகை நாங்கள் உரிய இடத்துக்கு அனுப்பி விடுகிறோம். சரிதானா?''

''உனக்கு நன்றி தாத்தா!'' என்று தொப்பியைக் கழற்றி வணங்கினேன்.

''நன்றி எதற்காகவாம்?''

''நன்றி, அண்ணே, நன்றி'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் மறுபடி சொன்னேன்.

''அட நன்றி எதற்காக? வேடிக்கைதான்! ஆண்டவனிடம் போங்கள் என்கிறேன், இவன் எனக்கு நன்றி

சொல்லுகிறுன். நான் உன்னேச் சாத்தானிடம் அனுப்பி விடுவேன் என்று பயந்தாயா என்ன? ஊம்?''

''தவறுதான், ஆனுல் பயந்தேன்!..'' என்றேன்.

''ஓ!..'' என்று கிழவன் புருவங்களே உயர்த்திஞன். ''நான் எதற்காக ஒருவனேக் கெட்ட வழியில் செலுத்த வேண்டும்? எந்த வழியில் நான் போகிறேஞே அதிலேயே அவனே அனுப்புவதுதான் மேல். மறுபடி ஒருவேளே நாம் சந்திக்கலாம், ஆகவே ஒருவரை ஒருவர் தெரிந்து கொள் வோம். தற்செயலாக ஒருவருக்கொருவர் உதவ வேண்டி வரலாமே... போய் வாருங்கள்!..''

அவன் தனது மயிரடர்ந்த ஆட்டுத் தோல் தொப்பியைக் கழற்றி, குனிந்து எங்களே வணங்கிஞன். அவனுடைய கூட்டாளிகளும் வணங்கிஞர்கள். அஞப்பாவுக்கு வழி கேட்டுத் தெரிந்து கொண்டு நாங்கள் புறப்பட்டோம். ஷக்ரோ எதையோ எண்ணிச் சிரித்தான்...

6

''நீ எதற்காகச் சிரித்தாய்?'' என்று கேட்டேன்.

முதிய மேய்ப்பனேயும் அவனுடைய வாழ்க்கை ஒழுக்க நெறியையும் எண்ணி நான் பரவசப்பட்டுக் கொண்டிருந் தேன். நேரே எங்கள் மார்பில் வீசிய காலேக் குளிர் காற்றும் எனக்குக் குதுகுதுப்பு ஊட்டிக் கொண்டிருந்தது. வானம் மேகங்கள் அற்றுத் தெளிந்திருந்ததாலும் விரைவில் தெளிந்த வானில் சூரியன் உதிக்கும், அழகிய புது நாள் புலரும் என்ற எண்ணத்தாலும் நான் உவகையில் திளேத்துக் கொண் டிருந்தேன்...

ஷக்ரோ என்னேப் பார்த்துத் தந்திரமாகக் கண் சிமிட்டி முன்னிலும் உரக்கச் சிரித்தான். மகிழ்ச்சியும் உடல்நலமும் பொங்கிய அவனுடைய சிரிப்பைக் கேட்டு நானும் புன்னகை செய்தேன். மேய்ப்பர்களின் நெருப்பருகே நாங்கள் கழித்த இரண்டு மூன்று மணி நேரமும் உண்ட சுவையான ரொட்டி யும் கொழுப்பும் களேப்பூட்டிய பயணத்தின் அலுப்பைப் போக்கி விட்டன. எலும்புகளில் லேசான வலி மட்டுந்தான் எஞ்சி இருந்தது. ஆனுல் இந்த உணர்ச்சி எங்கள் மகிழ்ச்சிக்குத் தடையாய் இல்லே.

''ஊம், எதற்காகச் சிரிக்கிறாய்? உயிர் பிழைத்த மகிழ்ச்சியா, ஊம்? உயிர் பிழைத்ததோடு வயிறார உண்டகளிப்பா?''

ஷக்ரோ இல்லை என்று தலை அசைத்து, முழங்கையால் என் விலாவில் இடித்து, எனக்கு அழகு காட்டியவன், மீண்டும் கடகடவென்று சிரித்தான். கடைசியில் தனக்கு இயல்பான அயல் ஒலிப்புடன் பேசத் தொடங்கினான்:

''எனக்கு ஏன் சிரிப்பாய் இருக்கிறது என்று புரியவில்லையா? ஊம்? இதோ புரிந்து கொள்வாய்! இந்தச் சுங்கச் சாவடி மூப்பனிடம் அவர்கள் நம்மைக் கொண்டு விட்டிருந்தால் நான் என்ன செய்திருப்பேன் தெரியுமா? தெரியாதா? இவன் என்னை மூழ்கடிக்கப் பார்த்தான் என்று உன்னைப் பற்றிச் சொல்லி இருப்பேன்! அப்புறம் அழத் தொடங்கி இருப்பேன். அப்போது என் மேல் இரக்கம் கொண்டு என்னைச் சிறையில் தள்ளாமல் விட்டிருப்பார்கள்! புரிந்ததா?''

இது கேலிப் பேச்சு என்று அர்த்தப்படுத்திக் கொள்ள முதலில் விரும்பினேன். ஆனால் அந்தோ! தான் உண்மையாகவே அப்படித் திட்டமிட்டதாக எனக்கு உறுதிப்படுத்தினான் ஷக்ரோ. அவன் ஆதாரத்துடனும் தெளிவாகவும் இப்படி உறுதிப்படுத்தவே, பேதைமை நிறைந்த இந்தக் கெடு நோக்குக்காக அவன் மேல் ஆத்திரப்படுவதற்குப் பதிலாக நான் ஆழ்ந்த இரக்கம் கொண்டேன். தான் நம்மைக் கொல்லத் திட்டம் இட்டிருப்பதை நம்மிடம் தூய புன்னகை மிளிர, உளமார்ந்த உண்மை தொனிக்கக் கூறும் ஒருவனை வேறு என்ன செய்ய முடியும்? இந்தச் செயல் சாமர்த்தியம் நிறைந்த இனிய வேடிக்கை என்று நினைப்பவனை என்னதான் செய்வது?

ஷக்ரோவின் திட்டம் எவ்வளவு ஒழுக்கக் கேடானது என்று அவனுக்குச் சான்று காட்டி விளக்க நான் உற்சாகமாக முனைந்தேன். அவனோ, தான் பெறக் கூடிய லாபத்தை நான் புரிந்து கொள்ளவில்லை என்றும் தான் பிறத்தியானுடைய பாஸ்போர்ட்டை வைத்துக் கொண்டு வாழ்வதை மறந்து விடுகிறேன் என்றும் இப்படி வாழ்வதற்கு யாரும் பாராட்ட மாட்டார்கள் என்றும் கூறி என் வாதங்களை மிக எளிதாக மறுத்தான்.

கொடுமையான ஓர் எண்ணம் திடீரென்று எனக்கு உதித்தது...

''பொறு, நான் உண்மையில் உன்னை மூழ்கடிக்கப் பார்த்த தாக நீ நம்புகிறாயா என்ன?'' என்று கேட்டேன்.

''இல்லை!.. நீ என்னை நீரில் தள்ளிய போது—நம்பினேன், நீயும் இறங்கியதும்—நம்பவில்லை!''

''நல்ல வேலைதான்!'' என்று கூவினேன் ''நல்லது, இதற்கே நான் நன்றி செலுத்துகிறேன்!''

''வேண்டாம், எனக்கு நன்றி சொல்லாதே! நான் உனக்கு நன்றி தெரிவிக்கிறேன்! அங்கே நெருப்பின் பக்கத்தில் உனக்கும் குளிர்ந்தது, எனக்கும் குளிர்ந்தது... மேல் சட்டை உன்னுடையது. ஆனால் நீ அதை உனக்கு வைத்துக் கொள்ள வில்லை. அதை உலர்த்தி எனக்குக் கொடுத்தாய். எதையும் உனக்கு வைத்துக் கொள்ளவில்லை. அதற்காக உனக்கு நன்றி! நீ ரொம்ப நல்ல ஆள். எனக்குப் புரிகிறது. திப்ளிஸ் போய்ச் சேர்ந்ததும் எல்லாவற்றுக்கும் ஈடு செய்து விடுகிறேன். தகப் பனாரிடம் உன்னை அழைத்துப் போகிறேன். அவரிடம் சொல் கிறேன்: இவன்தான் மனிதன்! இவனுக்குச் சாப்பாடு போடு, குடிக்கக் கொடு! என்னைக் கழுதைகளோடு கழுதையாகத் தொழுவுக்கு அனுப்பு! இப்படியே சொல்லுகிறேன்! எங்கள் வீட்டில் வசிப்பாய், தோட்டக்காரனாக இருப்பாய், மது பருகுவாய், எது வேண்டுமோ சாப்பிடுவாய்!.. அஹ், அஹ், அஹ்!.. நீ ரொம்ப வசதியாக வாழ்வாய்! ஒரு தொல்லை இல்லாமல்!.. என்னோடு ஒரே பாத்திரத்தில் சாப்பிடு, குடி!..''

திப்ளிசில் தன் வீட்டில் எனக்கு அவன் அமைத்துத் தரப் போகிற வாழ்க்கையின் கவர்ச்சிகளைப் பற்றி அவன் வெகு நேரம் விரிவாக வருணித்துக் கொண்டு போனான். அவனுடைய பேச்சைக் கேட்டவாறு நான் வேறு சிந்தனையில் ஆழ்ந்தேன். புதிய ஒழுக்க நெறியையும் புதிய விருப்பங்களையும் மேற்கொண்டு, தன்னந்தனியாக முன்னே சென்று, தங்களுக்கு வேற்றானவர்களும் தங்களைப் புரிந்து கொள்ளத் திறன் அற்ற வர்களுமான வழித் துணைவர்களைப் பாதையில் சந்திக்கும் மனிதர்களின் மாபெரும் துர்ப்பாக்கியத்தைப் பற்றி எண்ண மிட்டேன்... இத்தகைய தனியர்களின் வாழ்க்கை துன்பம்

நிறைந்தது! அவர்கள் தரைக்கு மேலே, காற்றில் மிதக்கிறார்கள்... நல்ல தானியங்களின் விதைகள் போல அவர்கள் அதில் பறக்கிறார்கள், ஆனால் சில வேளைகளில் செழு மண்ணில் மட்கியும் போகிறார்கள்...

வெளிச்சம் ஆயிற்று. கடலின் தொலைப் பகுதி இளஞ் செம்பொன் நிறத்தில் ஒளிர்ந்தது.

''எனக்கு உறக்கம் வருகிறது!'' என்றான் ஷக்ரோ.

நாங்கள் இடை நிறுத்தம் செய்தோம். கடற் கரைக்குச் சற்று தூரத்தில் உலர்ந்த மணலில் காற்றினால் தோண்டப் பட்ட பள்ளம் ஒன்றில் அவன் படுத்து, மேல் சட்டையால் முக்காடிட்டுக் கொண்டு விரைவில் உறங்கி விட்டான். நான் அவன் அருகே அமர்ந்து கடலில் பார்வை செலுத்தினேன்.

கடல் விறல் மிக்க இயக்கங்கள் நிறைந்த தன் பரந்த வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தது. அலைக் கூட்டங்கள் இரைச்சலுடன் கரை மேல் பாய்ந்து மணலில் அடித்துச் சிதறின. மணல் நீரை உட்கொண்டு மெல்லச் சீறியது. வெண் பிடரிகளை ஆட்டியவாறு முன் வரிசை அலைகள் கரை மேல் மார்பினால் மடாரென்று தாக்கி விட்டு அதனால் தள்ளப்பட்டுப் பின்வாங்கின. ஆனால் அவற்றுக்கு ஆதரவளிக்க வந்த வேறு அலைகள் அவற்றைச் சந்தித்தன. நுரையும் திவலைகளும் பொங்கித் தெறிக்க இறுகத் தழுவிக் கொண்ட பின் அவை மீண்டும் கரைக்கு உருண்டோடி, தங்கள் வாழ்வு எல்லைகளை விரிவுபடுத்திக் கொள்ளும் முயற்சியில் அதை அடித்தன. தொடு வானத்திலிருந்து கரை வரையில், கடலின் பரப்பு முழுவதிலும், மீள்விசையும் வலிமையும் கொண்ட இந்த அலைகள் எழுந்தன. குறிக்கோளின் ஒருமையால் ஒன்றோடு ஒன்று நெருக்கமாக இணைந்து அடர்ந்த திரளாக அவை மேலும் மேலும் முன்னே சென்ற வண்ணமாய் இருந்தன... சூரியன் அலை முடிகள் மீது மேலும் மேலும் அதிகப் பிரகாசமாக ஒளி பாய்ச்சியது. தொடு வானத்தில், தொலைதூர அலைகளின் முடிகள் இரத்தச் சிவப்பாகத் தோற்றம் அளித்தன. நீர்த்திரளின் பேராற்றல் பொங்கும் இந்த இயக்கத்தில் ஒரு துளி கூடச் சுவடின்றி மறைந்து விடவில்லை. இந்த நீர்த் திரள் உணர்வு பூர்வமான ஒரு குறிக்கோளினால் உந்தப்பட்டிருப்பது போலவும் ஒரு சீரான இந்தப் பரந்த அடிகள் மூலம் இதோ அந்தக் குறிக்கோளை அடைந்து விடும் போலவும்

தோன்றியது. மௌனம் சாதித்த கரை மீது உற்சாகத்துடன் பாய்ந்த முன் வரிசை அலைகளின் வனப்பு வாய்ந்த வீரம் கவர்ச்சி உள்ளதாக இருந்தது. கடல் முழுதும், சூரியனால் வானவில்லின் எல்லா நிறங்களிலும் வண்ணம் பூசப் பெற்று, தன் எழிலையும் வலிவையும் பற்றிய உணர்வால் நிறைந்த விறல் மிக்க கடல் அனைத்தும், அமைதியாகவும் ஒன்று சேர்ந்தும் அவற்றின் பின்னே செல்வதைக் காண இன்பமாய் இருந்தது.

முனைக்கு அப்பாலிருந்து அலைகளைப் பிளந்து கொண்டு மிதந்து வந்தது பிரமாண்டமான நீராவிக் கப்பல். கடலின் கொந்தளிக்கும் மடியில் மிடுக்குடன் அசைந்தாடியவாறு வந்த கப்பல் தன்மேல் வெறியுடன் பாய்ந்த அலைகளின் முடிகள் மீது விரைந்தது. அழகும் வலிமையும் ஆர்ந்து, தன் எஃகினால் வெயிலில் பளிச்சிட்ட கப்பல், இயற்கை உற்பாதங்களை வசப்படுத்திய மனிதர்களின் பெருமை சான்ற படைப்பு பற்றிய எண்ணத்தை வேறு சமயத்தில் எனக்கு ஏற்படுத்தி இருக்கும்... ஆனால் இப்போது என் அருகே படுத்திருந்தான் இயற்கை உற்பாத-மனிதன்.

7

நாங்கள் தேர்ஸ்க் மாவட்டத்தில் நடந்தோம். ஷக்ரோ விவரிக்க இயலாத அளவு அலங்கோலத் தோற்றமும் கந்தல் உடையுமாகக் காட்சி அளித்தான். போதிய ஊதியம் கிடைத்ததால் இப்போது அவன் பட்டினி கிடக்கவில்லை, ஆயினும் ஒரே சிடுசிடுப்புடன் வளைய வந்தான். அவன் எந்த வித வேலைக்கும் திறமை அற்றவனாக இருந்தான். ஒரு முறை கதிரடிக்கும் இயந்திரத்தின் அருகே வைக்கோலை வாரியால் பரப்பும் வேலை செய்ய முயன்று பார்த்தான். ஆனால் அரை நாளுக்குள் வேலையை விட்டு விட்டான். வாரி உராய்ந்ததால் அவனுடைய உள்ளங்கைகளில் கொப்புளங்கள் கிளம்பி இருந்தன. இன்னொரு முறை ஒரு அடிமரத்தை வேரோடு பிடுங்கி எறியும் வேலை தொடங்கினோம். அவன் மண்வெட்டியால் கழுத்துத் தோலை வழட்டிக் கொண்டான்.

நாங்கள் மிகவும் மெதுவாக நடந்தோம்—இரண்டு நாட்

கள் வேலை செய்வதும் ஒரு நாள் நடப்பதுமாக. ஷக்ரோ கொஞ்சங்கூடக் கட்டு, திட்டம் இல்லாமல் தின்றான். அவனுடைய பெருந்தீனி காரணமாக அவனுக்கு ஏதேனும் உடை வாங்குவதற்கு வேண்டிய பணம் சேர்க்க என்னால் முடியவே இல்லை. அவனுடைய ஆடைப் பகுதிகளோ பல வண்ண ஒட்டுக்களால் ஏதோ பெயருக்கு இணைக்கப்பட்ட பல்வித ஒட்டைகளின் கும்பலாக இருந்தன.

அரும்பாடு பட்டு, அவனுக்குத் தெரியாமல் நான் சேமித்து வைத்திருந்த ஐந்து ரூபிள்களை ஒரு நாள் ஏதோ ஒரு ஊரில் என் பயணப் பையிலிருந்து எடுத்துக் கொண்டு போனவன், நான் காய்கறித் தோட்ட வேலை செய்து கொண்டிருந்த வீட்டுக்கு மாலையில் வெறி கொண்டவனாக ஒரு கொழுத்த கஸாக்கியப் பெண்பிள்ளையுடன் வந்து சேர்ந்தான். அவள் எனக்குப் பின் வருமாறு முகமன் கூறினாள்:

''வணக்கம், பாழாய்ப் போகிற பாசண்டி!''

இந்த அடைமொழியால் வியப்புற்ற நான் ''என்ன காரணத்தால் நான் பாசண்டி?'' என்று கேட்டதற்கு, அவள் மட்டுமீறிய தன்னம்பிக்கையுடன் பின்வருமாறு விடை அளித்தாள்:

''பெண்பாலைக் காதலிக்க இந்த இளவட்டத்தைத் தடை செய்கிறாயே, சாத்தான், அதனால்தான்! சட்டம் அனுமதிக்கும் போது நீ தடை செய்யலாமா?.. பழி கேடன் நீ!..''

ஷக்ரோ அவள் அருகில் நின்று உறுதிப்படுத்தும் பாவனையில் தலையை ஆட்டினான். அவன் பெருத்த குடி மயக்கத்தில் இருந்தான். சிறு அங்க அசைவின் போதும் நிலையின்றித் தள்ளாடினான். அவனுடைய கீழுதடு தொங்கிற்று. மங்கிய விழிகள் என் முகத்தைப் பொருளின்றி வெறித்துப் பார்த்தன.

''இந்தா, உன்னைத்தானே! என்ன அப்பா எங்களையே முறைத்துப் பார்க்கிறாய்? இவனுக்குப் பணத்தைக் கொடுத்துத் தீர்!'' என்று கூச்சலிட்டாள் அந்தத் துணிந்த பெண் பிள்ளை.

''எந்தப் பணத்தை?'' என்று திகைப்புடன் கேட்டேன்.

''கொடு, கொடு! இல்லாவிட்டால் நான் உன்னை அதிகாரிகளிடம் இழுத்துப் போவேன். ஒதெஸ்ஸாவில் இவனிடமிருந்து வாங்கிக் கொண்டாயே, நூற்றைம்பது ரூபிள், அதைத் திருப்பிக் கொடு!''

நான் என்ன செய்திருக்க முடியும்? வெறித்த விழியின ளான இந்தப் பேய்மகள் உண்மையாகவே அதிகாரிகளிடம் போகக் கூடும். நாடோடிகளாகத் திரியும் பல வித ஆட்களிடம் கண்டிப்பைக் கடைப்பிடிக்கும் ஊர்த் தலைமை அதிகாரிகள் அப்போது எங்களைக் கைது செய்திருப்பார்கள். இவ்வாறு கைது செய்யப்படுவதன் விளைவு எனக்கும் ஷக்ரோ வுக்கும் என்னவாய் இருக்கும் என்று யார் கண்டது? ஆகவே அந்தப் பெண்பிள்ளையை நைச்சியமாக வழிக்குக் கொண்டு வர முயன்றேன். இதற்கு நான் நிரம்பச் சிரமப்பட வேண்டி இருக்கவில்லை. மூன்று புட்டி மதுவின் உதவியால் அவளை ஒரு விதமாகச் சமாதானப்படுத்தினேன். அவள் முலாம் பழங் களுக்கு இடையே தரையில் விழுந்து உறங்கிப் போனாள். நான் ஷக்ரோவைப் படுக்கப் போட்டேன். மறு நாள் அதி காலையில் நாங்கள் பெண்பிள்ளையை முலாம் பழங்களுக்கு நடுவே கிடக்க விட்டு விட்டு ஊரிலிருந்து வெளியேறினோம்.

தலைக்கு நாள் மட்டுமீறிக் குடித்ததன் பின் விளைவால் கடும் தலைநோய்க்கு ஆளாகி, அலங்கோலமாய் உப்பிய முகத் துடன் இருந்த ஷக்ரோ நொடிக்கொருதரம் துப்பினான், துன்பப் பெருமூச்சு விட்டான். அவனிடம் பேச்சுக் கொடுக்க முயன்றேன். ஆனால் அவன் எனக்குப் பதில் சொல்லாமல் ஆட்டுக்கடா போலப் பறட்டைத் தலையை ஆட்ட மட்டுமே செய்தான்:

நாங்கள் குறுகிய ஒற்றையடிப் பாதை வழியே நடந் தோம். சிறு சிவப்புப் பாம்புக் குட்டிகள் எங்கள் காலடியில் நெளிந்தவாறு அதில் முன்னும் பின்னும் ஊர்ந்து கொண் டிருந்தன. நாற்புறமும் குடி கொண்டிருந்த நிசப்தம் கனவு காணும் உறக்க நிலையில் ஆழ்த்தியது. கரு முகிற் கூட்டங்கள் எங்களைப் பின்பற்றி வானில் மெதுவாக இயங்கின. ஒன்றே டொன்று கலந்து குமைந்து அவை எங்களுக்குப் பின்னே ஆகாயம் முழுவதையும் மூடி விட்டன. முன்னேயோ, வானம் இன்னமும் தெளிவாக இருந்தது. ஆனால் மேகத் துண்டுகள் அதில் பாய்ந்து, எங்களை முந்திக் கொண்டு முன்னால் எங்கோ படு வேகமாக விரைந்தன. தொலைவில் எங்கேயோ இடி அதிர்ந்து முழங்கியது. அதன் முறுமுறுப்பு ஒலிகள் வர வர அருகே நெருங்கின. மழைத் துளிகள் விழுந்தன, புல் உலோக ஒலிப்புடன் சரசரத்தது.

எங்களுக்கு ஒதுங்க இடமே இல்லை. இருட்டாயிற்று. புல்லின் சரசரப்பு முன்னிலும் உரக்கவும் அச்சத்துடனும் ஒலித்தது. இடி இடித்தது. நீல ஒளியால் தழுவப்பட்ட மேகங்கள் திடுக்கிட்டு நடுங்கின. பெரு மழை ஓடைகளாகப் பெருகியது. வெற்றுன ஸ்தெப்பி வெளியில் இடியதிர்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்ருக இடையருமல் முழங்கத் தொடங்கின. காற்று, மழை அடிகளால் சாய்க்கப்பட்ட புல், தரையோடு தரையாகக் கிடந்தது. எல்லாம் நடுங்கிக் கொந்தளித்தன. கண்களைக் குருடாக்கிய மின்னல்கள் மேகங்களைக் கிழித்தன... அவற்றின் இள நீல ஒளியில் மலைத் தொடர் நீல விளக்குகள் மினு மினுக்க, வெள்ளி வெண்மையும் குளிரும் திகழத் தொலைவில் காட்சி அளித்தது. மின்னல்கள் மறைந்ததும் அதுவும் இருட் கிடங்கில் விழுந்து விட்டது போலக் காணுமல் போயிற்று. எல்லாம் முழங்கியது, அதிர்ந்தது, ஒலிகளை எதிரொலித்தது, அவற்றை உண்டாக்கியது. கலக்கமும் சீற்றமும் கொண்ட விண்ணகம் தரையிலிருந்து எழுந்து தன்னை வந்து அடைந்த புழுதியும் பல் வகை ஆபாசங்களும் அகலும்படி நெருப்பால் தன்னைத் துப்புரவாக்கிக் கொள்வது போலவும் தரையுலகு அதன் கோபத்துக்கு முன் அச்சத்தால் நடுநடுங்குவது போலவும் தோன்றியது.

ஷக்ரோ மிரண்ட நாய் போல உறுமினன். எனக்கோ, மகிழ்ச்சி பொங்கியது. ஸ்தெப்பி மழைப் புயலின் இந்த விறல் மிக்க இருண்ட காட்சியைக் கண்ணுற்று நான் வழக்கமானதிலிருந்து உயரே எழுந்தவன் போல உணர்ந்தேன். அற்புதக் குழப்பம் கவர்ந்து இழுத்தது, பயங்கரக் கூட்டிசையால் உள்ளத்தை ஆட்கொண்டு அதை வீரப் பண்ணுக்கு ஏற்பச் சுருதி கூட்டியது...

இந்தக் கூட்டிசையில் பங்கு கொள்ளவும் இந்த ஆற்றலின் முன் எனக்குள் நிறைந்து ததும்பிய பரவச உணர்ச்சியை எதனுலாவது வெளியிடவும் எனக்கு விருப்பம் உண்டாயிற்று. வானத்தைத் தழுவியிருந்த இள நீலத் தழல் என் நெஞ்சிலும் எரிவது போல இருந்தது. எனது மாட்சி மிக்க கொந்தளிப்பையும் எனது உவகைப் பெருக்கையும் எதன் மூலம் வெளியிடுவது? நான் பாடத் தொடங்கினேன்—உரக்கவும் முழு பலத்துடனும். இடி முழங்கிற்று, மின்னல்கள் வெட்டின, புல் சரசரத்தது, நான் பாடினேன், எல்லா ஒலிகளுடனும்

முழு உறவு கொண்டு விட்டதாக உணர்ந்தேன்... நான் களி வெறியில் இருந்தேன். இது மன்னிக்கத் தக்கது, ஏனென்ருல் என்னைத் தவிர யாருக்கும் இது கேடு செய்யவில்லை. கடலில் சூருவளியும் ஸ்தெப்பியில் மழைப் புயலும்!—இயற்கையில் இவற்றைக் காட்டிலும் மாண்பு மிக்க நிகழ்ச்சிகளை நான் அறியேன்.

இத்தகைய நடத்தையால் நான் யாரையும் தொந்தரவு செய்யவில்லை, என் செயல் முறையைக் கடும் விமர்சனத் துக்கு உள்ளாக்கும் அவசியத்தை எவருக்கும் ஏற்படுத்த வில்லை என்று உறுதியாக நம்பி, நான் ஆரவாரித்தேன். திடீரென்று என் கால் வெடுக்கென்று பற்றி இழுக்கப்படவே, நான் வேறு வழி இன்றி நீர்க் குட்டத்தில் உட்கார்ந்து விட்டேன்...

சீற்றம் பொங்கிய ஆழ்ந்த விழிகளால் என் முகத்தை உறுத்துப் பார்த்தான் ஷக்ரோ.

''உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? பிடிக்கவில்லை யா? இல்லையா? அப்படியாஞல் வாயை மூடு! கூச்சல் போடாதே! உன் குரல்வளையைக் கிழித்து விடுவேன்! புரிந்ததா?''

நான் திகைப்படைந்து, நான் எந்த வகையில் அவனுக்கு இடைஞ்சல் செய்கிறேன் என்று முதலில் கேட்டேன்...

''பயமுறுத்துகிருய்! புரிந்ததா? இடி இடிக்கிறது—ஆண்டவன் பேசுகிருன், நீயோ, காட்டுக் கூப்பாடு போடுகிருய்... என்ன நினைத்துக் கொண்டிருக்கிருய் நீ?''

விரும்பினுல் பாடுவதற்கு அவனைப் போலவே எனக்கு உரிமை உண்டு என்று நான் அவனிடம் கூறினேன்.

''நான் விரும்பவில்லை!'' என்று அவன் கண்டிப்பாகச் சொன்னுன்.

''பாடாதே!'' என்று இசைவு தெரிவித்தேன்.

''நீயும் பாடாதே!'' என்று கண்டிப்பாகக் கட்டாயப் படுத்தினுன் ஷக்ரோ.

''இல்லை, நான் பாடத்தான் போகிறேன்...''

''கேள். நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிருய்?'' என்று ஆத்திரம் பொங்கப் பேசலானுன் ஷக்ரோ. ''நீ யார்? உனக்கு வீடு இருக்கிறதா? தாயார் இருக்கிருளா? தகப்பனுர் இருக்கிருரா? உறவுகாரர்கள்? நிலம்? உலகத்தில் நீ யார்? நீ மனி

தன் என்று எண்ணுகிருயோ? நானுக்கும் மனிதன்! என்னிடம் எல்லாம் இருக்கிறது!..'' —அவன் தன் மார்பில் இடித்துக் கொண்டான்.

''நான் சிற்றரசன்!.. நீயோ... நீ ஒன்றும் அற்றவன்! ஒன்றுமே இல்லாதவன்! குதயிசி, திப்ளிஸ் இரண்டு ஊரும் என்னை அறியும்!... புரிந்ததா? நீ எனக்கு எதிராக நடக்காதே! நீ எனக்குத் தொண்டு செய்வாயா? அப்போது சுகமாய் இருப்பாய்! நான் உனக்குப் பத்து மடங்கு ஊதியம் தருவேன்! நீ தொண்டு செய்வாயா? உன்ஞல் வேறு விதமாகச் செய்ய முடியாது. பரிசை எதிர்பாராமல் எல்லோருக்கும் தொண்டு செய்யும்படி ஆண்டவன் கட்டளை இட்டிருப்பதாக நீயே சொன்ஞயே! நான் உனக்குப் பரிசு தருவேன்! எதற்காக நீ என்னைத் துன்பப்படுத்துகிருய்? போதிக்கிருய், பயமுறுத்துகிருய்? நான் உன்னைப் போல் ஆக வேண்டும் என்று பார்க்கிருயா? இது நன்ருய் இல்லை! ஐயையே!.. த்தூ, த்தூ!..''

அவன் பேசிஞன், சப்புக் கொட்டிஞன், செறுமிஞன்,பெருமூச்செறிந்தான்... நான் திகைப்பிஞல் வாயைத் திறந்தவாறு அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.எங்கள் பயணக் காலம் முழுவதிலும் அவனுக்குள் என் விஷயத்தில் சேர்ந்திருந்த ஆத்திரம், மனத்தாங்கல், அதிருப்தி எல்லாவற்றையும் என் முன்னே அவன் கொட்டித் தீர்த்தான் போலும். அதிக உறுதியுடன் நம்பிக்கை ஊட்டுவதற்காக அவன் என் மார்பில் விரலால் குத்திஞன், தோளைப் பற்றிக் குலுக்கிஞன், சிறப்பாக வலிய இடங்களில் தன் உடல் முழுவதாலும் என்னை இடித்தான். மழை எங்கள் மேல் கொட்டிற்று, எங்களுக்கு மேலே இடை விடாமல் இடி இடித்தது. ஷக்ரோவோ, தன் குரல் என் காதில்பட வேண்டும் என்பதற்காகத் தொண்டையைப் பிய்த்துக் கொண்டு கத்திஞன்.

எனது துன்ப நிலைமையின் கேலித் தன்மை எல்லாவற்றிலும் துலக்கமாக எனக்குப் புலப்பட்டது. அதஞல் உந்தப்பட்டு நான் என் சக்திக்கு எட்டியவரை உரக்கக் கெக்கலி கொட்டினேன்...

ஷக்ரோ துப்பி விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

8

... நாங்கள் திப்ளிசை நெருங்க நெருங்க ஷக்ரோவின் ஒருமுனைப்பாடும் கடுகடுப்பும் அதிகம் ஆகிக் கொண்டு போயின. அவனுடைய மெலிந்த, ஆனால் சலனமற்ற முகத்தில் ஏதோ புதுமை காணப்பட்டது. விளாதிகாக்கேஷியாவுக்குச் சற்று தூரத்தில் நாங்கள் ஒரு செர்க்கேசியக் கிராமத்தை அடைந்து மக்காச் சோளக் கதிர் அறுக்கும் வேலையில் கூலிக்கு அமர்ந்தோம்.

செர்க்கேசியர்கள் ருஷ்ய மொழியில் அனேகமாக ஒன்றும் பேசாமல் இடைவிடாது எங்களைக் கேலி செய்து சிரிப்பதும் தங்கள் மொழியில் எங்களைத் திட்டுவதுமாக இருந்தார்கள். எங்கள் பால் கிராமத்தாரின் பகைமைப் போக்கு மேலும் மேலும் அதிகரித்ததைக் கண்டு எங்களுக்கு அச்சம் உண்டாயிற்று. எனவே அவர்களுக்கு இடையே இரண்டு நாட்கள் வேலை செய்த பின் கிராமத்திலிருந்து வெளியேற நாங்கள் முடிவு செய்தோம். கிராமத்திலிருந்து ஒரு பத்து வெர்ஸ்டாக்கள் சென்றதும் ஷக்ரோ திடீரென்று தன் சட்டை மார்பிலிருந்து லெஸ்கின் மஸ்லின் துணிப் பொட்டலம் ஒன்றை எடுத்து வெற்றிப் பெருமிதத்துடன் எனக்குக் காட்டினான்.

''இனிமேல் வேலை செய்ய வேண்டாம்! இதை விற்று எல்லாம் வாங்கிக் கொள்வோம்! திப்ளிஸ் வரை போதும்! புரிந்ததா?'' என்று முழங்கினான்.

நான் ஆத்திரத்தால் வெறி கொண்டவன் போல் ஆகி விட்டேன். பொட்டலத்தைப் பிடுங்கி ஒரு பக்கம் எறிந்து விட்டுத் திரும்பிப் பார்த்தேன். செர்க்கேசியர்கள் கண்டிப்புள்ளவர்கள். இதற்குச் சிறிது முன்பு கஸாக்கியர்கள் நடந்த கதை ஒன்றை எங்களுக்குச் சொல்லி இருந்தார்கள். ஒரு நாடோடி தான் வேலை செய்த கிராமத்திலிருந்து புறப்பட்ட போது இரும்புக் கரண்டி ஒன்றை எடுத்துக் கொண்டு போனானும். செர்க்கேசியர்கள் அவனைத் துரத்திப் பிடித்து, சோதனை போட்டு, அவனிடம் இருந்த கரண்டியை எடுத்து, கட்டாரியால் அவன் வயிற்றைக் கிழித்து, காயத்துக்குள் கரண்டியை ஆழச் செலுத்தி, அவனை ஸ்தெப்பியில் விட்டு விட்டு நிம்மதியாக ஊர் திரும்பினார்களாம். குற்றுயிராய்க் கிடந்த அவனைக் கஸாக்கியர்கள் தூக்கினார்களாம். அவன்

நடந்ததை அவர்களிடம் சொல்லி விட்டு ஊர் போகும் வழியில் இறந்து போனுனும். கஸாக்கியர்கள் படிப்பினை நல்கும் இந்த மாதிரி நிகழ்ச்சிகளை எங்களுக்கு விவரித்து, செர்க்கேசியர்களைக் குறித்து எங்களைப் பல முறை கண்டிப்பாக எச்சரித்தார்கள். அவர்களை நம்பாமல் இருக்க என்னிடம் எவ்வித ஆதாரமும் இல்லை.

நான் ஷக்ரோவுக்கு இதை நினைவுபடுத்தினேன். அவன் என் முன்னே நின்று கேட்டுக் கொண்டிருந்தவன் திடீரென்று பற்களைக் காட்டிக் கண்களைச் சுரித்துப் பூனை போல என்மேல் பாய்ந்தான். ஒரு ஐந்து நிமிடம் நாங்கள் ஒருவரை ஒருவர் நொய்யப் புடைத்தோம். முடிவில் ஷக்ரோ கோபத்துடன் என்னை நோக்கிக் கத்தினன்:

''போதும்!..''

களைத்துப் போய், எதிரெதிராக உட்கார்ந்து நாங்கள் வெகு நேரம் பேசாதிருந்தோம்... திருடிய மஸ்லின் பொட்டலத்தை நான் எறிந்திருந்த திசையை ஷக்ரோ பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். பின்பு பேசத் தொடங்கினன்:

''எதற்காக அடித்துக் கொண்டோம்? ப்பூ, ப்பூ, ப்பூ!.. அடி மடத்தனம். நான் உன் பொருளையா திருடினேன்? உனக்கு என்ன, இரக்கமாய் இருக்கிறதோ? எனக்கு உன் மேல் இரக்கமாய் இருந்தது, அதனுல்தான் திருடினேன்... நீ வேலை செய்கிருய், என்னுல் முடியவில்லை... நான் என்ன செய்வது? உனக்கு ஒத்தாசை பண்ண விரும்பினேன்...''

திருட்டு என்பது என்ன என்று அவனுக்கு விளக்க முயன்றேன்...

''தயவு செய்து மூடு வாயை! உனக்கு மர மண்டை...'' என்று அருவருப்புடன் என்னை இகழ்ந்து விட்டு எனக்கு விளக்கினன்: ''சாக வேண்டி இருந்தால் கூடத் திருட மாட்டாயா? ஊம்! இது ஒரு வாழ்வா? வாயைத் திறக்காதே!''

அவனுக்கு மீண்டும் எரிச்சலூட்ட அஞ்சி நான் பேசாதிருந்தேன். இது அவன் செய்த இரண்டாவது திருட்டு. இன்னும் முன்பு, நாங்கள் கிரிமியாவில் இருந்த போது கிரேக்கச் செம்படவர்களின் பைத் தராசை அவன் திருடினன். அப்போதும் நாங்கள் அடித்துக் கொள்ளப் பார்த்தோம்.

நாங்கள் இருவரும் சற்று அமைதி அடைந்து சமாதானம்

செய்து கொண்டு இளைப்பாறியதும், ''என்ன, மேலே நடப் போமா?'' என்ருன் அவன். மேலே நடந்தோம். அவன் நாளுக்கு நாள் அதிக ஏக்கம் பிடித்தவன் ஆஞன், என்னை விந்தையாக, சுளிப்புடன் பார்த்தான். ஒரு முறை, நாங்கள் தரியால் கணவாயைக் கடந்து குதவூர் என்னும் மலையிலிருந்து இறங்கிய போது, அவன் பேசத் தொடங்கிஞன்.

''இரண்டொரு நாட்கள் கழிந்ததும் திப்ளிஸ் சேர்ந்து விடுவோம். த்ஸெ, த்ஸெ!'' என்று நாக்கைச் சப்புக் கொட்டிய அவன் முகமெல்லாம் மலர்ந்தது. ''வீட்டுக்குப் போவேன்—எங்கே போயிருந்தாய்? பயணம் செய்தேன்! வெந்நீர்க் குளியறைக்குப் போவேன்... ஆமாம்! நிறையச் சாப்பிடுவேன்... ஆகா, நிறைய! தாயாரிடம் சொல்லுவேன் —ரொம்பப் பசிக்கிறது! தகப்பஞரிடம் சொல்லுவேன்— என்னை மன்னி! நான் ரொம்பத் துன்பப்பட்டேன், பல வகை வாழ்க்கையை அனுபவித்தேன்! நாடோடிகள் ரொம்ப நல்ல மனிதர்கள்! எப்போதாவது சந்தித்தால் பணம் கொடுப் பேன், கடைக்குக் கூட்டிப் போய், சாராயம் குடி, நானும் நாடோடியாய் இருந்தேன் என்பேன்! தகப்பஞரிடம் உன்னைப் பற்றிச் சொல்லுவேன்... இவன்தான் மனிதன், எனக்கு அண் ணன் போல் இருந்தான்... எனக்குப் போதித்தான், அடித் தான், நாய்ப் பயலான என்னை!... சாப்பாடு போட்டான். இதற்காக இப்போது நீ இவனுக்குச் சாப்பாடு போடு என்பேன். ஒரு வருஷம் சாப்பாடு போடு—கேட்டாயா, மக்சீம்? ஒரு வருஷம்.''

அவன் இந்த மாதிரிப் பேசிய போது கேட்க எனக்கு இன்பமாய் இருந்தது. இத்தகைய சந்தர்ப்பங்களில் அவன் எளிமையும் குழந்தைத் தன்மையும் மேற்கொண்டான். இத்தகைய பேச்சுக்கள் எனக்குச் சுவையாய் இருந்ததற்கு இன்னெரு காரணமும் இருந்தது: திப்ளிசில் எனக்குத் தெரிந் தவர் ஒருவர் கூட இல்லை, பனிக்காலம் வேறு நெருங்கிக் கொண்டிருந்தது. குதவூரிலேயே பனிப் புயல் எங்களை எதிர் கொண்டது. ஷக்ரோவை நான் ஓரளவு நம்பி இருந்தேன்.

நாங்கள் விரைவாக நடந்தோம். இதோ ம்த்ஸ்கேத்— இபேரியாவின் பண்டைத் தலைநகர். நாளை திப்ளிஸ் சேர்ந்து விடுவோம்.

இரண்டு மலைகளுக்கு நடுவே நெரிந்திருந்த காக்கேஷியத்

தலைநகரை ஒரு ஐந்து வெர்ஸ்டா தொலைவிலிருந்தே நான் கண்டேன். பயணத்தின் முடிவு! எதனாலோ நான் மகிழ்ச்சி அடைந்தேன், ஆனால் ஷக்ரோ அசட்டையாக இருந்தான். மந்தமான விழிகளால் முன்னே பார்ப்பதும் பசியால் ஊறும் உமிழ்நீரை ஒரு புறம் துப்புவதுமாகத் தவித்தான். அடிக்கடி வலியால் முகத்தைக் கோணியவாறு வயிற்றைப் பிடித்துக் கொண்டான். வழியில் வயலிலிருந்து பிடுங்கிய காரட்டுக் கிழங்கைக் கவனமில்லாமல் பச்சையாகத் தின்றதன் பயன் இது.

''ஜார்ஜியப் பிரபு வம்சத்தைச் சேர்ந்த நான், என் சொந்த நகரத்துக்குள் பட்டப்பகலில் இப்படிக் கந்தலும் அழுக்குமாகப் போவேன் என்று எண்ணுகிறாயோ? மாட்டேன்!.. நாம் பொழுது சாயும் வரை காத்திருப்போம். நில்லு!''

நாங்கள் ஒரு வெற்றுக் கட்டிடத்தின் சுவரோரமாக உட்கார்ந்து, கடைசிப் புகையிலைத் தூளை ஆளுக்கு ஒரு காகிதத்தில் சுருட்டிக் கொண்டு குளிரால் நடுங்கியவாறு புகைத்தோம். இராணுவ-ஜார்ஜியச் சாலையிருந்து குப்-குப்பென்று பலத்த காற்று வீசிற்று. ஷக்ரோ துயரப் பாட்டு ஒன்றைப் பற்களின் ஊடாகப் பாடியவாறு உட்கார்ந்திருந்தான்... நானோ, வெதுவெதுப்பான அறையையும் நாடோடி வாழ்வுடன் ஒப்பிடுகையில் நிலைத்த வாழ்வுக்கு உள்ள பிற அனுகூலங்களையும் பற்றி எண்ணமிட்டுக் கொண்டிருந்தேன்.

''போவோம்!'' என்று உறுதியைக் காட்டும் முகத்துடன் எழுந்தான் ஷக்ரோ.

இருட்டியது. நகரில் விளக்குகள் ஏற்றப் பட்டன. அந்தக் காட்சி அழகாக இருந்தது: நகரம் எந்தப் பள்ளத்தாக்கில் மறைந்திருந்ததோ அதைப் போர்த்திருந்த இருளில் விளக்குகள் ஒன்றன் பின் ஒன்றாக எங்கிருந்தோ தாவிக் குதித்தன.

''கேளு! இந்த மூடு தொப்பியை நீ எனக்குக் கொடு, நான் முகத்தை மூடிக் கொள்கிறேன்... இல்லாவிட்டால் பழக்கமானவர்கள் என்னை அடையாளம் கண்டு கொள்வார்கள், ஒரு வேளை...''

நான் மூடு தொப்பியைக் கொடுத்தேன். நாங்கள் ஓல்கின்ஸ்காயா வீதி வழியே போய்க் கொண்டிருந்தோம். ஷக்ரோ ஏதோ நிச்சயமான மெட்டைச் சீழ்க்கை அடித்துக் கொண்டிருந்தான்.

''மக்சீம்! குதிரை டிராம் நிலையம் தெரிகிறது அல்லவா—வெரீஸ்கி பாலம்? அங்கே உட்கார்ந்து எனக்காகக் காத்திரு. தயவு செய்து காத்திரு. நான் ஒரு வீட்டுக்குப் போய், தாயார் தகப்பனுர் பற்றி ஒரு நண்பனிடம் விசாரித்து விட்டு வருகிறேன்...''

''சீக்கிரம் வந்து விடுவாய் அல்லவா?''

''இதோ! ஒரு நொடியில்!..''

''இருண்ட, குறுகலான சந்து ஒன்றில் அவன் சட்டென்று புகுந்து அதில் மறைந்து விட்டான்—என்றென்றைக்கும்.

அனேகமாக நான்கு மாதக் காலம் என் வழித் துணைவனுக இருந்த இந்த மனிதனை அப்புறம் நான் சந்திக்கவே இல்லை. ஆனுல் நல்லுணர்ச்சியுடனும் குதூகலச் சிரிப்புடனும் அவனைப் பற்றி அடிக்கடி நினைத்துக் கொள்கிறேன்.

மூதறிஞர்களால் எழுதப் பெற்ற பெருஞ் சுவடிகளில் காணக் கிடைக்காத பல உண்மைகளை அவன் எனக்குக் கற்பித்தான், ஏனென்ருல் வாழ்க்கையின் விவேகம் மனிதர்களின் விவேகத்தைக் காட்டிலும் எப்போதும் அதிக ஆழமும் விரிவும் உள்ளது.

திருடன்

புழுதியால் சற்று இருண்ட தெற்கத்தி வானம் மங்கி இருந்தது. வெப்பம் வீசிய சூரியன் பசிய கடலை மெல்லிய சாம்பல் நிற முகத்திரை வழியாகப் போல நோக்கியது. துடுப்புகள், நீராவிக் கப்பல்களின் உந்து சக்கரங்கள் ஆகிய வற்றின் அடிகளும் துருக்கிப் பாய்மரக் கப்பல்களதும் நெரிச லான கப்பல்துறையில் எல்லாத் திசைகளிலும் நீரை உழுத வாறு இயங்கிய மற்றக் கப்பல்களதும் அடிக்கட்டைகளும் நீரைக் கூறிட்ட வண்ணமாக இருந்தன. சூரியன் அதில் அனேகமாகப் பிரதிபலிக்கவில்லை. துறையின் கற்சுவர்களால் பிணிக்கப்பட்டிருந்த கடல் அலைகள் தங்கள் முடிகள் மீது வழுகிச்சென்ற பெரும் சுமைகளால் நசுக்கப்பட்டுக் கப்பல் களின் பக்கங்களிலும் கரையிலும் மோதி அடித்தன, பல வகைக் கூளங்களால் அழுக்கடைந்து நுரைத்துப் பொங்கி முணுமுணுத்தன.

நங்கூரச் சங்கிலிகளின் கணகணப்பு, சரக்கு ஏற்றி வந்த வண்டித் தொடர்களின் கடகடப்பு, தளவரிசைக் கல்மேல் எங்கிருந்தோ விழுந்த இரும்புத் தகடுகளின் தடாரோசை, கட்டைகளின் மட்டென்ற சத்தம், சவாரி வண்டிகளின் கிலு கிலுப்பு, சில வேளைகளில் காதைத் துளைக்கும்படிக் கூர்மை யாகவும் வேறு சில வேளைகளில் கம்மிய உறுமலாகவும் ஒலித்த நீராவிக் கப்பல்களின் ஊதல்கள், சுமையாட்களும் மாலுமி களும் சுங்கச் சாவடிக்காரர்களும் போட்ட கூச்சல்கள்—இந்த எல்லா ஓசைகளும் உழைப்பு நாளின் காது செவிடுபடும் இசை யில் கலந்து குழம்பித் தளும்பியவாறு கப்பல் துறைக்கு மேல் வானில் தாழ மிதந்தன. ஒலிகளின் மேலும் புதிய புதிய

அலைகள் அவற்றை நோக்கி எழுந்தன. சில வேளைகளில் மந்தமான குமுறல்களாக அவை சுற்றி உள்ளவை யாவற்றையும் அதிர வைத்தன. வேறு சமயங்களிலோ, திடீரென முழங்கி, புழுதியும் வெக்கையும் நிறைந்த காற்றைக் கிழித்தன.

கருங்கல், இரும்பு, மரம், கப்பல் துறையின் தளவரிசை, கப்பல்கள், மனிதர்கள் எல்லோரும் பேரொலிகளால் வாணிகத் தேவனுக்கு ஆர்வத்துடன் போற்றி பாடினார்கள். ஆனால் இவற்றில் அரிதாகவே கேட்ட மனிதர்களின் குரல்கள் பலவீனமாகவும் நகைக்கத் தக்கவையாகவும் இருந்தன. இந்த இரைச்சலை முதலில் தொடங்கி வைத்த மனிதர்கள் கேலிக்குரியவர்களாகவும் இரங்கத் தக்கவர்களாகவும் இருந்தார்கள். புழுதி படிந்து, கந்தல் உடுத்து, முதுகுகளில் ஏற்றிய சரக்குகளின் சுமையால் கூனிய அவர்களுடைய துடியான உருவங்கள் புழுதிப் படலங்களில் இங்குமங்கும் பரபரப்பாக ஓடிய வண்ணமாக இருந்தன. வெக்கையும் ஒலிகளும் நிறைந்த கடலில் சூழ்ந்திருந்த இரும்பு அரக்கர்களோடும் சரக்குக் குவியல்களோடும் முழங்கிய வண்டிகளோடும் மனிதர்கள் உருவாக்கிய எல்லாவற்றோடும் ஒப்பிடுகையில் அவர்களுடைய உருவங்கள் அற்பமாக இருந்தன. அவர்களுடைய படைப்புக்கள் அவர்களை அடிமைகளாக்கி அவர்களுடைய மனிதப் பண்புகளைப் பறித்து விட்டன.

எடை மிக்க அரக்க நீராவிக் கப்பல்கள் புறப்படத் தயாராக நின்றவாறு சங்குகளை ஊதின, சீறின, ஆழ்ந்துபெருமூச்சு விட்டன. அவை செய்த ஒவ்வோர் ஒலியிலும் ஆட்களின் சாம்பல் நிறமான, புழுதி படிந்த உருவங்கள் மீது இகழ்ச்சி ததும்பும் கேலி தொனித்தது. ஆட்களோ, கப்பல்களின் மேல் தட்டுகளில் ஊர்ந்தார்கள், அவற்றின் ஆழமான சரக்கறைகளைத் தங்கள் அடிமை உழைப்பின் உற்பத்திப் பொருள்களால் நிறைத்தார்கள். தங்கள் சொந்த வயிறுகளுக்காகச் சில ராத்தல் கோதுமை சம்பாதிக்கும் பொருட்டுப் பல்லாயிரம் மணங்கு அதே கோதுமையைத் தங்கள் தோள்களில் சுமந்து வந்து கப்பல்களின் வயிறுகளில் நிறைக்கும் சுமையாட்களின் நீண்ட வரிசைகள் கண்ணீர் வரும் அளவுக்குச் சிரிப்பூட்டுபவையாக இருந்தன. கிழிசல் அணிந்து, வியர்வை பெருக, களைப்பினாலும் இரைச்சலினாலும் வெக்கையினாலும்

மந்தித்துப் போயிருந்த ஆட்கள் ஒரு புறம், பிரமாண்டமான உடல்கள் வெயிலில் பளிச்சிட நின்ற விறல் மிக்க இயந்திரங் கள்—இதே ஆட்களால் நிறுவப்பட்டு, முடிவாகப் பார்க்கும் போது நீராவியால் அல்ல, தங்களைப் படைத்தவர்களின் தசைகளாலும் குருதியாலும் இயங்கத் தொடங்கிய இயந்திரங்கள்—மறு புறம். இந்த ஒப்பீட்டில் கொடிய நையாண்டிக் காவியம் முழுமையாக அடங்கி இருந்தது.

இரைச்சல் நசுக்கியது. புழுதி மூக்குத் துளைகளைக் காந்தச் செய்து கண்களைக் குருடாக்கியது. வெக்கை உடலை வதக்கி வாட்டியது. சூழ இருந்தவை எல்லாம் இறுக்கம் நிறைந்து, பொறுமை இழந்து, மாட்சி மிக்க ஒரு பேரதிர்ச்சியால், வெடிப்பால், தகர்ந்து சிதற ஆயத்தமாய்க் காணப்பட்டன. இந்த வெடிப்புக்குப் பின் அதனுல் குளிர்விக்கப்பட்ட காற்றில் தாராளமாகவும் எளிதாகவும் மூச்சு விடலாம், தரை மீது அமைதி ஆட்சி புரியும், எரிச்சல் ஊட்டுவதும் ஏக்கம் நிறைந்த வெறி உண்டாக்குவதும் ஆன புழுதி அடர்ந்த இந்த இரைச்சல் அடங்கி விடும், நகரத்திலும் கடல் மீதும் வானிலும் அமைதியும் தெளிவும் இனிமையும் நிலவும் என்று தோன்றியது...

கண்டாமணி பன்னிரண்டு முறை ஒரு சீராகக் கணீரென்று அடித்தது. கடைசி வெண்கல ஒலி அடங்கியதும் உழைப்பின் காட்டுத்தனமான இசை தணிவாக ஒலிக்கலாயிற்று. இன்னும் ஒரு நிமிடத்தில் அது அதிருப்தி ததும்பும் தெளிவற்ற முணு முணுப்பாக மாறியது. இப்போது மனிதர்களின் குரல்களும் கடலின் அலையோசையும் காதில் படத் தொடங்கின. பகலுணவு கொள்ளும் நேரம் வந்து விட்டது.

1

சுமையாட்கள் வேலை செய்வதை நிறுத்தி விட்டு, இரைச் சலிடும் கும்பல்களாகக் கப்பல் துறையில் சிதறி, கடைகளில் விதம் விதமான உணவுப் பண்டங்களை வாங்கிக் கொண்டு, தளவரிசையிலேயே நிழலுள்ள மூலைகளில் சாப்பிட உட் கார்ந்தபோது அங்கே வந்தான் கிரீஷ்கா செல்காஷ். இவன், எல்லாம் பட்டுத் தேறியவன், கப்பல் துறை ஆட்களுக்கு நன்கு தெரிந்தவன், மிடாக் குடியன், சாமர்த்தியமும் துணிவும்

உள்ள திருடன். அவன் வெறுங்காலஞக இருந்தான். பழைய, நைந்த் வெல்வெட்டீன் துணிச் சராயும் கழுத்துப் பட்டை யில் கிழிந்த அழுக்கேறிய சீட்டிச் சட்டையும் அணிந்திருந் தான். அவனுடைய வரண்டு துருத்திப் பழுப்புத் தோல் போர்த்த எலும்புகள் கழுத்துப் பட்டைக் கிழிசல் வழியே தெரிந்தன. அவன் தலையில் தொப்பி இல்லை. நரையோடிய கரு முடி கற்றை கற்றையாகத் தொங்கியது. வேட்டைப் பருந்துத் தோற்றம் கொண்ட கூரிய முகம் கலங்கி இருந்தது. அவன் அப்போதுதான் உறங்கி விழித்திருந்தான் என்பதை அவை காட்டின. அவனது ஒரு பழுப்பு மீசையில் வைக்கோல் துருத்திக் கொண்டிருந்தது. இன்னெரு வைக்கோல் மழித்த இடது கன்னக் கட்டை மயிர்களில் சிக்கிக் கொண் டிருந்தது. அப்போதுதான் கிள்ளிய சிறு லிண்டன் கிளையை அவன் காதில் செருகி இருந்தான். அவனுடைய சதைப்பிடிப் பற்ற நெடிய மேனி சிறிது கூனியிருந்தது. கற்கள் மேல் மெதுவாக நடந்தவாறு வளைந்த கழுகு மூக்கை அசைத்துக் கூரிய பார்வையை நாற்புறமும் செலுத்தினுன். அவனது உணர்ச்சியற்ற சாம்பல் நிற விழிகள் பளிச்சிட்டன. சுமை யாட்களுக்கு இடையே யாரையோ அவன் தேடினுன். அடர்ந்து நீண்ட அவனது பழுப்பு மீசைகள் பூனையினுடையவை போன்று அடிக்கடி துடித்தன. முதுகுப் புறம் கிடந்த கைகள் நீண்டு வளைந்து இறுகப் பற்றும் விரல்களைப் பதற்றத்துடன் திருகிய வாறு ஒன்றை ஒன்று தேய்த்துக் கொண்டிருந்தன. ஸ்தெப்பிக் கழுகு போன்ற தோற்றம், வேட்டை விலங்குக்கு ஒப்பான மெலிய உடல், இலக்கை நோக்கி முன்னேறும் நடை ஆகியவற்ருல் இங்கே, தன்னைப் போன்ற துடியான வெறுங் காலர்கள் நூற்றுக் கணக்கானவர்களுக்கு நடுவே கூட, அவன் கவனத்தை ஈர்த்தான். பார்வைக்குச் சீராகவும் அமைதி யாகவும் இருந்தாலும் இந்த நடை தோற்றத்தில் அவனை நிகர்த்திருந்த வேட்டைப் பறவையின் பறப்பு போலவே உள்ளுக்குள் கிளர்ச்சியும் எச்சரிப்பும் கொண்டிருந்தது.

நிலக்கரிக் கூடைகளின் குவியலருகே நிழலில் ஒதுங்கி இருந்த சுமையாட்களின் ஒரு கும்பலுக்கு நேராக அவன் வந்தபோது கட்டுக்குட்டான இளைஞன் ஒருவன் அவன் எதிரே நின்ருன். இளைஞனின் கருஞ் சிவப்புப் பள்ளிகள் நிறைந்த முகத்தில் அசடு வழிந்தது. கழுத்தில் பிருண்டல்

கள் காணப்பட்டன. அவன் சமீபத்தில் அடி வாங்கி இருக்க வேண்டும். அவன் செல்காஷின் அருகாக நடந்தவாறு தணிந்த குரலில் சொன்னான்:

''கப்பல்காரர்களுடைய இரண்டு சிப்பங்களைக் காணோமாம்... தேடுகிறார்கள்.''

செல்காஷ் அவனை அமைதியாக நோட்டமிட்டு, ''அப்புறம்?'' என்றான்.

''அப்புறமாவது ஒன்றாவது? தேடுகிறார்களாம், வேறு ஒன்றுமில்லை.''

''நான் வேண்டுமென்று கேட்டார்களா என்ன, தேட உதவுவதற்கு?''

இவ்வாறு கூறி, வர்த்தகக் கப்பல்களின் சரக்குக் கிட்டங்கி இருந்த இடத்தை இளநகையுடன் நோக்கினான் செல்காஷ்.

''போடா சைத்தான் கிட்டே!''

தோழன் திரும்பிப் போனான்.

''ஏய், நில்லு! உனக்கு இப்படி ஒப்பனை செய்தது யார்? மூஞ்சியை என்ன கோலம் பண்ணி இருக்கிறார்கள்!... மீஷ்காவை இங்கே பார்த்தாயா?''

''ரொம்ப நாளாகப் பார்க்கவில்லை!'' என்று கத்திவிட்டுத் தன் தோழர்களிடம் போனான் அந்த ஆள்.

செல்காஷ் மேலே நடந்தான். நன்கு பழக்கம் ஆனவனைப் போல அவனை எல்லோரும் எதிர் கொண்டார்கள். ஆனால் வழக்கமாகக் குதூகலமாகவும் குத்தலாகவும் பேசும் அவனுக்கு இன்று உற்சாகம் இல்லை போலும். ஆட்களின் கேள்விகளுக்கு அரைகுறையாகவும் வெடுக்கென்றும் பதில் சொன்னான்.

சரக்குச் சிப்பங்களின் அடுக்குக்குப் பின் எங்கோ இருந்து வெளியே வந்தான் சுங்கச் சாவடிக் காவலாள். அவனுடைய கரும் பச்சை உடுப்பு புழுதி படிந்திருந்தது. அவன் படையினரின் பாங்கில் விரைப்பாக நடந்தான். சவால் விடுபவன் போன்ற தோரணையில் செல்காஷின் எதிரே வழி மறித்து நின்று, இடது கையால் கட்டாரிப் பிடியைப் பற்றிக் கொண்டு வலது கையால் செல்காஷின் கழுத்துப் பட்டையைப் பிடிக்க முயன்றான்.

''நில்! எங்கே போகிறாய்?''

செல்காஷ் ஓர் அடி பின்வாங்கி, காவலாளை ஏறிட்டுப் பார்த்து வரட்சியாகப் புன்னகைத்தான்.

காவலாளின் நல்லியல்பும் தந்திரமும் வாய்ந்த சிவந்த முகம் பயங்கரத் தோற்றத்தைக் காட்ட முயன்றது. கன்னங் கள் உப்பின, முகம் கருஞ் சிவப்பு நிறத்துடன் உருண்டை ஆயிற்று, புருவங்கள் நெரிந்தன, விழிகள் விரிந்தன. மிகவும் வேடிக்கையாக இருந்தது அந்தத் தோற்றம்.

''கப்பல் துறைக்கு வரத் துணியாதே, விலாவை முறித்து விடுவேன் என்று சொல்லி இருக்கிறேனே உனக்கு! நீ என்ன, மறுபடியுமா?'' என்று மிரட்டும் குரலில் கத்தினன் காவலாள்.

''வணக்கம், செம்யோனிச்! நாம் சந்தித்து வெகு காலம் ஆகி விட்டது'' என்று அமைதியாக முகமன் கூறி அவனிடம் கையைக் குலுக்குவதற்காக நீட்டினன் செல்காஷ்.

''ஆயுள் பூராவும் உன்னைச் சந்திக்காமலே இருந்தால் நல்லது! போ, போ!..''

ஆனலும் செம்யோனிச் நீட்டிய கையைப் பற்றிக் குலுக்கினன்.

செம்யோனிச்சின் கையைத் தன் வலிய விரல்களின் பிடியிலிருந்து விடாமல் நெருங்கிய நண்பனுக்குரிய சுதந்திரத் துடன் குலுக்கியவாறு பேச்சைத் தொடர்ந்தான் செல்காஷ்: ''ஒன்று சொல்லு. நீ மீஷ்காவைப் பார்க்கவில்லையா?''

''இன்னும் யார் அவன் மீஷ்கா? எந்த மீஷ்காவையும் எனக்குத் தெரியாது! போய்விடு, தம்பீ, அப்பாலே! இல்லா விட்டால் கிட்டங்கிக்காரன் பார்த்து விடுவான். அவன் உன்னை...''

''நான் சொல்லுகிறது செம்பட்டைத் தலையனை. போன தடவை நான் 'கஸ்திரமாவில்' ஒருவனோடு வேலை செய்தேனே, அவனை'' என்று தன் பேச்சை விடாது தொடர்ந்தான் செல்காஷ்.

'' 'நான் ஒருவனேடு சேர்ந்து திருடுகிறேனே' என்று சொல்லு! ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்கிறர்கள் அவனை, உன் மீஷ்காவை. இரும்புத் தடி காலை நசுக்கி விட்டதாம். மரியாதையாகப் போய்விடு, தம்பீ, போய்விடு. இல்லாவிட்டால் பிடரியைப் பிடித்துத் தள்ளுவேன்!..''

''ஆகா, ஆளைப் பார்! 'மீஷ்காவை எனக்குத் தெரியாது' என்கிறய், தெரிந்து தானே வைத்திருக்கிறய்! எதற்காக இப்படி எரிந்து விழுகிறய், செம்யோனிச்?..''

''இதோ பாரு, இந்தப் பம்மாத்து எல்லாம் என் கிட்டே வைத்துக் கொள்ளாதே, போய்விடு!..''

காவலாள் எரிச்சல் படத் தொடங்கி, இரு புறமும் கண்ணோட்டி விட்டுத் தன் கையைச் செல்காஷின் உறுதியான கையிலிருந்து விடுவித்துக் கொள்ள முயன்றான். செல்காஷ் தன் அடர்ந்த புருவங்களின் அடி வழியே அவனை அமைதியாகப் பார்த்து, அவனது கையை விடாமல் தொடர்ந்து பேசிக் கொண்டு போனான்:

''நீ என்னை அவசரப் படுத்தாதே. வேண்டிய அளவு உன்னோடு பேசி விட்டுப் போய் விடுகிறேன். சொல்லு, நீ எப்படி இருக்கிறாய்? மனைவி மக்கள் சுகந்தானா?'' பின்பு கண்கள் பளிச்சிட, கேலிப் புன்னகையில் பற்கள் வெளித் தெரிய, ''உன் வீட்டுக்கு விருந்தாட வரலாம் என்று பார்க்கிறேன், நேரமே கிடைப்பதில்லை. ஓயாமல் நானே குடித்துத் தீர்க்கிறேன்...'' என்றான்.

''டேய், டேய், இந்தப் பேச்சைக் கட்டிவை! கேலி பண்ணாதே, எலும்பு துருத்திச் சாத்தான்! நான், ஏதோ ஒதுங்கிப் பிழைப்பவன்... இல்லை, வீடு வீடாக, தெருத் தெருவாகப் புகுந்து கொள்ளையடிக்கத் திட்டம் இட்டிருக்கிறாயோ?''

''எதற்காக? இங்கே இருக்கிற பண்டமே உனக்கும் எனக்கும் வாழ்நாள் முழுவதற்கும் போதுமே! கடவுளாணை, போதும், செம்யோனிச்! நீ என்னவோ மறுபடி இரண்டு சரக்குச் சிப்பங்களை அபேஸ் பண்ணி விட்டாயாமே!.. பார், செம்யோனிச், சாக்கிரதை! எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்டு விடாதே!..''

செம்யோனிச்சுக்கு ஆத்திரத்தால் உடல் பதறிற்று. ஏதோ சொல்ல முயன்றவன் எச்சிலைத் தெறித்தான். செல்காஷ் அவன் கையை விட்டு விட்டு நீண்ட கால்களால் அமைதியாகத் திரும்பி நடந்து கப்பல் துறையின் வாயிலுக்குச் சென்றான். காவலாள் வெறியுடன் திட்டி நொறுக்கியவாறு அவன் பின்னே சென்றான்.

செல்காஷ் களிப்படைந்தான். பற்களின் ஊடாக மெது வாய்ச் சீழ்க்கை அடித்தான். சராய்ப் பைகளில் கைகளை நுழைத்துக் கொண்டு குத்தலும் கிண்டலும் கேலியுமாக இடமும் வலமும் வீசியவாறு நிதானமாக நடந்தான். மற்றவர்கள் அவனுக்கு அதே முறையில் பதிலளித்தார்கள்.

''அடேயப்பா, கிரீஷ்கா, எசமானர்கள் உன்னை எப்படித் தான் பேணுகிறார்கள்!'' என்று சாப்பிட்டு விட்டு இளைப்பாறு வதற்காகத் தரையில் கிடந்த சுமையாட்கள் கும்பலிலிருந்து ஒருவன் கத்தினான்.

''நான் வெறுங்காலன் அல்லவா, அதனால் என் காலில் ஏதேனும் குத்திக் கிழித்து விடாதபடி செம்மையாணிச் பார்த்துக் கொள்கிறார்'' என்று செல்காஷ் பதில் கூறினான்.

வாயிலை அடைந்தார்கள். இரண்டு இராணுவத்தினர் செல்காஷின் மேல் தொட்டுத் தடவிப் பார்த்து விட்டு அவனை லேசாக வீதியில் தள்ளினார்கள்.

செல்காஷ் வீதியைக் குறுக்காகக் கடந்து சாராயக் கடைக் கதவுக்கு எதிரே இருந்த குத்துக்கல் மேல் உட்கார்ந் தான். சரக்கு ஏற்றிய வண்டிகளின் வரிசை கப்பல் துறை வாயிலிலிருந்து கடகடப்புடன் வெளியே வந்தது. எதிர்ப் புறமிருந்து காலி வண்டிகள் சென்றன. வண்டிக்காரர்கள் அவற்றில் குதித்துக் கொண்டிருந்தார்கள். கப்பல் துறை ஊளை முழக்கத்தையும் காந்தச் செய்யும் புழுதியையும் பரப்பியது...

இந்த வெறி பிடித்த சந்தடியில் செல்காஷ் மகிழ்ச்சியில் திளைத்தான். கொழுத்த வருமானம் அவனுக்குக் கிடைக்க இருந்தது. கொஞ்சம் உழைப்பும் நிறையச் சாமர்த்தியமும் அதற்குத் தேவைப்பட்டன. வேண்டிய அளவு சாமர்த்தியம் தன்னிடம் இருப்பதாக அவன் நம்பினான். மறு நாள் காலை யில் பண நோட்டுக்கள் பைக்கு வந்து சேர்ந்ததும் எப்படிக் களி கொண்டாடப் போகிறோம் என்று கண்களைச் சுரித்தவாறு எண்ணமிட்டான்... தோழன் மீஷ்காவை நினைத்துக் கொண்டான். காலை ஒடித்துக் கொண்டிராவிட்டால் இன்று இரவு அவன் மிகவும் உதவியாய் இருந்திருப்பான். மீஷ்கா இல்லாமல் ஒண்டியாகக் காரியத்தைச் சமாளிப்பது தன்னால் முடியாது என்று எண்ணி மனதுக்குள் திட்டிக் கொண்டான் செல்காஷ். இரவு எப்படிப்பட்டதாக இருக்கும்?.. அவன் வானத்தின் மீதும் வீதி நெடுகிலும் கண்ணோட்டினான்.

அவனுக்கு ஒரு ஆறு அடி தூரத்தில் குத்துக்கல்லில் முதுகைச் சாய்த்துக் கொண்டு நடைபாதை அருகே தளவரிசை மேல் உட்கார்ந்திருந்தான் ஓர் இளைஞன். நீல நிற முரட்டுத் துணிச் சட்டையும் அதே மாதிரிச் சராயும் மரவுரிச் சோடு



களும் முன் விளிம்பு வைத்த கிழிந்த தொப்பியும் அணிந்திருந்தான். சிறு பயணப் பையும் பின்னிய வைக்கோல் சுற்றி மேலே கயிற்றால் கச்சிதமாகக் கட்டப்பட்டிருந்த பிடியற்ற அரிவாளும் அவன் பக்கத்தில் கிடந்தன. அவன் அகன்ற தோள்களும் கட்டுக்குட்டான மேனியும் சணல் நிற முடியும் வெயிலிலும் காற்றிலும் அடிபட்டுப் பழுப்பேறிய முகமும் பெரிய நீல விழிகளும் கொண்டிருந்தான். அந்த விழிகள் செல்காஷை நம்பிக்கையுடனும் நல்லியல்புடனும் நோக்கின.

செல்காஷ் பற்களைக் காட்டி நாக்கை நீட்டி, முகத்தைப் பயங்கரம் ஆக்கிக் கொண்டு இளைஞனைப் பரக்க விழித்துப் பார்த்தான்.

இளைஞன் முதலில் ஒன்றும் புரியாமல் மலங்க மலங்க விழித்தான். பின்பு திடீரென்று வாய்விட்டுச் சிரித்து,''வேடிக்கையான ஆளப்பா நீ!'' என்று சிரிப்புக்கு நடுவே கத்தினான். அனேகமாகத் தரையிலிருந்து எழுந்திருக்காமலே தன் பையைப் புழுதியில் இழுத்துக் கொண்டும் அரிவாளைக் கற்களில் அடிபட நகர்த்திக் கொண்டும் தன் குத்துக்கல்லிலிருந்து செல்காஷின் குத்துக்கல்லுக்கு வந்து விழுந்தான்.

செல்காஷின் சராயைப் பிடித்து இழுத்து, ''என்ன அண்ணே, குடி ரொம்ப பலம் போலிருக்கிறதே!'' என்றான்.

''குடி பலந்தான், பச்சைப் பிள்ளை, பலந்தான்!'' என்று குறு நகையுடன் ஒப்புக் கொண்டான் செல்காஷ். குழந்தையுடையவை போன்ற தெளிந்த விழிகள் கொண்ட திடகாத்திரமான இந்த நல்ல பையனை அவனுக்கு எடுத்த எடுப்பில் பிடித்துப் போய்விட்டது. ''புல் அறுப்பு நடத்திவிட்டு வருகிறாயாக்கும்?''

''பின்னே என்ன? ஒரு மைல் தூரம் புல் அறுத்தால் ஒரு காசு கூலி கிடைக்கிறது. படு மோசமான பிழைப்பு! ஆ-ஆட்கள் ஒரு பாடு! பஞ்சத்தில் அடிபட்டவன் எல்லாம் வந்து குமைந்தானு, கூலியை ஒரே மட்டாய்க் குறைத்து விட்டார்கள். வேண்டாம் என்றால் விட்டு விடு என்கிறார்கள்! அறுபது காசு குபானில் கூலி கொடுத்தார்கள். காலத்தின் கோலம்!.. முன்னே எல்லாம் மூன்று ரூபிள், நான்கு, ஐந்து கூடக் கொடுத்தார்களாம்!..''

''முன்னேயா!... முன்னே என்றால் அங்கே ருஷ்ய ஆளைப் பார்ப்பதற்கே மூன்று ரூபிள் கொடுத்தார்கள். ஒரு பத்து

வருசத்துக்கு முன்னாலே நான் இந்த வேலை தான் செய்து கொண்டிருந்தேன். கிராமத்துக்குப் போவேன். 'நான் ருஷ்யன்' என்பேன். ஆட்கள் என்னை ஏற இறங்கப் பார்ப்பார்கள், தொட்டுத் தடவிச் சோதிப்பார்கள், ஆச்சரியப்படுவார்கள், அப்புறம், 'இந்தா மூன்று ரூபிள்!' என்று கொடுப்பார்கள். மேற்கொண்டு குடியும் சாப்பாடும் வேறே. எத்தனை நாள் வேண்டுமோ இருந்து கொள்ளலாம்.''

இளைஞன் முதலில் வாயை ஆவென்று திறந்து, உருண்டை முகத்தில் விளங்காத பாராட்டு தோன்றச் செல்காஷின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான். கந்தலாண்டி பொய் சொல்கிறான் என்பதை அப்புறம் புரிந்து கொண்டு உதடுகளைச் சப்புக் கொட்டிக் கடகடவென்று சிரித்தான். செல்காஷ் புன்னகையை மீசைகளுக்குள் மறைத்துக் கொண்டு ஆழ்ந்த முகத்தோற்றத்தை அப்படியே வைத்திருந்தான்.

''கோமாளி, நிஜம் போலச் சொல்லுகிறாய், நானும் கேட்டு நம்புகிறேன்... இல்லை, கடவுளாணை, முன்னே எல்லாம்...''

''நான் மட்டும் என்ன சொல்லுகிறேனாம்? முன்னே எல்லாம் அப்படித்தான் இருந்தது என்கிறேன்...''

''அட, போ அப்பா!..'' என்று கையை ஆட்டினான் இளைஞன். ''நீ என்ன, செம்மானா? இல்லை, தையல்காரனா?''

''நானா?'' என்று பதிலுக்குக் கேட்டான் செல்காஷ். ''நான் செம்படவன்...''

''செம்-படவனா! அப்படிச் சொல்லு! என்ன, மீன் பிடிபடுகிறதா?..''

''மீன் எதற்கு? இந்தப் பக்கத்துச் செம்படவர்கள் வெறுமே மீன் மட்டும் பிடிப்பதில்லை. மூழ்கியவற்றை, பழைய நங்கூரங்கள், முழுகிய கப்பல்கள்—எல்லாவற்றையும் அதிகமாகப் பிடிப்பார்கள்! இதற்காகத் தனிப்பட்ட தூண்டில்கள் இருக்கின்றன...''

''புளுகு, புளுகு!.. ஒரு பாட்டு பாடுவார்களே, செம்படவர்கள், நீ அவர்களைச் சேர்ந்தவனோ ஒரு வேளை? அந்தப் பாட்டில் இப்படி வரும்:

''வலைகள் வீசுவோம் நாங்கள்
வரண்ட கரைகளில்,
களஞ்சியங்கள், கிடங்குகளில்!..''

செல்காஷ் புன்னகையுடன் அவனை நோக்கி, ''இந்த மாதிரி வலையர்களை நீ பார்த்திருக்கிருயா?'' என்று கேட்டான்.

''இல்லை, பார்ப்பது எங்கே? கேள்விப்பட்டிருக்கிறேன்...''

''பிடிக்கிறதா?''

''அவர்களையா? பிடிக்காமல் என்ன?.. மோசமில்லை பையன்கள். கட்டில்லாதவர்கள், சுதந்திரமானவர்கள்...''

''உனக்கு எதற்குச் சுதந்திரம்?.. உனக்குச் சுதந்திரம் பிடிக்குமா என்ன?''

''பிடிக்காமல் எப்படி? நமக்கு நாமே எசமான். எங்கே வேண்டுமோ போகலாம், என்ன வேண்டுமோ செய்யலாம்... சும்மா தானு! ஒழுங்காக வாழலாம், நுகத்திலே கழுத்தைக் கொடுக்க வேண்டாம், முக்கியமானது இதுதான்! வேண்டிய படிக் குதூகலமாகச் சுற்றித் திரியலாம். கடவுளை மட்டும் மறந்து விடக் கூடாது...''

செல்காஷ் இகழ்ச்சியுடன் துப்பி, இளைஞனிடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''என் காரியத்தையே எடுத்துக் கொள்வோம்'' என்று பேசிக் கொண்டு போனுன் இளைஞன். ''என் அப்பன் இறந்து விட்டான், பண்ணை சின்னது, அம்மா கிழவி, நிலம் சத்தில்லாதது — நான் என்ன செய்வது? பிழைப்பு நடத்தவோ வேண்டும். ஆனுல் எப்படி? தெரியவில்லை. நல்ல குடும்பத்திலே மாப்பிள்ளையாகப் போகலாம். சரி. பெண்ணுக்குச் சொத்தைப் பிரித்துக் கொடுத்தால் நல்லது... ஆனுல் மாமன் பிரித்துக் கொடுக்க மாட்டேன் என்கிருனே பேய்ப் பயல்! நான் அவனுக்கு உழைக்க வேண்டும்... நீண்ட காலம்... வருசக் கணக்கில்! பார்த்தாயா நிலவரத்தை! நான் மட்டும் ஒரு நூறு, நூற்றைம்பது ரூபிள் சம்பாதிக்க முடிந்தால் உடனே தன் பலம் கொண்டு நிற்பேன். அந்தீப் இருக்கிருனே, என் மாமன், அவனைப் போடா போக்கற்றவனே என்று விரட்டி இருப்பேன்! மகள் மார்பாவுக்குச் சொத்தைப் பிரித்துக் கொடுக்க இஷ்டமா? இல்லையா? வேண்டாம்! ஆண்டவன் அருளாலே கிராமத்தில் பெண் அவள் ஒருத்தி மட்டும் அல்ல. ஆக, நான் ஒரு கட்டு இல்லாமல் முழுக்க முழுக்கச் சுதந்திரமாய் இருப்பேன், என் போக்குப் படி... ஆ-மாம்!'' இளைஞன் பெருமூச்செறிந்தான். ''இப்போதோ, பெண்ணைக் கட்டிக்

கொள்வது தவிர வேறு வழி இல்லை. நான் நினைத்தேன்: இதோ குபானுக்குப் போவேன். ஒரு இருநூறு ரூபிள் போலச் சம்பாதிப்பேன், போதுமே! நானே பிரபு!.. எண்ணம் ஈடேற வில்லை. பண்ணைக் கூலியாக வேலை செய்துதான் பிழைக்க வேண்டும். சொந்த நிலத்தை உழுது பயிரிட்டுக் காலம் தள்ள முடியாது என்ருல்! ஒரு போதும் முடியாது! ஏகே-கே!..''

இளைஞனுக்கு மாப்பிள்ளை ஆக அறவே விருப்பம் இல்லை. அவன் முகங்கூடத் துயரத்தால் நிறம் மங்கிவிட்டது. தரையில் இருந்தபடியே அமைதி இன்றித் துடித்தான்.

''இப்போது நீ எங்கே போவாய்?'' என்று கேட்டான் செல்காஷ்.

''எங்கேயாவது? தெரியாதா, வீட்டுக்குத்தான்.''

''ஆனல், தம்பீ, எனக்கு இது தெரியாது. ஒரு வேளை நீ துருக்கிக்குப் போனலும் போவாய்...''

''துருக்-கிக்-கா?..'' என்று நீட்டி முழக்கினன் இளைஞன். ''ருஷ்யக் கிறிஸ்தவர்களில் எவன் அப்பா அங்கே போவான்? நல்ல இடந்தான் பார்த்தாய், போ!..''

''சரியான மடையனடா நீ!'' என்று செல்காஷ் பெருமூச் செறிந்து மறுபடி அவனிடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டான். வலிய உடற்கட்டுள்ள இந்த நாட்டுப்புற இளைஞன் செல்காஷின் உள்ளத்தில் இனந் தெரியாத ஓர் உணர்வைத் தூண்டி விட்டான்...

மெதுவாக முதிர்ந்த, மங்கலான, வருத்தம் தரும் உணர்வு எங்கோ நெஞ்சின் ஆழத்தில் குழைந்து, அன்று இரவு செய்ய வேண்டி இருந்த காரியத்தைப் பற்றிக் கவனமாக ஆழ்ந்து சிந்திக்க விடாமல் அவனைத் தடுத்தது.

திட்டலுக்கு உள்ளான இளைஞன் வெறுங்காலனை எப் போதாவது ஓரப் பார்வையாகப் பார்த்தவாறு வாய்க்குள் ஏதோ முணுமுணுத்தான். அவன் கன்னங்கள் வேடிக்கையாக உப்பின, உதடுகள் துருத்தின, இடுங்கிய கண்கள் மிக அடிக்கடி, சிரிப்பூட்டும் வகையில் கொட்டின. இந்த மீசைக்காரக் கந்தலாண்டியுடன் தனது பேச்சு இவ்வளவு விரைவாகவும் வருந்தத் தக்க விதத்திலும் முடியும் என்று அவன் எதிர் பார்க்கவில்லை போலும்...

கந்தலாண்டி அப்புறம் அவன் மீது கவனம் செலுத்த

வில்லை. யோசனையில் ஆழ்ந்தவனாக குத்துக்கல் மேல் உட்கார்ந்து வெற்றுக் குதிகாலால் அதில் தாளம் போட்டவாறு சீழ்க்கை அடித்தான்.

தானும் சுடு சொல்லால் அவனைத் தாக்க வேண்டும் என்ற விருப்பம் இளைஞனுக்கு உண்டாயிற்று.

''டேய் செம்படவா! நீ அடிக்கடி இப்படிக் குடிப்பது உண்டோ?'' என்று பேச்சைத் தொடங்க வாயெடுத்தான். ஆனால் அதே கணத்தில் செம்படவன் அவன் பக்கம் முகத்தை விரைவாகத் திருப்பி,

''கேளப்பா, பச்சைப் பிள்ளை! இன்றைக்கு ராத்திரி என்னோடு வேலை செய்ய விரும்புகிறாயா? சட்டென்று சொல்லு!'' என்றான்.

''என்ன வேலை?'' என்று நம்பிக்கை இல்லாமல் கேட்டான் இளைஞன்.

''ஊம், என்ன வேலையா? நான் சொல்லுகிற வேலை. மீன் பிடிக்கப் போவோம். நீ துடுப்பு தள்ளுவாய்...''

''அப்படியா... அதற்கென்ன? பரவாயில்லை. வேலை செய்யலாம். ஒன்று மட்டும்... உன்னோடு சேர்ந்து ஏதேனும் வம்பில் மாட்டிக் கொள்ள வேண்டி வருமோ. நீ ரொம்பப் புரிந்து கொள்ள முடியாத, சந்தேகத்துக்கு இடமான ஆள்...''

செல்காஷுக்கு நெஞ்சில் சூட்டுக்கோல் பட்ட மாதிரி இருந்தது. ஆழ்ந்த வன்மத்துடன் தணிந்த குரலில் சொன்னான்:

''புரியாததைப் பற்றிப் பேசாதே நீ. இதோ உன் மண்டையில் மடாரென்று ஒரு சாத்து சாத்துகிறேன், மூளை தெளிந்து விடும்...''

அவன் குத்துக்கல்லிலிருந்து குதித்தெழுந்து இடது கையால் மீசையை நெருடி, வலது கையை நாளங்கள் புடைக்க முட்டி பிடித்துப் பளிச்சிடும் கண்களை உருட்டி விழித்தான்.

இளைஞன் அரண்டு போனான். சட்டென்று சுற்றிலும் கண்ணோட்டி விட்டு, அச்சத்துடன் இமைகளைக் கொட்டியவாறு தானும் தரையிலிருந்து துள்ளி எழுந்தான். ஒருவரை ஒருவர் கண்களால் ஆழம் பார்த்த வண்ணம் இருவரும் பேசாதிருந்தார்கள்.

''ஊம்?'' என்று கடுமையாக வினவினான் செல்காஷ். இந்த இளங் கன்றுக் குட்டி தனக்கு இழைத்த அவமானத்தால்

அவன் கொதித்துத் துடித்தான். உரையாடலின் போது இந்தப் பயலே அவன் இகழ்ந்தான். இப்போதோ, திடீரென்று வெறுத்தான்—அவனுக்கு இத்தகைய தெளிந்த இள நீல விழிகளும், ஆரோக்கியமுள்ள பழுப்பேறிய முகமும், குட்டையான வலிய கரங்களும் இருந்ததற்காக, அவனுக்குச் சொந்த ஊரும் அதில் ஒரு வீடும் உண்டு என்பதற்காக, பணக்கார விவசாயி ஒருவன் அவனை மாப்பிள்ளை ஆகும்படி அழைப்பதற்காக, அவனுடைய சென்று போன, வரப் போகிற வாழ்க்கை அனைத்திற்குமாக, செல்காஷுடன் ஒப்பிடும்போது இளம் பாலகனான இவன்,எதன் மதிப்பை அறிய மாட்டானோ, எது இவனுக்குத் தேவையும் இல்லையோ அந்த விடுதலையை விரும்புவதற்காக. எவனை நாம் நம்மைவிட மோசமானவன், தாழ்ந்தவன் என்று எண்ணுகிறோமோ அவன் நாம் விரும்புவதை விரும்புகிறான், வெறுப்பதை வெறுக்கிறான், இவ்வாறு நமக்கு ஒப்பாகி விடுகிறான் என்பதைக் காண்பது எப்போதும் மகிழ்ச்சியற்றது.

இளைஞன் செல்காஷை நோக்கி அவன் தனக்கு எசமானன் என உணர்ந்தான்.

''நான் ஒன்றும்... மாட்டேன் என்கவில்லையே...'' என்று பேச்சைத் தொடங்கினான். ''வேலை கிடைக்காதா என்று தானே தேடிக் கொண்டிருக்கிறேன். உன்னிடமோ, வேறு ஒருவனிடமோ, யாரிடம் வேலை செய்தாலும் எனக்கு ஒன்றுதான். நான் எதற்காகச் சொன்னேன் என்றால் நீ வேலை செய்யும் ஆள் மாதிரி இல்லை — ஒரே... கந்தலாண்டியாக இருக்கிறாய் என்பதற்காக. இது எல்லோருக்கும் ஏற்படக் கூடியதுதான் என்பது எனக்குத் தெரியும். அட கடவுளே, குடிகாரர்களை நான் முன்பு கண்டதில்லையா என்ன? அடேயப்பா, எத்தனை பேரைப் பார்த்திருக்கிறேன்!.. அதுவும் உன்னைவிடப்படு மோசமானவர்களை.''

''சரி, சரி, விடு! சம்மதமா?'' என்று மென்மையாக மறுபடி கேட்டான் செல்காஷ்.

''எனக்கா? சம்மதம்... தாராளமாக. கூலியைப் பேசு.''

''கூலி வேலைக்குத் தக்கபடிக் கொடுப்பேன். எந்த மாதிரி வேலை என்பதைப் பொறுத்து. அதாவது பிடிபடுவது எந்த மாதிரி மீன் என்பதைப் பொறுத்து... ஐந்து ரூபிள் போல உனக்கு, புரிந்ததா?''

ஆனால் இப்போது விஷயம் பணத்தைப் பற்றியதாக இருந்தது. இதில் விவசாயி துல்லியமாக இருக்க விரும்பினான். வேலை கொடுப்பவனிடமும் அதே துல்லியத்தை எதிர்பார்த்தான். நம்பிக்கையின்மையும் சந்தேகமும் இளைஞனுக்கு மீண்டும் உண்டாயின.

''இது எனக்குக் கட்டி வராது, அண்ணே!''

செல்காஷ் பாத்திரத்துக்கு ஏற்ப நடித்தான்:

''பேசாதே, பொறு! சாப்பாட்டு விடுதிக்குப் போவோம் வா!''

அவர்கள் அக்கம் பக்கமாகத் தெருவில் நடந்தார்கள். செல்காஷ் எஜமானனுக்குரிய மிடுக்கான தோற்றத்துடன், மீசையை முறுக்கிக் கொண்டும் இளைஞன் கீழ்ப்படிய முற்றும் ஆயத்தமாய் இருக்கும் முக பாவத்துடனும் அதே சமயம் நம்பிக்கையின்மையும் அச்சமும் நிறைந்தவனாகவும்.

''உன் பெயர் என்ன?'' என்று கேட்டான் செல்காஷ்.

''கவ்ரீலா!'' என்று பதில் சொன்னான் இளைஞன்.

அழுக்கடைந்து புகை படிந்த சாப்பாட்டு விடுதிக்கு அவர்கள் வந்ததும் செல்காஷ் கடைக்காரனிடம் போய் வாடிக்கைக்காரனுக்குரிய பழக்கமான தோரணையில் ஒரு புட்டி வோத்காவும் முட்டைக்கோசு சூப்பும் இறைச்சிப் பொரியலும் தேநீரும் கொடுக்கும்படிக் கூறி, வேண்டியதை வரிசைப் படுத்திச் சொன்ன பிறகு ''எல்லாம் பற்று எழுதிக் கொள்!'' என்று சுருக்கமாகக் குறிப்பிட்டான். கடைக்காரன் அதற்கு மௌனமாகத் தலையாட்டினான். போக்கிரியாகத் தோற்றம் அளித்தாலும் தன் எஜமானன் இவ்வளவு பிரபலமாகவும் நம்பிக்கைக்கு உரியவனாகவும் இருப்பதைக் கண்ட கவ்ரீலாவுக்கு அவன் மேல் திடீரென்று மட்டற்ற மரியாதை உண்டாகிவிட்டது.

''நல்லது, இதோ நாம் சாப்பிடுவோம், விவரமாகப் பேசுவோம். இப்போதைக்கு நீ உட்கார்ந்திரு, நான் சில இடங்களுக்குப் போய் விட்டு வருகிறேன்.''

செல்காஷ் போய் விட்டான். கவ்ரீலா சுற்றிலும் நோட்டமிட்டான். சாப்பாட்டு விடுதி நிலவறையில் இருந்தது. ஈரிப்பும் இருட்டும் அதில் அடைந்திருந்தன. மட்டு மீறிச் சூடேறிய வோத்கா, சிகரெட்டுப் புகை, கீல் ஆகியவற்றின் மூச்சு திணறச் செய்யும் நாற்றத்தாலும் வேறு ஏதோ

சுள்ளென்ற நெடியாலும் அது முழுவதும் நிறைந்திருந்தது. கவ்ரீலாவுக்கு எதிரே, வேறு மேஜையருகே உட்கார்ந்திருந்தான் ஒரு குடிகாரன். செம்பட்டைத் தாடி வைத்திருந்த அந்த ஆள் மாலுமி உடுப்பு அணிந்திருந்தான். நிலக்கரித் தூளும் கீலும் அவன் மேலெல்லாம் படிந்திருந்தன. ஓயாமல் விக்கியவாறு ஒரு பாட்டை முனகிக் கொண்டிருந்தான் அவன். பாட்டின் சொற்களைக் குழப்பியும் சிதைத்தும், சில வேளைகளில் பயங்கரச் சீறலாகவும் வேறு வேளைகளில் அடித் தொண்டையிலிருந்தும் ஒலித்தான். அவன் ருஷ்யன் அல்லாதவன் போலும்.

அவனுக்குப் பின்னே இரண்டு மல்தாவியப் பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள். கந்தல் உடைகள் அணிந்து கருங் கூந்தலும் பழுப்பேறிய முகங்களும் கொண்டிருந்த அவர்களும் குடிவெறிக் குரல்களில் பாட்டைக் கிரீச்சிட்டுக் கொண்டிருந்தார்கள்.

பிறகு இருட்டிலிருந்து வெளிப்பட்டன இன்னும் பல வித உருவங்கள். எல்லாம் விந்தையான முறையில் அலங்கோலத் தோற்றம் அளித்தன, எல்லாம் அரைக் குடி வெறியில் இருந்தன, கூச்சலிட்டன, அமைதி இன்றிக் குமைந்தன...

கவ்ரீலாவுக்கு அச்சம் ஏற்பட்டது. எஜமானன் விரைவில் திரும்ப வேண்டும் என்ற விருப்பம் உண்டாயிற்று. சாப்பாட்டு விடுதியில் இரைச்சல் ஒரே குரலாக ஒன்றாயிற்று. ஏதோ ஒரு பிரமாண்டமான விலங்கு உறுமுகிறது என்று தோன்றியது. வெவ்வேறான பல நூறு குரல்கள் கொண்ட இந்த விலங்கு இந்தக் கற்குழியிலிருந்து வெளியேறுவதற்காகச் சீற்றத்துடன் குருட்டுத்தனமாகப் பாய்வது போலவும் வெளியே போக அதற்கு வழி கிடைக்கவில்லை போலவும் பிரமை உண்டாயிற்று... வெறியூட்டுவதும் கனத்ததுமான ஒன்று தன் உடலில் உறிஞ்சப்படுவது போலவும் அதனால் தன் தலை கிறுகிறுப்பது போலவும், ஆவலுடனும் அச்சத்துடனும் விடுதியைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த கண்கள் இருள் அடைவது போலவும் கவ்ரீலா உணர்ந்தான்...

செல்காஷ் வந்தான். அவர்கள் பேசிக் கொண்டே சாப்பிடவும் குடிக்கவும் தொடங்கினார்கள். மூன்றாவது கிண்ணம் பருகியதும் கவ்ரீலாவுக்கு வெறி ஏறிவிட்டது. அவனுக்குக் களிப்பு உண்டாயிற்று. தனக்கு இவ்வளவு ருசியான சாப்பாடு

போட்ட எஜமானனுக்கு—அருமையான மனிதன்!—இனிய சொற்கள் எவற்றையேனும் கூற ஆசைப்பட்டான். ஆனால் அலை அலையாகத் தொண்டையில் பெருகிய சொற்கள் எதனாலோ நாக்கில் ஏற மறுத்து விட்டன. நாக்கோ திடீரென்று கனமாகி விட்டது.

செல்காஷ் அவனை நோக்கிக் கேலிப் புன்னகை செய்து, "வெறி கொண்டு விட்டாயா? ஐந்தாவது கிண்ணத் துக்குள்?.. வெறும் கூழ் குடிக்கி! எப்படி வேலை செய்யப் போகிறாயாம்?" என்றான்.

"நண்பா!.." என்று குதலையாகக் குழற்றினான் கவ்ரீலா. "பயப்படாதே! நீ சொல்வதைச் செய்கிறேன்! இதோ உன்னை முத்தம் இடுகிறேன்!.. ஊம்?"

"டேய், டேய்!.. இந்தா, இன்னும் குடி!"

கவ்ரீலா குடித்தான். முடிவில் எல்லாம் ஒரு சீரான அலைகள் போன்ற இயக்கத்துடன் அசைந்தாடுவது போல அவனுக்குத் தோன்றலாயின. இந்த ஆட்டம் அவனுக்கு உவப்பாய் இல்லை. இதனால் குமட்டல் எடுத்தது. அசட்டுப் பேரின்பத் தோற்றம் அவன் முகத்தில் வந்து விட்டது. ஏதோ சொல்ல முயன்றவன் வேடிக்கையாக உதடுகளைச் சப்பு கொட்டி மம்மம்மா என்று மாடு போலக் கத்தினான். அவனை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த செல்காஷ் எதையோ நினைவுபடுத்திக் கொண்டவன் போல மீசையை முறுக்கிய வாறு புருவங்களைச் சுரித்து ஓயாமல் புன்னகை செய்து கொண் டிருந்தான்.

சாப்பாட்டு விடுதியோ, குடி வெறிக் கூச்சலில் இரைந்து கொண்டிருந்தது. செம்பட்டைத் தலை மாலுமி மேஜை மீது முழங்கைகளை ஊன்றியவாறு உறக்கத்தில் ஆழ்ந்திருந்தான்.

செல்காஷ் எழுந்து, "வா அப்பா, போவோம்!" என்றான்.

கவ்ரீலா எழுந்திருக்கப் பார்த்தான், ஆனால் அவனால் முடியவில்லை. கடுமையாகத் திட்டி, குடி மயக்கத்தில் இருப் பவனுக்கு இயல்பான அர்த்தமற்ற சிரிப்புச் சிரித்தான்.

செல்காஷ் அவனுக்கு எதிரே மறுபடி நாற்காலியில் உட்கார்ந்து, "மயங்கி விட்டான்!" என்று சொல்லிக் கொண்டான்.

கவ்ரீலா மந்தித்த விழிகளால் எஜமானனை நோக்கியவாறு விடாமல் சிரித்துக் கொண்டு போனான். எஜமானனோ,

அவனே உறுத்தும் கூர்மையாகவும் சிந்தனையுடனும் பார்வை யிட்டான். எவனுடைய வாழ்க்கை தன் ஓநாய்ப் பிடியில் சிக்கிக் கொண்டு விட்டதோ அந்த மனிதனைச் செல்காஷ் தன் எதிரே கண்டான். அதை இப்படியும் அப்படியும் திருப்பத் தன்னால் முடியும் என்று அவன் உணர்ந்தான். இதை ஒடிக்க அவனால் முடியும். அதே போல, உறுதியான விவசாயத் தில் நிலைபெற அதற்கு உதவவும் அவனால் முடியும். மற்ற வனுக்குத் தான் எஜமானன் என்று உணர்ந்த செல்காஷ் விதிவசத்தால் தான் பட நேர்ந்த பல வகையான துன்பங் களை இந்த இளைஞன் ஒருபோதும் பட மாட்டான் என்று நினைத்துக் கொண்டான். இந்த இளைஞனுடைய வாழ்க்கை மீது அவன் பொறாமையும் பரிவும் கொண்டதோடு அதை எள்ளி நகையாடவும் தன்னுடையவை போன்ற கைகளில் அது இன்னொரு தடவை சிக்கிக் கொள்ளலாம் என்று எண்ணி அதற்காக வருத்தப்படவும் கூடச் செய்தான்... செல்காஷின் எல்லா உணர்வுகளும் முடிவில் தகப்பனுக்கும் எஜமானனுக்கும் உரிய ஒரு வகை உணர்வில் கலந்து ஒன்றாகி விட்டன. சிறுவன் மேல் இரக்கம் உண்டாயிற்று, சிறுவன் தேவையாக வும் இருந்தான். அப்போது செல்காஷ் கவ்ரீலாவைக் கக்கத் தில் கை கொடுத்துத் தூக்கி, பின்னாலிருந்து முழங்காலினால் லேசாக இடித்துச் சாப்பாட்டு விடுதி முகப்புக்கு இட்டு வந்து விறகுக் கட்டைக் குவியலின் நிழலில் தரையில் படுக்கப் போட்டு, தானும் அவன் அருகே உட்கார்ந்து சுங்கான் புகைக்கலானான். கவ்ரீலா சற்று புரண்டான், முனகினான், பின்பு உறங்கி விட்டான்.

2

''என்ன, தயாரா?'' என்று துடுப்புகளைப் பொருத்திக் கொண்டிருந்த கவ்ரீலாவிடம் தணிந்த குரலில் கேட்டான் செல்காஷ்.

''இதோ! துடுப்புக் கொண்டி லேசாக ஆடுகிறது. துடுப்பால் ஒரு அடி அடிக்கலாமா?''

''கூடாது! சத்தமே உதவாது! கைகளால் அதை வலிவாக அழுத்து. அது இடத்தில் சரியாகப் பொருந்திக் கொள்ளும்.''

ஒக் மரப் பலகைகள் நிறைத்த பாய்மரக் கப்பல்கள், ஈச்ச மரங்களும் சந்தனக் கட்டைகளும், சைப்ரஸ் மரத் துண்டுகளும் ஏற்றிய பெரிய துருக்கிய மரக்கலங்கள் ஆகியவற்றின் வரிசைகள் நிறுத்தப்பட்டிருந்தன. இந்த மரக்கலங்கள் ஒன்ருேடு இணைக்கப்பட்டிருந்த படகை இருவரும் ஆயத்தம் செய்தார்கள்.

இரவு இருண்டிருந்தது. பரட்டை மேகங்களின் கனத்த படலங்கள் வானத்தில் மிதந்தன. கடல் அமைதியாகவும் கருமையாகவும் எண்ணெய் போன்று கெட்டியாகவும் இருந்தது. ஈரித்த உவர் மணம் அதிலிருந்து வீசியது. செல்காஷின் படகைச் சிறிது அசைத்தவாறு, கப்பல்களின் பக்கங்களிலும் கரையிலும் மோதிக் கொஞ்சலாக ஒலித்தது கடல். கரைக்கு வெகு தொலைவில் இருந்த கடற் பரப்பிலிருந்து மேலெழுந்தன கப்பல்களின் கரிய உடல்கள். உச்சியில் பல நிற விளக்கு களுடன் அவற்றின் கூரிய பாய்மரங்கள் வானைத் துளைத்தன. விளக்குகளின் ஒளிகளைக் கடல் பிரதிபலித்தது. அவை மஞ்சள் கறைகள் போன்று அதில் அடை அடையாகச் சிதறி இருந்தன. மென்மையான, மங்கிய கரு நிற வெல்வெட் நீர்ப் பரப்பில் அவை அழகாகத் துடித்தன. பகல் முழுதும் கடுமையாக உழைத்துக் களைத்துப் போன தொழிலாளன் போல ஆரோக்கியம் நிறைந்த அயர்ந்த தூக்கத்தில் ஆழ்ந்திருந்தது கடல்.

கவ்ரீலா துடுப்புகளை நீரில் ஆழ்த்தி, ''போவோம்!'' என்ருன்.

''நல்லது!''—செல்காஷ் சுக்கானை விசையாகத் திருப்பிப் படகைப் பாய்மரக் கப்பல்களின் இடையே நீரில் தள்ளினுன். அது நீரில் வழுகி விரைவாகச் சென்றது. துடுப்பின் அடிகளால் நீர் பாஸ்வர இள நீல வண்ணத்தில் ஒளிர்ந்தது. படகின் பின்புறம் நீண்ட நீர்ப் பட்டை மென்மையாகப் பளிச்சிட்டவாறு வளைந்து சென்றது.

''என்ன, தலை எப்படி இருக்கிறது? வலிக்கிறதோ?'' என்று கனிவாகக் கேட்டான் செல்காஷ்.

''பயங்கரமாக!.. இரும்புக் கொதிகலம் போலக் கண கணக்கிறது...இதோ தண்ணீரால் நனைத்துக் கொள்கிறேன்.''

''எதற்காக? இதோ பார். நீ வயிற்றை உள்ளாலே நனைத்துக் கொள். ஒரு வேளை சீக்கிரமாகச் சுதாரித்துக்

கொள்வாய்...'' இவ்வாறு கூறி வோத்கா புட்டியை கவ்ரீலா விடம் நீட்டினுன் செல்காஷ்.

''ஓகோ, அப்படியா? ஆண்டவா, அருள் செய்!..''

தணிந்த களகளப்புச் சத்தம் கேட்டது.

''உன்னைத்தானே, டேய்! சந்தோஷம் உண்டாயிற்ரு?.. போதும்!'' என்று அவனை நிறுத்திஞன் செல்காஷ்.

கப்பல்களின் நடுவே ஓசை இல்லாமலும் அனுயாசமாக வும் வளைந்து நெளிந்தவாறு படகு மீண்டும் விரைந்தது. திடீரென்று அது அவற்றின் கூட்டத்திலிருந்து பிய்த்துக் கொண்டு முன்னேறியது. எல்லையற்ற, விறல் மிக்க கடல் அவர் களுக்கு எதிரே அகன்று விரிந்து நீலத் தொடுவானத்திற்குள் சென்றது. அங்கே அதன் நீரிலிருந்து வானகத்தில் எழும்பின முகில் மலைகள். ஊதாவும் மங்கிய நீல நிறமும் கொண்டவை, விளிம்புகளில் மஞ்சள் தூவிக் கரையிட்டவை, பசிய நிறம் உள்ளவை, கடல் நீரின் நிறம் வாய்ந்தவை, மற்றும் பெருந் துயர் ததும்பும் கனத்த நிழல்களைத் தோற்றுவிக்கும் சலிப்பூட்டும் காரீய நிற முகில்கள் ஆகியவை இவற்றில் இருந்தன. சில வேளைகளில் ஒன்ருகச் சேர்ந்தும் வேறு வேளை களில் ஒன்றை ஒன்று முந்திக் கொண்டும் மேகங்கள் மெது வாக ஊர்ந்தன, தங்கள் வண்ணங்களையும் வடிவங்களையும் கலந்தன, தங்களைத் தாங்களே விழுங்குவதும் மீண்டும் புதிய வரையுருவங்களில் வெளிப்படுவதுமாக மாட்சியும் துயரத் தோற்றமும் ஒருங்கே கொண்டு இயங்கின...உயிரற்ற பிழம்பு களின் இந்த மெதுவான இயக்கத்தில் ஊழின் தன்மை வாய்ந்த ஒரு பண்பு இருந்தது. அங்கே, கடலின் விளிம்பில், அவை அளவு கடந்து நிறைய இருப்பதாகவும் உறங்கும் கடல் மீது தனது பொன்னிறமான பல் கோடிக் கண்களால் —விதம் விதமான நிறங்கள் கொண்டவையும் உயிரோட்டம் உள்ளவையும் தங்கள் தூய ஒளியை மதிக்கும் மனிதர்களின் உள்ளங்களில் உயர் விருப்பங்களைத் தூண்டியவாறு சுடர் பவையுமான நட்சத்திரங்களால்—வானம் இனி ஒரு போதும் பிரகாசிக்க விடாதவாறு தடுக்கும் தீய நோக்கத்தால் உந்தப்பட்டு அவை எப்போதும் இதே அசட்டையுடன் வானில் ஊர்ந்து கொண்டிருக்கும் என்றும் தோன்றியது.

''கடல் நன்ருய் இருக்கிறதா?'' என்று கேட்டான் செல் காஷ்.

''பரவாயில்லை! ஆனால் பயமாய் இருக்கிறது'' என்று துடுப்புகளால் ஒரு சீராகவும் வலிவாகவும் நீரை அடித்த வாறு பதிலளித்தான் கவ்ரீலா. நீண்ட துடுப்புகளின் அடிகளால் தண்ணீர் சற்றே காதில் படும்படிக் கணகணத்துச் சளப்பிட்டு பாஸ்வரத்தின் இதமான இளநீல வண்ணத்தில் இடையறாது ஒளிர்ந்தது.

''பயமாய் இருக்கிறதா? சரியான மடமட்டிப் பயல் நீ!..'' என்று கேலி செய்து முணுமுணுத்தான் செல்காஷ்.

திருடனை அவன் கடலை விரும்பினான். சோர்வின்மையும் துடி துடிப்பும் உள்ள அவனுடைய இயல்பு உளப் பதிவுகளை ஆர்வத்துடன் நாடிற்று. எல்லையற்றதும், சுதந்திரமானதும் விறல் மிக்கதுமான இந்தக் கரும் பரப்பில் நெஞ்சு செலுத்தி அதைப் பற்றிய சிந்தனையில் ஈடுபட்டிருப்பதற்கு அது அலுப் பதே இல்லை. தான் அன்பு கொண்டிருந்த ஒன்றின் அழகைப் பற்றிய கேள்விக்கு இந்த மாதிரி விடையைக் கேட்டு அவன் மனம் புண்பட்டது. படகின் பின் பகுதியில் உட்கார்ந்து சுக்கானால் தண்ணீரை வகிர்ந்தவாறு அவன் அமைதியாக முன்னே பார்வை செலுத்தினான். மழமழப்பான இந்த வெல் வெட் பரப்பில் நெடுநேரம் நெடுந் தொலை செல்லும் விருப்பம் அவனுள் நிறைந்தது.

கடல் மீது செல்கையில் விசாலமான, நலம் வாய்ந்த உணர்வு அவன் உள்ளத்தில் எப்போதும் எழும். உள்ளம் முழுவதையும் ஆட்கொண்டு வாழ்க்கையில் எதிர்ப்படும் கீழ் மையிலிருந்து அதை ஓரளவு துப்புரவாக்கும் இந்த உணர்வு. இந்த உணர்வை அவன் மதித்தான். நீருக்கும் காற்றுக்கும் இடையே வாழ்க்கை பற்றிய சிந்தனைகள் தங்கள் கூர்மையை யும் வாழ்க்கை தனது மதிப்பையும் எப்போதும் இழந்து விடும். இங்கே தன்னை மேலானவனாகக் காண்பது அவனுக்குப் பிடித்தது. இரவுகளில் கடலினது உறக்க மூச்சின் மெல் லோசை அதற்கு மேலே சீராகப் பரவும். எல்லையற்ற இந்த ஒலி மனிதனது உள்ளத்தில் அமைதியைப் பெருக்கி, அதன் தீய கிளர்ச்சிகளை அடக்கி, மாட்சிமிக்க கனவுகளை அதில் தோற்றுவிக்கும்...

''ஆமாம், மீன் பிடிப்புச் சாதனங்கள் எங்கே?'' என்று படகைக் கவலையுடன் நோட்டமிட்டவாறு திடீரெனக் கேட் டான் கவ்ரீலா.

செல்காஷ் திடுக்கிட்டான்.

''சாதனங்களா? படகின் பின் பகுதியில். என்னிடம் இருக்கின்றன.''

ஆனால் இந்தச் சிறுவனிடம் பொய் சொன்னதால் அவனுடைய மனம் புண் பட்டது. இந்தப் பையன் தன் கேள்வியால் அழித்துவிட்ட எண்ணங்களையும் உணர்வுகளையும் குறித்து அவனுக்கு வருத்தம் உண்டாயிற்று. அவன் கோபம் கொண்டான். நெஞ்சிலும் தொண்டையிலும் அவனுக்குப் பழக்கமான எரிச்சல் அவனை அழுற்றியது. கவ்ரீலாவின் மனத்தில் தைக்கும்படிக் கடுமையாகச் சொன்னான்:

''இதோ பார், உட்கார்ந்திரு, வெறுமே! உனக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களில் தலையிடாதே. துடுப்பு வலிப்பதற்காக உன்னை அமர்த்தி இருக்கிறது, ஆகவே துடுப்பு தள்ளு. வீணாகச் சளசளத்தாயோ, உனக்குக் கெடுதல். புரிந்ததா?..''

படகு ஒரு நிமிடம் திடுக்கிட்டு நின்று விட்டது. துடுப்புகள் நீரில் நுரை எழுப்பியவாறு கிடந்தன. கவ்ரீலா பெஞ்சியில் இருப்பு கொள்ளாமல் தவித்தான்.

''போடு துடுப்பு!''

கடுமையான வசவு காற்றில் அதிர்ச்சி ஏற்படுத்தியது. கவ்ரீலா துடுப்புகளைத் துடியாகப் போட்டான். படகு பயந்து விட்டது போலப் பதற்றத்துடன் எம்பிக் குதித்தவாறு ஓசையுடன் நீரைக் கிழித்துக் கொண்டு விரைவாகச் சென்றது.

''ஒரு சீராக!''

செல்காஷ் துடுப்புகளைக் கைகளிலிருந்து விடாமல் பின் பகுதியிலிருந்து எழுந்து கவ்ரீலாவின் வெளிறிய முகத்தில் கடுத்த பார்வையைச் செலுத்தினான். முன்னே சாய்ந்து குனிந்த நிலையில் அவன் பாயத் தயாராயிருக்கும் பூனை போன்று தோற்றமளித்தான். பற்கள் நெறுநெறுப்பதும் எலும்புகள் தயக்கத்துடன் நொடிப்பதும் கேட்டன.

''சத்தம் போடுவது யார்?'' என்ற கடுமையான அதட்டல் கடலிலிருந்து வந்தது.

''டேய், சாத்தான், துடுப்பு தள்ளேன்!.. மூச்!.. கொன்று விடுவேன், நாய்ப்பயலே!.. ஊம், போடு துடுப்பு!.. ஒன்று, இரண்டு! குரலை மட்டும் கிளப்பினாயோ, பிய்த்துப் போட்டு விடுவேன், பிய்த்து!..'' என்று சீறினான் செல்காஷ்.

கவ்ரீலா அச்சத்தாலும் கடும் உழைப்பாலும் களைத்துச் சோர்ந்து நடுங்கியவாறு, ''தாயே மரியம்மா... கன்னித் தேவி...'' என்று கிசுகிசுத்தான்.

படகு சீராகத் திரும்பிக் கப்பல் துறையை நோக்கிச் சென்றது. அங்கே விளக்குகள் பல வண்ணக் கும்பலாகக் குழுமியிருந்தன, பாய்மரக் கம்பங்கள் தென்பட்டன.

''ஏய்! கூச்சல் போடுவது யார்?'' என்ற அதட்டல் மீண்டும் கேட்டது.

இம்முறை குரல் முதல் தடவையைக் காட்டிலும் தொலைவில் ஒலித்தது. செல்காஷ் அமைதி அடைந்தான்.

''நீயேதான் கூப்பாடு போடுகிறாய்!'' என்று கூச்சல்கள் வந்த திக்கை நோக்கிக் கூறிவிட்டு, இன்னும் துதியை முணு முணுத்துக் கொண்டிருந்த கவ்ரீலாவிடம் சொன்னான்:

''இந்தா தம்பீ, உன் அதிர்ஷ்டம்! இந்தப் பேய் மக்கள் நம்மை விரட்டிக் கொண்டு வந்திருந்தால் நீ தொலைந் திருப்பாய். புரிந்ததா? நான் அக்கணமே உன்னை மீன்களுக்கு இரையாக்கி இருப்பேன்!..''

செல்காஷ் இப்போது அமைதியாகவும் நல்லியல்புடனும் கூடப் பேசவே, அச்சத்தால் இன்னமும் நடுங்கிக் கொண் டிருந்த கவ்ரீலா கெஞ்சினான்:

''கேளு, என்னைப் போக விடு! கிறிஸ்துவின் பெயரால் கேட்டுக் கொள்கிறேன், விட்டுவிடு! எங்கேயாவது இறக்கி விடு! ஐயையோ! நான் ஒரே மட்டாக ஒழிந்தேன்!.. ஊம், கடவுளை நினைத்துக்கொள், விட்டுவிடு! நான் உனக்கு எதற்கு? என்னால் இது முடியாது!.. இந்த மாதிரி விவகாரங்களில் நான் பங்கு கொண்டதில்லை... இதுதான் முதல் தடவை... ஆண்டவனே! நான் நசித்துப் போவேனே!.. எப்படி அண்ணே நீ என்னை மாட்டி விட்டாய்? ஊம்? உனக்குப் பாவம்!.. ஆன்மாவை அல்லவா பாழாக்குகிறாய்!.. நல்ல விவகாரந்தான் போ!..''

''என்ன விவகாரம்?'' என்று கடுமையாகக் கேட்டான் செல்காஷ். ''ஊம்? சொல்லு, என்ன விவகாரம்?''

இளைஞனின் திகில் அவனுக்குக் களிப்பூட்டியது. கவ்ரீலா வின் அச்சத்தையும் தான், செல்காஷ், எவ்வளவு பயங்கர மானவன் என்பதையும் அவன் இன்பமாக ரசித்தான்.

''மோசமான விவகாரம், அண்ணே... ஆண்டவனுக்காக

என்னை விட்டு விடு!.. நான் உனக்கு எதற்கு?.. ஊம், அருமை அண்ணே...''

''சும்மா இரு! நீ தேவையாய் இல்லாவிட்டால் உன்னை அமர்த்தி இருக்க மாட்டேன், புரிந்ததா? ஆகவே பேசாதிரு!''

''கடவுளே!'' என்று பெரு மூச்செறிந்தான் கவ்ரீலா.

''இந்தா, முறைக்கிருயா என்னிடம்!'' என்று அவனை இடை மறித்தான் செல்காஷ்.

ஆனால் கவ்ரீலாவால் மேற்கொண்டு அடக்க முடியவில்லை. அவன் தணிவாகத் தேம்பியவாறு அழுதான், மூக்கைச் சிந்திஞன், இருப்பு கொள்ளாமல் தவித்தான், ஆனாலும் வலிவாக,புகலின்றித் துடுப்பு தள்ளிஞன்.படகு அம்பு போலப் பாய்ந்தது. மறுபடியும் வழியில் நின்றன கப்பல்களின் இருண்ட உடல்கள். படகு அவற்றின் இடையே இருந்த குறுகிய நீர் வழிகளில் பம்பரமாய்ச் சுழன்றவாறு அவற்றில் மறைந்து விட்டது.

''இந்தா, டேய்! உயிர் பிழைக்க விரும்பிஞல் யார் என்ன கேட்டாலும் வாயே திறக்காதே. புரிந்ததா?''

''புரிந்தது!'' என்று இந்தக் கண்டிப்பான கட்டளைக்கு விடையளித்துப் பெருமூச்சு விட்டான் கவ்ரீலா. பின்பு ''அட என் பாழும் விதியே!..'' என்று கைப்புடன் கூறிஞன்.

''தொனதொனக்காதே!'' என்று கட்டளையிடும் தோரணையில் கிசுகிசுத்தான் செல்காஷ்.

இந்தக் கிசுகிசுப்பைக் கேட்ட கவ்ரீலா எதையும் புரிந்து கொள்ளும் திறனை இழந்து விபத்து நேரப் போகிறது என்ற கடும் முன்னுணர்வால் ஆட்கொள்ளப்பட்டுக் குற்றுயிராகி விட்டான். துடுப்புகளை நீரில் ஆழ்த்துவதும் பின்னே தள்ளுவதும் வெளியே எடுப்பதும் மறுபடி போடுவதுமாக இயந்திர கதியில் இயங்கியவாறு தன் மரவுரிச் சோடுகளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அலைகளின் உறக்கத்தில் ஆழ்ந்த ஓசை கடுகடுப்புடன் ஒலித்தது, அச்சம் ஊட்டியது. இதோ கப்பல் துறை... அதன் கருங்கல் சுவருக்கு மறு புறம் ஆட்களின் குரல்களும் நீரின் சளப்பொலியும் பாட்டுக்களும் மெல்லிய சீழ்க்கைகளும் கேட்டன.

''நிறுத்து!'' என்று கிசுகிசுத்தான் செல்காஷ். ''துடுப்புகளை வைத்து விட்டுக் கைகளைச் சுவற்றில் ஊன்றிக் கொள்! சந்தடி இல்லாமல், சாத்தான்!..''



வழுக்குக் கல்லைப் பற்றியவாறு படகைச் சுவரோரமாகக் கொண்டுவந்தான் கவ்ரீலா. படகு கல்மேல் படர்ந்த பாசி மீது வழுகியபடி உராய்வு ஓசை இன்றி நகர்ந்தது.

''நில்லு!.. துடுப்புகளைக் கொடு! என்னிடம் கொடு! உன் பாஸ்போர்ட்டு எங்கே? பயணப்பையில் இருக்கிறதா? இப்படிக் கொடு பயணப்பையை! ஊம், சீக்கிரம்! இந்த ஏற்பாடு, அருமைத் தம்பீ! நீ ஓடி விடாமல் இருப்பதற்காக... இப்போது ஓட மாட்டாய். துடுப்புகள் இல்லாமல் நீ எப்படியாவது கம்பி நீட்டி இருக்க முடியும். பாஸ்போர்ட்டு இல்லாமல் நழுவப் பயப்படுவாய். காத்திரு! அப்புறம், சொல்லிவிட்டேன், நீ மட்டும் குரலைக் கிளப்பினாயோ, கடல் அடியிலே சமாதி வைத்து விடுவேன், ஜாக்கிரதை!''

பின்பு செல்காஷ் கைகளால் எதையோ பற்றிக் கொண்டு காற்றில் எழும்பிச் சுவர் மேல் மறைந்து விட்டான்.

கவ்ரீலா திடுக்கிட்டான்... இது அவ்வளவு விரைவாக நிகழ்ந்து விட்டது. ஒடிசலான உடம்பு உள்ள இந்த மீசைக்காரத் திருடன்முன் தான் உணர்ந்த அவலச் சுமையும் திகிலும் தன்னிடமிருந்து அகன்று நகர்வதை அவன் உணர்ந்தான்... இப்போது தப்பி ஓடினால் நல்லது!.. அவன் தாராளமாகப் பெருமூச்சு விட்டுச் சுற்றிலும் பார்வை செலுத்தினான். இடப்புறம் பாய்மரம் இல்லாத கப்பலின் கரிய வரையுரு தென்பட்டது. மிகப் பெரிய சவப்பெட்டி போன்ற அது ஆளின்றி வெறுமையாய் இருந்தது... அதன் விலாவில் அலைகளின் ஒவ்வோர் அடியும் துயரப் பெருமூச்சு போன்ற ஆழ்ந்த அதிர்வுள்ள எதிரொலியை எழுப்பியது. வலப்புறம் அலைதாங்கியின் ஈரக் கற்சுவர் உணர்வற்ற கனத்த பாம்பு போலத் தண்ணீருக்கு மேலே நெடுகச் சென்றிருந்தது. பின் புறமும் கப்பல்களின் கரிய உடல்கள் தென்பட்டன, முன்னே, சுவற்றுக்கும் இந்தச் சவப்பெட்டிக்கும் நடுவில் இருந்த திறப்பில் கடலைப் பார்க்க முடிந்தது. அது மௌனமாகவும் வெறுமையாகவும் இருந்தது. அதற்கு உயரே கரு முகில்கள் மிதந்தன. இருளிலிருந்து பயங்கரத்தைப் பரப்பிய பிரமாண்டமான, கனத்த முகில்கள் தங்கள் கனத்தால் மனிதனை நசுக்கத் தயாராய் மெதுவாக ஊர்ந்தன. எல்லாமே குளிரும் கருமையும் தீமையும் நிறைந்திருந்தன. கவ்ரீலாவுக்கு அச்சம் உண்டாயிற்று. செல்காஷ் ஏற்படுத்திய திகிலைக் காட்டிலும்

மோசமாய் இருந்தது இந்த அச்சம். இது கவ்ரீலாவின் நெஞ்சை இறுகப் பிடித்து நசுக்கிப் பேடிமையுள்ள கட்டி யாக்கிப் படகின் பெஞ்சுடன் பிணித்து விட்டது...

சுற்றிலும் எல்லாம் மௌனமாய் இருந்தன. கடலின் பெருமூச்சுகள் தவிர வேறு ஒலிகளே இல்லை. முகில்கள் முன் போலவே மெதுவாகவும் சலிப்புடனும் வானத்தில் ஊர்ந்தன. ஆனால் அவை மேலும் மேலும் அதிகமாகக் கடலிலிருந்து எழுந்தன. வானத்தை நோக்கி அதுவும் கடல்தான் என்று எண்ண முடிந்தது. ஆனால் இது உறக்கத்தில் ஆழ்ந்து அமைதி யாகவும் மழமழப்பாகவும் இருந்த வேறொரு கடலுக்கு மேலே கவிழ்த்த கொந்தளிப்புள்ள கடல் என்று தோன்றியது. சுருட்டை நரை முடிகளுடன் கீழே தரை மீது பாய்ந்த அலைகள் போலவும், எங்கிருந்து காற்றினால் இந்த அலைகள் பறிக்கப்பட்டனவோ அந்த அகாதங்கள் போலவும், வெறி, சீற்றம் என்னும் பசிய நுரையால் இன்னும் மூடப்படாத, அப்போதுதான் எழுந்த மேடு போலவும் காட்சி அளித்தன மேகங்கள்.

ஏக்கம் நிறைந்த இந்த நிசப்தமும் அழகும் தன்னை நசுக்கு வது போல உணர்ந்தான் கவ்ரீலா. எஜமானனை விரைவில் காணத் தான் விரும்புவதாக அவனுக்குத் தோன்றியது. எஜமானன் அங்கேயே தங்கி விட்டாலோ?.. நேரம் மெதுவாக ஊர்ந்தது. வானில் முகில்கள் ஊர்ந்ததைக் காட்டிலும் மெதுவாக... நேரம் செல்லச் செல்ல நிசப்தம் மேலும் கொடியதாயிற்று... கடைசியில் அலை தாங்கிச் சுவரின் மறு புறம் சளப்போசையும் சரசரப்பும் கேட்டன. கிசுகிசுப்பு போன்ற ஒன்றும் காதில் பட்டது. கவ்ரீலாவுக்குத் தன் உயிர் இதோ போய்விடும் என்று தோன்றியது...

''டேய்! தூங்குகிறாயா? பிடி!.. ஜாக்கிரதையாக!..'' என்றது செல்காஷின் கம்மிய குரல்.

கன சதுர வடிவான கனத்த பொருள் ஒன்று சுவற் றிலிருந்து இறக்கப்பட்டது. கவ்ரீலா அதை வாங்கிப் படகில் வைத்தான். அதே மாதிரி இன்னும் ஒன்று இறக்கப்பட்டது. பின்பு செல்காஷின் நெடிய உருவம் சுவற்றின் குறுக்காக நீண்டது. துடுப்புகள் எங்கிருந்தோ வந்தன. கவ்ரீலாவின் பயணப்பை அவனுடைய கால்களின் அருகே விழுந்தது. செல் காஷ் மூச்சு இரைக்கப் படகின் பின் பகுதியில் உட்கார்ந்தான்.

கவ்ரீலா அவனைப் பார்த்து மகிழ்ச்சியுடனும் கூச்சத்துடனும் முறுவலித்தான்.

''களைத்துப் போனாயோ?'' என்று கேட்டான்.

''களைத்துத்தான் போனேன், கன்றுக்குட்டீ! எங்கே, துடியாகத் துடுப்பு தள்ளு, பார்ப்போம்! முடிந்த வரை வேகமாகப் படகைச் செலுத்து!.. நன்றாக வேலை செய்திருக்கிறாய், தம்பீ! பாதிக் காரியம் முடிந்து விட்டது. இப்போது பேய்களின் கண்களில் படாமல் வெளியேறிவிட வேண்டியதுதான் பாக்கி. அப்புறம் பணத்தை வாங்கிக் கொண்டு காதலி மாஷாவிடம் போய்ச் சேர். காதலி இருக்கிறாள் அல்லவா உனக்கு? ஏய், பச்சைப் பிள்ளை?''

''இல்லை!'' கவ்ரீலா சக்தி முழுவதையும் ஈடுபடுத்திப் பாடுபட்டான். அவனுடைய மார்பு உலைத் துருத்தி போலவும் கைகள் எஃகு விசைவில்கள் போலவும் இயங்கின. படகுக்கு அடியில் தண்ணீர் இரைந்தது, படகின் பின் இள நீலப் பட்டை அகலம் ஆயிற்று. கவ்ரீலாவின் உடலெங்கும் வியர்வை பெருகிற்று, ஆனாலும் அவன் சக்தி அனைத்தையும் செலுத்தித் தொடர்ந்து துடுப்பு தள்ளினான். அந்த இரவில் இரண்டு தடவை அவ்வளவு பெருத்த திகிலை அனுபவித்த பின் மூன்றாவது தடவையும் அதை அனுபவிக்க இப்போது அவன் அஞ்சினான். இந்தப் பாழும் வேலையைச் சட்டென முடித்து விட்டுத் தரையில் இறங்கி, இந்த ஆள் உண்மையாகவே தன்னைக் கொலை செய்யவோ சிறைக்கு இட்டுச் செல்லவோ முற்படுவதற்குள் இவனிடமிருந்து தப்பி ஓடி விட வேண்டும் என்பது ஒன்றுதான் அவன் விரும்பியது எல்லாம். செல்காஷிடம் எந்த விஷயம் குறித்தும் பேசுவதில்லை, அவன் சொல்லை மறுப்பதில்லை, அவன் இட்ட ஆணைகளை எல்லாம் நிறைவேற்றுவது, அவனிடமிருந்து நல்லபடிக் கட்டவிழ்த்துக் கொள்ள முடிந்தால் நாளையே அற்புத கர்த்தர் நிக்கலாயுக்குப் பிரார்த்தனை செய்விப்பது என்று கவ்ரீலா முடிவு செய்து கொண்டான். ஆர்வம் பொங்கும் பிரார்த்தனை அவன் நெஞ்சிலிருந்து வெடித்துக் கிளம்பத் தயாராய் இருந்தது. ஆயினும் அவன் அடக்கிக் கொண்டான், நீராவி இயந்திரம் போலக் குப்குப்பென்று மூச்சு விட்டான், ஆனால் செல்காஷைக் கீழ் நோக்காகப் பார்த்தவாறு பேசாதிருந்தான்.

உலர்ந்து நீண்டு முன் சாய்ந்திருந்த செல்காஷோ, எங்கோ

பறந்து செல்லத் தயாராய் இருந்த பறவையை நிகர்த்திருந்தான். வல்லூறு விழிகளால் படகுக்கு முன்னே இருட்டில் நோக்கினுன். வேட்டைப் பருந்தினது போன்ற வளைந்த மூக்கை விடைத்தவாறு ஒருகையால் சுக்கான் பிடியை இறுகப் பிடித்துக் கொண்டு மறு கையால் மீசையை முறுக்கினுன். அவனுடைய மெல்லிய உதடுகளை நெளியச் செய்த புன்னகையால் அவனது மீசை துடித்துக் கொண்டிருந்தது. தனது வெற்றி மீதும் தன்மீதும் தன்னுல் ஒரேயடியாகத் திகிலூட்டப்பட்டுத் தன் அடிமையாக மாறி இருந்த இந்த இளைஞன் மேலும் அவன் திருப்தி அடைந்திருந்தான். கவ்ரீலா எவ்வளவு பாடு பட்டு உழைத்துக் கொண்டிருந்தான் என்பதை அவன் கண்டான். அவனுக்கு இரக்கமாய் இருந்தது. இளைஞனை உற்சாகப் படுத்த விருப்பம் உண்டாயிற்று.

''டேய்!'' என்று குறு நகையுடன் தணிந்த குரலில் பேசத் தொடங்கினுன். ''என்ன, ரொம்ப ரொம்பப் பயந்து போய் விட்டாயோ?''

''ப-பரவாயில்லை!..'' என்று பெருமூச்செறிந்து கமறினுன் கவ்ரீலா.

''ஆனுல் இப்போது துடுப்புகளை ரொம்பவும் வீசிப் போட வேண்டியதில்லை நீ! இனி போதும்! இன்னும் ஒரே ஒரு இடத்தைக் கடந்து விட்டால் நல்லது... நீ இளைப்பாறு கொஞ்சம்...''

கவ்ரீலா கீழ்ப்படிவுடன் வேலையை நிறுத்தி விட்டுச் சட்டைக் கையால் முகத்து வேர்வையைத் துடைத்துக் கொண்டு மீண்டும் துடுப்புகளை நீரில் விட்டான்.

''ஊம், ஓசைப்படாமல் துடுப்பு தள்ளு. தண்ணீர் சள சளக்கக் கூடாது. வாயில்களை மட்டுந்தான் கடக்க வேண்டும். ஓசைப்படாமல், சத்தம் இல்லாமல்... இல்லாவிட்டால், தம்பீ, இங்கே ஆட்கள் ஆபத்தானவர்கள்... துப்பாக்கியால் குண்டு சுடக் கூடும் அவர்கள். மண்டையில் அவர்கள் கொடுக்கிற அடியில் உனக்கு ஐயோ என்று சொல்லக்கூட நேரம் இருக்காது.''

இப்போது படகு அனேகமாக ஓசை இல்லாமல் தண்ணீரில் வழுகிச் சென்றது. துடுப்புகளிலிருந்து மட்டும் இளநீல நீர்த் துளிகள் சொட்டின. கடலில் ஆழ்ந்தபோது அவை ஆழ்ந்த இடத்தில் சற்று நேரத்துக்கு இளநீலப் புள்ளியும் தென்பட்டது. இரவு மேலும் மேலும் இருள் அடர்ந்து

சந்தடி அற்றது ஆயிற்று. வானம் இப்போது கொந்தளிக்கும் கடல் போலத் தோற்றம் அளிக்கவில்லை. மேகங்கள் அதில் எங்கும் பரவி ஒரு சீரான கனத்த திரையால் அதை மூடிவிட்டன. இந்தத் திரை நீருக்கு மேலே தாழத் தொங்கி அசையாதிருந்தது. கடலோ முன்னிலும் அதிக அமைதியும் கருமையும் கொண்டு திகழ்ந்தது. வெது வெதுப்பான உவர் மணம் முன்னிலும் கடுமையாக அதிலிருந்து வீசியது. முன்பு தோற்றம் அளித்தது போல அவ்வளவு அகன்றதாக அது காணப்படவில்லை.

''அட, இப்போது மழை பெய்தால் நன்ருய் இருக்கும்!'' என்று கிசுகிசுத்தான் செல்காஷ். ''அப்போது நாம் திரை மறைவில் போலக் கடந்து போய்விடலாம்.''

படகின் இடப் புறமும் வலப் புறமும் கரிய நீரிலிருந்து எழுந்தன எவையோ கட்டிடங்கள். உண்மையில் இவை சரக்குப் படகுகள். அசைவற்றவை, ஏக்கம் ததும்புபவை, கரிய வையுங்கூட. ஒன்றில் விளக்கு அசைந்தது. லாந்தருடன் எவனே நடந்தான். கடல் இவற்றைப் பக்கத்தில் வருடி விண்ணப்பிப்பது போன்று கம்மலாக ஒலித்தது. அவை அதிரும் வரண்ட எதிரொலியால் அதற்குப் பதில் அளித்தன. ஏதோ ஒரு விஷயத்தில் அதற்கு விட்டுக் கொடுக்க விரும்பாமல் அவை சச்சரவிடுவது போல் இருந்தது.

''எல்லைக் காவலர்கள்'' என்று வாய்க்குள் கிசுகிசுத்தான் செல்காஷ்.

சந்தடி செய்யாமல் துடுப்பு வலிக்கும்படி அவன் சொன்ன கணம் முதல் விபத்தை எதிர்பார்க்கும் கடுமையான இறுக்கம் கவ்ரீலாவை மீண்டும் ஆட்கொண்டது. உடல் முழுவதையும் முன்னே, இருளில், சாய்த்தான். தான் வளர்வது போல அவனுக்குத் தோன்றியது. எலும்புகளும் தசை நார்களும் ஊமை வலிவுடன் அவனுக்குள் விரைப்பாக நீண்டன. ஒரே எண்ணத்தால் நிறைந்திருந்த தலை வலித்தது. முதுகுத் தோல் துடித்தது. சிறிய, கூர்மையான, குளிர்ந்த ஊசிகள் கால்களில் துளைத்துப் புகுந்தன. இருட்டில் உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்ததால் கண்கள் நொந்தன. அந்த இருட்டிலிருந்து ஒன்று இதோ எழுந்து ''நில்லுங்கள், திருடர்களா!..'' என்று அதட்டப் போகிறது என அவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

இப்போது செல்காஷ் ''எல்லைக் காவலர்கள்!'' என்று கிசுகிசுத்ததும் கவ்ரீலா திடுக்கிட்டான். கூரிய, பொசுக்கும் எண்ணம் அவனுக்குள் ஊடுருவிச் சென்றது, விரைப்பாக நீட்டப்பட்டிருந்த நரம்புகளைத் தாக்கியது. கூச்சலிடவும் ஆட்களைத் தன்னிடம் உதவிக்கு வரும்படி அழைக்கவும் அவன் விரும்பினான்... வாயை ஏற்கெனவே திறந்து விட்டான், பெஞ்சியில் பாதி நின்று மார்பைப் பின்னே சாய்த்து அதில் நிறையக் காற்றை இழுத்து நிரப்பிக் கொண்டு வாயைத் திறந்தான், ஆனால் திடீரென்று, சாட்டையால் அடித்தது போல பயத்தினால் தாக்குண்டு கண்களை மூடிக் கொண்டு பெஞ்சியிலிருந்து விழுந்தான்.

... படகுக்கு முன்னே, தொலைவில் தொடு வானத்தில் கடலின் கரிய நீரிலிருந்து எழுந்தது பிரமாண்டமான தழல் நீல வாள். அது எழுந்து இரவின் இருட்டைக் கூறுக்கி, கூர் முனையால் வானத்தில் மேகங்களைத் துழாவி, அகன்ற நீலப் பட்டையாகக் கடலின் மார்பில் கிடந்தது. அது கிடந்தது. அதுவரை கண்ணுக்குப் புலப்படாதிருந்த கப்பல்கள் அதன் ஒளிப் பட்டையில் இருளிலிருந்து வெளிப்பட்டன. அவை கரியவை, ஓசை அற்றவை, இரவின் அடர் மூடுபனி போர்த்தவை. புயலின் பெரு விறலால் கடலின் அடித் தளத்துக்கு ஈர்க்கப்பட்டு நெடுநேரம் அங்கே இருந்து விட்டு, கடலில் பிறந்த நெருப்பு வாளின் ஆணைப்படி இப்போது மேலே வந்திருப்பவை போலத் தோற்றம் அளித்தன அவை. வானையும் நீருக்கு மேலே உள்ள எல்லாவற்றையும் காணும் பொருட்டு அவை மேலே வந்திருப்பதாகத் தோன்றியது... அவற்றின் கயிற்று வடங்கள் பாய்மரங்களைத் தழுவியிருந்தன. இந்தக் கரிய அரக்கர்களை வலைகளில் சிக்க வைத்து அவற்றோடு கூடவே அடித் தரையிலிருந்து மேலே வந்துள்ள ஒட்டு நீர்ப் பூண்டுகள் போல அவை தோற்றம் அளித்தன. பயங்கர மான அந்த இள நீல வாள் கடலின் ஆழத்திலிருந்து மீண்டும் மேல் நோக்கி எழுந்தது. ஒளி வீசி எழுந்து மீண்டும் இரவைக் கூறுக்கி வேறு திசையில் மறுபடி கிடந்தது. இப்போது அது கிடந்த இடத்திலும் அது வரும்வரை பார்வைக்குப் புலனாகாதிருந்த கப்பல்களின் உடல்கள் இன்னொரு முறை காட்சி தந்தன.

செல்காஷின் படகு நின்று விளங்காதது போல நீரில்

ஊசலாடியது. கவ்ரீலா கைகளால் முகத்தைப் பொத்திய வாறு படகின் அடியில் கிடந்தான். செல்காஷ் அவனைக் காலால் இடித்து வெறியுடன், ஆனால் தணிவாகக் கிசுகிசுத் தான்:

''மடையா, இது சுங்கத் துறையின் வேவுக் கப்பல்... இது மின்சார டார்ச் விளக்கு! எழுந்திரடா உலக்கைக் கொழுந்து! இதோ நம் மேல் வெளிச்சத்தை வீசுவார்களே!.. பாழாக்கி விடுவாயடா, சாத்தான், உன்னையும் என்னையும்! ஊம்!..''

முடிவில், செல்காஷ் குதிகாலால் கொடுத்த அடிகளில் ஒன்று கவ்ரீலாவின் முதுகில் மற்றவற்றைவிடப் பலமாகத் தாக்கவே அவன் துள்ளி எழுந்து, கண்களைத் திறக்க இன்னும் அஞ்சியவனாக, துடுப்புகளைத் தொட்டுத் தடவிப் பிடித்துக் கொண்டு படகைச் செலுத்தினான்.

''ஓசைப் படுத்தாதே! கொன்று விடுவேன், தெரியுமா? ஊம், சத்தமில்லாமல்!.. சரியான அடி மடையன், உன்னைச் சாத்தான் வாரிக் கொண்டு போக!.. எதைக் கண்டு மிரண்டு விட்டாய்? ஊம்? உம்மணாமூஞ்சி... வெறும் டார்ச் லைட்டு, அவ்வளவேதான். துடுப்புகளை ஓசைப் படுத்தாதே!.. கேடு கெட்ட பேய்ப் பயலே! கள்ளச் சரக்கைக் கண்காணிக்கிறார் கள். நம்மைத் தொட மாட்டார்கள். வெகு தூரம் அப்பால் போய் விட்டார்கள். பயப்படாதே, தொட மாட்டார்கள். இப்போது நாம்...'' செல்காஷ் வெற்றிப் பெருமிதத்துடன் சுற்றிலும் பார்வை செலுத்தினான். ''சந்தேகமில்லாமல் வெளியேறி விட்டோம்! அப்-ப்பா! ஊம், உனக்குச் சந்தோஷந் தானா, கவைக்கு உதவாத உலக்கைத் தடி!..''

கவ்ரீலா பேசாமல் துடுப்பு வலித்தான். அவனுக்கு மூச்சு இரைத்தது. நெருப்பு வாள் இன்னும் எழுவதும் தணிவது மாக இருந்த திசையை ஓரக் கண்ணால் பார்த்தான். இது வெறும் மின் விளக்கு என்று செல்காஷ் சொன்னதை அவனால் நம்பவே முடியவில்லை. இருளைக் கூறிட்டுக் கடலை வெள்ளி மினுமினுப்புடன் பளிச்சிடச் செய்த தழலற்ற இள நீல ஒளியில் விளக்க முடியாத ஒரு மர்மம் புதைந்திருந்தது. அதன் பாதிப்பால் கவ்ரீலா ஏக்கத்திற்கும் திகிலுக்கும் மீண்டும் ஆளானான். அவனது உணர்வு மரத்துப் போயிற்று. இயந்திரம் போலத் துடுப்பு வலித்தான். மேலே இருந்து அடி விழுவதை

எதிர்பார்ப்பவன் போல மேலும் மேலும் கூனிக் குறுகினுன். அவன் உள்ளத்தில் இப்போது எதுவும், எந்த விருப்பமும், இருக்கவில்லை. அவன் வெற்ருக, மெல்லுணர்ச்சிகள் அற்ற வனுக இருந்தான். அந்த இரவில் நேர்ந்த உளக் கொந்தளிப்பு கள் அவனிடமிருந்த மனிதத் தன்மை அனைத்தையும் முடிவில் அரித்துப் போக்கி விட்டன.

செல்காஷோ வெற்றிக் களிப்பில் திளைத்தான். அதிர்ச்சி களுக்குப் பழகிய அவனுடைய நரம்புகள் அதற்குள் அமைதி அடைந்து விட்டன. இன்பக் கிளர்ச்சியால் அவனுடைய மீசை துடித்தது, கண்கள் ஒளி சுடர்ந்தன. அவனுக்கு உற்சாகம் பொங்கியது. பற்களின் ஊடாகச் சீழ்க்கை அடித் தான். கடலின் ஈரக் காற்றை ஆழ்ந்து மூச்சிழுத்தான். சுற்று முற்றும் பார்வை செலுத்திஞன். கவ்ரீலா மீது விழிகள் பதிந்ததும் நல்லியல்புடன் புன்னகை செய்தான்.

காற்று வீசத் தொடங்கிக் கடலை உசுப்பி விட்டது. அதன் நீர்ப் பரப்பில் சிற்றலைகள் மிக அடிக்கடி எழுந்தன. மேகங் கள் மெல்லியவையும் ஒளி ஊடுருவக் கூடியவையும் போலத் தோற்றம் அளித்தன. ஆனுல் வானம் முழுவதையும் அவை போர்த்திருந்தன. இன்னும் லேசாகவே அடித்துக் கொண் டிருந்த காற்று கடலுக்கு மேல் தங்கு தடை இன்றி வீசிக் கொண்டிருந்தது என்ருலும் மேகங்கள் அசையாதிருந்தன. கவர்ச்சி அற்ற, சலிப்பூட்டும் ஏதோ சிந்தனையில் ஆழ்ந் திருப்பவை போல அவை காணப்பட்டன.

''இந்தா தம்பீ, நீ சுதாரித்துக் கொள், நேரமாகி விட்டது! அட நீதான் எப்படி ஆகி விட்டாய்—உன் தோலிலிருந்து உயிரை எல்லாம் நசுக்கி வெளியேற்றி விட்டது போலவும் எலும்பு மூட்டை மட்டுமே மிஞ்சி இருப்பது போலவும்! எல்லாம் முடிந்தது இப்போது. ஏய்!..''

பேசியவன் செல்காஷ் என்ருலும் மனிதக் குரலைக் கேட்க கவ்ரீலாவுக்கு இன்பமாய் இருந்தது.

''கேட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்று தணிந்த குரலில் சொன்னுன்.

''அப்படி வா வழிக்கு, தொளதொளத்தான்... இந்தா, நீ சுக்கானைப் பிடி, நான் துடுப்பு தள்ளுகிறேன். நீ களைத்துப் போனுய்!''

கவ்ரீலா இயந்திர கதியில் இடத்தை மாற்றிக் கொண்

டான். அவனேடு இடம் மாற்றிக் கொள்கையில் அவனுடைய முகத்தைப் பார்த்து, அவன் கால்கள் நடுங்கியதையும் அவன் தள்ளாடியதையும் கவனித்த போது செல்காஷுக்கு அந்த இளைஞன் மேல் முன்னிலும் அதிக இரக்கம் உண்டாயிற்று. பையனுடைய தோளைத் தட்டிக் கொடுத்தான்.

''ஊம், ஊம், பயப்படாதே! நன்ருக வேலை செய்திருக்கிருய், நான் உனக்குத் தாராளமாகப் பரிசு தருகிறேன். கால் நூறு ரூபிள் நோட்டு வாங்க இஷ்டம் தானே! ஊம்?''

''எனக்கு ஒன்றும் வேண்டாம். கரை சேர்ந்தால் போதும்...''

செல்காஷ் கையை உதறி, துப்பி விட்டு நீண்ட கைகளால் துடுப்புகளை வெகுதூரம் பின்னுல் போட்டவாறு படகைச் செலுத்துவதில் முனைந்தான்.

கடல் விழித்துக் கொண்டு விட்டது. சிறு அலைகளைத் தோற்றுவிப்பதும் நுரைக் குஞ்சத்தால் அவற்றை அழகு படுத்துவதும் ஒன்ருேடு ஒன்றை மோத விடுவதும் மெல்லிய தூவானமாகச் சிதற அடிப்பதுமாக அது அவற்றுடன் விளையாடியது. நுரை கரைகையில் சீறிப் பெருமூச்சு விட்டது—சுற்றிலும் இருந்தவை யாவும் இசை யொலியாலும் சளப் போசையாலும் நிறைந்தன. இருள் உயிர் பெற்று விட்டது போல் இருந்தது.

''ஆமாம், எனக்கு ஒன்று சொல்லு'' என்று பேசத் தொடங்கினுன் செல்காஷ். ''நீ கிராமத்துக்குப் போவாய், கலியாணம் செய்து கொள்வாய், நிலத்தைத் தோண்டவும் தானியம் விதைக்கவும் துவங்குவாய், பெண்டாட்டி பிள்ளைகளைப் பெறுவாள், உணவு பற்ருது; ஊம், நீ வாழ்நாள் பூராவும் உடல் தேய உழைத்து. ஓடாவாய்... நல்லது, அப்புறம்? இதில் பிரமாத சுகம் என்ன இருக்கிறது?''

''சுகமாவது ஒன்ருவது!'' என்று கூச்சத்துடன் நடுங்கியவாறு பதிலளித்தான் கவ்ரீலா.

காற்று சில இடங்களில் மேகங்களை ஊடறுத்தது. பிளவுகளிலிருந்து வானத்தின் இள நீலத் துண்டுகள் கடலை நோக்கின. ஓரிரு விண்மீன்கள் அவற்றில் இருந்தன. அலையடித்த கடலால் பிரதிபலிக்கப்பட்ட இந்த விண்மீன்கள் அலைகளில் துள்ளியவாறு மறைவதும் மறுபடி பளிச்சிடுவதுமாக இருந்தன.

''வலப்புறம் செலுத்து!'' என்ருன் செல்காஷ். ''இதோ வந்து விடுவோம். ம்-ம்—ஆமாம்!.. வேலையை முடித்தா யிற்று. பிரமாதமான வேலை! பார்த்தாயா? ஒரே ராத்திரி, அரை ஆயிரம் லவுட்டி விட்டேன்!''

''அரை ஆயிரமா?'' என்று நம்பிக்கை இன்றி இழுத்தான் கவ்ரீலா. ஆனுல் மறு கணமே பயந்து போய், படகிலிருந்த சிப்பங்களைக் காலால் இடித்து, ''ஆமாம், இது என்ன சாமான்?'' என்று சட்டெனக் கேட்டான்.

''ரொம்ப விலையுள்ள சாமான். சரியான விலைக்குக் கொடுப்பதானுல் ஆயிரத்துக்கு மேல் போகும். ஆனுல் நான் அதிக விலை கேட்க மாட்டேன்... எப்படி நம் சாமர்த்தியம்?''

''அப்-ப்-படியா-ஆ?'' என்று கேள்விக் குரலில் இழுத் தான் கவ்ரீலா. ''எனக்கு மட்டும் இந்த மாதிரிப் பணம் கிடைத்தால்!'' என்று பெருமூச்செறிந்தான். தன் கிராமத்தை யும் ஏழைப் பண்ணையையும் தாயையும் நினைத்துக் கொண் டான். இப்போது தொலைவில் இருப்பது போலத் தோன்றியதும் உண்மையில் சொந்தம் உள்ளதுமான எல்லாம் அவன் நினைவுக்கு வந்தன. இவற்றின் பொருட்டே அவன் கூலி வேலை செய்யக் கிளம்பினுன், இவற்றுக்காகவே இந்த இரவில் இப் படித் தொல்லைப்பட்டான். தன் சிறு கிராமத்தைப் பற்றிய நினைவுகள் அவன் மனதில் அலை அலையாக எழுந்தன. செங்குத் தான மலையில், ஓடையை நோக்கிச் சரிந்து சென்றிருந்தது கிராமம். ஓடையோ, பல வகை மரங்கள் அடர்ந்த சோலையில் மறைந்திருந்தது... ''அட, எவ்வளவு நன்ருய் இருக்கும்!..'' என்று துயரப் பெருமூச்செறிந்தான்.

''ம்-ஆமாம்!.. நீ உடனே ரெயிலேறி ஊர் போய்ச் சேர்ந் திருப்பாய் என்று நினைக்கிறேன்... ஊரில் பெண்கள் உன் மேல், ஆகா, எப்படி மையல் கொண்டிருப்பார்கள்!.. எவளை வேண்டுமானுலும் வீட்டுக்காரியாகப் பொறுக்கிக் கொள்ள லாம்! சொந்தத்துக்கு ஒரு வீடு கட்டிக் கொள்ளலாம். ஆனுல் வீட்டுக்குப் பணம் பற்ருது என்று தோன்றுகிறது...''

''இது சரிதான்... வீட்டுக்குப் பணம் போதாது. எங்கள் ஊரில் நன்மரம் கிராக்கி ஆயிற்றே.''

''அதனுல் என்ன? பழைய வீட்டைப் பழுது பார்க் கலாமே. குதிரை விஷயம் என்ன? இருக்கிறதா?''

''குதிரையா? பெயருக்கு ஒன்று இருக்கிறது, ஆனால் படுகிழம், சனி!''

''அப்படியானல் குதிரை வேண்டும். அருமையான குதிரை! பசுமாடு... ஆடு... வாத்துகள், கோழிகள்... ஊம்?''

''ஆசையைக் கிளப்பாதே!.. அட, என் ஆண்டவனே! இதெல்லாம் இருந்தால் சுகமாக வாழ்வேனே!''

''ஆ-ஆமாம், தம்பீ, வாழ்க்கை மோசமாய் இராது தான். இந்த விவகாரம் எனக்கும் புரியும். ஒரு காலத்தில் எனக்கும் சொந்த வீடு வாசல் இருந்தது... தகப்பன் கிராமத்துப் பெரும் பணக்காரர்களில் ஒருத்தனுய் இருந்தான்...''

செல்காஷ் நிதானமாகத் துடுப்பு வலித்தான். குறும்பும் விளையாட்டுமாகப் பக்கங்களில் அடித்த அலைகள்மேல் படகு அசைந்தாடியது. கரிய கடலில் அது அரிதாகவே நகர்ந்தது. கடலோ வர வர அதிகக் குறும்பாக விளையாடியது. நீரில் அசைந்தாடிக் கொண்டும் யோசனையுடன் நாற்புறமும் பார்வை செலுத்தியவாறும் இரண்டு பேரும் கனவில் ஆழ்ந்திருந்தார்கள். கவ்ரீலாவைக் கொஞ்சம் உற்சாகப்படுத்தவும் சமாதானப்படுத்தவும் விரும்பியே செல்காஷ் கிராமத்தைப் பற்றிய எண்ணத்தின்பால் அவனைத் திருப்ப ஆரம்பித்தான். தொடக்கத்தில் அவன் மீசைக்குள் கேலியாக நகைத்தவாறு பேசினன். அப்புறம் கூட்டாளிக்குப் பதில் சொல்கையிலும், தான் வெகு காலத்துக்கு முன்பே ஏமாற்றம் அடைந்து மறந்துவிட்டவையும் இப்போதுதான் நினைவுபடுத்திக் கொண்டவையுமான விவசாயி வாழ்க்கையின் இன்பங்களை அவனுக்கு விவரிக்கையிலும் செல்காஷ் படிப்படியாக அவற்றில் ஈர்க்கப்பட்டான். கிராமத்தையும் அதன் விவகாரங்களையும் பற்றி இளைஞனிடம் விசாரிப்பதற்குப் பதிலாக, தான் அறியாமலே அவனுக்குத் தானே எடுத்துச் சொல்லத் தலைப்பட்டான்:

''விவசாயி வாழ்க்கையில் முக்கியமானது, தம்பீ, விடுதலை! உனக்கு நீயே எஜமானன். உன்னிடம் சொந்த வீடு இருக்கும். அது கால் காசு பெறுததாய் இருக்கலாம், ஆனாலும் உனக்குச் சொந்தமானது. உனக்குச் சொந்த நிலம் உண்டு. மொத்தம் அது ஒரு கைப்பிடி அளவாய் இருக்கலாம், ஆனாலும் அது உன்னுடையது! சொந்த நிலத்தில் நீ அரசன்! உனக்குச் சொந்த மதிப்பு உண்டு... உனக்கு மரியாதை காட்டும்படி நீ எவனிடம் வேண்டுமானாலும்

கோரலாம்... இல்லையா?'' என்று உற்சாகம் பொங்கக் கூறி முடித்தான் செல்காஷ்.

கவ்ரீலா அவனை ஆவலுடன் நோக்கியவன், தானும் உற்சாகம் அடைந்தான். தான் பேசுவது யாருடன் என்பதை அவன் இந்த உரையாடலின் போது மறந்துவிட்டான். எதிரில் இருப்பவன் தன்னையே போன்ற விவசாயி, பல தலை முறைகளின் வியர்வையால் நிலத்தோடு நிரந்தரமாக ஒட்டிக் கொண்டிருப்பவன், பிள்ளைப் பருவ நினைவுகளால் அதனோடு தொடர்பு வைத்திருப்பவன், அதனிடமிருந்தும் அது பற்றிய கவலைகளிலிருந்தும் தானே விரும்பி விடுபட்டு வெளியேறிய வன், இந்த வெளியேற்றத்துக்கு உரிய தண்டனையை அனுப வித்தவன் என்று எண்ணிக் கொண்டான்.

''நீ சொல்லுவது சரிதான், அண்ணே! அட, எவ்வளவு சரி, தெரியுமா? உன்னையே தான் பார்த்துக் கொள்ளேன்! நிலம் இல்லாமல் இப்போது நீ யார்? நிலம் தாயார் மாதிரி, அண்ணே, நீண்ட காலம் அதை மறக்க முடியாது'' என்றான்.

செல்காஷ் மனத்தை மாற்றிக் கொண்டான்... அவ னுடைய தன்மானம்—எதற்கும் அஞ்சாத முரட்டுத் துணிச் சல்காரனுக்கு உரிய தன்மானம்—யாராலாவது, சிறப்பாக மதிப்பற்றவன் என்று தான் எண்ணும் ஒருவனால், லேசாகக் கூடப் புண்படுத்தப்படும் போது வழக்கமாக உண்டாகும் காந்தும் எரிச்சல் மார்பில் ஏற்படுவதை அவன் உணர்ந்தான்.

''ஆரம்பித்து விட்டாயா அரைவையை?'' என்று கொடூர மாகக் கூறினான். ''இதை எல்லாம் நான் உண்மையாகவே சொல்வதாக எண்ணி விட்டாயாக்கும்... அது மட்டும் நடவாது!''

''வேடிக்கையான ஆள்தான்!..'' கவ்ரீலா மறுபடி அச்சம் கொண்டான். ''நான் என்ன, உன்னைப் பற்றியா சொன்னேன்? உன் மாதிரி ஆட்கள் ஒரு வேளை நிறையப் பேர் இருப் பார்கள் என்கிறேன். ஐயோ, உலகத்தில் தான் துர்ப்பாக்கிய சாலிகள் எத்தனை பெயர்!.. அல்லாடுபவர்கள்...''

''நீர் நாய்ப் பயலே! துடுப்பு தள்ளு!'' என்று சுருக்க மாகக் கட்டளை இட்டான் செல்காஷ். ஊற்றெடுத்துப் பொங்கித் தொண்டையில் பீறிட்ட கடுமையான வசவுச் சொற்களை என்ன காரணத்தாலோ அவன் தனக்குள் அடக்கி வைத்துக்கொண்டான்.

அவர்கள் மறுபடி இடங்களை மாற்றிக் கொண்டார்கள். சிப்பங்களின் வழியாகப் படகின் பின்பகுதிக்குத் தாண்டு கையில் கவ்ரீலாவுக்கு ஒரு உதை கொடுத்து அவனை நீரில் விழத் தட்ட வேண்டும் என்ற ஆசை செல்காஷுக்கு உண்டாயிற்று.

சுருக்கமான உரையாடல் நின்றது. ஆனால் இப்போது கவ்ரீலாவின் மௌனம் கூடச் செல்காஷின் பக்கம் கிராம மணத்தைப் பரப்பியது... அவன் படகைச் செலுத்த மறந்து கடந்த காலத்தை நினைவு கூர்ந்தான். படகு அலைகளால் திருப்பப்பட்டுக் கடலில் எங்கோ சென்றது. இந்தப் படகு குறிக்கோளை இழந்து விட்டது என்பதை அலைகள் புரிந்து கொண்டன போலும். அவை அதை மேலும் மேலும் உயரே எறிந்து துடுப்புகளுக்கு அடியில் இதமான இள நீல ஒளியில் பளிச்சிட்டவாறு படகுடன் லேசாக விளையாடின. செல்காஷுக்கு முன்போ, கடந்த காலக் காட்சிகள் விரைவாகத் தோன்றி மறைந்தன. அது தொலைதூரக் கடந்த காலம். பதினோராண்டு நாடோடி வாழ்க்கையின் பெரும் சுவர் நிகழ் காலத்திலிருந்து அதைப் பிரித்திருந்தது. சிறுவனான தன்னை யும் தன் கிராமத்தையும் தாயையும் அவன் கண்டான். தாய் சிவந்த கன்னங்கள் கொண்ட கொழுத்த மாது. அவளது சாம்பல் நிறக் கண்களில் நல்லியல்பு மிளிர்ந்தது. கடுகடுத்த முகமும் செம்பட்டைத் தாடியும் உள்ள தன் தகப்பனையும் செல்காஷ் கண்டான். மணக் கோலத்தில் தன்னையும் தன் மனைவி அன்பீசாவையும் கண்டான். அவள் நீண்ட பின்னல் உள்ளவள், பருத்தவள், மென்மையானவள், குதூகலப் பேர் வழி. அழகு ததும்பும் காவற் படையினன் வடிவில் தன்னை மறுபடி பார்த்தான் செல்காஷ். நரைத்து உழைப்பினால் கூனிய தகப்பனையும் சுருக்கங்கள் விழுந்து தரையோடு தரை யாகத் தொய்ந்து தளர்ந்து போன தாயையும் பின்னொரு முறை கண்ணுற்றான். தான் படைப் பணியிலிருந்து திரும்பிய போது கிராமம் தன்னை வரவேற்ற காட்சி அவன் முன் விரிந்தது. மீசை வைத்த திடகாத்திரமான படையினனும் லாகவம் உள்ள அழகனுமான தன் மகன் கிரிகோரியைக் குறித்துத் தகப்பன் கிராமத்தார் முன் எப்படிப் பெருமைப்பட்டான் என்பதைக் கண்டான்... நினைவு ஆக்கம் கெட்டவர்களுக்குச் சவுக்கடி போன்றது. கடந்த காலத்துக் கல்லுக்குக் கூட அது

உயிரூட்டி விடுகிறது, ஒரு காலத்தில் பருகிய நஞ்சில் கூடத் தேன் துளிகளைக் கலந்து விடுகிறது...

சொந்த ஊர்க் காற்றின் தேற்றும் இனிய பெருக்கு தன் மேல் வீசுவது போலவும் தாயின் கொஞ்சல் மொழிகளையும் உண்மை விவசாயியான தகப்பனின் ஆழ்ந்த பேச்சையும் அது தன்னுடன் கொண்டுவருவது போலவும் செல்காஷ் உணர்ந்தான். மறந்து போன பல ஒலிகளும் அப்போது தான் உறை பனியிலிருந்து விடுபட்டு, அப்போது தான் உழப்பட்டு, குளிர்காலப் பயிரின் மரகதப் பட்டால் அப்போதுதான் போர்த்தப்பட்ட அன்னை நிலத்தின் பல நறு மணங்களும் இந்தக் காற்றில் மிதந்து வந்ததை அவன் உணர்ந்தான்... தன் நாளங்களில் பெருகிய குருதி எந்த வாழ்க்கை முறையில் உற்பத்தி ஆயிற்றோ அதிலிருந்து பறித்து என்றென்றைக்கும் வெளியே எறியப்பட்டுத் தான் தனியன் ஆகிவிட்டதாக அவனுக்குத் தோன்றியது.

''ஏய், நாம் எங்கே போகிறோம்?'' என்று கவ்ரீலா திடீரென வினவினான்.

செல்காஷ் திடுக்கிட்டு வேட்டை விலங்கின் கலவரப் பார்வையுடன் சுற்று முற்றும் கண்ணோட்டினான்.

''அட சே, விலகிப் போய்விட்டோம்! இன்னும் பலமாகத் துடுப்பு போடு...''

''யோசனையில் ஆழ்ந்து விட்டாயோ?'' என்று புன்னகையுடன் கேட்டான் கவ்ரீலா.

''களைத்துப் போனேன்...''

''அப்படியானால் இப்போது நாம் இதோடு மாட்டிக் கொள்ள மாட்டோமாக்கும்?'' என்று சிப்பங்களில் காலால் இடித்தான் கவ்ரீலா.

''மாட்டோம், கவலையை விடு. இப்போது இதைக் கொடுத்துப் பணம் வாங்குவேன். ம்-ஆமாம்!''

''ஐந்நூறு?''

''அதற்குக் குறையாது.''

''கொழுத்த தொகை இது! ஆக்கங் கெட்ட எனக்கு மட்டும் இது கிடைத்தால் நன்றாகப் பயன்படுத்தி இருப்பேனே!..''

''விவசாயித்திலோ?''

''அதில்தான். இப்போது மட்டும்...''

இவ்வாறு கூறி கவ்ரீலா கனவு இறக்கைகள் மீது பறக்கலானுன். செல்காஷ் பேசாதிருந்தான். அவனுடைய மீசை தொங்கிற்று. அலைகளால் அடியுண்ட வலது விலா நனைந்திருந்தது. கண்கள் உள் ஆழ்ந்து ஒளி இழந்திருந்தன. அவனுடைய உருவத்தில் இருந்த வேட்டைப் பறவைத் தன்மை அனைத்தும் தாழ்மை நிறைந்த சிந்தனையால் ஒடுங்கி மென்மை ஆகி விட்டது. அவனுடைய அழுக்கடைந்த சட்டையின் மடிப்புக்களிலிருந்தும் கூட இந்தச் சிந்தனை வெளிப்பட்டது.

அவன் படகை நேரே திருப்பி நீரிலிருந்து துருத்திய கரிய ஒன்றின் பக்கம் அதைச் செலுத்திஞன்.

மேகங்கள் வானத்தை மீண்டும் மூடின. மழை வெப்பமான சிறு துளிகளாகத் தூறியது. அலை முடிகள் மேல் விழுகையில் மழைத் துளிகள் களிப்புடன் கிணுகிணுத்தன.

''நிறுத்து! ஜாக்கிரதை!'' என்று ஆணையிட்டான் செல்காஷ்.

படகின் மூக்கு மரக்கலத்தின் உடலில் இடித்தது.

''தூங்குகிருர்களா என்ன, சனியன்கள்?'' என்று மரக்கலத்திலிருந்து தொங்கிய கயிறுகளில் கொக்கியை மாட்டியவாறு முணுமுணுத்தான் செல்காஷ். ''ஏணியை இறக்கு!.. மழை வேறு பெய்தது. முன்னுல் வர முடியவில்லை! டேய், கடற்பஞ்சுகளா!.. அடேய்!..''

''யார் அது, செல்காஷா?'' என்று மேலேயிருந்து மென்மையாக முறுமுறுத்தது கேட்டது.

''ஊம், ஏணியை இறக்கு!''

''கலிமேரா, செல்காஷ்!''*

''ஏணியை இறக்கடா, பாழாய்ப் போகிறவனே!'' என்று உறுமினுன் செல்காஷ்.

''இன்றைக்கு எரிச்சலோடு வந்திருக்கிருன்... ஹலோ!''

''ஏறு, கவ்ரீலா!'' என்று கூட்டாளியிடம் சொன்னுன் செல்காஷ்.

ஒரு நிமிடத்தில் அவர்கள் மேல் தட்டை அடைந்தார்கள். அங்கே தாடி வைத்த மூன்று கரிய உருவங்கள் விந்தையான மழலை ஒலிப்புள்ள மொழியில் ஒருவரோடு ஒருவர்

---

* ''மாலை வணக்கம், செல்காஷ்!'' (கிரேக்க மொழி). ப-ர்.

அரட்டை அடித்தவாறு செல்காஷின் படகைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நீண்ட மழைக் கோட்டு அணிந்த நான்காமவன் செல்காஷ் அருகே வந்து பேசாமல் அவன் கையைப் பற்றிக் குலுக்கினான். பின்பு கவ்ரீலாவைச் சந்தேகத்துடன் பார்த்தான்.

''காலைக்குள் பணத்தைத் தயாராக எடுத்து வை'' என்று அவனிடம் சுருக்கமாகச் சொன்னான் செல்காஷ். ''இப்போது நான் தூங்கப் போகிறேன். கவ்ரீலா, போவோம் வா! பசிக்கிறதோ?''

''தூங்கினால் நல்லது'' என்று சொன்னான் கவ்ரீலா. ஐந்து நிமிடத்திற்கெல்லாம் அவன் குறட்டை விடத் தொடங்கி விட்டான். செல்காஷோ, அவன் அருகே அமர்ந்து யாருடைய சோடுகளையோ போட்டு அளவு பார்த்தான், யோசனையுடன் ஒரு புறம் துப்பினான், ஏக்கத்துடன் பற்களின் ஊடாகச் சீழ்க்கை அடித்தான். பின்பு கைகளைத் தலைக்குயரம் வைத்துக்கொண்டு மீசையை அசைத்தவாறு கவ்ரீலாவின் அருகே நீட்டிப் படுத்தான்.

அலையடித்துக் கொண்டிருந்த நீரில் மரக்கலம் மெதுவாக அசைந்தாடியது. எங்கேயோ மரச் சட்டம் முறையிடுவது போலக் கிரீச்சிட்டது. மழை மேல் தட்டில் மென்மையாகத் தூறியது. அலைகள் மரக்கலத்தின் பக்கங்களில் அடித்தன... எல்லாமே ஏக்கம் நிறைந்திருந்தன. தன் மகன் இன்புறுவான் என்ற நம்பிக்கை இல்லாத தாயின் தாலாட்டு போல எல்லாம் ஒலித்தன...

செல்காஷ் பற்களைக் காட்டியவாறு தலையை நிமிர்த்துச் சுற்றிலும் பார்த்தான். பின்பு ஏதோ கிசுகிசுத்து விட்டு மறுபடி படுத்தான்... கால்களைப் பரப்பிப் பெரிய கத்திரிக்கோல் போன்று தோற்றம் அளித்தான்.

3

அவன் முதலில் கண் விழித்தான். கலவரத்துடன் சுற்று முற்றும் பார்த்தான். உடனே நிம்மதி அடைந்து இன்னும் உறங்கிக் கொண்டிருந்த கவ்ரீலாவை நோக்கினான். அவன் இனிமையாகக் குறட்டை விட்டுக் கொண்டிருந்தான். அவனது நலம் வாய்ந்து பழப்பேறிய குழந்தை முகம் முழுவதும்

உறக்கத்தில் எதனுலோ ஏற்பட்ட புன்னகையால் மலர்ந் திருந்தது. செல்காஷ் பெரு மூச்செறிந்து குறுகிய நூலேணியில் ஏறி மேலே சென்ருன். சரக்கறையின் திறப்பில் வானத்தின் காரீய நிறத் துண்டு தெரிந்தது. வெளிச்சமாக, ஆனுல் இலை யுதிர் காலத்துக்கு ஏற்பச் சலிப்பாகவும் கவர்ச்சி இன்றியும் இருந்தது.

செல்காஷ் ஒரு இரண்டு மணி நேரத்தில் திரும்பினுன். அவன் முகம் சிவந்திருந்தது, மீசை மிடுக்காக மேல் நோக்கி முறுக்கி இருந்தது. உறுதியான நீள் சோடுகளும் குட்டை மேல் உடுப்பும் தோல் சராய்களும் அணிந்து வேட்டைக்காரன் போல் காணப்பட்டான். அவனுடைய உடுப்பு முழுதும் நைந்திருந்தது, ஆனுல் உறுதியாகவும் அவனுக்கு மிகப் பொருத்தமாகவும் இருந்தது. அது அவனுடைய மேனியை அகன்றதாகக் காட்டி அதில் துருத்தி இருந்த எலும்புகளை மறைத்து அவனுக்குப் போர் வீரத் தோற்றம் அளித்தது.

''டேய், கன்றுக்குட்டீ, எழுந்திரு!..'' என்று கவ்ரீலா வைக் காலால் இடித்தான்.

அவன் துள்ளி எழுந்து, உறக்க மயக்கத்தில் செல்காஷை அடையாளம் தெரிந்து கொள்ளாமல் கலங்கிய விழிகளால் அவனை மிரட்சியுடன் உறுத்து நோக்கினுன். செல்காஷ் கட கடவென்று நகைத்தான்.

''அட, இது நீயா!..'' என்று முடிவில் கவ்ரீலா முகம் மலர முறுவலித்தான். ''சீமான் ஆகி விட்டாயே!''

''நாம் சீக்கிரம் கிளம்பலாம். சரியான பயங்கொள்ளி அப்பா நீ! நேற்று ராத்திரி எத்தனை தடவை சாகப் பார்த் தாய்?''

''நீயே யோசித்துப் பார். இந்த மாதிரி விவகாரத்தில் நான் முதல் தடவை கலந்து கொண்டிருந்தேன். வாழ்நாள் முழுவதற்கும் ஆன்மாவைப் பாழ்படுத்தி இருக்கலாமே!''

''நல்லது, இன்னெரு தரம் வருவாயா இந்த வேலைக்கு? ஊம்?''

''இன்னெரு தரமா?.. அட இது — உனக்கு எப்படிச் சொல்லுவது? அதனுல் லாபம் என்ன?..அது தான் முக்கியம்!''

''நல்லது, இரண்டு 'பச்சை நோட்டு' கிடைத்தால்?''

''அதாவது இரு நூறு ரூபிளா? பரவாயில்லை... அப் போது வரலாம்...''

''இரு! ஆன்மாவை எப்படிப் பாழ்படுத்துவாய்?..''

''அட இதிலே, ஒரு வேளை... பாழ்படுத்தாமலும் இருக்கலாமே!'' என்று குறு நகை செய்தான் கவ்ரீலா. ''பாழ்படுத்தாமலே ஆயுள் பூராவும் ஆளாக வளைய வரலாமே.''

செல்காஷ் குதூகலமாகக் கெக்கலி கொட்டினான்.

''சரி, கிடக்கட்டும்! கேலிப் பேச்சு பேசியது போதும். கரைக்குப் போவோம் வா...''

அவர்கள் மறுபடி படகில் இருந்தார்கள். செல்காஷ் சுக்கான் பிடித்தான், கவ்ரீலா துடுப்பு வலித்தான். அவர்களுக்கு மேலே இருந்தது சாம்பல் நிற வானம். அதில் மேகங்கள் ஒரு சீராகப் பரவி இருந்தன. கலங்கல் பச்சைக் கடல் படகுடன் விளையாடியது, இன்னும் சிறியவையாய் இருந்த அலைகள் மேல் அதை ஓசையுடன் தூக்கிப் போட்டது. அலைகள் பளிச்சிடும் உப்பு நீர்த் துளிகளைப் படகுக்குள் மகிழ்ச்சியுடன் தெறித்தன. படகின் மூக்கிற்கு நேராகத் தொலைவில் தென்பட்டது மணல் கரையின் மஞ்சள் பட்டை. படகின் பின்னே நெடுந்தூரம் சென்றிருந்தது கடல். அடர் வெண் நுரையால் அணி செய்யப்பட்ட அலைகளின் கூட்டங்களால் அதன் பரப்பு மேடு பள்ளங்கள் நிறைந்து காணப்பட்டது. அங்கேயே தொலைவில் பல கப்பல்கள் தென்பட்டன. தூரத்தில் இடப் புறம் பாய்மரங்களின் அடர்ந்த தொகுப்பும் நகரக் கட்டிடங்களின் வெண் குவியலும் தெரிந்தன. அங்கிருந்து கடலில் பெருகியது தெளிவற்ற ஆரவாரம். அதிர்ந்தொலித்த இந்த ஒலி அலையோசையுடன் சேர்ந்து நல்ல, வலிய இசையாக அமைந்தது... சாம்பல் நிற மூடுபனியின் மெல்லிய படலம் எல்லாவற்றின் மீதும் போர்த்திருந்தது. பொருள்கள் ஒன்றிலிருந்து மற்றது தொலைவில் இருப்பது போல இது காட்டியது...

''ஆகா, சாயங்காலத்துக்குள் பிரமாத அட்டகாசம் பண்ணப் போகிறது!'' என்று தலையசைப்பால் கடலைச் சுட்டினான் செல்காஷ்.

''புயலா?'' என்று துடுப்புகளால் அலைகளை வலிவாக உழுதவாறு கேட்டான் கவ்ரீலா. காற்றினால் கடல் நெடுகிலும் பரப்பப்பட்ட தூவானத்தால் அவன் தலையோடு கால் நனைந்திருந்தான்.

''ஹ்ம்-ஹ்ம்!..'' என்று ஆமாம் போட்டான் செல்காஷ்.

கவ்ரீலா அவனை ஆவலுடன் நோக்கினான்...

செல்காஷ் பேச்சைத் தொடங்கத் தயாராயில்லை என்பதைக் கண்டு ''ஆமாம், உனக்கு எவ்வளவு கொடுத்தார்கள்?'' என்று கடைசியில் கேட்டான்.

செல்காஷ் பையிலிருந்து எடுத்த ஒன்றை கவ்ரீலா பக்கம் நீட்டி, ''இது தான்!'' என்றான்.

கவ்ரீலா அந்தப் பல நிறக் காகிதங்களைப் பார்த்தான். அவனுடைய கண்களுக்கு எல்லாமே பளிச்சிடும் வானவில் நிறங்களை மேற் கொண்டன.

''அடே!.. நீ என்னிடம் பொய் சொன்னாய் என்றாக்கும் நினைத்தேன்!.. இது எவ்வளவு?''

''ஐந்நூற்று நாற்பது!''

''அபாரம்!..'' என்று செல்காஷ் மறுபடி பையில் வைத்துக் கொண்ட ஐந்நூற்று நாற்பது ரூபிள்களைப் பேராசை ததும்பும் விழிகளால் பார்த்தவாறு கிசுகிசுத்தான் கவ்ரீலா. ''அடேயப்பா?.. இந்தப் பணம் மட்டும்!..'' என்று வேட்கை தாளாமல் பெரு மூச்செறிந்தான்.

''நீயும் நானும் களி கொண்டாடுவோம், தம்பீ!'' என்று பரவசத்துடன் ஆர்ப்பரித்தான் செல்காஷ். ''ஆ, தெவிட்டத் தெவிட்ட அனுபவிப்போம்... நீ வேறு விதமாக நினைக்காதே! நான் உனக்குத் தனியாகக் கொடுத்து விடுகிறேன், தம்பீ... நாற்பது கொடுக்கிறேன், ஊம்? திருப்திதானே? இப்போதே தருகிறேன், வேண்டுமா?''

''உனக்கு வருத்தமில்லை என்றால்—அதற்கென்ன? நான் ஏற்றுக் கொள்கிறேன்!''

நெஞ்சில் குதுகுதுப்பு ஊட்டிய கூரிய எதிர்பார்ப்பினால் கவ்ரீலாவின் மேனி துடித்தது.

''அட, குட்டிப் பிசாசே! ஏற்றுக் கொள்கிறேனாம்! ஏற்றுக் கொள், தம்பீ, தயை செய்து! நான் உன்னை வெகுவாகக் கேட்டுக் கொள்கிறேன், ஏற்றுக் கொள்! இவ்வளவு நிறையப் பணத்தை எங்கே வைப்பது என்று எனக்குத் தெரியவில்லை! என்னை இக்கட்டிலிருந்து தப்புவி, ஏற்றுக் கொள், இந்தா!..''

செல்காஷ் கவ்ரீலாவிடம் சில நோட்டுக்களை நீட்டினான். அவன் நடுங்கும் கையால் அவற்றை வாங்கிக் கொண்டு, துடுப்புகளை விட்டு விட்டுப் பணத்தைச் சட்டைமார்புக்குள் வைத்துக் கொள்ள முற்பட்டான். அவனது கண்கள் பேராசையுடன்

சுரித்திருந்தன. காந்தும் பானத்தைப் பருகுபவன் போல அவன் ஓசையுடன் காற்றை உள்ளிழுத்தான். செல்காஷ் கேலிப் புன்னகையுடன் அவன் மீது கண்ணோட்டினான். கவ்ரீலாவோ, மறுபடி துடுப்புகளை எடுத்துக் கொண்டு எதற்கோ அஞ்சியவன் போல விழிகளைத் தாழ்த்தியவாறு பதற்றத்துடனும் அவசரமாகவும் படகைச் செலுத்தினான். அவனுடைய தோள்களும் காதுகளும் நடுங்கின.

''ஆனாலும் பேராசைக்காரனப்பா நீ!.. மோசம்... ஆனால், இது சகஜந்தான்... விவசாயி அல்லவா...'' என்று சிந்தனையுடன் சொன்னான் செல்காஷ்.

திடீரென்று ஆவேசம் பொங்கும் உள்ளக் கிளர்ச்சி பீறிட, ''பணத்தை வைத்துக் கொண்டு என்ன வேண்டுமானாலும் செய்யலாமே!..'' என்று கூவினான் கவ்ரீலா. பணம் உள்ள போதும் இல்லாத போதும் கிராம வாழ்க்கை எப்படி இருக்கும் என்று தன் எண்ணங்களை விரட்டிக் கொண்டு போகிற போக்கில் சொற்களைப் பிடிப்பவன் போலத் துணுக்கு துணுக்காக, அவசர அவசரமாகப் பேசத் தொடங்கினான். கௌரவம், மனநிறைவு, களிப்பு!..

செல்காஷ் ஆழ்ந்த முகத் தோற்றத்துடனும் ஏதோ எண்ணத்தினால் சுரித்த கண்களுடனும் அவனுடைய பேச்சைக் கவனித்துக் கேட்டான். அவ்வப்போது மனநிறைவுடன் முறுவலித்தான்.

''வந்து விட்டோம்!'' என்று கவ்ரீலாவின் பேச்சை இடைமுறித்தான்.

அலை படகின் அடியைப் பற்றி லாகவமாக மணலில் செருகிற்று.

''நல்லது, தம்பீ, இப்போது எல்லாம் முடிந்தது. படகை அலை அடித்துக்கொண்டு போகாதிருப்பதற்காகத் தொலைவில் நகர்த்த வேண்டும். ஆட்கள் வந்து அதை ஓட்டிப் போவார்கள். நீயும் நானும் பிரிவு சொல்லிக் கொள்வோம்! இங்கிருந்து நகரம் ஒரு எட்டு வெர்ஸ்டா* தூரம். நீ என்ன, மறுபடி நகரத்துக்குத் திரும்புகிறாயா? ஊம்?''

செல்காஷின் முகத்தில் நல்லியல்பு ததும்பும் தந்திரப்

---

* வெர்ஸ்டா—3500 அடியுள்ள ருஷ்ய நீட்டலளவை. —ப-ர்.

புன்னகை மிளிர்ந்தது. தனக்கு மிக இனியதும் கவ்ரீலாவுக்கு எதிர்பாராததுமான ஒரு திட்டம் போட்டிருப்பவன் போன்று அவன் தோற்றம் அளித்தான். பையில் கையை விட்டு அங்கிருந்த நோட்டுக்களைச் சரசரக்கச் செய்தான்.

''இல்லை... நான்... போக மாட்டேன்... நான்...'' கவ்ரீலாவுக்கு மூச்சு திணறியது, எதனுலோ புரையேறியது.

செல்காஷ் அவனைப் பார்த்தான்.

''நீ என்ன இப்படி வேதனைப்படுகிறுய்?'' என்று கேட்டான்.

''அட ஒன்றுமில்லை...'' ஆனுல் கவ்ரீலாவின் முகம் ஒரு கணம் சிவப்பதும் மறு கணம் சாம்பல் நிறமாவதுமாக இருந்தது. செல்காஷ் மேல் பாய விரும்பியோ, தனக்கு நிறைவேற்றக் கடினமான வேறு விருப்பத்தால் அலைக்கப்பட்டோ அவன் தயங்கித் தயங்கி நின்றுன்.

இந்த இளைஞனிடம் காணப்பட்ட இத்தகைய உள்ளக் கிளர்ச்சியால் செல்காஷுக்கு என்னவோ போல் இருந்தது. எந்த விதத்தில் அது வெளிப்படும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

கவ்ரீலா வீரிடலுக்கு ஒப்பான விந்தைச் சிரிப்பு சிரிக்கலானுன். அவன் தலை குனிந்திருந்ததால் அவனுடைய முகபாவத்தைச் செல்காஷ் காணவில்லை. கவ்ரீலாவின் காதுகள் மட்டுமே மங்கலாகத் தெரிந்தன. அவை சிவப்பதும் வெளிறுவதுமாக இருந்தன.

''அட உன்னைப் பேய் பிடித்தாட்ட!'' என்று கையை உதறினுன் செல்காஷ். ''என்மேல் காதல் கொண்டு விட்டாயா என்ன? கொஞ்சுகிறுன், சின்னப் பெண் மாதிரி... அல்லது என்னைப் பிரிய வருத்தமாய் இருக்கிறதோ? டேய், வாண்டு! சொல்லு, என்ன வேண்டும்? இல்லாவிட்டால் நான் போய் விடுவேன்!..''

''போய்விடுவாயா?!'' என்று உரக்கக் கத்தினுன் கவ்ரீலா.

வெறுமையான மணல் கரை அவனுடைய கத்தலால் திடுக்கிட்டது. கடல் அலைகளால் கழுவப்பட்ட மஞ்சல் மணல் அலைகள் எழுந்து தணிபவை போலத் தோற்றம் அளித்தன. செல்காஷும் திடுக்கிட்டான். திடீரென கவ்ரீலா இடத்திலிருந்து பாய்ந்து செல்காஷின் கால்களில் விழுந்தான். அவற்றை இரு கைகளாலும் கட்டிக் கொண்டு தன் பக்கம்

இழுத்தான். செல்காஷ் தள்ளாடிப் பொத்தென்று மணலில் உட்கார்ந்தான். பற்களை நெறுநெறுத்து, முட்டி பிடித்த நீண்ட கையைக் காற்றில் வேகமாக வீசினான். ஆனால் அவனால் தாக்க முடியாது போயிற்று. கவ்ரீலா நாணத்துடன் கெஞ்சிக் கிசுகிசுத்தது அவனைத் தடுத்து விட்டது.

''அப்பனே, இந்தப் பணத்தை எனக்குக் கொடு! இயேசுவின் பெயரால் கேட்கிறேன், கொடுத்துவிடு! உனக்கு இது எம்மாத்திரம்?.. ஒரு ராத்திரியில்—ஒரே இரவில்—சம்பாதித்து விடுவாய்... எனக்கோ, பல ஆண்டுகள் வேண்டும்... கொடு—உனக்காகப் பிரார்த்தனை செய்வேன். சதா காலத்துக்கும்—மூன்று மாதா கோயில்களில்—உன் ஆன்மாவின் கடைத்தேற்றத்துக்காக!.. நீ இதைக் காற்றில் பறக்க விட்டு விடுவாய்... நானோ, நிலத்தில் போடுவேன்! ஐயோ, இதை எனக்குக் கொடு! உனக்கு இந்தப் பணத்தால் ஆவதென்ன?.. இது உனக்கு ஒரு பிரமாதமா? ஒரு ராத்திரியில் நீ பணக்காரன் ஆகி விடுவாய்! நன்மை பண்ணு! நீயோ அழிந்து போனவன்... கடைத்தேற உனக்கு வழி இல்லை... நான் என்றால்—ஐயோ! பணத்தை எனக்குக் கொடு!''

அச்சமும் வியப்பும் சீற்றமும் பொங்க மணலில் கைகளை ஊன்றியவாறு பின்னே சாய்ந்து உட்கார்ந்திருந்த செல்காஷ் தன் முழங்கால்களில் தலையைப் புதைத்தவாறு மூச்சு திணற வேண்டுதல்கள் செய்து கொண்டிருந்த இளைஞனைப் பயங்கரமாக உறுத்துப் பார்த்தபடிப் பேசாதிருந்தான். முடிவில் அவனை நெட்டித் தள்ளி விட்டுத் துள்ளி எழுந்து நின்று, பையில் கையை நுழைத்து நோட்டுக்களை எடுத்து கவ்ரீலா மேல் எறிந்தான்.

''இந்தா! தின்னு...'' என்று கத்தினான். உள்ளக் கிளர்ச்சியாலும் இந்தப் பேராசைக்கார அடிமை மீது ஏற்பட்ட கடும் இரக்கத்தாலும் வெறுப்பாலும் அவன் உடல் படபடத்தது. பணத்தை எறிந்த பின் தான் வீரன் என்ற உணர்வு அவனுக்கு உண்டாயிற்று.

''நானே உனக்கு அதிகம் கொடுக்க விரும்பினேன். நேற்று இரக்கத்தால் உள்ளம் நெகிழ்ந்து போனேன், கிராமத்தை நினைத்துக் கொண்டேன். இளைஞனுக்கு உதவி செய்வோம் என்று எண்ணினேன். நீ என்ன செய்கிறாய், கேட்கிறாயா

இல்லையா என்று பார்ப்பதற்காகக் காத்திருந்தேன். நீ என்னடா என்றால்... அட, கந்தல் சுருணை! பிச்சைக்காரப் பயலே!.. பணத்துக்காகத் தன்னை இப்படி வதைத்துக் கொள்ளலாமா? மூடா! பேராசைக்காரப் பேய்கள்!.. தன்னை மறந்து விடுகிறார்கள்!.. ஐந்து காசுக்காகத் தன்னையே விற்று விடுகிறீர்கள்!..''

''என் அப்பனே!.. கிறிஸ்து உன்னைக் காப்பாராக! இப்போது நான் யார் தெரியுமா?.. இப்போது நான்... பணக்காரன்!..'' என்று உவகைப் பெருக்கில் கீச்சிட்டான் கவ்ரீலா. பணத்தைச் சட்டை மார்பில் வைத்துக் கொள்கையில் அவன் உடம்பு நடுங்கியது. ''அருமை அண்ணே!.. ஆயுள் முழுவதும் மறக்க மாட்டேன்!.. ஒருபோதும்!.. மனைவியிடமும் மக்களிடமும் சொல்லுவேன் பிரார்த்தனை பண்ணும்படி!''

செல்காஷ் அவனுடைய மகிழ்ச்சிக் கூச்சலைக் கேட்டான், பேராசைப் பெருக்கால் கோணிப் பளிச்சிட்ட முகத்தைப் பார்த்தான். திருடனும் குடித்துக் களிப்பவனும் சொந்தக்காரர்கள் எல்லோருடனும் உறவை அறுத்துக் கொண்டு விட்டவனும் ஆகிய தான் இத்தகைய பேராசைக்காரனாகவும் இழிந்தவனாகவும் தன் மதிப்பை மறந்தவனாகவும் ஒருபோதும் இருக்க மாட்டான் என்று உணர்ந்தான். ஒருபோதும் இம்மாதிரி ஆக மாட்டான்!.. இந்த எண்ணமும் உணர்ச்சியும் தனது விடுதலை பற்றிய உணர்வை அவனுள் நிறைத்தன. இவற்றின் காரணமாகவே ஆளற்ற கடற்கரையில் கவ்ரீலாவின் அருகே அவன் தயங்கி நின்றான்.

''நீ எனக்கு இன்பம் தந்து விட்டாய்!'' என்று கூவினான் கவ்ரீலா. செல்காஷின் கைகளைப் பற்றி அவற்றில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

செல்காஷ் பேசாமல் ஓநாய் போலப் பற்களைக் காட்டினான். கவ்ரீலாவின் சொற்பெருக்கு ஓயவில்லை:

''நான் என்ன நினைத்தேன் தெரியுமா? நாம் இங்கே வந்து கொண்டிருந்தோம்... நான் நினைத்தேன்... இவனை—உன்னை—துடுப்பால்...ஒருபோடு போடுகிறேன்!..பணத்தை எடுத்துக் கொள்கிறேன், இவனை அதாவது உன்னை... கடலில் தள்ளி விடுகிறேன்... ஊம்? இவன் இல்லை என்பதை யார் கவனிக்கப் போகிறார்கள்? கண்டால் கூட, எப்படி, யார் என்று ஒருவரும் விசாரிக்க மாட்டார்கள். இவனுக்காகக்

கூச்சலைக் கிளப்பும்படி இவன் அப்பேர்ப்பட்ட ஆள் அல்ல!.. உலகத்தில் ஒருவருக்கும் தேவை இல்லாதவன்! இவனிடம் யாருக்கு அக்கறை?''

''இப்படிக் கொடு பணத்தை!'' என்று கவ்ரீலாவின் குரல் வளையைப் பற்றியவாறு கர்ஜித்தான் செல்காஷ்.

கவ்ரீலா ஓரிரு தடவை திமிறினான். செல்காஷின் மறுகரம் பாம்பு போல அவனை வளைத்துப் பிடித்தது... டர்ரென்று சட்டை கிழிந்த சத்தம் கேட்டது. கவ்ரீலா தரையில் கிடந்தான். அவனுடைய கண்கள் வெறியுடன் முறைத்தன, கை விரல்கள் காற்றைப் பிறாண்டின, கால்கள் உதைத்துக் கொண்டன. வேட்டை விலங்கு போன்று நேரான, சதைப்பிடிப்பு அற்ற மேனியனான செல்காஷ் வன்மத்துடன் பற்களைக் காட்டியவாறு கடகடவென்று நெருப்புச் சிரிப்பு சிரித்தான். அவனுடைய எலும்பு துருத்திய கூரிய முகத்தில் மீசை பதற்றத்துடன் துடித்தது. வாழ்நாள் முழுவதிலும் ஒருபோதும் யாரும் அவனை இவ்வளவு வலிக்கும்படி அடித்ததில்லை, அவனும் ஒரு போதும் இவ்வளவு சினம் கொண்டதில்லை.

''என்ன, இன்பம் அடைந்து விட்டாயா?'' என்று சிரிப்பினூடே கவ்ரீலாவிடம் கேட்டு விட்டு அவனுக்கு முதுகைக் காட்டியவாறு திரும்பி நகரத்தின் திக்கில் நடந்தான். ஆனால் அவன் ஐந்து அடி நடப்பதற்குள் கவ்ரீலா பூனை போல் வளைந்து துள்ளி எழுந்து கையை வீசி ஆட்டி, ''ஒரு போடு!..'' என்று வன்மத்துடன் கத்தியவாறு ஒரு கூழாங்கல்லை அவன் மேல் எறிந்தான்.

செல்காஷ் தலையைக் கைகளால் பிடித்தவாறு கமறினான், தள்ளாடி முன்னே நகர்ந்தான், கவ்ரீலா பக்கம் திரும்பி மணலில் முகம் குப்புற விழுந்து விட்டான். கவ்ரீலா அவனை நோக்கியவாறு சிலையாக நின்றான். செல்காஷ் காலை அசைத்தான், தலையை நிமிர்த்த முயன்றான், மீட்டிய தந்தி போல நடுங்கி விரைப்பாக நீண்டு படுத்து விட்டான். அப்போது கவ்ரீலா மூடுபனி அடர்ந்த ஸ்தெப்பி வெளிக்கு மேலே கரிய சடை மேகங்கள் மிதந்த இருண்ட தொலைவின் பக்கம் பாய்ந்தோடினான். அலைகள் மணல் மேல் பெருகி அவற்றோடு கலப்பதும் மறுபடி பெருகுவதுமாக ஓசை செய்தன. நுரை சீறியது, நீர்த் திவலைகள் காற்றில் பறந்தன.

மழை பெய்யலுற்றது. சிறு தூறலாகத் தொடங்கியது,

வானத்திலிருந்து மெல்லிய தாரைகளாகக் கொட்டிய பெருத்த அடை மழையாக விரைவில் மாறியது. மழைத் தாரைகள் நீர் நூல்களால் பெரிய வலை பின்னின. இந்த வலை தொலைதூர ஸ்தெப்பி வெளியையும் தொலைதூரக் கடலையும் உடனே மூடிவிட்டது. கவ்ரீலா அவன் பின் மறைந்து போனான். மழையையும் கடலருகே மணலில் கிடந்த நெடிய மனிதனையும் தவிர வேறு எதுவும் நெடுநேரம் பார்வைக்குப் புலப்படவில்லை. பின்பு மழையிலிருந்து மறுபடி வெளிப் பட்டான் ஓடி வந்த கவ்ரீலா. அவன் பட்சியாய்ப் பறந்து வந்தான். செல்காஷின் அருகே ஓடி வந்து அவன் முன்னே விழுந்து அவனைத் தரையில் நகர்த்த முயன்றான். வெதுவெதுப் பான சிவப்புக் கோழையில் அவன் கை தோய்ந்தது... அவன் திடுக்கிட்டு, வெறித்து வெளிறிய முகத்துடன் தள்ளாடி விலகினான்.

''அண்ணே, எழுந்திரேன்!'' என்று மழையின் இரைச்சலில் செல்காஷின் காதில் கிசுகிசுத்தான்.

செல்காஷ் உணர்வடைந்து கவ்ரீலாவை அப்பால் தள்ளி, ''போடா அப்பாலே!'' என்று கரகரத்த குரலில் கூறினான்.

''அண்ணே! மன்னி!.. சாத்தான்தான் என்னை இப்படி...'' என்று செல்காஷின் கையை முத்தமிட்டு உடல் பதறக் கிசுகிசுத்தான் கவ்ரீலா.

''போ... நட அப்பாலே!'' என்று கரகரத்தான் அவன்.

''என் ஆன்மாவில் பட்ட பாவக் கறையைப் போக்கு!.. அருமை அண்ணே! மன்னித்து விடு!..''

''மன்... அட போடா!.. போடா சாத்தான் கிட்டே!'' எனத் திடீரென்று கத்தி மணலில் உட்கார்ந்தான் செல்காஷ். அவனுடைய முகம் வெளிறி, வன்மக் குறி காட்டியது. கண் கள் கலங்கி, மூடிக் கொண்டன. அவனுக்குப் பலமாக உறக்கம் வருவது போலிருந்தது. ''இன்னும் என்ன வேண்டும் உனக்கு? உன் காரியத்தை நீ செய்தாயிற்று... போ! ஒழி!'' துயரத்தால் மாய்ந்து போன கவ்ரீலாவைக் காலால் உதைக்க முயன்றான், ஆனால் முடியவில்லை. கவ்ரீலா அவன் தோள்களை அணைத்துத் தாங்கி இராவிட்டால் மறுபடி நிலைகுலைந்து விழுந்திருப்பான். இப்போது செல்காஷின் முகம் கவ்ரீலா வின் முகத்துக்கு நேர் மட்டத்தில் இருந்தது. இருவருடைய முகங்களும் வெளிறிப் பயங்கரமாக இருந்தன.

செல்காஷ் தன் வேலையாளின் விரியத் திறந்த கண்களில் ''த்தூ'' என்று துப்பினான்.

கவ்ரீலா சட்டைக் கைகளால் பணிவாகத் துடைத்துக் கொண்டு கிசுகிசுத்தான்:

''என்ன வேண்டுமானாலும் செய்... ஒரு வார்த்தை பதில் பேச மாட்டேன். கிறிஸ்துவுக்காக மன்னித்து விடு!''

''அற்பப் பூச்சி!.. மோசடி பண்ணவும் உன்னால் முடியாது!..'' என்று இகழ்ச்சியுடன் கத்தி உடுப்புக்கு அடியில் இருந்த தனது சட்டையைக் கிழித்து மௌனமாக, எப்போதாவது மட்டும் பற்களை நெறுநெறுத்தவாறு, தலைக்குக் கட்டு போட்டுக் கொண்டான். ''பணத்தை எடுத்துக் கொண்டாயா?'' என்று பற்களின் ஊடாகச் சீறினான்.

''நான் எடுத்துக் கொள்ளவில்லை அதை, அண்ணே! வேண்டாம் எனக்கு!.. தொலை அதனால்!..''

செல்காஷ் தன் உடுப்புப் பையில் கையை விட்டு நோட்டுக் கற்றையை எடுத்து, ஒரு நூறு ரூபிள் நோட்டை மறுபடி பையில் வைத்துக் கொண்டு மீதத்தை எல்லாம் கவ்ரீலா விடம் நீட்டினான்.

''எடுத்துக் கொண்டு போய்த் தொலை!''

''எடுத்துக் கொள்ள மாட்டேன், அண்ணே!.. என்னால் முடியாது! மன்னித்து விடு!''

செல்காஷ் கண்களைப் பயங்கரமாக உருட்டி விழித்து, ''எடுத்துக் கொள் என்கிறேன்!..'' என்று முழங்கினான்.

''மன்னித்து விடு!..அப்போது எடுத்துக் கொள்கிறேன்...'' என்று கூச்சத்துடன் கூறி மழை கொட்டி நனைத்திருந்த ஈர மணலில் செல்காஷின் கால்களில் விழுந்தான் கவ்ரீலா.

''புளுகுகிறாய், எடுத்துக் கொள்வாய், பூச்சிப் பயலே!'' என்று உறுதியாகக் கூறி, அவன் மயிரைப் பற்றித் தலையைச் சிரமத்துடன் நிமிர்த்தி அவன் முகத்தில் பணத்தை நுழைத்தான் செல்காஷ்.

''எடுத்துக் கொள்! எடுத்துக் கொள்! நீ சக்காத்துக்கு வேலை செய்யவில்லை! எடுத்துக் கொள், பயப்படாதே! மனிதனை அனேகமாகக் கொல்லப் பார்த்ததற்கு வெட்கப் படாதே! என் மாதிரி ஆட்களுக்காக யாரும் உன்னைத் தண்டிக்கப் போவதில்லை. சேதி தெரிந்ததும் கொன்றவனுக்கு நன்றி கூடச் சொல்லுவார்கள். இந்தா, எடுத்துக் கொள்!''

செல்காஷ் சிரித்ததைக் கண்டு கவ்ரீலாவுக்கு அப்பாடா என்று இருந்தது. பணத்தைக் கையில் இறுகப் பிடித்துக் கொண்டான்.

''அண்ணே! என்னை மன்னிப்பாயா? மாட்டாயா? ஊம்?'' என்று கண்ணீர் மல்கக் கேட்டான்.

செல்காஷ் எழுந்து நின்று தள்ளாடிக் கொண்டு அவனுடைய தோரணையில் அவனுக்குப் பதிலளித்தான்: ''அருமைத் தம்பீ!.. எதற்காக? மன்னிப்பதற்கு ஒன்றும் இல்லை! இன்றைக்கு நீ என்னை அனேகமாகக் கொன்று விட்டாய், நாளைக்கு நான் உன்னை...''

கவ்ரீலா தலையை ஆட்டி, ''அட, அண்ணே, அண்ணே!..'' என்று வருத்தத்துடன் பெருமூச்செறிந்தான்.

செல்காஷ் அவன் எதிரே நின்று விந்தையாக முறுவலித்தான். அவன் தலையில் சுற்றியிருந்த துணி கொஞ்சங் கொஞ்சமாகச் சிவப்பாகி, துருக்கியத் தொப்பி போலத் தோற்றம் அளிக்கலாயிற்று.

மழை சோனு மாரியாகக் கொட்டிற்று. கடல் தெளிவின்றி முழங்கிற்று, அலைகள் வெறியும் சீற்றமும் பொங்கக் கரை மேல் மோதி அடித்தன.

இரு மனிதர்களும் சற்று நேரம் பேசாதிருந்தார்கள்.

''நல்லது, விடை கொடு!'' என்று கேலியாகக் கூறி விட்டு வழி நடந்தான் செல்காஷ்.

அவன் தள்ளாடினான். அவனுடைய கால்கள் நடுங்கின. தலை பறிபோய்விடும் என்று அஞ்சுபவன் போல அதை விந்தையாகப் பிடித்துக் கொண்டிருந்தான்.

''மன்னித்து விடு, அண்ணே!..'' என்று இன்னும் ஒரு முறை கெஞ்சினான் கவ்ரீலா.

''பரவாயில்லை!'' என்று வரண்ட குரலில் சொல்லிவிட்டு நடையைக் கட்டினான் செல்காஷ்.

இடது கையால் தலையை இன்னும் தாங்கிக் கொண்டும் வலது கையால் பழுப்பு மீசையை மெதுவாக முறுக்கிக் கொண்டும் தள்ளாடியவாறு நடந்தான் அவன்.

மழை மேகங்களிலிருந்து முடிவற்ற மெல்லிய தாரைகளாக நிமிடத்துக்கு நிமிடம் அதிக அடர்த்தியாகப் பொழிந்து பார்வை ஊடுருவ முடியாத எஃகு நிற மூட்டத்தால் ஸ்தெப்பி வெளியைப் போர்த்தியது. செல்காஷ் அந்த மழையில்

மறையும் வரை கவ்ரீலா அவன் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பிறகு கவ்ரீலா நனைந்த தொப்பியைக் கழற்றி, சிலுவைக் குறி இட்டுக் கொண்டு உள்ளங்கையில் இறுகப் பிடித்திருந்த பண நோட்டுக்களைப் பார்த்து விட்டாற்றியாக ஆழ்ந்த பெருமூச்சு விட்டு, நோட்டுக்களைச் சட்டை மார்பில் வைத்துக் கொண்டு, செல்காஷ் சென்றதற்கு எதிர்த் திசையில் அகலமாக, உறுதியாக அடி வைத்து நடந்தான்.

கடல் ஊளையிட்டது, கனத்த பெரிய அலைகளைக் கரையோர மணலில் வீசி எறிந்து அவற்றைத் திவலைகளாகவும் நுரையாகவும் சிதறடித்தது. நீரையும் நிலத்தையும் மழை ஆவேசத்துடன் கூறு போட்டது... காற்று உரத்து முழங்கிற்று... சுற்றிலும் எல்லாம் ஊளையாலும் முழக்கத்தாலும் ஆரவாரத்தாலும் நிறைந்தன... மழையில் கடலும் கண்ணுக்குத் தெரியவில்லை, வானமும் புலப்படவில்லை.

செல்காஷ் கிடந்த இடத்தில் இருந்த சிவப்புக் கறையை மழையும் அலை நீர்த் திவலைகளும் விரைவில் கழுவிப் போக்கி விட்டன. கரையோர மணலில் இருந்த செல்காஷின் தடங்களையும் இளைஞனின் தடங்களையும் அவை கழுவிப் போக்கி விட்டன... இரண்டு ஆட்களுக்கிடையே நடிக்கப் பெற்ற சிறு நாடகத்தை நினைவுபடுத்தக் கூடியது எதுவும் வெற்றுக் கடற்கரையில் எஞ்சி இருக்கவில்லை.

கிழவி இஸெர்கீல்

1

பெஸ்ஸரேபியாவில், அக்கெர்மான் என்னும் இடத்தின் அருகேயுள்ள கடற்கரையில் இந்தக் கதைகளை நான் கேட்டேன்.

மல்தாவியர்களின் ஒரு குழுவுடன் முந்திரிக் குலைகளை நறுக்கிச் சேகரிக்கும் வேலை செய்து வந்தேன் நான். ஒரு நாள் மாலை, வேலை முடிந்ததும் குழுவினர் கடற்கரைக்குப் போய் விட்டார்கள். நானும் கிழவி இஸெர்கீலும் அடர்ந்த முந்திரிக்கொடியின் அடியில் தரைமீது படுத்தபடியே, கடற்புறம் செல்பவர்களின் நிழலுருக்கள் படரும் மங்குலில் ஒன்றிப் போவதை மௌனமாகக் கவனித்துக் கொண்டிருந்தோம்.

பாட்டும் சிரிப்புமாக அவர்கள் நடந்தார்கள். கருகருவென்று அடர்ந்த மீசைகளும் தோள்வரை தொங்கிய அடர்த்தியான சுருட்டைக் கேசமும் வாய்ந்த வெண்கல நிற ஆடவர்கள், குட்டைச் சட்டைகளும் அகன்ற சராய்களும் அணிந்திருந்தார்கள். குதூகலமும் ஒயிலும் கருநீல விழிகளும் கொண்ட மாதரும் மகளிரும் ஆண்களைப் போலவே வெண்கல நிறத்தில் ஒளிர்ந்தார்கள். அவர்களது கரும்பட்டுக் கூந்தல்கள் அவிழ்ந்து தொங்கின. அவற்றுடன் விளையாடிய கதகதப்பான மென் காற்று, அவற்றில் பின்னியிருந்த அலங்கார நாணயங்களைக் கிலுக்கியது. அகன்ற, ஒருசீரான அலையாக வீசிய காற்று, இருந்தாற் போலிருந்து ஏதோ கண்ணுக்குப் புலப்படாத தடையைத் தாண்டுவது போன்று குதித்தெழும். காற்றின் அந்தக் கொந்தளிப்பினுல் பெண்களின் சுரிகுழல் விசித்திரமான பிடரிகள் போலச் சிலிர்த்து

எழுந்து அவர்கள் தலைகளைச் சுற்றிப் பறக்கும். இதனால் அம் மகளிர் ஏதோ கதைகளில் வரும் பாத்திரங்கள் போன்று விந்தைத் தோற்றம் அளித்தார்கள். அவர்கள் எங்களை விட்டு விலகி அப்பால் செல்லச் செல்ல, இரவும் என் கற்பனையும் சேர்ந்து அவர்களை மேலும் மேலும் அழகிகளாகக் காட்டின.

யாரோ பிடில் வாசித்தான்... ஒரு பெண் தணிந்த மென் குரலில் பாடினாள்... நகைப்பு ஒலி காதில் பட்டது...

கடலின் சுள்ளென்ற நெடியும், அந்திக்கு முன்பு சற்று நேரம் கொட்டிய மழையால் சொதசொத வென்று ஊறி யிருந்த தரையிலிருந்து எழுந்த ஈர ஆவி வாடையும் காற்றில் நிறைந்திருந்தன. விந்தை விந்தையான வடிவங்களும் வண் ணங்களுங் கொண்ட பஞ்சு மேகத் துணுக்குகள், ஓரிடத்தில் புகைச் சுருள்கள் போன்று மென்மையும் சாம்பல் நிறமும் தண் நீலமும் கொண்டும், மற்றோரிடத்தில் பாறைத் துண்டு கள் போலக் கூர்மையாகவும் மங்கிய கருமை அல்லது பழுப்பு நிறத்துடனும் இப்போதுங்கூட வானில் மிதந்து கொண் டிருந்தன. அவற்றின் இடையிடையே கொஞ்சலாக எட்டிப் பார்த்தன வானத்தின் ஆழ்நீல ஒட்டுக்கள், விண்மீன்களின் தங்க ஜிகினுக்கள் அவற்றிற்கு அணி செய்தன. இந்த ஒலிகளும் மணங்களும், முகில்களும் மாந்தரும்—இந்த எல்லா விஷயங் களுமே—அற்புதக் கதை ஒன்றின் தொடக்கம் போல விசித் திர அழகும் ஏக்கமும் பொலிந்து இலகின. எல்லாமே வளர்ச்சி தடைப்பட்டு மடிந்து விட்டன போன்று தோன்றின. குரல் ஒலிகள் மேலும், மேலும் தொலைவில் சென்று தணிந்து கொண்டே போய், சோகப் பெருமூச்சுகள் ஆகி விட்டன.

கிழவி இஸெர்கீல் மற்றவர்கள் சென்ற திக்கைத் தலை யசைப்பால் சுட்டி, ''நீ ஏன் அவர்களோடு போகவில்லை?'' என்று கேட்டாள்.

காலம் அவளை ஒரேயடியாகக் கூன வைத்து விட்டது. ஒரு காலத்தில் பளிச்சிட்ட கருங்கண்கள் இப்போது ஒளி இழந்து நீர் மல்கி இருந்தன. அவளது வறண்ட குரல் விசித் திரமாக ஒலித்தது; எலும்பு நொறுங்குவது போன்று கறு முறுத்தது.

''எனக்கு இஷ்டமில்லை!'' என்று பதிலளித்தேன்.

''ஐயே!.. நீங்கள் இருக்கிறீர்களே, ருஷ்யர்கள், கிழடு களாகவே பிறந்தவர்கள். ஒரேயடியாகக் கருங்குரும் என்று,

அரக்கர்கள் போல... எங்கள் பெண்கள் பயப்படுகிறார்கள் உன்னிடம்... இவ்வளவிற்கும் நீ வாலிபன், பலசாலி...''

நிலவு எழுந்தது. மதி வட்டம் மிகப் பெரிதாக, இரத்தச் செம்மை படர்ந்து தகதகத்தது. ஒரு காலத்தில் எத்தனையோ மாந்தர்களின் இறைச்சியை விழுங்கி, உதிரத்தைக் குடித்து, அதன் காரணமாகவே போலும் ஈரிப்பும் செழுமையும் நிறைந்திருந்த இந்த ஸ்தெப்பி வெளியின் உதரத்திலிருந்து உதித்தது போலத் தோன்றியது திங்கள். முந்திரி இலைகளின் நாடாப் பின்னல் போன்ற நிழல் எங்கள் மீது விழுந்தது. அவற்றால் மூடப்பட்ட நானும் கிழவியும் வலையில் அகப்பட்டவர்கள் போலத் தோற்றமளித்தோம். எங்களுக்கு இடப்புறம் ஸ்தெப்பி வெளி மீது மிதந்து சென்றன முகில் நிழல்கள். சந்திரனின் நீல நிலவால் ஒளியுறுத்தப்பட்ட மேகங்கள் ஒளி ஊடுருவக் கூடியவையாகவும் அதிகப் பிரகாசமாகவும் காணப்பட்டன.

''அதோ பார்! லாரா வருகிறான்!''

வளைந்த விரல்கள் கொண்ட நடுங்கும் கையால் கிழவி சுட்டிக்காட்டிய திக்கில் பார்வையைச் செலுத்தினேன். அங்கே எனக்குத் தென்பட்டன மிதக்கும் நிழல்கள். எத்தனையோ நிழல்கள் தெரிந்தன. ஆனால் அவற்றில் ஒன்று மற்றவற்றை விடக் கருமையாகவும் அடர்த்தியாகவும் இருந்தது; தனது சோதரிகளைக் காட்டிலும் அதிக விரைவாகவும் தாழ்வாகவும் நீந்திச் சென்றது அது. மற்ற மேகங்களைவிடத் தரைக்கு அருகாமையிலும் மிகுந்த வேகத்துடனும் மிதந்து சென்ற முகில் கந்தல் ஒன்றின் நிழல் அது.

''அங்கே யாரையும் காணோமே!'' என்றேன்.

''கிழவியான என்னைவிட உனக்குப் பார்வை மந்தம். அதோ பார், கரேல் என்று, ஸ்தெப்பி வெளி மீது ஓடுகிறானே!''

நான் மறுபடியும் பார்த்தேன், எனினும் நிழல்களைத் தவிர வேறு எதுவும் எனக்குப் புலப்படவில்லை.

''அது நிழல் அல்லவா? அதை ஏன் லாரா என்கிறாய்?''

''ஏன் என்றால் அது அவன்தான். இப்போது அவன் வெறும் நிழல் ஆகி விட்டான். காலம் அப்படி ஆக்கி விட்டது அவனை! ஆயிரம் ஆயிரம் வருஷங்களாக அவன் வாழ்ந்து வருகிறான். அவன் உடலையும் உதிரத்தையும் எலும்புகளையும் வெயில்

வறட்டி விட்டது. காற்ருே, அவற்றைப் புழுதி போலப் பறக்கடித்து விட்டது. ஆணவம் உள்ளவனை ஆண்டவன் என்ன பாடு படுத்த முடியும் என்பதை இதிலிருந்தே கண்டுகொள்!''

''இது எப்படி நிகழ்ந்தது, சொல்லேன்!'' என்று கிழவியைக் கேட்டுக் கொண்டேன். ஸ்தெப்பி வெளியில் உருவான புகழ்பெற்ற கதை ஒன்று வரப் போகிறது என்பது என் உணர்வில் பட்டு விட்டது.

அவள் இந்தக் கதையை எனக்குச் சொன்ஞள்.

''இது நடந்து எத்தனையோ ஆயிரம் வருஷங்கள் ஆகி விட்டன. கடலுக்கு அப்பால் நெடுந் தொலைவிலே, சூரியன் எழும் திக்கிலே, பெரிய ஆறு பாயும் தேசம் ஒன்று உண்டு. அங்கே மரங்களின் ஒவ்வோர் இலையும், புல்லின் ஒவ்வொரு தாளும், நெருப்பாய்ப் பொசுக்கும் வெயிலிலிருந்து மனிதன் தன்னை மறைத்துக் கொள்வதற்கு வேண்டிய அளவு நிழல் தரும்.

''அந்த நாட்டின் மண் வளம் அப்பேர்ப்பட்டது!

''அங்கே வலிமை மிக்க இனத்தவர் வாழ்ந்தார்கள். அவர்கள் ஆடு மாடுகளை மேய்த்தார்கள், காட்டு விலங்குகளை வேட்டையாடுவதில் சக்தியையும் ஆண்மையையும் செலவிட்டார்கள். வேட்டைக்குப் பிறகு விருந்து உண்டு களித்தார்கள், பாட்டுக்கள் பாடிஞர்கள், பெண்களோடு விளையாடிஞர்கள்.

''ஒரு தடவை விருந்தின் போது, கழுகு ஒன்று வானத்திலிருந்து சரேலென்று பாய்ந்து, கருங் குழலும் இரவு போன்ற மென்மையும் கொண்ட ஒரு கன்னியைத் தூக்கிப் போய் விட்டது. அதன் மீது ஆண்கள் எய்த ஆற்றமாட்டாத அம்புகள், மறுபடி தரையில் விழுந்தன. அப்புறம் ஆடவர்கள் அந்தப் பெண்ணை எங்கும் தேடிஞர்கள். ஆனல் அவளைக் கண்டு பிடிக்க முடியவில்லை. பிறகு அவளைப் பற்றி மறந்து விட்டார்கள், உலகில் எல்லாவற்றையும் பற்றி மறந்து விடுவது போல.''

கிழவி பெருமூச்சு விட்டு மௌனமாயிருந்தாள். அவளது நெஞ்சில் நினைவுகளாக உயிர்த்தெழுந்த மறந்த யுகங்கள் எல்லாம் முணுமுணுத்து முறையிடுவது போல ஒலித்தது கிழவியின் கரகரத்த குரல். கடல், தனது கரையில் ஒருவேளை



படைக்கப்பட்ட கதைகளில் ஒன்றின் தொடக்கத்தை மெல்லென எதிரொலித்தது.

''இருபது ஆண்டுகளுக்குப் பின் அந்தப் பெண் தளர்ந்து சுருங்கிய மேனியுடன் திரும்பி வந்தாள். இருபது ஆண்டு களுக்கு முன் அவள் திகழ்ந்தது போலவே வனப்பும் வலிவும் இலகிய ஒரு வாலிபன் அவளோடு வந்தான். எங்கே போயிருந்தாய் என்று கேட்டதற்கு அவள், கழுகு தன்னை மலை மேல் தூக்கிச் சென்றதாகவும், அங்கே மனைவியோடு வாழ்வது போலத் தன்னுடன் வாழ்ந்ததாகவும் சொன்னாள். உடனிருந்தவன்தான் அவனுடைய மகனும். தகப்பன் உயிரோடு இல்லையாம். உடல் தளரத் தொடங்கியதுமே கழுகு கடைசித் தடவையாக வானத்தில் வெகு உயரே பறந்து போய், சிறகு களை மடித்துக் கொண்டு, மலையின் கூர்மையான குத்துப் பாறைகள் மேல் பொத்தென்று விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டதாம்...

''எல்லோரும் கழுகின் மகனை வியப்போடு பார்த்தார் கள். தங்களைவிட அவன் எவ்விதத்திலும் உயர்ந்தவனில்லை என்பதைக் கண்டார்கள். அவன் கண்கள் மட்டுந்தான் புள்ளரசனின் விழிகளைப் போலவே கடூரமும் கர்வமும் கொண் டிருந்தன. அவனிடம் பேச்சுக் கொடுத்தார்கள். அவனோ, இஷ்டப்பட்ட போது பதில் சொன்னான், இல்லாவிட்டால் பேசாதிருந்தான். இன முதியவர்கள் வந்ததும் அவன் தனக்குச் சமமானவர்களுடன் பேசுவது போல அவர்களுடன் உரையாடினான். இதை அவர்கள் அவமதிப்பாகக் கருதினார் கள். தீட்டிக் கூராக்கப்படாத, இறகு செருகாத அம்பு என்று அவனை அவர்கள் கடிந்து கொண்டார்கள். அவனைப் போன்ற ஆயிரக் கணக்கானவர்களும் அவனிலும் இரு மடங்கு வயதில் மூத்த ஆயிரமாயிரம் பெயரும் தங்களை வணங்கி, தங்களுக்குக் கீழ்ப்படிவதாகக் கூறினார்கள். அவனோ, துணிவுடன் அவர்களை முறைத்துப் பார்த்து, தனக்கு ஈடானவர்கள் எவருமே இல்லை என்றும், மற்றவர்கள் எல்லோரும் அவர்களுக்குப் பணிந்தாலும் தான் பணிய விரும்பவில்லை என்றும் பதில் சொன்னான். அடேயப்பா!.. அப்போது அவர்களுக்கு ஒரேயடியாகக் கோபம் வந்து விட்டது.

'' 'நமக்கிடையே இவனுக்கு இடம் இல்லை! எங்கு வேண்டுமோ போய்க் கொள்ளட்டும்!' என்று ஆத்திரம் பொங்கக் கூறினார்கள்.

''அவன் கடகட வென்று நகைத்து, தனக்கு விருப்பமான திக்கில்—தன்மீது பதித்த பார்வையை அகற்ருமல் நோக்கிக் கொண்டிருந்த அழகிய பெண் ஒருத்தியிடம்—போனுன். போய் அவளைத் தழுவிக் கொண்டான். அவளோ, அவனைக் கடிந்து கொண்ட முதியவர்களில் ஒருவனுடைய மகள். அவன் மிக அழகன் ஆன போதிலும், தகப்பனுரிடம் பயம் காரணமாக அவள் அவனை நெட்டித் தள்ளி விட்டாள். அவனை நெட்டித் தள்ளி விட்டு, அப்பால் நகர்ந்தாள். அவனே அவளை அறைந்தான். அவள் தரையில் விழுந்தாள். அவன் அவள் மார்பின் மேல் கால் வைத்து நின்று கொண்டான். அவளுடைய வாய் வழியாக இரத்தம் ஆகாயத்தை நோக்கிப் பீச்சியடித்தது. பெண்ணுக்கு மூச்சு முட்டியது. அவள் பாம்பு நெளிவது போலத் துடித்தாள், பின்பு இறந்து போனுள்.

''இதைப் பார்த்தவர்கள் எல்லோருக்கும் அச்சத்திஞல் உடல் மரத்துப் போயிற்று. அவர்கள் முன்னிலையில் ஒரு பெண்இம்மாதிரிக் கொல்லப்பட்டது இதுதான் முதல் தடவை. வெகு நேரம் அவர்கள் பேச்சின்றி நின்று, திறந்த கண்களும் இரத்தக் கறை படிந்த வாயுமாகக் கிடந்த பெண்ணையும், தங்களெல்லோரையும் செருக்குடன் எதிர்த்து அவளருகே நின்ற இளைஞனையும் மாறி மாறிப் பார்த்தார்கள். தண்டனை கோரித் தலை வணங்கவில்லை அவன். திகைப்பிலிருந்து விடுபட்டதும் அவர்கள் அவனைப் பிடித்துக் கட்டிப் போட்டு, அப்படியே விட்டுவிட்டார்கள். அவனை உடனேயே கொன்று விடுவது மிக எளிய தண்டனையாகும், அதனுல் தங்களுக்குத் திருப்தி ஏற்படாது என்று அவர்களுக்குப் பட்டது.''

இரவு அடர்ந்து கறுத்தது. விந்தையான மெல்லொலிகள் அதில் நிறைந்தன. வயலெலிகள் ஸ்தெப்பி வெளியில் ஏக்கத்துடன் சீழ்க்கை அடித்தன. முந்திரி இலைகளில் வெட்டுக் கிளிகளின் கண்ணுடிக் கிறீச்சொலி கேட்டது. இலைகள் பெரு மூச்சுவிட்டு இரகசியம் பேசின. முன்பு இரத்தச் சிவப்பாக இருந்த முழு மதி, தரைக்கு மேலே எழுந்ததும் வெளிறியது. மேலே போகப் போக அதிக வெளிறடைந்த திங்கள் ஸ்தெப்பி வெளி எங்கும் நீலம் படிந்த ஒளிர்வைப் பொழிந்தது...

''ஆயிற்று. அவனுக்கு உரிய தண்டனை எது என்று யோசிப்

பதற்காக எல்லோரும் கூடினார்கள்... குதிரைகளைக் கொண்டு அவன் உடலை இரு கூராகக் கிழித்து விடலாம் என்று சிலர் சொன்னார்கள். ஆனால் அவன் செய்த குற்றத்துக்கு இது போதாது என்று பட்டது. எல்லோருமாக அவன் மேல் அம்பு எய்வது என்று நினைத்தார்கள். ஆனால் இந்த யோசனையும் நிராகரிக்கப்பட்டு விட்டது. அவனை எரிக்கலாம் என்று சிலர் கூறினார்கள். ஆனால் நெருப்பிலிருந்து எழும் புகை அவன் படும் துன்பம் கண்ணுக்குத் தெரியாதபடி மறைத்து விடும் ஆகையால் இதுவும் கைவிடப்பட்டது. இப்படி எத்தனையோ யோசனைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் ஒன்றுவது எல்லோருக்கும் பிடித்ததாக இல்லை. அவர்கள் இப்படி விவாதித்துக் கொண்டிருக்கையில் இளைஞனுடைய தாய் அவர்களுக்கு முன்னே முழந்தாள் படியிட்டு, மௌனமாயிருந்தாள். கருணை காட்டும்படி அவர்களை இறைஞ்சுவதற்கு வேண்டிய கண்ணீரோ சொற்களோ அவளிடம் இல்லை. அவர்கள் வெகு நேரம் விவாதித்தார்கள். பின்பு ஒரு மூதறிஞன் நீண்ட சிந்தனைக்குப் பிறகு, 'எதற்காக இப்படிச் செய்தான் என்று இவனையே கேட்போமே!' என்றான்.

''அவனிடம் கேட்டார்கள்.

'' 'என்னைக் கட்டவிழ்த்து விடுங்கள். கட்டுக்கள் இருக்கும் வரையில் நான் பேச மாட்டேன்!' என்று அவன் சொல்லி விட்டான்.

''கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டதும் அவன், 'உங்களுக்கு என்ன வேண்டும்?' என்று, ஏதோ அடிமைகளிடம் கேட்பது போன்ற தோரணையில் வினவினான்.

'' 'முன்னமே சொல்லி விட்டோமே' என்றான் மூதறிஞன்.

'' 'எனது நடத்தைக்கு நான் உங்களுக்கு விளக்கம் கூறத் தேவை என்ன?'

'' 'நாங்கள் புரிந்து கொள்வதற்காகத்தான். கேள், கர்வம் பிடித்தவனே! நீயோ சாகத்தான் போகிறாய்... நீ செய்ததை நாங்கள் புரிந்து கொள்ளும்படி விளக்கு. நாங்கள் வாழ்ந்திருப்போம். ஆகவே இப்போது நாங்கள் அறிவதைக் காட்டிலும் அதிகமாக அறிந்து கொள்வது எங்களுக்கு நல்லது.'

'' 'சரி, சொல்கிறேன்—நடந்தது எனக்கே சரியாக விளங்காவிட்டாலும். அவள் என்னை நெட்டித் தள்ளினதனால்

தான் நான் அவளைக் கொன்றேன் போலிருக்கிறது... எனக்கோ, அவள் தேவையாயிருந்தாள்.'

'' 'ஆனால் அவள் உனக்குச் சொந்தமானவள் அல்லவே!' என்றார்கள் மூதறிஞர்கள்.

'' 'நீங்கள் உங்களுக்குச் சொந்தமானவற்றை மட்டுந்தான் உபயோகிக்கிறீர்களா? ஒவ்வொரு மனிதனுக்கும் பேச்சு, கைகள், கால்கள் ஆகியவை மாத்திரமே சொந்தம் என்பதை நான் காண்கிறேன். ஆனால் அவனே ஆடு மாடுகள், பெண்கள், நிலம், இன்னும் எத்தனையோ பொருள்கள் முதலியவற்றைச் சொந்தமாகக் கொள்கிறான்.'

''மனிதன் எடுத்துக் கொள்ளும் ஒவ்வொன்றுக்கும் அவன் தன்னைத்தானே, அறிவினாலும் பலத்தினாலும், சில வேளைகளில் உயிராலுமேகூட விலை செலுத்துகிறான் என்று இதற்குச் சமாதானம் கூறினார்கள் பெரியவர்கள். தான் தன்னை முழுமையாக வைத்துக் கொள்ள விரும்புவதாக அவன் பதில் சொன்னான்.

''வெகு நேரம் அவனோடு வார்த்தையாடினார்கள். உலகிலே தான்தான் முதல் என்று அவன் எண்ணுவதையும், தன்னைத் தவிர வேறு எதையும் பொருட்படுத்தவில்லை என்பதையும் கடைசியில் கண்டு கொண்டார்கள். அவன் எத்தகைய தனிமைக்குத் தன்னை ஆளாக்கிக் கொண்டிருக்கிறான் என்பதை அறிந்து அவர்கள் எல்லோருக்கும் பயங்கரமாக இருந்தது. அவனுக்கு இனத்தாரோ, தாயோ, ஆடு மாடுகளோ, மனைவியோ இல்லை. இவற்றில் எதுவும் வேண்டுமென்று அவன் விரும்பவுமில்லை.

''இதைப் புரிந்து கொண்டதும் அவனுக்கு என்ன தண்டனை விதிக்கலாம் என்று அவர்கள் மறுபடி யோசனை செய்யலானார்கள். ஆனால் இம்முறை அவர்கள் வெகு நேரம் விவாதிக்கவில்லை. அது வரை மௌனமாயிருந்த மூதறிஞன் இப்போது பேசினான்.

'' 'பொறுங்கள்! தக்க தண்டனை இருக்கிறது. ஆயிரம் ஆண்டுகள் யோசித்தாலும் இம்மாதிரித் தண்டனையை நீங்கள் நினைத்துப் பார்த்திருக்க முடியாது! இவனுக்கு உரிய தண்டனை இவனிடமே இருக்கிறது! விட்டு விடுங்கள் இவனை. சுதந்திரமாக நடமாடட்டும். அதுதான் இவனுக்குத் தண்டனை!' என்றான்.

''அப்போது ஓர் அற்புதம் நிகழ்ந்தது. வானில் மேகம் இல்லாவிடினும் இடி அதிர்ச்சி உண்டாயிற்று. தெய்விகச் சக்திகள் மூதறிஞனின் சொற்களை இவ்வாறு ஆமோதித்தன. எல்லோரும் வணங்கிவிட்டுக் கலைந்து சென்றூர்கள். விலக்கப் பட்டவன் என்று பொருள்படும் லாரா என்னும் பெயர் சூட்டப்பட்டு விட்டுவிடப்பட்ட வாலிபனே, தன்னை விட்டுச் செல்பவர்களை நோக்கி உரக்க நகைத்தான். தன்னந்தனியனுய், தனது தகப்பனைப் போலவே கட்டற்றவனுய் இருந்து கொண்டு நகைத்தான். ஆனுல் அவன் தந்தை மனிதனல்ல... இவனே மானிடன். ஆயினும் பறவை போலச் சுயேச்சையாக வாழலானுன். இனத்தாரின் குடியிருப்புக்குள் வந்து ஆடு மாடு களையும் பெண்களையும் விரும்பியவை எல்லாவற்றையும் அபகரித்துச் சென்றுன். ஜனங்கள் அவன் மேல் அம்புகளை எய்தனர். ஆனுல், பெருந்தண்டனை என்ற புலப்படாக் கவசத் திஞல் காக்கப்பட்டிருந்த அவனது உடலைக் கணைகளால் துளைக்க முடியவில்லை. தண்டனைப்படி அவனுல் சாக முடியாது. அவன் லாகவமுள்ளவன், கொள்ளை வெறி கொண்ட வன், பலசாலி, கொடியவன். மனிதர்களை அவன் நேருக்கு நேர் சந்திப்பது கிடையாது. தூரத்திலிருந்து தான் மக்கள் அவனைக் கண்டார்கள். இப்படியாக அவன் நெடுங்காலம், எத்தனையோ பத்தாண்டுகள் இனத்தாரின் குடியிருப்புக்களைச் சுற்றித் திரிந்து கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் மக்க ளுக்கு வெகு அருகே நெருங்கிஞன். ஜனங்கள் அவன் மீது பாய்ந்தார்கள். அவனே இடத்தை விட்டு நகரவுமில்லை, தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கான அறிகுறி எதையும் காட்டவுமில்லை. அப்பே ஒரு மனிதன் விஷயத்தை ஊகித்துக் கொண்டான்.

'' 'இவனைத் தொடாதீர்கள். இவன் சாகப் பார்க்கிருன்!' என்று உரக்கக் கத்திஞன்.

''ஆகவே எல்லோரும் நின்று விட்டார்கள். தங்களுக்குத் தீமை செய்தவனின் விதியை எளிதாக்க, அவனைக் கொல்ல, அவர்கள் விரும்பவில்லை, நின்று, அவனை எள்ளி நகையாடி ஞர்கள். அவன் இந்தக் கேலிப் பேச்சைக் கேட்டுக் கொண்டு, நடு நடுங்கியவாறு நின்று, தனது மார்பைக் கைகளால் இறுகப் பற்றி அங்கே எதையோ தேடிஞன். திடீரென்று அவன் ஒரு கல்லை எடுத்துக் கொண்டு ஜனங்கள் மேல் பாய்ந்தான்.

அவர்களோ, அவனிடம் அடி படாமல் தப்பித்துக் கொண்டார்களே தவிர, அவனைத் தாக்கவே இல்லை. முடிவில் அவன் களைத்துப் போய், புகலற்ற தீனக் கூச்சலுடன் தரையில் விழுந்தான். அப்போது அவர்கள் விலகி நின்று அவனைப் பார்த்தார்கள். அவன் எழுந்தான், போராட்டத்தின் போது எவனோ தவறவிட்டிருந்த கத்தியை எடுத்தான், அதைத் தன் மார்பில் பாய்ச்சிக் கொண்டான். ஆனால் கத்தியின் அலகு கல்லில் தாக்குண்டது போல முறிந்து விட்டது. அவன் மறுபடி விழுந்து நீண்ட நேரம் தலையைத் தரையில் மோதிக் கொண்டிருந்தான். ஆனால் தரை அவனது மோதலுக்கு விலகிக் கொடுத்தது. அதில் பிளவுகள் உண்டாயின.

'' 'இவனால் சாக முடியாது!' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினார்கள் ஜனங்கள்.

''அவர்கள் அவனை விட்டுவிட்டு அப்பால் போய்விட்டார்கள். அண்ணாந்து பார்த்தவாறு விழுந்து கிடந்த அவன், வானில் வெகு உயரே கரும் புள்ளிகள் போலப் பறந்து கொண்டிருந்த விறல் மிக்க கழுகுகளைக் கண்டான். உலக மக்கள் எல்லோருக்கும் நஞ்சூட்டப் போதுமானது போல அவ்வளவு கொடுந்துயர் அவன் கண்களில் காணப்பட்டது. அப்போது முதல் அவன் தனியனாய், கட்டற்றவனாய், இறப்பை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறான். சுற்றி அலைந்த வண்ணமாயிருக்கிறான். எங்கும் திரிந்து கொண்டிருக்கிறான்... பார்த்தாயா! இப்போதே அவன் வெறும் நிழல் ஆகி விட்டான். என்றென்றும் இப்படியே இருந்து வருவான். மனிதர்களுடைய பாஷையோ அவர்களது செயல்களோ, எதுவுமே அவனுக்குப் புரிவதில்லை. எப்போதும் எதையோ தேடி அலைகிறான். திரிகிறான்... அவனுக்கு வாழ்வு இல்லை. சாவும் அவனுக்கு அருள் புரிய மாட்டேன் என்கிறது. மக்களுக்கிடையே அவனுக்கு இடமில்லை... செருக்குக்கு மனிதன் அடைந்த தண்டனை இப்படிப்பட்டது!''

கிழவி பெருமூச்செறிந்து பேச்சை நிறுத்தினாள். அவளது தலை மார்பில் படிந்து, சில தடவை விசித்திரமாக ஆடியது.

நான் அவளை நோக்கினேன். அவளுக்கு உறக்கம் வந்து விட்டது என்று எனக்குப் பட்டது. எதனாலோ அவள் மேல் எனக்கு விந்தையான இரக்கம் உண்டாயிற்று. கதை முடிவில் அவள் பெருமிதம் வாய்ந்த, அச்சுறுத்தும் தோரணையைக்

கடைப்பிடித்தாளாயினும் அவளுடைய குரலில் பயபக்தியுள்ள அடிமைத்தனம் தொனித்தது.

கடற்கரையில் இருந்தவர்கள் பாடினார்கள், விசித்திரமாகப் பாடினார்கள்; முதலில் பெண்ணின் தணிந்த மென் குரல் ஒலித்தது. அது இரண்டு மூன்று ஸ்வரங்களைப் பாடியதும் இன்னொரு குரல் ஆரம்பத்திலிருந்து பாட்டை மறுபடி பாடியது. அதே சமயம் முதல் குரல் தொடர்ந்து இசைத்தது... அப்புறம் மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது குரல்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடக்கத்திலிருந்து அதே பாட்டை ஆரம்பித்தன. திடீரெனப் பல ஆண் குரல்கள் அந்தப் பாட்டையே முதலிலிருந்து சேர்ந்து பாடின.

ஒவ்வொரு பெண் குரலும் முற்றிலும் தனித் தனியே ஒலித்தது. அவை எல்லாம் பலநிற மலையோடைகள் போலப் புலப்பட்டன. அவை எங்கோ உயரத்திலிருந்து சரிவு வழியே தத்திப் பாய்ந்து, அவற்றை நோக்கி மேலே மேலே நீந்தி வந்த ஆழ்ந்த ஆண் குரல்களின் அலையுடன் கலகல வொலியுடன் கலந்து ஒன்றாகி, அதிலிருந்து வேறாகப் பிரிந்து, அதை அமிழ்த்தி எழுந்து, பின்பு ஒன்றன் பின் ஒன்றாக, தூய, வலிய தொனியுடன் மேல் ஸ்தாயிக்கு ஆரோகணித்தன.

குரல்களின் காரணமாக, அலை யோசை காதில் படவில்லை...

2

இஸெர்கீல் தலையை நிமிர்த்தி, பற்களற்ற ஈறுகள் தெரியும்படி புன்னகை செய்து, ''இந்த மாதிரிப் பாடுவதை வேறு எங்காவது கேட்டிருக்கிறாயா?'' என்று வினவினாள்.

''இல்லை. ஒருபோதுமே கேட்டது கிடையாது...''

''நீ கேட்கப் போவதுமில்லை. பாடுவதில் எங்களுக்கு ஒரே மோகம். அழகர்கள் தான் நன்றாகப் பாட முடியும்—வாழ்வில் பற்று உள்ள அழகர்கள். நாங்கள் வாழ்வில் பற்று உள்ளவர்கள். நீயே பாரேன். அங்கே பாடுகிறவர்கள் நாள் முழுதும் வேலை செய்து களைத்துப் போகவில்லையா? பொழுது புலர்ந்தது முதல் சாயும் வரை உழைத்தார்கள். ஆனபோதிலும் சந்திரன் உதித்ததுமே பாடத் தொடங்கி விட்டார்கள்! வாழத் தெரியாதவர்கள் படுத்து உறங்கியிருப்பார்கள். வாழ்வில் இன்பம் காண்பவர்களோ, பாடுகிறார்கள்.''

''ஆனால் உடல் நலம்...'' என்று நான் ஆரம்பித்தேன்.

''வாழ்வதற்கு வேண்டிய ஆரோக்கியம் எப்போதுந்தான் இருக்கும். உடல் நலமாம்! உன்னிடம் பணம் இருந்தால் செலவழிக்க மாட்டாயா என்ன? உடல் நலமும் தங்கம் தானே? நான் இளவட்டமாக இருந்த போது என்ன செய் தேன் தெரியுமா? உதயம் முதல் அஸ்தமனம் வரை, நடுவில் அநேகமாக எழுந்திருக்காமல் கம்பளம் நெய்து கொண்டிருப் பேன். சூரிய கிரணம் போல உயிர்த் துடிப்புடன் இருந்த நான், நாள் பூராவும் கல் மாதிரி அசையாமல் உட்கார்ந்திருக்க வேண்டியதாயிற்று. எலும்பெல்லாம் நோவெடுக்கும் வரையில் உட்கார்ந்திருப்பேன். ஆனாலும் இரவு ஆனதுமே எனது காதலனிடம் பாய்ந்து போவேன். கொஞ்சிக் குலாவு வதற்காக. காதல் நீடித்த வரையில், அதாவது மூன்று மாதங் கள், நான் இப்படியே செய்து வந்தேன். இந்தக் காலத்தில் எல்லா இரவுகளையும் அவனுடனேயே கழித்தேன். எவ்வளவு காலம் வரை வாழ்ந்திருக்கிறேன் பார்—இத்தனைக்கும் இரத்தம் போதுமானதாய் இருந்திருக்கிறதே! அதிலும் நான் எவ்வளவு காதலித்தேன்! எத்தனை முத்தங்கள் வாங்கிக் கொண்டேன், கொடுத்தேன்!...''

நான் அவளுடைய முகத்தைக் கூர்ந்து நோக்கினேன். அவளது கரு விழிகள் மங்கலாகவே இருந்தன. நினைவுகள் அவற்றைப் பளிச்சிடப் புரியவில்லை. அவளுடைய வறண்டு வெடித்த உதடுகள், நரை ரோமங்கள் வளர்ந்திருந்த கூர் மோவாய், ஆந்தை அலகு போல வளைந்து சுருக்கம் விழுந்த மூக்கு ஆகியவற்றின் மீது நிலவு ஒளி வீசியது. கன்னங்களுக்குப் பதிலாகக் கருங் குழிகள் தாம் இருந்தன. அவற்றில் ஒன்றில் சாம்பல் நிற மயிர்க் குச்சம், அவள் தலையைச் சுற்றிக் கட்டியிருந்த சிவப்புக் கந்தல் துணிக்கு வெளியே துருத்திக் கொண்டிருந்தது. அவளது முகம், கழுத்து, கைகள், எல்லாவற்றிலும் தோல் மீது வலைவலையாகச் சுருக்கம் விழுந் திருந்தது. கிழவி இஸெர்கீலின் ஒவ்வோர் அங்க அசைவின் போதும், அந்த வறண்ட தோல் எல்லாம் வெடித்து அடல் அடலாகப் பெயர்ந்து விழுந்து விடும் என்றும், மங்கிய கரு விழிகள் கொண்ட வெற்று எலும்புக்கூடு மட்டுமே என் எதிரே மிஞ்சியிருக்கும் என்றும் நான் எதிர்பார்த்தேன்.

அவள் தனது கரகரத்த குரலில் மீண்டும் பேசத் தொடங்கினாள்:

''பால்சீ என்னும் இடத்துக்கு அருகே, பிர்லாத் ஆற்றின் கரையில் நான் என் தாயாரோடு வசித்து வந்தேன். எங்கள் பண்ணைக்கு அவன் வந்த போது எனக்குப் பதினைந்து வயது. உயரமும் லாகவமும், கரு மீசையும் குதூகலமுமாக இருந்தான் அவன். படகிலே உட்கார்ந்தபடியே, 'ஏய்! உங்களிடம் சாராயமும்... தின்பதற்கு ஏதாவதும் இருக்கின்றனவா?' என்று கணீரென்ற குரலில் அவன் கேட்டது ஜன்னல் வழியாக எங்கள் காதில் விழுந்தது. நான் ஜன்னலுக்கு வெளியே, ஆஷ்மரக் கிளைகளின் ஊடாகப் பார்வையைச் செலுத்தினேன். நிலவு ஒளியில் ஆறு ஒரே நீலமாகப் பளிச்சிட்டது. அவன், வெள்ளைச் சட்டையும் முனைகள் இரு புறமும் தொங்கும்படி இடுப்பைச் சுற்றிக் கட்டிய அகன்ற கச்சையுமாக, படகில் ஒரு காலும் கரையில் ஒரு காலும் ஊன்றி நின்றவாறு, ஒய்யாரமாக அசைந்தாடியபடியே ஏதோ பாடிக் கொண்டிருந்தான். என்னைக் கண்டதும், 'ஆகா, எப்பேர்ப்பட்ட அழகி இங்கே இருக்கிறாள்!.. எனக்கு இது தெரியாமல் போயிற்றே!' என்றான்—என்னைத் தவிர மற்ற எல்லா அழகிகளையும் அறிந்தவன் போல. நான் அவனுக்குச் சாராயமும் வெந்த பன்றி இறைச்சியும் கொடுத்தேன்... நான்கு நாட்களுக்கெல்லாம் என்னையே முழுவதும் அவனுக்குக் கொடுத்து விட்டேன். நாங்கள் இருவரும் இரவெல்லாம் படகில் சுற்றுவோம். அவன் வந்து வயலெலி போல மெதுவாகச் சீழ்க்கை அடிப்பான். நான் மீன் போலத் துள்ளி ஜன்னல் வழியாக வெளியே குதிப்பேன். அப்புறம் இருவரும் படகில் புறப்பட்டு விடுவோம்... அவன் ப்ருத் என்ற ஆற்றுப் பகுதியைச் சேர்ந்த செம்படவன். பின்னால் என் தாயார் எல்லா விஷயத்தையும் தெரிந்து கொண்டு என்னை அடித்த போது, தன்னுடன் தப்ருஜாவுக்கும் அதற்கும் அப்பால் தூனாய் ஆற்றின் கிளை நதிக்கும் வந்துவிடும்படி என்னை இணங்கச் செய்ய முயன்றான். ஆனால் அதற்குள் எனக்கு அவன் மேல் இருந்த ஆசை போய் விட்டது — எப்போது பார்த்தாலும் பாடுவதும் முத்தமிடுவதும் தவிர மேற்கொண்டு ஒன்றுமே செய்யவில்லை அவன்! எனக்கு இது சலித்துப் போயிற்று. அந்தச் சமயத்தில் குத்ஸூலியர்கள் அந்த வட்டாரங்களில் கூட்டமாக வருவதுண்டு.

அங்கே அவர்களுக்குக் காதலிகள் இருந்தார்கள்... இந்தப் பெண்கள் பாடு ஒரே கொண்டாட்டந்தான். ஒரு காதலி காத்திருப்பாள், தனது கார்ப்பேத்தியக் காதலன் வரவை எதிர் நோக்கி — அவன் சிறையிலிருக்கிறனே அல்லது ஏதேனும் அடிதடியில் எங்காவது கொல்லப்பட்டு விட்டானே என்று தெரியாமல். திடீரென்று அவன் தனியாகவோ, இரண்டு மூன்று நண்பர்களுடனே ஆகாயத்திலிருந்து குதித்தவன் போல வந்து சேருவான். காதலிக்கு விலைமிக்க பரிசுகள் கொண்டுவருவான்—அவனுக்குத்தான் எல்லாம் அனுயாசமாகக் கிடைத்தனவே! அவளுடைய வீட்டில் விருந் தாடுவான், நண்பர்கள் முன்னிலையில் அவளைப் புகழ்வான். இதனல் அவளுக்கு இன்பமாயிருக்கும். என்னுடைய தோழி ஒருத்திக்கு குத்ஸுலியக் காதலன் இருந்தான். குத்ஸுலியர் களை எனக்குக் காட்டும்படி நான் அவளைக் கேட்டுக் கொண் டேன்... அவள் பெயர் என்னவோ? எனக்கு மறந்து போய் விட்டது... எல்லாமே மறக்க ஆரம்பித்து விட்டன இப்போது. இதெல்லாம் நடந்து வெகு காலம் ஆகி விட்டது அல்லவா, அத்தனையும் மறந்து போவது சகஜந்தானே! இந்தப் பெண் என்னை ஒரு வாலிபனுக்கு அறிமுகப்படுத்தினள். அழகன்... செம்பட்டையன், மீசை, சுருட்டை முடி, எல்லாமே செம்பட்டை! நெருப்பு எரிவது போன்ற தலை. எப்போதும் ஒரே ஏக்கமாய் இருப்பான். சில வேளைகளில் கொஞ்சிக் குலாவுவான், மற்ற வேளைகளிலோ காட்டு விலங்கு போலக் கர்ஜிப்பான், சண்டையிடுவான். ஒரு தரம் அவன் என் முகத்தில் அறைந்தான்... நான் பூனை போல அவன் மேல் பாய்ந்து அவன் கன்னத்தை வெடுக்கென்று கடித்து விட்டேன்... அதன் பிறகு அவன் கன்னத்தில் குழிவு ஏற்பட்டு விட்டது... அதில் நான் முத்தமிடும் போது அவனுக்கு உவப்பாய் இருக்கும்...''

''செம்படவன் என்ன ஆனன்?'' என்று கேட்டேன்.

''செம்படவனு? அவன் வந்து... குத்ஸுலியர்களின் கூட்டத்தில் சேர்ந்து கொண்டான். ஆரம்பத்தில் என்னைத் தன்னுடன் வரும்படிக் கெஞ்சினன், வராவிட்டால் ஆற்றில் தள்ளி விடுவதாகப் பயமுறுத்தினன். ஆனல் கொஞ்ச காலத்துக்கு அப்புறம் அப்படிச் சொல்வதை விட்டுவிட்டான். கூட்டத்தோடு சேர்ந்து, வேருெரு பெண்ணைப் பிடித்துக் கொண்டான்... இரண்டு பேரையுமே ஒரே சமயத்தில் தூக்கி

லிட்டு விட்டார்கள்—செம்படவனையும் குத்ஸுலியனையும். அவர்களைத் தூக்குப் போடுவதைப் பார்ப்பதற்காக நான் போனேன். இது நடந்தது தப்ருஜாவில். செம்படவன் ஒரே யடியாக வெளிறிப் போய், அழுது கொண்டே தூக்கு மேடைக்குப் போனான். குத்ஸுலியனோ, சுங்கான் புகைத்துக் கொண்டிருந்தான். சுங்கான் புகைத்துக் கொண்டு, கைகளைப் பைக்குள் நுழைத்தபடி நடந்தான். அவனுடைய ஒரு பக்க மீசை தோள்மேல் கிடந்தது, மற்றப் பக்கமீசை மார்புக்கு மேல் தொங்கிற்று. என்னைப் பார்த்ததும் அவன் சுங்கானை வாயிலிருந்து எடுத்து, 'விடை கொடு!' என்று கூவினான்... ஒரு வருஷம் பூராவும் நான் அவனுக்காகத் துக்கம் காத்தேன். ஹ்ம்! அவர்கள் கார்ப்பேத்தியாவில் தங்கள் ஊர்களுக்குத் திரும்ப நினைத்த சமயத்தில் இது நிகழ்ந்தது. ஒரு ருமேனியனின் வீட்டில் அவர்களுக்குப் பிரிவு உபசார விருந்து நடந்தது. அங்கே அவர்கள் பிடிபட்டார்கள். இரண்டு பேர் மாத்திரமே கைது செய்யப்பட்டார்கள். சிலர் கொல்லப்பட்டார்கள், மற்றவர்கள் ஓடி விட்டார்கள்... அப்புறம் ருமேனியனுக்குச் சரியான பாடம் கற்பித்தார்கள்... அவனுடைய வீட்டையும் மாவுமில்லையும் தானிய வயல்களையும் களஞ்சியத்தையும் சுட்டுப் பொசுக்கி விட்டார்கள். அதன் பிறகு அவன் ஓட்டாண்டி ஆகி விட்டான்.''

''இதைச் செய்தது யார், நீயா?'' என்று கேட்டு வைத்தேன்.

''குத்ஸுலியர்களுக்கு எத்தனையோ நண்பர்கள் இருந்தார்கள். நான் மட்டுமே அல்ல... அவர்களுக்கு எல்லாரையும்விட நல்ல நண்பராக இருந்தவர் இறந்தவர்களின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்தார்...''

கடற்கரையில் பாடுவது இப்போது நின்று விட்டது. கிழவியின் குரலுடன் சேர்ந்து ஒலித்தது கடல் அலைகளின் ஓசை மட்டுமே. சிந்தனை நிறைந்த, ஓய்வற்ற அவ்வோசை, ஓய்வற்ற வாழ்வு பற்றிய இக்கதைக்கு அருமையான பக்கவாத்தியமாக அமைந்தது. இரவின் மென்மை வரவர அதிகரித்தது. நிலவின் நீல ஒளி மேலும் மேலும் மிகுந்து கொண்டு போயிற்று. கண்ணுக்குப் புலப்படாத இரவுவாழ் உயிர்களின் ஓட்ட சாட்டம் நிறைந்த வாழ்வின் சந்தடி கொஞ்சங் கொஞ்சமாகத் தணிந்து அடங்கியது. காற்றின் வேகம் அதிகரித்து

விட்டபடியால் மேலும் மேலும் ஓங்கி எழுந்த அலையோசை இந்த அரவங்களை அமுக்கி விட்டது.

''ஒரு துருக்கியனையும் நான் காதலித்தேன். ஸ்குடாரி என்னும் இடத்தில் அவனுடைய அந்தப் புரத்தில் இருந்தேன். ஒரு வாரம் பூராவும் அங்கே வசித்தேன். மோசமில்லை... ஆனால் எனக்கு அலுப்பு தட்டி விட்டது... ஒரே பெண்கள், பெண்கள்தான்... எட்டு பேர் இருந்தார்கள் அவனுடைய அந்தப்புரத்திலே... தின்பதும் தூங்குவதும் மட்டி வம்பு அளப்பதுந்தான் நாள் முழுவதும் அவர்கள் செய்த வேலை... இல்லாவிட்டால் சச்சரவிடுவதும் பெட்டைக் கோழிகள் போலக் கொக்கரிப்பதும்... அந்தத் துருக்கியனுக்கு வாலிபம் கடந்து விட்டது. அவன் தலைமயிர் அநேகமாக நரைத்திருந்தது. பிரமாத மிடுக்குள்ளவன், பணக்காரன். அதிகார தோரணையுடன் பேசுவான்... அவன் கண்கள் கருமையானவை... நேராகப் பார்க்கும்... இதயத்துக்கு உள்ளே ஊடுருவி நோக்கும். தொழுகை படிப்பதில் அவனுக்கு ரொம்பப் பிரியம். நான் அவனைச் சந்தித்தது புகாரெஸ்டில்... சந்தையில் ஏதோ பேரரசன் போல நடந்தான். அபாரப் பெருமிதம் ததும்ப, கன கம்பீரமாகப் பார்த்தான். நான் அவனை நோக்கிப் புன்னகை செய்தேன். அன்று மாலையே என்னை நடுத் தெருவில் பிடித்து அவனிடம் கொண்டு போனார்கள் அவன் ஆட்கள். அவன் சந்தனமும் பேரீச்சையும் வியாபாரம் செய்யும் வர்த்தகன். ஏதோ வாங்குவதற்காக புகாரெஸ்டுக்கு வந்திருந்தான். 'என்னோடு வருகிறாயா?' என்று கேட்டான். 'தாராளமாக வருகிறேன்!' 'நல்லது!' ஆக நான் அவனோடு போனேன். பெரிய சீமான், இந்தத் துருக்கியன். அவனுக்கு ஒரு மகன் இருந்தான். கரு முடியும் ஒரே லாகவமான மேனியும் கொண்ட சிறுவன்... பதினாறு வயதிருக்கும். அவனோடுதான் நான் துருக்கியனிடமிருந்து ஓடினேன்... பல்காரியாவுக்கு, லோம்-பலான்கா என்னும் இடத்துக்கு ஓடினேன்... அங்கே ஒரு பல்காரியப் பெண் தனது மணமகன் விஷயமாகவோ, கணவன் விஷயமாகவோ என் மார்பில் கத்தியால் குத்தி விட்டாள்.

''கன்னிமடம் ஒன்றில் ரொம்ப காலம் நோயாய்க் கிடந்தேன். போலந்துப் பெண் ஒருத்தி எனக்குச் சைத்தியோபசாரம் செய்தாள். அவளுடைய சகோதரன் அவளைப்

பார்க்க வருவான். ஆர்ஸெர்-பலான்காவுக்குப் பக்கத்திலிருந்த கிறிஸ்தவ மடம் ஒன்றில் பாதிரி அவன்... என் முன்னே புழு நெளிவது போல நெளிவான்... உடம்பு நேரானதும் நான் அவனோடு போய் விட்டேன், அவன் தேசமான போலந்துக்கு.''

''இரு, இரு! துருக்கியப் பையன் என்ன ஆனான்?''

''பையனா? இறந்து போனான். வீட்டு நினைவில் ஏக்கங் கொண்டோ, காதல் காரணமாகவோ, தெரியாது. புதிதாக நட்ட செடி கடும் வெயிலில் கருகிப் போகுமே, அந்த மாதிரி வாடிப் போனான்... சருகாகக் காய்ந்து போய் விட்டான்... பனிக்கட்டி போல ஒரேயடியாக வெளிறி, நீலம் பாரித்த உடலுடன் அவன் படுத்திருக்கும் கோலம் இப்போதும் என் நினைவில் இருக்கிறது. அந்த வேளையிலுங்கூடக் காதல் அவன் உள்ளத்தில் தழல் வீசிக் கொண்டிருந்தது... குனிந்து தன்னை முத்தமிடும்படி ஓயாமல் கெஞ்சிய வண்ணமாயிருந்தான்... நான் அவனைக் காதலித்தேன், ஏராளமாக முத்தங்களைச் சொரிந்தேன், நினைவிருக்கிறது... அப்புறம் அவன் நிலைமை இன்னும் மோசமாகி விட்டது. அவன் அநேகமாக அசையவே இல்லை. படுக்கையில் கிடந்தபடியே, என்னையும் அருகில் படுத்துத் தனக்குக் கதகதப்பு உண்டாக்கும்படி பரிதாபகரமாகக் கெஞ்சினான், பிச்சைக்காரன் யாசகம் கேட்பது போல. நான் அவன் பக்கத்தில் படுத்துக் கொண்டேன். படுத்தேனோ இல்லையோ, அவன் உடம்பு நெருப்பாய்க் கொதிக்க ஆரம்பித்து விட்டது. ஒரு தடவை நான் கண்விழித்தவள், அவன் குளிர்ந்து போயிருப்பதைக் கண்டேன்... சவமாகி விட்டான் அவன்... அவனுக்காகப் புலம்பி அழுதேன். யார் சொல்ல முடியும்? அவனைக் கொன்றது ஒருவேளை நானேதானோ என்னவோ. அப்போதே நான் வயதில் அவனுக்கு இரு மடங்கு மூத்தவள். எனக்கு வலிவும் ரொம்ப அதிகம், ஜீவ ஓட்டமும் மிகுதி... அவனோ? பச்சைப் பிள்ளை!''

அவள் பெருமூச்செறிந்தாள். அதோடு மூன்று தடவை சிலுவைக் குறி இட்டுக் கொண்டு (அவள் இவ்வாறு செய்ததை நான் அப்போதுதான் முதல் தடவையாகக் கண்டேன்) வறண்ட உதடுகளால் ஏதோ முணுமுணுத்தாள்.

''அப்படியானால் நீ போலந்துக்குப் போனாயாக்கும்'' என்று கதையை விட்ட இடத்திலிருந்து எடுத்துக் கொடுத்தேன்.

''ஆமாம்... அந்தச் சிறுகூடான போலந்துக்காரனேடு. அவன் கேவலமானவன், இழி பிறவி. பெண் உறவு வேண்டியிருக்கும் போது பூனை மாதிரி ஒரே கொஞ்சலும் குழைவுமாக என்னிடம் வந்து தேன் சொட்டச் சொட்டப் பேசுவான். நான் அவனுக்குத் தேவைப்படாத போதோ, சவுக்கடி போலச் சொற்களால் விளாறுவான். ஒரு முறை நாங்கள் ஆற்றோரமாக நடந்து கொண்டிருக்கையில் அவன் என்னைப் புண்படுத்தும்படி அகந்தையுடன் பேசினன். அவ்வளவுதான்! எனக்கு மண்டிக் கொண்டுவந்து விட்டது ஆத்திரம்! கொதிப்பு ஏறிய கீலெண்ணெய் போலப் பொங்கி எழுந்தேன்! குழந்தையைத் தூக்குவது மாதிரி (அவன் சின்ன ஆள்தானே) அவனைக் கைகளால் பிடித்துத் தூக்கி, அவன் விலாக்களை இறுக்கினேன் பாரு, அவன் முகமெல்லாம் நீலம் பாரித்து விட்டது. அவனை ஒரு சுழற்று சுழற்றி ஆற்றுக்குள் கடாசி விட்டேன். அவன் வீறிட்டான். அவன் அலறுவது வேடிக்கையாயிருந்தது. கரை மேலிருந்தபடியே அவனைக் குனிந்து பார்த்தேன். அவன் நீரில் தத்தளித்துக் கொண்டிருந்தான். நான் போய் விட்டேன். அப்புறம் அவனை நான் பார்க்கவே இல்லை. இந்த விஷயத்தில் நான் அதிர்ஷ்டசாலி. ஒரு தரம் காதலித்தவனைப் பிற்பாடு நான் சந்தித்ததே கிடையாது. இத்தகைய சந்திப்புகள் நல்லவையே அல்ல—செத்தவர்களைக் காண்பது போலத்தான்.''

கிழவி பேசுவதை நிறுத்திவிட்டுப் பெருமூச்செறிந்தாள். அவள் சொற்கள் மூலம் உயிரூட்டிய மனிதர்களை நான் கற்பனை செய்து பார்த்தேன். எரிநெருப்புப் போன்ற செம்முடியும் மீசையுமாக அமைதியுடன் சுங்கான் புகைத்தவாறு தூக்கு மேடைக்குச் சென்ற குத்ஸூலியன். ஒருவேளை அவனுக்கு வறண்ட நீல விழிகள் போலும். எல்லாவற்றையும் அவை கூர்ந்தும் உறுத்தும் நோக்கியிருக்கும். அவன் பக்கத்திலே ப்ருத் பகுதி வாசியான கருமீசைச் செம்படவன், சாக விருப்பம் இன்றி அழுது கொண்டிருக்கிறன். அணுகிவரும் சாவின் ஏக்கம் படிந்து அவன் முகம் வெளிறியிருக்கிறது. குதூகலம் ததும்பும் விழிகள் ஒளியிழந்து விட்டன. கண்ணீரால் நனைந்த அவனது மீசை, விகாரமாகக் கோணும் வாயின் இரு ஓரங்களிலும் சோகம் தோன்றத் தொங்குகிறது. அதோ வயது முதிர்ந்த, மிடுக்கு நிறைந்த துருக்கியன். அவன் விதியில்

நம்பிக்கை உள்ளவனுகவும் யதேச்சாதிகாரியாகவும் இருப்பான். அவன் அருகே அவன் மகன், கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த வெளிறிய, மென்மையான மலர், முத்தங்களினுல் நஞ்சேறி வாடியது. அப்புறம் அகந்தை பிடித்த போலந்துக்காரன், சரசமும் கொடூரமும், செஞ்சொற் பேச்சும் கடுமொழியும் ஒருங்கே வாய்ந்தவன்... இவர்கள் எல்லோருமே இப்போது மங்கிய நிழல்கள்தாம். எவளை அவர்கள் தழுவி முத்தமிட்டார்களோ அவள் என் அருகே உட்கார்ந்திருக்கிருள்—உயிரோடு, ஆனுல் காலத்தினுல் வாடி வதங்கி, உடலின்றி, உதிரமின்றி, ஆசைகள் அற்ற உள்ளத்துடன், ஜீவ ஒளி அற்ற விழிகளுடன்—தானும் அநேகமாக நிழல் போன்று.

அவள் தன் கதையைத் தொடர்ந்தாள்:

''போலந்தில் என் பாடு கஷ்டமாயிருந்தது. அங்குள்ளவர்கள் இருதயமற்றவர்கள், பொய்யர்கள். அவர்களுடைய பாம்புச் சீறல் பாஷை எனக்குத் தெரியாது. எப்போதும் சீறல்தான்... என்னதான் சீறுவார்களோ? ஆண்டவன் அவர்களுக்கு இந்தப் பாம்பு பாஷையைக் கொடுத்தது அவர்கள் பொய்யர்கள் ஆனபடியால்தான். எங்கே போகிறேம் என்பது தெரியாமல் அந்த தேசத்தில் சுற்றி அலேந்தேன். ருஷ்யர்களாகிய உங்களுக்கு எதிராகக் கலகம் செய்ய அவர்கள் ஆயத்தம் செய்து கொண்டிருப்பதைக் கண்டேன். போஹ்னியா நகரம்வரை போனேன். ஒரு யூதன் என்னை விலேக்கு வாங்கிக் கொண்டான் — தனக்காக அல்ல, என் உடலை வைத்துச் சம்பாதிப்பதற்காக. நான் அதற்கு ஒப்பினேன். பிழைப்பதற்கு ஏதாவது செய்ய வேண்டுமே. எனக்கோ எதுவும் செய்யத் தெரியாது. ஆகவே உடலை விற்க ஒருப்பட்டேன். ஆனுல் ஒன்று மட்டும் நினைத்துக் கொண்டேன்: பிர்லாத் ஆற்றின் கரையில் உள்ள சொந்தப் பண்ணைக்குத் திரும்புவதற்குத் தேவையான பணம் சேர்ந்ததும் இந்தத் தளைகளை அறுத்துக் கொள்வேன்—அவை எவ்வளவு வலிவாயிருந்தாலும் சரியே—என்று. இவ்வாறு அங்கே வாழ்ந்து வந்தேன். பணக்காரச் சீமான்கள் என் வீட்டுக்கு வந்து விருந்தாடுவார்கள். இதற்கு அவர்கள் கொள்ளைப் பணம் செலவிட வேண்டியிருந்தது. என் பொருட்டு அவர்கள் ஒருவருக்கொருவர் சச்சரவிட்டு ஒருவரையொருவர் அழித்துக் கொண்டார்கள். ஒருவன் என்னை அடைவதற்கு நெடுநாள் முயன்றுன். முடிவில் என்ன

செய்தான் தெரியுமோ? ஒரு நாள் அவன் என்னிடம் வந்தான். வேலையாள் ஒரு மூட்டையைச் சுமந்து கொண்டு அவனோடு வந்தான். சீமான் மூட்டையை எடுத்து அவிழ்த்து என் தலை மேல் கொட்டினன். தங்க நாணயங்கள் என் தலையில் பட்டுச் சிதறின. அவை தரையில் விழுந்த போது ஏற்பட்ட கணீ ரொலி என் காதுகளுக்கு இதமாயிருந்தது. ஆயினும் நான் அந்தச் சீமானை வெளியே விரட்டி விட்டேன். ஒரேயடியாகக் கொழுத்து, ஈரித்த முகமும் பெரிய திண்டுத் தலையணை போல ஊதிய சால்வயிறும் கொண்டவன் அவன். திருப்தியாக இரையெடுத்த பன்றி போலிருந்தான். எனக்குக் கனகாபி ஷேகம் செய்வதற்காகத் தனது நிலம் எல்லாவற்றையும், வீடுகளையும், குதிரைகளையும் விற்று விட்டதாக அவன் சொன்ன போதிலும் நான் அவனைத் துரத்தி விட்டேன். அந்தச் சமயத்தில் நான் தகுதி வாய்ந்த சீமான் ஒருவன்மீது காதல் கொண்டிருந்தேன். அவன் முகமெல்லாம் வெட்டுக் காயத் தழும்புகள். கிரேக்கர்களின் தரப்பில் துருக்கியருக்கு எதிராகச் சண்டை போட்டு விட்டுச் சமீபத்தில் தான் திரும்பி யிருந்தான். துருக்கியரின் வாள்களால் ஏற்பட்டிருந்த காயங் கள் அவன் முகம் முழுவதிலும் குறுக்கும் நெடுக்குமாகத் தழும்பிட்டிருந்தன. அவனல்லவா மனிதன்! அவனே போலந்துக்காரன்தானே, கிரேக்கர்கள் எக்கேடு கெட்டால் அவனுக்கு என்ன? ஆனாலும் அவன் கிரேக்கர்களின் பகைவர் களோடு சண்டை போடக் கிளம்பி விட்டான். சண்டையில் அவன் முகம் வெட்டுப்பட்டுக் கிழிந்து போயிற்று, ஒரு கண் துண்டாகத் தெறித்து விழுந்து விட்டது, இடது கை விரல் களில் இரண்டு துணிக்கப்பட்டு விட்டன...அவனே போலந்துக் காரன் தானே, கிரேக்கர்கள் எக்கேடு கெட்டால் அவனுக்கு என்ன? விஷயம் இதுதான்: துணிகரச் செயல்களில் அவனுக்கு மோகம். துணிகரச் செயல்களில் மோகமுள்ளவனுக்கு அவற்றைப் புரியவும் முடியும், புரிவதற்குச் சந்தர்ப்பமும் எப்போதும் கிடைத்துவிடும். வாழ்க்கையில் துணிகரச் செயல் கள் புரிவதற்கு எப்போதும் இடமுண்டு, தெரிகிறதா? அதற்கு வாய்ப்பு பெறுதவர்கள் ஒன்று சோம்பேறிகள், இல்லா விட்டால் கோழைகள், அல்லது வாழ்க்கை என்ன என்பதைப் புரிந்து கொள்ளாதவர்கள். ஏனென்றுல் ஜனங்கள் மட்டும் வாழ்க்கையைப் புரிந்துகொண்டு விட்டால், தனக்குப் பின்



தனது நிழலை அதில் விட்டுச் செல்வதற்கு ஒவ்வொருவனும் விரும்புவான். அப்போது வாழ்க்கை மக்களை இருந்த சுவடு தெரியாதபடி விழுங்கி விடாது... ஆகா, விழுப்புண்களால் தழும்பேறிய அந்த மனிதன் அருமையானவன்! ஏதேனும் வீரச் செயல் புரிவதற்காக உலகின் மறு கோடிக்குப் போவதற்குக்கூட அவன் தயாராயிருந்தான். கிளர்ச்சியின் போது உங்களவர்கள் அவனைக் கொன்றுவிட்டார்கள் என்று நினைக்கிறேன். மகயார்களைத் தாக்குவதற்கு நீங்கள் எதற்குத் தான் போனீர்களோ? சரி, சரி, ஒன்றும் பேசாதே!..''

என்னைப் பேசாதிருக்கும்படிக் கட்டளையிட்டு விட்டுக் கிழவி இஸெர்கீல் தானும் மௌனமாகச் சிந்தனையில் ஆழ்ந்தாள். சற்று நேரத்தில் மீண்டும் கதையைத் தொடர்ந்தாள்:

''எனக்கு ஒரு மகயாரையும் தெரியும். ஒரு நாள் அவன் என் வீட்டை விட்டுப் போனான்—அப்போது பனிக்காலம். அப்புறம் வசந்த காலம் வந்து வெண்பனி உருகத் தொடங்கிய பின்பு தான் துப்பாக்கிக் குண்டு பாய்ந்த தலையுடன் அவன் உடல் வயலில் கண்டெடுக்கப்பட்டது. அப்படியாக்கும் சேதி! காதலினால் சாகிறவர்கள் பிளேகினால் மடிபவர்களைவிட எண்ணிக்கையில் குறைவில்லை. தெரிகிறதா? கணக்கிட்டுப் பார்த்தால் எண்ணிக்கை குறைவாகவே இருக்காது... என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்? ம்ம், போலந்தைப் பற்றி... ஆமாம், என்னுடைய கடைசி ஆட்டத்தை அங்கே தான் ஆடினேன். ஒரு கனவானைச் சந்தித்தேன். அழகன் என்று சொன்னால் போதாது. கொள்ளை அழகன். நானோ, அப்போதே கிழவியாகி விட்டேன். ஆமாம், கிழவி! எனக்கு நாற்பது வயது ஆகி விட்டதோ? அட, ஆகி விட்டது என்றே வைத்துக் கொள்வோமே... அவனோ ஒரே கர்வம் பிடித்தவன். போதாக் குறைக்குப் பெண்கள் அவனைத் தலைக்கு மேல் தூக்கி வைத்துக் கொண்டு கெடுத்து வேறு வைத்திருந்தார்கள். அவனை வசப்படுத்துவதற்கு நான் அரும் பாடு பட வேண்டியிருந்தது... ஆமாம். அவன் என்னை ஏதோ போகிற போக்கில் தனக்கு இணங்கச் செய்யப் பார்த்தான். நான் இணங்கவில்லை. ஒரு போதுமே நான் எவனுக்கும் அடிமையாய் இருந்தது கிடையாது. யூதன் கணக்கை அதற்கு முன்பே தீர்த்து விட்டேன். ஏராளமாகப் பணத்தை அள்ளிக் கொடுத்தேன் அவனுக்கு... கிராக்கோவ் நகருக்கு வந்து

வசித்துக் கொண்டிருந்தேன். குதிரைகள், பணம், வேலையாட்கள் எல்லாம் எனக்கு உண்டு அப்போது... இந்தக் கருவக்கார ராட்சதன் என்னிடம் வந்து நான் தாஞக அவனுக்கு வசமாகி விட வேண்டும் என்று பார்த்தான். இதிலே எங்களுக்குள் மனஸ்தாபம் உண்டாகி விட்டது... இந்தச் சச்சரவால் நான் அழகழிந்துகூடப் போய்விட்டேன்—நினைவிருக்கிறது. இது ரொம்பக் காலத்துக்கு நீடித்தது... கடைசியில் நான் தான் ஜெயித்தேன். அவன் முழந்தாள் படியிட்டு என்னைக் கெஞ்சிஞன்... ஆஞல் என்னை வசப்படுத்திக் கொண்டதுமே கைவிட்டு விட்டான். அப்போதுதான் நான் உணர்ந்து கொண்டேன், கிழவி ஆகி விட்டேன் என்று... ஐயோ, எனக்கு எவ்வளவு கைப்பாய் இருந்தது! வேம்பாய்க் கசந்தது! நான் அந்தச் சைத்தான் மேல் மையல் கொண்டிருந்தேன்... அவஞே, என்னைக் கண்ட போதெல்லாம் கிண்டல் செய்தான்... கீழ் மகன்! மற்றவர்களிடமும் என்னைக் கேலி செய்தான். எனக்கும் அது தெரியும். எனக்குக் காட்டமாயிருந்தது, ஆமாம்! ஆஞலும் அவன் பக்கத்திலிருந்தான், நான் இன்னும் அவனைக் காதலித்து வந்தேன். உங்களோடு — ருஷ்யர்களோடு—சண்டை போடுவதற்கு அவன் போய்விட்டதும் நான் அவனுக்காக ஏங்கிப்போனேன். ஏக்கத்தை மறக்க முயன்று பார்த்தேன், முடியவில்லை... அவனைத் தேடிக் கொண்டு புறப்படத் தீர்மானித்தேன். அவன் வார்ஸாவுக்கு அருகே, காட்டில் இருந்தான்.

''அங்கே போன பிறகுதான் தெரிய வந்தது, ருஷ்யர்கள் அவர்களை முறியடித்து விட்டார்கள் என்று... அவன் சிறை பிடிக்கப்பட்டு, பக்கத்தில் ஏதோ கிராமத்தில் வைக்கப் பட்டிருப்பதாகவும் அறிந்து கொண்டேன்.

'' 'அப்படியாஞல், நான் அவனை இனி ஒருபோதுமே காணப் போவதில்லையாக்கும்' என்று நினைத்துக் கொண்டேன். அவனைப் பார்ப்பதற்கோ ஒரேயடியாகத் துடித்தேன். ஆகவே அவனைச் சந்திக்க முயற்சி செய்யலானேன். பிச்சைக்காரி வேஷம் போட்டுக் கொண்டு, நொண்டி மாதிரி நடித்த வண்ணம் முகத்தைத் துணியால் மூடி மறைத்தபடி அவனிருந்த கிராமத்துக்குப் போனேன். அங்கே கஸாக்கியர்களும் சிப்பாய்களும் மொய்த்துக் கிடந்தார்கள்... அங்கே போவது எனக்கு அரும் பாடாய் இருந்தது. போலந்துக்காரர்கள்

சிறை வைக்கப்பட்டிருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டேன். அந்த இடத்திற்குப் போவது லேசல்ல என்பதைக் கண்டேன். போக வேண்டியதோ எனக்கு அவசியமாயிருந்தது. ஆகவே ஓரிரவில் காய்கறித் தோட்டத்தில் பாத்திகளுக்கு நடுவே ஊர்ந்து சென்று அந்த இடத்தை நெருங்கினேன். திடீரென்று ஒரு காவலாள் வழியில் நிற்பதைச் கண்டேன்... போலந்துக்காரர்கள் பாடுவதும் உரக்கப் பேசுவதும் என் காதில் விழுந்தன. அவர்கள் பாடியது ஏதோ பாட்டு... கர்த்தரின் தாயைப் பற்றி... என் கண்ணுளன் அர்க்காதேக்கின் குரலும் கேட்டது. ஒரு காலத்தில் ஆண்கள் என் முன்னே தரையில் ஊர்ந்தார்கள் என்பது நினைவுக்கு வந்தது. இப்போதோ, ஆண்மகன் ஒருவனுக்காக நான் பாம்பு போல மண்ணில் நெளிகிறேன், ஒருவேளை சாவை நோக்கியே ஊர்ந்து செல்கிறேனே என்னவோ, என்று நினைக்கும் போதே எனக்குக் கசப்பாயிருந்தது. காவலாள் அரவங் கேட்டு முன்னே சாய்ந்தான். என்ன செய்வது நான்? தரையிலிருந்து எழுந்து அவனை நெருங்கினேன். என்னிடம் கத்தியோ, வேறு ஏதேனுமோ கிடையாது, கைகளுண்டு, நாக்கு உண்டு, அவ்வளவுதான். குத்து வாளைக் கொண்டுவராமல் போனேமே என்று வருந்தினேன். 'பொறு' என்று மெள்ளச் சொன்னேன். காவல்காரச் சிப்பாயோ துப்பாக்கிச் சனியனை என் தொண்டைக் குழிக்கு நேரே நீட்டினன். 'குத்தாதே, பொறு! உனக்கு நெஞ்சு இருந்தால் நான் சொல்லுவதைக் கேள்! உனக்குக் கொடுப்பதற்கு என்னிடம் ஒன்றுமில்லை. ஆனல் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்...' என்று கிசுகிசுத்தேன். அவன் துப்பாக்கியைத் தரையில் ஊன்றிக் கொண்டு, 'போ அப்பாலே, பொம்பிளை! ஊம், போ! என்ன வேணும் உனக்கு?' என்று தணிந்த குரலில் சொன்னன். என் மகன் இங்கே சிறை வைக்கப்பட்டிருப்பதாகக் கூறினேன். 'புரிகிறதா, ஜவான்? மகன்! உனக்குந்தான் தாயார் இருக்கிருள், இல்லையா? அப்படியானல் என்னைப் பார்—எனக்கும் உன் போலவே ஒரு மகன், அதோ, அங்கே இருக்கிருன். அவனை ஒரு தரம் பார்க்க எனக்கு அனுமதி கொடு, ஒருகால் அவன் சீக்கிரம் இறந்து போகலாம்... இல்லை, நாளையே நீ கொல்லப்படலாம்... உன் தாயார் உனக்காகக் கண்ணீர் விட மாட்டாளா? அம்மாவைப் பார்க்காமல் சாவது உனக்குக் கஷ்டமாய் இராதா? என்

மகனுக்கும் அதே போலக் கஷ்டமாய் இருக்கும். உன்மீதும் அவன் மீதும் தாயான என்மீதும் இரக்கங் காட்டு!' என்றேன்.

''அட கடவுளே, எவ்வளவு நேரம் அவனைக் கெஞ்சிக் கூத்தாடினேன் தெரியுமா? மழை பெய்து எங்களை நனைத்தது. காற்று சீறியது, முழங்கியது, முன்னும் பின்னுமாகத் தள்ளியது. நான் அந்தக் கல்நெஞ்சுச் சிப்பாய்க்கு முன்னே சாய்ந்தாடியவாறே நின்றேன்... அவனோ 'முடியாது!' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான். அவனுடைய வறண்ட குரலை ஒவ்வொரு தரமும் கேட்கும் போதும் என் அர்க்காதேக்கைக் காண வேண்டும் என்ற ஆசை என் உள்ளத்தில் முன்னிலும் உக்கிரமாக மூண்டெரிந்தது... நான் பேசிக் கொண்டே சிப்பாயை ஏற இறங்க நோட்ட மிட்டேன். அவன் குட்டையன், ஒடிசல், ஓயாமல் இருமிக் கொண்டிருந்தான். நான் அவன் முன்னே தரையில் விழுந்து, அவன் முழங்கால்களைப் பற்றிக் கொண்டு, என்னை அனுமதிக் கும்படி ஆவேசமாக மன்றாடிய படியே சடக்கெனக் காலை வாரி விட்டு அவனை விழத் தட்டி விட்டேன். அவன் சேற்றில் விழுந்தான். நான் உடனேயே அவனை மூஞ்சி குப்புறப் புரட்டி, அவன் தலையை நீர்க் குட்டத்துக்குள் புதைய அழுத்தினேன் —அவன் கூச்சலிட முடியாதபடி. அவன் சத்தமே போட வில்லை. என்னை முதுகிலிருந்து அப்பால் தள்ளுவதற்கு முடிந்த வரை பாடுபட்டான். நானோ இரண்டு கைகளாலும் அவன் தலையைச் சேற்றுக் குழம்பலுக்குள் மேலும் மேலும் ஆழ அமுக்கினேன். அவனுக்கு மூச்சு முட்டிப் போயிற்று... அப் புறம் நான் போலந்துக்காரர்கள் வைக்கப்பட்டிருந்த களஞ்சிய வீட்டுக்கு ஓடினேன். சுவரிலிருந்த பிளவு வழியாக 'அர்க் காதேக்!' என்று கிசுகிசுத்தேன். கூர்ங்காது படைத்தவர் கள் இந்தப் போலந்துக்காரர்கள். என் குரல் செவியில் படவே பாட்டை நிறுத்தி விட்டார்கள்! அவனுடைய கண்கள் என் விழிகளுக்கு நேர் எதிரே தெரிந்தன. 'அங்கிருந்து வெளி வர உன்னால் முடியுமா?' என்று கேட்டேன். 'முடியும், தரை வழியாக!' என்றான். 'அப்படியானால் வெளியே வா!' ஆக நாலு பெயரும் களஞ்சிய வீட்டிலிருந்து ஊர்ந்து வெளி வந்தார்கள். என் அர்க்காதேக்கும் இன்னும் மூவரும். 'காவலாளர்கள் எங்கே?' என்று கேட்டான் அர்க்காதேக். 'அதோ கிடக்கிறான்!'

''நாங்கள் சந்தடியில்லாமல் தரையோடு தரையாகக் குனிந்து மெள்ள நடந்தோம். அடைமழை கொட்டியது, காற்று இரைச்சலுடன் வீசிற்று. கிராமத்திலிருந்து வெளி யேறி ஒரு காட்டுக்குள் புகுந்து வெகு நேரம் மௌனமாக நடந்தோம். இந்த மாதிரி வேகமாக நடந்தோம். அர்க்கா தேக் என் கையைப் பிடித்துக் கொண்டான். அவன் கரம் கொதித்தது, நடுங்கிற்று. ஆகா... அவன் பேசாமல் நடந்த வரை, அவனோடு போவது எனக்கு ஒரே இன்பமாக இருந்தது. வேட்கை மிகுந்த என் வாழ்வின் கடைசிக் கணங்கள்—கடைசி யான இன்பக் கணங்கள் அவை. அப்புறம் நாங்கள் புல் வெளியை அடைந்து, நின்றோம். எனக்கு நன்றி கூறினார்கள் அவர்கள் நால்வரும். அடேயப்பா! எவ்வளவு நேரம், எவ் வளவு நிறைய ஏதேதோ சொன்னார்கள்! அவர்கள் பேச்சைக் கேட்டபடியே நான் என் சீமானையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன்—அவன் என்னை என்ன செய்யப் போகிறான் என்று. அப்போது அவன் என்னைத் தழுவிக்கொண்டு கனமிடுக்குடன் சொன்னான்... என்ன சொன்னான் என்பது இப்போது நினைவில்லை, ஆனால் அவன் கூறியதன் அர்த்தம் என்ன வென்றால், தன்னை விடுவித்ததற்கு நன்றி பாராட்டும் பொருட்டு என் மேல் அன்பாயிருப்பான் என்பதே. என் எதிரே முழந்தாள் படியிட்டு, புன்னகை செய்து, 'என் ராணி!' என்றான். புளுகுணி நாய்! எனக்கு வந்த ஆத்திரத் தில் விட்டேன் ஓர் உதை! மூஞ்சியில் அறைந்துமிருப்பேன், ஆனால் அதற்குள் அவன் தள்ளாடித் துள்ளி எழுந்து விட் டான். முகமெல்லாம் வெளிற, குரூரமாய் விழித்துக் கொண்டு என் எதிரே நின்றான்... மற்ற மூன்று பேரும் முகத்தைச் சுளித்தபடி நின்றார்கள். ஒருவரும் பேசவில்லை. நான் அவர் களைப் பார்த்தேன்... எனக்கு உண்டானதெல்லாம்—இப் போதும் நினைவிருக்கிறது—ஒரே சலிப்பும் சோம்பலுந்தான்... 'போங்கள்!' என்றேன். 'நீ திரும்பிப் போய் நாங்கள் சென்ற வழியைக் காட்டிக் கொடுப்பாயோ?' என்று கேட்டார்கள் அந்த நாய்கள். எம்மாதிரி இழி பிறவிகள் பார்த்தாயா? இருந் தாலும் அவர்கள் போய்த் தொலைந்தார்கள். நானும் என் வழியே நடந்தேன்... அடுத்த நாள் உங்களவர்கள் என்னைப் பிடித்துக் கொண்டு போனார்கள், ஆனால் சீக்கிரம் விட்டு விட்டார்கள். அப்போது தான் உணர்ந்தேன், நாமும் ஒரு கூடு

கட்டிக் கொள்ள வேளை வந்து விட்டது, குயில் வாழ்க்கை வாழ்ந்ததெல்லாம் போதும் என்று. உடல் கனத்து விட்டது, சிறகுகள் வலுக் குறைந்து விட்டன, இறகுகளில் பளபளப்பு இல்லை... வேளை வந்துவிட்டது, வந்துவிட்டது! ஆகவே காலீஷியா போய் அங்கிருந்து தப்ருஜா வந்து சேர்ந்தேன். அது முதல், இந்த முப்பது வருஷமாக இங்கே தான் வாழ்ந்து வருகிறேன். எனக்குப் புருஷன் இருந்தான்—மல்தாவியாக் காரன். ஒரு வருஷத்துக்கு முன்பு இறந்து போனான். நான் இப்படி வாழ்ந்து வருகிறேன்! தனிக்கட்டையாக... இல்லை, தனிக்கட்டையாக அல்ல, அதோ, அவர்களோடு.''

இவ்வாறு சொல்லிக் கடற்புறம் கையை வீசியாட்டினாள் கிழவி. கடற்கரையில் அமைதி குடி கொண்டிருந்தது. இடையிடையே சுருக்கமான, ஏமாற்று நிறைந்த ஒலி பிறக்கும், உடனே மடிந்து விடும்.

''அவர்களுக்கு என் மேலே பிரியம். விதம் விதமாக எத்தனையோ கதைகள் சொல்லுவேன். அவர்களுக்கு இவை வேண்டும். இன்னும் சிறிசுகள் தானே... இவர்களோடு இருப்பதில் எனக்கும் மகிழ்ச்சி. இவர்களைப் பார்க்கும் போதெல்லாம் நினைத்துக் கொள்கிறேன்: 'நானுந்தான் ஒரு காலத்தில் இவர்களைப் போல் இருந்தேன்... ஆனால் அப்போது, என் காலத்தில், ஜனங்களிடம் வலிவும் ஊக்கமும் மிகுதியாக இருந்தன. அதனால்தான் வாழ்க்கை அதிக இன்பமாகவும் இப்போதைவிட மேலானதாகவும் இருந்தது... ஆமாம்!' என்று.

இவ்வாறு கூறி விட்டு அவள் பேசாதிருந்தாள். அவள் அருகே உட்கார்ந்திருந்த எனக்கு ஏக்கமாயிருந்தது. அவள் தலையை ஆட்டியபடி தூங்கி வழிந்தவாறு ஏதோ முணுமுணுத்தாள்... ஒருவேளை பிரார்த்தனை செய்தாள் போலும்.

கடலிலிருந்து எழுந்தது முகில்—கறுத்துத் திரண்டு, மலைத் தொடரின் சிகரங்கள் போலக் கூர்த்த விளிம்புகள் கொண்டது. ஸ்தெப்பி வெளி மீது பரந்தது அது. அதன் உச்சியிலிருந்து மேகத் துணுக்குகள் பிரிந்து முன்னே பாய்ந்து சென்று, நட்சத்திரங்களை ஒன்றன்பின் ஒன்றாக அணைத்து விட்டன. கடல் இரைந்தது. நாங்கள் இருந்த இடத்துக்குச் சற்று தூரத்தில், முந்திரிப் பந்தர்களில் முத்தமிடுவதும், கிசுகிசுப்பதும், பெருமூச்சு விடுவதும் கேட்டன. தொலைவில்

ஸ்தெப்பி வெளியில் நாய் ஊளையிட்டது... காற்றில் கமழ்ந்த விந்தையான நெடி நரம்புகளுக்கு எரிச்சலூட்டி, நாசித் துவாரங்களில் அரிப்பு உண்டாக்கியது. வானில் மிதந்து சென்று மேகங்களின் அடர்ந்த நிழல் கூட்டங்கள் தரையில் படிந்து ஊர்ந்தன, மறைந்தன, பின்னும் வெளிப்பட்டன... சந்திரனுக்குப் பதில் மங்கிய கோமேதகக் கறை மட்டுமே தென்பட்டது. அதையும் அவ்வப்போது மறைத்தது சாம்பல் நிற மேகக் கந்தை. ஸ்தெப்பியின் தொலை வெளி தனக்குள் எதையோ ஒளிப்பது போலக் கறேலென்று அச்சந்தரும் தோற்றமளித்தது. சின்னஞ்சிறு நீலத் தழல்கள் அதில் பளிச்சிட்டன. ஒரு சமயம் ஓரிடத்திலும் மற்றொரு சமயம் வேறு இடத்திலும் அந்த ஒளிகள் கணப் போது தோன்றித் தோன்றி மறைந்தது, ஸ்தெப்பியில் ஒருவருக்கொருவர் தூரந் தூரமாகச் சிதறியிருந்த சில மனிதர்கள் அதில் எதையோ தேடுவதற்காக நெருப்புக்குச்சிகளைக் கிழிப்பது போலவும் காற்று அவற்றை உடனுக்குடன் அணைத்துவிடுவது போலவும் இருந்தது. அவை மிக விந்தையான நீலத் தீ நாக்குகள், மர்மத் தோற்றம் கொண்டவை.

''நெருப்புப் பொறிகள் தெரிகின்றனவா?'' என்று இஸெர்கீல் என்னைக் கேட்டாள்.

''அதோ தெரின்றனவே, நீலமாக, அவையா?'' என ஸ்தெப்பியை சுட்டியவாறு கேட்டேன்.

''நீலமாகவா? ஆமாம். அவைதாம்... அப்படியானால் இன்னும் பறக்கின்றனவா? ஊம், ஊம்... எனக்கு அவை இப்போதெல்லாம் கண்ணில் படுவதில்லை. எத்தனையோ விஷயங்களை இப்பொழுது என்னால் பார்க்க முடிவதில்லை.''

''இந்தப் பொறிகள் எங்கிருந்து வருகின்றன?'' என்று கிழவியிடம் வினவினேன்.

இந்தத் தீப் பொறிகள் தோன்றியதைப் பற்றி முன்பே ஏதோ கேள்விப்பட்டிருந்தேன். ஆயினும் கிழவி இஸெர்கீல் அவை சம்பந்தமாக என்ன சொல்கிறாள் என்று கேட்க விரும்பினேன்.

அவள் சொல்லலானாள்:

''இந்தப் பொறிகள் தான்கோவின் எரியும் இதயத்திலிருந்து கிளம்புகின்றன. முன் ஒரு காலத்தில் ஓர் இதயம் இருந்தது. ஒரு சமயம் அது குப்பென்று மூண்டு எரிந்தது... அதிலிருந்து கிளம்பியவையே இந்தப் பொறிகள்... அந்தக்

கதையை உனக்குச் சொல்லுகிறேன்... இதுவும் பழைய கதைதான்,... பழையது, எல்லாம் பழயவை! பழங்காலத்தில் எத்தனை விஷயங்கள் நிகழ்ந்தன பார்!.. இப்போதெல்லாம் அந்த மாதிரி ஒன்றுமே—செயல்களோ, மனிதர்களோ, கதைகளோ எதுவுமே—கிடையாது... ஏன்?.. சொல்லேன் கேட்போம்! சொல்ல முடியாது உன்னால்... என்ன தெரியும் உனக்கு? வாலிபர்களான நீங்கள் எல்லோருமே என்னத்தைக் கண்டீர்கள்? ஹெஹ் ஹெஹ்ஹே! பழங்காலத்தைக் கூர்ந்து கவனித்தீர்களானல் எல்லாப் புதிர்களுக்கும் விடை கிடைத்து விடும்... நீங்கள் கவனிப்பதில்லை, அதனுல்தான் வாழத் தெரியாதவர்களாயிருக்கிறீர்கள்... நான் வாழ்க்கையைப் பார்க்கவில்லையா என்ன? பார்வை மந்தமாகி விட்ட போதிலும் நான் எல்லாவற்றையுந்தான் கவனிக்கிறேன்! ஜனங்கள் வாழவில்லை, பிழைப்புக்காகப் பாடுபடுகிருர்கள், இந்தப் பாட்டிற்கே வாழ்வை அர்ப்பணித்து விடுகிருர்கள். தங்கள் நலங்களை எல்லாம் தாங்களே சூறையாடி, தங்கள் பொழுதை எல்லாம் வீணடித்த பிறகு விதியை நொந்து கொள்ளத் தொடங்குகிருர்கள். விதியாவது விதி! இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? ஒவ்வொருவனும் தனக்குத் தானே விதி! இந்தக் காலத்திலே நான் எத்தனையோ வகையானவர்களைப் பார்க்கிறேன், வலிமை உள்ளவர்களைத் தான் காண முடிவ தில்லை. எங்கே அவர்கள்?.. அழகர்களும் வரவரக் குறைந்து கொண்டுபோகிருர்கள்.''

வலிமையும் அழகும் உள்ள ஆண்களும் பெண்களும் எங்கே மறைந்து விட்டார்கள் என்பதைப் பற்றி எண்ண மிடலானுள் கிழவி. சிந்தனையில் ஆழ்ந்தவாறே இருண்ட ஸ்தெப்பி வெளியில் கண்ணேட்டினுள், அதிலே விடையைத் தேடுபவள் போல.

நான் அவளது கதையை எதிர் பார்த்தவண்ணம் மௌன மாயிருந்தேன். ஏதாவது கேட்டால் எங்கே மறுபடியும் வேறு விஷயத்துக்குத் தாவி விடுவாளோ என்று எனக்குப் பயம்.

கடைசியில் ஒரு விதமாக அவள் கதையைத் தொடங் கினுள்.

3

''முன் ஒரு காலத்தில் ஓர் இனத்தவர் வாழ்ந்து வந்தார் கள். அவர்களுடைய குடியிருப்புக்கு மூன்று புறத்திலும்

கடக்க முடியாத அடர்ந்த காடு சூழ்ந்திருந்தது. நாலாவது திக்கில் ஸ்தெப்பி வெளி இருந்தது. அவர்கள் களிப்பும் குதூகலமுமானவர்கள், பலசாலிகள், துணிவுள்ளவர்கள். ஒரு நாள் அவர்களுக்குக் கெட்ட காலம் வந்து விட்டது. பகை இனத்தவர் எங்கிருந்தோ வந்து அவர்களைக் காட்டுக்குள் வெகு தூரம் விரட்டி விட்டார்கள். அங்கு ஒரே இருட்டும் சதுப்பு நிலமுமாக இருந்தது, ஏனென்றால் மரங்கள் நெடுங் காலத்தவை, அவற்றின் கிளைகள் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்திருந்தபடியால் வானம் புலப்படாதவாறு மறைத்தன. அவைகளின் அடர்ந்து தழைத்த இலைகளைக் கடந்து சூரிய கிரணங்கள் தரையில் பட முடியவில்லை. எப்போதாவது வெயில் தரையில் பட்டாலும் சதுப்பு நிலத்திலிருந்து கொடிய நாற்றம் கிளம்பியது. மக்கள் அதனால் மடிந்தார்கள். அப் போது இனத்துப் பெண்டிரும் குழந்தைகளும் அழுது புலம் பினார்கள், ஆண்கள் சிந்தனையில் ஆழ்ந்து துயரமடைந்தார் கள். காட்டை விட்டு வெளியேற வேண்டியது அவசியமா யிருந்தது. அதற்கு இரண்டு வழிகள்தான் இருந்தன: ஒன்று திரும்பிப் போகலாம், ஆனால் அங்கே வலிமை மிக்க கொடிய பகைவர்கள் இருந்தார்கள்; இரண்டாவது, முன்னே போகலாம், ஆனால் அங்கே ராட்சத மரங்கள் விசாலமான கிளைகளால் ஒன்றையொன்று தழுவிப் பிணைந்தவாறு சதுப்பு நிலத்தில் முடிச்சு வேர்களை ஆழ ஊன்றி உறுதியாய் நின்றன. இந்தக் கல் போன்ற மரங்கள் பகல்போதின் மங்கிய கருக்கலில் மௌனமாக அசையாமல் நின்றன. இரவு நேரத்தில் மக்கள் நெருப்பு மூட்டியதுமோ, அவை இன்னும் நெருக்கமாக அவர் களைச் சூழ்ந்து குமைந்தன. இரவும் பகலும், எப்போதும், இந்த மக்களைச் சுற்றியிருந்தது காரிருள் வளையம், அவர்களை நசுக்க முயல்வது போல. அவர்களோ, விசாலமான ஸ்தெப்பி வெளியில் வாழ்ந்து பழகியவர்கள். மரங்களின் உச்சி மீது காற்று வீசும் போதோ, இன்னும் பயங்கரமாக இருக்கும். அப்போது காடு முழுவதும் அவர்களது மரண கீதம் போன்ற இம்மெனும் ஒலியால் நிறைந்துவிடும். இந்த மக்கள் வலிய வர்கள். தங்களைத் தோற்கடித்தவர்களுக்கு எதிராகப் போரிட இவர்களால் முடியும். ஆனால் அவர்கள் சண்டை யில் உயிர் துறப்பதற்குத் துணியவில்லை. ஏனெனில் வழிவழி வந்த மரபுகளை அவர்கள் பாதுகாக்க வேண்டியிருந்தது.

அவர்கள் கொல்லப்பட்டால் அவர்களது மரபுகளும் மாய்ந்து விடும். ஆகவே, அவர்கள் காட்டின் இரைச்சலுக்கும் சதுப்பு நிலத்தின் நாற்றத்துக்கும் நடுவே உட்கார்ந்து நீண்ட இரவு முழுவதும் கவலை நிறைந்த எண்ணங்களில் ஆழ்ந்திருந் தார்கள். அவர்கள் உட்கார்ந்திருக்கையில் கணப்பு நெருப் பிஞல் ஏற்பட்ட நிழல்கள் அவர்களைச் சுற்றிலும் ஓசையின்றித் தத்திக் குதிக்கும். அவ்வாறு குதித்தாடுபவை நிழல்கள் அல்ல, காட்டையும் சதுப்பு நிலத்தையும் சேர்ந்த தீய ஆவிகள் தங்கள் வெற்றியைக் கொண்டாடுகின்றன என்று தோன்றும்... ஆக, இந்த மக்கள் உட்கார்ந்து சிந்தித்தார்கள். ஆனல் துன்ப எண்ணங்கள் மனிதர்களின் உடல்களையும் உள்ளங்களையும் நலிவிப்பது போல, கடும் உழைப்போ, பெண்களோ, வேறு எதுவுமோ நலிவிக்க முடியாது. ஓயாச் சிந்தனையால் நலிந்து போனர்கள் இம்மக்கள்... அவர்க ளிடையே அச்சம் பிறந்தது, அவர்களது திண்ணிய கரங்களைப் பிணைத்தது. நாற்றத்திஞல் இறந்தவர்களுடைய உடல்களின் அருகிலும், பிழைத்திருந்தவர்களின் தலைவிதியை எண்ணி யும் அழுது அரற்றிய மாதர் பயங்கரத்தை விளைத்தார்கள். கோழைத்தனம் நிறைந்த சொற்கள், ஆரம்பத்தில் மெது வாகவும் பயத்துடனும், பின்பு வர வர மேலும் உரக்கவும் காட்டிலே கேட்கலாயின... பகைவர்களிடம் சென்று தங்கள் விடுதலையை அவர்களுக்கு வழங்கிவிட மக்கள் ஆயத்தமாகி விட்டார்கள். இறப்பை எண்ணி எல்லோருமே திகில் கொண்டனர். அடிமை வாழ்வைப் பற்றியோ, ஒருவராவது அஞ்சவில்லை... அந்தச் சமயத்திலே தான்கோ முன்வந்து தன்னந் தனியே அவர்கள் அனைவரையும் காப்பாற்றிஞன்.''

தான்கோவின் எரியும் இதயம் பற்றிய கதையைக் கிழவி அடிக்கடி சொல்லியிருப்பாள் என்பது தெளிவாகப் புலப் பட்டது. ஏனென்ருல் அவள் வழக்கமான ராகம்போடும் பாணி யில் கதை சொல்லிக் கொண்டு போனுள். சதுப்பு நிலத்தின் நச்சு நெடியால் மடிந்துவந்த துர்ப்பாக்கியசாலிகளான விரட்டப்பட்ட மக்கள் அகப்பட்டுக் கொண்டிருந்த காட்டின் ஓசையை அவளது கரகரப்பான புகைச்சல் குரல் என் கற்பனையில் ஒலிக்கச் செய்தது...

''இளமையும் அழகும் உள்ளவன் தான்கோ. அழகர்கள்

எப்போதுமே துணிவு மிகுந்தவர்கள். ஆக, தான்கோ அவர்களிடம், தன் தோழர்களிடம், சொன்னான்:

'' 'சிந்தனையால் மட்டும் பாறையை வழியிலிருந்து அப்புறப்படுத்த முடியாது. ஒன்றும் செய்யாதவர்கள் ஒன்றையும் சாதிக்க இயலாது. சிந்தனையிலும் கவலைப்படுவதிலும் எதற்காக நாம் சக்தியை வீணாக்குகிறோம்? எழுங்கள்! காட்டினுள் வழி செய்து கொண்டு முன்னேறுவோம். காட்டிற்கு முடிவு இருக்கத்தானே வேண்டும்! உலகில் எதற்கும் முடிவு உண்டல்லவா? போவோம்! ஊம், கிளம்புங்கள்!'

''அவர்கள் அவனை நிமிர்ந்து பார்த்தார்கள். பெரு வலிவும் உயிர்த் தழலும் அவன் விழிகளில் சுடர்வதைக் கண்டு அவன் தங்கள் யாவரிலும் சிறந்தவன் என்று தெரிந்து கொண்டார்கள்.

'' 'எங்களை நடத்திச் செல்!' என்றார்கள்.

''அவன் அவர்களை நடத்திச் சென்றான்...''

கிழவி பேசுவதை நிறுத்திவிட்டு ஸ்தெப்பி வெளியை நோக்கினாள். அங்கே இருள் வரவர அடர்ந்து கொண்டு போயிற்று. வெகு தொலைவில் தான்கோவின் எரியும் இதயத்திலிருந்து கிளம்பிய பொறிகள் கணப் போது மலர்ந்து உதிரும் நீலப் பூக்கள் போன்று விட்டு விட்டு ஒளிர்ந்தன.

''தான்கோ அவர்களை நடத்திச் சென்றான். எல்லோரும் ஒன்றாக அவனைப் பின்தொடர்ந்தார்கள், அவனை நம்பினார்கள். கஷ்டமாயிருந்தது வழி! ஒரே இருட்டு. ஒவ்வோர் அடியிலும் சதுப்பு நிலம் தனது பேராசை பிடித்த சேற்று வாயைத் திறந்து மக்களை விழுங்கியது. மரங்கள் திண்ணிய சுவர் போன்று அவர்களது வழியைத் தடுத்தன. அவற்றின் கிளைகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து இருந்தன, வேர்கள் எல்லாப் பக்கங்களிலும் பாம்புகள்போல நீண்டு சென்றிருந்தன. ஒவ்வோர் அடி முன்னேறுவதற்கும் இந்த மக்கள் குருதியும் வியர்வையும் பெருமளவு செலுத்த வேண்டியிருந்தது. நெடு நேரம் நடந்தார்கள்... காடு மேலும் மேலும் அடர்த்தியாயிற்று; அவர்களது வலிமையோ குறைந்து கொண்டு போயிற்று! அவர்கள் தான்கோவைக் குறைகூறலானார்கள் —அவன் இளைஞன், அனுபவமற்றவன், எங்கேயோ இட்டுச் செல்கிறான் என்று. அவனோ, ஊக்கமும் உள்ளத் தெளிவும் துலங்க முன்னே நடந்தான்.

''ஒரு நாள் காட்டுக்கு மேலே புயல் வீசியது. மரங்கள் கசமுசவென்று பயங்கரமாகச் சிலுசிலுத்தன. காடு எங்கும் செறிந்து மண்டியது காரிருள். உலகு தோன்றிய நாள் முதல் உண்டான இரவுகள் எல்லாம் ஒன்று திரண்டு அங்கே குழுமி விட்டன போலிருந்தது. இராட்சத மரங்களுக்கு இடையே, இடியின் கொடு முழக்கத்துக்கு நடுவே நடந்தார்கள் சிறு மனிதர்கள். அவர்கள் நடக்கையில் அரக்க மரங்கள் சீற்றத் துடன் கடகடத்தன, சீழ்க்கை அடித்தன; மரங்களின் உச்சி கள் மீது வெட்டி வெட்டியடித்த மின்னல்கள், வறண்ட நீல ஒளியால் காட்டைப் பளிச்சிடச் செய்வதும், அதே விரை வுடன் மறைந்து விடுவதுமாக மக்களை வெருட்டின. வறண்ட மின் வெட்டுக்களால் ஒளிபெற்ற மரங்கள் உயிருள்ளவை போன்றும், தங்களது இருட் சிறையிலிருந்து மக்கள் தப்பி விடாதபடித் தடுக்க, அவர்களை வழி மறிக்க, தங்கள் கரடு தட்டிய நீண்ட கரங்களை விரித்து, அவர்களைச் சுற்றிலும் வலைப்பின்னல் போலக் கோத்துப் பிணைத்துக் கொண்டிருப் பவை போன்றும் காட்சியளித்தன. கிளைகளின் இருளிலிருந்து அச்சந்தருவதும், கருண்டதும், வறண்டதுமான ஏதோ ஒன்று அவர்களை உறுத்து நோக்கியது. கடினமான வழி. அதில் நடந்து களைத்துத் தளர்ந்த மக்கள் உளம் சோர்ந்தார் கள். தங்கள் பலவீனத்தை ஒப்புக்கொள்ள அவர்களுக்கு வெட்கமாய் இருந்த படியால் தங்களுக்கு முன்னே நடந்த தான்கோ மேல் தங்கள் ஆத்திரத்தையும் சீற்றத்தையும் பொழியலானார்கள். அவன் தங்களை நடத்திச் செல்லத் திறமை அற்றவன் என்று குறைகூறினார்கள். எப்படியிருக்கிறது சேதி? ஊம்?

''நடப்பதை நிறுத்தி விட்டு, காட்டின் அவல இரைச் சலுக்கிடையே, நடுங்கும் இருளின் நடுவே, அலுப்பும் சினமும் மேலெழ நின்று, தான்கோவை நிந்திக்கலானார்கள்.

'' 'நீ எங்களுக்கு அழிவும் கேடும் விளைப்பவன்! எங்களை நடத்தி வந்து சோர்வடையச் செய்து விட்டாய். இதற்குத் தண்டனையாக உன் உயிரை வாங்கப் போகிறோம்' என்றார் கள்.

''தான்கோ அவர்களை நேரிட நோக்கி, 'நடத்திச் செல்! என்று சொன்னீர்கள், நான் நடத்தி வந்தேன். நடத்திச் செல்ல எனக்குத் துணிவு இருந்தது, அதனால்தான் நடத்தி

வந்தேன்! நீங்களோ? உங்கள் தரப்பில் நீங்கள் என்ன செய்தீர்கள்? நீங்கள் வெறுமே நடந்தீர்களே தவிர, நீண்ட வழிநடைக்கு வேண்டிய பலத்தைத் திரட்டிக் கொள்ள வில்லை. நடக்க மாத்திரமே செய்தீர்கள், அதுவும் ஆட்டு மந்தை போல!' என்று கர்ஜித்தான்.

''ஆனால் அவனது சொற்கள் அவர்களது ஆத்திரத்தை இன்னும் தூண்டி விட்டன.

'' 'உன்னைக் கொல்வோம்! கொன்று விடுவோம்!' என்று ஆர்ப்பரித்தார்கள்.

''காடு சீழ்க்கையும் சீறலுமாக அவர்களது கூச்சலை எதிரொலித்தது. மின்னல்கள் இருளைத் தார் தாராகக் கிழித் தன. எவர்களுக்காக உழைத்தானோ அவர்களை நோட்டமிட்ட தான்கோ, அவர்கள் காட்டு விலங்குகள் போல் தோற்றமளிப் பதைக் கண்ணுற்றான். அவனைச் சூழ்ந்து மொய்த்தார்கள் அவர்கள். ஒருவர் முகத்திலாவது அருள் இல்லை. அவர் களிடம் இரக்கத்தை எதிர்பார்க்கவே முடியாது என்பதைக் கண்டான் தான்கோ. அப்போது அவன் உள்ளத்தில் மண்டி எழுந்தது சீற்றம். இருந்தாலும் இந்த மனிதர்கள் மேல் உண்டான இரக்கத்தால் அதை அடக்கிக் கொண்டான். இந்த மக்களை அவன் நேசித்தான். தான் இல்லாவிட்டால் அவர்கள் மடிந்து ஒழிவார்கள் என்று எண்ணினான். ஆகவே, அவர்களைக் காப்பாற்றும் விருப்பம், அவர்களைச் சுலபமான வழியில் நடத்திச் செல்லும் ஆசை அவன் நெஞ்சில் தழலாய் மூண்டெரிந்தது. இந்த வன் தழலின் ஒளி அவன் விழிகளில் சுடர்ந்தது... இதைக் கண்ட அவர்கள், அவன் ஆத்திரம் அடைந்திருப்பதாகவும் அதனால்தான் அவன் கண்கள் அவ்வளவு பிரகாசமாக அனல் வீசுவதாகவும் எண்ணி, அவன் தங்களைத் தாக்குவான் என்று எதிர்பார்த்து ஓநாய்கள் போல எச்சரிக்கையுடன், கூட்டமாக அவனைச் சூழ்ந்து நெருங் கினார்கள்—அப்போதுதான் அவனைப் பிடித்துக் கொல்வது எளிதாயிருக்கும் என்ற எண்ணத்தில். தான்கோ அவர் களுடைய நினைப்பைப் புரிந்து கொண்டான். அந்த நினைப்பு அவனுக்கு வருத்தம் ஊட்டியது. அதனால் அவன் இதயம் முன்னிலும் அதிக ஒளியுடன் மூண்டெரிந்தது.

''காடு சோககீதத்தைத் தொடர்ந்து இசைத்தது. இடி முழங்கி அதிர்ந்தது, மழை கொட்டியது...

‘‘ ‘இந்த மக்களுக்காக நான் என்ன செய்வது?’ என்று இடி முழக்கத்தை விஞ்சும் குரலில் கர்ஜித்தான் தான்கோ.

‘‘திடீரென்று அவன் கைகளால் தனது நெஞ்சைக் கிழித்து, அதற்குள்ளிருந்து இதயத்தைப் பிய்த்து எடுத்துத் தலைக்கு மேலே உயர்த்தினன்.

‘‘அது சூரியன் போல, அதையும் விட அதிகமாக, ஒளி வீசிற்று. மாந்தர்கள் மீது உண்டான பேரன்பு என்னும் இந்தத் தீப்பந்தத்தால் பிரகாசமடைந்த காடு அனைத்தும் நிசப்தமாகி விட்டது. ஒளியைக் கண்டு ஓட்டமெடுத்த இருள், காட்டினுள் நெடுந் தொலைவில் நடு நடுங்கி, சதுப்பு நிலத்தின் நாற்றக் குழம்பலில் விழுந்தது. வியப்பினல் கல்லாய்ச் சமைந்து விட்டார்கள் மக்கள்.

‘‘தான்கோ, ‘போகலாம் வாருங்கள்!’ என்று கூறி, தனது எரியும் இதயத்தைத் தூக்கிப் பிடித்தவாறு, வழியில் வெளிச்சம் காட்டிக் கொண்டு முன்னே பாய்ந்து சென்ருன்.

‘‘மந்திரத்தால் கட்டுண்டவர்கள் போல அவர்கள் அவன் பின்னே நடந்தார்கள். அப்போது காடு முன்போலவே ஆரவாரம் செய்தது. மரங்களின் உச்சிகள் வியப்புடன் அசைந்தாடின. ஆனல் ஓடும் மக்களின் அடியோசை, கானகத்தின் அரவத்தை அடக்கி விட்டது. எரியும் இதயத்தின் அற்புதக் காட்சியால் கவரப்பட்டு அனைவரும் விரைவாகவும் துணிவுடனும் ஓடினர்கள். இப்போதும் பலர் மடிந்தார்கள், ஆனல் முணுமுணுப்போ கண்ணீரோ இன்றி மடிந்தார்கள். தான்கோ இடை விடாது முன்னே சென்ற வண்ணமாயிருந்தான். அவன் இதயம் எரிந்த வண்ணமாயிருந்தது!

‘‘திடீரென்று கானகம் அவர்களுக்கு முன்னே விலகி வழி விட்டது. வழிவிட்டு விட்டு, அடர்வும் மௌனமுமாகப் பின் தங்கி விட்டது. தான்கோவும் மற்றவர்களும் வெயிலொளியும் மழையால் கழுவப்பட்ட தூய காற்றும் நிறைந்த இன்பக் கடலில் திடீரென மூழ்கித் திளைத்தார்கள். அவர்களுக்குப் பின்னே காட்டுக்கு மேலே புயல் வீசியது. ஆனல் இங்கேயோ பளிச்சென்று வெயில் அடித்தது. ஸ்தெப்பி வெளி உயிர்த்தது, புற்கள் மேல் மழைத்துளிகள் வைர டால் அடித்தன, ஆறு தங்கப் பாளம் போல மின்னியது... மாலை ஆகி விட்டது. மறையும் ஞாயிற்றின் கதிர்களைப் பிரதிபலித்த ஆறு, தான்கோவின் பிளந்த மார்பிலிருந்து கொதிக்கும் அருவியாய்ப்

பொழிந்த குருதிபோன்று செக்கச் செவேலெனக் காட்சி யளித்தது.

''தனக்கு முன்னே பரந்து கிடந்த ஸ்தெப்பி வெளி மீது கண்ணோட்டிஞன் கர்வமும் துணிவும் திகழும் தான்கோ. சுதந்திர பூமியை மகிழ்வுடன் நோக்கி, கர்வம் பொங்க வாய் விட்டுச் சிரித்தான். பின்பு தரையில் விழுந்து இறந்து போஞன்.

''உவகை மீதூர, நம்பிக்கை ஊற்றெடுக்க நின்ற மக்கள் அவன் இறந்ததைக் கவனிக்கவில்லை, தான்கோவின் உடலின் அருகே அவனுடைய துணிவு மிக்க இதயம் இன்னும் எரிந்து கொண்டிருப்பதையும் பார்க்கவில்லை. எச்சரிப்புள்ள ஒருவன் மட்டுமே இதைக் கவனித்தான். எதனுலோ அரண்டுபோய் அவன் கர்வம் ததும்பும் அவ்விதயத்தை மிதித்தான்... அது படபடவெனப் பொறிகளைச் சிதறிவிட்டு அணைந்து போயிற்று...

''புயலுக்கு முன்ஞல் ஸ்தெப்பி வெளியில் காணப்படு கின்றனவே, நீலப் பொறிகள், அவை அதிலிருந்துதான் கிளம்புகின்றன!''

இப்போது, கிழவி தனது அழகிய கதையைச் சொல்லி முடித்ததும், மக்களின் பொருட்டுத் தனது இதயத்தை எரித்து விட்டு, அவர்களிடம் கைம்மாறு எதுவும் கோராமல் உயிர் வழங்கிய வீரன் தான்கோவின் மஞேதிடத்திஞல் ஸ்தெப்பி வெளியும் வியப்படைந்து விட்டது போலப் பெரு மௌனத்தில் ஆழ்ந்தது. கிழவி தூங்கி வழிந்தாள். ''இவளது மனத்தில் இன்னும் எத்தனை கதைகளும் நினைவுகளும் எஞ்சியிருக்கும்'' என்று அவளை நோக்கியவாறு நான் எண்ண மிட்டேன். தான்கோவின் மாண்பு மிக்க எரியும் இதயத்தைப் பற்றியும், எழிலும் விறுவிறுப்பும் கொண்ட இத்தகைய கதைகளைப் படைத்த மனிதனது கற்பனையைப் பற்றியும் சிந்தித்தேன்.

இஸெர்கீல் அயர்ந்து உறங்கி விட்டாள். வீசிய காற்று, அவளது கசங்கிய கிழிசல் உடையை அகற்றி, சப்பிய மார்பகம் வெளித் தெரிய வைத்தது. நான் அவளுடைய முதிய உடலைப் போர்த்து மூடிவிட்டு, அவளருகே தரையில் படுத்துக் கொண்டேன். ஸ்தெப்பி இருளடர்ந்து நிசப்தமா யிருந்தது. வானத்தில் மேகங்கள் முன்போன்றே மெதுவாக, சலிப் பூட்டும் வகையில் ஊர்ந்த வண்ணமாயிருந்தன... வெறுமையும் துயரமும் பொங்க, கடல் ஓலமிட்டது.

பாட்டனும் பேரனும்

பரிசலுக்காகக் காத்திருந்த அவர்கள் இருவரும் கரைச் சரிவின் நிழலில் படுத்து, கால்களின் அருகே விரைந்தோடிய குபான் ஆற்றின் கலங்கிய அலைகளை மௌனமாக நெடுநேரம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பேரன் லியோன்கா உறங்கத் தொடங்கினான். பாட்டன் அர்கீப்பின் நெஞ்சில் நசுக்கும் லேசான வலி ஏற்பட்டதால் அவனுக்கு உறக்கம் வரவில்லை. கிழிசல் அணிந்து சுருண்டு கிடந்த அவர்களுடைய உருவங்கள் தரையின் கரும் பழுப்புப் பின்புலத்தில் பெரியதும் சிறியது மான இரண்டு இரங்கத்தக்க மண் கட்டிகள் போலத் தோற்றம் அளித்தன. களைத்து, பழுப்பேறி, புழுதி படிந் திருந்த முகங்கள் நிறத்தில் பழுப்புக் கந்தலை அப்படியே ஒத்திருந்தன.

பாட்டன் அர்கீப்பின் எலும்பு துருத்திய நெடிய உருவம் குறுகிய மணல் பகுதியின் குறுக்காக நீண்டுகிடந்தது. சரிவுக்கும் ஆற்றுக்கும் நடுவே மஞ்சள் நாடா போன்று கரையோடு கரையாகச் சென்றிருந்தது மணல் பகுதி. உறக்கத்தில் ஆழ்ந்த லியோன்கா பாட்டனின் விலாப் பக்கம் ஒருக் கணித்துச் சுருண்டு படுத்திருந்தான். லியோன்கா சிறியவன், நொய்ந்தவன். கந்தல் உடை அணிந்த அவன் ஆற்றின் அலைகள் அடித்து வந்து இங்கே மணலில் எறிந்திருந்த பட்டுப் போன பழங்கால மரமான பாட்டனிலிருந்து ஒடித்த கோணல் சுள்ளி போலக் காணப்பட்டான்.

பாட்டன் முழங்கையை ஊன்றித் தலையை நிமிர்த்தி, வெயிலில் முழுக்காடிய அக்கரை மீது பார்வை செலுத்தினான்.

அடர்த்தி அற்ற பிரம்புப் புதர்கள் அதற்கு விளிம்பு கட்டி யிருந்தன. பரிசலின் கரிய பக்கப் பகுதி புதர்களிலிருந்து வெளியே துருத்தி இருந்தது. அங்கே சலிப்பும் வெறுமையும் நிலவின. பாதையின் சாம்பல் நிறப் பட்டை ஆற்றிலிருந்து ஸ்தெப்பிக்குள் ஆழமாகச் சென்றிருந்தது. அது இரக்கம் அற்றது போன்று நேராகவும் வரண்டும் இருந்தது, மனச் சோர்வு உண்டாக்கியது.

முதுமையினுல் அழற்சி அடைந்து மங்கிய பாட்டனுடைய கண்களின் சிவப்பு நிற இமைகள் வீங்கி இருந்தன. கண்கள் பதற்றத்துடன் கொட்டிக் கொண்டிருந்தன. சுருக்கங்கள் புள்ளிக் கோலம் இட்டிருந்த முகத்திலோ, களைப்பும் ஏக்கமும் நிலையாகக் குடி கொண்டிருந்தன. அவன் அடிக்கடி வாய்க்குள் இருமினுன், பின்பு பேரன் மேல் கண்ணேட்டி வாயைக் கையால் பொத்திக் கொண்டான். இருமல் கம்ம லாகவும் மூச்சுத் திணற வைப்பதாகவும் இருந்தது. இருமிய போது கிழவன் தரையிலிருந்து தலையை உயர்த்த வேண்டி இருந்தது, அவனது விழிகளிலிருந்து பருத்த கண்ணீர்த் துளிகள் சிந்தின.

அவனுடைய இருமலையும் மணலில் அலைகளின் மெல்லிய சரசரப்பையும் தவிர ஸ்தெப்பியில் எவ்வகையான ஒலிகளும் இல்லை... வெயிலில் பொசுங்கிய பிரமாண்டமான பழுப்பு ஸ்தெப்பி ஆற்றின் இரு மருங்குகளிலும் பரவி இருந்தது. தொலைவில், தொடுவானத்தில்தான், முதிய விழிகளின் பார்வைக்கு அரிதாகவே புலப்பட்ட கோதுமைப் பயிரின் தங்கக் கடல் பகட்டாக அலையடித்துக் கொண்டிருந்தது. கண் கள் கூசும்படிப் பளிச்சிட்ட வானம் நேராக அதில் வீழ்ந்தது. தூரத்துப் பாப்ளார் மரங்களின் மூன்று வடிவமைந்த உரு வங்கள் வானத் திரையில் ஓவியக் காட்சி அளித்தன. அவை மாறி மாறிக் குறுகுவதும் உயரமாவதும் போலவும் வானமும் அவற்றுல் மூடப்பட்ட கோதுமைப் பயிரும் எழுவதும் தணி வதுமாக ஊசலாடுவது போலவும் தோன்றியது. ஸ்தெப்பி மூடுபனியின் தகத்தகாயமான வெள்ளிப் படலம் திடீரென எல்லாவற்றையும் மறைத்து விட்டது...

பெருக்கும் ஒளியும் மயக்கும் உள்ள இந்தப் படலம் சில வேளைகளில் தொலைவிலிருந்து அனேகமாக ஆற்றின் கரைக்கு வந்தது. வானிலிருந்து திடீரெனக் கொட்டுகிற, வான்

போன்றே தூய்மையும் அமைதியும் வாய்ந்த ஆறு போல அப்போது அது தென்பட்டது.

இந்தக் காட்சிக்குப் பழக்கப்பட்டிராத பாட்டன் அர்கீப் அப்போது கண்களைத் துடைத்துக் கொண்டான். இந்த வெக்கையும் ஸ்தெப்பியும் தன் கால்களில் எஞ்சிய வலிமை முழுவதையும் பறித்துக் கொண்டு விட்டது போலவே பார்வையையும் பிடுங்கிக் கொண்டு விடும் என்று ஏக்கத்துடன் எண்ணமிட்டான்.

அண்மைக் காலத்தில் எப்போதையும் விட இன்று அவன் உடல்நிலை மோசமாக இருந்தது. விரைவில் இறந்து விடு வோம் என்று உணர்ந்தான். சாவு தவிர்க்க முடியாத கடமை என்பதனால் அவன் அதைப் பற்றிச் சிந்தனை செய்யாமல் அசட்டையாக இருந்து வந்தான். ஆனால் இங்கே அல்ல, தூரத்தில், சொந்த ஊரில் இறக்க விரும்பினான். தவிர, பேரனைப் பற்றிய எண்ணமும் அவனைக் கலக்கியது... லியோன்கா எங்கே போவான்?..

நாள் தோறும் பல முறை அவன் இந்தக் கேள்வியைத் தன்னிடம் கேட்டுக் கொள்வான். ஒவ்வொரு தடவையும் அவன் உள்ளம் சாம்பிச் சில்லிட்டுப் போகும். வீட்டு நினைவு வந்து விடும். அக்கணமே சொந்த மண்ணுக்கு, ருஷ்யாவுக்குத் திரும்ப ஆசை உண்டாகும்...

ஆனால் ருஷ்யாவுக்கு நெடுந் தொலை நடக்க வேண்டும்... எப்படியும் ஊர் சேர முடியாது, வழியிலேயே உயிர் போய் விடும். இங்கே குபானில் தாராளமாகப் பிச்சை போடுகிறார்கள். எல்லோரும் வசதி உள்ளவர்கள், ஆனால் கடினமானவர்கள், நகையாடுபவர்கள். தாங்கள் பணக்காரர் கள் ஆகையால் ஏழைகளை இவர்களுக்குப் பிடிக்கவில்லை...

கண்ணீரால் நனைந்த பார்வையைப் பேரன் மீது நாட்டி, சுரசுரப்பான கையால் அவனுடைய தலையைப் பதபாகமாக வருடினான் பாட்டன்.

பேரன் அசைந்து இள நீல விழிகளால் பாட்டனை ஏறிட்டுப் பார்த்தான். அந்த விழிகள் பெரியவை, ஆழ்ந்தவை, குழந்தைப் பருவத்திற்குப் பொருந்தாத சிந்தனை உள்ளவை. மெல்லிய, வெளிறிய உதடுகளும் கூரிய மூக்கும் கொண்டு அம்மைத் தழும்புகள் நிறைந்த மெலிந்த சிறு முகத்தில் அந்த விழிகள் இன்னும் பெரியவையாகத் தோற்றம் அளித்தன.

''வருகிறதா?'' என்று கேட்டு, கண்களில் ஒளி படாமல் கையால் மறைத்துக் கொண்டு, வெயிலைப் பிரதிபலித்த ஆற்றை நோக்கினன் சிறுவன்.

''இன்னும் இல்லை, வரவில்லை. நிற்கிறது. இங்கே அதற்கு என்ன வேலை? யாரும் கூப்பிடவில்லை, அதனால் அதுவும் நின்று கொண்டிருக்கிறது...'' என்று பேரன் தலையைத் தொடர்ந்து வருடியவாறு மெதுவாகக் கூறினன் அர்கீப். ''உறங்கினயா?''

லியோன்கா நிச்சயம் இல்லாமல் தலையை உருட்டி மணலில் உடலை நீட்டிக் கொண்டான். இருவரும் சற்று நேரம் பேசாதிருந்தார்கள்.

''எனக்கு மட்டும் நீந்தத் தெரிந்தால் முழுகிக் குளிப்பேன்'' என்று ஆற்றை உற்று நோக்கியவாறு கூறினன் லியோன்கா. ''ஆறு படு வேகம்! நம் ஊரில் இந்த மாதிரி ஆறுகள் கிடையாது. எதற்காகப் பரபரக்கிறது? நேரமாகி விடும் என்று அஞ்சுவது போல அல்லவா ஓடுகிறது...''

இவ்வாறு கூறி அதிருப்தியுடன் நீரிலிருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டான் லியோன்கா.

பாட்டன் சற்று நேரம் யோசித்து விட்டு, ''ஒன்று செய்வோம். இடுப்புக் கயிறுகளை அவிழ்ப்போம். கயிறுகளை முடிந்து கொள்வோம். நான் உன் காலில் கயிற்றைக் கட்டிப் பிடித்துக் கொள்கிறேன், நீ இறங்கிக் குளி...'' என்றான்.

''ஓகோ!..'' என்று காரணத்துடன் நீட்டி முழக்கினன் பேரன். ''நல்ல யோசனை தான் செய்தாய் போ! அல்லது, பெருக்கு உன்னை இழுக்காது என்ற நினைப்போ? இரண்டு பேரும் முழுகிப் போவோம்.''

''அதுவும் சரிதான்! இழுத்து விடும். அடே அப்பா, எப்படித் தளபளக்கிறது... வசந்த காலத்தில் பனி இளகும் போது கரை புரண்டு பெருகும் போலிருக்கிறது—அப்பப்பா!.. இங்கே புல் அறுப்பு தாவு தீர்ந்து போகும். புல் வெளிக்கு எல்லையே இராது!''

லியோன்காவுக்குப் பேச விருப்பம் இல்லை. அவன் பாட்டனின் சொற்களுக்கு மறு மொழி கூருமல் விட்டு விட்டு, உலர்ந்த களிமண் கட்டியை எடுத்து விரல்களால் நசுக்கிப் பிசைந்து புழுதி ஆக்கினன். ஆழ்ந்த, ஒரு முனைப்புள்ள தோற்றம் அவன் முகத்தில் காணப்பட்டது.

பாட்டன் அவனைப் பார்த்து, கண்களைச் சுரித்தவாறு எதையோ பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

லியோன்கா கைகளிலிருந்து புழுதியைத் தட்டிப் போக்கி விட்டுத் தணிந்த, ஒரு சீரான குரலில் பேசத் தொடங்கினான்: ''பார்க்கப் போனால் இது... இந்த மண் இப்போது... நான் இதைக் கையில் எடுத்துத் தேய்த்தேன், புழுதி ஆகி விட்டது... சின்னத் துணுக்குகள் மட்டுந்தான், கண்களுக்குத் தெரிவதே கஷ்டம்...''

''ஊம், அதனால் என்ன?'' என்று கேட்ட அர்கீப், இருமத் தொடங்கி, கண்களில் துளித்த கண்ணீரின் ஊடாகப் பேரனின் ஈரமின்றி ஒளி வீசிய பெரிய விழிகளை நோக்கினான். ''நீ என்ன சொல்ல விரும்புகிறாய்?'' என்று இருமி முடித்த பின் தொடர்ந்து வினவினான்.

''ஆயிற்று...'' என்று தலையை ஆட்டினான் லியோன்கா. ''ஆனாலும், மொத்தமாகச் சேர்ந்தால் அது எத்தனை பெரிசு, பார்!..'' என்று அக்கரையைக் கை வீச்சால் குறித்தான். ''அதன் மேல் எத்தனை கட்டுமானம்... நாம் எத்தனை நகரங்களைக் கடந்து வந்தோம்! ஒரு பாடு! அப்புறம் ஆட்கள் தாம் எங்கும் எத்தனை பேர்!''

தன் எண்ணப் போக்கைப் புரிந்து கொள்ள முடியாத வனாக லியோன்கா சுற்று முற்றும் பார்த்தவாறு மீண்டும் மௌனமாகச் சிந்தனையில் ஆழ்ந்தான்.

பாட்டனும் சற்று நேரம் பேசாதிருந்தான். பின்பு பேரனை ஒட்டினாற்போல நகர்ந்து, பரிவு ததும்ப மொழிந்தான்:

''கெட்டிக்காரப் பயல் நீ! சரியாகச் சொன்னாய்—எல்லாம் புழுதிதான்... நகரங்களும் மனிதர்களும் நீயும் நானும்—வெறும் புழுதிதான். அடாடா, லியோன்கா, லியோன்கா! நீ மட்டும் படித்தாயானால்!.. ரொம்ப தூரம் முன்னேறுவாய். இப்போது உன் கதி என்ன ஆகும்?..''

பாட்டன் பேரனுடைய தலையை அணைத்துக் கொண்டு அதை முத்தமிட்டான்.

லியோன்கா தன் சணல் முடியைப் பாட்டனின் நடுங்கும் கோணல் விரல்களிலிருந்து விடுவித்துக் கொண்டு, கொஞ்சம் உற்சாகம் அடைந்து, ''பொறு...'' என்று கூவினான். ''நீ என்ன சொல்கிறாய்? புழுதியா? நகரங்களும் எல்லாமுமே?''

''கடவுளின் படைப்பு அப்படி, கண்ணே. எல்லாம் மண், மண்ணே, புழுதிதான். அதில் உள்ளவை எல்லாம் மடிந்து போகும்... அப்படியாக்கும்! ஆகையால் மனிதன் உழைப்பும் பணிவும் உள்ளவனக வாழ வேண்டும். நான் கூடச் சீக்கிரம் இறந்து போவேன்...'' என்று வேறு விஷயத்துக்குத் தாவிய பாட்டன், ''அப்போது நான் இல்லாமல் நீ எங்கே போவாய்?'' என்று ஏக்கத்துடன் கூறினன்.

லியோன்கா இந்தக் கேள்வியைப் பாட்டனிடமிருந்து அடிக்கடி கேட்டிருந்தான். சாவைப் பற்றி விவாதிப்பதில் அவனுக்கு இதற்குள் சலிப்பு ஏற்பட்டு விட்டது. அவன் பேசாமல் ஒரு புறம் திரும்பி, புல் தாளைக் கிள்ளி வாயில் போட்டுக் கொண்டு மெதுவாகச் சவைக்கலானன்.

பாட்டனுக்கோ, இது வேதனை தரும் விஷயமாக இருந்தது.

''என்ன நீ பேசாதிருக்கிருய்? நான் இல்லாமல் எப்படி வாழப் போகிருய், சொல்லு!'' என்று பேரன் பக்கம் குனிந்து மறுபடி இருமிக் கொண்டு தணிந்த குரலில் கேட்டான்.

லியோன்கா பாட்டனை ஓரக் கண்ணுல் பார்த்து, ''அது தான் சொன்னேனே...'' என்று எங்கோ நினைவாக அதிருப்தியுடன் கூறினன்.

அவனுக்கு இந்த உரையாடல்கள் பிடிக்காததற்கு இன்னெரு காரணம், இவை அடிக்கடி சச்சரவில் முடிந்தது ஆகும். தன் சாவு நெருங்குவது பற்றிப் பாட்டன் நெடுநேரம் பேசினன். முதலில் லியோன்கா அவனுடைய பேச்சை ஆழ்ந்த கவனத்துடன் கேட்டான், தனக்கு எதிர்ப்பட்ட நிலைமையின் புதுமையைக் கண்டு அஞ்சினன், அழுதான். ஆனல் நாளடைவில் இது அவனுக்கு அலுத்துப் போயிற்று. பாட்டன் சொல்லுவதைக் காது கொடுத்துக் கேட்காமல் தன் எண்ணங்களில் ஆழ்ந்திருந்தான். இதைக் கண்டு கொண்ட பாட்டன் கோபம் அடைந்தான். லியோன்கா பாட்டனை நேசிப்பதில்லை, அவன் படும் கவலையை மதிப்பதில்லை என்று குறை கூறினன். பாட்டனுக்குச் சாவு கூடிய சீக்கிரம் வர வேண்டும் என்று லியோன்கா விரும்புவதாக முடிவில் கடிந்து கொண்டான்.

''என்ன, 'சொன்னேன்னே'? நீ இன்னும் அசட்டுப் பயல். உன் வாழ்க்கையைப் புரிந்து கொள்ள உன்னுல் முடியவில்லை. உனக்கு எத்தனை வயது ஆகிறது? பத்து முடிந்து பதினென்ருவது நடக்கிறது. நீ படு சோனி, வேலைக்கு உதவ மாட்டாய்.

எங்கேதான் போவாயோ நீ? நல்ல மனிதர்கள் உதவி செய்வார்கள் என்று எண்ணுகிருயா? உன்னிடம் பணம் இருந்தால் அதைச் செலவு பண்ண அவர்கள் உதவுவார்கள்—மெய்யாகவே. பிச்சை எடுப்பதோ கிழவனுன எனக்கே பிடிக்கவில்லே. ஒவ்வொருவனுக்கும் தலே வணங்கி ஒவ்வொருவனிடமும் கெஞ்சிக் கேட்க வேண்டி இருக்கிறது. திட்டுகிருர்கள், சில வேளேகளில் அடித்துப் புடைக்கிருர்கள், விரட்டுகிருர்கள்...ஏழையை இவர்கள் மனிதனுக மதிக்கிருர்கள் என்று நினேக்கிருயோ? எவருமே மதிப்பதில்லே! பத்து வருசமாக எங்கும் சுற்றி வருகிறேன், எனக்குத் தெரியும். ஒரு துண்டு ரொட்டியையே ஆயிரம் ரூபிளாக மதிக்கிருர்கள். பிச்சை போட்டதுமே சொர்க்க வாசல் தங்களுக்குத் திறந்து விடும் என்று நினேக்கிருர்கள்! எதற்காக அதிகப் பிச்சை போடுகிருர்கள் என்று எண்ணுகிருய்? தங்கள் மனச் சாட்சியைத் தேற்றிக் கொள்வதற்காக. அதற்காகவாக்கும், தம்பீ, இரக்கத்திஞல் அல்ல! உனக்கு ஒரு துண்டு விட்டெறிந்த பின்தான் தின்ன அவனுக்கு வெட்கமாய் இருக்காது. வயிறு நிறைய உண்டவன் விலங்குதான். பசித்தவனுக்கு அவன் ஒருபோதும் இரங்க மாட்டான். வயிருரச் சாப்பிட்டவனும் பட்டினி கிடப்பவனும் ஒருவருக்கு ஒருவர் பகைவர்கள். என்னென்றைக்கும் அவர்கள் ஒருவருக்கு ஒருவர் எரிச்சல் ஊட்டிக் கொண்டிருப்பார்கள். அதனுல்தான் ஒருவருக்கு ஒருவர் இரங்குவதும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதும் அவர்களுக்கு முடியாது...''

எரிச்சலாலும் ஏக்கத்தாலும் பாட்டன் கிளர்ச்சி அடைந்தான். இதனுல் அவனுடைய உதடுகள் துடித்தன. முதிய, மங்கிய விழிகள் இமை மயிர்களும் புருவங்களும் அடங்கிய சிவந்த வரம்புகளில் விரைவாகப் பாய்ந்தாடின. கருமை படிந்த முகத்தில் சுருக்கங்கள் முன்னிலும் துலக்கமாகப் புடைத்தன.

லியோன்காவுக்குப் பாட்டனே இந்த நிலேயில் பிடிக்காது, எதனுலோ அவன் மேல் ஓரளவு அச்சங்கூட உண்டாகும்.

''அதனுல்தான் உன்னேக் கேட்கிறேன், உலகத்தை எப்படிச் சமாளிக்கப் போகிருய்? நீ சோனிப் பயல். உலகமோ, காட்டு விலங்கு. அது எடுத்த எடுப்பிலேயே உன்னே விழுங்கி விடும். இதை நான் விரும்பவில்லே... உன்மேல் உயிரை வைத்

திருக்கிறேனே, செல்வக் கண்ணே!.. எனக்கு நீ ஒருவன்தான், உனக்கும் நான் ஒருவன்தான்... நான் எப்படித்தான் சாகப் போகிறேனே? என்னால் சாக முடியாது, உன்னை யாரிடமாவது விடாமல்... யாரிடம் விடுவது?.. கடவுளே! உன் அடிமையை நீ ஏன் கைவிட்டாய்? உயிர்வாழ எனக்குத் திராணி இல்லை, சாவதும் எனக்குக் கூடாது, ஏனென்றால்—குழந்தையை— நான் காப்பாற்ற வேண்டும். ஏழு ஆண்டு வளர்த்தேன்... இந்தக் கிழட்டுக்... கைகளால் சீராட்டினேன்... ஆண்டவா, எனக்கு உதவி செய்!..''

பாட்டன் உட்கார்ந்து. நடுங்கும் முழங்கால்களில் தலையைப் புதைத்துக் கொண்டு அழலானான்.

ஆறு விரைவாகத் தொலைவில் பெருகி ஓடிற்று, கரையில் ஓசையுடன் சளப்பென மோதியது. கிழவனின் அரற்றலை இந்தச் சளப்பொலியால் அடக்க அது விரும்பியது போல் இருந்தது. தெளிந்த வானம் பளிச்சென்று முறுவலித்தது. கலங்கிய அலைகளின் கலக இரைச்சலை அமைதியாகக் கேட்டவாறு பொசுக்கும் வெக்கையைப் பொழிந்தது அது.

''போதும், அழாதே தாத்தா!'' என்று ஒரு புறம் பார்த்த வாறு கடுமையான குரலில் சொன்னான் லியோன்கா. பின்பு பாட்டனை நோக்கி முகத்தைத் திருப்பி, ''எல்லாவற்றையும் பற்றித்தான் பேசி ஆயிற்றே. அழிந்து போய் விட மாட்டேன். வேறு எங்கும் வாய்க்காவிட்டால் சாப்பாட்டு விடுதியில் வேலைக்கு அமர்கிறேன்...'' என்றான்.

''அடித்துக் கொல்வார்களே...'' என்று கண்ணீர் மல்க முனகினான் பாட்டன்.

''ஒரு வேளை அடிக்காமல் இருந்தாலும் இருப்பார்கள். அடிக்க மாட்டார்கள் என்று வைத்துக் கொள்வோம்'' என்று சற்று உற்சாகமாகக் கூவினான் லியோன்கா. ''அப்போது என்னவாம்? எல்லோரையும் அடிக்க விடுவேனா?..''

இவ்வாறு கத்திய லியோன்கா எதனாலோ திடீரென்று பேச்சை நடுவில் நிறுத்திவிட்டுச் சற்று நேரம் மௌனமாய் இருந்தான். பிறகு தணிந்த குரலில் சொன்னான்:

''இல்லாவிட்டால் மடத்துக்குப் போய் விடுகிறேன்...''

பாட்டன் உற்சாகம் அடைந்து, ''மடத்துக்கு என்றால்!'' எனப் பெருமூச்சு விட்டவன், திணற வைக்கும் இருமல் வந்து விடவே மறுபடி துடித்து நெளியலானான்.

அவர்களுடைய தலைகளுக்கு மேலே கூச்சலும் சக்கரங்களின் கிறீச்சொலியும் கேட்டன...

''பரி-ஈ-சல்!.. பரி-ஈ-சல்காரா—ஏய்!'' என்று காற்றில் அதிர்ச்சி ஏற்படுத்தியது யாருடையவோ பெருங் குரல்.

அவர்கள் பயணப் பைகளையும் கைத்தடிகளையும் எடுத்துக் கொண்டு துள்ளி எழுந்து நின்றார்கள்.

காதைத் துளைக்கும்படிக் கிறீச்சிட்டவாறு மணலில் உருண்டு வந்தது வண்டி. அதில் நின்று கொண்டிருந்தான் ஒரு கஸாக்கியன். அவன் மென்மயிர்த் தோல் தொப்பியை ஒரு காதின் மேல் இழுத்து விட்டுக் கொண்டிருந்தான். தலையைச் சாய்த்து, திறந்த வாயால் காற்றை உள் இழுத்து நிறைத்துக் கொண்டு உரக்கக் கத்துவதற்கு ஆயத்தமானான். அவனுடைய முன் துருத்திய அகன்ற மார்பு இதனால் இன்னும் அதிகமாக முன்னே துருத்தியது. கருந் தாடியின் பட்டு விளிம்புக்குள் வெண் பற்கள் பளிச்சென மின்னின. தாடியோ, இரத்த நாளங்கள் புடைத்த கண்களிலிருந்து தொடங்கி இருந்தது. பொத்தான்கள் போடாத சட்டைக்கு மேல் திறந்த கோட்டை அலட்சியமாகத் தோள்கள் மீது போட்டிருந்தான். வெயில் பட்டுப் பழுப்பேறிய அவனது மயிரடர்ந்த மேனி அவற்றுக்குள் தெரிந்தது. அவனுடைய கட்டுறுதி வாய்ந்த பெரிய உருவம், சதைப் பிடிப்புள்ள புள்ளியிட்ட குதிரையின் விகாரமான பெரிய வடிவம், பருத்த டயர்கள் மாட்டிய உயரமான வண்டிச் சக்கரங்கள் —எல்லாவற்றிலிருந்தும் செல்வச் செழிப்பும் சக்தியும் உடல் நலமும் கமழ்ந்தன.

''ஏய்!.. ஏய்!..''

பாட்டனும் பேரனும் தங்கள் தலைகளிலிருந்து தொப்பிகளைக் கழற்றிக் குனிந்து வணங்கினார்கள்.

''வணக்கம்!'' என்று வெடுக்கெனக் கூறினான் வந்தவன். கரிய பரிசல் புதர்களிலிருந்து மெதுவாகவும் பாங்கின்றியும் வெளியே ஊர்ந்து வந்த அக்கரையை ஒரு பார்வை பார்த்து விட்டு ஏழைகளை ஏற இறங்கக் கவனமாக நோட்டமிடலானான். ''ருஷ்யாவிலிருந்தோ?''

''அங்கிருந்துதான், அன்புள்ள கனவானே!'' என்று தலை வணங்கி விடை இறுத்தான் அர்கீப்.

''அங்கே, உங்கள் நாட்டில், பஞ்சமாமே, ஊம்?''

அவன் வண்டியிலிருந்து தரையில் குதித்து நுக வாரை இழுத்துக் கட்டத் தலைப்பட்டான்.

''கரப்பான் பூச்சிகள் கூடப் பட்டினியால் சாகின்றன.''

''ஓகோ! கரப்பான் பூச்சிகள் கூடச் சாகின்றனவா? அப்படியானல், ஒரு துணுக்கு கூட மீதம் இல்லாமல் தின்று தீர்த்து விட்டீர்களா? சாப்பிடுவதில் சூரர்கள்தான். ஆனல் வேலை செய்வதில் மட்டும் கட்டாயம் கழப்புகிறீர்கள் என்று தெரிகிறது. ஏனென்ருல் நன்ருக வேலை செய்தால் பஞ்சம் வராது.''

''தருமப் பிரபுவே, இதற்குக் காரணம் நிலந்தான். விளைச்சல் தர மாட்டேன் என்கிறது. நிலத்தின் சத்தை எல்லாம் நாங்கள் உறிஞ்சி விட்டோம்.''

''நிலமா?'' என்று தலையை அசைத்தான் கஸாக்கியன். ''நிலம் எப்போதும் விளைச்சல் தர வேண்டும். அதற்காகவே அது மனிதனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிலத்தை அல்ல, கைகளைச் சொல்லு. கைகள் மோசமானவை. நல்ல கைகளுக்குப் பாறை கூடப் பணிய மறுக்காது, விளைச்சல் தரும்.''

பரிசல் வந்து விட்டது.

சிவந்த முகங்கள் கொண்ட இரண்டு கஸாக்கியர்கள் பரிசலின் தரையில் பருத்த கால்களை ஊன்றியவாறு பரிசலை மடமடப்புடன் கரையில் நுழைத்து விட்டுச் சற்று தள்ளாடினர்கள், இழு வடத்தைக் கையிலிருந்து எறிந்தார்கள், பின்பு ஒருவரை ஒருவர் பார்த்தவாறு உஸ் உஸ் என்று பெருமூச்சு விடத் தொடங்கினர்கள்.

வந்தவன் தன் குதிரையைப் பரிசலில் நடத்தியவாறு தொப்பியைக் கையால் தொட்டு, ''வெக்கையாய் இருக்கிறதோ?'' என்று பற்களைக் காட்டினன்.

''ஆமாம்!'' என்று காற்சட்டைப் பைகளில் கைகளை ஆழமாக நுழைத்துக் கொண்டு விடையளித்தான் பரிசல்காரர்களில் ஒருவன். பின்பு வண்டியின் அருகே போய், அதற்குள் பார்வை இட்டு, பலமாக மூச்சு இழுத்தவாறு மூக்கை அசைத்தான்.

மற்றவன் தரையில் உட்கார்ந்து முக்கி முனகியபடி நீள் சோடுகளைக் கழற்ற முற்பட்டான்.

பாட்டனும் லியோன்காவும் பரிசலில் ஏறி, கஸாக்கியர்

களைப் பார்த்தவாறு பக்கப் பகுதியில் சாய்ந்து கொண்டார்கள்.

''நல்லது, போவோம்!'' என்று கட்டளை இட்டான் வண்டிச் சொந்தக்காரன்.

''குடிப்பதற்கு எதுவும் கொண்டுபோகவில்லையா நீ?'' என்று வண்டியைப் பார்வை இட்டவன் கேட்டான். அவனுடைய கூட்டாளி நீள் சோடுகளைக் கழற்றி விட்டுச் சோட்டின் மேல் பகுதிக்குள் கண்களைச் சுரித்தவாறு பார்வை செலுத்தினன்.

''ஒன்றும் கொண்டுபோகவில்லை. ஏன்? குபானில் தண்ணீர் பற்ருதா என்ன?''

''தண்ணீரா?!. நான் கேட்டது தண்ணீர் அல்ல.''

''வோத்காவா? நான் வோத்கா எடுத்துப் போகவில்லை.''

கேட்டவன் பரிசல் தரையில் பார்வையை நாட்டியவாறு ''என்ன அப்பா நீ வெறுங்கையோடு போகிருய்?'' என்று சிந்தனையில் ஆழ்ந்தான்.

''ஊம், ஊம், புறப்படுவோம்!''

கஸாக்கியன் கைகளில் துப்பி இழு வடத்தைப் பிடித்தான். கடக்க வந்தவன் அவனுக்கு உதவி செய்யலானுன்.

''தாத்தா, நீ ஏன் உதவி செய்யாமல் இருக்கிருய்?'' என்று நீள் சோடுகளைச் சரி செய்து கொண்டிருந்த பரிசல் காரன் அர்கீப்பிடம் கேட்டான்.

''எனக்கு ஏலுமா, தம்பீ!'' என்று தலையை அசைத்தவாறு முறையிடும் தொனியில் கூவினன் கிழவன்.

''அவர்களுக்கு உதவத் தேவையும் இல்லை. தனியாகவே சமாளித்துக் கொள்வார்கள்!''

தன் சொற்களின் உண்மையைப் பாட்டனுக்கு நிரூபிக்க விரும்பியவன் போலப் பொத்தென்று விழுந்து மண்டியிட்டு, பரிசல் தரையில் படுத்துக் கொண்டான் அவன்.

அவனுடைய கூட்டாளி சோம்பலுடன் அவனைத் திட்டினன். பதில் கிடைக்காமல் போகவே மேல் தட்டில் கால்களை ஊன்றியவாறு தொப்புத் தொப்பென்று உதைத்தான்.

ஆற்றுப் பெருக்கு மந்தமான ஓசையுடன் பரிசலின் பக்கப் பகுதியில் சளப்பிட்டது. அதனுல் அடிக்கப்பட்ட பரிசல் மெதுவாக முன்னேறியவாறு அதிர்ந்து நடுங்கி அசைந்தாடியது.

தண்ணீரை நோக்கிய லியோன்கா தனது தலை இனிமையாகக் கிறுங்குவதையும் அலைகளின் விரைந்த ஓட்டத்தால் களைப்புற்ற கண்கள் உறக்க மயக்கத்தில் இருள்வதையும் உணர்ந்தான். பாட்டனின் ஒலியற்ற கிசுகிசுப்பும் இழுவடத்தின் கிறீச்சொலியும் அலைகளின் சளப்போசையும் அவனைத் தாலாட்டின. உறக்கக் களைப்பில் பரிசல் தளத்தில் படுக்க விரும்பினான். ஆனால் திடீரென எதுவோ அவனை உலுக்கவே அவன் விழுந்து விட்டான்.

அவன் கண்களை அகலத் திறந்து சுற்று முற்றும் பார்த்தான். கரையில், கரிந்த அடிமரக் கட்டையில் பரிசலைக் கட்டி விட்டுக் கஸாக்கியர்கள் அவனைக் கேலி செய்து சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

''என்ன, உறங்கி விட்டாயா? வலு இல்லாதவன் நீ. வண்டியில் உட்காரு. ஊரில் கொண்டு விடுகிறேன். தாத்தா, நீயும் உட்காரு.''

வேண்டுமென்றே மூக்கால் நொணநொணக்கும் குரலில் கஸாக்கியனுக்கு நன்றி தெரிவித்து விட்டு, முக்கி முனகிக் கொண்டு வண்டியில் ஏறினான் பாட்டன். லியோன்காவும் அதில் துள்ளி ஏறிக் கொள்ளவே, நுண்ணிய கரும் புழுதிப் படலங்களைக் கிளப்பியவாறு வண்டி சென்றது. புழுதி கிளம்பியதால் பாட்டன் மூச்சு திணற இரும வேண்டியதாயிற்று.

கஸாக்கியன் பாட்டு பாடலானான். விந்தையான ஒலிகளை எழுப்பியவாறு, சுரங்களை இடை முறிப்பதும் சீழ்க்கையால் முடிப்பதுமாக அவன் பாடினான். கண்டிலிருந்து நூலைப் பிரிப்பது போல அவன் ஒலிகளை நீட்டுவது போன்றும் சிக்கல் எதிர்ப்பட்ட போது அவற்றை அறுத்து விடுவது போன்றும் தோன்றியது.

சக்கரங்கள் புழுதியைக் கிளப்பியவாறு முறையிடுபவை போலக் கிறீச்சிட்டன. பாட்டன் தலையைக் குலுக்கியபடி இடைவிடாமல் இருமினான். லியோன்காவோ, எண்ணங்களில் ஆழ்ந்திருந்தான்: இதோ அவர்கள் ஊரைச் சேர்ந்து விடுவார்கள். அப்புறம் வீடு வீடாகப் போய், பலகணிகளின் பக்கத்தில் நின்று கொண்டு, ''ஆண்டவனே, இயேசு கிறிஸ்துவே...'' என்று நொணநொணக்கும் குரலில் பாடிப் பிச்சை கேட்க வேண்டும். மறுபடியும் ஊர்ச் சிறுவர்கள் அவனைத் தொந்தரவு செய்வார்கள், பெண்பிள்ளைகள் ருஷ்யாவைப்

பற்றிக் கேள்விகள் கேட்டு நச்சரிப்பார்கள்... அந்த வேளையில் பாட்டனையும் பார்க்கவே பிடிக்காது. அவன் வழக்கத்தை விட அதிகத் தடவை இருமுவான், அதிகமாகக் கூனுவான். இதனால் அவனுக்கே அசௌகரியமாக இருக்கும், வலி எடுக்கும். முறையிடும் குரலில், அடிக்கடி தேம்பியவாறு பேசுவான், ஒருபோதும் ஓரிடத்திலும் நடவாத நிகழ்ச்சிகளை விவரிப்பான்... ருஷ்யாவில் மக்கள் வீதிகளில் சாகிறார்கள், அப்படியே விழுந்து கிடக்கிறார்கள், பிணங்களை எடுக்க ஆளில்லை, ஏனென்றால் பட்டினியால் எல்லோருக்குமே மூளை புரண்டு விட்டது என்று அளப்பான்... உண்மையில் இந்த மாதிரி எதையும் அவர்கள் எங்குமே காணவில்லை. என்றாலும் ஆட்கள் அதிகப் பிச்சை போடும்படிச் செய்வதற்கு இதெல் லாம் வேண்டி இருந்தது. ஆனால் இந்தப் பிச்சையை இங்கே என்ன செய்வது? சொந்த ஊரிலே என்றால் மணங்குக்கு எண்பது காசு அல்லது ஒரு ரூபிள் கூடக் கொடுத்து வாங்கிக் கொள்ள எப்போதும் ஆட்கள் கிடைப்பார்கள். இங்கேயோ, வாங்குவோரையே காணோம். பிற்பாடு இந்தத் துண்டுகளை, சில ரொம்ப ருசியானவை என்றாலும், பயணப் பைகளி லிருந்து எடுத்து ஸ்தெப்பியில் எறிய வேண்டி வருகிறது.

சுருண்டு கிடந்த இரண்டு உருவங்களையும் திரும்பிப் பார்த்து, ''பிச்சை எடுக்கப் போவீர்களோ?'' என்று கேட்டான் கஸாக்கியன்.

''ஆமாம், கனவானே!'' என்று பெருமூச்சுடன் அவனுக்குப் பதில் சொன்னான் அர்கீப்.

''தாத்தா, எழுந்திருந்து நில்லு, என் வீட்டைக் காட்டு கிறேன். இராத் தங்க என் வீட்டுக்கு வாருங்கள்.''

பாட்டன் எழுந்திருக்க முயன்றான். ஆனால் விழுந்து விட்டான். வண்டி விளிம்பில் அவனுடைய விலா இடித்துக் கொண்டது. அவன் வாய்க்குள் முனகினான்.

''அடாடா, கிழவனாரே!..'' என்று அனுதாபத்துடன் உறுமினான் கஸாக்கியன். ''ஊம், பரவாயில்லை, பார்க்க வேண்டாம். இராத் தங்க நேரம் வந்ததும் சோர்னியின் வீடு, அந்திரேய் சோர்னியின் வீடு, எங்கே என்று விசாரி. நான் தான் அவன். இப்போது இறங்கு. போய் வாருங்கள்!''

வெண் பாப்ளார்களும் கரும் பாப்ளார்களும் அடர்ந்த சோலைக்கு எதிரே பாட்டனும் பேரனும் இருந்தார்கள். மரங்

களின் ஊடாகக் கூரைகளும் வேலிகளும் தெரிந்தன. சுற்றிலும்—வலப் புறமும் இடப் புறமும்—இதே போன்ற சோலைகள் வானளாவ நின்றன. அவற்றின் பசிய இலைகள் சாம்பல் புழுதிப் படலம் போர்த்திருந்தன. நேரான பருத்த மரத் தண்டுகளின் பட்டைகள் வெக்கையால் வெடித்திருந்தன.

பிச்சைக்காரர்களுக்கு நேர் எதிரே, இரண்டு படல்களின் ஊடாகச் சென்றிருந்தது குறுகிய சந்து. கால்நடையாக நிறைய நடந்தவர்களுக்கு இயல்பான தளர் நடை நடந்து இந்தச் சந்து வழியே சென்ருர்கள் அவர்கள்.

''ஊம், லியோன்கா, நாம் எப்படிப் போவோம், சேர்ந்தா அல்லது தனித் தனியாகவா?'' என்று கேட்ட பாட்டன் பதிலுக்காகக் காத்திராமல் தொடர்ந்தான்: ''சேர்ந்து போவதே மேல்—உனக்கு ஆனுலும் கொஞ்சமாகப் பிச்சை போடுகிருர்கள். உனக்குப் பிச்சை கேட்கத் தெரியவில்லையே...''

''நிறைய எதற்காகவாம்? எப்படியும் எல்லாவற்றையும் தின்ன முடியாது...'' எனச் சுற்று முற்றும் கண்ணோட்டிய வாறு முறைப்புடன் விடையளித்தான் லியோன்கா.

''எதற்காகவா? வேடிக்கையான பையன் நீ!.. திடீரென்று எவனுவது வந்து விலைக்கு வாங்கினுலோ? அதற்காகத்தான், கேட்டாயா!.. பணம் தருவான். பணமோ, பெரிய விஷயம். பணம் இருந்தால் நான் செத்த பிறகு உனக்குக் கேடு வராது.''

இவ்வாறு கூறி, கனிவாகக் குறு நகை செய்து பேரனின் தலையை வருடினுன் பாட்டன்.

''வழியிலே நான் எவ்வளவு பணம் சேர்த்திருக்கிறேன், தெரியுமா? ஊம்?''

''எவ்வளவாம்?'' என்று அக்கறை இன்றிக் கேட்டான் லியோன்கா.

''பதினென்றரை ரூபிள்!.. பார்த்தாயா?''

ஆனுல் இந்தத் தொகையும் பாட்டனின் களி கொண்டாடும் குரலும் லியோன்கா மீது எவ்வித உளப் பதிவும் ஏற்படுத்தவில்லை.

''அட சின்னப் பையா, சின்னப் பையா!'' என்று பெருமூச்செறிந்தான் பாட்டன். ''அப்படியானுல் தனித் தனியாகப் போகலாம் என்கிருயா?''

''ஆமாம்...''

''நல்லது... வேண்டிய போது சர்ச்சுக்கு வா.''

''ஆகட்டும்.''

பாட்டன் சந்தில் இடப் புறம் திரும்பினுன், லியோன்கா மேலே நடந்தான். ஒரு பத்து அடி நடந்த பின், ''பரோபகாரிகளே, தருமப் பிரபுக்களே!..'' என்ற கணகணக்கும் கூப்பாடு அவன் காதுகளுக்கு எட்டியது. சுருதி கலந்த கூஸ்லி என்னும் தந்தி வாத்தியத்தில் எல்லாவற்றிலும் தடித்த தந்தியிலிருந்து மெல்லிய தந்தி வரை யாரோ அங்கையால் தடவியது போல ஒலித்தது இந்தக் கூப்பாடு. லியோன்கா திடுக்கிட்டு நடையை விரைவுபடுத்தினுன். பாட்டனின் இறைஞ்சுதல்களைக் கேட்கும் போதெல்லாம் அவனுக்கு அருவருப்பும் ஒரு வகையான ஏக்கமும் உண்டாகும். பாட்டனுக்குப் பிச்சை போட ஆட்கள் மறுக்கும் போதோ, இதோ பாட்டன் வீரிடப் போகிருன் என்று எண்ணி லியோன்கா மிரண்டுகூடப் போவான்.

ஊருக்கு மேல் உறக்க மயக்கமும் வெக்கையும் நிறைந்த காற்றில் சுற்றி வந்த பாட்டனின் நடுங்கும் பரிதாபக் குரல் ஒலிகள் இன்னும் அவன் செவிகளில் பட்டுக் கொண்டிருந்தன. நாற்புறமும் இரவு நேரத்தில் போல நிசப்தம் குடி கொண்டிருந்தது. லியோன்கா படலை நெருங்கி, அதற்கு மேலாக வீதிக்கு உயரே நீண்டிருந்த செர்ரி மரக் கிளைகளின் நிழலில் உட்கார்ந்தான். தேனீ எங்கோ ஙொய்யென்று ரீங்காரம் செய்து கொண்டிருந்தது...

லியோன்கா பயணப் பையைத் தோளிலிருந்து கழற்றி அதன் மேல் தலையை வைத்துக் கொண்டான். முகத்துக்கு மேலே இருந்த இலைகளின் இடை வழியாகச் சற்று நேரம் வானத்தை நோக்கிய பின் ஆழ்ந்து உறங்கி விட்டான். அடர்ந்த நீள் கிளைகளும் படலின் பின்னல் சட்ட நிழலும் வழி நடந்தவர்களின் பார்வைகளிலிருந்து அவனை மறைத்தன.

காற்றில் ஊசலாடிய விந்தையான ஒலிகளால் உசுப்பப் பட்டு அவன் கண் விழித்தான். மாலை நெருங்கி விட்டதால் காற்று குளுகுளுவென்று இருந்தது. அவனுக்குச் சிறிது தூரத்தில் யாரோ அழுது கொண்டிருந்தார்கள். குழந்தைத்தனமாக—கிளர்ச்சி பொங்கவும் சலிக்காமலும்—அழுது கொண்டிருந்தார்கள். அழுகை ஒலிகள் மெல்லிய ஏக்கக் குரலில்

நிலைத்தன, பின்பு திடீரென்று மீண்டும் புதிய வலுவுடன் பொங்கிப் பெருகின, கணந் தோறும் அவனை நெருங்கின. அவன் தலையை உயர்த்தி நீள் கிளைகளின் வழியாகச் சாலை மீது பார்வை செலுத்தினன்.

அதன் வழியே வந்து கொண்டிருந்தாள் ஒரு சிறுமி. அவளுக்கு ஏழு வயது இருக்கும். துப்புரவான உடை அணிந் திருந்தாள். கண்ணீரால் வீங்கிய முகம் சிவந்திருந்தது. வெள்ளை ஸ்கர்ட் விளிம்பால் கண்ணீரை அடிக்கடி துடைத்துக் கொண்டிருந்தாள். வெறுங் கால்களைச் சாலையில் தேய்த்து அடர்ந்த புழுதியைக் கிளப்பியவாறு மெதுவாக நடந்தாள். எங்கே, எதற்காகப் போகிறோம் என்பது அவ ளுக்குத் தெரியவில்லை போலும். அவளுடைய பெரிய கரு விழிகளில் இப்போது மனத்தாங்கலும் துயரமும் கண்ணீரும் ததும்பின. அவளுடைய செம்பழுப்புத் தலைமயிர் பரட்டை யாக நெற்றி மீதும் கன்னத்தின் மேலும் தோள்களின் மேலும் விழுந்திருந்தது. சிறிய, மெல்லிய, ரோஜா நிறக் காதுகள் மயிர்க் கற்றைகளிலிருந்து விளையாட்டுத் தனமாகத் துருத்தி இருந்தன.

கண்ணீர் பெருக்கிய போதிலும் அவள் லியோன்காவுக்கு மிக வேடிக்கையானவளாகத் தோன்றினள்—வேடிக்கையான வளாகவும் குதூகலப் பேர்வழியாகவும்... குறும்புக் காரியாகவும் இருக்க வேண்டும்!..

அவள் தனக்கு நேராக வந்ததும் அவன் எழுந்து நின்று, "நீ எதற்காக அழுகிறாய்?" என்று கேட்டான்.

அவள் உடனே அழுகையை நிறுத்தி விட்டுத் திடுக்கிட்டு நின்று விட்டாள். ஆனால் இன்னமும் விடாமல் விம்மிக் கொண் டிருந்தாள். பின்பு, சில விநாடிகள் அவனைப் பார்த்ததும் அவளுடைய உதடுகள் மறுபடி நடுங்கின, முகம் சுளித்தது, மார்பு விம்மித் தணிந்தது. மீண்டும் வீரிட்டு அழுது கொண்டே அவள் நடந்தாள்.

தனக்குள் ஏதோ வேதனை ஏற்பட்டதை உணர்ந்த லியோன்கா திடீரென்று தானும் அவள் பின்னே போனன்.

அவளுக்குப் பக்கத்தில் வருமுன்பே, "நீ அழாதே. பெரிய பெண் ஆயிற்றே, வெட்கம்!" என்று பேச்சைத் தொடங் கினன். அவளை எட்டிப் பிடித்ததும் அவளுடைய முகத்தைப்

பார்த்து, ''ஊம், எதற்காக நீ வீரிட்டாய்?'' என்று மறுபடி கேட்டான்.

''ஊம்—ஊம்!..'' என்று இழுத்தாள் அவள். ''உன்னை மட்டும்...'' என்றவள் சாலைப் புழுதியில் திடீரென்று உட்கார்ந்து, கைகளால் முகத்தை மூடிக் கொண்டு புகலின்றித் தேம்பலானாள்.

''அட!'' என்று அலட்சியமாகக் கையை வீசினான் லியோன்கா. ''பெண்பிள்ளை என்பதைக் காட்டி விட்டாயே. ச்சீ!..''

ஆனால் இதனால் அவளுக்கும் ஆறுதல் ஏற்படவில்லை, அவன் மனதும் அமைதி அடையவில்லை. அவளுடைய மெல்லிய ரோஜா நிற விரல்களின் ஊடாகக் கண்ணீர்த் துளிகள் ஒன்றன் பின் ஒன்றாகப் பெருகியதைக் கண்ட லியோன்காவுக்கும் ஏக்கம் உண்டாயிற்று, அழுகை வந்தது. அவளுக்கு மேல் குனிந்து கையை ஜாக்கிரதையாக உயர்த்தி அவளது முடியை லேசாகத் தொட்டவன், தனது துணிச்சலால் பயம் அடைந்து அக்கணமே வெடுக்கென்று கையை இழுத்துக் கொண்டான். அவள் மேலும் மேலும் அழுது கொண்டே இருந்தாள், ஒன்றுமே பேசவில்லை.

அவளுக்கு உதவுவதன் இன்றியமையாத தேவையை உணர்ந்த லியோன்கா சற்று நேரம் பேசாதிருந்த பின், ''கேளு!'' என்று பேச்சைத் தொடங்கினான். ''எதற்காக நீ இப்படி? அடித்தார்களா என்ன?.. அதனால் என்ன, வலி இதோ போய்விடும்!.. அல்லது, வேறு காரணமோ? சொல்லு! பெண்ணே—ஊம்?''

சிறுமி முகத்திலிருந்து கையை எடுக்காமல் துயரத்துடன் தலையை அசைத்தாள். முடிவில் தோள்களைக் குலுக்கியவாறு தேம்பல்களுக்கு இடையே மெதுவாக அவனுக்குப் பதில் சொன்னாள்:

''தலைக்குட்டையை... கெட்டுப் போக்கி விட்டேன்!.. அப்பா சந்தையிலிருந்து வாங்கி வந்தார்... இள நீல நிறம், பூப் போட்டது, நான் தலையில் கட்டிக் கொண்டேன்—கெட்டுப் போக்கி விட்டேன்.'' இவ்வாறு கூறி விட்டு விம்மிக் கொண்டும் முனகும் குரலில் விந்தையாக ''ஓ-ஓ-ஓ!'' எனக் கூவிக் கொண்டும் முன்னிலும் பலமாகவும் உரக்கவும் மறுபடி அழத் தொடங்கினாள்.

அவளுக்கு உதவுவதற்குத் தன்னால் இயலாது என்பதை

லியோன்கா உணர்ந்தான். தயக்கத்துடன் அவளிடமிருந்து விலகி, இருட்டத் தொடங்கிய வானத்தைச் சிந்தனையுடனும் ஏக்கத்துடனும் நோக்கினான். அவன் மனது வேதனைப் பட்டது. சிறுமியின் மேல் அவனுக்கு மிகுந்த இரக்கம் உண்டாயிற்று.

''அழாதே!.. ஒருவேளை கிடைத்து விடும்...'' என்று தணிவாகக் கிசுகிசுத்தான். ஆனால் தனது தேறுதலை அவள் காது கொடுத்துக் கேட்கவில்லை என்பதைக் கண்டு அவளிடமிருந்து இன்னும் தூர விலகினான். இந்த இழப்புக்காகத் தகப்பனாரிட மிருந்து இவளுக்குச் செம்மையாகக் கிடைக்கும் போலும் என்று நினைத்துக் கொண்டான். கரு முடியனை பெரிய கஸாக்கியத் தகப்பன் அவளை அடிப்பது போலவும் அவள் கண்ணீர் புரையேற, பயத்தாலும் வலியாலும் உடம்பு நடுநடுங்கத் தகப்பனுடைய கால்களில் விழுவது போலவும் அக்கணமே அவன் கற்பனை செய்து கொண்டான்...

அவன் எழுந்து அப்பால் சென்றான். ஆனால் ஒரு ஐந்து அடி விலகிச் சென்ற பின் மீண்டும் நேரே திரும்பி, படலை ஒட்டினாற் போல அவளுக்கு எதிரே நின்று கனிவும் நல்லியல்பும் தொனிக்கும் சொற்களை நினைவுபடுத்திக் கொள்ள முயன்றான்...

''நீ சாலையிலிருந்து போய் விடேன், பெண்ணே! அப்புறம் அழுவதையும் நிறுத்து! வீட்டுக்குப் போய் நடந்ததை நடந்தபடிச் சொல்லு. கெட்டுப் போய் விட்டது... எதற்காக இப்படி வருத்தப்படுகிறாய்?..''

பரிவு ததும்பும் தணிந்த குரலில் அவன் இதைச் சொல்லத் தொடங்கினான். இப்போது ஆத்திரத்துடன் முடித்தவன், அவள் தரையிலிருந்து எழுவதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தான்.

''அதுதான் சரி!'' என்று புன்னகையுடன் உற்சாகமாகப் பேச்சைத் தொடர்ந்தான். ''இப்போது போ. வேண்டுமானால் நான் உன்னோடு வந்து எல்லாவற்றையும் சொல்லட்டுமா? உனக்கு ஆதரவாகப் பேசுகிறேன், பயப்படாதே!''

இவ்வாறு சொல்லி, சுற்று முற்றும் கண்ணோட்டி, தோள்களைப் பெருமிதம் தோன்றக் குலுக்கினான் லியோன்கா.

அவள் ஆடையிலிருந்த தூசியை மெதுவாகத் தட்டிப் போக்கியவாறு ஓயாமல் தேம்பிக் கொண்டு ''வேண்டாம்...'' என்று கிசுகிசுத்தாள்.

''இல்லாவிட்டால்—வருகிறேனே?'' என்று முழு ஆயத்தத்துடன் உரக்கக் கூறிய லியோன்கா தொப்பியைக் காதுக்கு மேல் நகர்த்திக் கொண்டான்.

இப்போது அவன் கால்களை அகலப் பரப்பி வைத்தவாறு அவள் முன்னே நின்றான். அவன் உடுத்திருந்த கந்தல்கள் இதனால் ஒரு வகையில் வீரம் தோன்றச் சிலுப்பிக் கொண்டன. அவன் கைத்தடியை உறுதியுடன் தரையில் இடித்து, அவளை உறுத்துப் பார்த்தான். அவனது துயரம் தோய்ந்த பெரிய விழிகள் பெருமிதமும் துணிவும் பொங்க ஒளி வீசின.

சிறுமி கண்ணீரை முகத்தில் தேய்த்துப் பூசிக் கொண்டு அவனைக் கடைக் கண்ணால் பார்த்தாள். பின்பு மறுபடி பெருமூச்செறிந்து, சொன்னாள்:

''வேண்டாம், வராதே... அம்மாவுக்குப் பிச்சைக்காரர்களைக் கண்டால் பிடிக்காது.''

இவ்வாறு கூறி அவனிடமிருந்து விலகி, இரண்டு தரம் திரும்பிப் பார்த்துவிட்டுப் போனாள்.

லியோன்காவுக்குச் சலிப்பு உண்டாயிற்று. தனது உறுதி வாய்ந்த, சவால் விடும் தோரணையை அவன் தான் அறியாமலே, மெதுவான அங்க அசைவுகளால் மாற்றிக் கொண்டான். மறுபடி கூனினான், பணிவு அடைந்தான். அதுவரை கையில் தொங்கிக் கொண்டிருந்த பயணப் பையை முதுகின் மேல் போட்டுக் கொண்டான். சிறுமி சந்தின் திருப்பத்தில் மறைந்ததும் கத்தினான்:

''போய் வா!''

அவள் நிற்காமலே அவன் பக்கம் திரும்பிப் பார்த்துவிட்டு மறைந்து போனாள்.

மாலை நெருங்கியது. இடிப் புயலுக்கு முன் அறிகுறியான தனிப்பட்ட கொடும் புழுக்கம் காற்றில் நிறைந்திருந்தது. சூரியன் சாய்ந்து விட்டது. பாப்ளார் மர முடிகள் மெல்லிய செம்மை படிந்து திகழ்ந்தன. ஆனால் அவற்றின் கிளைகளை மூடியிருந்த மாலை நிழல்கள் காரணமாக உயரமான அசைவற்ற மரமுடிகள் முன்னிலும் அடர்த்தியாகவும் அதிக உயரமாகவும் தோற்றம் அளித்தன... அவற்றுக்கு மேலே வானம் கூடக் கருமை அடைந்து வெல்வெட் ஆகிக் கீழே தரையின் பக்கம் இறங்கியது போல் இருந்தது. எங்கோ தொலைவில் ஆட்கள் பேசினார்கள், இன்னும் அப்பால் எங்கோ, மறு கரையில், பாடினார்கள். தணிந்தவை ஆனாலும் செறிவுள்ள

இந்தக் குரல்களும் புழுக்கத்தினுல் நிறைந்து ததும்புபவை போல ஒலித்தன.

லியோன்காவுக்கு இன்னும் அதிகமாகச் சலிப்பும் என்ன காரணத்தாலோ அச்சமும் கூட உண்டாயின. பாட்டனிடம் போக விரும்பி, சுற்றிலும் பார்வை செலுத்தி, சந்தின் வழியே விரைவாக முன்னே சென்ருன். பிச்சை கேட்க அவனுக்கு விருப்பம் இல்லை. தன் மார்பில் இதயம் மிக மிக அடிக்கடி துடிப்பதையும் நடக்கவும் சிந்திக்கவும் தனக்கு ஏதோ தனிப்பட்ட விதத்தில் சோம்பலாய் இருப்பதையும் நடந்தவாறு அவன் உணர்ந்தான்... ஆனுல் சிறுமி அவன் நினைவை விட்டு அகலவில்லை. அவன் எண்ணமிட்டான்: ''இப் போது அவள் கதி என்ன ஆகும்? அவள் பணக்காரக் குடும் பத்தைச் சேர்ந்தவளானுல் அவளை அடிப்பார்கள். எல்லாப் பணக்காரர்களும் கஞ்சர்கள். அவள் ஏழை என்ருல் ஒரு வேளை அடிக்க மாட்டார்கள்... ஏழை வீடுகளில் சிறுவர் களிடம் அதிக அன்பு பாராட்டுகிருர்கள், ஏனென்ருல் அவர் கள் வேலை செய்வார்கள் என்று எதிர்பார்க்கிருர்கள்.'' எண்ணங்கள் அவன் மூளையில் ஒன்றன் பின் ஒன்ருகப் பிடிவாதத்துடன் குமைந்தன. களைப்பூட்டுவதும் நசுக்குவதும் ஆன ஏக்க உணர்வு அவனுடைய எண்ணங்களின் நிழல் போல நிமிடத்துக்கு நிமிடம் தாங்க அதிகக் கடினமாகி, அவனை வர வர அதிகமாக ஆட்கொண்டது.

மாலை நிழல்களும் முன்னிலும் அடர்த்தி ஆகி மூச்சை அதிகமாகத் திணற அடித்தன. கஸாக்கிய ஆடவரும் பெண்டிரும் லியோன்காவுக்கு எதிரே வந்து அவனைச் சட்டை செய்யாமல் கடந்து சென்ருர்கள். ருஷ்யாவிலிருந்து வந்த பஞ்சைகளின் பெருக்குக்கு அவர்கள் இதற்குள் பழகிப் போ யிருந்தார்கள். அவனும் அவர்களுடைய நிகுநிகுப்பான பருத்த உருவங்களை மங்கிய விழிகளால் சோம்பலுடன் மேலெழுந்த வாரியாக நோக்கியவாறு விரைவாகச் சர்ச்சுக்கு நடந்தான். அதன் சிலுவை அவனுக்கு எதிரே மரங்களின் பின் பளிச் சிட்டது.

மேய்ச்சலிலிருந்து திரும்பும் மந்தையின் ஆரவாரம் அவனுக்கு எதிரிலிருந்து வந்தது. இதோ சர்ச்சு. தாழ்ந்து அகன்றது, இளநீல வண்ணம் பூசிய ஐந்து கும்மட்டங்கள் கொண்டது. அதைச் சுற்றிலும் நட்டு வளர்க்கப்பட்டிருந்த

பாப்ளார் மரங்களின் முடிகள் சர்ச்சுச் சிலுவைகளுக்கும் மேலே உயர்ந்திருந்தன. சிலுவைகள் அஸ்தமன சூரியனின் கிரணங்களில் முழுக்காடியவாறு பசுந் தழைகளின் ஊடாக ரோஜாச் செம்பொன் ஒளியில் சுடர்ந்தன.

இதோ பாட்டன் பயணப் பையின் கனத்தால் கூனியவாறு, சர்ச்சு முகப்புக்கு வந்து, உள்ளங்கையை நெற்றி மேல் வைத்துக் கொண்டு இரு புறங்களிலும் பார்வை செலுத்தினன்.

பாட்டனின் பின்னே நெற்றியை மறைக்கும் தொப்பி அணிந்து கைத்தடியுடன் சிரமப்பட்டுத் தள்ளாடி நடந்தான் உள்ளூர்க் கஸாக்கியன் ஒருவன்.

சர்ச்சின் சுற்றுச் சுவர் அருகே தனக்காகக் காத்திருந்த பேரனை நெருங்கி, ''என்ன, பயணப் பை காலியாய் இருக்கிறதே?'' என்று கேட்டான் பாட்டன். ''என்னைப் பார், எவ்வளவு சேர்த்திருக்கிறேன் என்று!..'' இவ்வாறு கூறி, செம்மச் செம்ம நிறைத்த கித்தான் மூட்டையை முக்கி முனகிக் கொண்டு தோளிலிருந்து கழற்றித் தரையில் போட்டான். ''அப்-ப்பா! இங்கே நன்ருகப் பிச்சை போடுகிருர்கள்! ரொம்ப நன்ருக!.. ஆமாம், நீ ஏன் முகத்தை இப்படித் தொங்கப் போட்டுக் கொண்டிருக்கிருய்?''

''தலையை வலிக்கிறது...'' என்று பாட்டனின் அருகே தரையில் உட்கார்ந்தவாறு தணிந்த குரலில் மொழிந்தான் லியோன்கா.

''அப்படியா?.. களைத்துப் போனுய்... சடைந்து போய் விட்டாய்!.. இதோ இராத் தங்கப் போவோம். அந்தக் கஸாக்கியனின் பெயர் என்ன? ஊம்?''

''அந்திரேய் சோர்னி.''

''நாம் அப்படியே விசாரிப்போம்: இங்கே அந்திரேய் சோர்னியின் வீடு எது? என்று. இதோ ஒருவன் நம் பக்கம் வருகிருன்... ஆமாம்... நல்ல மக்கள், செழிப்பு உள்ளவர்கள்! எப்போதும் கோதுமை ரொட்டி சாப்பிடுகிருர்கள். வணக்கம், நல்ல மனிதரே!''

கஸாக்கியன் அவர்கள் கிட்டத்தில் வந்து, பாட்டனின் முகமனுக்கு நிதானமாக விடை அளித்தான்:

''உங்களுக்கும் வணக்கம்!''

பின்பு, கால்களை அகற்றி வைத்து, எவ்வித உணர்ச்சியை

யும் காட்டாத பெரிய விழிகளைப் பிச்சைக்காரர்கள் மேல் நாட்டியவாறு மௌனமாகச் சொறிந்து கொண்டான்.

லியோன்கா அவனை ஆவலாகப் பார்த்தான். பாட்டன் தன் முதிய விழிகளைக் கேள்விக் குறியுடன் கொட்டினான். கஸாக்கியன் மௌனம் சாதித்தான். முடிவில் நாக்கைப் பாதி நீட்டி மீசை நுனியை அதனால் பிடிக்க முயன்றான். இந்த முயற்சியில் வெற்றி அடைந்து மீசையை வாய்க்குள் தள்ளிச் சற்று சவைத்து விட்டு நாக்கினால் அதை வாயிலிருந்து மீண்டும் வெளியேற்றிய பின், அலுப்பூட்டத் தொடங்கி விட்ட மௌனத்தை ஒரு விதமாகக் கலைத்தான்.

''ஊம்—வாருங்கள் கூட்டச் சாவடிக்குப் போவோம்!'' என்று சோம்பலுடன் கூறினான்.

''எதற்காக?'' என்று திடுக்கிட்டு வினவினான் பாட்டன்.

லியோன்காவுக்கு எதனாலோ குலை பதைத்தது.

''வேண்டும்... உத்தரவாகி இருக்கிறது. ஊம்!''

கஸாக்கியன் அவர்களுக்கு முதுகைக் காட்டித் திரும்பிப் போகப் புறப்பட்டவன், பின்னே பார்த்து, அவர்கள் இரு வரும் இடத்தை விட்டு நகராததைக் கண்டு கோபத்துடன் மறுபடி கத்தினான்:

''இன்னும் என்ன சுணக்கம்?''

அப்போது பாட்டனும் லியோன்காவும் தடதடவென்று அவன் பின்னே போனார்கள்.

லியோன்கா பாட்டனை வைத்த கண் வாங்காமல் பார்த்தான். பாட்டனின் உதடுகளும் தலையும் நடுங்குவதையும் அவன் நாற்புறமும் மிரண்டு நோக்கி விட்டுச் சட்டென்று தன் சட்டை மார்புக்குள் துழாவுவதையும் கண்டு, பாட்டன் முன்பு தமானில் செய்தது போல மறுபடி ஏதோ சேட்டை பண்ணி இருக்கிறான் என்று உணர்ந்தான். தமானில் நடந்ததை எண்ணிப் பார்த்தபோது அவனுக்கு அச்சம் உண்டாயிற்று. பாட்டன் அங்கே வீட்டு முகப்பில் காயப் போட்டிருந்த உள்ளாடைகளைச் சுருட்டிக் கொண்டான். ஆட்கள் அவனைக் கையும் களவுமாகப் பிடித்து விட்டார்கள். அவர்கள் சிரித்தார்கள், வைதார்கள், அடிக்கக் கூடச் செய்தார்கள், முடிவில் நடு நிசியில் ஊரிலிருந்து வெளியே விரட்டி விட்டார்கள். பாட்டனும் பேரனும் ஜலசந்தியின் கரையோர மணலில் இரவைக் கழித்தார்கள். இரவு முழுதும் கடல்

பயங்கரமாக உறுமிக் கொண்டிருந்தது... பெருகி வந்த அலைகளால் நகர்த்தப்பட்ட மணல் நெறு நெறுத்தது... பாட்டனோ, இரவு முழுவதும்முனகிக் கொண்டும் தான் திருடன் என்றும் தன்னை மன்னிக்கும்படியும் கடவுளைக் கிசுகிசுத்து வேண்டிக் கொண்டும் இருந்தான்.

''லியோன்கா...''

விலாவில் இடிபட்ட லியோன்கா திடுக்கிட்டுப் பாட்டனை நோக்கினான். பாட்டனுடைய முகம் தொங்கிப் போய் வரண்டு சாம்பல் பூத்து நடுங்கிக் கொண்டிருந்தது.

கஸாக்கியன் ஒரு ஐந்தடி முன்னே நடந்தான், சுங்கான் புகைத்தான், புர்டாக் செடிகளின் முடிகளைக் கைத்தடியால் அடித்தான், பின்னே வந்தவர்களைத் திரும்பியே பார்க்கவில்லை.

''இந்தா, வாங்கிக் கொள்!.. எறிந்து விடு... நீள் களைச் செடிகளில்... எறிந்த இடத்தைக் கவனித்துக் கொள்... அப்புறம் எடுத்துக் கொள்ள வாக்காக...'' என்று அனேகமாக வாய்க்குள் கிசுகிசுத்தான் பாட்டன். போகிற போக்கில் பேரனோடு நெருக்கமாக ஒட்டிக் கொண்டு உருண்டையாகச் சுருட்டிய ஒரு துணியை அவன் கையில் திணித்தான்.

அக்கணமே அச்சத்தினால் லியோன்காவின் உள்ளமும் உடலும் சில்லிட்டுப் போயின. அவன் நடுங்கியவாறு ஒரு புறம் ஒதுங்கி, வேலி ஓரமாகச் சென்றான். அதன் அருகாமையில் களைச் செடிகள் அடர்ந்து மண்டியிருந்தன. காவல்காரக் கஸாக்கியனின் அகன்ற முதுகை உற்று நோக்கியவாறு ஒரு பக்கம் கையை நீட்டி அதைப் பார்த்து விட்டுத் துணியைக் களைகளில் எறிந்தான்...

விழும் போது துணி விரிந்தது. பூப் போட்ட இளநீலத் தலைக்குட்டை. லியோன்காவின் பார்வையில் மின்னிற்று. அழும் சிறுமியின் உருவம் அக்கணமே அதை மறைத்து விட்டது. அவள் உயிருள்ளவள் போல அவன் முன்னே தோன்றி, கஸாக்கியனையும் பாட்டனையும் சுற்றிலும் இருந்தவை எல்லாவற்றையும் மறைத்து விட்டாள்... அவளுடைய அழுகை ஒலிகள் லியோன்காவின் காதுகளில் மீண்டும் தெளிவாகக் கேட்டன. தெளிந்த கண்ணீர்த் துளிகள் தனக்கு எதிரே தரையில் விழுவது போல அவனுக்குப் பிரமை உண்டாயிற்று.

அனேகமாகத் தன்னுணர்வற்ற இந்த நிலையில் அவன்

பாட்டனின் பின் கூட்டச் சாவடியை அடைந்தான். தெளிவற்ற இரைச்சல் அவன் காதுகளில் விழுந்தது. அதைப் புரிந்து கொள்ள அவனுக்கு இயலவில்லை, விருப்பமும் இல்லை. பாட்டனின் பயணப் பையிலிருந்த துண்டுகள் பெரிய மேசை மேல் கொட்டப்படுவதை மூடுபனியின் ஊடாகப் போலக் கண்ணுற்றான். விழுகையில் இந்தத் துண்டுகள் மேசையில் பட்டு சொத்தென்று மந்தமாக ஒலித்தன... அதன் பின் உயரமான தொப்பிகள் அணிந்த பல தலைகள் அவர்கள் பக்கம் சாய்ந்தன. தலைகளும் தொப்பிகளும் சிடுசிடுப்புடன் முறைத்தன, தங்களைப் போர்த்திருந்த மூடுபனியின் ஊடாக அசைந்தாடி ஏதோ பயங்கரமான தண்டனை கொடுப்பதாக அச்சுறுத்தின... பிறகு திடீரென்று பாட்டன் கரகரத்த குரலில் எதையோ முணுமுணுத்தவாறு வாட்ட சாட்டமான இரண்டு இளைஞர்களின் கைகளில் பம்பரமாய்ச் சுழன்றான்...

''வீணாகச் சந்தேகிக்கிறீர்கள், கிறிஸ்தவக் கனவான்களே!.. நான் குற்றமற்றவன், ஆண்டவனே சாட்சி!..'' என்று காதைத் துளைக்கும்படிக் கீச்சிட்டான் பாட்டன்.

லியோன்கா அழத் தொடங்கித் தரையில் சாய்ந்தான்.

அப்போது ஆட்கள் அவனிடம் வந்தார்கள். அவனைத் தூக்கிப் பெஞ்சி மேல் அமர்த்தி அவனது சிறு மேனியை மூடியிருந்த எல்லாக் கந்தல்களையும் துருவிப் பார்த்தார்கள்.

''அந்தப் பேய்மகள் தனிலவ்னா புளுகுகிறாள்!'' என்று முழங்கினான் ஒருவன். அவனது எரிச்சல் நிறைந்த கட்டைக் குரல் லியோன்காவின் செவிகளை அறைவதுபோலத் தாக்கிற்று.

''ஒருவேளை, இவர்கள் எங்கேனும் ஒளித்து வைத்திருப்பார்களோ?'' என்று இன்னும் உரக்கப் பதில் முழக்கம் செய்தார்கள் மற்றவர்கள்.

லியோன்கா இந்த ஒலிகள் எல்லாம் தன் தலையில் அடிப்பது போல உணர்ந்தான் அச்சத்தால் விலவிலத்துப் போய், தனக்கு முன்னே அடியற்ற வாயைத் திறந்த ஒரு கருங் குழியில் திடீரென ஆழ்ந்து விட்டவன் போன்று அவன் உணர்வு இழந்தான்.

அவன் தன் நினைவை அடைந்த போது அவனுடைய தலை பாட்டனின் மடி மேல் கிடந்தது. அவனது முகத்துக்கு மேலே குனிந்திருந்தது பாட்டனின் முகம். அது எப்போதையும்

விட அதிக இரங்கத் தக்கதாகவும் சுருக்கங்கள் நிறைந்ததாக வும் இருந்தது. மிரட்சியுடன் இமைத்துக் கொண்டிருந்த பாட்டனின் விழிகளிலிருந்து லியோன்காவின் நெற்றி மீது கலங்கிய சிறு கண்ணீர்த் துளிகள் சொட்டி, கன்னத்தின் வழியே கழுத்தில் வழிந்து நிரம்பக் கிச்சுக் கிச்சு மூட்டின...

''விழிப்பு வந்து விட்டதா, கண்ணே?!. போவோம் வா இங்கிருந்து. போவோம். விட்டு விட்டார்கள், பாழாய்ப் போகிறவர்கள்!''

லியோன்கா எழுந்தவன் தன் தலையில் கனமான எதுவோ ஊற்றப்பட்டிருப்பதுபோன்றும் தலை இதோ தோள்களிலிருந்து விழுந்து விடும் போன்றும் உணர்ந்தான்... தலையைக் கைகளால் பிடித்துக் கொண்டு தணிந்த குரலில் முனகிய வாறு இடமும் வலமுமாக அசைந்து ஆடத் தொடங்கினான்.

''தலை வலிக்கிறதா? என் செல்வக் கண்ணே!.. அவர்கள் நம்மை வதைத்து எடுத்து விட்டார்கள்... மிருகங்கள்! கட்டாரி காணாமல் போயிற்றாம், கேட்டாயா, யாரோ குட்டி தலைக்குட்டையைக் கெட்டுப் போக்கி விட்டாளாம், அதற் காக நம்மைக் குற்றம் சாட்டினார்கள்!.. ஐயோ, கடவுளே!.. எதற்காகத் தண்டிக்கிறாய்?!.''

பாட்டனின் கரகரத்த கீச்சுக் குரல் லியோன்காவைப் பறண்டுவது போல் இருந்தது. சுரீரென்று காந்தும் பொறி ஒன்று தனக்குள் சுடர்வதையும் பாட்டனிடமிருந்து அப்பால் நகரும்படித் தன்னைக் கட்டாயப் படுத்துவதையும் அவன் உணர்ந்தான். அப்பால் நகர்ந்து சுற்று முற்றம் பார்த்தான்...

ஊரிலிருந்து வெளியேறும் இடத்தில் கோணல் மாண லான கரும் பாப்ளார் மரக் கிளைகளின் அடர்ந்த நிழலின் கீழ் அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். இரவு தொடங்கி விட்டது. சந்திரன் உதித்திருந்தது. வெள்ளிய பால் நிலவு சமதரையான ஸ்தெப்பி வெளியில் பெருகி, அதைப் பகலில் இருந்ததைக் காட்டிலும் குறுகியதாகவும் வெறுமையாகவும் துயரம் ததும்புவதாகவும் தோற்றுவித்தது. தொலைவில், வானத்தோடு இணைந்திருந்த ஸ்தெப்பியிலிருந்து மேகங்கள் கிளம்பி மெதுவாக அதற்கு மேலே மிதந்து சந்திரனை மறைத்து அடர்ந்த நிழல்களைத் தரையில் வீழ்த்தின. நிழல்கள் தரை மீது நெருக்கமாய்ப் படிந்து மெதுவாக, சிந்தனையுடன் அதன் மேல் ஊர்ந்தன. திடீரென்று அவை காணாமல் போயின.

சூரிய கிரணங்களின் பொசுக்கும் அடிகளால் ஏற்பட்ட பிளவுகளின் வழியே அவை பூமிக்குள் போய்விட்டன போல் பிரமை உண்டாயிற்று... ஊரிலிருந்து குரல்கள் கேட்டன. சிற்சில இடங்களில் விளக்குகள் எரியத் தொடங்கி பளிச்சிட்ட தங்க நட்சத்திரங்களுடன் கண் சாடை செய்து கொண்டன.

''போவோம் வா, கண்ணே!.. போக வேண்டும்'' என்றான் பாட்டன்.

''இன்னும் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருப்போம்!..'' என்று தணிந்த குரலில் சொன்னான் லியோன்கா.

அவனுக்கு ஸ்தெப்பி பிடித்திருந்தது. பகலில் அதில் நடக்கும் போது முன்னே, வான வளையம் அதன் விசாலமான மார்பில் ஊன்றியிருக்கும் இடத்தில், பார்வை செலுத்துவதை அவன் விரும்பினான்... அங்கே பெரிய, அற்புத நகரங்கள் இருப்பதாகவும் தான் முன் கண்டிராத நல்ல மனிதர்கள் அவற்றில் வாழ்வதாகவும் அவர்களிடம் ரொட்டியைப் பிச்சை கேட்க வேண்டி இராது, கேட்காமலே அவர்கள் தாமே கொடுப்பார்கள் என்றும் கற்பனை செய்து கொண்டான்... அவனுக்கு முன்னே மேலும் மேலும் விரிவாகப் பரந்து சென்ற ஸ்தெப்பி அவனுக்கு ஏற்கெனவே பழக்கமானதும் கட்டிடங்களிலும் ஆட்களிலும் அவன் முன்பு கண்டிருந்த எல்லா ஊர்களையும் நிகர்த்ததுமான ஓர் ஊரைத் திடீரென முன்வைத்த போது இந்த ஏமாற்றினால் அவனுக்குத் துயரமும் மனத்தாங்கலும் உண்டாயின.

முகில்கள் மெதுவாக ஊர்ந்து வெளிப்பட்ட தொலைவை இப்போதும் அவன் சிந்தனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான். தான் காண உளமார விழைந்த நகரத்தின் பல்லாயிரம் புகைபோக்கிகளிலிருந்து எழும் புகையாக இந்த மேகங்கள் அவனுக்குத் தோற்றம் அளித்தன... பாட்டனின் வரட்டு இருமல் அவனுடைய தியானத்தைக் கலைத்தது.

ஆர்வத்துடன் காற்றை விழுங்கிக் கொண்டிருந்த பாட்டனுடைய கண்ணீரால் நனைந்த முகத்தை லியோன்கா கண் கொட்டாமல் நோக்கினான்.

அந்த முகத்தின் மீது நிலவு ஒளி பாய்ச்சியது. தொப்பிக் கந்தல்களிலும் புருவங்களிலும் தாடியிலுமிருந்து விழுந்த விந்தையான நிழல்கள் அதன் குறுக்கும் நெடுக்கும் சென்றிருந்தன.

வாய் வலிப்பு வந்தது போல அசைந்து கொண்டிருந்தது. அகலத் திறந்திருந்த கண்கள் மறைமுக உவகைப் பெருக்கின் காரணமாகப் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன. அந்த முகம் பயங்கரமாகவும் இரங்கத்தக்கதாகவும் இருந் தது. அது லியோன்காவுக்குப் புதியதான ஓர் உணர்வை ஏற்படுத்தி, அவனைப் பாட்டனிடமிருந்து அப்பால் நகர வைத்தது...

''நல்லது, உட்கார்ந்திருப்போம், உட்கார்ந்திருப் போம்!..'' என்று முணுமுணுத்த பாட்டன் அசட்டுத் தன மாகப் பல்லிளித்தவாறு சட்டை மார்புக்குள் துழாவினான்.

லியோன்கா முகத்தைத் திருப்பிக் கொண்டு மீண்டும் தொலைவில் பார்வை செலுத்தத் தலைப்பட்டான்.

''லியோன்கா!..பாரேன்!..''என்று பேருவகை பொங்கத் திடீரெனத் தேம்பினான் பாட்டன். திணற வைத்த இருமலால் உடல் முழுதும் துடித்து நெளிய, பளபளப்பான நீண்ட பொருள் ஒன்றைப் பேரன் பக்கம் நீட்டினான். ''வெள்ளிப் பிடி வைத்தது!வெள்ளியாக்கும்!..ஐம்பது ரூபிள் பெறும்!..''

பேராசையாலும் வலியாலும் அவனுடைய கைகளும் உதடுகளும் நடுங்கின. முகமெல்லாம் இசிவு கண்டு துடி துடித்தது.

லியோன்கா திடுக்கிட்டு அவனுடைய கையைத் தள்ளி னான்.

''உள்ளே வை சீக்கிரம்!.. ஐயோ, தாத்தா, மறைத்து வை!..'' என்று சுற்றிலும் சட்டெனக் கண்ணோட்டியவாறு கெஞ்சும் குரலில் கிசுகிசுத்தான்.

''அட என்ன நீ, அசடே? பயமாய் இருக்கிறதா கண்ணே?.. நான் ஜன்னல் வழியே உள்ளே பார்த்தேன், இது தொங்கிக் கொண்டிருந்தது... லாவி எடுத்து மறைத்துக் கொண்டேன்... அப்புறம் புதர்களில் ஒளித்து வைத்தேன். ஊரிலிருந்து வரும் போது தொப்பி நழுவி விட்டது போலப் பாசாங்கு செய்து குனிந்து அதை எடுத்துக் கொண்டேன்... மடையர்கள் அவர்கள்!.. தலைக்குட்டையையும் எடுத்துக் கொண்டேன். இதோ இருக்கிறது!..''

தன் கந்தல் உடைகளிலிருந்து தலைக்குட்டையை நடுங்கும் கைகளால் வெளியில் எடுத்து லியோன்காவின் முகத்துக்கு எதிரே அதை உதறினான்.

லியோன்காவின் விழிகளுக்கு முன் மூடுபனித் திரை கிழிந்து பின்வரும் காட்சி தென்பட்டது: அவனும் பாட்டனும் ஊர் வீதியில் முடிந்தவரை வேகமாக நடக்கிறார்கள். எதிரே வருபவர்களின் பார்வைகளிலிருந்து தப்பியவாறு திகிலுடன் நடக்கிறார்கள். விரும்புபவன் ஒவ்வொருவனுக்கும் அவர்கள் இருவரையும் அடிக்கவும் அவர்கள் மேல் துப்பவும் அவர்களைத் திட்டவும் உரிமை இருப்பதாக லியோன்கா வுக்குத் தோன்றுகிறது. சுற்றிலும் உள்ளவை எல்லாம்—வேலிகளும் வீடுகளும் மரங்களும்—ஏதோ விந்தையான மூடு பனியில் காற்றில் போல அசைந்தாடுகின்றன... யாருடைய வோ கொடூரமான, ஆத்திரக் குரல்கள் இரைகின்றன... கடினமான இந்தப் பாதை முடிவின்றி நீள்கிறது. அசைந்தாடும் வீடுகளின் நெருக்கமான திரளுக்குப் பின் ஊரிலிருந்து வெளி யேறித் திடலுக்குப் போகும் வழி கண்ணுக்குத் தெரியவில்லை. வீடுகளோ, ஒரு சமயம் அவர்களை நசுக்க விரும்புபவை போல அவர்கள் பக்கம் நகர்ந்து வருவதும் மறு சமயம் தங்கள் சன்னல்களின் கரும் ''புள்ளிகளால் அவர்களை நேருக்கு நேர் எள்ளி நகையாடி எங்கோ போவதுமாக இருக்கின்றன... திடீரென்று ஒரு சன்னலிலிருந்து கணீரென்ற குரல் ஒலிக் கிறது: ''திருடர்கள்! திருடர்கள்! பெரிய திருடன், திருட்டுப் பயல்!..'' லியோன்கா குரல் வந்த திக்கில் இரகசியமாகக் கண்ணோட்டுகிறான். எந்தச் சிறுமி அழுது கொண்டிருந்ததைச் சற்று முன் அவன் கண்டு அவளைப் பாதுகாக்க விரும்பினானோ அவளைச் சன்னலுக்குள்ளே பார்க்கிறான்... அவள் அவ னுடைய பார்வையைக் கண்டு கொண்டு நாக்கைத் துருத்தி அவனுக்கு அழகு காட்டுகிறாள். அவளுடைய நீல விழிகள் வன்மத்துடனும் கூர்மையாகவும் சுடர்ந்து லியோன்காவை ஊசிகள் போல் குத்தித் துளைக்கின்றன.

இந்தக் காட்சி சிறுவனின் நினைவில் மீண்டும் உயிர்த்து வன்மப் புன்னகையை விட்டு விட்டு அக்கணமே மறைந்தது. இதே புன்னகையுடன் அவன் பாட்டனின் முகத்தை நோக் கினான்.

பாட்டன் இடை இடையே இருமியவாறு ஏதோ வளவள வென்று பேசிக் கொண்டு போனான், கைகளை வீசி ஆட்டினான், தலையைக் குலுக்கினான், முகத்துச் சுருக்கங்களில் பெரிய துளிகளாக வெளிப்பட்ட வியர்வையைத் துடைத்துக் கொண் டான்.

தார் தாராகக் கிழிந்து கந்தலான கனத்த மேகம் சந்திரனை மறைத்தது. லியோன்காவுக்குத் தாத்தாவின் முகம் அனேகமாகத் தெரியவில்லை... ஆனால் அவன் அழுது கொண்டிருந்த பெண்ணின் தோற்றத்தை உருவகப்படுத்திக்கொண்டு பாட்டனுக்கு அருகே வைத்து அவர்கள் இருவரையும் மனதால் ஒரு வகையில் அளவிட்டான். திராணியற்ற, கிறீச்சிடுகிற, பேராசை பிடித்த கந்தலாண்டியான பாட்டன் அவனால் புண்படுத்தப்பட்ட, அழுகிற, ஆனால் உடல்நலமும் தளதளப்பும் அழகும் வாய்ந்த சிறுமியின் அருகே வேண்டாதவனாகவும் ருஷ்ய நாடோடிக் கதையில் வரும் காஷெய் போலவே தீயவனாகவும் இழிந்தவனாகவும் லியோன்காவுக்குத் தோற்றம் அளித்தான். எப்படி முடிந்தது இது? பாட்டன் எதற்காக அவளைப் புண்படுத்தினான்? அவன் அவளுக்கு உறவுகாரன் அல்லவே...

பாட்டன் கிரீச்சிட்டுக் கொண்டிருந்தான்:

''ஒரு நூறு ரூபிள் சேர்த்து விட்டால்!.. அப்போது நான் அமைதியாகச் சாவேன்...''

''ஆமாம்!..'' லியோன்காவிற்கு ஆத்திரம் அடக்க மாட்டாமல் பொங்கியது. ''அட பேசாமல்தான் இரேன்! 'சாவேன், சாவேன்' என்று செபிக்கிறாய்... சாகவோ மாட்டேன் என்கிறாய்...திருடுகிறாய்!..'' என்று கீச்சிட்ட லியோன்கா உடம்போடு பதறத் துள்ளி எழுந்து நின்றான். ''கிழட்டுத் திருடன் நீ!.. ஊ-ஊ!'' என்று உலர்ந்த சிறு முட்டியை இறுக்கிக் கொண்டு, திடீரென மௌனத்தில் ஆழ்ந்து விட்ட பாட்டனின் மூக்குக்கு முன்னே அதைக் குலுக்கினான். பின்பு பொத்தென்று தரையில் சாய்ந்து, பற்களைக் கடித்துக் கொண்டு தொடர்ந்தான்: ''குழந்தைப் பெண்ணிடம் திருடி இருக்கிறாய்... ஆகா, அழகுதான்!.. கிழவனாகியும் பேராசை போகவில்லையே உனக்கு... மறு உலகில் உனக்கு மன்னிப்பு கிடைக்காது இதற்கு!..''

திடீரென்று ஸ்தெப்பி முழுதும் அதிர்ந்தாடி கண்களைக் குருடாக்கும் நீல ஒளியால் ஆட்கொள்ளப்பட்டு விசாலமாயிற்று... அதைப் போர்த்திருந்த மூடுபனி நடுங்கி, கண நேரத்துக்கு மறைந்து விட்டது... இடி இடித்து முழங்கி ஸ்தெப்பியையும் வானத்தையும் அதிரவைத்தவாறு ஸ்தெப்பிக்கு மேலே நெடுகப் பரவியது. வானத்திலோ, கரு முகில்

களின் அடர்ந்த திரள் விரைவாகப் பறந்து சந்திரனை மறைத்தது.

இருட்டாயிற்று. எங்கோ தொலைவில் இன்னும் ஓசை செய்யாமல், ஆனால் அச்சுறுத்தும் வகையில் பளிச்சிட்டது மின்னல். ஒரு விநாடிக்குப் பின் இடி மீண்டும் தணிவாக முழங்கிற்று... அப்புறம் நிசப்தம் குடி கொண்டது. அதற்கு முடிவே இராது என்று தோன்றியது.

லியோன்கா சிலுவைக் குறி இட்டுக் கொண்டான்; பாட்டன், தான் முதுகைச் சாய்த்துக் கொண்டிருந்த மரத்தின் தண்டோடு இணைந்து விட்டவன் போல அசைவின்றி யும் மௌனமாகவும் உட்கார்ந்திருந்தான்.

இடி மீண்டும் இடிப்பதை எதிர்பார்த்து அச்சத்தால் வதையுண்ட லியோன்கா, ''தாத்தா!..'' என்று கிசுகிசுத் தான். ''ஊருக்குள் போவோம் வா!''

வானம் மறுபடி நடுங்கி, நீலத் தழலாக மீண்டும் மூண்டெரிந்து, விறல் மிக்க உலோக இடியைத் தரை மேல் எறிந்தது. பல்லாயிரம் இரும்புத் தகடுகள் ஒன்றோடு ஒன்று மோதியவாறு தரை மீது சிதறி விழுந்தது போல இருந்தது இடியோசை...

''தாத்தா!..'' என்று கத்தினான் லியோன்கா.

இடியின் எதிர் முழக்கத்தால் அமிழ்த்தப்பட்ட அவ னுடைய கத்தல் உடைந்த சிறு மணியில் பட்ட அடி போன்று ஒலித்தது.

''நீ என்ன... பயப்படுகிறாய்...'' என்று அசையாமல் கரகரத்த குரலில் கூறினான் பாட்டன்.

பருத்த மழைத் துளிகள் விழத் தொடங்கின. அவற்றின் சலசலப்பு எதைப் பற்றியோ எச்சரிப்பது போல மர்மமாக ஒலித்தது. தொலைவில் அது பிரமாண்டமான புருசால் உலர்ந்த தரையில் உரசுவது போன்ற ஒன்று சேர்ந்த பரவலான ஓசையாக வளர்ந்து விட்டது. ஆனால் இங்கே, பாட்டனுக்கும் பேரனுக்கும் அருகில், ஒவ்வொரு துளியும் தரையில் விழுந்து நொடிப் போது துணுக்காக ஒலித்து விட்டு எதிரொலி இன்றி மடிந்து போயிற்று. இடிகள் நிமிடந் தோறும் அருகே நெருங்கின, வானில் அதிக அடிக்கடி மின்னல்கள் மின்னின.

''நான் ஊருக்குள் போக மாட்டேன்! நானே கிழட்டு

நாய், திருடன், என்னை... மழை மூழ்கடிக்கட்டும், இடி தாக்கிக் கொல்லட்டும்!'' என்று மூச்சு இரைக்கக் கூறினான் பாட்டன். ''வர மாட்டேன்!.. தனியாகப் போ... அதோ இருக்கிறது ஊர்... போ!.. நீ இங்கே உட்கார்ந்திருப்பது எனக்குப் பிடிக்கவில்லை... போ அப்பாலே!.. போ, போ!.. போய்விடு!..''

பாட்டன் கம்மிக் கரகரத்த குரலில் கத்தினான்.

''தாத்தா!.. மன்னித்து விடு!..'' என்று அவன் பக்கம் நகர்ந்து கெஞ்சினான் லியோன்கா.

''வர மாட்டேன்...மன்னிக்க மாட்டேன்...ஏழு ஆண்டுகள் நான் உன்னைச் சீராட்டினேன்!.. எல்லாம் உனக்காகவே... நான் உயிரை வைத்துக் கொண்டிருந்தேன்... உனக்காக. எனக்கு ஏதேனும் வேண்டுமா என்ன?.. நானோ சாகப் போகிறேன்... செத்துக் கொண்டிருக்கிறேன்... நீ என்னடா என்றால், திருடன் என்கிறாய்... திருடனாய் இருப்பது எதற்காக? உனக்காக... இதெல்லாம் உனக்காகத்தான்... இந்தா, எடுத்துக் கொள்... எடுத்துக் கொள்... இந்தா... உன் வாழ்க்கைக்காக... ஆயுள் முழுவதற்கும்... சேர்த்தேன்... திருடவுந் தான் செய்தேன்... ஆண்டவன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறான்... அவன் அறிவான்... திருடினேன் என்பதை... அறிவான்... அவன் என்னைத் தண்டிப்பான். திருட்டுத்தனத்துக்கு என்னை, கிழட்டு நாயை... தண்டிக்காமல் விட மாட்டான்.இப்போதே தண்டித்தும் விட்டான்... ஆண்டவனே! என்னை நீ தண்டித்து விட்டாயே! அல்லவா? தண்டித்து விட்டாய் அல்லவா? குழந்தையின் கையால் என்னைக் கொலை செய்து விட்டாயே நீ!..சரிதான், கடவுளே!.. நியாயந்தான்! நீ நீதிமான், ஆண்டவனே!.. என் உயிரைக் கொண்டு போக ஆள் அனுப்பு... ஐயோ!..''

பாட்டனின் குரல் காதைத் துளைக்கும் கீச்சொலியாக உயர்ந்து, லியோன்காவின் நெஞ்சில் திகிலை நிறைத்தது.

இடிகள் ஸ்தெப்பியையும் வானத்தையும் அதிர வைத்த வாறு இப்போது பேரொலியுடனும் அவசர அவசரமாகவும் முழங்கின. பூமிக்கு இன்றியமையாதவாறு தேவையான ஒரு சேதியை அதனிடம் சொல்ல ஒவ்வோர் இடியும் விரும்பியது போலவும் அவை யாவும் ஒன்றை ஒன்று முந்திக் கொண்டு அனேகமாக இடை நிறுத்தம் இல்லாமல் முழங்கியது போல

வும் எண்ணம் உண்டாயிற்று. மின்னல்களால் பிளக்கப்பட்ட வானம் நடுங்கிற்று, ஸ்தெப்பியும் நடுங்கிற்று. அது ஒரு சமயம் நீல நெருப்பால் முழுதும் குப்பென்று பற்றி எரிவதும், மறு சமயம் குளிரும் துயரும் இடநெருக்கடியும் உள்ள இருளில் ஆழ்வதுமாக இருந்தது. இந்த இருள் ஸ்தெப்பியை விந்தையான முறையில் குறுகச் செய்தது. சில வேளைகளில் மின்னல் தொலைவில் ஒளி பரப்பியது. அந்தத் தொலைவு இரைச்சலிலும் முழக்கத்திலுமிருந்து அவசரமாகத் தப்பி ஓடுவது போல் இருந்தது...

மழை கொட்டியது. மின்னல் வெளிச்சத்தில் எஃகு போலப் பளிச்சிட்ட அதன் துளிகள் வரவேற்புடன் கண் சிமிட்டிய ஊர் விளக்குகளை மறைத்தன.

பயத்தாலும் குளிராலும் பாட்டனின் கத்தலால் விளைந்த ஏக்கம் நிறைந்த ஒரு வகைக் குற்ற உணர்வாலும் லியோன்கா விரைத்துப் போனான். அகலத் திறந்த விழிகளைத் தனக்கு எதிரே நாட்டி, மழையில் நனைந்த தலையிலிருந்து வழிந்த நீர்த் துளிகள் கண்களில் புகுந்த போது கூட அவற்றைக் கொட்ட அஞ்சியவனாக, விறல் மிக்க ஒலிகளின் கடலில் அமிழ்ந்து விட்ட பாட்டனின் குரலை உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தான்.

பாட்டன் அசைவின்றி உட்கார்ந்திருப்பதாக லியோன்கா உணர்ந்தான். ஆனால் பாட்டன் மறைந்து விடுவான், தன்னை இங்கே தனியாக விட்டு விட்டு எங்கேனும் போய் விடுவான் என்று லியோன்காவுக்கு அச்சம் உண்டாயிற்று. தான் அறியாமலே கொஞ்சங் கொஞ்சமாகப் பாட்டன் அருகே நகர்ந்தவன், அவன் மேல் முழங்கை பட்டதும், பயங்கரமான எதையோ எதிர்பார்த்துத் துணுக்குற்றான்...

வானத்தைப் பிளந்த மின்னல் அவர்கள் இருவர் மேலும் ஒளி பாய்ச்சியது. அருகருகாக, சிறிய உருவங்களாக, மரக் கிளைகளிலிருந்து கொட்டிய நீர்த் தாரைகளால் முழுக்காட்டப் பட்டுச் சுருண்டிருந்தார்கள் அவர்கள்...

பாட்டன் காற்றில் கையை வீசி ஆட்டி, களைத்து, மூச்சு திணறியவாறு ஓயாமல் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தான்.

அவன் முகத்தை உற்று நோக்கிய லியோன்கா அச்சத்தால் வீரிட்டான்... மின்னலின் நீல ஒளியில் அது உயிரற்ற

தாகக் காணப்பட்டது. அதில் சுழன்று கொண்டிருந்த மங்கிய விழிகள் வெறித்திருந்தன.

தலையைப் பாட்டனின் மடியில் புதைத்து, ''தாத்தா!.. போவோம், வா!..'' என்று கீச்சிட்டான் லியோன்கா.

பாட்டன் அவன் மீது குனிந்து, எலும்பு துருத்திய மெலிந்த கைகளால் அவனை இறுகப் புல்லித் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டு நசுக்கியவன், திடீரென்று பொறியில் அகப்பட்ட ஓநாய் போல உரக்கவும் காதைத் துளைக்கும்படியும் ஊளையிட்டான்.

இந்த ஊளையால் அனேகமாகப் பைத்தியம் ஆகி விட்ட லியோன்கா அவனிடமிருந்து திமிறிக் கொண்டு துள்ளி எழுந்து, அம்பு போல முன்னே எங்கோ பாய்ந்தோடினான். அவனுடைய அகலத் திறந்த விழிகளை மின்னல்கள் குருடாக்கின. விழுவதும் எழுவதுமாக இருளில் மேலும் மேலும் ஆழத்தில் புகுந்தான் அவன். இருள் ஒரு சமயம் மின்னலின் நீல ஒளியில் மறைந்தது, மறு சமயம் திகிலால் புத்தி பேதலித்த சிறுவனை மீண்டும் இறுகத் தழுவியது.

கொட்டிய மழையோ, ஒரே குளிராகவும் சலிப்பூட்டும் விதத்திலும் ஏக்கத்துடனும் இரைந்தது. மழையின் இரைச்சலையும் மின்னலின் ஒளியையும் இடியின் எரிச்சல் நிறைந்த தடதடப்பையும் தவிர வேறு எதுவும் ஒரு போதும் ஸ்தெப்பியில் இருக்கவில்லை போலத் தோன்றியது.

மறு நாள் சுற்றுச் சுவருக்கு வெளியே ஓடிய ஊர்ச் சிறுவர்கள் உடனே திரும்பி வந்து, கரும் பாப்ளார்மரத்தடியில் தலைக்கு நாளையப் பிச்சைக்காரனைக் கண்டதாகவும் அவன் பக்கத்தில் கட்டாரி கிடந்ததால் அவன் வெட்டிக் கொல்லப் பட்டிருக்க வேண்டும் என்றும் கூறி ஊரில் அபாய அறிவிப்பு செய்தார்கள்.

தகவல் சரிதானா என்று பார்ப்பதற்காக மூத்த கஸாக்கியர்கள் வந்த போது, அது சரி அல்ல என்று தெரிய வந்தது. கிழவன் இன்னும் உயிரோடு இருந்தான். ஆட்கள் அவனை நெருங்கியதும் அவன் தரையிலிருந்து எழுந்திருக்க முயன்றான், ஆனால் அவனால் முடியவில்லை. அவனுக்கு நாக்கு இழுத்து விட்டது. கண்ணீர் மல்கும் விழிகளால் அவன் எல்லோரிடமும் எதையோ பற்றிக் கேட்டான், கூட்டத்தில் விழிகளால் எதையோ ஓயாமல் தேடினான். ஆனால் தேடியதை அவன்

காணவில்லை, அவனுக்கு ஒரு பதிலும் கிடைக்கவில்லை.

மாலைத் தறுவாயில் அவன் இறந்து போனான். ஊரார் அவனை எங்கிருந்து எடுத்தார்களோ அங்கேயே, கரும் பாப்ளார் மரத்தடியில், புதைத்தார்கள். ஊர் இடுகாட்டில் அவனைப் புதைக்கலாகாது என்று தீர்மானிக்கப்பட்டது. காரணம், முதலாவது—அவன் வேற்றான், இரண்டாவது—திருடன், மூன்றாவது—பாவ மன்னிப்பு பெறாமலே இறந்து போனான். அவன் அருகே சேற்றில் கட்டாரியும் தலைக் குட்டையும் கண்டெடுக்கப்பட்டன.

இதற்கு இரண்டு, அல்லது மூன்று நாட்களுக்குப் பிறகு லியோன்கா கண்டெடுக்கப்பட்டான்.

ஊருக்குச் சற்று தூரத்தில் இருந்த ஒரு கிடங்குக்கு மேலே காகங்களின் கூட்டங்கள் வட்டமிடத் தொடங்கின. விஷயம் என்ன என்று பார்க்க ஆட்கள் அங்கே சென்ற போது சிறுவனைக் கண்டார்கள். மழைக்குப் பின் கிடங்கின் அடித் தரையில் எஞ்சியிருந்த சேற்றுக் குழம்பலில் கைகளை விரித்த வாறு முகம் குப்புறக் கிடந்தான் அவன்.

பையன் இன்னும் குழந்தை ஆகையால் அவனை ஊர் இடு காட்டில் புதைப்பது என்று முதலில் தீர்மானித்தார்கள். ஆனால், சற்று ஆலோசனை செய்த பின் பாட்டனுக்குப் பக்கத்தில், அதே கரும் பாப்ளார் மரத்தின் அடியில் அவனைக் கிடத்தினார்கள். மேலே மண் மேடு குவித்து பாங்கற்ற கற் சிலுவையை அதில் நாட்டினார்கள்.

ஒரு முறை இலையுதிர் காலத்தில்

... ஒரு முறை இலையுதிர் காலத்தில் நான் மனதுக்குக் கொஞ்சமும் பிடிக்காத, எக்கச்சக்கமான நிலைமையில் மாட்டிக் கொள்ள நேர்ந்தது. அண்மையில் நான் வந்து சேர்ந்த, எனக்குத் தெரிந்தவர் எவரும் இல்லாத நகரத்தில், கையில் ஒரு காசு இன்றி, தங்க இடம் இன்றி நான் தெரு வில் நிற்க வேண்டியதாயிற்று.

ஆடை அணிகளில் எவை இல்லாமல் சமாளிக்க முடிந் ததோ அவற்றை எல்லாம் முதல் நாட்களில் விற்று விட்டு, நகரத்திலிருந்து ஊஸ்தியே (கழிமுகம்) என்னும் இடத்துக்கு நான் புறப்பட்டுச் சென்றேன். அங்கே நீராவிப் படகுத் துறை கள் இருந்தன. படகுப் போக்குவரத்து நடந்த காலப் பகுதி யில் அங்கே மும்முரமாக வேலை நெரிந்து கொண்டிருக்கும். இப்போதோ, அது வெறிச்சோடி, ஆளரவம் இன்றிக் கிடந் தது. நான் குறிப்பிடும் நிகழ்ச்சி நடந்தது அக்டோபர் மாதக் கடைசி நாட்களில்.

நான் ஈர மணலில் கால்களை அடித்தவாறு அதில் உணவுப் பண்ட மிச்சம் ஏதாவது தென்படாதா என்று விடாப்பிடி யாகப் பார்வையால் துழாவிக் கொண்டு வெறுமையான கட்டிடங்களுக்கும் விற்பனைச் சாவடிகளுக்கும் இடையே தன்னந் தனியாகச் சுற்றி வந்து,வயிருர உண்டால் எவ்வளவு நன்ருய் இருக்கும் என்று எண்ணமிட்டேன்...

தற்போது பண்பாடு எட்டியுள்ள நிலையில், உடற் பசியைக் காட்டிலும் விரைவாக உள்ளப் பசியைப் போக்கிக் கொள்ள முடியும். நாம் வீதிகளில் சுற்றி அலைகிருேம். வெளிப்

பார்வைக்கு நன்ருய் இருக்கும் கட்டிடங்கள் நம்மைச் சூழ்ந் திருக்கின்றன. அவை உட்புறமும் நன்ருக வசதி செய்யப்பட் டிருக்கின்றன என்று தவறு இல்லாமல் சொல்ல முடியும்: கட்டிடக் கலேயையும் உடல்நல இயலேயும் மூதறிவு நிறைந் தவையும் உயர்ந்தவையுமான வேறு பலவற்றையும் குறித்த மகிழ் பொங்கும் எண்ணங்களே இது நம் மனதில் எழுப்பக் கூடும். சௌகரியமாகவும் கதகதப்பாகவும் உடை அணிந்த மனிதர்கள் நமக்கு எதிர்ப்படுகிருர்கள். அவர்கள் மரியாதை உள்ளவர்கள், நாம் நிலவுகிருேம் என்ற துயர் தரும் உண் மையைக் கவனிக்கத் தங்களுக்கு விருப்பம் இல்லாததை நயமாகக் காட்டியவாறு நம்மிடமிருந்து எப்போதும் விலகிச் செல்கிருர்கள். கடவுள் ஆணே, பசித்தவனின் உள்ளம் வயிறு நிறைந்தவனின் உள்ளத்தை விட மேலாகவும் நலத்துடனும் எப்போதும் ஊட்டம் பெறுகிறது. இந்த அடிப்படைக் கருத் திலிருந்து வயிறு நிறைந்தவர்களுக்குச் சாதகமாக மிகவும் சந்தர்ப்பப் பொருத்தமான முடிவைப் பெறலாம்!..

... மாலே வந்தது, மழை பெய்யலாயிற்று, வாடைக் காற்று குப்குப்பென்று வீசிற்று. அது வெற்று விற்பனேச் சாவடிகளிலும் பெட்டிக் கடைகளிலும் சீழ்க்கை அடித்தது, தங்கு விடுதிகளின் பலகைகளால் அடைக்கப்பட்டிருந்த சன் னல்களில் மோதியது.காற்றின் அடிகளால் ஆற்று நீர் அலேகள் நுரைத்தன, கரையோர மணலில் ஓசையுடன் சளப்பிட்டன, தங்கள் வெண் முடிகளே மேலே உயர்த்தியவாறு ஒன்றைக் கடந்து ஒன்று தாவிப் பாய்ந்து கலங்கல் தொலேவுக்கு ஒன்றன் பின் ஒன்ருக விரைந்தன... குளிர் காலம் நெருங்கு வதை ஆறு உணர்ந்தது போலவும், வாடைக் காற்று அன்று இரவே தன் மீது போடக் கூடிய உறைபனி விலங்குகளுக்குத் தப்பி அச்சத்துடன் எங்கோ ஓடியது போலவும் தோன்றியது. வானம் மேகங்கள் அடர்ந்து கருங்கும்மென்று இருந்தது. கண்ணுக்கு அரிதாகவே புலப்பட்ட மழைத்துளிகள் அதிலி ருந்து அலுப்பின்றிச் சிதறிக் கொண்டிருந்தன.என்னேச் சூழ்ந் திருந்த இயற்கையின் துயரப் புலம்பற்பாட்டை அழுத்திக் காட்டின முறிந்து அவலட்சணமாக இருந்த இரண்டு வெள்ளே வில்லோ மரங்களும் அவற்றின் வேர்களுக்கு அருகே குப்புறக் கவிழ்ந்து கிடந்த ஒரு படகும்.

அடி உடைந்து கவிழ்ந்து கிடந்த படகு, குளிர் காற்ருல்

சூறையாடப்பட்ட, பரிதாபகரமான முதிய மரங்கள்... சுற்றிலும் எல்லாம் அழிவுக்கு உள்ளாகி,பாழாக,உயிரற்றுக் கிடந்தன. வானமோ, வற்றாத கண்ணீரைப் பெருக்கிக் கொண்டிருந்தது. சுற்றிலும் எங்கும் வெறிச்சோடி இருந்தது, துயரம் ததும்பியது. எல்லாம் மடிந்து கொண்டிருக்கின்றன என்றும் விரைவில் நான் ஒருவன் மட்டுமே உயிரோடு எஞ்சி இருப்பேன் என்றும் என்னையும் உணர்வற்ற சாவு எதிர்நோக்கி இருப்பதாகவும் தோன்றியது.

அப்போது எனக்கு வயது பதினேழு—நல்ல பருவம்!

பசியையும் குளிரையும் போற்றிப் பற்களால் முரன்ற வாறு நான் குளிர்ந்த ஈர மணலில் மேலும் மேலும் நடந்தேன்.உணவுப் பண்டம் ஏதாவது கிடைக்காதா என்று வீணாகத் தேடியவண்ணம் ஒரு விற்பனைச் சாவடியின் பக்கம் போனவன், பெண் உடை அணிந்த ஓர் உருவம் சாவடியின் பின்னே தரை மேல் சுருண்டிருக்கக் கண்டேன். மழையில் நனைந்த உடை குனிந்த தோள்களோடு இறுக்கமாக ஒட்டிக் கொண்டிருந்தது. அவள் அருகே நின்று அவள் என்ன செய்கிறாள் என்று கவனமாகப் பார்வையிட்டேன்.அவள் ஒரு விற்பனைச் சாவடிக்கு அடியில் கைகளால் மணலைத் தோண்டிக் குழி பறித்துக் கொண்டிருந்ததாகத் தெரிய வந்தது.

நான் அவள் அருகே குந்தி, ''இது உனக்கு எதற்காக?'' என்று கேட்டேன்.

அவள் மெல்லெனக் கிறீச்சிட்டுச் சட்டென்று துள்ளி எழுந்து நின்றாள். இப்போது, அவள் நின்று அகலத் திறந்த சாம்பல் நிற விழிகளால் என்னை அச்சத்துடன் நோக்கிய பொழுது, அவள் என் வயதுப் பெண் என்பதை நான் கண்டேன். அவளது முகம் மிகவும் இனியது, ஆனால் மூன்று பெரிய அடித் தழும்புகள் வருந்தத் தக்க விதத்தில் அதில் படிந்திருந்தன. இவை முகத்தைக் கெடுத்தன. ஆனால் தழும்புகள் அருமையான தகவுப் பொருத்தத்துடன் அமைந்திருந்தன: சம அளவுள்ள ஒரு தழும்பு ஒவ்வொரு கண்ணுக்கு அடியிலும், கொஞ்சம் பெரிய தழும்பு நெற்றியில் மூக்கந்தண்டுக்கு நேர் மேலேயும். மனித முகங்களைக் கெடுப்பதில் மிக நுட்பமான தேர்ச்சி பெற்ற கலைஞனின் கைத்திறன் இந்தச் சமச்சீரில் காணக் கிடந்தது.

அந்தப் பெண் என்னைப் பார்த்தாள். அவளது கண்களில்

இருந்த அச்சம் சிறிது சிறிதாக மறைந்தது... அவள் கைகளில் ஒட்டியிருந்த மணலைத் தட்டிப் போக்கினாள், சீட்டித் தலைக் குட்டையைச் சரிப்படுத்திக் கொண்டாள், சற்று நெளிந்தாள், பின்பு சொன்னாள்:

''உனக்கும் பசியாய் இருக்கிறது, அல்லவா?.. எங்கே, தோண்டு, பார்ப்போம், என் கைகள் களைத்துப் போய் விட்டன. அங்கே''—அவள் விற்பனைச் சாவடியைத் தலையசைப்பால் சுட்டினாள்—''கட்டாயம் ரொட்டி இருக்கும்... இந்தச் சாவடியில் வியாபாரம் இன்னும் நடக்கிறது...''

நான் தோண்டத் தொடங்கினேன். அவள் சற்று நேரம் பொறுத்திருந்து என்னை நோட்டமிட்ட பின் பக்கத்தில் உட்கார்ந்து எனக்கு உதவத் தொடங்கினாள்...

நாங்கள் மௌனமாக வேலை செய்தோம். குற்றச் சட்டத் தொகுப்பையும் ஒழுக்க நெறியையும் சொத்துரிமையையும் இவை போன்ற பிறவற்றையும் நான் அந்தக் கணத்தில் நினைத்துக் கொண்டேனா என்று இப்போது என்னால் சொல்ல முடியாது.விஷயம் தெரிந்த மனிதர்களின் கருத்துப்படி இந்த விவரங்களை வாழ்க்கையின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நினைவு வைத்திருப்பது அவசியம். ஆனால் கூடிய வரையில் உண்மைக்கு நெருங்கி இருக்க விரும்புவதால் நான் ஒன்றை ஒப்புக் கொள்ள வேண்டும்: விற்பனைச் சாவடிக்கு அடியில் குழி பறிப்பதில் ஆழ்ந்து முனைந்திருந்த நான், இந்தச் சாவடிக்குள் என்ன இருக்கலாம் என்பதைத் தவிர மற்ற எல்லா விஷயங்களையும் மறந்து விட்டேன்...

மாலை ஆயிற்று. ஈரமும் மழைத் தூறலும் குளிரும் நிறைந்த இருள் எங்களைச் சுற்றிலும் மேலும் மேலும் அடர்ந்து கவிந்தது. அலைகள் முன்னிலும் கம்மலானவை போல ஒலித்தன, ஆனால் மழை சாவடிப் பலகைகள் மேல் வரவர அதிக உரக்கவும் அடிக்கடியும் தாளம் போட்டது... இரவுக் காவல்காரனின் கிலுகிலுப்பை அதற்குள் எங்கோ கிலுகிலுத்தது...

''இதற்குத் தரை இருக்கிறதா, இல்லையா?'' என்று தணிந்த குரலில் கேட்டாள் என் துணைவி. அவள் என்ன சொல்கிறாள் என்று புரியாததால் நான் பேசாதிருந்தேன்.

''இந்தச் சாவடிக்குத் தரை இருக்கிறதா இல்லையா என்று கேட்கிறேன். இருக்கிறது என்றால், நாம் வீணாகப் பாடுபடு

கிறேம். குழி பறித்த பிறகு பருத்த பலகைகள் எதிர்ப்படலாம்... அவற்றைப் பிய்த்து அகற்றுவது எப்படி? பூட்டை உடைப்பது மேல்... பூட்டு மோசமானது தான்...''

நல்ல கருத்துக்கள் பெண்களின் மூளைகளில் உதிப்பது அரிதே. ஆயினும், அவை அவற்றில் உதிக்கத் தான் செய்கின்றன என்பதை நீங்களே காண்கிறீர்கள்... நல்ல கருத்துக்களை நான் எப்போதும் மதித்தேன், முடிந்த அளவு அவற்றைப் பயன்படுத்த எப்போதும் முயன்று வந்தேன்.

பூட்டைக் கண்டுபிடித்தவன், அதை இழுத்து வளையங்களோடு சேர்த்துப் பிய்த்து விட்டேன்... என் கூட்டாளிப் பெண் நொடிப் போதில் வளைந்து சாவடியின் நாற்கோணத் திறப்பில் பாம்பாய் நெளிந்து புகுந்து விட்டாள். அவளுடைய பாராட்டுக் குரல் அங்கிருந்து ஒலித்தது:

''சபாஷ்!''

பெண்ணின் ஒரு சிறு புகழ்ச்சி ஆணின்—அந்த ஆண் பண்டைக்காலச் சொற்பொழிவாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தது போன்ற சொல்லாற்றல் பெற்றவனாய் இருந்தாலும் சரியே—முழு நீளப் போற்றிப் பாடலைக் காட்டிலும் எனக்கு அதிக மதிப்பு உள்ளது. ஆனால் அப்போது நான் இப்போதை விடக் குறைவாகவே இனிய மனநிலையில் இருந்தேன். எனவே பெண்ணின் புகழுரையைப் பொருட்படுத்தாமல் சுருக்கமாகவும் அச்சம் தொனிக்கவும் அவளிடம் கேட்டேன்:

''ஏதாவது இருக்கிறதா?''

அவள் தன் கண்டுபிடிப்புகளைச் சலிப்பூட்டும் குரலில் வரிசையாகச் சொல்லிக் கொண்டு போனாள்:

''புட்டிகள் நிறைந்த கூடை.... வெற்றுச் சாக்குகள்... குடை.... இரும்பு வாளி.''

இவை எல்லாம் உண்ணத் தகாதவையாக இருந்தன. என் நம்பிக்கை விளக்குகள் அணைவதை உணர்ந்தேன்... ஆனால் அவள் திடீரென்று உற்சாகமாகக் கத்தினாள்:

''ஆகா! இதோ...''

''யார்?''

''ரொட்டி... பெரிய வட்ட ரொட்டி... ஆனால் நனைந்திருக்கிறது... பிடி!''

என் காலருகே உருண்டது வட்ட ரொட்டி. அதன் பின்னே அவளும் — என் துணிவுள்ள கூட்டாளிப் பெண்ணும் —

வெளியே வந்தாள். அதற்குள் நான் ஒரு துண்டு விண்டு வாயில்நுழைத்துக் கொண்டு சவைக்கலானேன்...

''எங்கே, எனக்குக் கொடு... தவிர இங்கிருந்து நாம் போய் விட வேண்டும். எங்கே போவது?'' அவள் இருளில் நான்கு திசைகளிலும் ஆவலுடன் பார்வை செலுத்தினுள்... இருட்டும் ஈரமும் இரைச்சலுமாக இருந்தது... ''அதோ அங்கே படகு கவிழ்ந்திருக்கிறது... போவோமா அங்கே?''

''போவோம்!'' நாங்கள் கிடைத்த ரொட்டியை விண்டு வாயில் திணித்தவாறு நடந்தோம்... மழை வலுத்தது, ஆறு முழங்கிற்று. நகையாடுவது போன்ற நீண்ட சீழ்க்கை ஒலி எங்கிருந்தோ வந்தது. யாருக்கும் அஞ்சாத ஒரு பெரியவன் உலகின் எல்லா ஒழுங்கு முறைகளையும் இந்த அசிங்கம் பிடித்த இலையுதிர் கால மாலையையும் இதன் நாடக பாத்திரங்களான எங்கள் இருவரையும் ஏளனம் செய்து சீழ்க்கை அடித்தது போல் இருந்தது அது... இந்தச் சீழ்க்கையால் இதயம் நொந்து சாம்பியது. ஆனுலும் நான் ஆர்வத்துடன் தின்றேன். என் இடப் புறம் நடந்த மங்கையும் இதில் எனக்குச் சளைக்கவில்லை.

''உன் பெயர் என்ன?'' என்று எதற்காகவோ அவளிடம் கேட்டேன்.

''நத்தாஷா!'' என்று மொச்சு மொச்சென்று சவைத்துக் கொண்டு பதில் சொன்னுள் அவள்.

நான் அவளைப் பார்த்தேன்—என் இதயம் வலித்துச் சுருங்கியது. நான் இருளில் என் முன்னே நோக்கினேன். என் விதியின் முரண்நகை மிளிர்ந்த முகம் என்னைப் பார்த்து இரக்கமின்றி மர்மப் புன்முறுவல் செய்வது போல எனக்குப் பிரமை உண்டாயிற்று...

... படகுக் கட்டை மேல் ஓய்வின்றி அடித்தது மழை. அதன் மெல்லோசை துயர எண்ணங்களை ஊட்டியது. படகின் உடைந்த அடிக்குள் பாய்ந்த காற்று சீழ்க்கை அடித்தது. அந்தப் பிளவில் ஒரு சிம்பு அடித்துக் கொண்டது—அடித்துக் கொண்டு அமைதியற்ற, முறையிடும் ஒலியுடன் சடசடத்தது. ஆற்றின் அலைகள் கரையில் மோதிச் சளப்பிட்டன. சலிப்பும் நம்பிக்கையின்மையும் தொனிக்க அவை ஒலித்ததைக் கேட்கையில், தாங்க முடியாதபடி அலுப்பு தட்டியதும் துயர் ததும்பியதும் அருவருப்பு உண்டாகும் அளவுக்குத்

தங்களுக்குத் தெவிட்டிப் போனதுமான ஒன்றை, எதிலிருந்து தப்பியோட அவை விரும்பி இருக்குமோ, ஆனாலும் எதைப் பற்றிப் பேசுவது இன்றியமையாததாக இருந்ததோ அத் தகைய ஒன்றை, அவை விவரித்தது போல தோன்றியது. மழையின் ஓசை அலைகளின் சளப்பொலியுடன் கலந்தது. வெளிச்சமும் வெப்பமும் உள்ள கோடையும் குளிரும் மூடு பனியும் ஈரமும் உள்ள இலையுதிர் காலமும் இடையறாது இப் படி மாறி மாறி வருவதால் கோபம் கொண்டு களைப்படைந்த தரையின் நீண்ட, துயரப் பெருமூச்சு கவிழ்ந்த படகுக்கு மேலே மிதந்து சென்றது. வெற்றான கரை மீதும் நுரைத்த ஆற்றின் மேலும் காற்று வீசியது, வீசி, சோர்வூட்டும் பாட்டுக்கள் பாடியது...

படகுக்கு அடியில் இடம் வசதி அற்றதாக இருந்தது. அங்கே நெருக்கமாகவும் ஈரமாகவும் இருந்தது. உடைந்த அடி வழியாகச் சில்லிட்ட சிறு மழைத் துளிகள் தூறின, காற்றுப் பெருக்குகள் பாய்ந்து வந்தன... நாங்கள் மௌன மாக உட்கார்ந்து குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தோம். எனக்கு நினைவிருக்கிறது, எனக்கு உறக்கம் வந்தது. நத்தாஷா சிறு பந்தாகச் சுருண்டு முதுகைப் படகின் பக்கப் பகுதி யில் சாய்த்துக் கொண்டிருந்தாள். கைகளால் முழங்கால் களைக் கட்டிக் கொண்டு அவற்றில் மோவாயை வைத்தவாறு கண்களை அகலத் திறந்து ஆற்றை உற்றுப் பார்த்துக் கொண் டிருந்தாள் அவள். வெண் புள்ளி போன்ற அவளுடைய முகத் தில் கண்கள் அவற்றின் கீழ் இருந்த தழும்புகள் காரணமாகப் பிரமாண்டமாகத் தோற்றம் அளித்தன. அவள் அசைய வில்லை. இந்த அசையாமையும் பேச்சின்மையும் எனது அயலாள் மீது அச்சத்தை எனக்குள் கொஞ்சங் கொஞ்ச மாகத் தோற்றுவித்ததை நான் உணர்ந்தேன்... அவளிடம் பேச்சுக் கொடுக்க எனக்கு விருப்பம் உண்டாயிற்று, ஆனால் எதில் தொடங்குவது என்று எனக்குத் தெரியவில்லை.

அவளே பேச்சைத் தொடங்கினாள்.

''எதற்கும் உதவாத கடைகெட்ட பிழைப்பு!..'' என்று சொற்களைத் தெளிவாக உச்சரித்தவாறு ஆழ்ந்த உறுதி தொனிக்கக் கூறினாள்.

ஆனால் இது முறையீடு அல்ல. இந்தச் சொற்களில் முறை யீட்டுக்குப் பொருந்தாத அளவுகடந்த அலட்சியம் இருந்

தது. அவள் வெறுமே தன்னால் இயன்ற வகையில் சிந்தனை செய்தாள், சிந்தனை செய்து ஒரு குறித்த முடிவுக்கு வந்து அதை உரக்க வெளியிட்டாள், எனக்கு நானே முரண் படாமல் அதை மறுக்க என்னால் முடியவில்லை, ஆகையால் நான் பேசாதிருந்தேன். அவளோ, என்னைக் கவனிக்காதவள் போலத் தொடர்ந்து அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

''செத்தாவது தொலைக்கலாமா என்ன...'' என்று மீண் டும் சொன்னாள் நத்தாஷா. ஆனால் இப்போது தணிந்த குரலில் சிந்தனையுடன் பேசினாள். இப்போதும் அவளுடைய சொற்களில் முறையிடும் தொனி சிறிதும் இல்லை. அவள் வாழ்க்கையைப் பற்றி எண்ணமிட்டு, தன்னைப் பார்வையிட்டு, வாழ்க்கையின் ஏளனங்களிலிருந்து தன்னைக் காத்துக் கொள் வதற்குச் ''செத்துத் தொலைவது'' தவிர வேறு எதுவும் செய்யும் நிலையில் தான் இல்லை என்று உறுதியான முடிவுக்கு வந்தாள் என்பது தெரிந்தது.

இத்தகைய சிந்தனைத் தெளிவால் எனக்கு விவரிக்க முடி யாத அளவு துயரம் உண்டாயிற்று. மேற்கொண்டும் பேசா திருந்தால் எனக்கு அழுகை வந்து விடும் என்று உணர்ந் தேன்... ஒரு பெண்ணுக்கு முன்னால் அழுவது அவமானமாக இருந்திருக்கும். அவள் அழாததால் அவமானம் இன்னும் கடுமையாகி இருக்கும். நான் அவளிடம் பேச்சுக் கொடுக்க முடிவு செய்தேன்.

''உன்னை இப்படி அடித்தது யார்?'' என்று கேட்டேன், அதிகப் புத்திசாலித்தனமான கேள்வி எதுவும் தோன்றாத தால்.

''அட பாஷ்கா தான் என்கிறேன்...'' என்று ஒரு சீரான உரத்த குரலில் விடை இறுத்தாள் அவள்.

''யார் அவன்?..''

''ஆசைநாயகன்... ரொட்டிக் கடைக்காரன் ஒருத்தன்...''

''அவன் உன்னை அடிக்கடி அடிப்பானோ?...''

''குடித்து வெறி ஏறிய போதெல்லாம் அடிப்பான்...''

அவள் திடீரென்று என்னிடம் நகர்ந்து தன்னையும் பாஷ்காவையும் தங்களுக்குள் நிலவிய உறவுகளையும் பற்றி விவரிக்கத் தொடங்கினாள். அவள் ''...தொழில் செய்யும் கட்டில்லாத பெண்களில் ஒருத்தி'', அவன் ரொட்டிக் கடைக் காரன், செம்பழுப்பு மீசையுள்ளவன், மிக அருமையாக

அக்கார்டியன் வாத்தியம் வாசிப்பவன். அவளுடைய ''விடு திக்கு'' அவன் வந்தான். அவளுக்கு அவனை நிரம்பப் பிடித்து விட்டது, ஏனென்றால் அவன் குதூகலப் பேர்வழி, துப்புர வாக உடை உடுத்தான். பதினைந்து ரூபிள் விலையுள்ள நீள் கோட்டும் நாகரிகமான பூட்சுகளும் அவனிடம் இருந்தன... இந்தக் காரணங்களால் அவள் அவன் மேல் காதல் கொண் டாள். அவன் அவளுடைய ''பற்று வாடிக்கைக்காரன்'' ஆகி விட்டான். ''பற்று வாடிக்கைக்காரன்'' ஆன பிறகு அவன் மற்ற வாடிக்கைக்காரர்கள் மிட்டாய் வாங்குவதற்காக அவளுக்குக் கொடுத்த இனும் பணத்தை எடுத்துக் கொள்ள வும் அதைக் கொண்டு குடித்து விட்டு வந்து அவளை அடிக்க வும் தலைப்பட்டான். இதோடு நின்றுலாவது பரவாயில்லை. அவள் கண் எதிரிலேயே மற்றப் பெண்களோடு ''சரசமாடத்'' தொடங்கினுன்...

''எனக்கு இதனுல் மனத்தாங்கல் ஏற்படாதா? நான் மற்ற எவர்களுக்கும் குறைந்தவள் அல்ல... அவன் இப்படி என்னை இளக்காரம் செய்தான், கீழ் மகன். மூன்று நாட் களுக்கு முன் நான் எசமானியிடம் விடுமுறை வாங்கிக் கொண்டு அவனிடம் போனேன். அங்கே தூன்கா குடி மயக் கத்தில் இவனேடு இருந்ததைப் பார்த்தேன். அவனும் குடி வெறியில் இருந்தான். 'இழி பிறவியடா நீ, இழி பிறவி! போக்கிரிப் பயல்!' என்றேன். அவன் என்னை அடித்து நொறுக்கி விட்டான். உதைத்தான், மயிரைப் பிடித்து இழுத் தான்—எல்லா விதமாகவும்... இதாவது தொலைகிறது என்று இருக்கலாம்! ஆனுல் அவன் எல்லாவற்றையும் கிழித்து விட் டானே... இனி எப்படி? நான் எசமானியிடம் எப்படிப் போவேன்? எல்லாவற்றையும் கிழித்து விட்டானே: கவுனை யும் சட்டையையும்—புத்தம் புதிசு... தலைக் குட்டையைத் தலையிலிருந்து பிய்த்து விட்டான்... கடவுளே! இனி நான் என்ன செய்வேன்?'' என்று ஏங்கி உடைந்த குரலில் திடீ ரென்று வீரிட்டாள் அவள்.

காற்று மேலும் மேலும் வலுத்து அதிகக் குளிராகி ஊளை யிட்டது. என் பற்கள் மறுபடி கடகடவென்று அடித்து நடன மாடத் தொடங்கின. அவளும் குளிரால் நெளிந்து துடித் தாள். அவள் எனக்கு மிக மிகக் கிட்டத்தில் நகர்ந்து வந்து

விடவே நான் இருளின் ஊடாக அவளுடைய கண் ஒளியைக் கண்டேன்...

''நீங்கள் இருக்கிறீர்களே, ஆண்கள், எல்லோரும் எப் பேர்ப்பட்ட கயவர்கள்! என்னுல் முடிந்திருந்தால் உங்கள் எல்லோரையும் மிதித்துத் துவைத்திருப்பேன், கை கால்களை முறித்துப் போட்டிருப்பேன். உங்களில் எவனுவது செத்துத் தொலைந்திருந்தால்... அவன் மூஞ்சியிலே துப்பி இருப்பேன், வருத்தமே பட்டிருக்க மாட்டேன்! இழி பிறவிகளா! கெஞ்சிக் குழைவீர்கள், காலை வருடுவீர்கள், கடை கெட்ட நாய்கள் மாதிரி வாலைக் குழைப்பீர்கள். எவளாவது அறிவு கெட்ட வள் உங்களுக்கு மசிந்து விட்டாளோ, தொலைந்தாள்! நீங்கள் உடனே அவளைக் காலடியில் போட்டு நசுக்குவீர்கள்... கேடு கெட்ட புரட்டுக்காரப் பயல்களா...''

அவள் மிக மிக வெவ்வேறு விதச் சொற்களால் திட்டினுள். ஆனுல் அவளுடைய வசவுகளில் வலு இல்லை: ''கேடு கெட்ட புரட்டுக்காரப் பயல்களிடம்'' வன்மமோ வெறுப்போ அவற்றில் எனக்குக் கேட்கவில்லை. மொத்தத்தில் அவளுடைய பேச்சின் தோரணை அதன் உள்ளடக்கத் துக்குப் பொருந்தாத விதத்தில் அமைதி கொண்டிருந்தது. குரல் ஏற்ற இறக்கங்கள் இன்றித் துயர் நிறைந்திருந்தது.

ஆனுல் நான் அதற்கு முன்னரும் பின்னரும் நிறையக் கேட்டிருந்தவையும் இன்று வரை கேட்டும் படித்தும் வரு பவையுமான யாவற்றிலும் சொல்லாற்றலும் அறிவுறுத்தும் திறனும் மிக்க சோர்வுவாத நூல்களையும் பேச்சுகளையும் காட் டிலும் அதிக வலிவாக இவை எல்லாம் என்னைப் பாதித்தன. இதன் காரணம் என்ன என்ருல் இறந்து கொண்டிருப்பவனின் மரண வேதனை சாவு பற்றிய யாவற்றிலும் துல்லியமானவை யும் கலைச் சிறப்பு உள்ளவையுமான வர்ணனைகளை விட எப்போதும் மிக இயல்பானது என்பதுதான்.

எனக்கு அசிங்கமாக இருந்தது—என் அண்டையளின் பேச்சுகளைக் காட்டிலும் அதிகமாகக் குளிர் இதற்குக் காரணம் போலும். நான் மெதுவாக முனகி, பற்களை நெறு நெறுத்தேன்.

அனேகமாக அதே கணத்தில் சில்லிட்ட இரு சிறு கரங் களின் பரிசத்தை உணர்ந்தேன். ஒன்று என் கழுத்தைத் தொட்டது, மற்றது என் முகத்தை வருடியது. கலவரம்

நிறைந்த, பரிவு ததும்பிய கேள்வி அதே சமயம் மென்மை யாக ஒலித்தது:

''நீ என்ன?''

எல்லா ஆண்களும் கயவர்கள் என்று சற்று முன் கூறி அவர்கள் எல்லோருடையவும் அழிவை விரும்பிய நத்தாஷா அல்ல, வேறு யாரோ என்னிடம் இப்படிக் கேட்கிறார்கள் என்று எண்ண நான் தயாராய் இருந்தேன். ஆனால் அதற்குள் அவள் மளமளவென்று பொரிந்து கொட்டினாள்...

''என்ன நீ? ஊம்? குளிர்கிறதா, ஊம்? உடம்பு விரைத்துப் போகிறதோ? அட அசடே! வாயை மூடிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாயே... ஆந்தை மாதிரி! குளிர்கிறது என்று முன்னமே என்னிடம் சொல்லி இருக்கலாமே நீ... ஊம்... படு தரையில் ...கால்களை நீட்டிக் கொள்... நானும் படுக்கிறேன்... இப்படி! இப்போது என்னைக் கைகளால் கட்டிக் கொள்... இன்னும் இறுக... அப்படித் தான், இப்போது உனக்குக் கதகதப்பாய் இருக்க வேண்டும்... அப்புறம்—ஒருவர் முதுகை மற்றவர் முதுகோடு ஒட்டியபடிப் படுப்போம்... எப்படியாவது இரவைக் கழிப்போம்... நீ என்ன, குடித்தாயா, ஊம்? வேலையிலிருந்து விரட்டி விட்டார்களா?..பரவாயில்லை!..''

அவள் என்னைத் தேற்றினாள்... அவள் என்னை உற்சாகப் படுத்தினாள்...

நான் மும்முறை பாழ்படுவேனாக! இந்த நிகழ்ச்சியில் என் மீது எத்தகைய முரண்நகை பொதிந்திருந்தது! சற்று எண்ணிப் பாருங்கள்! அந்தக் காலத்தில் நான் மனித குலத்தின் விதி பற்றி ஆழ்ந்த கவலை கொண்டிருந்தேன், சமூக அமைப்பை மாற்றுவது பற்றி, அரசியல் புரட்சிகள் பற்றிக் கனவு கண்டு கொண்டிருந்தேன், படு மூதறிவு நிறைந்த பல் வேறு நூல்களைப் படித்து வந்தேன்—அந்த நூல்களின் பொருள் ஆழம் அவற்றை இயற்றியவர்களுக்குக் கூட எட்டாததாய் இருந்தது போலும்—என்னைப் ''பெருத்த செயலாற்றும் சக்தியாக'' உருவாக்க அந்தக் காலத்தில் நான் எல்லா வகையாலும் முயன்று வந்தேன். அப்பேர்ப்பட்ட என்னைத் தன் உடம்பால் சூடுபடுத்தினாள் ஒரு விலைமாது, ஆக்கங் கெட்ட, துன்பத்தில் உழன்ற, கசக்கிப் பிழியப்பட்ட ஜீவன், வாழ்க்கையில் இடமோ மதிப்போ இல்லாத ஜீவன். அவள்

எனக்கு உதவியதற்கு முன்னால் அவளுக்கு உதவ எனக்குத் தோன்றவில்லை, தோன்றி இருந்தாலும் எதனாலாவது அவளுக்கு உதவ என்னால் முடிந்திருக்குமா என்பது சந்தேகம்.

இவை எல்லாம் எனக்கு நிகழ்வது கனவில், பொருளற்ற கனவில், துன்பக் கனவில் என்று எண்ண நான் தயாராக இருந்தேன்...

ஆனால், அந்தோ! நான் இவ்வாறு. எண்ணி இருக்கக் கூடாது, ஏனென்றால் குளிர்ந்த மழைத் துளிகள் என் மேல் சொரிந்தன, என் மார்போடு இறுக இணைந்திருந்தது பெண்ணின் மார்பகம், என் முகத்தில் வீசியது அவளுடைய வெதுவெதுப்பான மூச்சு, ஒரு சிறிது வோத்கா மணம் கமழ்ந்தாலும் உயிரூட்டும் திறன் மிகுந்த மூச்சு... காற்று ஊளையிட்டது, முனகியது, மழை படகின் மேல் சடபடத்தது, அலைகள் சளப்பிட்டன, நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் இறுகக் கட்டிக் கொண்டிருந்த போதிலும் குளிரால் நடுங்கினோம். இவை எல்லாம் முற்றிலும் உண்மையில் நடந்தன. இந்த நடப்பு உண்மைக்கு நிகராகத் துயர் நிறைந்ததும் அசிங்கம் பிடித்ததுமான கனவை ஒருவரும் கண்டிருக்க மாட்டார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நத்தாஷாவோ ஓயாமல் என்னவோ சொல்லிக் கொண்டு போனாள். பெண்களுக்கு மட்டுமே பேச முடியக் கூடிய அவ்வளவு கனிவுடனும் பரிவுடனும் அவள் பேசிக் கொண்டு போனாள். பேதைமையும் அன்பும் ததும்பிய அவளுடைய சொற்களின் பாதிப்பால் எனக்குள் ஒரு நெருப்புப் பொறியில் மெல்ல மெல்லச் சூடேறலாயிற்று. அதனால் என் இதயத்தில் எதுவோ இளகிற்று.

அப்போது என் விழிகளிலிருந்து ஆறாய்ப் பெருகியது கண்ணீர். இந்த இரவுக்குமுன் என் நெஞ்சில் குவிந்திருந்த வன்மங்கள், ஏக்கங்கள், அசட்டுத்தனங்கள், அழுக்குகள் ஆகியவற்றில் பலவற்றை இந்தக் கண்ணீர் அதிலிருந்து கழுவிப்போக்கி விட்டது... நத்தாஷாவோ என்னைத் தேற்றினாள்:

''நல்லது, நிறுத்து, கண்ணே, அழாதே! போதும்! ஆண்டவன் அருளால் எல்லாம் சரியாகி விடும், உனக்கு மறுபடி வேலை கிடைத்து விடும்.... எல்லாம் நேராகி விடும்...''

தேற்றியபடியே என்னை ஓயாமல் முத்தமிட்டாள். நிறைய, கணக்கில்லாமல், ஆர்வம் பொங்க...

வாழ்க்கை எனக்கு அளித்த முதலாவது பெண் முத்தங்கள் இவையே. யாவற்றிலும் சிறந்த முத்தங்களும் இவையே, ஏனெனில் அடுத்து வந்த எல்லா முத்தங்களுக்கும் நான் பயங்கரமாக விலை செலுத்த நேர்ந்தது, அவற்ருல் எனக்கு அனேகமாக ஒன்றும் கிடைக்கவும் இல்லை.

''ஊம், அழாதிரேன், அசடே! உனக்குப் போக்கிடம் இல்லை என்ருல் நாளைக்கே உனக்கு வேலை வாங்கித் தருகிறேன்...''—நம்பிக்கையூட்டும் இந்தத் தணிந்த கிசுகிசுப்பு கனவில் போல என் காதுகளில் பட்டது...

...பொழுது புலரும் வரை நாங்கள் ஒருவரை ஒருவர் தழுவியவாறு படுத்திருந்தோம்...

விடிந்ததும் படகுக்கு அடியிலிருந்து வெளி வந்து நகரத்துக்குப் போனேம்... பின்பு நட்புடன் பிரிந்தோம். ஒரு முறை இலையுதிர் காலத்தில் எந்த இனிய நத்தாஷாவுடன் நான் விவரித்துள்ள இரவைக் கழித்தேனே அவளை எல்லா ஏழைச் சேரிகளிலும் இந்த ஆறு மாதங்களாகத் தேடிக் கொண்டிருக்கிறேன், ஆயினும் நாங்கள் மீண்டும் சந்திக்கவே இல்லை...

அவள் இதற்குள் இறந்து விட்டாள் என்ருல்—அது அவளுக்கு எவ்வளவு நல்லது!—அமைதியான உறக்கத்தில் ஆழ்ந்திருப்பாளாக! உயிரோடு இருந்தால், அவளுடைய உள்ளம் அமைதி அடையுமாக! வீழ்ச்சி பற்றிய உணர்வு அவளுடைய உள்ளத்தில் விழித்துக் கொள்ளாதிருக்குமாக... ஏனெனில் இது வாழ்க்கைக்குத் தேவையற்ற, வீண் துன்பமாக இருக்கும்...

சலிப்பைப் போக்கிக் கொள்ள

...பயணி ரெயில் வண்டி கனத்த சாம்பல் புகையைக் கக்கியவாறு பிரமாண்டமான ஊரும் பிராணி போல ஸ்தெப்பித் தொலைவில், கோதுமை வயல்களின் மஞ்சள் கடலில் மறைந்தது. அகன்ற வெற்றுச் சமவெளியின் அசட்டையான நிசப்தத்தைச் சில நிமிட நேரத்துக்குக் கலைத்த சிடுசிடுத்த இரைச்சல் ரெயில் வண்டிப் புகையோடு வெப்பக் காற்றில் கரைந்தது. இந்தச் சமவெளியின் நடுவே, சிறிய ரெயில் நிலையம் தனது தனிமை காரணமாக ஏக்கம் உண்டாக்கிற்று.

புகை வண்டியின் தெளிவற்ற, ஆனால் உயிர்த் துடிப்புள்ள இரைச்சல் மேகங்கள் அற்ற வானத்தின் தெளிவான கும்மட்டத்திற்கு அடியில் பரவி அடங்கிப் போனதும் கொடிய நிசப்தம் நிலையத்தின் நாற்புறமும் மீண்டும் ஆட்சி செலுத்தலாயிற்று.

ஸ்தெப்பி பொன் மஞ்சள் நிறம், வானம் பளிச்சிடும் இள நீல நிறம். இரண்டும் எல்லை இன்றிப் பரந்தவை. இவற்றுக்கு இடையே நிலையத்தின் பழுப்புக் கட்டுமானங்கள் கற்பனை வளம் அற்ற ஓவியன் பாடுபட்டுத் தீட்டிய சோர் வூட்டும் ஓவியத்தின் மையப் பகுதியைக் கெடுக்கும் தற்செயலான கறை போலக் காட்சி அளித்தன.

ரெயில் வண்டிகள் நாள் தோறும் பகல் பன்னிரண்டு மணிக்கும் பிற்பகல் நான்கு மணிக்கும் ஸ்தெப்பியிலிருந்து நிலையத்துக்கு வந்து இரண்டு இரண்டு நிமிடங்கள் நின்றன. இந்த நான்கு நிமிடங்கள் நிலையத்தின் முதன்மையான, ஒரே இன்பப் பொழுதுபோக்காக விளங்கின. அவை ரெயில் நிலைய ஊழியர்களுக்குக் கருத்துப் பதிவுகளைக் கொண்டு தந்தன.

ஒவ்வொரு ரெயில் வண்டியிலும் விதம் விதமாக உடை

கள் அணிந்த பல்வேறு வகையான மனிதர்கள். அவர்கள் நொடிப் போது காணப்பட்டார்கள். அவர்களுடைய களைத்த, பொறுமை அற்ற, அலட்சியம் ததும்பும் முகங்கள் பெட்டிகளின் சன்னல்களில் தோன்றித் தோன்றி மறைந்தன. மணி, ஊதல், அவ்வளவுதான். ஆரவார வாழ்க்கை கொந்தளிக்கும் நகரை நோக்கி அவற்றை இட்டுச் செல்லும் புகை வண்டி தடதடப்புடன் ஸ்தெப்பி வெளியில் தொலைவில் விரைந்தது.

நிலைய ஊழியர்கள் இந்த முகங்களை ஆவலுடன் பார்த்தார்கள். ரெயிலை அனுப்பிய பின், போகிற போக்கில் தங்களுக்கு ஏற்பட்ட உளப்பதிவுகளை ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக் கொண்டார்கள். அவர்களைச் சுற்றிலும் விரிந்து கிடந்தது பேச்சற்ற ஸ்தெப்பி. அவர்களுக்கு மேலே இருந்தது எதையும் பொருட்படுத்தாத வானம். அவர்களுடைய உள்ளங்களிலோ, வெற்று வெளியில் அடைபட்டு, வாழ்க்கைக்குப் புறம்பாகப் போலத் தாங்கள் பிழைப்பு நடத்துகையில், நாள்தோறும் தங்களைக் கடந்து எங்கோ சென்று கொண்டிருந்த மனிதர்கள் மேல் தெளிவற்ற பொருமை மண்டியது.

இதோ, ரெயில் வண்டியை அனுப்பிய பின்னர் கரிய நாடா போன்ற வண்டித் தொடரைக் கண்களால் தொடர்ந்தவாறு அவர்கள் நிலையப் பிளாட்பாரத்தில் நின்றார்கள், அது கோதுமை வயல்களின் பொற் கடலில் மறைந்தது. தங்கள் அருகாக விரைந்த வாழ்க்கையின் உளப்பதிவுகளுக்கு ஆட்பட்டு அவர்கள் பேசாதிருந்தார்கள்.

அனேகமாக ஊழியர்கள் எல்லோரும் அங்கே இருந்தார்கள்: பெரிய கஸாக்கிய மீசையும் பருத்த மேனியும் பொன் முடியும் கொண்ட, நல்லியல்பு வாய்ந்த நிலையத் தலைவர். கூரிய தாடியும் செம்பட்டை முடியும் உள்ள இளைஞரான உதவித் தலைவர். நிலையக் காவலன் லூக்கா—இவன் சிறு கூடான மேனியும் விரைவும் தந்திரமும் உள்ளவன். பாதை இணைப்பாளர்களில் ஒருவனை கமோஸவ்—கட்டுக்குட்டான உடலும் அகலத் தாடியும் உள்ள நாட்டுப் புறத்தான், அதிகமாகப் பேசாதவன்.

நிலையக் கதவின் பக்கத்தில் பெஞ்சின் மேல் அமர்ந்திருந்தாள் நிலையத் தலைவரின் மனைவி. உயரமற்ற பருத்த மாது



கள் அணிந்த பல்வேறு வகையான மனிதர்கள். அவர்கள் நொடிப் போது காணப்பட்டார்கள். அவர்களுடைய களைத்த, பொறுமை அற்ற, அலட்சியம் ததும்பும் முகங்கள் பெட்டி களின் சன்னல்களில் தோன்றித் தோன்றி மறைந்தன. மணி, ஊதல், அவ்வளவுதான். ஆரவார வாழ்க்கை கொந்தளிக் கும் நகரை நோக்கி அவற்றை இட்டுச் செல்லும் புகை வண்டி தடதடப்புடன் ஸ்தெப்பி வெளியில் தொலைவில் விரைந்தது.

நிலைய ஊழியர்கள் இந்த முகங்களை ஆவலுடன் பார்த் தார்கள். ரெயிலை அனுப்பிய பின், போகிற போக்கில் தங்களுக்கு ஏற்பட்ட உளப்பதிவுகளை ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக் கொண்டார்கள். அவர்களைச் சுற்றிலும் விரிந்து கிடந்தது பேச்சற்ற ஸ்தெப்பி. அவர்களுக்கு மேலே இருந் தது எதையும் பொருட்படுத்தாத வானம். அவர்களுடைய உள்ளங்களிலோ, வெற்று வெளியில் அடைபட்டு, வாழ்க் கைக்குப் புறம்பாகப் போலத் தாங்கள் பிழைப்பு நடத்து கையில், நாள்தோறும் தங்களைக் கடந்து எங்கோ சென்று கொண்டிருந்த மனிதர்கள் மேல் தெளிவற்ற பொருமை மண்டியது.

இதோ, ரெயில் வண்டியை அனுப்பிய பின்னர் கரிய நாடா போன்ற வண்டித் தொடரைக் கண்களால் தொடர்ந்த வாறு அவர்கள் நிலையப் பிளாட்பாரத்தில் நின்றார்கள். அது கோதுமை வயல்களின் பொற் கடலில் மறைந்தது. தங் கள் அருகாக விரைந்த வாழ்க்கையின் உளப்பதிவுகளுக்கு ஆட்பட்டு அவர்கள் பேசாதிருந்தார்கள்.

அனேகமாக ஊழியர்கள் எல்லோரும் அங்கே இருந்தார் கள்: பெரிய கஸாக்கிய மீசையும் பருத்த மேனியும் பொன் முடியும் கொண்ட, நல்லியல்பு வாய்ந்த நிலையத் தலைவர். கூரிய தாடியும் செம்பட்டை முடியும் உள்ள இளைஞரான உதவித் தலைவர். நிலையக் காவலன் லூக்கா—இவன் சிறு கூடான மேனியும் விரைவும் தந்திரமும் உள்ளவன். பாதை இணைப்பாளர்களில் ஒருவனை கமோஸவ்—கட்டுக்குட்டான உடலும் அகலத் தாடியும் உள்ள நாட்டுப் புறத்தான், அதிக மாகப் பேசாதவன்.

நிலையக் கதவின் பக்கத்தில் பெஞ்சின் மேல் அமர்ந்திருந் தாள் நிலையத் தலைவரின் மனைவி. உயரமற்ற பருத்த மாது



அவள், வெக்கையால் கடுமையாகத் துன்பப்படுபவள். அவளுடைய மடியில் குழந்தை உறங்கிக் கொண்டிருந்தது. அதன் முகம் தாயின் முகம் போன்றே உப்பிச் சிவந்திருந்தது.

ரெயில் வண்டி சரிவில் மறைந்தது. அது நிலத்தில் புதைந்து விட்டது போலத் தோன்றியது.

அப்போது நிலையத் தலைவர் மனைவியிடம் கேட்டார்:

''என்ன, ஸோனியா, தேநீர் தயாரா?''

''தயார்'' என்று சோம்பலுடன் தணிந்த குரலில் பதிலளித்தாள் அவள்.

''லூக்கா, நீ வந்து... பாதையையும் பிளாட்பாரத்தையும் பெருக்கு... எவ்வளவு சப்பையும் சவற்றையும் கொட்டியிருக்கிறார்கள், பார்...''

''எனக்குத் தெரியும், மத்வேய் யெகோரவிச்...''

''ஊம்... நல்லது, அப்புறம்? தேநீர் பருகுவோமா, நிக்கலாய் பெத்ரோவிச்?''

''வழக்கம் போல'' என்றார் உதவித் தலைவர்.

பகல் வண்டியை அனுப்பிய பின் மத்வேய் யெகோரவிச் மனைவியிடம் கேட்டார்:

''என்ன, ஸோனியா, சாப்பாடு தயாரா?''

பின்பு அவர் லூக்காவுக்கு உத்தரவிட்டார், எப்போதும் ஒரே விதமாக. தங்கள் வீட்டில் சாப்பிட்டு வந்த உதவித் தலைவரை அழைத்தார்:

''அப்புறம்? சாப்பிடுவோமா?''

உதவித் தலைவர் தர்க்கப் பொருத்தமாக விடை அளித்தார்:

''வழக்கம் போல...''

அவர்கள் பிளாட்பாரத்திலிருந்து அறைக்குப் போனார்கள். அங்கே பூச் செடிகள் நிறையவும் மேசை நாற்காலிகள் குறைவாகவும் இருந்தன, சமையல் மணமும் குழந்தைத் துணிகளின் நாற்றமும் குமைந்தன. அவர்கள் அங்கேயும் சாப்பாட்டு மேசையைச் சுற்றி அமர்ந்து மின்வெட்டுப் போலத் தங்களைக் கடந்து சென்ற ரெயில் வண்டியைப் பற்றிப் பேசினார்கள்.

''நிக்கலாய் பெத்ரோவிச், இரண்டாம் வகுப்பில் மஞ்சள் உடை அணிந்த கருங் குழலி ஒருத்தி இருந்தாளே, கவனித்தீர்களா? ஆட் கொல்லி!..''

''பார்வைக்கு மோசமாயில்லே தான், ஆனுல் உடைகளில் ருசி நயம் இல்லே'' என்று மறுமொழி பகர்ந்தார் உதவித் தலேவர்.

அவர் எப்போதும் சுருக்கமாகவும் தன்னம்பிக்கை யுடனும் பேசினர். தாம் வாழ்க்கையை அறிந்தவர், கற்றவர் என்று எண்ணினர். அவர் உயர்நிலேப் பள்ளிப் படிப்பை முடித்திருந்தார். கறுப்புக் காலிக்கோ அட்டை போட்ட நோட்டுப் புத்தகம் அவரிடம் இருந்தது. பெயர் பெற்றவர் களின் பல வித முதுரைகளே அதில் குறித்து வைத்திருந்தார். தற்செயலாகக் கைக்கு வந்த செய்தித்தாள் நகைச்சுவைக் கட்டுரைகளிலிருந்தும் புத்தகங்களிலிருந்தும் பெயர்த்து எழுதியவை அவை. நிலேயப் பணியுடன் தொடர்பற்ற எல்லா விஷயங்களிலும் அவரை நன்கறிந்தவராக நிலேயத் தலேவர் தடை இன்றி ஏற்றுக் கொண்டார், அவர் சொல்லியவற்றைக் காது கொடுத்துக் கேட்டார். நிக்கலாய் பெத்ரோவிச்சின் நோட்டுப் புத்தகத்திலிருந்து எடுத்த அறிவுரைகள் அவ ருக்குச் சிறப்பாகப் பிடித்திருந்தன. அவற்றை அவர் வெள்ளே மனத்துடன் எப்போதும் பாராட்டி வந்தார். கருங் குழலி யின் ஆடை பற்றி உதவித் தலேவர் வெளியிட்ட கருத்து ம்த் வேய் யெகோரவிச்சினிடம் இந்தக் கேள்வியைக் கிளப்பியது:

''கருங் கூந்தல் உள்ளவர்களுக்கு மஞ்சள் உடை பொருந் தாதோ?''

''நான் சொல்வது மோஸ்தரை, நிறத்தை அல்ல'' என்று கண்ணுடிப் பாத்திரத்திலிருந்து தமது சிறு தட்டில் பழக் கூழைக் கச்சிதமாகப் போட்டுக் கொண்டு விளக்கினர் நிக்கலாய் பெத்ரோவிச்.

''மோஸ்தர் என்ருல் அது வேறு விஷயம்!..'' என்று இசைந்தார் தலேவர்.

இந்த விஷயம் தனக்குப் பிடித்ததும் புரிந்ததுமாக இருந் ததால் தலேவரின் மனேவி பேச்சில் கலந்து கொண்டாள். ஆனுல், இந்த மனிதர்களின் அறிவுகள் போதிய அளவு கூர் மையானவை அல்ல ஆகையால் உரையாடல் மெதுவாகவே நகர்ந்தது, அவர்களுடைய உணர்ச்சிகளே எப்போதாவது தான் கொந்தளிக்க வைத்தது.

நிசப்தத்தால் மயங்கிய ஸ்தெப்பியும் தன் மாட்சி மிக்க

அமைதியால் பெருமிதத்தில் திளைத்த வானமும் சன்னல் வழியே தெரிந்தன.

சரக்கு ரெயில் வண்டிகள் அனேகமாக மணிக்கு ஒன்றாக வந்த வண்ணமாய் இருந்தன. அவற்றோடு வந்த பணியாட்கள் நெடுங்காலமாகப் பழக்கமானவர்கள். இந்த நடத்துநர்கள் எல்லோரும் ஸ்தெப்பியில் சலிப்பூட்டிய பயணம் செய்ததால் அலுத்துப் போய்த் தூங்கி வழிந்தார்கள். ஆனால், சில வேளைகளில் வழியில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி இவர்கள் விவரித்தார்கள்: இத்தனாவது வெர்ஸ்டாவில் ஒருவன் ரெயிலடியில் நசுக்குண்டு மாண்டான் என்பது போல. அல்லது பணித் துறைச் செய்திகளைத் தெரிவித்தார்கள்: இன்னாருக்கு அபராதம் விதிக்கப்பட்டது,இன்னார் மாற்றப்பட்டார் என்று. இந்தச் செய்திகள் விவாதிக்கப்படவில்லை. அபூர்வமான தின்பண்டத்தைச் சுவையூண் விரும்பிகள் ஆர்வத்துடன் தின்பது போல அவை பேராசையுடன் விழுங்கப்பட்டன.

சூரியன் வானிலிருந்து மெதுவாக ஊர்ந்து ஸ்தெப்பி விளிம்பை அடைந்தது. அது தரையை அனேகமாகத் தொட்டதும் கருஞ்சிவப்பு ஆகிவிட்டது. செவ்வொளி ஸ்தெப்பியில் பரவி ஏக்கம் உண்டாக்கிற்று. இந்த வெறுமையிலிருந்து வெளியேறித் தொலைவில் செல்லத் தெளிவற்ற ஆசை எழுந்தது. பின்னர் சூரியன் விளிம்பால் தரையைத் தொட்டு, சோம்பலுடன் அதிலிருந்து அகன்றது, அல்லது அதன் பின்னே போய் விட்டது. சூரியன் மறைந்த பிறகும் பளிச்சிடும் மாலை வண்ணங்களின் சங்கீதம் வெகு நேரம் வரை மெல்லென இசைத்துக் கொண்டிருந்தது. ஆனால் நேரமாக ஆக வண்ணக் கலவை மங்கிக் கொண்டு போயிற்று, வெதுவெதுப்பும் நிசப்தமும் உள்ள கருக்கல் தொடங்கியது. விண்மீன்கள் திடீரென உதித்து, நிலத்தின் சலிப்பால் அஞ்சியவை போன்று நடுங்கின.

கருக்கலில் ஸ்தெப்பி குறுகியது. இரவின் இருள் எல்லாப் புறங்களிலுமிருந்து ஓசை இன்றி நிலையத்தின் மீது கவிந்தது. பிறகு வந்தது ஏக்கம் நிறைந்த கரிய இரவு.

நிலையத்தில் விளக்குகள் ஏற்றப்பட்டன. கைகாட்டி மரத்தின் பச்சை விளக்கு எல்லாவற்றையும் விட உயரத்தில் அதிகப் பிரகாசமாக எரிந்தது. இருளும் நிசப்தமும் அதைச் சூழ்ந்திருந்தன.

சில வேளைகளில் தொலைபேசி மணி அடித்தது—ரெயில் வருவதன் முன்னறிவிப்பாக. அவசரமான மணியோசை ஸ்தெப்பியில் பரவி அதில் விரைவாக ஆழ்ந்து விட்டது.

தொலைபேசி மணிக்குச் சற்றுப் பிறகு ஒளிரும் சிவப்பு நெருப்பு இருண்ட தொலைவிலிருந்து பாய்ந்து வந்தது. இருள் சூழ்ந்த தனித்த நிலையத்தை நெருங்கிய புகை வண்டியின் மந்தமான தடதடப்பு ஸ்தெப்பியை அதிரச் செய்தது.

நிலையத்தின் சிறு சமூகத்தினது தாழ்நிலை வட்டாரத்தினர் மேல்நிலையினருக்குச் சிறிது மாறுன விதத்தில் வாழ்ந்து வந்தார்கள். காவலன் லூக்காவின் கிராமம் நிலையத்திலிருந்து ஏழு வெர்ஸ்டா தொலைவில் இருந்தது. அங்கே அவனுடைய மனைவியும் சகோதரனும் இருந்தார்கள். அவர்களிடம் போய் விட்டு வர வேண்டும் என்ற ஆசையை அடக்கிக் கொள்ள ஓயாமல் முயன்று கொண்டிருந்தான் லூக்கா. கிராமத்தில் தனக்கு நிலம் இருப்பதாக அளவறுத்த பேச்சும் நிதானப் போக்கும் உள்ள பாதை இணைப்பாளன் கமோஸவிடம் நிலையத்தில் ''டியூட்டி செய்யும்படி'' கேட்கையில் அவன் சொன்னுன்.

''நிலம்'' என்ற சொல்லைக் கேட்டதும் கமோஸவ் ஆழ்ந்து பெருமூச்செறிந்து லூக்காவிடம் கூறினுன்:

''அதற்கென்ன, போய்வா. நிலத்தை மேற்பார்ப்பது அவசியம், சந்தேகம் இல்லாமல்...''

இரண்டாவது பாதை இணைப்பாளன் அபனுசி யாகத்கா முதிய படையினன். அவனுடைய சிவந்த வட்ட முகத்தில் நரைத்த கட்டை ரோமங்கள் துருத்திக் கொண்டிருந்தது. அவன் கிண்டல் பேச்சும் வன்மமும் உள்ளவன். லூக்கா சொன்னதை அவன் நம்பவில்லை.

''நிலமா?'' என்று குறுநகை செய்தான் அவன். ''பெண்டாட்டி!.. புரிந்து கொண்டேன் நிலம் எப்பேர்ப்பட்டது என்று... உன் பெண்சாதி என்ன, விதவையா? அல்லது படையினன் வீட்டுக்காரியா?''

''அட போடா பறவைக் கவர்னர்!'' என்று இகழ்ச்சியுடன் நொடித்தான் லூக்கா.

யாகத்காவை லூக்கா பறவைக் கவர்னர் என்று அழைத்ததற்குக் காரணம் முதிய படையினனுக்குப் பட்சிகள் மேல் ஆழ்ந்த பற்று இருந்தது ஆகும். அவனுடைய சாவடியின் உள்ளும் புறமும் எங்கும் சிறிய, பெரிய கூண்டுகள் தொங்கின. பட்சிகளின் கலகலப்பு சாவடியிலும் அதைச் சுற்றிலும் நாள் முழுதும் இடையீடின்றி ஒலித்த வண்ணமாய் இருந்தது. படையினனுல் சிறை வைக்கப்பட்டிருந்த கவுதாரிகளைப்பின்றி ஒரு சீராகக் கூவியபடி இருந்தது. பூவைகள் நீண்ட சொற்களை முணுமுணுத்துக் கொண்டிருந்தன. பல நிறங்கள் கொண்ட சிறு புட்கள் வாய் ஓயாமல் சிலம்புவதும் சீழ்க்கை அடிப்பதும் பாடுவதுமாக இருந்தன. இவை படையினனின் தனிமை வாழ்வில் அவனுக்கு இன்பம் அளித்தன. ஒழிவு நேரம் முழுதும் அவன் அவற்றுடன் சீராடிக் கொண்டிருந்தான். அவற்றைப் பரிவுடன் பேணிக் காப்பதிலேயே ஈடுபட்டு, தோழர்களிடம் எவ்வித அக்கறையும் கொள்ளாமல் இருந்து வந்தான். லூக்காவைப் பச்சைப் பாம்பு என்றும் கமோஸவைக் கசாப்புக்காரன் என்றும் அவன் அழைத்தான். அவர்கள் இருவரும் ''பெண்களுக்கு வால் பிடிப்பவர்கள்'' என்றும் இதற்காக அவர்களை அடிக்க வேண்டும் என்றும் கூசாமல் அவர்களுக்கு எதிரில் சொன்ஞன்.

லூக்கா அவனுடைய சொற்களை அவ்வளவாகப் பொருட்படுத்தியது இல்லை. ஆனுல் படையினன் அவனுக்கு ஆத்திரம் ஊட்டி விட்டால் லூக்கா அவனைச் சுடு சொற்களால் நெடு நேரம் திட்டி நொறுக்கினுன்.

''என்னடா, தண்டத் தீனிச் சிப்பாய்ப் பயலே, எலி கறவிய மிச்சமே! உனக்கு என்னடா புரியும், ஓய்ந்து போன பறை கொட்டி? ஆயுள் பூராவும் நீ பீரங்கிகளுக்கு அடியிலிருந்து தவளைகளை ஓட்டிக் கொண்டிருந்தாய், பட்டாள முட்டைக் கோசைக் காவல் காத்துக் கொண்டிருந்தாய்... உனக்குப் பேச்சு வேறு கேடா? காடை, கவுதாரிகளிடம் போடா பறவைக் கமாண்டர்!''

காவலனின் திட்டுகளை அமைதியாக முடிவு வரை கேட்டு விட்டு யாகத்கா நிலையத் தலைவரிடம் அவனைப் பற்றிக் குறை சொன்ஞன். அற்ப விஷயங்களுக்காகத் தம்மைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று அவர் கூப்பாடு போட்டு யாகத்காவை அப்பால் விரட்டி விட்டார். அப்போது படை

யினன் லூக்காவைத் தேடிக் கண்டு தானே அவனை வையத் தொடங்கினன். அவன் ஆத்திரப்படாமல், பயங்கர ஆபாசச் சொற்களால் அமைதியாகத் திட்டவே, லூக்கா விரைவில் தூ என்று துப்பி விட்டு ஓடிப் போனுன்.

கமோஸவ் படையினனுடைய வசவுகளுக்குப் பெருமூச்சு களால் பதில் அளித்து, குழப்பத்துடன் நியாயம் கற்பிக்க முயன்றான்: ''என்ன செய்வது? இந்த விஷயத்தில் ஒன்றுமே செய்ய முடியாது... உண்மைதான்... மட்டுமீறிய சலுகை தான் இது... ஆனலும், வேதாகமத்தில் சொல்லி இருப்பது போல, மற்றவர்களிடம் குற்றம் காணுதே, உன்னிடமும் மற்றவர்கள் குற்றம் காண மாட்டார்கள்...''

ஒரு முறை படையினன் ஏளனச் சிரிப்புடன் அவனுக்கு மறு மொழி பகர்ந்தான்:

''எல்லாக் கேள்விக்கும் உன்னிடம் ஒரே பதில்தான்! குற்றம் காணுதே, குற்றம் காணுதே என்று!.. குற்றம் காணக் கூடாது என்றால் ஆட்கள் பேசிக் கொள்ள விஷயமே கிடைக்காது...''

தலைவரின் மனைவி தவிர இன்னொரு மாதும் நிலையத்தில் இருந்தாள். அவள் சமையல்காரி. அரீனு என்று பெயர். வயது நாற்பதுக்குள் இருக்கும், ஆனல் அவள் மிகவும் அழகற்ற வள்: கட்டுக்குட்டான மேனி, தளர்ந்து தொங்கிய மார்பகங் கள், எப்போதும் அழுக்கும் கந்தலும். பக்கத்துக்குப் பக்கம் தள்ளாடியவாறு நடந்தாள். அம்மைத் தழும்புகள் உள்ள அவளுடைய முகத்தில் சுற்றிலும் சுருக்கங்கள் விழுந்த குறுகிய கண்கள் அச்சத்துடன் சுடர்ந்தன. அவளது பாங்கற்ற உருவத்தில் அடிமைத்தனம் நிறைந்த, ஒடுக்கி நசுக்கப்பட்ட ஒரு வகைத் தோற்றம் இருந்தது. அவள் எல்லா மனிதர் களிடமும் மன்னிப்பு கேட்கவும் அவர்களுடைய கால்களில் விழுந்து வணங்கவும் விரும்புவது போலவும் அவளுக்கு அழத் துணிவு வரவில்லை போலவும் அவளுடைய பருத்த உதடுகள் ஓயாமல் நெளிந்தன. கமோஸவ் அரீனு மீது தனிப்பட்ட கவ னம் செலுத்தாமல் நிலையத்தில் எட்டு மாதங்களாக வசித்து வந்தான். அவளைக் கண்ட போது ''வணக்கம்'' என்றான். அவளும் அவனுக்கு அதே போல வணக்கம் தெரிவித்தாள், இரண்டொரு வாக்கியங்கள் மட்டும் சொல்லி நிறுத்திக் கொண்டாள். பின்பு இருவரும் அவரவர் போக்கில் போய் விட்

டார்கள். ஆனால் ஒரு நாள் கமோஸவ் நிலையத் தலைவரின் சமையலறைக்கு வந்து தன் சட்டைகளைத் தைத்துக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொண்டான். அவள் இசைந்தாள். சட்டைகளைத் தைத்ததும் எதற்காகவோ அவன் இருப்பிடத்துக்குக் கொண்டு சென்றாள்.

''நன்றி உனக்கு!'' என்றான் கமோஸவ். ''மூன்று சட்டைகள். உருப்படிக்குப் பத்து காசு வீதம் முப்பது கோப்பெக்குகள் உனக்குச் சேர வேண்டும்... சரி தானே?''

''ஆமாம், சரிதான்'' என்றாள் அரீனா.

கமோஸவ் எண்ணத்தில் ஆழ்ந்து வெகு நேரம் பேசாதிருந்தான்.

''நீ எந்த மாநிலத்தவள்?'' என்று தன் தாடியையே ஒரே பார்வையாகப் பார்த்துக் கொண்டிருந்த மாதினிடம் கடைசியில் கேட்டான்.

''ரியாஸான்...'' என்று அவள் கூறினாள்.

''தூரத்திலிருந்து வந்திருக்கிறாய்! இங்கே எப்படி வந்து சேர்ந்தாய்?''

''இப்படித்தான்... நான் ஒண்டிக் கட்டை... தனியாக இருக்கிறேன்...''

''அப்போது இன்னும் தொலைவுக்குப் போகலாம்...'' என்று பெருமூச்செறிந்தான் கமோஸவ்.

மீண்டும் இருவரும் நீண்ட நேரம் மௌனமாக இருந்தார்கள்.

''நானும் இதே மாதிரித் தான். நீமெழகரத்காரன் நான், செர்காச் மாவட்டத்தைச் சேர்ந்தவன்'' என்று பேசத் தொடங்கினான் கமோஸவ். ''நானும் தனியாள் தான், ஒற்றைக் கட்டை. ஒரு காலத்திலே என்னிடம் நிலம் இருந்தது, வீட்டுக்காரியும் இருந்தாள்... குழந்தைகள் இரண்டு பேர் இருந்தார்கள்... வீட்டுக்காரி வாந்திபேதியில் மாண்டாள், குழந்தைகள் வேறு நோய்களில் இறந்து போனார்கள்... நான் கொஞ்ச காலத்துக்கு... துக்கம் தாள மாட்டாமல் புழுவாய்த் துடித்தேன். ஆ-மாம்... அப்புறம் மறுபடி குடித்தனம் நடத்தப் பார்த்தேன், ஆனால் முடியவில்லை. இயந்திரம் பழுதாகி விட்டது, வேலை செய்ய மறுத்தது. அட சரி என்று வழியை விட்டு விலகி வேறு பக்கம் நடந்தேன்... இதோ இங்கே மூன்றாவது வருஷம் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறேன்...''

''நமக்கு என்று சொந்த வீடு வாசல் இல்லாவிட்டால் கெடுதல்'' என்று தணிந்த குரலில் சொன்னுள் அரீனு.

''சரியான பேச்சு!.. நீ என்ன, கைம்பெண்ணு?''

''கன்னி...''

''அது எப்படி முடியும்?'' என்று மறைக்காமல் சந்தேகத்தை வெளியிட்டான் கமோஸவ்.

''கடவுள் ஆணை, நான் கன்னி கழியாதவள்'' என்று உறுதி கூறினுள் அரீனு.

''நீ ஏன் கலியாணம் கட்டிக் கொள்ளவில்லை?''

''என்னை எவன் கட்டிக் கொள்வான்? எனக்கு ஒன்றுமே கிடையாது... யாருக்கு லாபம்... பார்க்கவும் அழகானவள் அல்ல...''

''ஆ-ஆமாம்...'' என்று சிந்தனையுடன் இழுத்தான் கமோஸவ். பின்பு தாடியைத் தடவியவாறு அவளை ஆவலுடன் நோட்டமிடலானுன். அவளுக்கு என்ன சம்பளம் கிடைக்கிறது என்று அப்புறம் விசாரித்தான்.

''இரண்டரை ரூபிள்...''

''அப்படியா. நல்லது... அதாவது, நான் உனக்கு முப்பது கோப்பெக்குகள் கொடுக்க வேண்டும், அல்லவா? கேளு.... பொழுது சாய்ந்த பிறகு வந்து வாங்கிக் கொள்... பத்து மணி சுமாருக்கு வா, என்ன? தந்து விடுகிறேன்... தேநீர் சாப்பிடுவோம், சலிப்பைப் போக்கிக் கொள்ள ஏதாவது பேசுவோம்... நாம் இரண்டு பேரும் தனிக் கட்டைகள்... வா!''

''வருகிறேன்'' என்று சாதாரணமாகச் சொல்லி விட்டு அவள் போய் விட்டாள்.

பின்பு, அவனது இருப்பிடத்துக்குச் சரியாக இரவு பத்து மணிக்கு வந்தவள் விடியும் தறுவாயில் தான் அவனிடமிருந்து போனுள்.

கமோஸவ் மேற்கொண்டு அவளை. அழைக்கவில்லை, அவளுக்கு முப்பது கோப்பெக்குகளும் கொடுக்கவில்லை. அவள் தாளுகவே அவனிடம் மழுங்கிய அறிவும் பணிவுமாக வந்தாள். வந்து அவன் முன்னே பேசாமல் நின்ருள். கட்டிலில் படுத்தபடியே அவன் அவளைப் பார்த்து, சுவற்றின் பக்கம் சற்று நகர்ந்து,

''உட்கார்'' என்ருன்.

அவள் அமர்ந்ததும் அவளுக்கு அறிவுறுத்தினான்:

''இதோ, பார், இதை இரகசியமாக வைத்திரு. ஒருவருக்கும் சாடை மாடையாகக் கூட ஒன்றும் தெரியக் கூடாது! இல்லாவிட்டால் என் நிலைமை மோசமாகி விடும்... நான் இளவட்டம் அல்ல, நீயுந்தான்... புரிந்ததா?''

அவள் ஆம் என்று தலையசைப்பால் உணர்த்தினாள்.

அவளுக்கு விடை கொடுத்து அனுப்பிய போது செப்பனிடுவதற்காக உடையைத் தந்து மீண்டும் அவளுக்கு நினைவுபடுத்தினான்:

''ஒரு பூதருக்குத் தெரியப்படாது, சாக்கிரதை!''

இவ்வாறு தங்கள் தொடர்பை எல்லோரிடமிருந்தும் மறைத்தபடி அவர்கள் வாழத் தொடங்கினார்கள்.

அரீனா இரவு நேரத்தில் அடிமை போல அனேகமாகத் தரையில் ஊர்ந்து அவனிடம் வந்தாள். அவன் உடைமையாளனின் தோற்றத்துடன் பெரிய மனது பண்ணுபவன் போல அவளை ஏற்றான். சில வேளைகளில் வெளிப்படையாக அவளிடம் கூறினான்:

''ஆனாலும் அவலட்சணம் உன் முகம்!''

அவள் குற்றம் செய்தவள் போன்ற தோற்றத்துடன் முகம் வெளிற முறுவலித்து மௌனமாக இருந்தாள். அவனிடமிருந்து போகையில் அவன் கொடுத்த ஏதேனும் வேலையை உடன் கொண்டு சென்றாள்.

அவர்கள் சந்தித்தது அடிக்கடி அல்ல. ஆனால் நிலையத்தில் எங்கேனும் அவளைக் கண்ட போது கமோஸவ் சில வேளைகளில், ''இன்றைக்கு வா...'' என்று வாய்க்குள்ளாகச் சொன்னான்.

அவள் கீழ்ப்படிந்து அவனிடம் வந்தாள். கடமையை நிறைவேற்ற வந்திருப்பவள் போலவும் அதன் முக்கியத்துவம் அவளுக்குப் புரியத் தொடங்கி இருப்பது போலவும் ஒரு தோற்றம் அம்மைத் தழும்புகளிட்ட அவளுடைய முகத்தில் திகழ்ந்தது.

வீடு திரும்புகையிலோ, குற்றப் பாங்கும் அச்சமும் உள்ள வழக்கமான பிரேதக் களை அவள் முகத்தில் மறுபடி வந்து விட்டது.

சில சமயங்களில் அவள் ஏதேனும் மூலையிலோ மரத்தின் பின்போ எங்காவது நின்று ஸ்தெப்பியை நீண்ட நேரம்

பார்த்துக் கொண்டிருந்தாள். அங்கே இரவின் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. அதன் கடுப்புள்ள மௌனத்தால் அவளுடைய நெஞ்சைத் திகில் பற்றிக் கொண்டது.

ஒரு நாள் மாலே வண்டியை அனுப்பிய பின்னர் நிலேயத் தலேவர்கள் மத்வேய் யெகோரவிச்சின் வீட்டுச் சாளரங்களுக்கு எதிரே தோட்டத்தில், பாப்ளார் மரங்களின் அடர்ந்த நிழலில் தேநீர் பருக ஏற்பாடு செய்தார்கள்.

வெப்பமான நாட்களில் அவர்கள் இவ்வாறு அடிக்கடி செய்வதுண்டு. அவர்களுடைய மாறுபாடற்ற வாழ்க்கையில் இது ஓரளவாவது வேற்றுமையைப் புகுத்தியது.

ரெயில் வண்டி ஏற்படுத்திய உளப்பதிவுகளேப் பற்றிப் பேசித் தீர்த்த பின் அவர்கள் பேசாமல் தேநீர் பருகிஞர்கள்.

மத்வேய் யெகோரவிச் ஒரு கையால் வெற்றுத் தம்ளரை மனேவியிடம் கொடுத்து மறு கையால் முகத்து வேர்வையைத் துடைத்துக் கொண்டு, ''நேற்றை விட இன்று வெப்பம் அதிகம்'' என்ருர்.

மனேவி தம்ளரை வாங்கிக் கொண்டு, ''வெக்கை அதிகமாய் இருப்பதாகச் சலிப்பிஞல் தோன்றுகிறது...'' என்று கூறிஞள்.

''ஹ்ம்! ஒருக்கால்... உண்மையாகவே... இந்த சந்தர்ப்பத்தில் சீட்டு நன்ருய் இருக்கும்... ஆஞல் ஆடுவதற்கு நாம் மூன்று பேர் தாம் இருக்கிருேம்...''

நிக்கலாய் பெத்ரோவிச் தோள்களேக் குலுக்கி, கண்களேச் சுரித்துக் கொண்டு தெளிவாகக் கூறிஞர்:

''ஷாப்பன்ஹாவரின் சொற்படி சீட்டாட்டம் சிந்தனேயின் வறுமையைக் காட்டுகிறது.''

''சாமர்த்தியமான பேச்சு?'' என்று பாகாய்க் கசிந்தார் மத்வேய் யெகோரவிச். எப்படிச் சொன்ஞர்? சிந்தனேயின் வறுமை... ஆகா-கா! சொன்னவர் யார்?''

''ஷாப்பன்ஹாவர், ஜெர்மானியர், தத்துவவாதி...''

''தத்-துவவாதியா? மம்...''

''இந்தத் தத்துவவாதிகள் என்ன செய்கிருர்கள்—பல்கலேக் கழகங்களில் கற்பிக்கிருர்களா?'' என்று வினவிஞள் சோபியா இவானவ்ஞ.

''அதாவது உங்களுக்கு எப்படிச் சொல்வது? இது பதவி அல்ல, ஆனால்... ஒரு வகையில் சொன்னால், இயற்கைத் திறமை... தத்துவவாதியாக எவர் வேண்டுமானாலும் இருக்கலாம்... பிறப்பிலேயே சிந்தனை செய்யும் பழக்கமும் எல்லாவற்றிலும் முதலையும் முடிவையும் தேடும் பழக்கமும் உள்ளவர் எவர் வேண்டுமானாலும்... பல்கலைக் கழகங்களிலும் தத்துவவாதிகள் உண்டுதான்... ஆனால் அவர்கள் வெறுமே தத்துவவாதிகளாக மட்டும் கூட இருக்க முடியும்... இருப்புப் பாதையில் ஊழியம் கூடப் புரியலாம் அவர்கள்.''

''பல்கலைக் கழகங்களில் உள்ளவர்களுக்கு நிறையச் சம்பளம் கிடைக்குமோ?''

''மூளைக்குத் தக்கபடி...''

''நாலாவது கை மட்டும் இருந்தால் சீட்டாடி இருக்கலாம்!'' என்று பெருமூச்சுடன் சொன்னார் மத்வேய் யெகோரவிச்.

அதோடு பேச்சு இடை முறிந்தது.

வானம்பாடிகள் நீல வானத்தில் பாடின. ராபின் பறவைகள் பாப்ளார் மரங்களில் கிளைக்குக் கிளை தாவி மெல்லிய சீழ்க்கை அடித்தன. அறையில் குழந்தை அழுதது.

''அரீனா இருக்கிறாளா?'' என்று கேட்டார் மத்வேய் யெகோரவிச்.

''ஆமாம்...'' என்று சுருக்கமாக விடை அளித்தாள் மனைவி.

''தனி வகையான பெண்பிள்ளை இந்த அரீனா. நீங்கள் கவனியுங்கள், நிக்கலாய் பெத்ரோவிச்...''

''தனித்தன்மை பொதுத் தன்மையின் முதல் பதிப்பு'' என்று தமக்குத் தாமே போலக் கூறினார் நிக்கலாய் பெத்ரோவிச், எண்ணத்தில் ஆழ்ந்தவரும் சிந்தனையாளரும் போன்ற தோற்றத்தை வருவித்துக் கொண்டு.

''எப்படி?'' என்று உற்சாகமாகக் கேட்டார் நிலையத் தலைவர்.

நிக்கலாய் பெத்ரோவிச் புரியும் விதத்தில் முதுரையைத் திரும்பச் சொன்னார். அப்போது அவர் கண்களை இனிமையாகச் சுரித்துக் கொண்டார். சோபியா இவானவ்னா சோர்ந்த குரலில் கூறினாள்:

''படித்ததை எவ்வளவு நன்றாக நினைவு வைத்திருக்கிறீர்

கள் நீங்கள்... நானுந்தான் படிக்கிறேன், ஆனால் மறு நாள் நீங்கள் என்னைக் கொன்றாலும் சரி, எனக்கு ஒன்றுமே நினைவிருப்பதில்லை... பாருங்களேன், சமீபத்தில் **நீவா** என்ற புத்தகத்தில் சுவையான, சுவாரசியமான ஒரு விஷயத்தைப் படித்தேன். என்ன அது? ஒரு வார்த்தை கூட நினைவில்லை!''

''பழக்கம்'' என்று சுருக்கமாக விளக்கினார் நிக்கலாய் பெத்ரோவிச்.

''இல்லை, இது அவன்... அவன் பேர் என்ன? ஷாப்பென்ஹாவருடையதை விட மேல்'' என்று புன்னகையுடன் சொன்னார் மத்வேய் யெகோரவிச. ''அதாவது, புதியது எல்லாம் பழையது ஆகி விடுமாக்கும்!''

''பின்னது முன்னதும் ஆகும், ஏனென்றால் ஒரு கவிஞர் சொன்னார்: 'சிக்கனமானது வாழ்க்கை விவேகமே: மிக்கப் புதியது பழையதன் புதுக்கமே.' ''

''அடேயப்பா! என்னமாய் உங்கள் நினைவிலிருந்து எல்லாம் அரிதட்டிலிருந்து சிதறுவது போலக் கொட்டுகிறது!''

மத்வேய் யெகோரவிச் மன நிறைவுடன் சிரித்தார், அவருடைய மனைவி இன் முறுவல் செய்தாள். நிக்கலாய் பெத்ரோவிச்சுக்கு உச்சி குளிர்ந்து விட்டது. அவர் அதைக் காட்டிக் கொள்ளாதிருக்க வீணே முயன்றார்.

''பொதுத்தன்மை பற்றிச் சொன்னவர் யார்?''

''பர்யாத்தின்ஸ்கி, கவிஞர்.''

''மற்றதோ?''

''அவரும் கவிஞர்—பபானவ்.''

''திறமைசாலிகள்!'' என்று கவிஞர்களை ஆமோதித்தார் மத்வேய் யெகோரவிச். பின்பு மன நிறைவைக் காட்டும் புன்னகை முகத்தில் ஒளிர, ஈரடிச் செய்யுளை ராகத்துடன் படித்தார்.

சலிப்பு தன் இறுக்கமான அணைப்பிலிருந்து அவர்களை நிமிட நேரம் கட்டின்றி இருக்க விடுவதும் பின்பு தழுவிக் கொள்வதுமாக அவர்களோடு விளையாடுவது போல் இருந்தது. அப்போது அவர்கள் தேநீர் பருகியதால் அதிகரித்த வெக்கை காரணமாக உரக்க மூச்சு விட்டவாறு பேசாதிருந்தார்கள்.

ஸ்தெப்பியில் வெயில் மட்டுந்தான் இருந்தது.

''ஆமாம், நான் அரீனாவைப் பற்றிப் பேச்சு எடுத்திருந்

தேன்'' என்று நினைவுபடுத்தினர் மத்வேய் யெகோரவிச். விசித்திரமானவள் இந்தப் பெண்பிள்ளை. இவளைப் பார்க்கப் பார்க்க எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. எதனுலோ புண் பட்டவள் போல, சிரிப்பதில்லை, பாடுவதில்லை, குறைவாகவே பேசுகிருள்... சரியான மரக்கட்டை. பார்க்கப் போனுல் அவள் நிரம்ப நன்ருக வேலை செய்கிருள். லேலியாவுடன் சீராடுகிருள், குழந்தையை நன்ருகக் கவனித்துக் கொள் கிருள்...''

சன்னல் வழியாக அரீனு தம் சொற்களைக் கேட்டு விடக் கூடாது என்பதற்காக அவர் தணிந்த குரலில் பேசினர். வேலைக்காரி அகந்தை கொள்ளாதிருக்க வேண்டும் என்ருல் அவளைப் பாராட்டக் கூடாது என அவர் அறிந்திருந்தார். மனைவி பல அர்த்தங்கள் தொனிக்க முகத்தைச் சுளித்து அவர் பேச்சில் குறுக்கிட்டாள்:

''விடு, ரொம்பத்தானே புகழ்ந்து விடாதே... அவளைப் பற்றி எல்லாம் தெரியாது உனக்கு!''

''அன்பின் அடிமை,
தென்பில்லேன் நான்
உன்னுடன் இகல
என்னுயிர்ப் பகைவா!..''

என்று மேஜை மேல் கரண்டியால் தாளம் போட்டுப் பண் ணேடு பாடினர் நிக்கலாய் பெத்ரோவிச். அவர் புன்னகை செய்து கொண்டிருந்தார்.

''என்ன, என்ன இது? அவளாவது... அடாடா, நீங்கள் இரண்டு பெரும் பொய் சொல்லுகிறீர்கள்!''

மத்வேய் யெகோரவிச் உரக்கக் கடகடவென்று சிரித் தார். அவருடைய கன்னங்கள் குலுங்கின, வியர்வைத் துளி கள் நெற்றியிலிருந்து விரைவாகப் பெருகின.

''இதில் சிரிப்பதற்கு ஒன்றுமே இல்லை!'' என்று அவ ருடைய சிரிப்பை நிறுத்தினுள் மனைவி. ''முதலாவது, குழந்தை அவள் பொறுப்பில் இருக்கிறது. இரண்டாவது, பார்த் தாயா, ரொட்டி எப்படி இருக்கிறது என்று? மாவு புளித்து விட்டது, ரொட்டி கருகி விட்டது... எதனுலாம்?''

''ஆ-ஆமாம், ரொட்டி மெய்யாகவே சரியாக இல்லை தான்... அவளுக்கு அறிவுறுத்த வேண்டும்! ஆனுல், கடவுள்

ஆணை! இதை... இதை நான் எதிர்பார்க்கவில்லை! அவள் புளித்த மாவு ஆயிற்றே! அட சே, சைத்தான்! ஆனால் அவன், யார் அந்த ஆள்? லூக்காவா? நான் அவனைக் கேலி செய்தே தொலைத்து விடுகிறேன், கிழட்டுப் பேயை! அல்லது யாகத் காவோ? அடே, மீசை இல்லாப் பயலே!

''கமோஸவ்'' என்று சுருக்கமாகக் கூறினார் நிக்கலாய் பெத்ரோவிச்.

''என்ன அது? அவ்வளவு நிதானப் போக்கு உள்ள மனிதனா? ஓ-ஓ! நீங்கள் வெறுமே கதை கட்டுகிறீர்களோ, ஊம்?''

இந்த வேடிக்கை நிகழ்ச்சி மத்வேய் யெகோரவிச்சின் மனத்தை வெகுவாக ஆட்கொண்டது. நீர் மல்கிய விழிகளுடன் ஒரு சமயம் கலகலவென்று நகைத்தார், மறு சமயம் காதலர்களைக் கண்டிப்பாகக் கடிந்து கொள்வதன் அவசியம் பற்றி ஆழ்ந்த முறையில் பேசினார். பின்பு அவர்களுக்கிடையே நடக்கும் கனிந்த உரையாடலைக் கற்பனை செய்து கொண்டு மீண்டும் காது செவிடுபடும்படிக் கோலாகலமாகச் சிரித்தார்.

முடிவில் அவர் இதில் வரம்பு கடந்து விடவே நிக்கலாய் பெத்ரோவிச் கண்டிப்பான முகத் தோற்றத்தை வருவித்துக் கொண்டார். சோபியா இவானவ்னா அவருடைய களிப்பைத் திடுமென்று இடை முறித்தாள்.

''அட, பேய்மக்களா! நான் இவர்களை எப்படி நையாண்டி செய்கிறேன் பாருங்கள்! சுவையான சங்கதி இது...'' என்று விடாமல் தொடர்ந்தார் மத்வேய் யெகோரவிச்.

லூக்கா வந்து அறிவித்தான்:

''தந்தி கடகடக்கிறது...''

''வருகிறேன். நாற்பத்து இரண்டுக்கு அறிவிப்பு செய்.''

விரைவில் அவரும் உதவித் தலைவரும் நிலையம் சென்றார்கள். அங்கே லூக்கா மணியைக் கணகணவென்று அடித்து வண்டியின் வருகையை அறிவித்தான். நிக்கலாய் பெத்ரோவிச் தந்திக் கருவி அருகே அமர்ந்து, ''நாற்பத்து இரண்டாம் நம்பர் ரெயிலை அனுப்பலாமா?'' என்று அடுத்த ரெயில் நிலையத்திடம் கேட்டார். நிலையத் தலைவரோ, அலுவலகத்தில் உலாவியபடிப் புன்னகைத்துக் கூறினார்:

''நாம் கேலி செய்வோம் இவர்களை, பேய்மக்களை... என்ன ஆனாலும் சலிப்பைப் போக்கிக் கொள்ளக் கொஞ்சமாவது நகையாடுவோம்...''

''இது அனுமதிக்கத் தக்கதே!'' என்று தந்திக் கட்டையைக் கடகடத்தவாறு இசைவு தெரிவித்தார் நிக்கலாய் பெத்ரோவிச்.

தத்துவவாதி சொற்செட்டுடன் பேச வேண்டும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

நகையாடும் வாய்ப்பு மிக விரைவில் அவர்களுக்குக் கிட்டியது.

கமோஸவின் உத்தரவுப்படி அரீனு அதிகாரிகளின் அனுமதியுடன் நிலவறையில் பல வகைத் தட்டு முட்டு சாமான்களுக்கு நடுவே தனக்குப் படுக்க இடம் செய்து கொண்டாள். அங்கே ஈரமும் குளிருமாக இருந்தது. முறிந்த நாற்காலிகளும் தொட்டிகளும் பலகைகளும் பலவித ஓட்டை உடைசல்களும் இருட்டில் அச்சுறுத்தும் உருவங்களை மேற்கொண்டன. அவற்றுக்கு நடுவே தனியாக இருந்த போது அரீனுவுக்கு ஒரே பயமாக இருந்ததால் அவள் அனேகமாக உறங்கவில்லை. வைக்கோல் கட்டுகள் மேல் திறந்த விழிகளுடன் படுத்தவாறு த்னக்குத் தெரிந்த எல்லாப் பிரார்த்தனைகளையும் ஓயாமல் வாய்க்குள் சொல்லிக் கொண்டிருந்தாள்.

கமோஸவ் வந்தான், ஒன்றும் பேசாமல் வெகு நேரம் அவளைக் கசக்கி நசுக்கிக் கொண்டிருந்தான், களைத்துப் போனதும் உறங்கி விட்டான். ஆனுல் விரைவிலேயே அரீனு கலவரத்துடன் கிசுகிசுத்து அவனை எழுப்பி விட்டாள்:

''திமபேய் பெத்ரோவிச்! திமபேய் பெத்ரோவிச்!''

''ஊம்?'' என்று தூக்கத்திற்கிடையே கேட்டான் அவன்.

''நம்மைப் பூட்டி விட்டார்கள்...''

அவன் துள்ளி எழுந்து, ''அது எப்படி?'' என்று கேட்டான்.

''வந்து... பூட்டாலே...''

''பொய் சொல்லுகிருய்!'' என்று அவளை அப்பால் தள்ளி, பயமும் கோபமும் பொங்கக் கிசுகிசுத்தான்.

''நீயே பார்த்துக் கொள்'' என்று பணிவுடன் சொன்னுள் அரீனு.

அவன் நின்று வழியில் எதிர்ப்பட்டதை எல்லாம் இடித்துக் கொண்டு கதவருகே போய் அதைத் தள்ளியவன் சற்று நேரம் பேசாதிருந்த பின் ஏக்கத்துடன் கூறினுன்:

''இது படையினனின் வேலை...''

கதவின் மறு புறம் களி பொங்கும் கெக்கலி கேட்டது.

''வெளியே விடு!'' என்று உரத்த குரலில் கேட்டான் கமோஸவ்.

''என்ன?'' படையினனுடைய குரல் முழங்கிற்று.

''வெளியே விடு என்கிறேன்...''

''காலையில் விடுகிறோம்'' என்று சொல்லி விட்டுப் படையினன் அப்பால் நகர்ந்தான்.

''எனக்கு டியூட்டி இருக்கிறதடா, பேய்ப் பயலே!'' என்று கோபமும் கெஞ்சலுமாகக் கத்தினான் கமோஸவ்.

''நான் டியூட்டி பார்க்கிறேன்... உட்கார்ந்திரு!..''

படையினன் போய் விட்டான்.

''அட, நாய்ப் பயலே!'' என்று ஏக்கம் ததும்பக் கிசுகிசுத்தான் பாதை இணைப்பாளன். ''பொறு... என்னை வைத்துப் பூட்ட உன்னால் எப்படியும் முடியாது... தலைவர் இருக்கிறார்... அவரிடம் என்ன சொல்வாய்? எங்கே கமோஸவ் என்று கேட்பாரே ஏ? அப்போது நீதான் அவருக்குப் பதில் சொல்ல வேண்டும்...''

''அட அது, வந்து, தலைவர் தாம் இவனுக்கு உத்தரவு கொடுத்தார்'' என்று புகலின்றி மெதுவாகக் கூறினாள் அரீனா.

''தலைவரா?'' என்று பயத்துடன் திருப்பிக் கேட்டான் கமோஸவ். ''அவருக்கு இது எதற்காம்?'' சற்று நேரம் பேசாதிருந்த பின், ''புளுகுகிறாய்!'' என்று அவளை நோக்கிக் கத்தினான்.

அவள் துயரப் பெருமூச்சால் அவனுக்கு விடை அளித்தாள்.

பாதை இணைப்பாளன் கதவருகே தொட்டி மேல் அமர்ந்து, ''இது என்ன ஆகும்? எனக்கு எப்பேர்ப்பட்ட அவமானம் பார்! எல்லாம் உன்னால் வந்த வினை, அவலட்சணப் பேய்மகளே, எல்லாம் உன்னால் வந்தது... ஊ-ஊ!''

அவளுடைய மூச்சு ஒலி வந்த பக்கம் நோக்கி முட்டியை இறுக்கி அச்சுறுத்தினான். அவளோ, பேசாதிருந்தாள்.

ஈரித்த இருள் அவர்களைச் சூழ்ந்தது. புளித்த முட்டைக்கோசு, பூஞ்சணம் ஆகியவற்றின் நாற்றமும் மூக்கில் அரிப்பு உண்டாக்கிய வேறு ஏதோ சுள்ளென்ற நெடியும் அந்த இருளில் நிறைந்திருந்தன. கதவு இடுக்குகள் வழியே நிலவின் ஒளிக் கீற்றுகள் உள்ளே வந்தன. நிலையத்திலிருந்து சென்ற சரக்கு ரெயில் வண்டியின் தடதடப்பு வெளியே கேட்டது.



''ஏனடீ, பெண் பேயே, என்ன சும்மா இருக்கிறாய்?'' என்று வன்மமும் இகழ்ச்சியும் பீறிடப் பேசத் தொடங்கினான் கமோஸவ். ''இப்போது நான் என்ன செய்வது? செய்வதை எல்லாம் செய்து விட்டு இப்போது மௌனம் சாதிக்கிறாயா? நாம் என்ன செய்வது என்று யோசி, பேய்மகளே! வெட்கத்தை மறைக்க நான் எங்கே போவேன்? அட என் ஆண்டவனே! இந்த மாதிரிப் பெண்பிள்ளையோடு எதற்காக நான் தொடுப்பு வைத்துக் கொண்டேன்!..''

''நான் மன்னிப்பு கேட்கிறேன்'' என்று மெதுவாகச் சொன்னாள் அரீனா.

''அப்புறம்?''

''ஒரு வேளை, மன்னிப்பார்கள்...''

''ஆனால் எனக்கு இதனால் என்ன பயன்? உன்னை மன்னிப்பார்களாக்கும், அப்புறம்? என் அவமானம் அப்படியேதானே இருக்கும், இல்லையா? எல்லோரும் என்னைக் கேலி செய்வார்களா மாட்டார்களா?''

சற்று நேரம் பேசாதிருந்த பின் அவன் அவளை மீண்டும் நிந்திக்கவும் திட்டவும் தலைப்பட்டான். நேரமோ கொடுமையுடன் மெதுவாக ஊர்ந்தது. முடிவில் அந்தப் பெண்பிள்ளை நடுங்கும் குரலில் அவனிடம் வேண்டினாள்:

''என்னை மன்னித்து விடு, திமபேய் பெத்ரோவிச்!''

''கழுவால் உன் மண்டையில் அடித்து மன்னிக்க வேண்டும்!'' என்று உறுமினான் அவன்.

மீண்டும் தொடங்கியது மௌனம்—ஏக்கம் நிறைந்தது, நசுக்குவது, இருளில் சிறைப்பட்ட இருவருக்கு மந்தமான வலி உண்டாக்குவது.

''கடவுளே! சீக்கிரம் வெளிச்சமானாலாவது நன்றாய் இருக்குமே'' என்று துயர் ததும்ப மொழிந்தாள் அரீனா.

''சும்மா கிட... நான் காட்டுகிறேன் உனக்கு வெளிச்சம்!'' என்று அவளை மிரட்டி விட்டுக் கடுமையான வசைகளை அவள் மேல் பொழிந்தான் கமோஸவ். பின்பு நிசப்தமும் மௌனமும் வதைக்கலாயின. வைகறை நெருங்க நெருங்க நேரத்தின் கொடுமை இடையறாது அதிகமாகிக் கொண்டு போயிற்று. ஒவ்வொரு நிமிடமும் இந்த மனிதர்களின் கேலிக்கிடமான நிலைமையைச் சுவைத்தவாறு மறைவதற்கு நேரம் கடத்தியது போல் இருந்தது.

முடிவில் கமோஸவ் உறங்கத் தொடங்கியவன், நிலவறை அருகே ஒலித்த சேவலின் கத்தலைக் கேட்டுக் கண் விழித்தான்.

''இந்தா... சூனியக்காரி! உறங்குகிருயா?'' என்று கம்மிய குரலில் கேட்டான்.

''இல்லை'' என்று சோகப் பெருமூச்சுடன் சொன்னுள் அவள்.

''தூங்கி இருக்கலாமே நீ!'' என்று குத்தலாகக் கூறினுன் பாதை இணைப்பாளன். ''அடி உருப்படாதவளே...''

''திமபேய் பெத்ரோவிச்'', என்று அனேகமாகத் தேம்பலுடன் கூறினுள் அவள்.''என் மேல் கோபப்படாதே! எனக்கு இரங்கு! கர்த்தரான இயேசுவின் பெயரால் வேண்டிக் கொள்கிறேன், கருணை காட்டு! நான் தனிக் கட்டை, தன்னந் தனியள் அல்லவா! நீயும் எனக்கு... என் அன்பே—நீதானே எனக்கு...''

''ஊளையிடாதே—ஆட்கள் நகைக்க இடம் கொடாதே!'' என்று அவளுடைய ஆவேசக் கிசுகிசுப்பைக் கண்டிப்பாக நிறுத்தினுன் கமோஸவ். இந்தக் கிசுகிசுப்பு அவன் மனதை ஓரளவு இளக்கியது. ''கர்த்தர் தண்டித்து விட்டார் என்றுல்... இனிப் பேசாமலிரு...''

ஆக மீண்டும் அவர்கள் அடுத்த ஒவ்வொரு நிமிடத்தையும் மௌனமாக எதிர்பார்க்கலானுர்கள். ஆனுல் அவர்களுக்கு நலம் எதுவும் கொண்டு தராமலே நிமிடங்கள் கழிந்து கொண்டு போயின. முடிவில் சூரிய கிரணங்கள் கதவின் இடுக்குகளில் ஒளி வீசி, தகதகக்கும் நூல்களால் நிலவறை இருளை வகிர்ந்தன. விரைவில் நிலவறை அருகில் காலடி ஓசைகள் கேட்டன. யாரோ கதவின் பக்கம் வந்து நின்று விட்டு அப்பால் போய் விட்டார்கள்.

''வதைக்கிருர்கள் கொலைகாரர்கள்!'' என்று ஆத்திரத்துடன் சொல்லித் துப்பினுன் கமோஸவ். மீண்டும் மௌனம் நிறைந்த, இறுக்கம் உள்ள எதிர்பார்ப்பு.

''ஆண்டவா!.. கருணை கூர்வாய்...'' என்று கிசுகிசுத்தாள் அரீனு.

யாரோ சந்தடி செய்யாமல் நிலவறையின் அருகே வந்தது போல் இருந்தது... பூட்டு கடகடத்தது, தலைவரின் கண்டிப்பான குரல் முழங்கிற்று:

''கமோஸவ்! அரீனுவைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வெளியே வா—ஊம், சீக்கிரம்!..''

''வா இப்படி!'' என்று தணிந்த குரலில் சொன்னுன் கமோஸவ். அரீனு அருகே போய், தலையைக் குனிந்தவாறு அவன் பக்கத்தில் நின்ருள்.

கதவு திறந்தது. முன்னே நின்ருர் நிலேயத் தலேவர். அவர் தலே வணங்கிக் கூறிஞர்:

''முறைப்படித் திருமணம் செய்து கொண்டதற்கு வாழ்த்துகிறேன்! தயை செய்து வாருங்கள்! வாத்தியம் இசைக்கட்டும்!''

கமோஸவ் நிலேப் படியைத் தாண்டியவன் அர்த்தமற்ற கூச்சல் திடீரெனக் கிளம்பியதால் திகைத்து நின்று விட்டான். லூக்காவும் யாகத்காவும் நிக்கலாய் பெத்ரோவிச்சும் கதவுக்கு வெளியே நின்ருர்கள்.

லூக்கா வாளியில் கையால் குத்தியவாறு ஆட்டுக் குரலில் ஏதோ அலறினுன். படையினன் தன் கொம்பு வாத்தியத்தை ஊதினுன். நிக்கலாய் பெத்ரோவிச் காற்றில் கையை வீசி ஆட்டி, கன்னங்களே உப்பி, உதடுகளேக் குழல் போலக் குவித்துக் கொண்டார்:

''ப்பூம்! ப்பூம்! ப்பூம்-ப்பூம்-ப்பூம்!''

வாளி கடகடத்தது, கொம்பு ஊளேயிட்டது, இரைந் தது. மத்வேய் யெகோரவிச் இடுப்பைக் கையால் பிடித்துக் கொண்டு பொங்கிப் பொங்கிச் சிரித்தார். சாம்பல் பூத்த முகமும் நடுங்கும் உதடுகளில் குழப்பப் புன்னகையுமாகத் தம் முன்னே கலங்கி நின்ற கமோஸவைக் கண்டதும் உதவித் தலேவரும் விழுந்து விழுந்து சிரித்தார். அரீனு மார்பு வரை சாய்ந்த தலேயுடன் கமோஸவின் பின்னே கற்சிலே போல அசையாமல் நின்ருள்.

''காதல் மொழி திமபேயிடம்
கோதை அரீனு பகர்ந்தாள்...''

என்று ஏதோ பொருளற்ற அபத்தத்தைப் பாடி, முகத்தை அருவருப்பாகக் கோணிக் கொண்டு கமோஸவுக்குக் கோரணி காட்டினுன் லூக்கா. படையின்ன் கமோஸவின் பக்கம் நகர்ந்து, கொம்பு வாத்தியத்தை அவன் காதருகே வைத்து ஊது ஊதென்று ஊதினுன்.

''நல்லது வாருங்கள்... ஊம்! அவளுக்குக் கைலாகு கொடு!..'' என்று கத்தினார் நிலையத் தலைவர். சிரித்துச் சிரித்து அவருக்கு வயிறு அறுந்து போயிற்று. முகப்பில் உட்கார்ந்திருந்த அவருடைய மனைவி இடமும் வலமுமாக ஆடியவாறு, ''மோத்யா... போதும்... ஐயோ? உயிர் போகிறதே!'' என்று கீச்சிட்டுக் கத்தினாள்.

இன்பச் சந்திப்பினுக்காய்,
துன்பம் எல்லாம் பொறுப்பேன்!''

என்று கமோஸவின் முகத்தோடு தம் முகத்தை அனேகமாகச் சேர்த்தவாறு பாடினார் நிக்கலாய் பெத்ரோவிச்.

கமோஸவ் முன்னே அடி எடுத்து வைத்ததும், ''புது மண மக்களுக்கு வெற்றி கூறுவோம்!'' என்று மத்வேய் யெகோரவிச் ஆணையிட்டார். நால்வரும் ஒரே குரலில் ''உர்ரா'' என்று வெற்றி முழக்கம் செய்தார்கள். படையினன் கட்டைத் தொண்டையில் கர்ஜித்தான்.

அரீனா நிமிர்ந்த தலையும் திறந்த வாயும் உடலோடு பொருந்தத் தொங்கிய கைகளுமாக கமோஸவின் பின்னே நடந்தாள். அவளுடைய விழிகள் மந்தமாக முன்னே நோக்கின. ஆனால் எதையும் அவை கண்டிருப்பது சந்தேகமே.

''மோத்யா, இவர்களை... முத்தம் இட்டுக் கொள்ளச் சொல்லு! ஹா, ஹா, ஹா!''

''புது மணத் தம்பதிகளே, முத்தம் இட்டுக் கொள்ளுங்கள்!'' என்று கத்தினார் நிக்கலாய் பெத்ரோவிச். மத்வேய் யெகோரவிச்சோ, சிரிப்பினால் கால்கள் தரையில் பாவாத காரணத்தால் மரத்தில் சாய்ந்து கொள்ளக் கூடச் செய்தார். இதற்கிடையே வாளி முரசடித்தது, கொம்பு ஊளையிட்டது, முழங்கியது, நையாண்டி செய்தது, லூக்கா நடனம் ஆடிக் கொண்டே பாடினான்:

''பொங்கல் வைத்தாய் அரீனா,
எங்கள் எல்லாரையுமே!''

நிக்கலாய் பெத்ரோவிச் மீண்டும் உதடுகளால் இசைத்தார்:

''ப்பூம்-ப்பூம்-ப்பூம்! த்ரா-த்தா-த்தா! ப்பூம்! ப்பூம்! த்ரா-ரா-ரா!''

கமோஸவ் தங்கிடத்தின் வாயில் வரை சென்று உள்ளே பதுங்கிக் கொண்டான். பைத்தியம் பிடித்த ஆட்களால் சூழப்பட்டு அரீஞ முகப்பு வெளியில் தனியாய் இருந்தாள். அவர்கள் ஆரவாரித்தார்கள், கெக்கலித்தார்கள், அவளுடைய காதுகளில் சீழ்க்கை அடித்தார்கள், களி வெறியினுல் ஆட்கொள்ளப்பட்டு அவளைச் சுற்றிக் கூத்தாடிஞர்கள். அவள் அலங்கோலமாக, முகத்தில் எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல், அழுக்கடைந்த பரிதாபக் கோலத்தில் நகைப்புக்கு இடமாக அவர்கள் முன் நின்ருள்.

''மணமகன் கம்பி நீட்டி விட்டான், ஆனுல்... இவள் இருக்கிருள்'' என்று அரீஞவை மனைவிக்குக் காட்டிக் கத்திய மத்வேய் யெகோரவிச் மீண்டும் விழுந்து விழுந்து சிரித்தார்.

அரீஞ அவர் பக்கம் தலையைத் திருப்பி, தங்கிடத்தைக் கடந்து ஸ்தெப்பிக்குச் சென்ருள். சீழ்க்கையும் கூச்சலும் வெடிச்சிரிப்பும் அவளைத் தொடர்ந்தன.

''போதும்! நிறுத்துங்கள்!'' என்று கத்திஞள் சோபியா இவானவ்ஞ. ''அவளைச் சுதாரித்துக் கொள்ள விடுங்கள்! சமையல் செய்ய வேண்டும்.''

அரீஞ ஸ்தெப்பியில் ரெயில்வே நில எல்லைக்கு அப்பால் அறுவடை செய்த கோதுமை வயல் இருந்த பகுதிக்குச் சென்ருள். சிந்தனையில் ஆழ்ந்தவள் போன்று அவள் மெதுவாக நடந்தாள்.

புது மணமக்களின் நடத்தை சம்பந்தமான பல்வேறு சிறு விவரங்களை ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக் கொண்டார்கள் இந்த வேடிக்கையில் கலந்து கொண்டவர்கள். ''எப்படி, எப்படி?'' என்று அவர்களிடம் மீண்டும் கேட்டார் மத்வேய் யெகோரவிச். எல்லோரும் உரக்கச் சிரித்தார்கள். இங்கும் கூடச் சிறு மூதுரையை மேற்கோள் காட்ட நிக்கலாய் பெத்ரோவிச்சுக்கு நேரமும் இடமும் கிடைத்து விட்டன.

''சிரிப்பது உண்மையில் பாவமில்லை
சிரிப்பதற்குத் தக்கவை குறித்தே!''

என்று சோபியா இவானவ்ஞவிடம் கூறி விட்டு, அறிவுறுத்தும் பாங்கில் ஒரு வாக்கியத்தைச் சேர்த்தார்: ''ஆனுல், அளவின்றிச் சிரிப்பது தீயதாகும்!''

ரெயில் நிலையத்தினர் அன்று நிறையச் சிரித்தார்கள், ஆனால் மோசமாகச் சாப்பிட்டார்கள், ஏனென்றால் அரீனா சமைக்க வரவில்லை, நிலையத் தலைவரின் மனைவியே உணவு தயாரித்தாள். ஆனால் மோசமான சாப்பாடு கூட நல்ல மன நிலையைக் கெடுக்கவில்லை. கமோஸவ் தன் டியூட்டி நேரம்வரை தங்கிடத்திலிருந்து வெளியே வரவில்லை. அவன் வெளியே வந்ததும் நிலையத் தலைவரின் அலுவலகத்துக்கு அழைக்கப் பட்டான். அவன் தன் அழகியை எப்படி ''வசீகரித்தான்'' என்று அங்கே நிக்கலாய் பெத்ரோவிச் அவனிடம் விசாரித் தார். மத்வேய் யெகோரவிச்சும் லூக்காவும் அப்போது பொங்கிப் பொங்கிச் சிரித்தார்கள்.

''தனித்தன்மைப்படி பார்த்தால் இது முதலிடம் பெறத் தக்க பாவ வீழ்ச்சி'' என்று நிலையத் தலைவரிடம் சொன்னார் நிக்கலாய் பெத்ரோவிச்.

''பாவ வீழ்ச்சிதான் இது'' என்று வருத்தப் புன்னகை யுடன் சொன்னான் நிதானமான பாதை இணைப்பாளான். அரீனாவைப் பற்றிக் கிண்டலும் கேலியுமாக விவரிக்கத் தன்னால்முடிந்தால் தான் அவ்வளவு கேலிக்கு ஆளாக வேண்டி யிராது என்று அவன் புரிந்து கொண்டான். ஆகவே அவன் சொன்னான்:

''முதலில் அவள் எனக்கு ஓயாமல் கண் சாடை காட்டி னாள்.''

''கண் சாடை காட்டினாளா?! ஹா-ஹா-ஹா! நிக்கலாய் பெத்ரோவிச், கொஞ்சம் எண்ணிப் பாருங்களேன், இந்த மாதிரி மூஞ்சியை வைத்துக் கொண்டு அவள் இவனுக்கு எப்படிக் கண் சாடை செய்திருப்பாள் என்று! பிரமாதம்!''

''அதாவது, அவள் கண் சாடை செய்தாள். நான் பார்த் தேன், குறும்பு பண்ணுகிறாள் என்று நினைத்துக் கொண் டேன். பிற்பாடு, வேண்டுமானால் சட்டை தைத்துத் தரு கிறேன் என்றாள்.''

''ஆனால் 'வலிமை இருந்தது தையலில் அல்ல...' '' என்று கூறினார் நிக்கலாய் பெத்ரோவிச். பின்பு தலைவருக்கு விளக் கினார்: ''இது நிக்ராஸவின் **பகட்டானவள் ஆனால் வறியவள்** என்னும் கவிதையின் வரி... மேலே சொல்லு, திமபேய்!''

திமபேய் மேலே சொல்லிக் கொண்டு போனான். முதலில் சிரமப்பட்டான், ஆனால் வர வரப் பொய்யினால் கிளர்ச்சி

அடைந்தான், ஏனெனில் பொய் தனக்குப் பயன் தந்தது எனக் கண்டு கொண்டான்.

ஆனால் எவளைப் பற்றி அவன் சொல்லிக் கொண்டு போனானே, அவள் அந்த நேரத்தில் ஸ்தெப்பியில் கிடந்தாள். அவள் கோதுமைக் கடலில் ஆழத்திற்குப் போய், பொத்தென்று தரையில் விழுந்து வெகு நேரம் அசையாமல் தரையில் கிடந்தாள். வெயில் தாக்கியதால் முதுகு சூடேறி, பொசுக்கும் வெயிலை மேற்கொண்டு தாங்க முடியாமல் போனதும், மார்பு மேலாகத் திரும்பிப்படுத்து, அளவு கடந்து தெளிவாய் இருந்த வானத்தையும் அதன் ஆழத்தில் மட்டுமீறிப் பிரகாசமாக இருந்த சூரியனையும் காணாதிருக்கும் பொருட்டுக் கைகளால் கண்களைப் பொத்திக் கொண்டாள்.

அவமானத்தால் நசுக்குண்ட அந்த மாதைச் சுற்றிலும் கோதுமைக் கதிர்கள் வறட்சியாகச் சரசரத்தன. எண்ணற்ற வெட்டுக் கிளிகள் சலிப்பின்றி, கவலையுடன் இரைந்தன. வெப்பமாய் இருந்தது. பிரார்த்தனைகளை நினைவுபடுத்திக் கொள்ள முயன்ற அரீனாவுக்கு அவை நினைவு வரவில்லை; சிரிக்கும் முகங்கள் அவள் கண்களுக்கு முன் சுழன்றன. லூக்காவின் ஆட்டுக் குரல் காதுகளில் ஒலித்தது, கொம்பின் ஊளையும் கோலாகலச் சிரிப்பும் முழங்கின. இந்தக் காரணத்தாலோ வெக்கையினாலோ மார்பில் இறுக்கம் ஏற்பட்டது. சட்டைப் பொத்தான்களைக் கழற்றி உடலை வெயிலில் காட்டினாள். இதனால் மூச்சு விடுவது எளிதாகும் என்று எதிர்பார்த்தாள். வெயில் அவளது தோலைப் பொசுக்கிய அதே நேரத்தில் அவளுடைய மார்புக்கு உள்ளிருந்து நெஞ்செரிவு போன்ற உணர்ச்சி குடைந்தது. ஆழ்ந்த பெருமூச்சு விட்டு, அவள் எப்போதாவது கிசுகிசுத்தாள்:

''ஆண்டவா!.. கருணை காட்டு...''

அவளுக்கு மறுமொழியாக ஒலித்தன கதிர்களின் சரசரப்பும் வெட்டுக் கிளிகளின் இரைச்சலும். கோதுமைப் பயிர் அலைகளுக்கு மேலே தலையை உயர்த்தி அவற்றின் பொன்னிற ஒளிர்வையும் நிலையத்திலிருந்து தொலைவில், பள்ளத்தில் துருத்திக் கொண்டிருந்த இறைவையின் கறுப்புக் குழாயையும் நிலையக் கட்டிடங்களின் கூரைகளையும் அவள் கண்டாள். நீல வானக் கும்மட்டத்தால் மூடப்பட்ட எல்லையற்ற மஞ்சள் சமவெளியில் வேறு எதுவும் இல்லை. தான் உலகில் தனியள்

என்றும் அதன் சரியான மையத்தில் கிடப்பதாகவும் தனது தனிமையின் சுமையைப் பகிர்ந்து கொள்ள ஒருவரும் ஒரு போதும் வரப் போவதில்லை என்றும் அவளுக்குத் தோன்றியது—ஒருவரும், ஒருபோதும்...

மாலைத் தறுவாயில் அவள் காதில் பட்டது கூச்சல்:

''அரீனு-ஆ! அரீஷ்கா, சனி-யன்!..''

ஒன்று லூக்காவின் குரல். மற்றது படையினனுடையது. மூன்றாவது குரலைக் கேட்க அவளுக்கு ஆசை உண்டாயிற்று. ஆனால் அவன் அவளை அழைக்கவில்லை. அப்போது அவள் கண்ணீர் ஆறாகப் பெருக விம்மி அழத் தொடங்கினாள். அவளுடைய அம்மைத் தழும்புகளிட்ட கன்னங்கள் வழியே விரைந்து பெருகிய கண்ணீர் அவளது மார்பில் வழிந்தது. தன்னை மேலும் மேலும் கடுமையாக வதைத்த நெஞ்செரிவைத் தணிக்கும் பொருட்டு, திறந்த மார்பகங்களை உலர்ந்த வெப்பத் தரையில் அழுது கொண்டே தேய்த்தாள். கண்ணீர் பெருக்கியவள், யாரேனும் முனகல்களைக் கேட்டு அழுவதைத் தடை செய்து விடுவார்களோ என்று அஞ்சுபவள் போல அவற்றை அடக்கிக் கொண்டு மௌனமானாள்.

பின்பு, இரவு வந்ததும் எழுந்து நிலையத்துக்கு மெதுவாக நடந்தாள்.

நிலையக் கட்டிடங்களை அடைந்ததும், நிலவறைச் சுவற்றின் மேல் சாய்ந்து கொண்டு ஸ்தெப்பியைப் பார்த்தவாறு நெடுநேரம் நின்றாள். சரக்கு ரெயில் வண்டிகள் வந்து வந்து போயின. தன்னுடைய வெட்கக் கேட்டைப் பற்றிப் படையினன் நடத்துநர்களுக்குச் சொன்னதையும் அவர்கள் சிரித்ததையும் அவள் கேட்டாள். வயலெலிகள் சற்றே காதில் படும்படிச் சீழ்க்கை அடித்துக் கொண்டிருந்த வெற்று ஸ்தெப்பியில் நெடுந் தூரம் பரவியது அந்தச் சிரிப்பு.

''ஆண்டவா! கருணை காட்டு... ''என்று சுவரோடு சுவராக ஒட்டியவாறு பெருமூச்செறிந்தாள் அந்த மாது. ஆனால் அவளுடைய இதயத்தை நசுக்கிக் கொண்டிருந்த சுமையை இந்தப் பெருமூச்சுகள் குறைக்கவில்லை.

விடியும் தறுவாயில் அவள் சாக்கிரதையாக நிலைய முகட்டறையை அடைந்து தான் துவைத்த துணிகளைக் காயப்போடும் கயிற்றால் சுருக்கு தயாரித்து, தூக்குப் போட்டுக் கொண்டாள்.

இரண்டு நாட்கள் சென்றதும் நாற்றத்தைக் கொண்டு அரீனுவின் பிணம் கண்டுபிடிக்கப்பட்டது. முதலில் எல்லோரும் பயந்து போனுர்கள். இந்த விவகாரத்தில் குற்றவாளி யார் என்று பின்னர் விவாதித்தார்கள். குற்றம் செய்தவன் கமோஸவ் என்று நிக்கலாய் பெத்ரோவிச் மறுக்க முடியாதபடிச் சான்றுகள் காட்டினுர். அப்போது நிலேயத் தலேவர் பாதை இணேப்பாளனின் மூஞ்சியில் குத்தி, பேசாதிருக்கும்படிப் பயமுறுத்திக் கட்டளே இட்டார்.

அதிகாரிகள் வந்து விசாரணே நடத்தினுர்கள். அரீனு மனச் சோர்வு நோயால் பீடிக்கப்பட்டிருந்ததாகத் தெரிய வந்தது... இருப்புப் பாதை மேற்பார்வையாளரின் வேலேயாட்களிடம் பிணத்தை ஸ்தெப்பிக்குக் கொண்டுபோய் அங்கே புதைக்கும் வேலே ஒப்படைக்கப்பட்டது. இந்த வேலே நிறைவேற்றப்பட்டதும் நிலேயத்தில் ஒழுங்கும் அமைதியும் மீண்டும் நிலவலுற்றன.

நிலேயவாசிகள் சலிப்பாலும் ஆட்கள் இன்மையாலும் வேலே இல்லாததாலும் வெக்கையாலும் மீண்டும் சோர்வடைந்தவர்களாக, தங்களேக் கடந்து சென்று ரெயில் வண்டிகளேப் பொறுமையுடன் பார்த்தவாறு ஒவ்வொரு நாளும் நான்கு நிமிடங்கள் வாழத் தொடங்கினுர்கள்.

...குளிர் காலத்தில், வெண்பனியையும் காட்டுத்தனமான ஒலிகளேயும் சின்னஞ் சிறு நிலேயத்தின் மீது பொழிந்தவாறு ஊளேயும் முழக்கமுமாகப் பனிப் புயல்கள் ஸ்தெப்பியில் வீசும் போது நிலேயவாசிகளின் வாழ்க்கை இன்னும் அதிகச் சலிப்பு உள்ளது ஆகி விடுகிறது.

இருபத்தறுவரும் ஒருத்தியும்

காவியம்

நாங்கள் இருபத்தாறு பெயர்—ஈர நிலவறையில் அடைபட்டிருந்த இருபத்தாறு உயிருள்ள இயந்திரங்கள்—இருந்தோம். இங்கே நாங்கள் எண்வடிவ பிஸ்கோத்துகளும் வளைய பிஸ்கோத்துகளும் செய்வதற்காகக் காலை முதல் இரவு வரை மாவு பிசைந்த வண்ணமாக இருந்தோம். எங்கள் நிலவறையின் சன்னல்கள் அவற்றுக்கு எதிரே தோண்டிச் செங்கல்கள் பாவியிருந்த ஒரு கிடங்கில் பாதி ஆழ்ந்திருந்தன. ஈரம் காரணமாக இந்தச் செங்கல்கள் பச்சை ஆகி இருந்தன. சன்னல் சட்டங்கள் நெருக்கமான இரும்பு வலையால் தடுக்கப்பட்டிருந்தன. மாவுத் துகள்கள் படிந்திருந்த கண்ணாடிகளின் ஊடாகச் சூரிய வெளிச்சம் எங்கள் அறைக்குள் புக முடியவில்லை. ஏழை எளியவர்களுக்கும் வேலை இல்லாமையால் பட்டினி கிடந்த எங்கள் தோழர்களுக்கும் நாங்கள் தன்னுடைய ரொட்டியின் துண்டைக் கொடுத்து விடக் கூடாது என்பதற்காகவே எங்கள் எசமானன் சன்னல்களை இரும்பு வலைகளால் அடைத்திருந்தான். எங்கள் எசமானன் எங்களை மோசக்காரர்கள் என்று அழைத்தான். சாப்பிடுவதற்கு இறைச்சியின் இடத்தில் கெட்டுப் போய்க் கவிச்சடித்த உள்ளுறுப்புக்களை எங்களுக்குக் கொடுத்தான்...

புகைக் கரி படிந்து சிலந்தி வலை போர்த்து, நசுக்குவது போலத் தாழ்ந்திருந்த விட்டம் கொண்ட அந்தக் கற் பேழையில் வசிப்பது எங்களுக்கு இறுக்கமாகவும் நெருக்கமாகவும் இருந்தது. அழுக்கும் பூஞ்சணமும் புள்ளிக் கோலங்கள் தீட்டியிருந்த பருத்த சுவர்களுக்குள் அடைபட்டிருப்பது எங்களுக்குக் கடினமாகவும் அருவருப்பாகவும் இருந்தது... நாங்கள் சரியாக உறங்க நேரம் இன்றிக் காலை ஐந்து மணிக்குப்

படுக்கை விட்டு எழுந்தோம், மூளைக் கலக்கமும் எதிலும் அசட்டையும் கொண்டவர்களாக, ஆறு மணிக்குப் பிஸ் கோத்துகள் தயாரிக்கத் தொடங்கினோம். இதற்கு வேண்டிய மாவை நாங்கள் உறங்கிக் கொண்டிருந்த போதே எங்கள் தோழர்கள் பிசைந்து வைத்திருந்தார்கள். நாள் முழுதும், காலை முதல் இரவு பத்து மணி வரை, எங்களில் சிலர் விகுவுள்ள மாவை முறுக்கிப் பிஸ்கோத்துகள் செய்வதும் உடல்கள் மரத்துப் போகாதிருப்பதற்காக அசைந்தாடுவதுமாக மேசை அருகே உட்கார்ந்திருந்தோம், மற்றவர்கள் அந்த நேரத்தில் மாவைத் தண்ணீர் விட்டுப் பிசைந்து கொண்டிருந்தார்கள். பிஸ்கோத்துகள் வெந்து கொண்டிருந்த கலத்தில் கொதி நீர் நாள் முழுவதும் சிந்தனையில் ஆழ்ந்தது போன்று துயரத்துடன் தளபளத்துக் கொண்டிருந்தது. பிஸ் கோத்து சுடுபவனின் வாரு கரண்டி வழுக்கலான வெந்த மாவுத் துண்டுகளை அடுப்படிச் சுடு செங்கல்கள் மேல் பரப்பியவாறு சீற்றத்துடன் விரைவாக உரசிச் சென்றது. காலை முதல் மாலை வரையில் அடுப்பின் ஒரு புறத்தில் விறகுகள் எரிந்து கொண்டிருந்தன. தழல்களின் சிவப்பு ஒளிர்வு பிஸ் கோத்துத் தொழிலகத்தின் சுவர் மேல் எங்களை மௌனமாகக் கேலி செய்து சிரிப்பது போல் துடிதுடித்துக் கொண்டிருந்தது. பிரமாண்டமான அடுப்பு கதைகளில் வரும் விகிருதியின் அவலட்சணமான தலை போன்று இருந்தது. அது தரைக்கு அடியிலிருந்து மேலே துருத்தியது போலவும், பிரகாசமான நெருப்பால் நிறைந்த அகன்ற வாயைத் திறந்து எங்கள் மேல் வெப்ப மூச்சை விட்டது போலவும், வாய்க்கு மேலே கறுப்புக் குழிவுகளை நிகர்த்திருந்த காற்றுப் போக்கிகளால் எங்களுடைய முடிவற்ற வேலையைப் பார்வையிட்டது போலவும் தோன்றியது. இந்த இரண்டு ஆழக் குழிவுகளும் கண்கள் போன்று—விகிருதியின் இரக்கம் அற்றவையும் உணர்ச்சி வேகம் இல்லாதவையுமான விழிகள் போன்று—இருந்தன. அடிமைகளைப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போனவை போல எப்போதும் ஒரே மாதிரியான இருண்ட பார்வையுடன் அவை நோக்கின. அவர்களிடம் மனிதத் தன்மையுள்ள எதையும் எதிர்பார்க்காமல் விவேகத்துக்கு இயல்பான ஆழ்ந்த இகழ்ச்சியுடன் அவர்களைப் புறக்கணித்தன.

மாவுத் துகள்களிலும் வெளியிலிருந்து எங்கள் கால்

களால் உள்ளே கொண்டுவரப்பட்ட சேற்றிலும் நாற்ற மடித்த அடர்ந்த புழுக்கத்திலும் நாங்கள் நாள் தோறும் பிசைந்த மாவை முறுக்கி, எங்கள் வியர்வையால் நனைத்த வாறு பிஸ்கோத்துகள் தயாரித்தோம். எங்கள் வேலையைக் கடுமையான வெறுப்புடன் நாங்கள் அருவருத்தோம். எங்கள் கைகளால் தயாரிக்கப்பட்டதை நாங்கள் ஒரு போதும் தின்ன வில்லை. பிஸ்கோத்துகளை விட ரை ரொட்டியை மேலாக மதித்தோம். ஒருவருக்கு ஒருவர் எதிராக—ஒன்பது பேருக்கு எதிரே ஒன்பது பேராக—நீண்ட மேஜையின் இரு புறமும் உட்கார்ந்து கைகளையும் விரல்களையும் மணிக் கணக்காக இயந்திர கதியில் தொடர்ந்து அசைத்துக் கொண்டிருந் தோம். வேலைக்கு முற்றிலும் பழகி விட்டபடியால் எங்கள் இயக்கங்களை நாங்கள் கவனிக்கவே இல்லை. நாங்கள் ஒரு வரை ஒருவர் கூர்ந்து பார்வையிட்டு முடித்து விட்டதால் எங்களில் ஒவ்வொருவனும் தோழர்களின் முகங்களில் இருந்த எல்லாச் சுருக்கங்களையும் அறிந்திருந்தான். மற்றவர்களுடன் பேசுவதற்கு எங்களிடம் ஒரு விஷயமும் இருக்கவில்லை. நாங் கள் இதற்குப் பழகி விட்டோம், எப்போதும் மௌனமாய் இருந்தோம், திட்டிக் கொள்ளாவிட்டால்—ஏனெனில் ஒரு வனை, சிறப்பாகக் கூட்டாளியை, திட்டுவதற்கு ஏதாவது காரணம் எப்போதும் கிடைத்து விடும். ஆனால் நாங்கள் திட்டிக் கொண்டதும் அரிதாகத்தான்—ஒருவன் அரை உயிராக இருந்தால், ஒருவன் உருவச் சிலை போல் இருந்தால், அவனுடைய உணர்ச்சிகள் எல்லாம் உழைப்புச் சுமையால் நசுக்கப்பட்டிருந்தால், அவன் எந்த வகையில் குற்றம் செய்யமுடியும்? ஆனால் சொல்ல வேண்டியவற்றை எல்லாம் சொல்லித் தீர்த்து விட்ட, மேற்கொண்டு சொல்ல எதுவும் இல்லாத மனிதர்களுக்குத் தான் மௌனம் பயங்கரமானது, துன்பம் தருவது. தங்கள் பேச்சுக்களை இன்னும் தொடங்காத வர்களுக்கோ, பேசாதிருப்பது இயல்பானது, எளியது... சில வேளைகளில் நாங்கள் பாடினோம். எங்கள் பாட்டு இந்த மாதிரித் தொடங்கியது: வேலையின் நடுவில் ஒருவன் களைத்த குதிரையின் அடர்ந்த பெருமூச்சு போன்று பெருமூச்சு விட்டு, பாடுபவனின் உள்ளத் துயரத்தை எப்போதும் குறைக்கும், முறையீடும் பரிவும் ததும்பும் மெட்டு உள்ள, நீண்டு ஒலிக்கும் பாட்டுக்களில் ஒன்றைப் பாடத் தொடங்கினான். எங்களில்

ஒருவன் பாடினன், நாங்கள் தொடக்கத்தில் அவனுடைய தனித்த பாட்டை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தோம். சாம்பல் நிற வானம் காரீயக் கூரை போன்று நிலத்துக்கு மேலே கவிந்திருக்கும் ஈரித்த இலையுதிர் கால இரவில் ஸ்தெப்பி வெளியில் அணைந்து அவிந்து போகும் நெகிடி நெருப்புப் போல இந்தப் பாட்டு நிலவறையின் கனத்த விட்டத்துக்கு அடியில் அணைந்து அவிந்து போயிற்று. பின்பு பாடியவனோடு இன்னொருவன் சேர்ந்து கொண்டான். அப்போது எங்கள் நெருக்கமான கிடங்கின் புழுக்கத்தில் இரண்டு குரல்கள் மெதுவாகவும் ஏக்கத்துடனும் நீந்தலாயின. திடீரென்று சில குரல்கள் ஒரே நேரத்தில் பாட்டில் கலந்து கொண்டன. பாட்டு அலை போல் பொங்கி, மேலும் மேலும் வலுவாகி, உரத்து, எங்கள் கற்சிறையின் கனத்த ஈரச் சுவர்களை நாற்புறமும் விலக்குவது போல ஒலித்தது...

இருபத்தாறு பெயரும் சேர்ந்து பாடினார்கள். வெகு காலமாக இணைந்து பாடிப் பழகிவிட்ட உரத்த குரல்கள் பிஸ்கோத்துத் தொழிலகத்தை நிறைத்தன. பாட்டிற்கு அதில் இடம் பற்றவில்லை: அது சுவர்களின் கற்களில் மோதியது, முனகியது, அழுதது, கூச்சம் உண்டாக்கும் மெல்லிய வலியால் இதயத்தைக் கிளர்ச்சி கொள்ளச் செய்தது, அது பழைய புண்களைக் கிளறி விட்டது, ஏக்கத்தைத் தூண்டியது... பாடகர்கள் ஆழ்ந்த துயரப் பெருமூச்சுகள் விட்டார்கள். ஒருவன் எதிர்பாரா விதமாகப் பாட்டை நடுவில் நிறுத்தி, தோழர்கள் எப்படிப் பாடுகிறார்கள் என்று நீண்ட நேரம் கேட்டுக் கொண்டிருந்த பின் பொதுப் பாட்டு அலையில் தன் குரலை மீண்டும் சேர்த்தான். இன்னொருவன் ''ஹா!'' என்று ஏக்கத்துடன் கத்திவிட்டு, கண்களை மூடிக் கொண்டு பாடினன். ஒலிகளின் கெட்டியான அகன்ற அலை எங்கோ தொலைவில் செல்லும், பளிச்சிடும் வெயிலால் ஒளியூட்டப் பெற்ற பாதையாக—அகன்ற பாதையாக—அவனுக்குத் தோற்றம் அளித்தது போலும். தான் அதில் நடப்பதாக அவன் எண்ணிக் கொண்டான் போலும்...

அடுப்பில் தழல் இடைவிடாமல் நடுங்கிக் கொண்டிருந்தது, பிஸ்கோத்து சுடுபவனின் வாருகரண்டி அடுப்படிச் செங்கலில் இடைவிடாமல் உரசிக் கொண்டிருந்தது, கொதிகலத்தில் நீர் தளபளத்துக் கொண்டிருந்தது, சுவற்றின்

மேல் நெருப்பின் ஒளிர்வு சத்தமின்றி நகையாடியவாறு முன் போன்றே இடையறுமல் துடித்துக் கொண்டிருந்தது... நாங் களோ, எங்களுடைய தெளிவற்ற துயரத்தை, வெயிலைப் பறி கொடுத்து விட்ட உயிருள்ள மனிதர்களின் தாங்க முடி யாத ஏக்கத்தை, அடிமைகளின் ஏக்கத்தை, மற்றவர்களின் சொற்களால் பாடி வெளியிட்டுக் கொண்டிருந்தோம். பெரிய கல் வீட்டின் நிலவறையில் இவ்வாறு வசித்து வந்தோம் நாங்கள், இருபத்தறுவர். அந்த வீட்டின் மூன்று மாடிகளும் நேரே எங்கள் தோள்கள் மீது கட்டப்பட்டிருந்தது போலத் துயரச் சுமை எங்கள் வாழ்க்கையை நசுக்கிக் கொண்டிருந் தது...

ஆனுல், பாட்டுக்கள் தவிர, நல்லதான ஒன்று, எங்கள் அன்புக்கு உரியதும் ஒருவேளை சூரியனுக்கு மாற்றுக எங்களுக்குப் பயன்பட்டதுமான ஒன்று இருந்தது. எங்கள் வீட்டின் முதல் மாடியில் சரிகைத் தையல் கடை இருந்தது. அதில் பல மங்கையர் தொழிலாளிகளாக வேலை செய்து வந்தார்கள். அவர்களுக்கு இடையே தானியா என்னும் பதினறு வயது வேலைக்காரப் பெண்ணும் வசித்து வந்தாள். நடையிலிருந்து எங்கள் தொழிலகத்திற்கு வருவதற்கான கதவில் அமைந்த சிறு சன்னலின் கண்ணுடியோடு ஒவ்வொரு நாள் காலையிலும் ஒட்டிக் கொண்டது மகிழ் பொங்கும் இள நீல விழிகள் மிளிர்ந்த சிறு ரோஜா வதனம். அன்பு ததும்பும் குரல் எங்களை நோக்கிக் கணீரெனக் கூவியது:

''கைதிகளே! பிஸ்கோத்துகள் தாருங்கள்!''

நாங்கள் எல்லோரும் இந்தத் தெளிவான குரல் வந்த பக்கம் திரும்பி, எங்களை நோக்கி இனிமையாக முறுவலித்த தூய கன்னி முகத்தை மகிழ்ச்சியும் நல்லியல்பும் தோன்றப் பார்த்தோம். சன்னல் கண்ணுடியில் சப்பையாக நசுங்கிய மூக்கையும் புன்னகையில் மலர்ந்த ரோஜா இதழ்களின் அடியில் பளிச்சிட்ட சிறு வெண் பற்களையும் காண எங்களுக்கு இன்பமாக இருந்தது. அவளுக்குக் கதவைத் திறந்து விடு வதற்காக ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு பாய்ந்தோம். இதோ அவள்—குதூகலமும் இனிமையுமே வடிவாக—தன் முன்றுனையை விரித்தவாறு எங்கள் அறைக்குள் வந்து

தலையைச் சற்றே பக்க வாட்டில் சாய்ந்து எங்கள் முன்னே நின்றாள். நின்று இடை விடாமல் புன்னகை செய்து கொண்டிருந்தாள். பழுப்பு நிறக் கேசம் பருமனை நீண்ட பின்னலாக அவள் தோள் வழியாகத் தொங்கி அவளுடைய மார்பின் மேல் கிடந்தது. வாயில் நிலை எங்கள் தரைக்கு நான்கு படிகள் உயரத்தில் இருந்தது, எனவே, நாங்கள், அழுக்கடைந்து, ஏக்கம் பிடித்து, அவலட்சணமாய் இருந்த மனிதர்கள், அவள் மீது கீழிருந்து மேலே பார்வை செலுத்தினோம், தலையை மேலே நிமிர்த்தி அவளைப் பார்த்துக் காலை வாழ்த்து கூறினோம், எவையேனும் தனிப்பட்ட சொற்களை அவளிடம் சொன்னோம்—அவை அவளுக்காக மட்டுமே எங்களிடம் இருந்தன. அவளோடு உரையாடிய போது எங்கள் குரல்கள் அதிக மென்மை அடைந்தன, கேலிகள் அதிக எளியவை ஆயின. அவள் விஷயத்தில் எங்களிடம் எல்லாம் தனிப்பட்டவையாக இருந்தன. பிஸ்கோத்து சுடுபவன் எல்லாவற்றையும் விட நன்றாக வறுபட்டுச் சிவந்த பிஸ்கோத்துகளை அடுப்பிலிருந்து வாருகரண்டியால் எடுத்துத் தானியாவின் முன்றானையில் சாமர்த்தியமாக வீசிப் போட்டான்.

''இந்தா, எசமான் கண்ணில் பட்டு விடாதே!'' என்று நாங்கள் அவளை எச்சரித்தோம். அவள் தந்திரமாகச் சிரித்து எங்களைப் பார்த்துக் குதூகலம் பொங்கக் கத்தினாள்:

''விடை கொடுங்கள், கைதிகளே!'' பின்பு சுண்டெலி போல விர்ட்டென்று மறைந்தாள்.

இவ்வளவுதான்... ஆனால் அவள் போன பிறகு வெகு நேரம் நாங்கள் அவளைப் பற்றி ஒருவரோடு ஒருவர் இன்பமாகப் பேசிக் கொண்டிருந்தோம். தலைக்கு நாளும் அதற்கு முன்பும் பேசியவற்றையே இப்போதும் பேசினோம், ஏனென்றால் அவளும் நாங்களும் எங்களைச் சுற்றி இருந்தவையும் தலைக்கு நாளும் அதற்கு முன்பும் எப்படி இருந்தோமோ அப்படியே இப்போதும் இருந்தோம்... மனிதன் வாழ்கிறான், அவனைச் சுற்றிலும் எதுவும் மாறுவதில்லை என்றால் அது மிகவும் கடினமான, துன்பகரமான வாழ்க்கை. இதனால் அவனுடைய உள்ளம் மடிந்து விடவில்லை என்றால், அவன் எவ்வளவு நீண்ட காலம் வாழ்கிறானோ, சுற்றும் உள்ளவற்றின் அசையாமை அவனுக்கு அவ்வளவே அதிகத் துன்பம் தந்து கொண்டிருக்கும்... பெண்களைப்பற்றி நாங்கள் வழக்கமாக எப்படிப்

பேசினோம் என்றால், எங்களுடைய முரட்டுத்தனமான, வெட்கமற்ற பேச்சைக் கேட்கச் சில வேளைகளில் எங்களுக்கே அருவருப்பு உண்டாயிற்று. இது புரியக் கூடியதே, ஏனென்றால் எந்தப் பெண்களை நாங்கள் அறிந்திருந்தோமோ அவர்கள் ஒரு வேளை வேறு வகையான பேச்சுக்கு ஏற்றவர்கள் அல்ல போலும். ஆனால் தானியாவைப் பற்றி நாங்கள் ஒரு போதும் மோசமாகப் பேசவில்லை. எங்களில் ஒருவனும் அவளைக் கையால் தொடுவதற்கு ஒரு போதும் துணியவில்லை. அது மட்டும் அல்ல, வரம்பு கடந்த கேலிப் பேச்சைக் கூட எங்களிடமிருந்து அவள் ஒரு போதும் கேட்கவில்லை. அவள் எங்களோடு நீண்ட நேரம் தங்கி இருக்காதது இதற்குக் காரணமாய் இருக்கலாம்: வானிலிருந்து விழும் தாரகை போன்று அவள் எங்கள் கண்களுக்கு முன் மினுமினுத்து விட்டு மறைந்தாள். அல்லது, அவள் சிறியவளாகவும் மிக அழகியாகவும் இருந்தது இதற்குக் காரணம் போலும், ஏனெனில் அழகியது எதுவும் முரடர்களிடம் கூடத் தன் பால் மரியாதையைத் தூண்டி விட்டது. இன்னொரு விஷயம் என்ன என்றால், காவற் கைதிகளது போன்ற உழைப்பு எங்களை உணர்வு மந்தித்த காயடித்த எருதுகள் ஆக்கி விட்டாலும் நாங்கள் மனிதர்களாகவே இருந்தோம். வழிபடுவதற்கு உரிய ஏதேனும் ஒன்று இல்லாமல் வாழ எல்லோரையும் போலவே எங்களாலும் முடியவில்லை. அவளைக் காட்டிலும் மேலானவர்கள் எவரும் எங்களுக்கு இல்லை. நிலவறையில் வசித்த எங்கள் மீது வேறு யாரும் கவனம் செலுத்தவில்லை—வீட்டில் நிறையப் பெயர் வசித்து வந்தாலும் ஒருவரும் எங்களைப் பொருட்படுத்தவில்லை. முடிவாக—ஒரு வேளை முக்கியமானது இது தான் போலும்—நாங்கள் எல்லோரும் அவளை எங்களுக்கு உரியவளாகக் கருதினோம், எங்கள் பிஸ்கோத்துகளாலேயே உயிர் வாழ்ந்து வரும் ஒருத்தியாக எண்ணினோம். சுடான பிஸ்கோத்துகளை அவளுக்குக் கொடுப்பதை எங்கள் கடமையாக மதித்தோம். வழிபடு தெய்வத்துக்கு இடும் அன்றாடப் படையலாக இது எங்களுக்கு விளங்கியது. இது அனேகமாகப் புனிதச் சடங்கு ஆகி விட்டது, எங்களை அவளுடன் நாளுக்கு நாள் அதிகமாக இணைத்தது. பிஸ்கோத்துகள் தவிர, நாங்கள் தானியாவுக்கு நிறைய யோசனைகளும் கூறி வந்தோம்—அதிகக் கதகதப்பாக உடை அணியும்படியும், படிக்கட்டில்

விரைவாக ஓடாதிருக்கும்படியும், கனத்த விறகுக் கட்டு களைச் சுமக்காதிருக்கும்படியும். அவள் எங்கள் யோசனை களைப் புன்னகையுடன் கேட்டாள், சிரித்துக் கொண்டே அவற்றுக்குப் பதில் சொன்னாள், ஆனால் எங்கள் சொற்படி ஒரு போதும் நடக்கவில்லை. எனினும் இதற்காக நாங்கள் கோபிக்கவில்லை: நாங்கள் அவள் விஷயத்தில் அக்கறை எடுத்துக் கொள்கிறோம் என்று காட்டுவது தான் எங்களுக்கு வேண்டி இருந்தது.

அவள் எங்களுக்கு அடிக்கடி வெவ்வேறு விதமான வேண்டுகோள்கள் விடுத்தாள். உதாரணமாக, பண்ட அறை யின் கனத்த கதவைத் திறக்கும்படியும் விறகு பிளந்து தரும் படியும் கேட்டாள். நாங்கள் மகிழ்ச்சியுடனும், ஏதோ ஒரு வகைக் கர்வத்துடனும்கூட அவளுக்கு இவற்றையும் அவள் கேட்ட மற்ற எல்லாக் காரியங்களையும் செய்து கொடுத் தோம்.

ஆனால் எங்களில் ஒருவன் தன் ஒரே சட்டையைச் செப்பனிட்டுத் தரும்படி அவளிடம் கேட்ட போது அவள் இகழ்ச்சியுடன் செருமினாள்.

''இதுதான் குறைச்சல்! கட்டாயம் தைத்துத் தரு கிறேன், வேறு வேலை என்ன?'' என்று நொடித்தாள்.

கேட்ட அப்பாவியை நாங்கள் நிரம்பக் கேலி செய் தோம். நாங்கள் தானியாவிடம் அப்புறம் ஒருபோதும் எது வும் கேட்கவில்லை. அவள் மேல் நாங்கள் அன்பு கொண்டிருந் தோம் என்பதிலேயே எல்லாம் அடங்கி விட்டது. மனிதன் தன் அன்பை யார் மீதாவது செலுத்த எப்போதும் விரும்பு கிறான். ஆனால் இந்த அன்பினால் சில வேளைகளில் அவன் நசுக்கு கிறான், சில வேளைகளில் கறைப்படுத்துகிறான். தனது அன் பினால் அவன் மற்றவனுடைய வாழ்க்கையை நஞ்சாக்கலாம், ஏனென்றால் அன்பு செய்கையில் அன்புக்கு உரியதை அவன் மதிப்பதில்லை. எங்களுக்கு நேசிக்க வேறு ஒருவரும் இல்லாத தால் நாங்கள் தானியாவை நேசிக்க வேண்டி இருந்தது.

சில வேளைகளில் எங்களில் ஒருவன் என்ன காரணத் தாலோ இந்த மாதிரித் தர்க்கிக்கத் தொடங்கினான்:

''எதற்காக நாம் இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு சலுகை காட்டுகிறோம்? இவளிடம் அப்படி என்ன இருக்கிறது? எதனாலோ நாம் இவளுக்கு நிரம்ப இடம் கொடுக்கிறோம்.''

இந்த மாதிரிப் பேச முற்பட்டவனை நாங்கள் சட்டென்று முரட்டுத்தனமாக அடக்கி விட்டோம். எங்களுக்கு அன்பு செலுத்துவதற்கு ஒன்று வேண்டி இருந்தது: நாங்கள் அதைப் பெற்றிருந்தோம், நேசித்து வந்தோம். நாங்கள் இருபத்தறு வர் எதை நேசித்தோமோ அது எங்களில் ஒவ்வொருவனுக்கும் எங்கள் புனிதப் பொருளாக நிலைத்திருக்க வேண்டும், இதில் எங்களுக்கு எதிராகச் செல்பவன் எங்கள் பகைவன் என்று எண்ணினேம். ஒரு வேளை நாங்கள் அன்பு செலுத்தியது உண்மையில் நல்லதான ஒன்றின் மேல் கூட இல்லை போலும். ஆனல் நாங்கள் இருபத்தறுவர், ஆகவே எங்கள் அன்புக்கு உரியதை மற்றவர்கள் புனிதப் பொருளாகக் கருத வேண்டும் என்று நாங்கள் எப்போதும் விரும்பினேம்.

எங்களுடைய வெறுப்பு தாங்க எவ்வளவு கடினமாய் இருந்ததோ, அதற்குக் குறையாமல் கடினமாய் இருந்தது எங்கள் அன்பு... எங்கள் வெறுப்பு எங்கள் அன்பை விடத் தங்களுக்கு அதிக இனியதாய் இருப்பதாகச் சில செருக்காளர்கள் சொல்வது இதனுல் தான் போலும்... ஆனல், இது உண்மை என்றல் அவர்கள் எங்களிடமிருந்து தப்பி ஓடாதது ஏனும்?

பிஸ்கோத்துத் தொழிலகம் தவிர எங்கள் எசமானனுக்கு ரொட்டிக் கிடங்கும் சொந்தமாய் இருந்தது. அது அதே வீட்டில், எங்கள் கிடங்கிலிருந்து சுவற்றல் மட்டும் பிரிக்கப் பட்டு இருந்தது. ஆனல் ரொட்டித் தொழிலாளர்கள்—அவர்கள் நால்வர்—தங்கள் வேலையை எங்களதை விடத் துப்புரவானதாக மதித்தார்கள், எனவே தங்களை எங்களைக் காட்டிலும் மேலானவர்களாகக் கருதினர்கள், எங்களிடமிருந்து விலகியே இருந்து வந்தார்கள். அவர்கள் எங்கள் தொழிலகத்துக்குள் வரவில்லை. வெளியே சந்தித்த போது எங்களை இகழ்ச்சியுடன் எள்ளி நகையாடினர்கள். நாங்களும் அவர்களிடம் போகவில்லை: நாங்கள் பன் ரொட்டிகளைத் திருடி விடுவோம் என்று பயந்து எசமானன் நாங்கள் அங்கு போவதைத் தடை செய்து விட்டான். நாங்கள் ரொட்டித் தொழிலாளர்களை நேசிக்கவில்லை, ஏனெனில் அவர்கள் மேல் பொறுமை கொண்டிருந்தோம்: அவர்களுடைய வேலை

எங்களுடையதை விட இலேசானது, சம்பளம் எங்களுக்குக் கிடைத்ததைக் காட்டிலும் அதிகம், அவர்களுக்கு எங்களை விட நல்ல சாப்பாடு கிடைத்தது, அவர்களுடைய தொழிலகம் விசாலமானது, வெளிச்சம் உள்ளது, அவர்கள் எல்லோரும் துப்புரவாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தார்கள், அதனால் எங்கள் அருவருப்புக்கு உரியவர்களாய் இருந்தார்கள். நாங்கள் எல்லோருமோ, மஞ்சள் பாரித்துச் சாம்பல் பூத்துக் கிடந்தோம். எங்களில் மூவருக்கு மேகநோய், சிலருக்குச் சொறி சிரங்கு, ஒருவன் கீல்வாதத்தால் ஒரேயடியாகக் கோணிப் போயிருந்தான். விழா நாட்களிலும் ஒழிவு நேரங்களிலும் அவர்கள் கோட்டுகளும் கறுமுறுக்கும் பூட்சுகளும் அணிந்தார்கள். அவர்களில் இருவரிடம் அக்கார்டியன் வாத்தியம் இருந்தது. அவர்கள் எல்லோரும் நகரப் பூங்காவுக்கு உலாவப் போனார்கள். நாங்களோ, அழுக்கடைந்த கந்தைகளை அணிந்தோம், பிய்ந்த சோடுகளையோ மரவுரிச் சோடுகளையோ கால்களில் மாட்டிக் கொண்டோம். போலீசார் எங்களை நகரப் பூங்காவுக்குள் விடவில்லை—ரொட்டித் தொழிலாளர்களை எங்களால் நேசிக்க முடிந்திருக்குமா?

அவர்களுடைய ரொட்டி சுடுபவன் குடிக்கத் தொடங்கி விட்டதால் எசமானன் அவனைக் கணக்குத் தீர்த்து அனுப்பி விட்டு இன்னொருவனை அமர்த்தி இருப்பதாகவும் இந்த ஆள் ஓய்வு பெற்ற படையினன் என்றும் சாட்டின் வெயிஸ்ட்கோட்டும் தங்கச் சங்கிலி உள்ள கடிகாரமும் மாட்டிக் கொண்டு பிலுக்குவதாகவும் ஒரு முறை கேள்விப்பட்டோம். இந்தப் பகட்டனைக் காண எங்களுக்கு ஆவல் உண்டாயிற்று. அவனைப் பார்க்கும் நம்பிக்கையுடன் நாங்கள் ஒருவர் பின் ஒருவராக ஓயாமல் வெளியே போய்வரத் தொடங்கினோம்.

ஆனால் அவனாகவே எங்கள் தொழிலகத்துக்கு வந்தான். கதவைக் காலால் உதைத்துத் திறந்து அதைத் திறந்தபடி வைத்து விட்டு நிலைப் படியில் நின்று புன்னகையுடன் எங்களிடம் சொன்னான்:

''கடவுள் காப்பாராக! வணக்கம், தம்பிமாரே!''

அடர்ந்த புகைப் படலமாக வாயிலுக்குள் பாய்ந்து வந்த கூதல் காற்று அவன் காலருகில் சுழன்றது. அவனோ, நிலைப்படியில் நின்று எங்களை ஏற இறங்க நோட்டமிட்டான். திறமையாக முறுக்கி விடப்பட்ட அவனுடைய சணல் நிற மீசையின்

அடி வழியாகப் பெரிய மஞ்சள் பற்கள் பளிச்சிட்டன. அவன் அணிந்திருந்த வெயிஸ்ட்கோட்டு மெய்யாகவே தனி வகையாக இருந்தது—பூக்கள் தைத்த அந்த நீலக் கோட்டு ஒரு விதமாகப் பளபளத்தது. ஒரு மாதிரிச் சிவப்புக் கற்கள் வைத்த பொத்தான்கள் அதில் இலகின. சங்கிலியும் இருந்தது...

அந்தப் படையினன் அழகனுய் இருந்தான். நெடிய, கட்டு வாய்ந்த மேனி, செம்மை படிந்த கன்னங்கள். அவனுடைய ஒளி வீசிய பெரிய விழிகள் அன்புடனும் தெளிவாகவும் நன்கு நோக்கின. முடமுடப்பாகக் கஞ்சி போட்ட வெள்ளைத் தொப்பியைத் தலையில் அணிந்திருந்தான். ஒரு சிறு கறை கூடப் படாத துப்புரவான முன்றுனைக்கு அடியில் பளிச்சென்று பாலிஷ் போட்டிருந்த நாகரிகமான சோடுகளின் கூரிய முனைகள் தெரிந்தன.

எங்கள் பிஸ்கோத்து சுடுபவன் கதவை மூடும்படி அவனிடம் மரியாதையாகக் கேட்டுக் கொண்டான். அவன் அவசரப்படாமல் கதவைச் சாத்தி விட்டு எசமானனைப் பற்றி எங்களிடம் விசாரிக்கத் தொடங்கினுன். நாங்கள் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு எங்கள் எசமானன் முடிச்சுமாறி, பித்தலாட்டக்காரன், படு பாதகன், சித்திரவதை செய்பவன் என்றெல்லாம் அவனிடம் சொன்னேம். எமானனைப் பற்றி இன்னும் என்ன எல்லாம் சொல்ல முடிந்ததோ, வேண்டியும் இருந்ததோ, ஆனல் இங்கே எழுத முடியாதோ அதை எல்லாம் சொல்லித் தீர்த்தோம். படையினன் கேட்டான், மீசையை அசைத்தான், ஒளிரும் விழிகளால் மென்மையாக நோக்கினுன்.

''இங்கே உங்கள் வீட்டில் குட்டிகள் நிறைய...'' என்று திடீரெனக் கூறினுன்.

எங்களில் சிலர் மரியாதைக்காகச் சிரித்தார்கள். வேறு சிலர் மூஞ்சிகளை இனிமையாகச் சுளித்துக் கொண்டார்கள். இங்கே ஒன்பது இளம் பெண்கள் இருப்பதாக ஒருவன் படையினனுக்கு விளக்கினுன்.

''பயன்படுத்துகிறீர்களா?'' என்று கண் சிமிட்டி வினவினுன் படையினன்.

நாங்கள் மறுபடி சிரித்தோம், ஆனல் நிரம்ப உரக்க அல்ல, கூச்சத்துடன் சிரித்தோம்... தாங்களும் அவனைப்

போலவே துணிந்த பேர்வழிகள் என்று படையினனுக்குக் காட்டிக் கொள்ள எங்களில் பலருக்கு ஆசை உண்டாகத் தான் செய்தது, ஆனால் ஒருவனுக்குமே அவ்வாறு காட்டிக் கொள்ளத் திறமை இல்லை, ஒருவனாலும் காட்டிக் கொள்ள முடியவில்லை. ஒருவன் ஏலாமையை ஒப்புக் கொண்டு தணிந்த குரலில் சொன்னான்:

''எங்களுக்கு எங்கே முடியும் இதெல்லாம்...''

''ம்-ஆமாம், உங்களுக்கு இது கடினம் தான்!'' என்று உறுதியாகக் கூறினான் படையினன், எங்களை உறுத்துப் பார்த்தவாறு. ''நீங்கள் என்னவோ... அந்த மாதிரி ஆட்கள் அல்ல... உங்களுக்குத் தைரியம் பற்றாது... சரியான உருவப் பாங்கு... அதாவது தோற்றம் இல்லை... பெண் பிள்ளை இருக்கிறாளே, அவளுக்கு ஆண்பிள்ளையிடம் பிடித் தது உருவத் தோற்றம்! உடம்பு சரியானபடி இருக்க வேண் டும் அவளுக்கு... எல்லாம் கச்சிதமாக அமைந்திருக்க வேண்டும்! அதோடு பலத்தை அவள் மதிக்கிறாள்... கை—இப்படி இருக்க வேண்டும்!''

படையினன் காற்சட்டைப் பையிலிருந்து கையை வெளி யில் எடுத்தான். சட்டைக் கை மடக்கி விடப்பட்டு முழங்கை வரை திறந்திருந்த கரத்தை எங்களுக்குக் காட்டினான்... அது வெண்மையான, வலிய கரம். பளிச்சிடும் தங்க நிற உரோ மங்கள் அடர்ந்தது.

''கால், மார்பு, எல்லாவற்றிலும் உறுதி வேண்டும்... அதோடு, மனிதன் பாங்காக உடை உடுத்த வேண்டும், பொருள்களின் அழகுக்குத் தேவையான விதத்தில்... உதா ரணமாக என்னை—பெண்பிள்ளைகள் விரும்புகிறார்கள். நான் அவர்களை அழைக்கிறதில்லை, மயக்குகிறதில்லை — அவர் களாகவே ஒரே நேரத்தில் ஐந்தாறு பேராக வந்து கழுத்தைக் கட்டிக் கொள்ளுகிறார்கள்...''

அவன் மாவு மூட்டை மேல் குந்திக் கொண்டு பெண் பிள்ளைகள் தன்னை எப்படி விரும்புகிறார்கள் என்பதையும் தான் அவர்களிடம் எப்படி வீரத்துடன் நடந்து கொள்கிறான் என்பதையும் நீண்ட நேரம் விவரித்தான். பின்பு அவன் போய் விட்டான். அவன் வெளியேறிய பின் கதவு கிறீச்சிட்டு மூடிக் கொண்டதும் நாங்கள் அவனையும் அவன் சொன்ன கதைகளையும் பற்றி எண்ணமிட்டவாறு நெடுநேரம் பேசா

திருந்தோம். பிறகு என்ன காரணத்தாலோ எல்லோரும் ஒரே நேரத்தில் பேசத் தொடங்கினோம். எங்கள் எல்லோருக்கும் அவனைப் பிடித்திருந்ததாக உடனே தெரிய வந்தது. நிரம்ப சரளமான, இனிய சுபாவம் உள்ளவன்—வந்தான், உட்கார்ந்தான், பேசிக் கொண்டிருந்து விட்டுப் போனான். எங்களிடம் யாரும் வரவில்லை, யாரும் எங்களோடு இப்படி, நட்புடன் பேசவில்லை... ஆக நாங்கள் அவனைப் பற்றியும் சரிகைத் தையல்காரிகளிடம் அவனுடைய வருங்கால வெற்றிகளைப் பற்றியும் இடை விடாமல் பேசிக்கொண்டு போனோம். இந்தப் பெண்கள் வெளி முகப்பில் எங்களைச் சந்தித்தபோது ஒன்று எங்கள் மனம் புண்படும்படி உதடுகளை மடித்துக் கொண்டு எங்களிடமிருந்து ஒரு புறம் விலகிச் சென்றார்கள், அல்லது நாங்கள் அவர்களுடைய வழியில் எதிர்ப்படவே இல்லை போல் நேரே எங்களை நோக்கி வந்தார்கள். நாங்களோ வெளி முகப்பிலும் அவர்கள் எங்கள் சன்னல்களின் பக்கமாகக் கடந்து செல்கையிலும் அவர்களை எப்போதும் வியந்து நோக்க மட்டுமே செய்தோம். குளிர் காலத்தில் அவர்கள் எவையோ தனி வகையான தொப்பிகளும் மென்மயிர்த் தோல் கோட்டுகளும் அணிந்தார்கள். கோடை காலத்தில் பூக்கள் வைத்த தொப்பிகள் அணிந்து பல வண்ணக் குடைகளும் கைகளுமாக நடை பயின்றார்கள். இந்தப் பெண்கள் எங்களை ஆளாக மதிக்காவிட்டாலும் எங்களுக்குள் நாங்கள் அவர்களைப் பற்றிப் பேசிக் கொண்டதை அவர்கள் கேட்டால் வெட்கத்தாலும் மனத்தாங்கலாலும் அவர்களுக்கு வெறி உண்டாகி இருக்கும்.

''ஆனால் இந்த ஆள் நம் தானியாவை... கெடுத்து விடாமல் இருக்க வேண்டுமே!'' என்று திடீரெனக் கவலையுடன் சொன்னான் பிஸ்கோத்து சுடுபவன்.

இந்தச் சொற்களால் திகைத்துப் போய் நாங்கள் எல்லோரும் பேசாதிருந்தோம். எதனாலோ நாங்கள் தானியாவை மறந்து விட்டோம்: தனது அழகிய பருத்த உருவத்தால் படையினன் அவளை எங்களிடமிருந்து மறைத்திருந்தான் போலும். பின்னர் ஆரவாரம் மிக்க விவாதம் தொடங்கியது: தானியா இதற்கு இடம் கொடுக்க மாட்டாள் என்றார்கள் சிலர். படையினனுக்கு எதிர் நிற்க அவளால் முடியாது என்றார்கள் வேறு சிலர். படையினன் தானியாவை நச்சரித்

தால் அவனுடைய விலாவை முறித்து விடுவதாகப் பின்னும் சிலர் முடிவில் கூறினார்கள். படையினனையும் தானியாவையும் கவனிப்பதாகவும் அவனிடம் சாக்கிரதையாக இருக்கும்படி அவளை எச்சரிப்பதாகவும் கடைசியில் எல்லோரும் முடிவு செய்தார்கள். அதோடு விவாதம் நின்றது.

ஒரு மாதத்துக்கு மேல் சென்றது. படையினன் ரொட்டிகள் சுட்டான், சரிகைத் தையல்காரிகளோடு சுற்றினான், அடிக்கடி எங்கள் தொழிலகத்துக்கு வந்தான், ஆனால் மங்கையர் மீது தான் பெற்ற வெற்றிகள் குறித்து ஒன்றும் சொல்லாமல் மீசையை முறுக்குவதும் மன நிறைவு ததும்ப உதடுகளை நக்கிக் கொள்வதுமாக மட்டும் இருந்தான்.

தானியா நாள் தோறும் காலையில் ''அழகு பிஸ்கோத்துகளுக்காக'' எங்களிடம் வந்தாள், எப்போதும் போலவே எங்களுடன் குதூகலமாகவும் இனிமையாகவும் பரிவுடனும் பழகினாள். படையினனைப் பற்றி அவளிடம் பேச்செடுக்க நாங்கள் முயன்றோம். அவள் அவனை ''முண்டைக்கண் காளைக் கன்று'' என்றும் வேறு பல கேலிப் பெயர்களாலும் குறித்தாள். இதனால் நாங்கள் அமைதி அடைந்தோம். சரிகைத் தையல்காரிகள் படையினனைக் கட்டித் தழுவியதைக் கண்ட நாங்கள் எங்கள் மங்கையைக் குறித்துப் பெருமை கொண்டோம். அவனுடன் தானியா பழகிய விதம் ஒரு வகையில் எங்கள் எல்லோரையும் உயர்த்தியது. அவளுடைய போக்கை வழிகாட்டியாகக் கொண்டவர்கள் போல நாங்கள் படையினனிடம் அசட்டை பாராட்டத் தலைப்பட்டோம். அவளிடமோ முன்னிலும் அதிக அன்பு காட்டினோம், காலை வேளைகளில் இன்னும் அதிக மகிழ்ச்சியுடனும் நல்லியல்புடனும் அவளை எதிர் கொண்டோம்.

ஆனால் ஒரு நாள் படையினன் கொஞ்சம் குடித்து விட்டு எங்களிடம் வந்தான், உட்கார்ந்து சிரிக்கத் தொடங்கினான். எதை நினைத்து அவன் இப்படிச் சிரிக்கிறான் என்று நாங்கள் கேட்டோம். அவன் விஷயத்தை விளக்கினான்:

''இரண்டு பெண்கள் எனக்காக அடித்துக் கொண்டார்கள்... லீதியாவும் குருஷாவும்... அவர்கள் தங்களை எப்படி விகாரப் படுத்திக் கொண்டார்கள் தெரியுமா? ஹா-ஹா! ஒருத்தி மற்றவளின் தலை மயிரைப் பிடித்து இழுத்தாள், நடையில் தரையில் தள்ளி அவள் மேல் ஏறிக் கொண்டாள்...

ஹா-ஹா-ஹா! மூஞ்சிகளைப் பறண்டிக் கொண்டார்கள்... கிழித்துக் கொண்டார்கள்... கண் கொள்ளாக் காட்சி! இந்தப் பெண்பிள்ளைகளால் ஏன் தான் நேர்மையாக அடித்துக் கொள்ள முடிவதில்லை? ஏன் பிராண்டிக் கொள் கிறார்கள்? ஊம்?''

உடல் நலமும் துப்புரவும் விளங்க,மகிழ்ச்சியுடன் பெஞ்சி யில் உட்கார்ந்திருந்தான் அவன். உட்கார்ந்து வாய் விட்டுச் சிரித்த வண்ணமாய் இருந்தான். நாங்கள் பேசவில்லை. இந்தத் தடவை எங்களுக்கு அவன் எதனாலோ பிடிக்காதவனாக இருந்தான்.

''இல்லை, பெண்பிள்ளைகளிடம் எனக்குத்தான் என்ன வெற்றி, ஊம்? ஒரே வேடிக்கை! நான் கண் சிமிட்ட வேண்டி யதுதான், அவள் தயார்! ச்-சனி!''

பளபளக்கும் உரோமங்கள் அடர்ந்த அவனுடைய வெண் கரங்கள் உயர்ந்து முழங்கால்கள் மேல் உரக்க அறைந்த வாறு விழுந்தன. பெண்கள் விவகாரங்களில் தான் இவ்வளவு அதிருஷ்டசாலியாக இருப்பது ஏன் என்பதை உண்மையில் தானே அறியாதவன் போன்ற இனிய வியப்பைக் காட்டும் பார்வையுடன் அவன் எங்களை நோக்கினான். அவனுடைய செம்மை படிந்த பருத்த முகத்தில் சுயதிருப்தியும் இன்பமும் சுடர் வீசின. அவன் மனநிறைவுடன் உதடுகளை நக்கிக் கொண்டான்.

எங்கள் பிஸ்கோத்து சுடுபவன் வாருகரண்டியால் அடுப் படியை வலிவாகவும் கோபத்துடனும் சுரண்டினான். பின்பு திடீரென்று கேலிக் குரலில் சொன்னான்:

''பிர் மரக் கன்றை வீழ்த்தப் பிரமாத பலம் தேவை இல்லை. நீ தேவதாருவை வீழ்த்திக் காட்டு...''

''அதாவது, இதை நீ என்னிடமா சொல்லுகிறாய்?'' என்று கேட்டான் படையினன்.

''உன்னிடம் தான்...''

''என்ன விஷயம்?''

''ஒன்றும் இல்லை... விடு!''

''இல்லை, நீ நழுவாதே! விஷயம் என்ன? எந்த தேவ தாரு?''

எங்கள் பிஸ்கோத்து சுடுபவன் பதில் பேசாமல் வாரு கரண்டியால் அடுப்பில் மளமளவென்று வேலை செய்து

கொண்டு போனுன். வெந்த பிஸ்கோத்துகளை அடுப்பில் எறிந்தான், சுட்டவற்றை வாரித் தூக்கித் தரையில் சிறுவர்கள் அருகே ஓசையுடன் விசிறிப் போட்டான். அவர்கள் பிஸ்கோத்துகளை நார்களில் கோத்தார்கள். படையினனையும் அவனுடன் நடந்த உரையாடலையும் எங்கள் பிஸ்கோத்து சுடுபவன் மறந்து விட்டான் போல் இருந்தது. ஆனுல் படையினன் திடீரென்று ஒருவகை நிம்மதியின்மைக்கு ஆளானுன். அவன் எழுந்து, வலிப்பு கண்டது போலக் காற்றில் முன்னும் பின்னும் போய்க் கொண்டிருந்த கரண்டிக் காம்பு மார்பில் இடிக்கும் ஆபத்தைப் பொருட்படுத்தாமல் அடுப்பருகே சென்றுன்.

''இல்லை, நீ சொல்லு—யார் அவள்? நீ என் மனதைப் புண்படுத்தி விட்டாய்... நானு? என்னிடமிருந்து தப்ப ஒருத்தியாலும் முடியாது, முடியவே முடியாது! நீ என்னடா என்றுல், இப்படிப் புண்படுத்துகிற சொற்களை என்னிடம் சொல்கிறுய்...''

அவன் மெய்யாகவே புண்பட்டு விட்டவன் போல உண்மையில் தோற்றம் அளித்தான். பெண்களைக் கற்பிழக்கச் செய்யும் தன் திறமை ஒன்றுக்காகத் தவிர வேறு எதற்காகவும் அவனுல் தன்னை மதிக்க முடியவில்லை போலும். ஒருவேளை, இந்த ஒரு திறமை தவிர உயிர்த் துடிப்புள்ள வேறு எதுவும் அவனிடம் இல்லை போலும். தான் உயிருள்ள மனிதன் என்று அவன் உணர வாய்ப்பு அளித்தது இந்த ஒன்று தான் போலும்.

சில மனிதர்கள் இருக்கிறுர்கள். அவர்களுடைய உள்ளத்தின் அல்லது உடலின் நோய் தான் வாழ்க்கையில் யாவற்றிலும் மதிப்புள்ளதும் சிறந்ததுமாக அவர்களுக்கு விளங்குகிறது. அவர்கள் வாழ்நாள் முழுவதும் ஓயாமல் அதைப் பாராட்டிக் கொண்டிருக்கிறுர்கள், அது ஒன்றிஞலேயே வாழ்ந்திருக்கிறுர்கள். அதஞல் வருந்தும் போதே அவர்கள் அதிலிருந்து ஊட்டம் பெறுகிறுர்கள். மற்றவர்களிடம் அதைப் பற்றிக் குறை கூறுகிறுர்கள், இதன் மூலம் பிறருடைய கவனத்தைத் தங்கள் பால் திருப்புகிறுர்கள். இதற்காக மனிதர்களின் அனுதாபத்தை முயன்று பெறுகிறுர்கள். இதைத் தவிர அவர்களிடம் ஒன்றும் இருப்பதில்லை. இந்த நோயை அவர்களிடமிருந்து அகற்றி விட்டால், அவர்களைக்

குணப்படுத்தி விட்டால், அவர்கள் துன்பப்படுவார்கள், ஏனெனில், உயிர் வாழ்வதற்கான ஒரே சாதனத்தை இழந்து விடுவார்கள்—அப்போது அவர்கள் வெறுமை ஆகி விடுவார்கள். சில வேளைகளில் மனிதனுடைய வாழ்க்கை அறவே வறியது ஆகி விடுவதால் தனது குறையை மதிக்கவும் அதனுல் வாழவும் அவன் தன் வசமின்றிக் கட்டாயப்படுத்தப் படுகிறுன். மனிதர்கள் பெரும்பாலும் குறையுள்ளவர்கள் ஆவது சலிப்பு காரணமாகவே என்று சொல்லலாம்.

படையினன் கண்ணீர் வரும் அளவுக்கு மனத்தாங்கல் கொண்டு எங்கள் பிஸ்கோத்து சுடுபவனை விடாமல் துளைத்தான்:

''இல்லை, நீ சொல்லு, யார் அவள்?''

''சொல்லட்டுமா?'' என்று சட்டென அவன் பக்கம் திரும்பினுன் பிஸ்கோத்து சுடுபவன்.

''ஊம்?''

''தானியாவைத் தெரியுமா?''

''ஊம்?''

''நல்லது, அவள் தான்! முயன்று பார்...''

''நானு?''

''நீ தான்!''

''அவளையா? எனக்கு இது—த்தூ!''

''பார்ப்போம்!''

''பார்ப்பாய்! ஹ்-ஹா!''

''அவள் உன்னை...''

''ஒரு மாதம் கெடு!''

''வீண் பெருமை அடித்துக் கொள்வதில் நீ சூரன் அப்பா!''

''இரண்டே வாரம்! நான் காட்டுகிறேன்! யார் அவள்? தானியா! த்தூ!..''

''சரி, போ அப்பாலே... இடைஞ்சல் பண்ணுகிறுய்!''

''இரண்டே வராம்—காரியம் பலித்து விடும்! அட சே...''

''போய் விடு என்கிறேன்!''

எங்கள் பிஸ்கோத்து சுடுபவன் திடீரென்று வெறி கொண்டு வாருகரண்டியை ஓங்கி ஆட்டினுன். படையினன் வியப்படைந்து அவனிடமிருந்து பின் வாங்கி, எங்களை நோக்கி, சிறிது நேரம் பேசாதிருந்தான். பின்பு மெதுவாக, வன்மத்

துடன் ''நல்லது தான்!'' என்று கூறி விட்டு எங்களிடமிருந்து அகன்ருன்.

விவாதத்தின் போது நாங்கள் எல்லோரும் அதில் ஈடு பட்டுப் பேசாதிருந்தோம். ஆனால் படையினன் போன பின்பு எங்களுக்குள் உற்சாகமான உரத்த பேச்சும் கூச்சலும் கிளம்பின.

ஒருவன் பிஸ்கோத்து சுடுபவனிடம் உரக்கக் கூறினன்:

''வீண் வம்பை மூட்டி விட்டாய், பாவேல்!''

''உன் வேலையைப் பார்!'' என்று வெறியுடன் பதிலளித் தான் பிஸ்கோத்து சுடுபவன்.

படையினனுக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்து விட்டது என்றும் தானியாவை ஆபத்து சூழ்கிறது என்றும் நாங்கள் உணர்ந்தோம். நாங்கள் இதை உணர்ந்தோம், அதே சமயத்தில் என்ன நடக்கும் என்று அறியும் தீவிரமான, எங் களுக்கு உவப்பான ஆவல் எங்களைப் பற்றிக் கொண்டது. தானியா படையினனுக்கு எதிர் நிற்பாளா? அனேகமாக எல்லோரும் உறுதியுடன் கத்தினர்கள்:

''தானியாவா? அவள் எதிர்த்து நிற்பாள்! அவளை வசப் படுத்துவது இலேசல்ல!''

எங்கள் படிமத்தின் உறுதியைச் சோதித்துப் பார்க்க எங்களுக்குப் பெருத்த ஆசை உண்டாயிற்று. எங்கள் படிமம் உறுதியுள்ள படிமம் என்றும் இந்தப் போட்டியில் வெற்றி பெறும் என்றும் ஒருவருக்கு ஒருவர் நிரூபிக்க நாங்கள் மும் முரமாக முயன்ருேம். நாங்கள் படையினனைக் குறைவாகவே தூண்டி விட்டதாகவும் அவன் விவாதத்தை மறந்து விடு வான் என்றும், அவனுடைய ஆணவத்தை நன்ருகப் புண் படுத்திக் கிளறுவது எங்களுக்கு அவசியம் என்றும் முடிவில் எங்களுக்குத் தோன்றலாயிற்று. அன்று முதல் நாங்கள் ஒரு வகையான தனிப்பட்ட, இறுக்கமும் பதற்றமும் நிறைந்த வாழ்க்கை வாழத் தொடங்கினேம்—அந்த மாதிரி நாங்கள் அதற்கு முன் வாழவில்லை. நாங்கள் நாள் முழுவதும் ஒரு வரோடு ஒருவர் விவாதித்தோம், எல்லோரும் ஒரு வகையில் அதிக அறிவுள்ளவர்கள் ஆகி விட்டோம், முன்னை விட அதிகமாகவும் நன்ருகவும் பேசலுற்ருேம். நாங்கள் சாத்தா னுடன் ஏதோ ஒரு விளையாட்டு ஆடுவது போலவும் எங்கள் தரப்பில் பணயம் தானியா என்றும் எங்களுக்குத் தோன்றி

யது. படையினன் ''எங்கள் தானியாவை அடைய வெகுவாகப் பாடுபடத்'' தொடங்கி விட்டதாக ரொட்டிக் கிடங்குக்காரர்களிடமிருந்து தெரிந்து கொண்டதும் எங்களுக்கு உற்சாகம் பொங்கியது, வாழ்வதில் பெருத்த ஆவல் உண்டாயிற்று. இதனுல் எசமானன் எங்கள் கிளர்ச்சிப் பெருக்கைப் பயன்படுத்திக் கொண்டு ஒருநாளுக்குச் சுமார் ஏழு மணங்கு பிசைந்த மாவு வீதம் எங்கள் வேலையை அதிகப் படுத்தியதைக் கூட நாங்கள் கவனிக்கவில்லை. வேலையால் எங்களுக்குக் களைப்பு கூட ஏற்படவில்லை. போல் இருந்தது. தானியாவின் பெயர் எங்கள் நாவிலிருந்து நாள் முழுதும் அகலவில்லை. ஒரு வகையான தனிப்பட்ட உள்ளக் கிளர்ச்சியுடன் காலே தோறும் அவளை எதிர்பார்த்தோம். அவள் எங்களிடம் வருவாள், ஆனுல் இவள் அவளாக, முந்திய தானியாவாக அல்ல, வேறு எவளாகவோ இருப்பாள் என்று சில வேளைகளில் எங்களுக்குத் தோன்றியது.

ஆயினும் நடந்த விவாதத்தைப் பற்றி நாங்கள் அவளிடம் ஒன்றுமே சொல்லவில்லை. அவளிடம் எதைப் பற்றியும் கேட்காமல் முன்போலவே அன்புடனும் நன்ருகவும் அவளோடு பழகினேம். ஆனுல் தானியா விஷயத்தில் நாங்கள் கொண்டிருந்த முந்திய உணர்வுக்கு வேற்ருன புதிய ஒன்று இந்த உறவில் அப்போதே மறைவாகப் புகுந்து விட்டது. இந்தப் புதிய ஒன்ருக விளங்கியது கூரிய ஆவல்—எஃகுக் கத்தி போன்று கூர்மையான, உணர்ச்சி அற்ற ஆவல்...

ஒரு நாள் காலையில் பிஸ்கோத்து சுடுபவன் வேலை தொடங்கியதும், ''தம்பிமாரே! இன்றைக்குக் கெடு!'' என்ருன்.

அவன் நினைவு படுத்தாமலே நாங்கள் இதை நன்ருக அறிந்திருந்தோம், ஆனுலும் திடுக்கிட்டோம்.

''அவளைப் பார்வையிடுங்கள்... இதோ வருவாள்!'' என்று யோசனை சொன்னுன் பிஸ்கோத்து சுடுபவன்.

ஒருவன் அங்கலாய்த்தான்:

''கண்களால் எதையேனும் காண முடியுமா என்ன?!''

மீண்டும் எங்களுக்குள் மூண்டது உக்கிரமான, உரத்த விவாதம். எந்தப் பாத்திரத்தில் நாங்கள் எங்கள் சிறந்த பொருள்களைப் போட்டு வைத்திருந்தோமோ அது எவ்வளவு தூய்மையானது, அழுக்கு அண்ட முடியாதது என்பதை முடி

வாக இன்று நாங்கள் தெரிந்து கொள்வோம். நாங்கள் மெய்யாகவே பெரிய விளையாட்டு விளையாடுகிறோம், எங்கள் படிமத்தின் தூய்மை குறித்த இந்தச் சோதனை எங்களைப் பொறுத்த வரை அதை அழித்து விடக் கூடும் என்று நாங்கள் அன்று காலை எதனாலோ ஒரே நேரத்தில் முதன் முறையாக உணர்ந்தோம். படையினன் விடாப்பிடியாகவும் விலகாமலும் தானியாவைப் பின்தொடர்வதாக இந்த நாட்களில் நாங்கள் எல்லோரும் கேள்விப்பட்டோம். ஆனால், அவள் அவனைப் பற்றி என்ன நினைக்கிறாள் என்று எதனாலோ எங்களில் ஒருவரும் அவளிடம் கேட்கவில்லை. அவளோ, காலை தோறும் குறித்த நேரத்தில் சரியாக எங்களிடம் பிஸ்கோத்துகளுக்காக வருவதைத் தொடர்ந்தாள், எப்போதும் போலவே இருந்து வந்தாள்.

அன்றும் அவளுடைய குரலை நாங்கள் விரைவில் கேட்டோம்:

''கைதிகளே! நான் வந்து விட்டேன்...''

நாங்கள் அவளுக்குக் கதவைத் திறந்து விட விரைந்தோம். அவள் உள்ளே வந்ததும் வழக்கத்துக்கு மாறாக மௌனமாக அவளை எதிர்கொண்டோம். அவளை விழிகளால் பருகியவாறு, அவளிடம் என்ன பேசுவது, என்ன கேட்பது என்று தெரியாமல் அறிவு இருண்ட, பேச்சற்ற கும்பலாக அவள் முன்னே நின்றோம். தனக்குப் பழக்கம் இல்லாத இந்த வரவேற்பால் அவள் வியப்பு அடைந்தாள் போலும்—அவள் வெளிறியதையும் நிலை கொள்ளாமல் தவித்ததையும் திடீரென நாங்கள் கவனித்தோம். அவள் திணறும் குரலில் கேட்டாள்:

''என்ன நீங்கள்... எப்படியோ இருக்கிறீர்கள்?''

''நீயோ?'' என்று அவள் மேல் வைத்த கண்ணை வாங்காமல் முறைப்புடன் வினவினான் பிஸ்கோத்து சுடுபவன்.

''நானா? என்ன வந்தது?''

''ஒன்-ஒன்றுமில்லை...''

''ஊம், சீக்கிரம் கொடுங்கள் பிஸ்கோத்துகள்...''

முன் ஒருபோதும் அவள் எங்களை அவசரப்படுத்தியது கிடையாது...

''உனக்கு நேரம் இருக்கிறது, பதறாதே!'' என்று இடத்தை விட்டு நகராமலும் அவள் மேலிருந்து பார்வையை அகற்றாமலும் கூறினான் பிஸ்கோத்து சுடுபவன்.

அப்போது அவள் சட்டெனத் திரும்பி, கதவுக்கு அப்பால் மறைந்தாள்.

பிஸ்கோத்து சுடுபவன் வாருகரண்டியை எடுத்துக் கொண்டு அடுப்பின் பக்கம் திரும்பி அமைதியாகச் சொன்னான்:

''தயாராகி விட்டது என்று தெரிகிறது!.. அட படைக்காரா!.. கழிசடை!..''

நாங்கள் ஆட்டு மந்தை போல ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு மேசை அருகே போய்,மௌனமாக உட்கார்ந்து சுரத்தில்லாமல் வேலை செய்யத் தொடங்கினோம். விரைவில் ஒருவன் சொன்னான்:

''ஒரு வேளை, இன்னும்...''

''ஊம், ஊம், வெறும் பேச்சு பேசு!'' என்று கத்தினான் பிஸ்கோத்து சுடுபவன்.

அவன் புத்திசாலி, எங்களை விட அறிவுக் கூர்மை உள்ளவன் என்று நாங்கள் எல்லோரும் அறிந்திருந்தோம். அவனுடைய கூப்பாட்டின் அர்த்தம் படையினனின் வெற்றியில் நம்பிக்கை என்று நாங்கள் புரிந்து கொண்டோம்... எங்களைத் துயரம் கவ்வியது. நாங்கள் அமைதி இழந்தோம்...

பன்னிரண்டு மணிக்கு, மதியச் சாப்பாட்டு நேரத்தில், படையினன் வந்தான். எப்போதும் போலவே அவன் துப்புரவும் தளுக்கும் மினுக்குமாக இலகினான், எப்போதும் போலவே எங்களை விழி பொருந்த நேரே நோக்கினான். எங்களுக்கோ அவனைப் பார்க்கக் கூச்சமாய் இருந்தது.

''என்ன, நேர்மையுள்ள கனவான்களே, படையினனின் துணிச்சலை நான் உங்களுக்குக் காட்டுகிறேன், பார்க்கிறீர்களா?'' என்று பெருமிதச் சிரிப்புடன் கூறினான் அவன். ''அப்படியானால் நடைக்கு வந்து இடுக்குகள் வழியே பாருங்கள்... புரிந்ததா?''

நாங்கள் வெளியே போய்,வெளி முகப்புக்குச் செல்லும் நடையின் பலகைச் சுவற்றில் இருந்த இடுக்குகளில் ஒருவர் மேல் ஒருவர் விழுந்தவாறு ஒட்டிக் கொண்டோம். நாங்கள் சிறிது நேரமே காத்திருந்தோம்... விரைவில் அவசர நடையும் கவலை தேங்கிய முகமுமாக வெளி முகப்பைக் கடந்த தானியா, இளகிய வெண்பனி, சேற்றுக் குட்டங்களைத் தாண்டிக் குதித்தவாறு சென்றாள். பண்ட அறைக்

கதவுக்குப் பின் அவள் மறைந்தாள். பின்பு நிதானமாகவும் சீழ்க்கை அடித்துக் கொண்டும் கடந்து சென்ருன் படையினன். அவனுடைய கைகள் கோட்டுப் பைகளில் நுழைக்கப்பட்டிருந்தன. மீசை துடித்தது...

மழை பெய்து கொண்டிருந்தது. மழைத் துளிகள் குட்டங்களில் விழுந்ததையும் அவற்றின் அடிகளால் குட்டங்களில் சுருக்கங்கள் ஏற்பட்டதையும் நாங்கள் கண்டோம். பகல் ஈரமும் மப்பு மந்தாரமுமாக இருந்தது—மிகவும் சலிப்பூட்டும் பகல். கூரைகள் மேல் வெண்பனி இன்னும் இளகாமல் இருந்தது. தரை மீதோ கரிய சேற்றுக் கறைகள் தென்படத் தொடங்கி விட்டன. கூரைகள் மேல் இருந்த வெண்பனி மீதும் பழுப்பு நிறமான, அழுக்கு போன்ற படலம் போர்த்திருந்தது. மழை மெதுவாகப் பெய்தது, சோர்வுடன் ஒலித்தது. எங்களுக்குக் குளிர்ந்தது, எதிர்பார்ப்பது உவப்பற்றதாக இருந்தது...

பண்ட அறையிலிருந்து முதலில் வெளியே வந்தான் படையினன். அவன் கைகளைக் கோட்டுப் பைகளில் நுழைத்தவாறு, மீசையை அசைத்துக் கொண்டு வெளி முகப்பில் மெதுவாக நடந்தான்—எப்போதும் போலவே.

பிறகு—தானியாவும் வெளியே வந்தாள். அவளுடைய கண்கள்... அவளுடைய கண்கள் மகிழ்ச்சியும் இன்பமும் பொங்கச் சுடர் வீசின. உதடுகள் முறுவலித்தன. அவள் கனவில் நடப்பவள் போல, உறுதியின்றி அடி எடுத்து வைத்துத் தள்ளாடியவாறு நடந்தாள்...

எங்களால் இதை அமைதியாகப் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. நாங்கள் எல்லோரும் ஒரே நேரத்தில் முகப்புக்குப் பாய்ந்து வெளியே குதித்து வன்மத்துடனும் உரக்கவும் காட்டுத்தனமாகவும் அவளைப் பார்த்துச் சீழ்க்கை அடிக்கவும் கூச்சல் போடவும் தொடங்கினோம்.

எங்களைக் கண்டு அவள் திடுக்கிட்டு, காலடியில் இருந்த சேற்றில் புதைக்கப்பட்டவள் போலக் கல்லாய்ச் சமைந்து நின்று விட்டாள். நாங்கள் அவளைச் சூழ்ந்து கொண்டு ஆபாசச் சொற்களால் வன்மக் களிப்புடன், ஒரு வரையறை இன்றி அவளைத் திட்டி நொறுக்கினோம், வெட்கம் அற்ற வார்த்தைகளை அவளிடம் பேசினோம்.

அவளுக்குப் போக்கிடம் இல்லை என்பதையும் அவள் எங்

களால் சூழப்பட்டிருக்கிருள் என்பதையும் நாங்கள் விரும்பும் அளவுக்கு அவளை எள்ளி நகையாட முடியும் என்பதையும் கண்டு கொண்டதால் நாங்கள் உரக்கக் கத்தாமலும் அவசரப்படாமலும் அவளைத் திட்டிேேம். என்ன காரணமோ அறியேன், நாங்கள் அவளை அடிக்கவில்லை. அவள் எங்கள் நடுவே நின்று, எங்கள் இழி சொற்களைக் கேட்டவாறு தலையை இப்புறமும் அப்புறமும் திருப்பிக் கொண்டிருந்தாள். நாங்களோ, எங்கள் சொற்களின் சேற்றையும் நஞ்சையும் அவள் மேல் வர வரக் கடுமையாகக் கொட்டிேேம்.

அவளது முகத்தின் செம்மை மறைந்தது. இதற்கு நிமிட நேரம் முன்பு இன்பம் பொங்கிய அவளுடைய இள நீல விழிகள் அகலத் திறந்தன, மார்பு விம்மி விம்மித் தணிந்தது, உதடுகள் துடித்தன.

நாங்களோ, அவளைச் சூழ்ந்து கொண்டு அவளைப் பழி வாங்கிேேம், ஏனென்றுல் அவள் எங்களைச் சூறையாடி இருந்தாள். அவள் எங்களுக்குச் சொந்தமாக இருந்தாள், எங்களிடம் இருந்த சிறந்தவற்றை நாங்கள் அவளுக்காகச் செலவிட்டிருந்தோம், இந்தச் சிறந்தவை வறியவர்களின் அற்பத் துணுக்குகளே என்றுலும் நாங்கள் இருபத்தாறு பெயராகவும் அவள் ஒருத்தியாகவும் இருந்ததால் நாங்கள் அவளைச் செய்யும் எந்தச் சித்திரவதையும் அவளுடைய குற்றத்துக்குப் போதாது என்று நினைத்தோம்! நாங்கள் அவளை எப்படி அவமதித்தோம்!..அவள் வாயே திறக்கவில்லை.வெறித்த விழிகளால் எங்களை ஒரே பார்வையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள், அவள் உடல் முழுதும் நடுங்கிக் கொண்டிருந்தது.

நாங்கள் கெக்கலித்தோம், முழங்கிேேம், உறுமிேேம்... எங்கிருந்தோ இன்னும் சிலர் எங்கள் அருகே ஓடி வந்தார்கள்... எங்களில் ஒருவன் தானியாவின் சட்டைக் கையைப் பற்றி இழுத்தான்...

திடீரென்று அவளுடைய கண்களில் பொறி பறந்தது. அவள் நிதானமாகக் கைகளை உயர்த்தித் தலை மயிரைச் சரிப்படுத்திக் கொண்டாள்.உரக்க,ஆனுல் அமைதியாக எங்கள் முகத்துக்கு நேரே சொன்னுள்:

''அட சே, ஆக்கங் கெட்ட கைதிகளே!..''

இவ்வாறு சொல்லி விட்டு அவள் நேரே எங்களை நோக்கி

நடந்தாள், நாங்கள் அவளுக்கு எதிரே இல்லை போல, நாங்கள் அவளுடைய வழியைத் தடுக்கவில்லை போல. அதனுல் தான் எங்களில் எவனும் உண்மையில் அவளுடைய வழியை மறிக்கவில்லை.

எங்கள் வளையத்திலிருந்து வெளியேறியதும் அவள் எங்கள் பக்கம் திரும்பாமல், முன் போலவே உரக்கவும் பெருமிதத்துடனும் இகழ்ச்சியுடனும் மேலும் சொன்னுள்:

''அட கடை கெட்டவர்களே... அசிங்கப் பிண்டங்களே...''

இவ்வாறு சொல்லி விட்டுப் போய் விட்டாள்—நேர்மையும் எழிலும் பெருமையும் திகழ.

நாங்களோ, வெளி முகப்பின் நடுவே, வெயிலொளி இல்லாத வானத்தின் அடியில், சேற்றிலும் மழையிலும் இருந்தோம்...

பிறகு நாங்களும் எங்கள் ஈரித்த கற் குழிக்கு மௌனமாகச் சென்ருேம். முன் போலவே வெயில் ஒளி எங்கள் சன்னல்களுக்கு உள்ளே வரவே இல்லை. தானியாவும் அப்புறம் ஒரு போதும் வரவில்லை!..

இத்தாலி பற்றிய கதைகள்

பார்மாக் குழந்தைகள்

ஜெனோவாவில், ரெயில் நிலையத்துக்கு முன்னே இருந்த சிறு சதுக்கத்தில் ஆட்கள் நெருக்கமாகக் கூடி இருந்தார்கள். பெரும்பாலோர் தொழிலாளர்கள், ஆனால் பாங்காக உடுத்து, கொழுத்துப் பருத்தவர்கள் நிறையப் பேர் இருந்தார்கள். கூட்டத்தின் தலைமையில் இருந்தவர்கள் நகராண்மைக் கழக உறுப்பினர்கள். பட்டில் நேர்த்தியாகப் பூவேலை செய்த கனமான நகரக் கொடி அவர்களுடைய தலைகளுக்கு மேலே அசைந்தாடிக் கொண்டிருந்தது. தொழிலாளர் நிறுவனங்களின் பல நிறக் கொடிகள் அதன் அருகே படபடத்துக் கொண்டிருந்தன. இழைக் குச்சங்களிலும் குஞ்சங்களிலும் வார்களிலும் தங்கச் சரிகை பளபளத்தது. கோல்களில் ஈட்டிகள் மின்னின. பட்டு சரசரத்தது. விழாக் கொண்டாட்ட மனநிலையில் இருந்த ஆட்களின் கூட்டம் தணிந்த குரலில் பாடும் பாடகர் குழு போன்று ஒலித்தது.

கூட்டத்துக்கு மேலே, உயரமான பீடத்தின் மீது இருந்தது கொலம்பசின் உருவச்சிலை—கனவுகள் கண்டவர், நம்பியதற்காக நிறையத் துன்பப்பட்டவர், நம்பிய காரணத்தால் வென்றவர் ஆன கொலம்பசின் உருவச்சிலை. அவர் இப்போது கீழே இருந்த மனிதர்களை நோக்கி, பளிங்கு வாயால் இப்படிச் சொல்பவர் போலத் தோற்றம் அளித்தார்:

''நம்புபவர்களே வெல்கிறார்கள்.''

கொலம்பசின் கால்களுக்குப் பக்கத்தில், பீடத்தைச் சுற்றிலும் இசைஞர்கள் பித்தளை ஊது கருவிகளை வைத்திருந்தார்கள். வெயிலில் பித்தளை பொன் போல மின்னிற்று.

ரெயில் நிலையத்தின் கனத்த பளிங்குக் கற் கட்டிடம் ஆட்களைத் தழுவிக் கொள்ள விரும்புவது போலத் தனது சிறகுகளை விரித்து உட்கவிந்த அரைவட்டமாக நின்றது. நீராவிக் கப்பல்களின் ஆழ்ந்த பெருமூச்சும் நீரில் உந்து சக்கரத்தின் மந்தமான சுழற்சியும் சங்கிலிகளின் கணகணப்பும் சீழ்க்கைகளும் கூச்சல்களும் துறைமுகத்திலிருந்து வந்தன. சதுக்கத்தில் நிசப்தமும் இறுக்கமுமாக இருந்தது. சுள்ளென்ற வெயில் எல்லாவற்றையும் முழுக்காட்டியது. வீடுகளின் மாடி முகப்புக்களிலும் ஜன்னல்களின் அருகிலும் மாதர்கள் கைகளில் மலர்களுடன் நின்றார்கள். பகட்டாக உடைகள் அணிந்த குழந்தைகள் தாமே மலர்கள் போலக் காட்சி அளித்தன.

நிலையத்தை விரைவாக நெருங்குகையில் எஞ்சின் சீழ்க்கை அடித்தது. கூட்டம் திடுக்கிட்டது. கசங்கிய சில தொப்பிகள் கரும் பறவைகள் போலத் தலைகளுக்கு மேலே பறந்தன. இசைஞர்கள் ஊது கருவிகளை எடுத்துக் கொண்டார்கள். ஆழ்ந்த முகத் தோற்றம் கொண்ட யாரோ சில முதியவர்கள் ஆடையைச் சீர்படுத்திக் கொண்டு முன்னே போய், கூட்டத்தை நோக்கித் திரும்பிக் கைகளை இடமும் வலமுமாக ஆட்டியவாறு ஏதோ சொன்னார்கள்.

கூட்டம் சிரமத்துடனும் பதற்றப்படாமலும் இரு புறமும் விலகி, சாலை வரை அகன்ற இடை வழி ஏற்படுத்தியது.

''யாருக்கு வரவேற்பு?''

''பார்மாக் குழந்தைகளுக்கு!''

அங்கே, பார்மாவில், வேலை நிறுத்தம். முதலாளிகள் விட்டுக் கொடுக்க மறுத்தார்கள். தொழிலாளர்களின் பாடு கடினம் ஆயிற்று. குழந்தைகள் அதற்குள் பட்டினியால் சோர்ந்து போகத் தொடங்கினார்கள். எனவே தொழிலாளர்கள் குழந்தைகளைத் திரட்டி ஜெனோவாவில் தங்கள் தோழர்களிடம் அனுப்பினார்கள்.

ரெயில் நிலையத் தூண்களின் பின்னாலிருந்து சிறுவர் சிறுமியரின் சீரான அணி வலம் தொடங்கிற்று. அரை குறையாக உடை அணிந்த சிறுவர் சிறுமியர் தங்கள் கந்தல் ஆடைகளில் பறட்டையர்களாகத் தோற்றம் அளித்தார்கள்—எவையோ விந்தை விலங்குகள் போன்று பறட்டையர்களாக. அவர்கள் சின்னஞ் சிறியவர்கள், புழுதி படிந்தவர்

கள், களைத்த தோற்றம் கொண்டவர்கள். வரிசைக்கு ஐந்து பேராக, கைகளைக் கோத்துக் கொண்டு நடந்தார்கள். அவர்களுடைய முகங்கள் ஆழ்ந்தவை, ஆனால் விழிகள் உயிரோட்டத்துடனும் தெளிவாகவும் பளிச்சிட்டன. இசைக் கருவிகள் அவர்களை வரவேற்று இத்தாலியை ஒன்றுபடுத்திய பெருவீரன் கரிபால்டியின் துதிப் பாட்டை இசைத்த போது பசியால் மெலிந்து கூர்மையான அந்தச் சிறு வதனங்களில் மன நிறைவைக் காட்டும் புன்னகை மகிழ்ச்சி அலையாகப் பரவியது.

கூட்டம் காதுகள் செவிடுபட ஆரவாரித்து வருங்கால மாந்தரை வரவேற்றது. அவர்களுக்கு முன் கொடிகள் வணக்கம் தெரிவித்துச் சாய்ந்தன, பித்தளை எக்காளங்கள் குழந்தைகளின் கண்கள் கூசும்படி மின்னி, காதுகள் செவிடாகும் படி முழங்கின. குழந்தைகள் இந்த வரவேற்பால் சற்றுத் திகைப்பு அடைந்து நொடிப்போது பின்னே நகர்ந்தார்கள், ஆனால் ஒருவாறு திடீரென்று ஒன்றாக நிமிர்ந்து, உயர்ந்து, ஒரே உடலாகச் சேர்ந்து பல நூறு குரல்களில், ஆனால் ஒரே நெஞ்சிலிருந்து எழுந்த ஒலியில் ஆர்ப்பரித்தார்கள்:

"Viva Italia"*

கூட்டம் அவர்கள் மீது கவிந்து, "இளம் பார்மா நீடூழி வாழ்க!" என்று முழக்கம் செய்தது.

சாம்பல் நிற ஆப்பு போன்று கூட்டத்தில் புகுந்து அதில் மறைந்தவாறு "Evviva Garibaldi!"** என்று ஆரவாரித்தார்கள் குழந்தைகள்.

தங்கு விடுதிகளின் சாளரங்களிலும் வீடுகளின் கூரைகள் மேலும் வெள்ளைப் பறவைகள் போன்று கைக்குட்டைகள் படபடத்தன, அங்கிருந்து பூக்கள் ஆட்களின் தலைகள் மீது மழையாகச் சொரிந்தன, குதூகலமான உரத்த கூச்சல்கள் கேட்டன.

எல்லாம் விழாக் கோலம் பூண்டது, எல்லாம் உயிரோட்டம் பெற்றது. சாம்பல் சலவைக்கல் ஒளி வீசும் எவையோ புள்ளிகளால் மலர்ச்சி பெற்றது.

கொடிகள் அசைந்தாடின. தொப்பிகளும் மலர்களும்

---

* "இத்தாலி நீடூழி வாழ்க!"—ப-ர்.

** "கரிபால்டி நீடூழி வாழ்க!"—ப-ர்.

பறந்தன. பெரியவர்களின் தலைகளுக்கு மேலே குழந்தை களின் சிறு தலைகள் தென்படலாயின, பழுப்பேறிய குஞ்சுக் கரங்கள் மலர்களைப் பிடிப்பதும் முகமன் தெரிவிப்பதுமாகத் தோன்றித் தோன்றி மறைந்தன. இடையறாத உரத்த ஆரவாரம் காற்றில் ஓயாமல் அதிர்ந்தொலித்தது:

"Viva il Socialismo!"*

"Evviva Italia!"

அனேகமாக எல்லாக் குழந்தைகளும் ஆட்களால் தூக்கிக் கொள்ளப்பட்டு விட்டார்கள். சிலர் பெரியவர்களின் தோள்கள் மேல் உட்கார்ந்திருந்தார்கள், வேறு சிலர் கடுகடுத்த எவர்களோ மீசைக்காரர்களின் அகன்ற மார்புகளுடன் அணைத்துத் தழுவப்பட்டிருந்தார்கள். இரைச்சலிலும் சிரிப்பிலும் கூச்சல்களிலும் இசையொலி அரிதாகவே காதில் பட்டது.

மாதர்கள் கூட்டத்தில் ஆழ்ந்து, வந்த குழந்தைகளில் எஞ்சியவர்களை எடுத்துக் கொண்டு, ஒருவரை ஒருவர் உரக்க விசாரித்தார்கள்:

"அன்னீத்தா, நீங்கள் இரண்டு பேரை எடுத்துக் கொள்கிறீர்களா?"

"ஆமாம், நீங்களுமா?"

"கூடவே, கால் இல்லாத மர்கரீத்தாவுக்காகவும் ஒரு குழந்தையை..."

எங்கும் பொங்கும் குதூகலம், உற்சவக் களி திகழும் முகங்கள், நீர் மல்கும், நல்லியல்பு ததும்பும் விழிகள். வேலை நிறுத்தக்காரர்களின் குழந்தைகள் சில இடங்களில் அதற்குள் ரொட்டியைச் சுவைத்துக் கொண்டிருந்தார்கள்.

"இப்படிச் செய்யலாம் என்று நம் காலத்தில் ஒருவரும் நினைக்கவில்லை!" என்றார் பறவையினது போன்ற மூக்குள்ள ஒரு முதியவர். அவருடைய பற்களுக்கு இடையே கரிய சுருட்டு புகைந்து கொண்டிருந்தது.

"பார்க்கப் போனால் ரொம்பச் சுலபம்..."

"ஆமாம்! எளியது, அறிவுக்கும் உகந்தது."

முதியவர் சுருட்டை வாயிலிருந்து எடுத்து, அதன் நுனியைப் பார்த்து, பெருமூச்சு விட்டு, சாம்பலைத் தட்டினார். பிறகு அண்ணன் தம்பி போலக் காணப்பட்ட பார்மாச் சிறு

* "சோஷலிசம் நீடூழி வாழ்க!"—ப-ர்.

வர்கள் இருவரைத் தம் அருகே கண்டு, முகத்தைப் பயங்கரமாக வைத்துக் கொண்டு, மயிர் சிலிர்க்க நின்ருர். சிறுவர்கள் அவரை ஆழ்ந்த நோக்குடன் பார்த்தார்கள். பெரியவர் கண்களை மூடும்படித் தொப்பியை இழுத்து விட்டுக் கொண்டார், கைகளைப் பரப்பினர். குழந்தைகள் ஒருவரோடு ஒருவர் ஒண்டிக் கொண்டு முகங்களைச் சுளித்துப் பின்னே நகர்ந்தார்கள். கிழவர் திடீரெனக் குத்திட்டு உட்கார்ந்து, சேவல் போல உரக்கக் கூவினர். அவருடைய கத்தல் கோழியின் கூவலைப் பெரிதும் ஒத்திருந்தது. குழந்தைகள் வெறுங் குதிகால்களால் கற்கள் மேல் தொப்பென்று அடித்தவாறு கலகலவெனச் சிரித்தார்கள். பெரியவர் எழுந்து, தொப்பியைச் சரிப்படுத்திக் கொண்டு, வேண்டியது எல்லாவற்றையும் செய்தாயிற்று என்று தீர்மானித்து, உறுதி அற்ற கால்களால் தள்ளாடியவாறு அப்பால் சென்ருர்.

நாடோடிக் கதைகளில் வரும் சூனியக்காரக் கிழவியினது போன்ற முகமும் எலும்பு துருத்திய மோவாயில் சாம்பல் நிற முரட்டு உரோமங்களுமாகக் கொலம்பஸ் சிலையின் பாத பீடத்தின் அருகே நின்று கொண்டிருந்தாள் கூனல் விழுந்த நரைத்தலையள் ஒருத்தி. சிவந்த கண்களை நிறம் மங்கிய சால்வை நுனியால் துடைத்தவாறு அவள் அழுது கொண்டிருந்தாள். கருமை படிந்த விகார முகத்தினளான அவள், ஆட்களின் உற்சாகம் பொங்கிய கூட்டத்தில் மிக விந்தையான முறையில் தனியளாகக் காணப்பட்டாள்...

கருங் குழலியான ஒரு ஜெனேவா மங்கை ஒரு சிறுவனைக் கையைப் பிடித்து நடத்திக் கொண்டு குதித்தாடியவாறு நடந்தாள். பையனுக்குச் சுமார் ஏழு வயது இருக்கும். அவன் பாதக் குறடுகளும் தோள் வரை வந்த தொப்பியும் அணிந்திருந்தான். தொப்பியைப் பிடர் மீது சாய்த்துக் கொள்வதற்காகச் சிறிய தலையைக் குலுக்கிக் கொண்டிருந்தான். அதுவோ, ஓயாமல் அவனுடைய முகத்தின் மேல் விழுந்த வண்ணமாய் இருந்தது. இளமாது சின்னத் தலையிலிருந்து தொப்பியை வெடுக்கெனக் கழற்றி உயரே வீசி ஆட்டியவாறு ஏதோ பாடி நகைத்தாள். சிறுவன் தலையைப் பின்னே சாய்த்து, முகம் மலர முறுவலித்துக் கொண்டு அவளை நோக்கினன். பின்பு தொப்பியை எட்டிப் பிடிப்பதற்காகத் துள்ளினன், இருவரும் பார்வையிலிருந்து மறைந்தார்கள்.

நெடிய மேனியும் மிகப் பெரிய திறந்த கரங்களும் கொண்டு தோல் முன்றானை அணிந்திருந்த ஒருவன் கிட்டத் தட்ட ஆறு வயதுள்ள சிறுமியைத் தோள் மேல் அமர்த்திப் பிடித்திருந்தான். சுண்டெலி போலச் சாம்பல் நிறமாக இருந் தாள் அந்தச் சிறுமி. நெருப்பு போன்ற செம்பட்டைத் தலை யனான ஒரு சிறுவனைக் கையைப் பிடித்து நடத்திக் கொண்டு அருகே சென்ற ஒரு மாதினிடம் அந்த ஆள் சொன்னான்:

''தெரியுமா, இந்த வழக்கம் நிலைபெற்று விட்டால்... நம்மை அடக்குவது கடினம் ஆகி விடும், இல்லையா?''

இவ்வாறு கூறி, வெற்றிப் பெருமிதம் துலங்க ஆழ்ந்த குரலில் உரக்க நகைத்து தனது சிறிய சுமையை நீலக் காற்றில் எறிந்து பிடித்தவாறு முழங்கினான்:

"Evviva Parma-a!"*

குழந்தைகளை அழைத்துக் கொண்டோ தூக்கிக் கொண் டோ ஆட்கள் போய் விட்டார்கள். கசங்கிய மலர்களும் மிட் டாய் சுற்றியிருந்த காகிதங்களும் சுமையாட்களின் மகிழ்ச்சி பொங்கும் குழுவும், அவற்றுக்கு மேலே, புது உலகைக் கண்டுபிடித்த மனிதரின் சால்பு திகழும் உருவச் சிலையும் எஞ்சி இருந்தன.

புது வாழ்வை எதிர் கொள்ளச் சென்ற மனிதர்களின் குதூகல ஆரவாரங்கள், பிரமாண்டமான எக்காளங்களிலி ருந்து போல வீதிகளிலிருந்து அழகாகப் பெருகின.

குடைவழி

அமைதியான நீல ஏரி உருகா வெண்பனி மகுடங்கள் புனைந்த மலைகளால் ஆழமாக விளிம்பு கட்டப்பட்டிருந்தது. கரும் பச்சை வலைப் பின்னல் போன்ற தோட்டங்களின் தொகுதி செழித்துத் தழைத்த மடிப்புக்களாக நீர் வரை வந்திருந்தது. கரையிலிருந்து நீரில் பார்த்துக் கொண்டிருந் தன வெள்ளைக் கட்டிடங்கள். அவை சர்க்கரையால் கட்டப் பட்டவை போலத் தோன்றின. சுற்றிலும் எல்லாம் குழந் தையின் அமைதியான கனவை நிகர்த்திருந்தன.

---

* பார்மா நீடூழி வாழ்க!—ப-ர்.

காலை வேளை. பூக்களின் மணம் மலைகளிலிருந்து இதமாகப் பெருகியது. சூரியன் அப்போதுதான் உதித்திருந்தது. மரங்களின் இலைகள் மேலும் புற்களின் தண்டுகள் மேலும் பனி நீர் இன்னமும் மினுமினுத்துக் கொண்டிருந்தது. சாம்பல் நிற நாடா போன்ற சாலை மலைகளின் அமைதியான கணவாய்களில் சென்று மறைந்தது. கற்கள் பாவிய சாலை வெல்வெட் போல மென்மையுள்ளதாகத் தோற்றம் அளித்தது. அதைக் கையால் தடவ ஆசை உண்டாயிற்று.

சரளைக் கற் குவியலின் அருகே உட்கார்ந்திருந்தான் வண்டு போன்று கறுத்த ஒரு தொழிலாளன். அவன் மார்பில் பதக்கம் இலகியது. முகத்தில் துணிவும் பரிவும் ததும்பின.

தொழிலாளன் வெண்கல நிறக் கைகளை முழங்கால்கள் மேல் வைத்துக் கொண்டு தலையைச் சற்று நிமிர்த்தி, செஸ்ட்நட் மரத்தடியில் நின்று கொண்டிருந்த வழிப்போக்கனை நோக்கி, அவனிடம் சொன்னான்:

''சிஞ்ஞோர்,* இது சிம்ப்ளோன் குடைவழியில் வேலை செய்ததற்காகக் கிடைத்த பதக்கம்.''

இவ்வாறு சொல்லி, விழிகளை மார்பின் மீது தாழ்த்தி, அழகிய உலோகத் துண்டைப் பார்த்துப் பரிவுடன் குறுநகை செய்தான்.

''ஏ, எந்த வேலையுமே அதன் மேல் அன்பு ஏற்படும் வரையில் கடினம் தான். ஆனால் அப்புறம் அது உற்சாகப்படுத்தும், சுளுவாகி விடும். இருந்தாலும்—ஆமாம், கடினமாய்த்தான் இருந்தது!''

அவன் சூரியனை நோக்கிப் புன்னகை செய்து மெதுவாகத் தலையை அசைத்தவன், திடீரென உற்சாகம் அடைந்து கையை ஆட்டினான். அவன் கரிய விழிகள் ஒளி வீசத் தொடங்கின.

''பயமாகக் கூட இருந்தது, சில சமயங்களில். பூமியும் எதையாவது உணரத் தானே வேண்டும், இல்லையா? மலையைக் குடைந்து இந்தக் காயத்தை ஏற்படுத்தியபடி நாங்கள் பூமியின் ஆழத்தில் புகுந்த போது, அங்கே, உள்ளே, பூமி கடுப்புடன் எங்களை எதிர்கொண்டது. அது

---

* திருவாளர் என்று பொருள்படும் இத்தாலியச் சொல். —மொ-ர்.

எங்கள் மேல் வெப்பப் பெருமூச்சை விட்டது. அந்த மூச்சி ஞல் எங்கள் நெஞ்சுத் துடிப்பு நின்று விட்டது, தலை கனத் தது, எலும்புகளில் நோவு உண்டாயிற்று. பலருக்கு இந்த அனுபவம் ஏற்பட்டது! பிறகு பூமி மனிதர்கள் மேல் கற்களை எறிந்தது, கொதி நீரால் எங்களை முழுக்காட்டியது. அது மிகவும் பயங்கரமாக இருந்தது! சில வேளைகளில் நெருப்பு வெளிச்சத்தில் நீர் சிவப்பாகி விடும். அப்போது என் தகப் பஞர் என்னிடம் சொல்லுவார்: 'பூமியை நாம் காயப்படுத் திஞேம், அது நம் எல்லோரையும் தன் குருதியால் மூழ்கடிக் கும், பொசுக்கி விடும், பார்!' நிச்சயமாக இது வெறும் கற் பனைதான். ஆஞல் பூமியின் ஆழத்தில், புழுக்கம் நிறைந்த இருட்டுக்கும் நீரின் பரிதாபகரமான சளப்பொலிக்கும் கல் மேல் இரும்பின் நெறுநெறுப்புக்கும் நடுவே, இந்த மாதிரிச் சொற்களைக் கேட்கும் போது கற்பனைகளைப் பற்றி நான் மறந்து விடுவேன். அங்கே எல்லாமே நம்ப முடியாததாக இருந்தது, அன்புள்ள சிஞ்ஞோர். மனிதர்களான நாங்கள் இவ்வளவு சின்னவர்கள். இந்த மலையோ வானை முட்டுகிறது. இந்த மலையின் கருப்பையை நாங்கள் குடைந்தோம்... நேரில் பார்த்தால் தான் இது புரியும்! அற்ப மனிதர்களான நாங்கள் குடைந்த கரிய குழியைப் பார்க்க வேண்டும். காலை யில், சூரியன் உதித்த போது நாங்கள் அதற்குள் போஞேம்· புவியின் கருப்பைக்குள் புகுந்த எங்களைச் சூரியன் வருத்தத் தோடு நோக்கிக் கொண்டிருந்தது. இயந்திரங்களையும் மலை யின் ஏங்கிய முகத்தையும் பார்க்க வேண்டும், அதன் ஆழத் தில் இருண்ட ஓசையையும் பைத்தியக்காரனின் கெக்கலி போன்ற வெடியதிர்ச்சிகளின் எதிரொலியையும் கேட்க வேண்டும், அப்போதுதான் புரியும்.''

அவன் தன் கைகளைப் பார்வையிட்டான், நீல மேல் சட்டையில் பதக்கத்தைச் சரிப்படுத்திஞன், மெதுவாகப் பெரு மூச்சு விட்டான்.

''மனிதன் வேலை செய்யத் திறன் உள்ளவன்!'' என்று பெருமிதத்தோடு தொடர்ந்தான் தொழிலாளன். ''ஓ, சிஞ் ஞோர், சின்ன மனிதன் வேலை செய்ய விரும்பும் போது வெல்ல முடியாத சக்தி ஆகி விடுகிருன்! முடிவில் இந்தச் சின்ன மனிதன் விரும்புவதை எல்லாம் செய்து விடுவான், நிச்சயமாக. என் தகப்பஞர் முதலில் இதை நம்பவில்லை.

'' 'மலையை ஊடுருவி ஒரு நாட்டிலிருந்து மறு நாடு வரை குடைவது பூமியை மலைச் சுவர்களால் பகுதிகளாகப் பிரித்த கடவுளுக்கு எதிரான செயல். நீங்களே காண்பீர்கள், மரியம்மை நமக்குத் துணை செய்ய மாட்டாள்!' அவர் சொன்னது தப்பு. மரியம்மை தன்னை நேசிப்பவர்கள் எல்லோருக்கும் துணை செய்கிறாள். பிற்பாடு தகப்பனாரும் இப்போது நான் உங்களிடம் சொல்கிற கிட்டத்தட்ட இதே மாதிரி எண்ணத் தலைப்பட்டார், ஏன் என்றால் தாம் மலையைக் காட்டிலும் உயர்ந்தவர், அதிக பலசாலி என்று அவர் உணர்ந்தார். ஆனால் ஒரு காலத்தில், திருநாள் தோறும் உணவு மேசை அருகே மதுப் புட்டியை எதிரே வைத்தவாறு உட்கார்ந்து எனக்கும் மற்றவர்களுக்கும் அறிவுறுத்துவார்:

'' 'தேவனின் குழந்தைகளே' (இது அவருக்குப் பிடித்த வாசகம், ஏனென்றால் அவர் நல்லவர், மத நம்பிக்கை உள்ளவர்), 'தேவனின் குழந்தைகளே, பூமியோடு இப்படிப் போராடுவது கூடாது. தனது காயங்களுக்காக அது பழி வாங்கும், வெல்லப்படாததாக விளங்கும்! நீங்களே காண்பீர்கள்: மலையை நாம் இதயம் வரை குடைந்த பிறகு அதைத் தொடும் போது இதயம் நம்மைப் பொசுக்கும், நம் மேல் நெருப்பை உமிழும், ஏனென்றால் பூமியின் இதயம் நெருப்பு மயமானது, இதை எல்லோரும் அறிவார்கள்! நிலத்தைப் பண்படுத்துவது—இது அதற்குப் பேறு காலத்தில் உதவுவது போல— நமக்குப் போதிக்கப்பட்டிருக்கிறது, ஆனால் நாமோ அதன் முகத்தை, அதன் வடிவத்தை, விகாரப்படுத்துகிறோம். பாருங்கள்: நாம் மலையை மேலும் மேலும் தோண்டத் தோண்டக் காற்றின் சூடு அதிகமாகிக் கொண்டு போகிறது, மூச்சு விடுவது அதிகக் கடினம் ஆகிக் கொண்டு போகிறது'...''

தொழிலாளன் இரு கைகளாலும் மீசையை முறுக்கியவாறு அடக்கமாகச் சிரித்தான்.

''இப்படி எண்ணியவர் அவர் ஒருவர் மட்டும் அல்ல, அது சரியாகவும் இருந்தது: நாங்கள் எவ்வளவு தூரம் உள்ளே போனோமோ, குடைவழியில் அவ்வளவு அதிக வெப்பமாக இருந்தது, ஆட்கள் அவ்வளவு அதிகமாக நோய்வாய்ப்பட்டுத் தரையில் விழுந்தார்கள். கொதி நீரூற்றுகள் மேலும் மேலும் உக்கிரமாகப் பொங்கிப் பெருகின, பாறை பெயர்ந்து சிதறிற்று, எங்களில் லுகானோக்காரர்கள் இருவருக்குப்

பைத்தியம் பிடித்து விட்டது. எங்கள் தங்கிடத்தில் இரவுகளில் நிறையப் பேர் புலம்பினுர்கள், முனகினுர்கள், ஏதோ கிலி கொண்டு படுக்கையிலிருந்து தாவிக் குதித்தார்கள்...

'' 'நான் சொன்னது சரி இல்லையா என்ன?' என்ருர் தகப்பனுர். அவருடைய விழிகளில் திகில் நிறைந்திருந்தது. அவர் வரவர அடிக்கடியும் அதிகக் கம்மலாகவும் இருமினுர். 'நான் சொன்னது சரி இல்லையா என்ன? இது இருக்கிறதே, பூமி, வெல்ல முடியாதது!' என்ருர்.

''முடிவில் படுத்தவர், பிறகு எழுந்திருக்கவே இல்லை. உறுதியான ஆள், என் தகப்பனுர். தன் மதிப்பை அறிந்த மனிதனுக்கு ஏற்றபடி விடாப்பிடியாக, குறைகள் சொல்லாமல், மூன்று வாரங்களுக்கு மேல் சாவுடன் போராடினுர்.

'' 'பாஓலோ, என் வேலை முடிந்து விட்டது' என்று ஒரு நாள் இரவில் என்னிடம் சொன்னுர். 'எச்சரிக்கையாய் இரு, வீடு திரும்பு. மரியம்மை உனக்குத் துணை வருவாளாக!' பின்பு கண்களை மூடிக் கொண்டு நெடு நேரம் பேசாதிருந்தார். அவருக்கு மூச்சு திணறிற்று.''

தொழிலாளன் எழுந்து நின்று மலையை ஏறிட்டு நோக்கி, படு வலிவுடன் சோம்பல் முறிக்கவே, தசை நாண்கள் சடசடத்தன.

''தகப்பனுர் என் கையைப் பிடித்து என்னைத் தன் அருகே இழுத்து, சொன்னுர்—கடவுள் ஆணையாக, சிஞ்ஞோர்!—'கேள், பாஓலோ, என் மகனே, என்ன ஆனுலும் நான் நினைக்கிறேன் இந்த வேலை நிறைவேறும் என்று. நாமும் மறு திசையிலிருந்து வருகிறவர்களும் மலையில் ஒருவரை ஒருவர் கண்டு கொள்வோம், நாம் சந்திப்போம்—இதை நீ நம்புகிருயா?' நான் நம்பினேன். 'நல்லது மகனே! அப்படித்தான் செய்ய வேண்டும். எல்லாக் காரியங்களையும் அவை நலமே முடியும் என்பதிலும் கடவுள் மேலும் நம்பிக்கையோடு செய்ய வேண்டும். மரியம்மையின் துதிகளால் மகிழ்ந்து கடவுள் நல்ல காரியங்களுக்குத் துணை செய்கிருர். உன்னிடம் ஒன்று கேட்டுக் கொள்கிறேன் மகனே, இந்தக் காரியம் நடந்தால், ஆட்கள் சந்தித்து விட்டால், என் கல்லறைக்கு வந்து, ''அப்பா, செய்தாயிற்று!'' என்று சொல்லு, நான் தெரிந்து கொள்வதற்காக!'

''இது நன்ருய் இருந்தது, அன்புள்ள சிஞ்ஞோர், ஆகவே நான் அவருக்கு வாக்களித்தேன். இந்த வார்த்தைகளைச் சொன்னதற்கு ஐந்து நாட்களுக்குப் பிறகு அவர் இறந்து போஞர். குடைவழியில் தான் வேலை செய்த இடத்தில் தன்னைப் புதைக்கும்படி இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன் என்னையும் மற்றவர்களையும் கேட்டுக் கொண்டார், வெகுவாகக் கேட்டுக் கொண்டார், ஆனுல் இது வெறும் பிதற்றல் என்று நினைக்கிறேன்...

''நாங்களும் மறு புறமிருந்து வந்தவர்களும் தகப்பனுரின் சாவுக்குப் பதின்மூன்று வாரங்களுக்குப் பிறகு மலையில் சந்தித்தோம். அன்று நாங்கள் களி வெறியில் இருந்தோம், சிஞ்ஞோர்!ஓ,அங்கே,தரைக்கு அடியில், இருட்டில், வேருெரு வேலையின் சத்தத்தை, தரைக்கு அடியில்—உங்களுக்குப் புரிகிறதா, சிஞ்ஞோர்—சின்னவர்களான எங்கள் எல்லோரையும் ஒரு மொத்தமாக நசுக்கித் துவைக்க வல்ல பூமியின் பெரும் பாரத்துக்கு அடியில், எங்களை எதிர்கொள்ள வந்து கொண்டிருந்தவர்களின் இரைச்சலை நாங்கள் கேட்ட போது எப்படி இருந்தது தெரியுமா!

''ஒரேயடியாக அதிர்ந்து ஒலித்த இந்தச் சத்தங்களை நாங்கள் பல நாட்கள் கேட்டுக் கொண்டிருந்தோம். நாளுக்கு நாள் அவை மேலும் மேலும் அதிகமாகப் புரியக் கூடியவையும் தெளிவாக விளங்குபவையும் ஆகிக் கொண்டு போயின. வெற்றியாளர்களின் மகிழ்ச்சி பொங்கும் வெறி எங்களை ஆட்கொண்டது. தீய ஆவிகள் போல, உடல்கள் இல்லாதவர்கள் போல, களைப்பை உணராமலும் கட்டளைகளைக் கோராமலும் நாங்கள் வேலை செய்தோம். இது நன்ருய் இருந்தது, வெயில் நாளில் நடனம் போல, சத்தியமாகச் சொல்கிறேன்! நாங்கள் எல்லோரும் குழந்தைகள் போல இனியவர்களும் நல்லவர்களும் ஆகி விட்டோம். நாம் நீண்ட பல மாதங்களாக அகழெலிகள் போன்று தோண்டிப் புதைந்திருந்த தரைக்கு அடியில், இருட்டில், மனிதனைச் சந்திக்கும் ஆசை எவ்வளவு வலியது, எவ்வளவு பொறுக்க முடியாதபடி ஆவேசம் உள்ளது என்பதை, ஆகா, நீங்கள் அறிந்தால் என்னைப் புரிந்து கொள்வீர்கள்!''

தொழிலாளனுடைய முகம் குப்பெனச் சிவந்தது. கேட்டுக் கொண்டிருந்தவனை நெருங்கி, மனிதாபிமானம்

ததும்பும் தன் விழிகளாய் அவனுடைய கண்களை நேரே பார்த்து, தணிந்த குரலில் உவகையுடன் தொடர்ந்தான்:

''கடைசியில் பாறைப் பாளம் நொறுங்கி, திறப்பில் தீவட்டியின் சிவப்பு நெருப்பு சுடரவும் ஆனந்தக் கண்ணீரால் நனைந்த யாருடையவோ முகம் பளிச்சிடவும் தொடங்கின. இன்னும் தீவட்டிகளும் முகங்களும் ஒளி வீசின. வெற்றி முழக்கங்களும் மகிழ்ச்சிக் கூச்சல்களும் ஆர்த்தன. ஓ, அது என் வாழ்க்கையில் சிறந்த நாள். அதை நினைவுபடுத்திக் கொண்டு, இல்லை, நாம் வாழ்க்கையை வீணாக்கவில்லை என்று நான் உணர்கிறேன்! இருந்தது வேலை, என்னுடைய வேலை, புனித மான வேலை, சிஞ்ஞோர், தெரிந்து கொள்ளுங்கள்! நாங்கள் தரையின் அடியிலிருந்து வெயிலுக்கு வந்ததும் பல பேர் நிலத்தில் மார்பு படப் படுத்து அதை முத்தம் இட்டார்கள், அழுதார்கள்—அந்தக் காட்சி கற்பனைக் கதை போல அவ் வளவு நன்றாக இருந்தது! ஆம், வெல்லப்பட்ட மலையை ஆட்கள் முத்தம் இட்டார்கள்; தரையை முத்தம் இட்டார்கள்—அன்றைய தினம் நிலம் எனக்குச் சிறப்பாக அன்புக்கு உரியதும் புரியக் கூடியதும் ஆகி விட்டது, சிஞ்ஞோர். பெண் மேல் காதல் கொள்வது போல அதன் மேல் நான் காதல் கொண்டு விட்டேன்!

''நான் தகப்பனாரிடம் கட்டாயம் போனேன், ஆமாம் ஆமாம்! சந்தேகம் இல்லாமல். இறந்தவர்களால் எதையும் செவியேற்க முடியாது என்பதை அறிவேன், ஆனாலும் போனேன். எவர்கள் நமக்காக உழைத்தார்களோ, நமக்குக் குறையாமல் துன்பங்கள் பட்டார்களோ அவர்களுடைய விருப்பத்தை மதிக்க வேண்டும், அல்லவா?

''ஆம், ஆம், நான் அவருடைய கல்லறைக்குப் போய், தரையைக் காலால் தட்டி அவர் விரும்பியபடியே சொன்னேன்:

'' 'அப்பா, செய்தாயிற்று! மனிதர்கள் வென்று விட்டார்கள். செய்தாயிற்று, அப்பா!' ''

துரோகியின் தாய்

தாயார்களைப் பற்றி முடிவில்லாமல் பேசலாம்.

நகரம் முற்றுகைக்கு உள்ளாகி, இரும்புக் கவசம் பூண்ட பகைவர்களின் நெருக்கமான வளையத்தால் பல வாரங்க

ளாகச் சூழப்பட்டிருந்தது. இரவு வேளைகளில் நெகிடிகள் மூட்டப்பட்டன. அவற்றின் நெருப்பு கரிய இருளிலிருந்து மிகப் பல செவ்விழிகளால் நகர மதில்களை நோக்கியது. அவை வன்மக் களிப்புடன் தழல் வீசின. பதிபோட்டுக் காத்திருப்பதைக் காட்டிய அந்த எரிவு முற்றுகைக்கு உள்ளான நகரத்தில் ஏக்கம் நிறைந்த எண்ணங்களை எழுப்பியது.

பகைவர்களின் சுருக்கு இடைவிடாமல் மேலும் மேலும் வலிவாக இறுகிக் கொண்டு போவதையும் அவர்களுடைய கரு நிழல்கள் நெருப்புகளைச் சுற்றித் தோன்றித் தோன்றி மறைவதையும் நகரத்தார் மதில்களிலிருந்து கண்டார்கள். வயிறுரத் தின்ற குதிரைகளின் கனைப்புகள் கேட்டன, ஆயுதங்களின் கணகணப்பும் உரத்த கெக்கலியும் காதுகளுக்கு எட்டின, வெற்றியில் உறுதியான நம்பிக்கை கொண்ட மனிதர்களின் மகிழ் பொங்கும் பாட்டுக்கள் முழங்கின. பகைவனின் சிரிப்பையும் பாட்டையும் விடக் கேட்கத் துன்பம் தருபவை வேறு எவை?

நகரத்துக்கு நீர் வழங்கிய எல்லா ஓடைகளையும் பகைவர்கள் பிணங்களால் நிரப்பி விட்டார்கள். மதில்களைச் சூழ்ந்திருந்த முந்திரித் தோட்டங்களை அவர்கள் பொசுக்கி விட்டார்கள், வயல்களை மிதித்துத் துவைத்து விட்டார்கள், பழத் தோட்டங்களை வெட்டிச் சாய்த்து விட்டார்கள். நகரம் எல்லாப் புறங்களிலும் திறந்து கிடந்தது. பகைவர்களின் பீரங்கிகளும் துப்பாக்கிகளும் அனேகமாக நாள்தோறும் அதன் மேல் இரும்பையும் காரீயத்தையும் மழையாய்ப் பொழிந்தன.

சண்டைகளால் களைத்துச் சோர்ந்து அரைப் பட்டினியாக இருந்த படையினரின் பிரிவுகள் நகரின் குறுகிய வீதிகளில் ஏக்கத்துடன் நடை போட்டன. காயமடைந்தவர்களின் முனகல்களும் சன்னிக் கூச்சல்களும் மாதர்களின் துதிகளும் குழந்தைகளின் அழுகைகளும் வீடுகளின் சன்னல்களிலிருந்து பெருகின. மக்கள் உளச் சோர்வுடன் தாழ்ந்த குரல்களில் உரையாடினார்கள், ஒருவர் பேச்சை மற்றவர் அரை வார்த்தையில் இடை முறித்து, பகைவர்கள் தாக்குதொடங்கி விட்டார்களோ என்று இறுக்கத்துடன் உற்றுக் கேட்டார்கள்.

மாலை முதல் வாழ்க்கை சிறப்பாகத் தாங்க முடியாதது

ஆயிற்று. அப்போது நிலவிய நிசப்தத்தில் முனகல்களும் அழுகைகளும் அதிகத் தெளிவாகவும் அதிக அளவிலும் ஒலித்தன. அப்போது தொலை தூர மலைகளின் கணவாய்களிலிருந்து கரு நீல நிழல்கள் வெளியே ஊர்ந்து பகைவர் பாசறையை மறைத்தவாறு பாதி இடிந்த மதில்களை நோக்கி நகர்ந்தன. வாள்களின் அடிகளால் உடைந்து தவறிவிட்ட கேடயம் போன்று மலைகளின் கூரிய கரு முடிகளுக்கு மேலே தோற்றம் அளித்தது நிலா.

உதவி வரும் வாய்ப்பு இன்றி, உழைப்பாலும் பட்டினியாலும் நொந்து தளர்ந்து, நாளுக்கு நாள் நம்பிக்கையை இழந்து வந்த மக்கள் இந்த நிலாவையும் மலைகளின் கூர் முடிகளையும் கணவாய்களின் கரிய வாய்களையும் பகைவர்களின் ஆரவாரிக்கும் பாசறையையும் அச்சத்துடன் நோக்கினார்கள். எல்லாம் அவர்களுக்குச் சாவை நினைப்பூட்டின. ஒரு விண்மீன் கூட அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் விதத்தில் சுடரவில்லை.

வீடுகளில் விளக்கேற்ற மக்கள் அஞ்சினார்கள். வீதிகள் அடர் இருளில் ஆழ்ந்திருந்தன. தலையிலிருந்து கரிய மேலங்கியால் போர்த்துக் கொண்டிருந்த ஒரு மாது ஆற்றின் ஆழத்தில் தென்படும் மீன் போல இந்த இருளில் அரவமின்றித் தோன்றித் தோன்றி மறைந்தாள்.

அவளைக் கண்ட மனிதர்கள் ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டார்கள்:

''அவளா இவள்?''

''அவள்தான்!''

பின்பு வாயில்களுக்கு அடியில் மாடக்குழிகளில் மறைந்து கொண்டார்கள், அல்லது, தலைகளைத் தொங்க விட்டவாறு பேசாமல் அவளைக் கடந்து சென்றார்கள். நகர்க் காவலர்களின் தலைவர்கள் அவளைக் கடுமையாக எச்சரித்தார்கள்:

''நீங்கள் மறுபடி வீதியில் நடமாடுகிறீர்களா, மோன்னா* மரியான்னா? கவனமாய் இருங்கள், உங்களை யாரேனும் கொன்று விடலாம். அப்போது கொலையாளியை ஒருவரும் தேடப் போவதில்லை...''

---

* திருவாட்டி என்று பொருள்படும் இத்தாலியச் சொல் —மொ-ர்.

அவள் மேனியை நிமிர்த்தி நின்று எதிர்பார்த்தாள். ஆனால் அவளைத் தாக்கத் தயங்கியோ அல்லது அருவருப் பினாலோ காவலர்கள் அவளைக் கடந்து சென்று விட்டார் கள். ஆயுதமேந்தியவர்கள் பிணத்தினிடமிருந்து விலகுவது போல அவளிடமிருந்து விலகினார்கள். அவள் இருளில் விடப் பட்டாள். சந்தடி இன்றி, தனியாக மீண்டும் எங்கோ நடந் தாள். ஊமையளாய், கரியளாய், நகரின் துன்பம் வடிவெடுத் தது போலத் தெருத் தெருவாக அலைந்தாள். எங்கும் அவளைப் பின்தொடர்ந்து முறையிடுபவை போன்று வந்தன துயர ஒலிகள்: முனகல்களும் அழுகைகளும் பிரார்த்தனை களும் வெற்றியில் நம்பிக்கையை இழந்து விட்ட படை யினரின் ஏங்கிய உரைகளும்.

குடிமகளும் தாயுமான அவள் மகனையும் தாயகத்தையும் பற்றி எண்ணமிட்டாள். நகரைத் தாக்கி அழித்துக் கொண் டிருந்த மனிதர்களுக்குத் தலைவனாய் இருந்தான் அவளுடைய மகன், உல்லாசப் பேர்வழி, இரக்கம் அற்றவன், அழகன். தாயகத்துக்குத் தனது விலைமிக்க பரிசு என்றும், தான் பிறந்து மகனைப் பெற்று ஊட்டி வளர்த்த கூடு ஆன நகரத்தின் மக் களுக்கு உதவும் பொருட்டுத் தன்னால் தோற்றுவிக்கப்பட்ட நல்ல ஆற்றல் என்றும் எண்ணி அண்மைக் காலம் வரை அவள் பெருமை கொண்டிருந்தாள். அவளுடைய முன்னோர் எந்தத் தொன்மை வாய்ந்த கற்களால் வீடுகள் கட்டி நகரின் மதில் களை எழுப்பி இருந்தார்களோ அவற்றுடனும் அவளுடைய நெருங்கிய உறவினர்களின் எலும்புகள் எந்த மண்ணில் கிடந்தனவோ அதனுடனும் மக்களின் செவிவழிக் கதைகள், பாட்டுக்கள், வருங்கால நம்பிக்கைகள் ஆகியவற்றுடனும் துணிக்க முடியாத பல நூறு நூல்கள் இந்த இதயத்தைப் பிணித்திருந்தன. தனக்கு யாவரிலும் நெருங்கியவனை இழந்து இந்த இதயம் அழுதது. அது தராசு போல இருந்தது, ஆனால் மகன் மேலும் நகர் மேலும் தனது அன்பை அதில் எடை போட்ட போது எது இலேசு, எது கனம் என்று அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இவ்வாறு அவள் இரவுகளில் வீதிகளின் வழியே நடந் தாள். பலர் அவளை அடையாளம் கண்டு கொள்ளாமல் திகில் அடைந்தார்கள். அவளுடைய கரிய உருவம் எல்லோ ரையும் நெருங்கிக் கொண்டிருந்த சாவின் பரு வடிவம் என்று



நினைத்தார்கள். அடையாளம் தெரிந்ததுமோ, துரோகியின் தாயை விட்டு விலகி மௌனமாக அப்பால் சென்றார்கள்.

ஒரு நாள், நகர மதில் சுவரின் அருகே ஆளற்ற மூலையில் வேறொரு மாதை அவள் கண்டாள்: ஒரு பிணத்தின் பக்கத்தில் நிலத்தின் துண்டு போல அசையாமல் முழந்தாள் படியிட்டு, துயர் தோய்ந்த வதனத்தை விண்மீன்களை நோக்கி நிமிர்த்தியவாறு பிரார்த்தனை செய்தாள் அந்த மாது. அவளுடைய தலைக்கு மேலே, மதில் சுவற்றின் மீது, காவற் படையினர் தணிந்த குரலில் உரையாடிக் கொண்டிருந்தார்கள். ஆயுதங்கள் கொத்தளக் கற்கள் மேல் உராய்ந்து நெறு நெறுத்தவாறு இருந்தன.

துரோகியின் தாய் கேட்டாள்:

''கணவனா?''

''இல்லை.''

''சகோதரனா?''

''மகன். கணவர் பதின்மூன்று நாட்களுக்கு முன் கொல்லப்பட்டார், இவன் இன்றைக்கு.''

கொல்லப்பட்டவனின் தாய் இவ்வாறு கூறி விட்டு எழுந்து நின்று பணிவுடன் சொன்னாள்:

''மரியம்மை எல்லாவற்றையும் காண்கிறாள், எல்லாவற்றையும் அறிகிறாள், நான் அவளுக்கு நன்றி செலுத்துகிறேன்!''

''எதற்காக?'' என்று கேட்டாள் முதலவள். மற்றவள் அவளுக்கு மறுமொழி பகர்ந்தாள்:

''தாயகத்துக்காகப் போரிட்டு அவன் நேர்மையாக உயிர் துறந்தபின், இப்போது நான் உள்ளதைச் சொல்ல முடியும்: அவன் எனக்கு அச்சம் ஊட்டினான். அவன் ஆழ்ந்த சிந்தனை இல்லாதவன், உல்லாச வாழ்க்கையில் அளவு கடந்த பற்று வைத்திருந்தான். இதற்காக அவன் நகருக்குத் துரோகம் செய்து விடுவானோ என்று பயமாய் இருந்தது. மரியான்னாவின் மகன், ஆண்டவனுக்கும் மனிதர்களுக்கும் பகைவன், நம்முடைய பகைவர்களின் தலைவன், அப்படித்தானே செய்தான், அவன் கடைத்தேறாமல் போக, அவனைச் சுமந்த கருப்பை நாசமாய்ப் போக!..''

மரியான்னா முகத்தை மூடிக் கொண்டு அப்பால் சென்றாள். மறு நாள் காலையில் நகரக் காப்பாளர்களிடம் போய்ச் சொன்னாள்:

''என் மகன் உங்கள் பகைவன் ஆகி விட்டதற்காக என்னைக் கொல்லுங்கள், அல்லது எனக்கு வாயிலைத் திறந்து விடுங்கள், நான் அவனிடம் போகிறேன்...''

அவர்கள் பதில் சொன்னார்கள்:

''நீ மனிதப் பிறவி, தாயகம் உனக்கு அன்புக்கு உரியதாக இருக்க வேண்டும். உன் மகன் எங்களில் ஒவ்வொருவருக்கும் போலவே உனக்கும் பகைவன்.''

''நான் தாய். நான் அவனை நேசிக்கிறேன். அவன் இப்படிப்பட்டவன் ஆனதற்குப் பொறுப்பாளி நானே என்று நினைக்கிறேன்.''

அப்போது அவர்கள் அவளை என்ன செய்வது என்று கலந்து ஆலோசித்து இப்படித் தீர்மானித்தார்கள்:

''முறைப்படி, மகனுடைய பாவத்துக்காக உன்னைக் கொல்ல எங்களால் முடியாது. இந்தப் பயங்கரமான பாவத்தைச் செய்யும்படி நீ அவனுக்கு அறிவுறுத்தி இருக்க மாட்டாய் என்பதை நாங்கள் அறிவோம். நீ எவ்வளவு துன்பப் படுகிறாய் என்பதை ஊகிக்கிறோம். ஆனால் நகரத்துக்கு நீ பிணையாகக் கூடத் தேவை அற்றவள்—உன்னுடைய மகன் உனக்காகக் கவலைப்படவில்லை. நாங்கள் நினைக்கிறோம், அவன் உன்னை மறந்து விட்டான் என்று, பேய்ப் பயல். இது தான் உனக்குத் தண்டனை, அதற்கு உரியவள் என்று நீ எண்ணினால்! இது சாவை விடப் பயங்கரமானது என்று எங்களுக்குத் தோன்றுகிறது!''

''ஆமாம்!'' என்றாள் அவள். ''இது அதிகப் பயங்கரமானது.''

அவர்கள் வாயிலை அவளுக்குத் திறந்து, நகரத்திலிருந்து வெளியேற அவளை அனுமதித்தார்கள். தன் மகன் பெருகச் செய்த குருதியில் ஆழமாக ஊறி இருந்த தாய்நிலத்தின் வழியே அவள் சென்றதை மதிற் சுவர் மேலிருந்து அவர்கள் நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்: இந்த நிலத்திலிருந்து கால்களை மிகுந்த சிரமத்துடன் அகற்றியவாறு அவள் மெதுவாக நடந்தாள், நகரைக் காத்தவர்களின் பிணங்களுக்கு முன் வணங்கினாள், உடைந்த ஆயுதத்தை அருவருப்புடன் எற்றித் தள்ளினாள்—தாய்மார் தாக்கும் ஆயுதங்களை வெறுக்கிறார்கள், உயிரைக் காக்கும் கருவிகளை மட்டுமே அவர்கள் ஏற்கிறார்கள்.

மேலங்கிக்குள் நீர் நிறைந்த கிண்ணத்தைக் கைகளில் ஏந்தியிருப்பவள் போலவும் அதைத் தளம்பச் செய்ய அஞ்சு பவள் போலவும் காணப்பட்டாள் அவள். தொலேவில் செல்லச் செல்ல அவள் உருவில் சிறியவள் ஆகிக் கொண்டு போனுள். அவளோடு கூடவே உளச் சோர்வும் புகலின்மை யும் தங்களிடமிருந்து விலகிச் செல்வது போல மதிற்சுவரி லிருந்து அவளேப் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்குத் தோன்றியது.

அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் அவள் நடு வழியில் நின்று, மேலங்கியின் தலேமுடியைக் கழற்றி விட்டு நெடுநேரம் நகரத்தின் மீது பார்வை செலுத்திக் கொண் டிருந்தாள். அங்கே, பகைவரின் பாசறையில் இருந்தவர்கள் வயல்களுக்கு நடுவே தனியளாக நின்ற அவளேக் கவனித் தார்கள். அவசரப்படாமல், எச்சரிக்கையுடன் அவளிடம் ஓடி வந்தன அவளேப் போன்றே கரிய உருவங்கள்.

அருகே வந்து அவள் யார், எங்கே போகிருள் என்று கேட்டார்கள் பகைப் படையினர்.

''உங்கள் தலேவன் என் மகன்'' என்று அவள் சொன்னுள். ஒரு படையினன் கூட இதைச் சந்தேகிக்கவில்லே. அவளுடைய மகன் எப்பேர்ப்பட்ட அறிவாளி, வீரன் என்று புகழ்ந்தவாறு அவர்கள் அவள் அருகாக நடந்தார்கள் அவள் பெருமிதத் துடன் தலேயை நிமிர்த்தியபடி அவர்கள் சொன்னதைக் கேட்டாள், ஆனுல் வியப்பு அடையவில்லே—அவளுடைய மகன் அப்படிப்பட்டவனுகத்தான் இருக்க வேண்டும்!

எவனே அவன் பிறப்பதற்கு ஒன்பது மாதங்கள் முன் பிருந்தே அவள் அறிந்திருந்தாளோ அந்த மனிதனுக்கு முன், எவனேத் தன்னுடைய இதயத்துக்கு வெளியே அவள் ஒரு போதும் உணரவில்லேயோ அவனுக்கு முன், நின்ருள் அவள். அவன் பட்டும் வெல்வெட்டுமாக அவள் முன்னே நின்ருன். அவனது ஆயுதங்களில் நன்மணிகள் பதித்திருந்தன. எல்லாம் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருந்தது. இந்தக் கோலத்தில்தான்—செல்வனுகவும் பெயர் பெற்றவனுகவும் அன்புக்கு உரியவனுகவும் தான்—அவள் அவனேப் பல முறை கனவில் கண்டிருந்தாள்.

''அம்மா!'' என்று அவன் அவளுடைய கையை முத்த மிட்டான். ''நீ என்னிடம் வந்திருக்கிருய், ஆகவே என்னேப்

புரிந்து கொண்டாய் என்று தெரிகிறது. நாளைக்குக் கைப் பற்றி விடுகிறேன் நான், இந்தப் பாழும் நகரத்தை!''

''நீ பிறந்த நகரம் இது'' என்று அவள் நினைவூட்டினுள்.

தன் சாதனைகளால் மதி மயங்கி, இன்னும் பெரும் புகழ் பெறும் வேட்கையால் வெறி கொண்டு இளமையின் துணிகர ஆவேசத்துடன் அவன் அவளிடம் சொன்னுன்:

''நான் உலகத்துக்காக, அதை வியப்பால் மலேக்க வைக்கும் பொருட்டு, உலகில் பிறந்தேன்! உனக்காகவே நான் இந்த நகரத்தை அழிக்காமல் விட்டிருந்தேன்—இது என் காலில் உறுத்தும் சிலாம்பு போல நான் விரும்புகிற அளவு வேகமாகப் புகழை அடைய விடாமல் இடைஞ்சல் செய்கிறது. ஆனுல் இப்போது—நாளைக்கு—பிடிவாதக்காரர்களின் இந்தக் கூட்டை அழித்து விடுவேன்!''

''அங்கே ஒவ்வொரு கல்லும் உன்னைக் குழந்தையாக அறிந்து நினைவு வைத்திருக்கிறது'' என்ருள் அவள்.

''மனிதன் அவற்றைப் பேச வைக்காவிட்டால் கற்கள் பேச மாட்டா. மலைகள் என்னைப் பற்றிப் பேசட்டும், இதுவே நான் விரும்புவது!''

''ஆனுல் மனிதர்கள்?'' என்று கேட்டாள் அவள்.

''அடே, ஆமாம், அவர்களை நான் நினைவு வைத்திருக்கிறேன், அம்மா! அவர்களும் எனக்கு வேண்டும், ஏனென்ருல் மனிதர்களின் நினைவில் தான் வீரர்கள் இறவாமல் வாழ்கிருர்கள்!''

அவள் சொன்னுள்:

''வீரன் என்பவன் சாவை மதிக்காமல் வாழ்வைப் படைப்பவன், சாவை வெல்பவன்...''

இல்லை!'' என்று மறுத்தான் அவன். ''நகரத்தை நிறுவுபவனைப் போலவே அழிப்பவனும் புகழ் பெறுகிருன். நீயே பார்: ரோமாபுரியைக் கட்டியவன் ஏனெயஸா அல்லது ரோமுலஸா என்பது நமக்குத் தெரியாது. ஆனுல், இந்த நகரை அழித்த அலாரிக்கினுடையவும் மற்ற வீரர்களுடையவும் பெயர்கள் நமக்குத் திண்ணமாகத் தெரியும்...''

''எல்லாப் பெயர்களும் அழிந்த பின்னும் நிலைத்திருக்கிறது இந்த நகரம்'' என்று நினைவூட்டினுள் தாய்.

சூரியன் அஸ்தமிக்கும் வரை அவளோடு இந்த மாதிரிப் பேசிக் கொண்டு போனுன் அவன். நேரம் ஆக ஆக

அவனுடைய மதி கெட்ட பேச்சில் அவள் அரிதாகவே குறுக்கிட்டாள். அவளுடைய நிமிர்ந்த தலே வர வரத் தாழ்ந்தது.

தாய் படைக்கிருள், காக்கிருள், எனவே அவள் முன்னர் அழிவைப் பற்றிப் பேசுவது அவளே எதிர்த்துப் பேசுவது ஆகும். அவன் இதை அறியாமல் அவளுடைய வாழ்க்கையின் பொருளேயே மறுத்தான்.

தாய் எப்போதும் சாவுக்கு எதிரி. மனிதர்களின் வாழ்விடங்களில் சாவைப் புகுத்தும் கரம் அன்னையரின் வெறுப்புக்கு உரியது, அவர்களுக்குப் பகைமையானது. இதயத்தை மாய்க்கும் கொடிய புகழ் ஒளியால் குருடாகி விட்ட அவளுடைய மகன் இதைக் காணவில்லை.

தான் படைத்துக் காக்கும் வாழ்க்கை விஷயத்தில் தாய் எவ்வளவு அச்சம் அற்றவளோ அவ்வளவே தந்திரமுள்ள, இரக்கம் இல்லாத விலங்கு என்பதையும் அவன் அறியவில்லே.

அவள் கூனி அமர்ந்திருந்தாள். கருவுறலின் இனிய நடுக்கத்தையும் மகப் பேற்றின் துன்புறுத்தும் வலிப்புக்களேயும் அவள் எங்கே முதன் முதலில் உணர்ந்தாளோ அந்த நகரம் தலேவனது பகட்டான கூடாரத்தினது திறந்த வாயிலின் ஊடாக அவளுக்குத் தென்பட்டது. அப்படி அவள் பெற்ற மகன் இப்போது அழிக்க அதை ஆசைப்பட்டான்.

சூரியனின் ஆழ் சிவப்புக் கிரணங்கள் நகர மதிற் சுவர்களேயும் கோபுரங்களேயும் குருதியால் முழுக்காட்டின. சன்னல் கண்ணுடிகள் கொடும் வன்மத்துடன் ஒளி வீசின. நகரம் முழுவதும் காயங்களால் துளேபட்டது போலக் காட்சி தந்தது. அதன் நூற்றுக் கணக்கான காயங்களிலிருந்து வாழ்வின் செஞ்சாறு பெருகுவது போலத் தோன்றியது. சற்று நேரம் சென்றதும் நகரம் பிணம் போலக் கறுப்பாகத் தொடங்கிற்று! இறுதிச் சடங்கு விளக்குகள் போன்று அவற்றுக்கு மேலே விண்மீன்கள் மினுக்கிடலாயின.

தாய் பார்த்தாள்: அங்கே, இருண்ட வீடுகளில், பகைவர்களுடைய கவனத்தை ஈர்க்கக் கூடாது என்பதற்காக மக்கள் விளக்குகள் ஏற்ற அஞ்சினுர்கள். இருளும் பிணங்களின் நாற்றமும் சாவை எதிர்பார்த்திருந்த மனிதர்களின் குரலற்ற கிசுகிசுப்பும் நிறைந்த வீதிகளே நோக்கினுள். எல்லாவற்றையும் எல்லோரையும் அவள் கண்டாள். பழக்கமானவர்களும் உற்றுரும் அவளுடைய தீர்மானத்தை எதிர்

பார்த்து அவள் முன்பு அருகில் பேசாமல் நின்றார்கள். தனது நகரின் எல்லா மக்களுக்கும் தான் தாய் என அவள் உணர்ந்தாள்.

முகில்கள் மலைகளின் கரு முடிகளிலிருந்து பள்ளத்தாக்கில் இறங்கி, சாவு விதிக்கப்பட்டிருந்த நகரத்தை நோக்கி இறக்கைகள் உள்ள குதிரைகள் போன்று பறந்தன.

''இரவு போதிய அளவு இருட்டாய் இருந்தால் நகரத்தை இரவிலேயே ஒருவேளை தாக்குவோம்!'' என்றான் அவளுடைய மகன். ''வெயில் கண்களில் பட்டு ஆயுதங்களின் பளபளப்பு அவற்றைக் கூசச் செய்யும் போது கொல்வததற்கு வசதியாய் இருப்பதில்லை. இந்த நிலைமையில் எப்போதும் நிறைய அடிகள் குறி தவறி விடுகின்றன'' என்று தனது வாளைக் கூர்ந்து நோக்கியவாறு கூறினான்.

தாய் அவனிடம் சொன்னாள்:

''இங்கே வா, தலையை என் மார்பில் சாய்த்துக் கொள். சிறு வயதில் நீ எவ்வளவு மகிழ்ச்சி உள்ளவனாகவும் நல்லவனாகவும் இருந்தாய், எல்லோரும் உன்னை எப்படி நேசித்தார்கள் என்பதை நினைவுபடுத்திக் கொண்டு இளைப்பாறு...''

அவன் கீழ்ப்படிந்து அவளது மடியில் தலை வைத்துப் படுத்துக் கண்களை மூடியபடிக் கூறினான்:

''புகழையும் நான் இப்போது இருப்பது போன்று என்னைப் பெற்றதற்காக உன்னையும் மட்டுமே நான் நேசிக்கிறேன்.''

அவள் அவன் மேல் குனிந்து, ''பெண்களையோ?'' என்று கேட்டாள்.

''பெண்கள் நிறைய இருக்கிறார்கள். அளவு கடந்து இனிப்பான எல்லாவற்றையும் போலவே அவர்கள் தெவிட்டிப் போகிறார்கள்.''

அவள் அவனிடம் கடைசித் தடவையாகக் கேட்டாள்:

''குழந்தைகள் வேண்டும் என்று உனக்கு ஆசையாய் இல்லையா?''

''எதற்காக? சாகக் கொடுப்பதற்காகவா? என் போன்ற எவனாவது அவர்களைக் கொன்று விடுவான், எனக்கு அதனால் வேதனை உண்டாகும். அப்போது நான் முதுமை அடைந்து வலு அற்றவனாக இருப்பேன் ஆதலால் அவர்களுக்காகப் பகைவனைப் பழி வாங்க என்னால் முடியாது.''

''நீ அழகன், ஆனால் மலடன், மின்னல் போல'' என்று கூறி அவள் பெருமூச்செறிந்தாள்.

அவன் புன்னகை செய்து விடை இறுத்தான்:

''ஆமாம், மின்னல் போல்...''

பின்பு குழந்தை போன்று தாயின் மடியில் உறங்கத் தொடங்கினான்.

அப்போது அவள் அவனைத் தனது கறுப்பு மேலங்கியால் போர்த்து மூடி அவனுடைய இருதயத்தில் கத்தியைப் பாய்ச்சினாள். அவன் திடுக்கிட்டு நடுங்கி அக்கணமே இறந்து போனான். மகனுடைய இருதயம் எங்கே துடிக்கிறது என்பதை அவள் நன்றாக அறிந்திருந்தாள் அல்லவா? திகைத்துப் போன காவலரின் காலருகே மகனது பிணத்தைத் தள்ளி விட்டு, நகரின் பக்கம் நோக்கி அவள் சொன்னாள்:

''மனிதப் பிறவி என்ற முறையில் நான் தாயகத்துக்காக முடிந்ததை எல்லாம் செய்தேன். தாய் என்ற முறையில் நான் என் மகனோடு இருப்பேன்! இன்னொரு மகனைப் பெற இந்த வயதில் என்னால் முடியாது, என் உயிர் ஒருவருக்கும் தேவை இல்லை.''

மகனுடைய இரத்தத்தால்—தன்னுடைய உதிரத்தால்—இன்னும் வெதுவெதுப்பாக இருந்த கத்தியை உறுதியான கையால் நெஞ்சில் பாய்ச்சிக் கொண்டாள், இம்முறையும் இலக்கு பிசகாமல் இருதயத்தைத் துளைத்து விட்டாள்—நொந்த இருதயத்தில் குறி தவறாமல் குத்துவது எளிது.

பெப்பே

பெப்பேக்குப் பத்து வயது இருக்கும். அவன் நொய்ந்து மெலிந்தவன், பல்லி போல விரைவுள்ளவன். அவனுடைய குறுகிய தோள்கள் மேல் பல நிறக் கந்தல் உடை தொள தொளவென்று நெகிழ்ந்து ஆடும். வெயிலாலும் அழுக்காலும் கறுத்த தோல் எண்ணற்ற கிழிசல்கள் வழியே வெளித் தெரியும்.

அவன் உலர்ந்த புல்லின் தாள் போன்றவன்—கடலிலிருந்து வீசும் காற்று புல்தாளோடு விளையாடிவாறுஅதைஏந்திச் செல்லும்—பெப்பே சூரியன் எழுந்தது முதல் மறைவது வரை தீவின் பாறைகளில் தத்திக் குதித்துக் கொண்டிருப்

பான். அவனுடைய களைப்பறியாத கீச்சுக் குரல் எங்கிருந்தாவது ஓயாமல் ஒலித்த வண்ணமாய் இருக்கும்:

''எழிலார்ந்தது இத்தாலியா,
என்றன் இத்தாலியா!..''

எல்லாம் அவனுடைய ஆர்வம் பொங்கும் கவனத்தை ஈர்த்தன: நல்ல நிலத்தில் அடர்ந்த சிற்ருறுகளாகப் பெருகும் பூக்கள், ஊதா நிறப் பாறைகளின் நடுவே பல்லிகள், அச்சில் வார்த்தவை போன்ற ஒலிவ இலைகளிலும் முந்திரித் தோட்டத்தின் பச்சை மணி வலைப்பின்னல்களிலும் பட்சிகள், கடலின் அடித்தரை மீது இருண்ட தோட்டங்களில் மீன்கள், நகரின் சிக்கலான குறுகிய தெருக்களில் சுற்றுலாப் பயணிகள்: வாளால் வெட்டுண்ட முகத்தினனுன பருத்த ஜெர்மானியன், மனித இனத்தை வெறுப்பவனது பாத்திரத்தில் நடிக்கப் பழகி விட்ட நடிகனை எப்போதும் நினைவு படுத்தும் ஆங்கிலேயன், ஆங்கிலேயனை நிகர்த்திருக்க விடாப்பிடியாக, ஆனுல் வீணுக முயலும் அமெரிக்கன், கிலுகிலுப்பை போலச் சளபளக்கும் ஈடற்ற பிரெஞ்சுக்காரன்.

எல்லா மயிர்களும் சிலிர்க்கும் அளவுக்கு இறுமாப்பு பீரிட நடந்த ஜெர்மானியனை எல்லாவற்றையும் காணும் விழிகளால் சுட்டிக் காட்டி, ''எப்பேர்ப்பட்ட மூஞ்சி! என் வயிற்றை விடச் சின்னது அல்ல இந்த மூஞ்சி!'' என்பான் பெப்பே.

பெப்பேக்கு ஜெர்மானியரைப் பிடிக்காது. தெரு, சதுக்கம், சொந்த மனிதர்கள் மது அருந்தி, சீட்டாடி, செய்தித் தாள்களைப் படித்து அரசியல் பற்றிப் பேசும் இருண்ட கடைகள் ஆகியவற்றின் கருத்துக்களையும் மன நிலைகளையும் அவன் பிரதிபலித்தான்.

இந்த மனிதர்கள் சொல்லுவார்கள்: ''நமக்கு, ஏழைத் தெற்கத்தியாரான நமக்கு, தங்களுடன் நமது நட்புக்குப் பரிசாக ஆப்பிரிக்க மணலைப் பரிசளிக்கும் நல்ல கூட்டாளி நாட்டினரைக் காட்டிலும் பால்கன் நாடுகளைச் சேர்ந்த ஸ்லாவியர்கள் இனியவர்கள்.''

மிக அடிக்கடி இப்படிச் சொல்பவர்கள் சாதாரணத் தெற்கத்தி ஆட்கள். பெப்பே எல்லாவற்றையும் செவியேற்று நினைவில் வைத்துக் கொள்வான்.

கத்தரிக்கோல் போன்ற கால்களால் சலிப்புடன் நடப்பான் ஆங்கிலேயன். பெப்பே அவனுக்கு முன்னுல் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையின் ஏதேனும் பகுதியையோ அல்லது இரங்கற் பாவையோ பாடுவான்:

''என் நண்பன் அண்மையில் இறந்ததற்கென்
பெண்டாட்டி துக்கிக்கிருள்...
என் அறிவுக்கிது எட்டவில்லை,
அவளுக்கேன் இந்தத் துக்கம்?''

பெப்பேயின் தோழர்கள் சிரித்துக் குட்டிக்கரணம் அடித்தவாறு பின்னே செல்வார்கள். சுற்றுலாப் பயணி நிறம் மங்கிய விழிகளால் அவர்களை அமைதியாகப் பார்வையிடுவான். உடனே எல்லோரும் சுண்டெலிகள் போலச் செடிகளிலும் சுவர்களின் மூலைகளிலும் பதுங்கி விடுவார்கள்.

பெப்பேயைப் பற்றி எத்தனையோ சுவையான கதைகள் சொல்லலாம்.

ஒரு தடவை ஒரு சிஞ்ஞோரா* தன் தோட்டத்து ஆப்பிள்கள் நிறைந்த கூடையைத் தன் தோழிக்குப் பரிசாகக் கொண்டு கொடுக்கும் வேலையை அவனிடம் ஒப்படைத்தாள்.

''ஒரு சல்தோ** சம்பாதிப்பாய்!'' என்ருள் அவள்.'' இது உனக்கு நல்லதுதானே...''

அவன் முழு இசைவுடன் கூடையை எடுத்துத் தலை மேல் வைத்துக் கொண்டு போனவன் கூலி வாங்க மாலையில் தான் வந்தான்.

''ரொம்பச் சாவகாசமாக வந்திருக்கிருயே!'' என்று அவனிடம் சொன்னுள் அந்த மாது.

''ஆனுலும் களைத்துப் போனேன், அருமைச் சிஞ்ஞோரா!'' என்று பெருமூச்சுடன் பதில் சொன்னுன் பெப்பே. ''எண்ணிக்கை பத்துக்கு மேல் இருக்குமே!''

''விளிம்பு வரை நிறைந்த கூடையிலா? பத்தே ஆப்பிள்களா?''

''பயல்களைச் சொல்கிறேன், சிஞ்ஞோரா!''

---

* திருவாட்டி எனப் பொருள்படும் இத்தாலியச் சொல். —மொா-ர்.

** இத்தாலியக் காசு.—மொா-ர்.

''ஆப்பிள்கள் என்ன ஆயின?''

''முதலில் பையன்கள்: மிக்கேலே, ஜொவான்னி...''

அவள் கோபிக்கத் தொடங்கி அவனது தோளைப் பற்றி உலுக்கினாள்.

''பதில் சொல்லு, ஆப்பிள்களைக் கொண்டுபோனாயா?''

''சதுக்கம் வரையில், சிஞ்ஞோரா! கொஞ்சம் கேளுங்கள் நான் எவ்வளவு நன்றாக நடந்து கொண்டேன் என்பதை: அவர்களுடைய கேலிகளை முதலில் நான் பொருட்படுத்தவே இல்லை. அவர்கள் என்னைக் கழுதைக்கு ஒப்பிட்டால் ஒப்பிடட்டும், சிஞ்ஞோரா மேல்—உங்கள் மேல், சிஞ்ஞோரா—உள்ள மரியாதைக்காக நான் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்கிறேன் என்று நினைத்தேன். ஆனால் அவர்கள் என் தாயாரைக் கேலி செய்யத் தொடங்கியதும், அப்படியா, நல்லது, இதற்கு உங்களைச் சும்மா விடப் போவதில்லை என்று எண்ணிக் கொண்டேன். கூடையை இறக்கி வைத்தேன். ஆகா, நீங்கள் பார்த்திருக்க வேண்டும், பெருந்தன்மை உள்ள சிஞ்ஞோரா, அந்த வழிப்பறிகாரர்களை நான் எவ்வளவு சாமர்த்தியமாக, குறி தவறாமல் தாக்கினேன் என்பதை—நீங்கள் சிரித்து மகிழ்ந்து போயிருப்பீர்கள்!''

''அவர்கள் என்னுடைய பழங்களைத் திருடிப் போய் விட்டார்கள்?!'' என்று கூச்சலிட்டாள் அந்த மாது.

பெப்பே துயரப் பெருமூச்சு விட்டுச் சொன்னான்:

''இல்லவே இல்லை. ஆனால் பயல்கள் மேல் படாத பழங்கள் சுவற்றில் பட்டு உடைந்து போயின. நான் வெற்றி அடைந்து பகைவர்களுடன் சமாதானம் செய்து கொண்ட பிறகு மீதிப் பழங்களை நாங்கள் தின்று விட்டோம்...''

அந்த மாது பெப்பேயின் மழித்த தலை மேல் தனக்குத் தெரிந்த சாபங்களை எல்லாம் பொழிந்தவாறு வெகு நேரம் கத்திக் கொண்டிருந்தாள். அவன் அவளுடைய வசவுகளைப் பணிவுடன் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அவ்வப்போது சூள் கொட்டினான், சில வேளைகளில் தணிந்த குரலில் பாராட்டினான்:

''ஓ-ஓ, எவ்வளவு நன்றாகச் சொன்னீர்கள்! எப்பேர்ப்பட்ட வார்த்தைகள்!''

அவள் களைத்துப் போய் அவனிடமிருந்து அப்பால் சென்ற போது பெப்பே அவளைப் பார்த்துக் கூறினான்:


PO.

''உங்கள் தோட்டத்தின் அருமையான பழங்களால் அந்த எத்தர்களின் அழுக்குத் தலைகளை நான் எப்படிக் குறி தவருமல் தாக்கினேன் என்பதை நீங்கள் பார்த்திருந்தால் இப்படிக் கவலைப்பட்டிருக்க மாட்டீர்கள்—ஆகா, நீங்கள் மட்டும் இதைப் பார்த்திருந்தால்!—வாக்களித்த ஒரு சல்தோவுக்குப் பதில் எனக்கு இரண்டு சல்தோ தருவீர்கள்!''

வெற்றியாளனின் கூச்சமுள்ள பெருமிதத்தை முரட்டுப் பெண்பிள்ளை புரிந்து கொள்ளவில்லை. இரும்பு முட்டியைக் காட்டி அவனை அச்சுறுத்த மட்டுமே செய்தாள்.

பெப்பேயின் தமக்கை அவனை விடப் பல வயது மூத்தவள், ஆனால் அதிக அறிவு உள்ளவள் அல்ல. ஒரு பணக்கார அமெரிக்கனின் பங்களாவில் அறைகளைத் துப்புரவு செய்யும் பணிமகளாக வேலையில் அமர்ந்தாள். உடனேயே அவளுடைய உடைகளில் துப்புரவும் முகத்தில் செம்மையும் வந்து விட்டன. நன்ருகச் சாப்பிட்டதால் ஆகஸ்டு மாத பேரிக்காய் போல அவள் உடம்பு நிகுநிகுப்பு அடைந்தது.

ஒரு நாள் தம்பி அவளிடம் கேட்டான்:

''நீ நாள்தோறும் சாப்பிடுகிருயோ?''

''இரண்டு தடவை, விரும்பினுல் மூன்று தடவை'' என்று கர்வத்துடன் பதில் அளித்தாள் தமக்கை.

''பற்களுக்குக் கொஞ்சம் ஓய்வு கொடுத்திருக்கலாமே நீ!'' என்று யோசனை கூறிய பெப்பே, சற்று சிந்தனை செய்தபின் மறுபடி கேட்டான்:

''உன்னுடைய எசமான் ரொம்பப் பணக்காரனே?''

''அவனு? அரசனை விடப் பணக்காரன் என்று நினைக்கிறேன்.''

''நல்லது, அசட்டுப் பேச்சைக் கட்டி வை! உன் எசமானிடம் எத்தனை காற்சட்டைகள் இருக்கின்றன?''

''இதைச் சொல்லுவது கடினம்.''

''பத்தா?''

''ஒருவேளை, அதிகமாய் இருக்கும்...''

''எங்கே, ரொம்ப நீளமில்லாத கம்பளிக் காற்சட்டை ஒன்று எடுத்து வந்து எனக்குக் கொடு, பார்க்கலாம்'' என்ருன் பெப்பே.

''எதற்காக?''

''என் காற்சட்டை எப்படி இருக்கிறது, பார்த்தாயா?''

இதைப் பார்ப்பது கடினமாய் இருந்தது. பெப்பேயின் சராயில் அவன் கால்கள் மேல் எஞ்சி இருந்தது வெகு சொற்பமே.

''ஆமாம்'' என்று இசைந்தாள் தமக்கை. ''உனக்கு உடை தேவைதான்! ஆனால் நாம் திருடினோம் என்று எசமானன் நினைக்கலாமே?''

பெப்பே அவள் மனதில் படும்படி விளக்கினான்:

''மற்றவர்கள் நம்மைக் காட்டிலும் அசடர்கள் என்று எண்ண வேண்டாம்! அதிகத்திலிருந்து கொஞ்சம் எடுத்தால், அது திருடல்ல, பங்கிடுதல்தான்!''

''இப்படிப் பாட்டில் தானே வருகிறது!'' தமக்கை இணங்கவில்லை. ஆனால் பெப்பே அவளோடு வாதாடி விரைவில் அவளை இணங்க வைத்தான். வெண்சாம்பல் நிறமான நல்ல காற்சட்டையை அவள் சமையலறைக்குக் கொண்டு வந்தாள். அது பெப்பேயின் உடம்பு முழுவதையும் விடச் சற்று நீளமாய் இருந்தது. அப்போது அவன் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சட்டெனப் புரிந்து கொண்டான்.

''கத்தியைக் கொண்டுவா!'' என்றான்.

இருவருமாக அமெரிக்கனுடைய காற்சட்டையைப் பெப்பேக்கு மிகவும் சௌகரியமான உடையாக ஒரு நொடியில் மாற்றி விட்டார்கள். கொஞ்சம் அகலமான, ஆனால் வசதியான சாக்குப் பை தயாராகி விட்டது. தோள்கள் மேல் அதைக் கயிறுகளால் கட்டி வைக்க வேண்டி இருந்தது. அவற்றைக் கழுத்தைச் சுற்றியும் கட்ட முடிந்தது. கோட்டுக் கைகளாகக் காற்சட்டைப் பைகள் நன்றாகப் பயன்பட்டன.

அவர்கள் இன்னும் நன்றாகவும் வசதியாகவும் ஏற்பாடு செய்திருப்பார்கள், ஆனால் இதற்கு இடைஞ்சலாக வந்து சேர்ந்தாள் காற்சட்டைச் சொந்தக்காரனின் மனைவி. சமையலறைக்கு வந்து, அமெரிக்கர்களின் வழக்கம் போல எல்லா மொழிகளையும் ஒரே மாதிரிச் சிதைத்துக் கொச்சையாக்கி மிக மிக மோசமான வார்த்தைகளைப் பேசத் தலைப்பட்டாள்.

அவளுடைய சொற்பெருக்கை நிறுத்தப் பெப்பேயால் முடியவே இல்லை. அவன் முகத்தைச் சுளித்தான், நெஞ்சில் கையை வைத்துக் கொண்டான், புகலின்றித் தலையைப்

பிடித்துக் கொண்டான், களைப்புடன் பெருமூச்சு விட்டான், ஆனால் கணவன் வரும் வரை அவளால் ஓய முடியவில்லை.

''என்ன விஷயம்?'' என்று கேட்டான் கணவன்.

அப்போது பெப்பே சொன்னான்:

''சிஞ்ஞோர், உங்கள் மனைவியார் கிளப்பிய கூச்சல் என்னைப் பெரு வியப்பில் ஆழ்த்துகிறது. எனக்கு உங்களுக்காக அவர்கள் மேல் கொஞ்சம் மனத்தாங்கல் கூட உண்டாகிறது. நான் புரிந்து கொண்டபடி, நாங்கள் காற்சட்டையைக் கெடுத்து விட்டோம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் உண்மையாய்ச் சொல்லுகிறேன், எனக்கு அது சௌகரியமாக இருக்கிறது! நான் உங்களுடைய கடைசிக் காற்சட்டையை எடுத்துக் கொண்டு விட்டதாகவும் வேறு காற்சட்டை வாங்க உங்களால் முடியாது என்றும் அவர்கள் நினைக்கிறார்கள் போல் இருக்கிறது...''

அமெரிக்கன் அவனுடைய பேச்சை அமைதியாகக் கேட்டு விட்டுக் கூறினான்:

''ஆனால் நான் என்ன நினைக்கிறேன் தெரியுமா, பையா? போலீசைக் கூப்பிட வேண்டும் என்று நினைக்கிறேன்.''

''அப்படியா-ஆ?'' என்று பெரிதும் வியப்படைந்தான் பெப்பே. ''எதற்காக?''

''உன்னைச் சிறைச்சாலைக்கு இட்டுப் போவதற்காக...''

இதனால் பெப்பேக்கு மிகுந்த வருத்தம் உண்டாயிற்று, அழுகை கூட வந்தது, ஆனால் அவன் அடக்கிக் கொண்டு தன் மதிப்புடன் கூறினான்:

''சிஞ்ஞோர், இது உங்களுக்குப் பிடித்திருந்தால், மனிதர்களைச் சிறையில் அடைப்பதை நீங்கள் விரும்பினால், தாராளமாகக் கூப்பிடுங்கள்! ஆனால் என்னிடம் நிறையக் காற்சட்டைகள் இருந்து உங்களிடம் ஒன்று கூட இல்லாவிட்டால் நான் இப்படிச் செய்ய மாட்டேன்! நான் உங்களுக்கு இரண்டு, அல்லது ஒரு வேளை மூன்று காற்சட்டைகள் கூடக் கொடுப்பேன். ஆனால் ஒன்று: மூன்று காற்சட்டைகளை ஒரு மொத்தமாக மாட்டிக் கொள்ள முடியாது! சிறப்பாக வெக்கை நாட்களில்...''

அமெரிக்கன் வாய் விட்டுச் சிரித்தான். பணக்காரர்களுக்கும் கூடச் சில வேளைகளில் மகிழ்ச்சி ஏற்படுவது உண்டு.

பிறகு அவன் பெப்பேக்குச் சாக்லெட் தின்னக் கொடுத்து

ஒரு பிராங்கு நாணயம் பரிசளித்தான். நாணயம் செல்லுமா என்று பற்களால் சோதித்துப் பார்த்த பெப்பே அமெரிக்கனுக்கு நன்றி கூறினன்:

''உங்களுக்கு நன்றி, சிஞ்ஞோர்! நாணயம் செல்லக் கூடியதுதான் போலிருக்கிறது, சரியா?''

கற்களின் பிளவுகளைக் கொண்டு பாறையினுடைய இருண்ட வாழ்க்கை வரலாற்றைப் படிப்பவன் போல அவற்றை ஆழ்ந்த சிந்தனையுடன் கூர்ந்து பார்த்தவாறு கற்களில் எங்கேனும் தனியாக நிற்கும் போது பெப்பே எப்போதையும் விட மேலாகத் தோற்றம் அளித்தான். அந்தக் கணங்களில் அவனுடைய உயிர்த் துடிப்புள்ள விழிகள் அகலமாகும், அழகிய சவ்வினல் மூடப்படும், மெல்லிய கரங்கள் முதுகின் பின் கிடக்கும், சற்றே சாய்ந்த தலை மலரின் புறவிதழ் வட்டம் போலச் சிறிது அசைந்தாடும். பெப்பே வாய்க்குள்ளாக ஏதோ தில்லானவை முணுமுணுப்பான். அவன் ஓயாமல் பாடிக் கொண்டிருப்பான்.

மலர்களைப் பார்வையிடும் போதும் அவன் அழகாய் இருப்பான். விஸ்டேரியா மலர்கள் ஊதா ஓடைகள் போலச் சுவற்றில் பெருகும். அவற்றுக்கு முன் இந்தச் சிறுவன் தந்தி போல விரைத்து நின்று கடற் காற்றின் மூச்சினல் பட்டு இதழ்களில் ஏற்படும் மெல்லிய துடிப்பை உற்றுக் கேட்பவன் போன்று தோற்றம் அளிப்பான்.

பார்த்துக் கொண்டே பாடுவான்:

''பியரீஞ்ஞே-ஓ... பியரீஞ்ஞே-ஓ*...''

தொலைவிலிருந்து கடலின் மந்தமான பெருமூச்சுக்கள் பிரமாண்டமான கஞ்சிரா அடிகள் போலக் காதுகளுக்கு எட்டும். மலர்களுக்கு மேலே வண்ணத்துப் பூச்சிகள் விளையாடும். பெப்பே தலையை நிமிர்த்தி வெயிலினல் கண்களை இடுக்கிக் கொண்டு அவற்றை நோக்குவான். ஓரளவு பொருமையும் துயரமும் ததும்பப் புன்னகைப்பான். ஆயினும் பூமியில் மூத்தவனுக்கு உரிய நல்லியல்பு அந்தப் புன்னகையில் மிளிரும்.

---

* நன் மலர் என்று பொருள்படும் இத்தாலியச் சொல். —மொ-ர்.

மரகதப் பச்சைப் பல்லியை மிரட்டுவதற்காகக் கைகளைக் கொட்டிச் ''சோ!'' என்று கத்துவான்.

முகம் பார்க்கும் கண்ணுடி போலக் கடல் அமைதியாக இருக்கும் போது வீழலைகளின் வெள்ளை வலைப் பின்னல்கள் கற்களில் இருக்க மாட்டா. அப்போழுது பெப்பே பாறை மேல் எங்கேனும் அமர்ந்து தெளிந்த நீரில் கூரிய விழிகளால் பார்வை செலுத்துவான்: அங்கே, செம்பழுப்பு நீர்ப் பூண்டு களுக்கு இடையே மீன்கள் ஒய்யாரமாக நீந்தும், கூனிறுல் கள் சட்சட்டெனத் தோன்றி மறையும், நண்டு விலாப் புறம் ஊரும். நிசப்தத்தில், நீல நீருக்கு மேலே, சிறுவனின் சிந்தனை யில் ஆழ்ந்த, கணீரென்ற குரல் மெதுவாகப் பெருகும்:

''ஓ கடலே... கடலே...''

பெரியவர்கள் சிறுவனைப் பற்றிச் சொல்லுவார்கள்:

''இவன் அராஜகவாதி ஆவான்!''

ஆனால், ஒருவரை ஒருவர் அதிகக் கவனத்துடன் கூர்ந்து நோக்குபவர்களில் நல்லியல்பு அதிகம் உள்ளவர்கள் வேறு விதமாகச் சொல்லுவார்கள்:

''பெப்பே நம் கவிஞன் ஆவான்...''

வெள்ளியில் வார்த்தது போன்ற நரைத் தலையும் தொன்மை ரோமானிய நாணயங்களில் உள்ளது போன்ற முகமும் கொண்ட தச்சர் பஸ்க்வலீனே, மூதறிஞரும் எல்லோ ராலும் மதிக்கப்படுபவருமான பஸ்க்வலீனே, தம் கருத்தை வெளியிடுவார்:

''குழந்தைகள் நம்மைக் காட்டிலும் சிறந்தவர்களாக இருப்பார்கள், அவர்களுடைய வாழ்க்கை நம்முடையதை விடச் சிறந்ததாக இருக்கும்!''

மிகப் பலர் அவரை நம்புகிறுர்கள்.

பிறந்தான் மனிதன்

ருஷ்யா பஞ்சத்தால் பீடிக்கப்பட்டிருந்த 1892ம் ஆண்டில், சுகுமுக்கும் அச்சேம்சிருக்கும் நடுவே, கோதர் ஆற்றின் கரையில், கடலுக்கு அருகாமையில் நடந்தது இது—தெளிந்த மலையாற்று நீரின் குதூகலம் பொங்கும் கலகலப்புக்கு ஊடாகக் கடல் அலைகளின் ஆழ்ந்த சளப்பொலி துலக்கமாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

இலையுதிர் காலம். கோதர் ஆற்று நீரின் வெண் நுரையில் சுழன்று மினுக்கிட்டன செர்ரி-லாரல் மரத்தின் மஞ்சள் பழுப்புகள். அவை துடியான சிறு சாமன் மீன்கள் போலத் தோற்றம் அளித்தன. நான் ஆற்றுக்கு மேலே பாறைகள் மீது உட்கார்ந்திருந்தேன். கடற் பறவைகளும் நீர்க் காகங்களும் இலைப் பழுப்புகளை மீன்கள் என்று எண்ணி ஏமாந்ததனுல்தான் வலப்புறம், மரங்களுக்கு அப்பால், கடல் அலையடிக்கும் இடத்தில் இப்படிக் கோபத்துடன் கத்துகின்றன போலும் என்று எண்ணமிட்டேன்.

எனக்கு மேலே செஸ்ட்நட் மரங்கள் பொன் அணிகள் பூண்டிருந்தன. வெட்டுண்ட அங்கைகள் போன்று இருந்த செஸ்ட்நட் இலைகள் என் கால்களின் அருகே ஏராளமாகக் கிடந்தன. ஆற்றின் மறு கரையில் ஹார்ன்பீம் மரங்களின் கிளைகள் அதற்குள் இலைகளை உதிர்த்து விட்டு மொட்டையாய் இருந்தன. அறுந்த வலை போல அவை காற்றில் தொங்கின. மஞ்சள்-சிவப்பு நிற மலை மரங்கொத்தி ரசுதூக் அந்த வலையில் சிக்கிக் கொண்டது போன்று துள்ளி, கரிய அலகால் மரப் பட்டையில் அடித்துப் பூச்சிகளை வெளியே விரட்டி



யது. இலாகவம் உள்ள நீல டிட்மஸ் பட்சிகளும் நீலச் சாம்பல் நிறப் பப்போல்ஸின் பட்சிகளும்—இவை வட புலத்திலிருந்து வந்த விருந்தாளிகள்—அவற்றைக் கொத்தித் தின்றன.

எனக்கு இடப் புறத்தில் மலை முடிகள் மேல் புகை நிற முகில்கள் குவையாகக் கவிந்து மழை பெய்யும் அபாயக் குறி காட்டின. அவற்றின்] நிழல்கள் பசிய மலைச் சாரல்களில் ஊர்ந்தன. உயிரற்றவை போன்ற சம்ஷீத் மரங்கள் சாரல்களில் வளர்ந்தன. பழங்காலப் புன்க மரப் பொந்துகளிலும் லிண்டன் மரப் பொந்துகளிலும் ''வெறியூட்டும் தேன்'' கிடைக்க வாய்ப்பு இருந்தது. பண்டைக் காலத்தில், ரோமானியத் தளகர்த்தன் பாம்ப்பியுடைய படையினர் வெறியூட்டும் இதன் இனிப்பால் அனேகமாகக் கொல்லப்பட்டார்களாம். இரும்பு மனிதர்களான ரோமானியப் படையினரின் ஒரு முழு லீஜியன் இதை உண்டு மயங்கி விழுந்து விட்டதாம். லாரல், அஸாலியா மலர்களின் பூந்தேனைக் கொண்டு தேனீக்கள் இந்தத் தேனை உண்டாக்கின. ''வழிப்போக்கர்கள்'' பொந்துகளிலிருந்து இதை எடுத்து லவாஷ் என்னும் மெல்லிய கோதுமை ரொட்டியில் தடவித் தின்றார்கள்.

செஸ்ட்நட் மரங்களுக்கு அடியில் பாறைகள்மேல் அமர்ந்து நானும் இந்தக் காரியத்தில்தான் ஈடுபட்டிருந்தேன். கோபம் கொண்ட தேனீயால் கடுமையாகக் கொட்டுண்ட நான், களைப்புற்ற இலையுதிர் காலச் சூரியனின் சோம்பிய விளையாட்டைப் பார்வை இட்டவாறு, தேன் நிறைந்த பாத்திரத்தில் ரொட்டித் துண்டுகளைத் தோய்த்துத் தோய்த்துத் தின்று கொண்டிருந்தேன்.

இலையுதிர் காலத்தில் காக்கேஷியா மாபெரும் மூதறிஞர்களால்—எப்போதும் மாபெரும் பாவிகளாகவும் இருந்த அவர்களால்—கட்டப்பட்ட செல்வம் கொழிக்கும் பெருங் கோயிலாக, மனச் சான்றின் கூரிய பார்வையிலிருந்து தங்கள் கடந்த காலத்தை மறைப்பதற்காகப் பொன்னையும் பைந்நீல மணியையும் மரகதத்தையும் கொண்டு அவர்கள் கட்டிய எல்லையின்றிப் பரந்த கோயிலாகக் காட்சி தந்தது. துர்க்மேனியப் பட்டினுல் சமர்க்கந்திலும் ஷெமாகிலும் தைத்த சிறந்த இரத்தினக் கம்பளங்களை மலைகளில் எங்கும் தொங்க விட்டிருந்தார்கள் அவர்கள். உலகம் முழுவதையும் கொள்ளை அடித்து எல்லாவற்றையும் இங்கே கொண்டு

வந்திருந்தார்கள், பகலவனுக்குக் காணிக்கையாக, அவனிடம் பின்வருமாறு சொல்ல விரும்பியவர்கள் போன்று:

''உன்னுடையதை — உன்னவர்களிடமிருந்து — உனக்காக.''

... நான் ஒரு காட்சியைக் கண்ணெதிரே போலக் கண்டேன்:

களி பொங்கும் குழந்தைகளுடையவை போன்ற மிகப் பெரிய விழிகள் கொண்ட நரைத்த நீள்தாடிக்கார மா மனிதர்கள் மலைகளிலிருந்து இறங்கி, எல்லாப் புறங்களிலும் வெவ்வேறு நிற நிதிக் குவைகளைப் புதைத்தவாறு பூமியை அலங்கரித்தார்கள், மலை முடிகளைப் பருத்த வெள்ளிப்பாளங்களால் மூடினார்கள், மலை விளிம்புகளைப் பல்வேறு வகை மரங்களாலான உயிருள்ள விரிப்பால் மூடிப் போர்த்தார்கள். வளங் கொழிக்கும் நிலத்தின் இந்தத் துண்டு அவர்களுடைய கைவேலையால் அறிவை மயக்கும் அளவுக்கு வனப்பு ஆர்ந்ததாகத் திகழலுற்றது.

உலகில் மனிதனாக இருப்பது மிகச் சிறந்த பதவி. அற்புதமானவற்றை எவ்வளவு பார்க்க முடிகிறது, அழகை மௌனமாக வியந்து பாராட்டுகையில் இதயம் எத்தகைய வேதனையுள்ள இனிமையுடன் அலைமோதுகிறது!

ஊம், ஆமாம், சில வேளைகளில் கடினமாக இருக்கிறது, காந்தும் வெறுப்பு நெஞ்சை நிறைக்கிறது, ஏக்கம் இதயத்தின் குருதியை ஆர்வத்துடன் உறிஞ்சிக் குடிக்கிறது. ஆனால் இதெல்லாம் எப்போதும் நேர்வதில்லை. சூரியனுக்கும் கூட மனிதர்களைக் காண அடிக்கடி மிகுந்த துயரம் உண்டாகிறது. அது அவர்களுக்காக எவ்வளவோ நிறையப் பாடுபட்டும் மனிதர்கள் நல்ல படி வாய்க்கவில்லை...

நல்லவர்களும் நிறைய இருக்கிறார்கள் என்று சொல்லவே வேண்டியதில்லை. ஆனால் அவர்களைச் செப்பம் செய்வது தேவை. புதிதாக மாற்றி அமைப்பதோ இன்னும் நல்லது.

...புதர்களுக்கு மேலே, எனக்கு இடப்புறத்தில் கரிய தலைகள் அசைந்தாடின. கடலின் அலையோசையிலும் ஆற்றின் களகளப்பிலும் சற்றே காதில் படுமாறு ஒலித்தன மனிதக் குரல்கள். இவர்கள் ''பஞ்சத்தில் அடிபட்டவர்கள்.'' சுகுமில் சாலை போட்ட பிறகு அச்சேம்சிரிக்கு வேலை தேடிப் போகிறவர்கள்.

நான் இவர்களை அறிந்திருந்தேன். இவர்கள் அரியோல் காரர்கள். நான் இவர்களோடு சேர்ந்து வேலை செய்து விட்டு இவர்களோடு சேர்ந்து நேற்றுக் கணக்கு தீர்த்துக் கொண் டேன். சூரிய உதயத்தைக் கடற்கரையில் எதிர் கொள்வதற் காக இவர்களுக்கு முன்னதாக, இரவில் அங்கிருந்து கிளம்பி விட்டேன்.

நான்கு ஆடவரும் ஒரு மாதும். அவள் தாடை எலும்பு கள் புடைத்த யுவதி, கருவுற்றிருந்தாள். அவளுடைய வயிறு மூக்கைத் தொடுவது போலப் பிரமாண்டமாக உப்பி இருந் தது. இளநீலச் சாம்பல் நிறக் கண்கள் மிரட்சியுடன் பரக்க விழித்தன. மஞ்சள் குட்டை கட்டிய அவளுடைய தலையைப் புதர்களுக்கு மேலே கண்டேன். பூத்த சூரியகாந்திச் செடி காற்றில் அசைவது போல அது அசைந்தாடியது. அவளுடைய கணவன் பழங்களை அளவு கடந்து தின்றதால் சுகுமில் இறந்து போனான். நான் இந்த மனிதர்களுக்கு நடுவே பாரக்கில் தங்கி இருந்தேன். ருஷ்யர்களின் நல்ல வழக்கப்படி அவர்கள் தங்கள் துன்பங்களைப் பற்றி மிக நிறையவும் உரக்கவும் பேசியதால் அவர்களுடைய முறையீடுகள் ஒரு ஐந்து வெர்ஸ்டா சுற்று வட்டாரத்துக்குக் கேட்டன.

இவர்கள் தங்கள் துயரத்தால் நசுக்குண்ட சலித்துப் போன மனிதர்கள். விளைச்சல் தராத களைத்த சொந்த மண் ணிலிருந்து துயரம் இவர்களைத் துணித்து, இலையுதிர் காலச் சருகுகளைக் காற்று அடித்துச் செல்வது போல இங்கே கொண்டு வந்திருந்தது. இங்கே, பழக்கமற்ற இயற்கையின் பகட்டான செழிப்பு இவர்களை வியப்பில் ஆழ்த்தி இவர் களுடைய கண்களைக் கூசச் செய்தது. அதே சமயம் கடின மான வேலை நிலைமைகள் இவர்களைக் குற்றுயிராக்கி விட்டன. இங்கிருந்தவற்றை எல்லாம் நோக்கி, நிறம் மங்கிய, ஏங்கிய கண்களைக் கலக்கத்துடன் கொட்டியவாறு, ஒருவரை ஒருவர் பார்த்து இரக்கத்துடன் புன்னகை செய்து தணிந்த குரல்களில் பேசிக் கொண்டார்கள்:

''ஆகா-கா, எப்பேர்ப்பட்ட நிலம்...''

''பொன் விளையும் பூமி.''

''ம்-ஆமா-ம்... ஆனாலும் பாறையாய் இருக்கிறதே...''

''சௌகரியம் இல்லாத நிலம்தான், சொல்லி விட வேண்டும்...''

பின்பு அவர்கள் கபீலி பள்ளம், சுகோய் கோன், மோக்ரென்கா முதலிய சொந்த இடங்களை நினைவு கூர்ந்தார்கள். அவற்றில் ஒவ்வொரு பிடி மண்ணும் அவர்களுடைய முன்னோரின் எலும்பு மிச்சங்கள் அடங்கியதாக இருந்தது. எல்லாம் நினைவுச் சின்னமாக, பழக்கமானதாக, விலை மிக்கதாக, அவர்கள் வியர்வையைப் பெருக்கி வளர்த்ததாக இருந்தது.

அவர்களோடு இன்னும் ஒரு பெண்பிள்ளை இருந்தாள். உயரமானவள், நேரானவள், பலகை போன்று தட்டையானவள். அவளுடைய தாடைகள் குதிரையினுடையவை போல இருந்தன. நிலக்கரிக்கு ஒப்பான கரிய கோணல் விழிகளில் பார்வை மங்கி இருந்தது.

மாலை வேளைகளில் அவள் மஞ்சள் தலைக்குட்டைக்காரியோடு பாரக்குக்குப் பின்னே சென்று, சரளைக் கற் குவியல் மேல் உட்கார்ந்து, கன்னத்தை உள்ளங்கையில் வைத்து, தலையை ஒரு பக்கம் சாய்த்து, உயர்ந்த கோபக் குரலில் பாடினாள்:

''கல்லறை வெளியின்...
பின்னே பச்சைப் புதர்களில்—
வெள்ளைத் தலைக்குட்டை...
விரிப்பேன் மணல் மீதிலே...
இனிய என் அன்பன்...
வந்திடானோ விரைவிலே...
இனியவன் வந்தால்...
வணங்கி எதிர் கொள்ளுவேன்...

மஞ்சள் தலைக்குட்டைக்காரி கழுத்தை வளைத்துத் தன் வயிற்றைப் பார்த்தவாறு வழக்கமாகப் பேசாதிருந்தாள். ஆனால் சில நேரங்களில் எதிர்பாரா விதமாக, சோம்பலுடனும் சற்றுக் கம்மிய தடித்த ஆண் குரலிலும் தேம்பும் சொற்களால் தானும் பாடினாள்:

''ஆ, என் அன்பே...
ஆ, என் இன்பக் கனியே...
பாழ் விதியால்...
உன்னைக் காணேன் இனியே...''

தெற்குப் பிரதேச இரவின் புழுக்கமான காரிருளில் இந்த அழு குரல்கள் வடபுலத்தையும் வெண்பனி அடர்ந்த வெட்ட

வெளிகளையும், பனிப் புயலின் சீழ்க்கையையும் ஓநாய்களின் தொலை தூர ஊளையையும் நினைவுபடுத்தின...

பின்னர் கோணல் கண் மாதுக்குக் காய்ச்சல் அடித்தது. அவள் கித்தான் தூக்கு படுக்கையில் நகருக்கு எடுத்துச் செல்லப்பட்டாள். அவள் வெடவெடத்தாள், ம்மாவென்று கத்தினள்—கல்லறை வெளியையும் மணலையும் பற்றிய தனது பாட்டைத் தொடர்பவள் போல.

...காற்றில் மூழ்கி மஞ்சள் தலை மறைந்தது.

நான் சிற்றுண்டியை முடித்து, பாத்திரத்துத் தேனை இலைகளால் மூடி, பயணப் பையைக் கட்டி, கார்னல் கைத் தடியால் ஒற்றையடிப் பாதையின் கெட்டித் தரையில் இடித்தவாறு, முன்னே சென்றவர்களைத் தடம் பற்றி நிதான மாகத் தொடர்ந்து நடை போட்டேன்.

இதோ, பாதையின் குறுகலான, சாம்பல் நிறப் பகுதியை அடைந்து விட்டேன். வலப் புறம் ஆழ் நீலக் கடல் அலை யடித்துக் கொண்டிருந்தது. கண்ணுக்குப் புலப்படாத தச்சர் கள் பல்லாயிரம் இழைப்புளிகளால் அதை இழைப்பது போலவும் வெள்ளைச் சீவல் சுருள் காற்றினல் விரட்டப் பட்டுச் சரசரப் பொலியுடன் கரைக்கு ஓடி வருவது போல வும் தோன்றியது. காற்றில் ஈரமும் வெது வெதுப்பும் உடல் நலம் உள்ள நங்கையின் மூச்சு போன்ற மணமும் நிறைந் திருந்தன. துருக்கியப் பாய்மரக் கப்பல் ஒன்று இடப் பக்கம் ஒருச் சாய்ந்து சுகுமுக்கு அலைகளில் வழுகிச் சென்றது. அதன் பாய் காற்றினல் உப்பியிருந்தது. சுகுமில் இருந்த மிடுக்குள்ள பொறியாளன் தன் பருத்த கன்னங்களை உப்பிக் கொண்டது போல. அவன் நிரம்ப ஆழ்ந்த மனிதன். சில ருஷ்யச் சொற் களை மட்டும் ஏனே அவன் சிதைத்து உச்சரித்தான்.

''இந்தா, சும்மா இரு! நீ பெரிய வில்லனய் இருக்கலாம், ஆனலும் நான் உன்னைப் போலீசிலே...''

ஆட்களைப் போலீசிடம் அனுப்புவதை அவன் விரும்பி னன். ஒரு வேளை வெகு காலத்துக்கு முன்பே கல்லறைப் புழுக்கள் அவனுடைய உடலை எலும்புகள் உட்படத் தின்று தீர்த்திருக்கும் என்று எண்ண உவப்பாய் இருந்தது.

...நடப்பது காற்றில் மிதப்பது போல எளிதாக இருந் தது. இன்பமான எண்ணங்களும் பல விதமான நினைவுகளும் மனத்திரையில் மெதுவான தட்டாமாலை சுற்றின. உள்ளத்

தில் நடந்த இந்தத் தட்டாமாலை கடலில் அலைகளின் வெண் முடிகள் போன்றது. அலைமுடிகள் மேற்பரப்பில் தென் பட்டன. உள்ளே, ஆழ்த்தில், அமைதி நிலவியது. கடல் ஆழத்தில் நீந்தும் வெள்ளி மீன்கள் போல இளமையின் ஒளி மயமான, விகுவுள்ள வருங்கால நம்பிக்கைகள் அங்கே ஓசையின்றி நீந்தின.

கடல் பாதையையும் ஈர்த்தது. அது வளைந்து நெளிந்து மணல் பகுதிக்குப் பக்கத்தில் ஊர்ந்து சென்றது. அங்கே அலைகள் பாய்ந்து வந்தன. புதர்களுக்கும் அலை முகத்தைக் காண ஆசை உண்டாயிற்று. அவை வெற்று வெளி போன்ற நீரின் நீலப் பரப்பை நோக்கித் தலை அசைப்பவை போலப் பாதைப் பட்டையின் குறுக்காக முடி தாழ்த்தின.

காற்று மலையிலிருந்து அடித்தது. மழை பெய்வதற்கான குறி இது.

...புதர்களில் கேட்டது தணிந்த முனகல்—மனிதனின் முனகல், உறவுப் பிணைப்பால் உள்ளத்தை எப்போதும் குலுக்கி எடுப்பது.

புதர்களை விலக்கியவன் மஞ்சள் தலைக்குட்டைக்காரி செஸ்ட்நட் அடி மரத்தில் முதுகைச் சாய்த்தவாறு உட்கார்ந் திருக்கக் கண்டேன். அவளுடைய தலை தோள் மேல் தொங்கி இருந்தது. வாய் ஒழுங்கின்றித் திறந்து கிடந்தது. விழிகள் பிதுங்கி இருந்தன, வெறிக் களை காட்டின. அவள் பிரமாண்ட மான வயிற்றின் மேல் கைகளை வைத்துக் கொண்டிருந் தாள். இயற்கைக்கு மாறுகப் பயங்கரமான முறையில் மூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். அதனுல் அவளுடைய வயிறு முழு வதும் வலிப்பு வந்தது போலத் துள்ளிற்று. பெண்பிள்ளை அதைக் கைகளால் அழுத்தி வைத்துக் கொண்டு மஞ்சள் நிற ஓநாய்ப் பற்களைக் காட்டி ம்மாவென்று கம்மலாகக் கதறிக் கொண்டிருந்தாள்.

''என்ன, இடித்துக் கொண்டீர்களோ?'' என்று அவள் பக்கம் குனிந்து கேட்டேன். அவள் சாம்பல் புழுதியில் வெறுங் கால்களை ஈ போன்று முறுக்கிக் கொண்டாள். கனத்த தலையை ஆட்டியவாறு கரகரத்தாள்:

''போடா-ஆ... வெட்கம் கெட்டவனே... போ-ஒய்த்-தொலை...''

விஷயம் என்ன என்று நான் புரிந்து கொண்டேன்—நான்

ஏற்கெனவே ஒரு தரம் இதைக் கண்டிருந்தேன். சந்தேக மின்றி மிரண்டு போய், துள்ளி விலகினேன். பெண்பிள்ளை உரக்க, நீளமாக ஊளையிட்டாள். வெடித்து விடும் போலிருந்த அவளது விழிகளிலிருந்து கலங்கிய கண்ணீர்த் துளிகள் தெறித்து உப்பிப் புடைத்த ஆழ் சிவப்பு முகத்தில் வழிந் தன.

இதனால் நான் அவளிடம் திரும்பிவர நேர்ந்தது. பயணப் பை, தேநீர்க் கொதிகலம், தேன் பாத்திரம் ஆகியவற்றைத் தரையில் வைத்து விட்டு, அவளைத் தரையில் மல்லாக்கக் கிடத்தி அவளுடைய முழங்கால்களை மடக்க முயன்றேன். அவள் என் முகத்திலும் மார்பிலும் அறைந்து என்னை நெட்டித் தள்ளினாள். பின்பு குப்புறப் புரண்டு பெண் கரடி போன்று உறுமிக் கொண்டும் கரகரத்துக் கொண்டும் தவழ்ந்து புதர்களுக்கு உள்ளே போய் விட்டாள்:

''வழிப்பறிகாரா... சாத்தானே...''

கைகள் மடங்கி விடவே அவள் விழுந்து முகத்தைத் தரை யில் புதைத்துக் கொண்டாள். பின்பு வலிப்பு வந்தவள் போலக் கால்களை விரைப்பாக நீட்டியவாறு மீண்டும் ஊளை யிட்டாள்.

நான் கிளர்ச்சியால் பரபரப்படைந்து, இந்தக் காரியம் பற்றி அறிந்திருந்ததை எல்லாம் விரைவாக நினைவுபடுத்திக் கொண்டு அவளை மல்லாக்கத் திருப்பி, கால்களை மடக் கினேன். அதற்குள் அவளுடைய கருப்பை வெளியாகி விட்டது.

''படு, இதோ பெறுவாய்...''

நான் கடலுக்கு ஓடி, சட்டைக் கைகளைச் சுருட்டிக் கொண்டு கைகளைக் கழுவிய பின் திரும்பி, பேறு கால மருத்துவன் ஆகி விட்டேன்.

அந்த மாது நெருப்பில் விழுந்த பிர்ச் மரப் பட்டை போல நெளிந்தாள், தன்னைச் சுற்றித் தரையில் கைகளால் அடித் தாள், பின்பு வாடிய புல்லைப் பிடுங்கி வாயில் அடைத்துக் கொள்ள இடை விடாது முயன்றாள். இரத்தப் பெருக் கால் சிவந்து வெறித்து நோக்கிய விழிகள் கொண்ட அவ ளுடைய முகம் மனிதத் தன்மையை இழந்து பயங்கரத் தோற்றம் அளித்தது. அவள் அதில் மண்ணை வாரிச் சொரிந்து கொண்டாள். அதற்குள் கருப்பை வாய் திறந்து பனிக்குடம்

உடைந்து தலை வெளிப்பட்டது. நான் அவளுடைய கால்களின் இசிவை அடக்கி, குழந்தைக்கு உதவவும், அவள் வலியால் கோணிய தனது கதறும் வாய்க்குள் புல்லைத் திணித்துக் கொள்ளாதபடிப் பார்த்துக் கொள்ளவும் வேண்டி இருந்தது...

நாங்கள் ஒருவரை ஒருவர் கொஞ்சம் திட்டிக் கொண்டோம்—அவள் பற்களின் ஊடாகவும், நான் தணிந்த குரலிலும். அவள் வலியினாலும் சந்தேகமின்றி வெட்கத்தினாலும் வாய்க்குள் திட்டினாள். நானோ, கூச்சத்தாலும் வேதனை உண்டாகும் அளவுக்கு அவள் மேல் ஏற்பட்ட இரக்கத்தாலும் அவ்வாறு செய்தேன்...

''க-கடவுளே'', என்று கரகரத்தாள் அவள். அவளுடைய நீல உதடுகள் கடிபட்டும் நுரைத்தும் இருந்தன. வெயிலில் திடீரென நிறம் இழந்து விட்டவை போன்ற விழிகளில் தாய்மையின் தாங்க முடியாத துன்பத்தால் பொங்கிய கண்ணீர் ஆறாகப் பெருகியது. இரண்டாகப் பகுக்கப்பட்ட அவளுடைய மேனி முழுவதும் நெளிந்து துடித்தது.

''தொ-லைந்து போடா, வெட்கங்...''

பலங்குன்றிய, சுளுக்கிய கைகளால் அவள் ஓயாமல் என்னைத் தள்ளினாள். நான் உறுதியுடன் சொன்னேன்:

''அசட்டுப் பெண்ணே, பெறு, சீக்கிரம், சாக்கிரதை...''

அவள் மேல் இரக்கத்தால் எனக்குக் கொடிய வேதனை உண்டாயிற்று, அவளுடைய கண்ணீர் என் விழிகளில் தெறித்தது போலத் தோன்றியது. துயரத்தால் நெஞ்சு சாம்பிப் போயிற்று. கூச்சலிட வேண்டும் போல் இருந்தது. நான் கூச்சலிட்டேன்:

''ஊம், சீக்கிரம்!''

இதோ, என் கையில் இருந்தான் மனிதன்—சிவந்தவன். கண்ணீரின் ஊடாகத் தான் என்றாலும், நான் பார்த்தேன்—அவன் செக்கச் செவேலென்று இருந்தான், அதற்குள் உலகத்தின் மேல் அவனுக்குக் கோபம் வந்து விட்டது, தத்தளித்தான், சண்டை பிடித்தான், தாயுடன் இன்னும் இணைந்திருந்தாலும் காட்டுக் கத்தல் கத்தினான். அவன் விழிகள் இள நீலம். துவண்ட சிவப்பு முகத்தில் மூக்கு வேடிக்கையாக நசுங்கிக் கிடந்தது. உதடுகள் அசைந்தன, நீண்டன:

''ந்யா-ஆன்... ந்யா-ஆ-ன்...''

ஒரே வழுக்கல் அவன், சற்று அசந்து மறந்தால் என் கைகளிலிருந்து நழுவிப் போய் விடுவான் போல. நான் முழந் தாள் படியிட்டு அவனைப் பார்த்துக் கெக்கலித்தேன். அவனைக் கண்டதில் எனக்கு நிரம்ப மகிழ்ச்சி! இதனுல் என்ன செய்ய வேண்டும் என்பதை மறந்து விட்டேன்...

''நறுக்கு...'' என்று தணிவாகக் கிசுகிசுத்தாள் தாய். அவளுடைய விழிகள் மூடி இருந்தன, முகம் சப்பிப் போ யிருந்தது, பிணத்தினது போல மண் நிறமாகக் காணப் பட்டது. நீல உதடுகளோ அனேகமாக அசையவில்லை:

''கத்தியால்... துண்டி...''

பாரக்கில் என் கத்தி திருட்டுப் போய் விட்டது. நான் தொப்பூழ்க் கொடியைக் கடித்துத் துண்டித்தேன். பயல் பெருங்கத்தல் கத்தினுன். தாயோ, புன்னகைத்தாள். நான் பார்த்தேன்: அவளுடைய ஆழங்காண முடியாத விழிகள் வியப்பூட்டும்படி மலர்ந்து நீலத் தழல் வீசிச் சுடர்ந்தன, கருமை படிந்த கை ஸ்கர்ட் பையைத் தடவித் தேடிற்று. கடிக்கப் பட்டு இரத்தம் கசிந்த உதடுகள் சலசலத்தன:

''வ-வலு... இல்லை... நாடா பையில்... தொப்பூழைக் கட்டுவதற்கு...''

நாடாவை எடுத்துக் கட்டினேன். அவள் முன்னிலும் அதிக ஒளியுடன் முறுவல் செய்தாள். ஒளியாலும் எழிலாலும் இந்தப் புன்னகை என் கண்களைக் கூசச் செய்தது.

''சரிப்படுத்திக் கொள், நான் போய்க் குழந்தையைக் கழுவுகிறேன்...''

அவள் நிம்மதி இன்றி முணுமுணுத்தாள்:

''இந்தா, கவனமாக... சாக்கிரதையாய் இரு என் கிறேன்...''

இந்தச் சிவப்பு மனிதப் பிரகிருதிக்கு சாக்கிரதை எதுவும் தேவைப்படவில்லை. அவன் முட்டியை இறுக்கிக் கொண்டு தன்னேடு சண்டைக்கு இழுப்பவன் போல வாள் வாளென்று ஓயாமல் கூப்பாடு போட்டான்:

''ந்யா-ஆன்... ந்யா-ஆன்...''

''நீ தான், நீ தான்! இன்னும் உறுதியாக உன்னை நிலை நாட்டிக் கொள், தம்பீ, இல்லாவிட்டால் மற்றவர்கள் தாமதமின்றித் தலையை வெட்டி விடுவார்கள்...''

எங்கள் இருவர் மீதும் குதூகலமாக நீரை வாரியடித்த

நுரைத்த கடல் அலை தன்னை முதன் முறை தழுவிக் கொண்ட போது அவன் தனிப்பட்ட கோபத்துடனும் உரக்கவும் கத்தினன். பின்னர், நான் அவனுடைய மார்பையும் முதுகையும் தட்டத் தொடங்கியதும் அவன் கண்களை இடுக்கிக் கொண்டு கை கால்களை உதைத்தவாறு காதைத் துளைக்கும்படி வீரிட்டான். அலைகள் ஒன்றன் பின் ஒன்ருக அவனை முழுக்காட்டின.

''கத்து, அரியோல்காரா! மூச்சு எட்டு மட்டும் கத்து...''

நாங்கள் அவன் தாயிடம் திரும்பிய போது அவள் மீண்டும் கண்களை மூடி உதடுகளைக் கடித்தவாறு நஞ்சு வெளியாவதற்கான வலியால் துடித்துக் கொண்டு படுத்திருந்தாள். ஆயினும், இந்த வேதனைக்கு இடையிலும், முனகல்களுக்கும் முக்கல்களுக்கும் ஊடாக என் காதுகளுக்கு எட்டியது அவளுடைய மரண வேதனை நிறைந்த கிசுகிசுப்பு:

''கொடு... கொடு அவனை...''

''பொறுக்கட்டும்.''

''கொடேன்...''

நடுங்கும் கைகளால் தட்டித் தடவி,சட்டையின் மார்புப் பொத்தான்களைக் கழற்றினுள். அவளுடைய மார்பகத்தை வெளியில் எடுக்க நான் உதவினேன். அது ஒரு இருபது குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்காக இயற்கையால் நிறைக்கப்பட்டிருந்தது. துள்ளித் துடித்துக் கொண்டிருந்த குஞ்சுப் பயலை அவளுடைய கதகதப்பான உடம்பை ஒட்டினாற் போலக் கிடத்தினேன். அவன் சட்டென்று விஷயத்தைப் புரிந்து கொண்டு அலறலை நிறுத்தினன்.

''புனிதக் கன்னியே, தாயே மரியம்மா'' என்று துணுக்குற்று முக்கியவாறு பறட்டைத் தலையைப் பயணப் பை மீது இடமும் வலமுமாக உருட்டினுள் தாய்.

திடீரென்று தணிந்த குரலில் கத்தி விட்டு மௌனமானுள். பிறகு அவளுடைய எல்லை இன்றி எழிலார்ந்த விழிகள் — பிள்ளைத் தாய்ச்சியின் புனித விழிகள்—மீண்டும் திறந்தன. அந்த நீல விழிகள் நீல வானை நோக்கின. நன்றியும் மகிழ்ச்சியும் குமிழியிடும் புன்னகை அவற்றில் ஒளிர்ந்து மறைந்தது. கையைச் சிரமத்துடன் உயர்த்தி, அன்னை தனக்கும் குழந்தைக்கும் நிதானமாகச் சிலுவைக் குறி இட்டாள்...

''போற்றி உனக்கு, புனித தேவ மாதாவே... ஓ, போற்றி உனக்கு...''

கண்களின் ஒளி மறைந்தது, விழிகள் ஆழ்ந்தன. தாய் அனேகமாக மூச்சுக் கூட விடாமல் நெடுநேரம் பேசாதிருந்தாள். பின்பு காரியப் பாங்கான, உறுதியான குரலில் சொன்னாள்:

''தம்பீ, என் பயணப் பையைத் திற...''

அவிழ்த்துத் திறந்தேன். அவள் என்னை உற்றுப் பார்த்து, பலவீனமாக முறுவலித்தாள். வற்றிய கன்னங்கள் மீதும் வியர்த்த நெற்றி மீதும் செம்மை இலேசாகப் படர்ந்தது போல் இருந்தது.

''அப்பால் போயேன் சற்றே...''

''நீ ரொம்பத்தானே அலட்டிக் கொள்ளாதே...''

''சரி, சரி... அப்பாலே போ...''

புதர்களில் சற்று தூரம் நகர்ந்தேன். இருதயம் களைத்துப் போனது போல் இருந்தது, ஆனால் நெஞ்சகத்தில் எவையோ இனிய பட்சிகள் மெல்லெனப் பாடிக் கொண்டிருந்தன. கடலின் ஓயாத அலையோசையுடன் சேர்ந்து இந்தப் புள்ளொலி ஓர் ஆண்டுக் காலம் கேட்டுக் கொண்டிருக்கலாம் போல அவ்வளவு நன்றாக இருந்தது...

அருகே எங்கோ சிலம்பிக் கொண்டிருந்தது ஓடை—ஒரு மங்கை தன் காதலனைப் பற்றித் தோழியிடம் கதை சொல்லிக் கொண்டிருந்தது போல...

புதர்களுக்கு மேலே எழுந்தது தலை. அதில் மஞ்சள் தலைக் குட்டை சரியாகக் கட்டியிருந்தது.

''அடடா, நீ நேரத்துக்கு முன்னே அலட்டிக் கொள்ளத் தொடங்கி விட்டாயே!''

செடியின் கிளையைத் தாங்கலாகப் பிடித்துக் கொண்டு அவள் உட்கார்ந்திருந்தாள். அவளது குருதியை யாரோ முற்றும் உறிஞ்சிக் குடித்து விட்டது போன்று சாம்பல் பூத்த முகம் ஒரு துளி கூட இரத்தம் இன்றி வற்றிக் கிடந்தது. கண்களின் இடத்தில் பிரமாண்டமான நீல ஏரிகள் இருந்தன. அவள் கனிவுடன் கிசுகிசுத்தாள்:

''எப்படித் தூங்குகிறான், பார்...''

அவன் நன்றாகத் தான் தூங்கினான், ஆனால் என் கருத்துப்படி மற்றக் குழந்தைகளை விட எவ்வகையிலும் மேலாக

அல்ல. வித்தியாசம் ஏதாவது இருந்தால் அது சூழலைப் பொறுத்திருந்தது. புதருக்கு அடியில், பளிச்சிடும் வண்ணங்கள் கொண்ட இலையுதிர் காலப் பழுப்புகளின் குவியல் மீது கிடந்தான் அவன். இத்தகைய செடிகளும் மரங்களும் அரியோல் மாநிலத்தில் வளர்வதில்லை.

''தாயே, நீ படுத்துக் கொள்ளேன்...''

''இல்-லை'' என்று தலையை அசைத்தாள் அவள், தொய்ந்த கழுத்தும் தானுமாக. ''நான் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும், பின்பு நடந்து போக வேண்டும், அதற்குத் தான், அவன் பேரென்ன...''

''அச்சேம்சிருக்கா?''

''ஆ-ஆமாம்! எங்களவர்கள் இதற்குள் ரொம்பத் தொலை போயிருப்பார்கள்...''

''உன்னால் நடக்க முடியுமா என்ன?''

''தேவமாதா இருக்கிறளே? துணை செய்வாள்...''

நல்லது, இவள் தேவமாதாவோடு சேர்ந்து போகிறள் என்றால் நான் வாயை மூடிக் கொள்ள வேண்டியதுதான்!

திருப்தி இன்றி உப்பிய சிறு முகத்தின் மீது புதருக்கு அடியில் பார்வை செலுத்தினாள் அவள். அன்பு ஒளிரும் இதமான கதிர்கள் அவளது விழிகளிலிருந்து பொழிந்தன. அவள் உதடுகளை நக்கிக் கொண்டு கைகளின் மெதுவான அசைவால் மார்பைத் தடவினாள்.

நான் நெருப்பு மூட்டிக் கற்களை நெருக்கமாக இணைத்துத் தேநீர்க் கொதிகலத்தை அவற்றின் மேல் வைத்தேன்.

''தாயே, இதோ தேநீர் பருகத் தருகிறேன்...''

''ஓ? குடிக்கக் கொடு, தம்பீ... என் மார்பெல்லாம் வறண்டு கிடக்கிறது...''

''ஆமாம், அதென்ன, ஊர்க்காரர்கள் உன்னை விட்டு விட்டுப் போய் விட்டார்கள்?''

''அவர்கள் விடவில்லை—எதற்காக? நான் தான் பின் தங்கி விட்டேன். அவர்கள் குடித்திருந்தார்கள். அவர்கள் போனதே நல்லது, இல்லாவிட்டால் அவர்களுக்கு முன்னால் நான் எப்படி நீட்டிப் படுத்திருக்க முடியும்...''

என்னை ஒரு பார்வை பார்த்து விட்டு முழங்கையால் முகத்தை மூடிக் கொண்டாள் பின்பு இரத்தத்தை உமிழ்ந்து விட்டுக் கூச்சத்துடன் குறுநகை செய்தாள்.

''தலேச்சனு?''

''ஆமாம்... நீ—யார்?''

''ஒரு வகையில் பார்த்தால் மனிதன்...''

''சந்தேகம் இல்லாமல் மனிதன்! கலியாணம் ஆகி விட்டதா?''

''இன்னும் அதற்கு நான் தகுதி பெறவில்லை...''

''புளுகுகிருயா?''

''எதற்காக!''

அவள் விழிகளைத் தாழ்த்திக் கொண்டு சற்று யோசனை செய்தாள்:

''அப்படியானுல் பெண்டுகள் காரியம் உனக்கு எப்படித் தெரிந்தது?''

இப்போது—புளுகுவேன் என்று எண்ணிக் கொண்டேன். சொன்னேன்:

''இதற்குப் படித்தேன். மாணவன்—கேள்விப்பட்டிருக் கிருயா?''

''கேள்விப்படாமல் என்ன! எங்கள் ஊர்ப் பாதிரியாரின் மூத்த மகனும் மாணவன் தான், பாதிரியாகப் படிக்கிருன்...'

''நானும் அந்த மாதிரித்தான். நல்லது, தண்ணீர் கொண்டுவரப் போகிறேன்...''

நங்கை தலேயை மகன் பக்கம் சாய்த்து, அவன் மூச்சு விடுகிருஞ என்று உற்றுக் கேட்டாள். பின்பு கடலின் புறம் பார்வை செலுத்தினுள்.

''எனக்கு உடம்பு கழுவிக் கொண்டால் நல்லது, தண் ணீர் எப்படிப்பட்டதோ தெரியவில்லே... என்ன தண்ணீர் இது? உப்புக் கரிக்கிறது, கசக்கவும் செய்கிறது...''

''இதனுலேயே உடம்பு கழுவிக் கொள். நல்ல தண்ணீர்!''

''மெய்யாகவா?''

''மெய்யாக. ஓடை நீரை விட இது வெதுவெதுப்பான தும் கூட. இங்கே ஓடைத் தண்ணீர் பனிக்கட்டி போல் குளிரும்...''

''நீ தெரிந்தவன் சொல்லுகிருய், அப்படியே செய் கிறேன்.''

ஒரு அப்காசியன் குதிரையை மெது நடையாக ஓட்டிய வாறு உறங்கி வழிந்தபடிச் சவாரி செய்து கொண்டுவந்தான். அவனுடைய தலே மார்பின் மேல் தொங்கியது. சிறு

குதிரையின் உடல் முழுதிலும் தசை நாண்கள் விரைத்து நின்றன. அது காதுகளை நாற்புறமும் திருப்பிக் கரிய வட்ட விழியால் எங்கள் பக்கம் நோக்கிச் செருமிற்று. சவாரிக் காரன் மென்மயிர்த் தோல் தொப்பி அணிந்த தலையைச் சாக்கிரதையாக உயர்த்தி எங்கள் பக்கம் கண்ணோட்டி விட்டு மறுபடி தலையைத் தாழ்த்திக் கொண்டான்.

''இந்தப் பக்கத்து மனிதர்கள் பாங்கில்லாதவர்கள். இவர்களைப் பார்க்கப் பயமாகவும் இருக்கிறது'' என்று தணிவாகச் சொன்னாள் அரியோல்காரி.

நான் போனேன். பாதரசம் போன்று ஒளியும் உயிர்த் துடிப்பும் உள்ள நீர்த் தாரை கற்களில் தத்தியவாறு பண் மிழற்றிக் கொண்டிருந்தது. இலை யுதிர் காலப் பழுப்புகள் அதில் களிப்புடன் கரணம் அடித்துக் கொண்டிருந்தன. அற்புதம்! நான் கைகளையும் முகத்தையும் கழுவிக் கொண்டு கொதிகலம் நிறையத் தண்ணீர் முகந்து கொண்டேன். திரும்பியவன் அந்த மாது கலவரத்துடன் சுற்று முற்றும் கண்ணோட்டியவாறு தரையில், பாறைகள் மீது தவழ்வதைப் புதர்களின் ஊடாகக் கண்டேன்.

''உனக்கு என்ன வேண்டும்?''

அவள் பயந்து போனாள். அவளுடைய முகம் சாம்பல் நிறமாயிற்று. அவள் எதையோ தனக்கு அடியில் மறைத்தாள். நான் விஷயத்தைப் புரிந்து கொண்டேன்.

''என்னிடம் கொடு, நான் புதைக்கிறேன்...''

''ஐயோ, தம்பீ! அது எப்படி? குளியறை முகப்பில், தரைக்கு அடியில் புதைக்க வேண்டும் நம் வழக்கப்படி...''

''இங்கே குளியறை எப்போது கட்டி முடியும் என்று யோசித்துப் பார்!''

''நீ கேலிப் பேச்சு பேசுகிறாய். நானோ, அஞ்சுகிறேன்! ஏதாவது விலங்கு தின்று விட்டாலோ... நஞ்சுப் பொதியைப் பூமிக்கு அல்லவா கொடுக்க வேண்டும்...''

அவள் ஒரு பக்கம் திரும்பிக் கொண்டு ஈரமான, கனத்த முடிச்சை என்னிடம் கொடுத்து விட்டு, தணிவாக, கூச்சத்துடன் வேண்டிக் கொண்டாள்:

''இந்தா, நீ இதை—கொஞ்சம் நன்றாகவே, அதிக ஆழமாகப் புதை, இயேசுவுக்காக, என் மகன் மேல் இரக்கம் கொண்டு, காரியத்தை நல்லபடியாகச் செய்...''

...நான் திரும்பிய போது அவள் கடலிலிருந்து வருவதைக் கண்டேன். கையை முன்னே நீட்டியவாறு தள்ளாடி நடந்தாள் அவள். அவளுடைய ஸ்கர்ட் இடுப்பு வரை நனைந்திருந்தது. ஆனால் முகத்தில் லேசாகச் செம்மைபடரத் தொடங்கி இருந்தது. அது உள்ளிருந்து ஒளி வீசுவது போலத் தோன்றியது. நான் அவளைத் தாங்கலாகப் பிடித்து நெருப்பருகே கொண்டு விட்டேன். வியப்பு மேலிட எண்ணிக் கொண்டேன்:

''எப்பேர்ப்பட்ட விலங்கு ஆற்றல் இவளிடம்!''

பிறகு இருவரும் தேனுடன் தேநீர் பருகினோம். அவள் என்னிடம் தணிந்த குரலில் கேட்டாள்:

''படிப்பை விட்டு விட்டாயா?''

''விட்டு விட்டேன்.''

''காசை எல்லாம் குடித்துக் கரியாக்கி விட்டாயோ?''

''கொஞ்சங்கூட மீதம் வைக்காமல், தாயே!''

''நல்ல ஆள்தான் நீ!'' எனக்கு நினைவு இருக்கிறது, சுகுமில் இயக்குநரோடு நீ சாப்பாட்டுக்காகச் சண்டை பிடித்தாயே, அப்போது கவனித்தேன். அப்போதே நினைத்துக் கொண்டேன்,இந்த ஆள் குடிகாரன்,எதற்கும் அஞ்சாதவன் என்று...''

வீங்கிய உதடுகளில் ஒட்டிக் கொண்டிருந்த தேனைச் சுவையுடன் நக்கியவாறு நீல விழிகளால் புதரடியில் ஓரப் பார்வை செலுத்திய வண்ணமாக இருந்தாள். அங்கே புது அரியோல் காரன் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தான்.

''இவன் எப்படித் தான் வாழப் போகிறானோ?'' என்று பெருமூச்சுடன் என்னை ஏற இறங்கப் பார்த்தவாறு கூறினாள். ''நீ எனக்கு உதவினாய், நன்றி... ஆனால் இது இவனுக்கு நல்லது தானா? அறியேன்...''

அவள் தேநீர் பருகி, உணவு அருந்தி விட்டுச் சிலுவைக் குறி இட்டுக் கொண்டாள். நான் என் சாமான்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த போது அவள் தூக்க மயக்கத்துடன் ஆடி விழுந்தவாறு கண்ணயர்ந்தாள், மீண்டும் நிறம் மங்கி விட்ட விழிகளால் தரையைப் பார்த்தபடி எதையோ பற்றி எண்ணமிட்டாள். பின்பு எழுந்திருக்க முயன்றாள்.

''நீ என்ன, புறப்பட்டு விட்டாயா?''

''ஆமாம்.''

''இந்தா, தாயே, சாக்கிரதை!''

''ஆனால் தேவ மாதா தான் துணை செய்வாளே?.. கொடு அவனை இப்படி!''

''இவனை நான் தூக்கிக் கொண்டு வருகிறேன்...''

நாங்கள் விவாதித்தோம். அவள் விட்டுக் கொடுத்தாள். இருவரும் தோளோடு தோள் சேர்த்து இணையாக நடந்தோம்.

அவள் குற்றம் செய்தவள் போன்று முறுவலித்து, ''நான் விழுந்து விடாமல் இருப்பதற்காக'' என்று கூறி என் தோள் மேல் கையை வைத்தாள்.

ருஷ்ய நிலத்தின் புதிய வாழ்நன், எப்படி இருக்கும் என்று தெரியாத விதியினன், என் கைகளில் படுத்து ஆழ்ந்து நெடு மூச்சிழுத்தான். சீவல் சுருள்களின் வெள்ளை வலைப் பின்னல்கள் பூண்ட கடல் அலையடித்துச் சீறியது. புதர்கள் கிசுகிசுத்தன, பிற்பகலுக்கு மாறிய சூரியன் ஒளி வீசியது.

நாங்கள் மெதுவாக நடந்தோம். சில வேளைகளில் தாய் நின்றாள், ஆழ்ந்து மூச்சிழுத்து, தலையை நிமிர்த்திச் சுற்று முற்றும், கடலின் மீதும் காட்டின் மீதும் மலைகளின் மீதும் கண்ணோட்டினாள், பின்பு மகனுடைய முகத்தைப் பார்த்தாள். துன்பக் கண்ணீரால் உள்ளும் புறமும் கழுவப் பெற்ற அவளுடைய விழிகள் மீண்டும் அற்புதமாகத் தெளிந்து தீராத அன்பின் நீல நெருப்பாய் ஒளிர்ந்து சுடர்ந்தன.

ஒரு முறை நடுவில் நின்று, அவள் சொன்னாள்:

''கடவுளே, என் ஆண்டவனே! எவ்வளவு நன்றாய் இருக்கிறது எங்கும், என்ன அழகு! இப்படியே எல்லாம் நடந்தேறினால் நல்லது, எல்லாம், உலகத்தின் எல்லை விளிம்பு வரையில், நடந்தேறினால் நல்லது. இவன், என் மகன், வளரட்டும், கட்டில்லாமல், தாயின் அரவணைப்பில் வளர்ந்து பெரியவன் ஆகட்டும், என் கண்ணின் கருமணி...''

...கடல் ஒலித்துக் கொண்டிருந்தது, இடையறாது ஒலித்துக் கொண்டிருந்தது...



முதல் காதல்

...அப்போதுதான் விதி என்னைப் பயிற்றும் நோக்கத்துடன் முதல் காதலின் துன்பமும் இன்பமும் கலந்த உளக் கொந்தளிப்புகளை நான் அனுபவிக்குமாறு வைத்தது.

நண்பர் குழாம் அகா ஆற்றில் படகுகளில் செல்ல ஏற்பாடு செய்தது. இந்த உல்லாசப் பயணத்துக்கு க. தம்பதியரை அழைக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப் பட்டது. அவர்கள் அண்மையில் பிரான்சிலிருந்து திரும்பி வந்திருந்தார்கள், ஆனல் நான் அவர்களை இன்னும் அறிமுகம் செய்து கொள்ளவில்லை. மாலையில் அவர்கள் வீட்டுக்குப் போனேன்.

அவர்கள் ஒரு பழைய கட்டிடத்தின் நிலவறையில் வசித்து வந்தார்கள். வீட்டுக்கு எதிரே சேற்று நீர்க் குட்டம் வீதியின் இரு மருங்குகளையும் இணைத்தவாறு தேங்கி இருந்தது. வசந்த காலம் முழுவதிலும் அனேகமாகக் கோடை காலம் அனைத்திலும் கூட அது உலர்ந்ததில்லை. காகங்களும் நாய்களும் அதை முகம் பார்க்கும் கண்ணுடியாகப் பயன்படுத்தின. பன்றிகள் அதில் முழுக்காடின.

ஓரளவு சிந்தனையில் ஆழ்ந்திருந்த நான் அறிமுகம் அற்றவர்களின் வீட்டில் மலையிலிருந்து உருளும் கல் போலத் திடுமெனப் புகுந்து, அதில் வசித்தவர்களுக்கு விந்தையான தடுமாற்றம் ஏற்படுத்தினேன். நடுத்தர உயரமுள்ள ஒரு பருத்த மனிதன் அடுத்த அறையின் வாயிலை அடைத்தவாறு கருங்கும்மென்று என் முன்னே நின்றான். அவன் சணல் நிறப்புதர்த் தாடி வைத்திருந்தான். அவனுடைய இள நீல விழிகளின் பார்வையில் நல்லியல்பு ததும்பியது.

ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டு வெடுக்கெனக் கேட்டான்:

''உங்களுக்கு என்ன வேண்டும்?''

அதோடு, போதிக்கும் தொனியில் கூறினன்:

''உள்ளே வருவதற்கு முன்னல் கதவைத் தட்ட வேண்டும்!''

பெரிய வெள்ளைப் பறவை போன்ற ஒன்று அவனுடைய முதுகுக்குப் பின்னல், அறையின் மங்கலில் பதற்றத்துடன் நடமாடுவதும் துடிதுடிப்பதுமாக இருந்தது. மகிழ் பொங்கும் குரல் கணீரென ஒலித்தது:

''அதிலும், மணமானவர்களின் இருப்பிடத்துக்குள் வந்தால்...''

எனக்கு வேண்டியவர்கள் அவர்கள் தாமா என்று நான் கோபத்துடன் கேட்டேன். வசதியுள்ள கடைக்காரன் போல இருந்த மனிதன் ஆமென்றதும் நான் வந்த காரணத்தை விளக்கினேன்.

அந்த ஆள் சிந்தனையுடன் கம்பீரமாகத் தாடியைத் தடவியவாறு ''உங்களைக் கிளார்க் அனுப்பியதாகச் சொல்கிறீர்களா?'' என்று உசாவியவன், அக்கணமே துணுக்குற்று, பம்பரமாய்த் திரும்பி வலியுடன் வீரிட்டான்:

''ஐயோ, ஓல்கா!''

இடுப்புக்குச் சற்றுக் கீழே இருப்பதால் பெயர் குறிப்பது அநாகரிகமாகக் கருதப்படும் உடற் பகுதியில் யாரோ அவனைக் கிள்ளி விட்டதாக அவனுடைய கையின் வலிப்பு கண்டது போன்ற இயக்கத்தைக் கொண்டு அனுமானித்தேன்.

நிலையைப் பிடித்துக் கொண்டு அவனது இடத்தில் நின்ருள் வடிவமைந்த மேனியளான ஒரு மங்கை. நீல விழிகளால் என்னை நோக்கிப் புன்னகை செய்து கொண்டிருந்தாள் அவள்.

''நீங்கள் யார்? போலீஸ்காரரா?''

''இல்லை, காற்சட்டைகள் மட்டுந்தான் இப்படி'' என்று மரியாதையாக விடை இறுத்தேன். அவள் குலுங்கிச் சிரித்தாள்.

நான் நெடு நாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த அதே புன்னகை அவளுடைய விழிகளில் சுடர்ந்தமையால் அவளது கேள்வி எனக்கு வருத்தம் தரவில்லை. அவளுக்குச் சிரிப்பு மூட்டியது என்னுடைய ஆடை போலும். நான்

போலீஸ்காரனுக்குரிய நீலக் காற்சட்டை அணிந்திருந்தேன். சட்டையின் இடத்தில் குசினிக்காரன் வெள்ளை உடுப்பை மாட்டிக் கொண்டிருந்தேன். இது மிகவும் சௌகரியமானது, கோட்டின் பாத்திரத்தை இலாகவமாக வகிக்கிறது. அதோடு, கொக்கிப் பொத்தான்களால் இது கழுத்து வரை மூடி விடுவதால் சட்டை தேவையில்லை. வேறு ஒருவனுடைய வேட்டைப் பூட்சுகளும் இத்தாலியக் கொள்ளைக்காரனது போன்ற அகலத் தொப்பியும் என்னுடைய ஆடையணி களுக்கு அருமையாக முத்தாய்ப்பு வைத்தன.

என் கையைப் பற்றி அறைக்குள் இழுத்து நாற்காலி அருகே தள்ளி, என் முன்னே நின்று கொண்டு அவள் கேட்டாள்:

''எதனால் நீங்கள் இப்படிக் கோமாளித்தனமாக உடை அணிந்திருக்கிறீர்கள்?''

''ஏன் கோமாளித்தனமாக என்கிறீர்கள்?''

''கோபித்துக் கொள்ளாதீர்கள்'' என்று நட்புடன் மொழிந்தாள் அவள்.

வேடிக்கையான பெண். இவள் மேல் கோபித்துக் கொள்ள யாரால் முடியும்?

தாடிக்காரன் கட்டில் மேல் அமர்ந்து காகிதத்தில் புகையிலைத் தூளைப் போட்டு சிகரெட்டு சுருட்டினான். அவனைக் கண்களால் குறித்து அவளிடம் கேட்டேன்:

''இவர் தகப்பனாரா, அல்லது தமையனாரா?''

''கணவர்!'' என்று உறுதியுடன் விடை அளித்தான் அவன்.

''ஏன் கேட்டீர்கள்?'' என்று சிரிப்புடன் வினவினாள் அவள்.

நான் சற்று யோசித்து, அவளை உற்றுப் பார்த்து, கூறினேன்:

''மன்னியுங்கள்!''

இந்த மாதிரிச் சுருக்கமான தோரணையில் உரையாடல் ஒரு ஐந்து நிமிடங்களுக்குத் தொடர்ந்தது. ஆனால், இந்த நங்கையின் முட்டை வடிவான குறுகிய முகத்தையும் அவளுடைய அன்பு ததும்பும் விழிகளையும் நோக்கியவாறு இந்த நிலவறையில் ஐந்து மணிகள், நாட்கள், ஆண்டுகள் அசையாமல் உட்கார்ந்திருக்க என்னால் முடியும் என்று நான்

உணர்ந்தேன். அவளுடைய சிறிய வாயின் கீழுதடு மேலு தட்டைக் காட்டிலும் பருமனாக இருந்தது, சற்று வீங்கியது போல. அடர்ந்த செம்பழுப்புக் கூந்தல் குட்டையாகக் கத்தரிக்கப்பட்டு ஆடம்பரமான மென்மயிர்த் தொப்பி போலத் தலை மீது கவிந்திருந்தது. ரோஜா நிறக் காதுகள் மேலும் மெல்லிய செம்மை படர்ந்த கன்னிக் கன்னங்கள் மீதும் தலை மயிர்ச் சுருள்கள் சிதறிக் கிடந்தன. அவளுடைய கரங்கள் மிக அழகானவை—அவள் நிலையைப் பிடித்துக் கொண்டு அறை வாயிலில் நின்ற போது தோள் வரை திறந்த அந்தக் கரங்களை நான் கண்டேன். லேஸ் வைத்த அகன்ற கைகளுள்ள வெள்ளைச் சட்டையும் நன்கு தைத்த வெள்ளை ஸ்கர்ட்டு மாக ஏதோ சிறப்பான எளிமையுடன் அவள் உடை அணிந் திருந்தாள். ஆனால் அவளிடம் எல்லாவற்றையும் விடக் கவனத்தை ஈர்த்தன அவளுடைய நீல விழிகள்.ஒரே மகிழ்ச்சி யும் அன்பும் பொங்க, நட்பார்ந்த ஆவல் ததும்ப அவை சுடர்ந்தன. இன்னொரு விவரமும் சந்தைகத்துக்கு இடம் அற்றது! இருபது வயது இளைஞனுடைய இதயத்துக்கு—வாழ்க்கையின் பண்பின்மையால் புண்படுத்தப்பட்ட இதயத் துக்கு—முற்றிலும் இன்றியமையாத இளநகை அவள் முகத் தில் மிளிர்ந்தது.

''இதோ மழை கொட்டப் போகிறது'' என்று சிகரெட்டுப் புகையால் தாடிக்குப் புகை ஏற்றியவாறு அறிவித்தான் அவளுடைய கணவன்.

நான் வெளியே பார்த்தேன்: மேகங்கள் அற்ற வானில் தாரகைகள் சுடர்ந்தன. நாம் இந்த ஆளுக்கு இடைஞ்சல் செய்கிறோம் என்று அப்போது நான் புரிந்து கொண்டு வெளி யேறினேன். என்னிடமே மறைத்தவாறு நெடுங்காலமாக நான் தேடிக் கொண்டிருந்த நபரைச் சந்தித்த பின் ஏற்படு வது போன்ற உள்ளார்ந்த உவகை ஊற்றெடுக்கும் மனநிலை யில் நடந்தேன்.

நீல விழிகளின் பரிவு ததும்பும் ஒளிர்வை வியந்து பாராட் டியவாறு இரவு முழுதும் திடலில் சுற்றிக் கொண்டிருந்தேன். இந்தச் சிறு நங்கை வயிறுர உண்ட பூனையினைப் போன்ற நல்லியல்புள்ள விழியினனான தாடிக்காரச் சடனுக்கு ஏற்ற மனைவி அல்லவே அல்ல என்ற அசைக்க முடியாத உறுதி பொழுது புலர்கையில் எனக்கு ஏற்பட்டு விட்டது. எனக்கு

அவள் மேல் இரக்கம் கூட உண்டாயிற்று—பாவம்! ரொட்டிப் பொருக்குகள் தாடியில் சிக்கிக் கொண்டிருக்கும் ஆளோடு அவள் வாழ வேண்டி இருக்கிறதே...

மறு நாள் நாங்கள் கலங்கிய ஒகா ஆற்றில் உல்லாசப் பயணம் புறப்பட்டோம். பல நிறச் சுண்ணக் களிமண்ணின் அகன்ற படிவுகள் செறிந்த செங்குத்துக் கரைகளின் கீழ் எங்கள் படகுகள் சென்றன. உலகு படைக்கப்பட்ட நாள் முதல் யாவற்றிலும் சிறந்த பகலாகத் திகழ்ந்தது அது. விழாக் கோலம் பூண்டு பளிச்சிட்ட வானில் சூரியன் அற்புதமாக ஒளி வீசியது. முதிர்ந்த ஸ்டிராபெரிப் பழங்களின் இன் மணம் ஆற்றுக்கு மேலே கமழ்ந்தது. தாங்கள் உண்மையில் அருமையானவர்கள் என்பதை எல்லா மனிதர்களும் நினைவுபடுத்திக் கொண்டார்கள். இதனால் அவர்கள் மீது மகிழ்ச்சி நிறைந்த அன்பு என் உள்ளத்தில் ஊறித் ததும்பியது. என் இதய அணங்கின் கணவன் கூட அருமையான ஆளாக எனக்குத் தென்பட்டான்: எந்தப் படகில் அவனுடைய மனைவி அமர்ந்திருந்தாளோ, எதில் நான் துடுப்பு தள்ளினேனோ, அதில் அவன் உட்காரவில்லை. நாள் முழுவதும் அவன் எடுத்தும் காட்டான அறிவுடன் நடந்து கொண்டான். பிரிட்டிஷ் பிரதமரான முதியவர் கிளாட்ஸ்டனைப் பற்றி மிக ஏராளமான சுவையுள்ள கதைகளை முதலில் சொன்னான், பின்பு முதல் தரமான பாலை ஒரு கலயம் நிறையக் குடித்தான், புதர் அடியே படுத்து குழந்தை போன்ற அமைதியான தூக்கத்தில் மாலை வரை ஆழ்ந்திருந்தான்.

எங்கள் படகு சந்திப்பு இடத்தை முதலில் அடைந்தது என்று கூறவே தேவை இல்லை. என் அணங்கை நான் கைகளில் தூக்கிக் கொண்டு படகிலிருந்து இறங்கிய போது அவள் சொன்னாள்:

"நீங்கள் தாம் எவ்வளவு பலசாலி!"

நகரத்தின் எந்த மணிக் கூண்டையும் குப்புறக் கவிழ்த்த எனக்கு வல்லமை இருப்பதாக நான் உணர்ந்தேன். அவளைத் தூக்கிக் கொண்டு நகரம் வரையில்—ஏழு வெர்ஸ்டாக்கள்—நடக்க என்னால் முடியும் என்று அவளிடம் கூறினேன்*. அவள் என்னைப் பார்வையால் வருடியவாறு மெல்லென

---

* நிச்சயமாக என்னால் முடிந்திருக்காது.—எ-ர்.

நகைத்தாள். அவளுடைய விழிகள் பகல் முழுதும் என் முன் ஒளிர்ந்த வண்ணமாய் இருந்தன. அவை எனக்காகவே ஒளிர் கின்றன என்று எனக்குத் திண்ணமான உறுதி ஏற்பட்டது.

தான் முன்பு கண்டிராத, அக்கறைக்கு உரிய விலங்கை முதன் முறை சந்தித்த நங்கைக்கும் நங்கையின் அன்பு இன்றியமையாது தேவைப்பட்ட உடல் நலம் வாய்ந்த இளைஞனுக்கும் முற்றிலும் இயல்பான விரைவுடன் அப்புறம் காரியங்கள் நடந்தன.

விரைவில் நான் அவளைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்டேன். தோற்றத்தில் கன்னி போன்று இருந்தாலும் அவள் எனக்குப் பத்து வயது பெரியவள். பெலஸ்தோக் ''உயர்குல மங்கையர்'' கல்லூரியில் பயின்றவள். பனிக் கால அரண்மனைக் காவல் தலைவனுடைய மணமகளாக இருந்தாள், பாரிசில் வசித்தாள், ஓவியம் வரையவும் பேறு காலப் பணி புரியவும் கற்றாள். அவளுடைய தாயும் பேறு காலப் பணி மகளாக இருந்ததாகவும் நான் பிறந்த போது என்னைத் தன் கைகளில் ஏற்றதாகவும் பிற்பாடு தெரிய வந்தது. இந்த நிகழ்ச்சியில் ஊழின் முன் முடிவு ஏதோ இருந்ததாக எண்ணி நான் பெரிதும் பூரித்துப் போனேன்.

மரபுகளை மதியாத அறிவுஜீவிகளுடனும் நாடு கடந்த ருஷ்யர்களுடனும் பழக்கம், அவர்களில் ஒருவனோடு தொடர்பு, பாரிஸ், பீட்டர்ஸ்பர்க், வியனு நகர நிலவறை களிலும் முகட்டறைகளிலும் அரை நாடோடி, அரைப் பட் டினி வாழ்க்கை—இவை எல்லாம் கல்லூரி மாணவியை வினோதமான முறையில் சிக்கலானவள், அபூர்வமான வகை யில் அக்கறைக்கு உரியவள் ஆக்கி இருந்தன. அவள் உல் லாசப் பிரகிருதி, டிட்மௌஸ் பறவை போன்று துடியான வள். அறிவுக்கூர்மை உள்ள இள மங்கையின் தீவிர ஆவ லுடன் வாழ்க்கையையும் மனிதர்களையும் அவள் நோக் கினாள், பிரெஞ்சுப் பாட்டுக்களை உற்சாகமாகப் பாடினாள், அழகாக சிகரெட்டு பிடித்தாள், திறமையாகப் படம் வரைந் தாள், அரங்கில் மோசமில்லாமல் நடித்தாள், நன்றாக உடை கள் தைக்கவும் தொப்பிகள் தயாரிக்கவும் வல்லவளாக இருந் தாள். பேறு காலப் பணியை அவள் மேற் கொள்ளவில்லை.

''நான் நான்கு தடவைகள் பிரசவம் பார்த்தேன்.

இவற்றில் எழுபத்தைந்து சத விகிதம் சாவுகள் நிகழ்ந்தன''
என்று அவள் கூறினாள்.

இந்தக் காரணத்தால் மக்கள் தொகை அதிகரிப்பில் சுற்று வழி உதவி செய்வதை அவள் அடியோடு விட்டு விட்டாள். மரியாதைக்குரிய இந்தக் காரியத்தில் அவள் நேரடியாகப் பங்காற்றியதற்குச் சான்றாக விளங்கினாள் அவளுடைய பெண்—ஏறக்குறைய நான்கு வயதான இனிய, அழகிய சிறுமி. நன்றாகத் தெரிந்த, போதிய அளவு தெவிட்டிப் போன மனிதனைப் பற்றிப் பேசுவது போன்ற தோரணையில் அவள் தன்னைப் பற்றிப் பேசினாள். ஆனால் தன்னைப் பற்றிப் பேசுகையில் சில வேளைகளில் அவள் வியப்படைந்தவள் போலத் தோன்றுவாள், அவளுடைய விழிகள் அழகாக ஆழ் நிறம் கொள்ளும், லேசான கூச்சப் புன்னகை அவற்றில் ஒளிரும்—மினுக்கிடும். குழப்பம் அடைந்த குழந்தைகள் இவ்வாறு புன்னகை செய்வதுண்டு.

அவளுடைய கூரிய, திட்பம் வாய்ந்த அறிவை நான் நன்றாக உணர்ந்தேன். பண்பாட்டில் அவள் என்னை விட உயர்ந்தவள் என்பதைப் புரிந்து கொண்டேன். மனிதர்களிடம் அவள் கடைப்பிடித்த தாராளமும் பெரியமனிதத் தன்மையும் உள்ள போக்கைக் கண்டேன் தெரிந்த எல்லாக் குமரிகளையும் மாதர்களையும் விட அவள் ஒப்பிட இயலாத அளவு அதிகக் கவர்ச்சி உள்ளவளாக இருந்தாள். அவள் சொன்ன கதைகளின் அசட்டையான தொனி என்னை வியப்பில் ஆழ்த்தியது. எனக்கு இப்படித் தோன்றியது: புரட்சி மனப்பான்மை கொண்ட என் நண்பர்கள் அறிந்தவை யாவற்றையும் இந்த நபர் அறிந்திருக்கிறாள், அவற்றுக்கு மேற்கொண்டும் எதையோ, அதிக முக்கியத்துவம் உள்ள எதையோ, அறிந்திருக்கிறாள். ஆனால், சில வேளைகளில் ஆபத்தானவை என்றாலும் இனிமையான, தான் அனுபவித்த குழந்தை விளையாட்டுகளை வயது வந்தவனது போன்ற புன்னகையுடன் கவனித்தவாறு, எதிலும் தான் நேராகப் பங்கெடுத்துக் கொள்ளாமல் எல்லாவற்றையும் இவள் தொலைவிலிருந்து நோட்டமிடுகிறாள்.

அவள் வசித்த நிலவறை இரண்டு அறைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒன்று சிறு சமையற்கட்டு. மற்றது பெரிய அறை சமையற்கட்டு முன்னறையாகவும் பயன்

ப்பட்டது. பெரிய அறையில் வீதிப் பக்கம் மூன்று சன்னல்களும் குப்பை கூளங்கள் நிறைந்து அழுக்காய் இருந்த முற்றத்தின் பக்கம் இரண்டு சன்னல்களும் இருந்தன. அது செம்மானின் தொழிற் கூடத்துக்கு ஏற்ற இடமாக இருந்ததே தவிர, மாபெரும் புரட்சியின் புனித நகரான பாரிசில், மோலியர், பமார்ஷே, ஹியூகோ போன்ற இலக்கிய ஆசிரியர்களதும் மேதை வாய்ந்த வேறு சான்றோருடையவும் நகரான பாரிசில் வாழ்ந்த நாகரிக நங்கைக்கு ஏற்றதாக இல்லை. ஓவியத்துக் கும் அதன் சட்டத்துக்கும் இன்னும் பல விஷயங்களில் பொருத்தமின்மை இருந்தது. இந்த எல்லா விஷயங்களும் எனக்குக் கடுமையாக எரிச்சலூட்டின, வேறு பல உணர்ச்சி களோடு அந்த நங்கை மீது அனுதாபத்தைத் தூண்டின. ஆனால் எவை என் கருத்துப்படி அவளுக்கு அவமதிப்பவை யாகத் தோன்ற வேண்டுமோ அவற்றில் எதையும் அவள் பொருட்படுத்தவில்லை.

அவள் காலை முதல் மாலை வரை வேலை செய்து கொண் டிருந்தாள். காலையில் சமையல்காரியாகவும் வெள்ளாட்டி யாகவும் உழைத்தாள். பின்பு சன்னலோரமாகப் பெரிய மேசை அருகே அமர்ந்து நகரவாசிகளின் உருவப் படங்களைப் போட்டோக்களைப் பார்த்துப் பென்சிலால் எழுதினாள், நிலப் படங்கள் வரைந்தாள், நில வரைபடங்களுக்கு வண்ணங்கள் தீட்டினாள், ஜெம்ஸ்த்வோ பற்றிய புள்ளி விவரத் தொகுப்பு கள் தயாரிப்பதில் கணவனுக்கு உதவி செய்தாள். திறந்த நில்வறைச் சன்னலிலிருந்து அவளுடைய தலை மேலும் மேசை மீதும் தெருப் புழுதி சொரிந்தது, வழிப்போக்கர்களுடைய கால்களின் பருத்த நிழல்கள் காகிதங்கள் மேல் வழுகிச் சென் றன. அவள் வேலை செய்து கொண்டே பாடினாள். உட்கார்ந்து அலுத்துப் போன போது நாற்காலியுடன் நடனம் ஆடினாள், அல்லது பெண்ணோடு விளையாடினாள். அழுக்குப் பிடித்த வேலைகள் ஏராளமாக இருந்துங்கூட, பூனை போன்று எப்போதும் துப்புரவாக இருந்தாள்.

அவளுடைய கணவன் நற்பண்பு உள்ளவன், சோம்பேறி. மொழி பெயர்த்த நவீனங்களை, சிறப்பாகத் தந்தை டியூமா வின் நவீனங்களை, படுக்கையில் படுத்தவாறு படிப்பதை அவன் விரும்பினான். ''இது மூளை உயிரணுக்களைப் புதுக்கு கிறது'' என்றான். ''கண்டிப்பான விஞ்ஞான நோக்கு நிலை

யிலிருந்து'' வாழ்க்கையைப் பார்வையிடுவது அவனுக்குப் பிடித்தது. மதியச் சாப்பாட்டை அவன் ''உணவு ஏற்பு'' என்று அழைத்தான். சாப்பிட்ட பின் கூறினான்:

''உணவுக் கூழ் இரைப்பையிலிருந்து உடலின் உயிரணுக் களுக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு முழு அமைதி தேவை.''

பின்பு, தாடியில் ஒட்டிக் கொண்டிருந்த ரொட்டிப் பொருக்குகளைத் தட்டிப் போக்க மறந்து, படுக்கையில் படுத்து, டியூமாவையோ கஸவியே த மான்தப்பேனையோ சில நிமிடங்கள் ஆழ்ந்து படித்தான். பிறகு ஒரு இரண்டு மணி நேரத்துக்கு மூக்கால் இசைப் பாங்குடன் சீழ்க்கை அடிப்பது போலக் குறட்டை விட்டான். அவனது மென்மை யான வெளிர் மீசை கண்ணுக்குப் புலப்படாத ஏதோ ஒன்று அதில் ஊர்வது போல மெதுவாக அசைந்தது. உறங்கி விழித் ததும் விட்டத்து வெடிப்புகளை நெடுநேரம் சிந்தனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று ஒரு விஷயத்தை நினைவு கூர்ந்தான்:

''நேற்று குஸ்மா பார்னெலின் கருத்துக்குத் தவறான விளக்கம் அல்லவா தந்தான்!''

உடனே குஸ்மாவின் தவற்றை எடுத்துக் காட்டுவதற் காகக் கிளம்பியவன் மனைவியிடம் சொன்னான்:

''இதோ பார், மாய்தான்-வட்டத்தில் குதிரை இல்லாத விவசாயிகள் பற்றிய கணக்கீட்டை நீ எனக்காகத் தயவு செய்து முடித்து வை. நான் இதோ வந்து விடுகிறேன்!''

கிட்டத்தட்ட நள்ளிரவில், சில சந்தர்ப்பங்களில் இன்னுங்கூட நேரம் கழித்து, மிகுந்த மனநிறைவுடன் திரும்பினான்.

''கேட்டாயா, இன்றைக்குக் குஸ்மாவை நொறுக்கி விட் டேன் நொறுக்கி! அந்தப் பித்தலாட்டக்காரனிடம் மேற் கோள்களை நினைவு வைத்துக் கொள்ளும் திறமை வெகுவாக வளர்ச்சி அடைந்திருக்கிறது, ஆனால் இதில் கூட நான் அவ னுக்குச் சளைத்தவன் அல்ல. இன்னொன்று தெரியுமோ— கிழக்கு நாடுகள் பற்றிய கிளாட்ஸ்டனுடைய கொள்கையை இந்த விசித்திரப் பிரகிருதி அறவே புரிந்து கொள்ளவில்லை!''

பினேயையும் ரிஷேயையும் மூளை ஆரோக்கியத்தையும் பற்றி அவன் ஓயாமல் பேசினான். மோசமான பருவ நிலையில் வீட்டில் தங்கி, தன் மனைவியின் மகளுக்குப் போதனை அளிப்

பதில் ஈடுபட்டான். இந்த மகள் இரண்டு காதல் நிகழ்ச்சிகளின் நடுவே வழியில் எங்கோ தற்செயலாகப் பிறந்தவள்.

''லேலியா, நீ சாப்பிடும் போது நன்ருக மெல்ல வேண்டும். இது உணவுக் கூழை எளிதில் தன்மயமாகக் கூடிய இரசாயனப் பொருள்களின் கலவையாக விரைவில் மாற்ற இரைப்பைக்கு உதவி, உணவின் செரிமானத்தை இலேசாக்குகிறது.''

மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு தன்னை ''முழு அமைதி நிலைக்குக்'' கொண்டுவருகையில் குழந்தையைப் படுக்கையில் கிடத்தி அதற்குக் கதை சொன்னுன்:

''ஆயிற்ரு, இரத்த வெறியனும் அதிகார வேட்டை கொண்டவனுமான முதலாம் நெப்போலியன் போனபார்ட் ஆட்சியை வஞ்சகமாகக் கைப்பற்றிய போது...''

இந்த விரிவுரைகளைக் கேட்டு அவனுடைய மனைவி வலிப்பு வந்தவள் போலக் கண்ணீர் மல்கக் கெக்கலி கொட்டினுள். ஆனுல் அவன் அவள் மேல் கோபப்படவில்லை, அதற்கு அவனுக்கு நேரம் இல்லை, ஏனென்ருல் விரைவில் தூங்கி விட்டான். சிறுமி அவனுடைய பட்டுத் தாடியுடன் விளையாடிக் கொண்டிருந்து விட்டு, பந்தாய்ச் சுருண்டு உறங்கிப் போனுள். இந்தக் குழந்தையோடு நான் நெருங்கிய நட்பு கொண்டேன். ஆட்சியை வஞ்சகமாகக் கைப்பற்றிய இரத்த வெறியனையும் அவன் மேல் ஜோசபீன் பொகார்னே கொண்டிருந்த, துயரில் முடிந்த காதலையும் பற்றி பலெஸ்லாவ் ஆற்றிய விரிவுரைகளைக் காட்டிலும் நான் சொன்ன கதைகளை அவள் அதிக ஆர்வத்துடன் கேட்டாள். இது வேடிக்கையான பொருமையை பலெஸ்லாவுக்கு ஏற்படுத்தியது.

''பெஷ்கோவ்! நான் எதிர்ப்பு தெரிவிக்கிறேன்! எதார்த்தத்தை அணுகும் போக்கின் அடிப்படைக் கோட்பாடுகளைக் குழந்தைக்கு முதலில் புகட்டுவது இன்றியமையாதது. அப்புறந்தான் எதார்த்தத்தை அறிமுகப்படுத்த வேண்டும். உங்களுக்கு ஆங்கிலம் தெரிந்திருந்து **குழந்தை உள்ளத்தின் நல இயல்** என்ற நூலைப் படிக்க முடிந்திருந்தால்...''

ஆங்கிலத்தில் அவன் அறிந்திருந்தவை இரண்டே சொற்கள்தாம் போலும்: குட் பை.*

---

* போய் வாருங்கள் என்ற பொருள் தொனிக்கும் பிரிவுரை.—ப-ர்.

அவன் எனக்கு இரு மடங்கு மூத்தவன், ஆனாலும் எல்லா வற்றிலும் சடைநாய்க் குட்டி போல ஆவல் காட்டினான். ஊர் வம்பு பேசுவதையும் ருஷ்யப் புரட்சிக் குழுக்களுக்கு மட்டும் இன்றி அயல்நாட்டுப் புரட்சிக் குழுக்களுக்கும் இருக் கும் எல்லா இரகசியங்களும் தனக்கு நன்றாகத் தெரியும் என்று காட்டிக் கொள்வதையும் அவன் விரும்பினான். ஆனால் ஒன்று. அவன் உண்மையாகவே தகவல்களைத் தெரிந்து வைத் திருப்பது சாத்தியமே. மர்மமான ஆட்கள் அவனிடம் அடிக் கடி வந்தார்கள். தற்செயலாகக் கோமாளி வேஷம் போட நேர்ந்த துன்பியல் நடிகர்கள் போன்று அவர்கள் எல்லோரும் நடந்து கொண்டார்கள். சட்டப் புறம்பாக மறைமுக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சபுனுயெவ் என்பவனை அவ னுடைய வீட்டில் நான் ஒரு நாள் கண்டேன். இந்த ஆள் செம்பழுப்புப் பொய்த் தலைமுடியும் பல நிற உடையுமாக இலங்கினான். தலைமுடியைத் திறமை இன்றி மாட்டி இருந் தான் உடை சிரிப்பூட்டும் வகையில் அவனுக்குக் குறுகலாக வும் குட்டையாகவும் இருந்தது.

ஒரு நாள் பலெஸ்லாவின் வீட்டுக்குப் போனவன், துடி யான ஒரு மனிதனைக் கண்டேன். அவன் தலை சிறியதாக இருந் தது. பார்வைக்கு மயிர்வினைஞனை மிகவும் ஒத்திருந்தான். கட்டம் போட்ட காற்சட்டையும் சாம்பல் நிறக் கோட்டும் கறுமுறுக்கும் சோடுகளும் அணிந்திருந்தான். பலெஸ்லாவ் என்னைச் சமையலறைக்குள் தள்ளி நெருக்கியவாறு இரகசிய மாகக் கூறினான்:

''இவர் முக்கியமான வேலைக்காகப் பாரிசிலிருந்து வந்திருக்கிறார். கரலேன்கோவைப் பார்ப்பது இவருக்கு இன்றியமையாதது. ஆகவே நீங்கள் போய் இதற்கு—ஏற் பாடு செய்யுங்கள்...''

நான் போனேன். ஆனால் வந்த ஆள் வீதியில் கரலேன்கோ வுக்குக் காட்டப்பட்ட போது அவர் கூர்ந்த நோக்குடன் சொன்னாராம்:

''தயை செய்து வேண்டாம். இந்தப் பகட்டனுக்கு என்னை அறிமுகப்படுத்தாதீர்கள்!''

பாரிஸ்காரனுக்காகவும் ''புரட்சிக் குறிக்கோளுக்காக வும்'' பலெஸ்லாவ் மனத்தாங்கல் கொண்டான். கரலேன் கோவுக்குக் கடிதம் எழுத இரண்டு நாட்கள் முயன்றான்.

சீற்றமும் கடுமையும் நிறைந்தவை முதல் அன்பாகக் கடிந்து கொள்பவை வரை எல்லா வித நடைகளையும் கையாண்டு பார்த்தான். பிறகு தன் கடித வரைவு இலக்கிய மாதிரிகள் அனைத்தையும் கணப்பறையில் போட்டு எரித்து விட்டான். மாஸ்கோ, நீழ்னி நோவ்கரத், விளாதீமிர் முதலிய நகரங்களில் கைதுகள் விரைவில் தொடங்கின. கட்டம் போட்ட காற்சட்டைக்காரன் பிற்காலத்தில் பிரபலமடைந்த லந்தே ஸென் கார்ட்டிங் என்ற உளவாளி என்பது அப்புறம் தெரிய வந்தது. நான் பார்த்த முதல்—வரிசைக் கிரமப்படி—உளவாளி அவனே.

இவ்வளவு எல்லாம் இருந்தாலும் என் காதலியின் கணவன் நல்ல பிள்ளை, ஓரளவு மெல்லுணர்ச்சிகளுக்கு வசப்படுபவன், ''விஞ்ஞான மூட்டை முடிச்சுக்களை'' நகைக்கத் தக்க விதத்தில் சுமப்பவன். அவன் அப்படித்தான் சொன்னான்:

''அறிவுஜீவியின் வாழ்க்கைப் பயன் வெகுஜனத் திரளில் தன்னலமின்றி வினியோகிக்கும் நோக்கத்துடன் விஞ்ஞான மூட்டை முடிச்சுக்களை இடையறாமல் திரட்டிக் குவிப்பது ஆகும்...''

என்னுடைய காதல் ஆழமாகிக் கொண்டு போய்த் துன்பமாக மாறியது. நிலவறையில் உட்கார்ந்து என் இதயராணி மேசை மீது குனிந்தவாறு வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவளை அணைத்துத் தூக்கி, இந்தப் பாழும் நிலவறையிலிருந்து எங்காவது கொண்டுபோய் விட வேண்டும் என்ற ஆசையால் ஏக்கம் நிறைந்த வெறி கொண்டேன். அதுவோ, அகன்ற இரட்டைக் கட்டில், சிறுமி உறங்கிய கனத்த பழங்கால நீள் சோபா, புழுதி படிந்த புத்தகங்களும் காகிதங்களும் குவியல்களாகக் கிடந்த மேசைகள் ஆகியவற்றால் அடைசலாய் இருந்தது. யாருடையவோ கால்கள் சன்னலின் அருகாகத் தோன்றித் தோன்றி மறைந்தன. தெரு நாயின் மூஞ்சி சில வேளைகளில் சன்னல் வழியே உள்ளே பார்த்தது. அறைக்குள் ஒரே புழுக்கம். வெயிலில் சூடேறிய சேற்றின் நாற்றம் வீதியிலிருந்து குப்பென்று அடித்தது. இந்தச் சூழ்நிலையில் சிறிய மங்கை உருவம் மெல்லெனப் பாடியவாறு பென்சிலாலோ பேனாவாலோ வரைந்தது,

இனிய கருநீல விழிகள் என்னை நோக்கி அன்பு ததும்ப முறு வலித்தன. மதி மருளும், பைத்தியமாகும் அளவுக்கு நான் இந்த நங்கையைக் காதலித்தேன், வன்மமும் ஏக்கமும் பொங்க அவளுக்காக வருந்தினேன்.

''உங்களைப் பற்றி இன்னும் ஏதாவது சொல்லுங்கள்'' என்றாள் அவள்.

நான் சொன்னேன். ஆனால் சில நிமிடங்களுக்குப் பின் அவள் கூறினாள்:

''இப்போது நீங்கள் சொல்வது உங்களைப் பற்றி. அல்ல!''

எனக்கே இது புரிந்தது, எதைப் பற்றி நான் சொல்லு கிறேனோ அதெல்லாம் நான் அல்ல, நான் கண்மூடித்தன மாகக் குழப்பி விட்ட வேறு எதுவோ என்று. எனக்கு நேர்ந்த அனுபவங்களும் நிகழ்ச்சிகளும் சேர்ந்த கலந்த இந்தப் பல நிறச் சிடுக்கில் நான் என்னைத் தேடிக் காண வேண்டும். ஆனால் என்னால் தேடிக் காண முடியவில்லை, காண நான் அஞ்சவும் செய்தேன். நான் என்பது யார், எது? இந்தக் கேள்வி என்னைப் பெரிதும் நாணச் செய்தது. வாழ்க்கை மீது நான் ஆத்திரம் கொண்டிருந்தேன். தற்கொலை முயற்சி என்னும் இழிவுபடுத்தும் முட்டாள்தனம் செய்யும்படி அது என்னைக் கட்டாயப்படுத்தியது.நான் மனிதர்களைப் புரிந்து கொள்ள வில்லை. அவர்களது வாழ்க்கை சரி என்று நிரூபிக்கப்படாத தாகவும் முட்டாள்தனம் உள்ளதாகவும் அழுக்கானதாகவும் எனக்குத் தோன்றியது. அன்றாட வாழ்வின் எல்லா இருண்ட மூலைகளிலும், வாழ்க்கையின் எல்லா மர்மங்களதும் ஆழத் தில், பார்வை செலுத்துவது எதனாலோ அவசியமாகி விட்ட மனிதனுக்குரிய பண்பட்ட ஆவல் எனக்குள் நொதித்துப் பொங்கியது. ஆவல் காரணமாகக் குற்றம் செய்ய நான் வல்லவன் என்று சில வேளைகளில் உணர்ந்தேன். அப்புறம் எனக்கு என்ன நேரும் என்று தெரிந்து கொள்ளும் ஒரே நோக்கத்திற்காகக் கொலை செய்யவும் நான் தயாராய் இருந்தேன்.

நான் என்னைத் தேடிக் கண்டு கொண்டால், அருவருப் பான மனிதன், எவையோ விந்தையான உணர்ச்சிகளாலும் எண்ணங்களாலும் இயன்ற அடர்ந்த, உறுதியான வலையில் சிக்கித் தடுமாறுபவன் என் இதய நங்கை முன் நிற்பான், அறிவிழந்த அந்த பயங்கர மனிதன் அவளுக்கு அச்சம் உண்

டாக்கி விரட்டி விடுவான் என்று எனக்குத் தோன்றியது; என்னை ஏதாவது செய்வது எனக்கு அவசியமாய் இருந்தது. உண்மையான என்னை நான் உணர்வதற்கு உதவ வல்லவள் இந்த நங்கையே என்றும் அதோடு அவள் ஏதோ மாயம் செய்யத் திறனுள்ளவள் என்றும் அதற்குப் பின் நான் வாழ்க்கையின் இருண்ட உளப்பதிவுகளிலிருந்து விடுபட்டு விடுவேன், உள்ளத்திலிருந்து எதையோ என்றென்றைக்கும் வெளியே எறிந்து விடுவேன், அப்போது என் உள்ளம் மாபெரும் வலிமையும் மாபெரும் உவகையும் வாய்ந்த நெருப்பினுல் சுடர் வீசும் என்றும் நான் நம்பினேன்.

அவள் தன்னைப் பற்றிப் பேசிய அசட்டையான தொனியும் மற்றவர்கள் விஷயத்தில் அவள் கடைப்பிடித்த பெரிய மனிதப் பாங்கும் இந்த நபர் அசாதாரணமானதை அறிந்திருக்கிருள் என்ற நம்பிக்கையை எனக்குள் புகுத்தின. வாழ்க்கையின் எல்லாப் புதிர்களுக்கும் விடை இவளிடம் இருக்கிறது, அதனுல்தான் இவள் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்கிருள், எப்போதும் தன்னம்பிக்கை கொண்டிருக்கிருள் என்று எண்ணினேன். அவளிடம் எது எனக்குப் புரியவில்லையோ அதற்காக ஒருவேளை நான் அவளை அதிகமாகக் காதலித்தேன் போலும், ஆனுல் இளமைக்குரிய முழு வலிமையுடனும் காமப்பற்றுடனும் நான் அவளைக் காதலித்தேன். இந்தக் காமப்பற்றை அடக்கிக் கொள்வது எனக்கு வேதனை தரும் வகையில் கடினமாக இருந்தது—அது என் புலன்களில் கனல் மூட்டி என்னை வலிமை குன்றச் செய்தது. நான் அதிக எளிமையும் பண்பின்மையும் கொண்டிருந்தால் எனக்கு அதிக நலமாய் இருந்திருக்கும். ஆனுல், பெண்ணோடு உறவு உடல்கள் கூடும் செயலுக்குள் அடங்கி விடுவதில்லை என்று நான் நம்பினேன். இந்தச் செயலை அதன் கீழ்த்தரமான பண்பின்மையும் விலங்கு எளிமையும் கொண்ட வடிவத்தில் நான் அறிந்திருந்தேன். நான் வலிமையும் போதிய சிற்றின்ப விருப்பமும் உள்ள இளைஞுக இருந்தேன், எளிதில் உணர்ச்சி வசப்படும் கற்பனை கொண்டிருந்தேன், ஆயினும் இந்தச் செயல் எனக்கு அனேகமாக அருவருப்பு ஊட்டியது.

எனக்குள் இந்த இன்பக் கற்பனைக் கனவு எவ்வாறு உருவாகி நிலைபெற முடிந்ததோ அறியேன், ஆனுல் எனக்குத் தெரிந்ததற்கு அப்பால் தெரியாத ஒன்று உள்ளது, பெண்

ணுடன் உறவு குறித்த உயர்ந்த, மர்ம உட்பொருள் அதில் பொதிந்திருக்கிறது, முதல் அணைப்பிற்குப் பின்னே மாண்பும் மகிழ்ச்சியும் பயங்கரமும் கூட உள்ள ஒன்று மறைந்திருக்கிறது, இந்த மகிழ்ச்சியை அனுபவித்த பின் மனிதன் முற்றிலும் மறு பிறப்பு எய்தி விடுகிருன் என்று நான் அசையாத உறுதி கொண்டிருந்தேன்.

இந்தக் கற்பனைகளை நான் படித்த நவீனங்களிலிருந்து நான் எடுத்துக் கொள்ளவில்லை, எதார்த்தத்திற்கு முரண்படும் உணர்விலிருந்து இவற்றைப் பயிற்றி வளர்த்துக் கொண்டேன் என்று எனக்குத் தோன்றுகிறது, ஏனெனில்:

''நான் உலகிற்கு வந்தது இசையாதிருக்கவே.''

தவிரவும், என் உள்ளத்தில் விந்தையான, தெளிவற்ற ஒரு நினைவு பதிந்திருந்தது: எதார்த்தத்தின் எல்லைகளுக்கு வெளியே எங்கோ, தொடக்கக் குழந்தைப் பருவத்தில் எப்போதோ, ஒரு வகையான பலத்த உள அதிர்ச்சியை, புலன் உணர்ச்சியின் இனிய நடுக்கத்தை, இன்னும் சரியாகச் சொன்ஞல், உயிர்-உடல் ஒருங்கிசைவின் முன்னுணர்வை நான் அனுபவித்தேன். காலைக் கதிரவனின், உதய சூரியனின் ஒளி மிக்க உவகையை நான் துய்த்தேன். ஒருகால் இது நிகழ்ந்தது, நான் இன்னும் தாயின் கருப்பையில் இருந்த நாட்களில் போலும். அவளுடைய நரம்பு ஆற்றலின் இந்த இன்ப அதிர்ச்சி வெப்பத் தாக்கின் மூலம் எனக்கு வழங்கப்பட்டது போலும். இந்தத் தாக்கு என் உள்ளத்தை உருவாக்கி உயிர் நெருப்பை அதில் முதன்முதலில் மூட்டியது போலும். ஒருவேளை, என் தாயின் இந்த வியப்பூட்டும் இன்பக் கணம், மாதினிடம் அசாதாரணமானதைத் துடிப்புடன் எதிர்பார்க்கும் இயல்பாக என் ஆயுள் முழுவதற்கும் என்னில் பிரதிபலித்திருக்கலாம்.

தெரியாத போது நாம் கற்பனை செய்து கொள்கிறோம். மனிதன் ஆற்றிய யாவற்றிலும் அறிவு மிக்க சாதனை நங்கையைக் காதலிக்கவும் அவளுடைய அழகை வழிபடவும் உள்ள திறமைதான். மாதின் மீது உண்டாகும் காதலிலிருந்தே உலகில் அழகியவை யாவும் தோன்றி உள்ளன.

ஒரு நாள் நீந்திக் குளிக்கையில் சரக்குக் கப்பலின் பின் பகுதியிலிருந்து நீரில் குதித்த போது என் மார்பு நங்கூர

மூலேயில் இடித்துக் கொண்டது.ஒரு கால் கயிற்றில் மாட்டிக் கொள்ளவே நான் நீரில் தலேகீழாகத் தொங்கினேன். எனக்குத் தண்ணீர் புரையேறி விட்டது. பார வண்டிக்காரன் என்னே நீரிலிருந்து எடுத்தான். முதலுதவி அளித்து என் வயிற்றிலிருந்து நீர் வெளியேற்றப்பட்ட போது என் தோல் முழுதும் தார் தாராகப் பிய்ந்து போயிற்று. தொண்டையிலிருந்து இரத்தம் வந்தது. பனிக் கட்டியை விழுங்கிய வாறு நான் படுக்கையில் கிடக்க வேண்டியதாயிற்று.

என் காதலி என்னிடம் வந்து, கட்டிலில் அமர்ந்து, எனக்கு இப்படி நேர்ந்தது எவ்வாறு என்று விவரமாக விசாரித்து, இலேசான இனிய கரத்தால் என் தலேயை வருடத் தொடங்கினுள். அவளுடைய விழிகள் ஆழ் நிறம் கொண்டு கலவரத்துடன் நோக்கின.

நான் கேட்டேன், நான் அவளேக் காதலிப்பதை அவள் காண்கிருளா என்று.

''ஆமாம்'' என்று எச்சரிக்கையுடன் புன்னகை செய்த வாறு அவள் விடை இறுத்தாள். ''காண்கிறேன். நானும் உங்களேக் காதலிக்கத் தொடங்கினேன், என்ருலும் இது மிகவும் மோசம்.''

அவளுடைய சொற்களுக்குப் பின் நிலம் அனேத்தும் அதிர்ந்து நடுங்கியது, தோட்டத்தில் மரங்கள் களி பொங்கத் தட்டாமாலே சுற்றின. எதிர்பாராமையாலும் வியப்பினுலும் உவகையாலும் நான் பேச்சிழந்து அவளது மடியில் தலேயைப் புதைத்துக் கொண்டேன். அவளே இறுகத் தழுவிக் கொண்டிராவிட்டால் சோப்புக் குமிழி போலப் பறந்து வெளியே போயிருப்பேன்.

''அசையாதீர்கள், அது உங்களுக்குக் கெடுதல்!'' என்று கண்டிப்பாகக் கூறி என் தலேயைத் தலேயணே மேல் மீண்டும் கிடத்த முயன்ருள். ''அப்புறம், கிளர்ச்சி அடையாதீர்கள், இல்லாவிட்டால் நான் போய் விடுவேன்! நீங்கள் பொதுவாகவே மிகவும் முரட்டுத் துணிச்சல் உள்ள கனவான். இந்த மாதிரி மனிதர்கள் உண்டு என்று நான் நினேக்கவில்லே. நம் உணர்ச்சிகளேயும் உறவுகளேயும் பற்றி உங்களுக்கு உடம்பு சரியானதும் பேசுவோம்.''

இதை எல்லாம் அவள் மிகவும் அமைதியாகக் கூறினுள், ஆழ் நிறம் அடைந்த விழிகளால் சொல்லுக்கடங்காத பரி

வுடன் இளநகை செய்தாள். விரைவில் அவள் போய் விட்டாள். என் உள்ளத்திலோ, வருங்கால நம்பிக்கை வான வில் நிற விளக்காக ஒளி பரப்பலுற்றது. இப்போது, அவளுடைய நல் உதவியுடன் வேறு உணர்ச்சிகள், எண்ணங்களின் மண்டலத்துக்குப் பறந்து சென்று விடுவேன் என்ற இன்ப உறுதி எனக்கு ஏற்பட்டது.

சில நாட்கள் சென்ற பின் நான் பள்ளத்தாக்கின் விளிம் போரமாகத் திடலில் உட்கார்த்திருந்தேன். கீழே புதர் காற்றில் சலசலத்தது. சாம்பல் நிற வானம் மழைக் குறி காட்டி அச்சுறுத்தியது. அவள் காரியப் பாங்கில், வறண்ட சொற்களில் பேசிக் கொண்டிருந்தாள். எங்களுடைய வயது வித்தியாசத்தையும் நான் கல்வி பெற வேண்டும் என்பதையும் ஒரு மாதையும் அவள் மகளையும் நான் கழுத்தில் கட்டிக் கொள்வது தருணத்துக்கு முந்திய செயல் என்பதையும் அவள் எடுத்து உரைத்தாள். இவை யாவும் கொடியவை என்ருலும் உண்மையான விவரங்கள். தாய்மைப் பாங்குடன் இவை கூறப்பட்டன, இனிய நங்கை மீது காதலையும் மரியாதையையும் இன்னும் அதிகமாகத் தூண்டின. அவளுடைய குரலையும் கனிவுள்ள சொற்களையும் கேட்க எனக்கு ஏக்கமாகவும் இனிமையாகவும் இருந்தது. என்னுடன் ஒருவர் இந்த மாதிரிப் பேசியது இதுவே முதல் தடவை.

நான் பள்ளத்தாக்கின் திறப்பில் பார்வை செலுத்தினேன். காற்ருல் அசைத்து ஆட்டப்பட்ட செடிகள் அங்கே பச்சை ஆறு பெருகுவது போலக் காட்சி தந்தன. இந்த நபரின் அன்புக்கு என் உள ஆற்றல்கள் அனைத்தாலும் கைம்மாறு செய்வேன் என்று நான் ஆணையிட்டு உறுதி பூண்டேன்.

''ஏதேனும் முடிவு செய்வதற்கு முன் நாம் நன்ருக ஆலோசிக்க வேண்டும் என்ற மெல்லிய குரலைக் கேட்டேன். அவள் கொட்டை மரத்தின் ஒடிந்த கொம்பினுல் முழங்கால் மேல் அடித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய பார்வை பச்சைக் குன்றுகள் போன்ற தோட்டங்களில் மறைந்திருந்த நகரத்தின் திசையில் திரும்பி இருந்தது.

''தவிரவும், நான் பலெஸ்லாவோடு பேசியாக வேண்டும். அவன் ஏற்கெனவே ஓரளவு உணர்கிருன், நிரம்பச் சிடுசிடுக்கிருன். எனக்கோ குடும்பச் சச்சரவுகள் பிடிக்கா.''

எல்லாவற்றிலும் துயரம் ததும்பியது, எல்லாம் மிக

நன்ருய் இருந்தன. ஆனுல், நகைப்புக்கிடமான அற்ப விஷயம் ஒன்று அவசியம் ஆகி விட்டது.

என் காற்சட்டை இடுப்பில் அகலமாய் இருந்தது. நான் இடுப்புப் பகுதியை மடித்து ஒரு மூன்று அங்குல நீளம் உள்ள பெரிய பித்தளேக் குண்டூசியால் குத்தி இருந்தேன்—ஏழைக் காதலர்களின் நற்காலம், இப்போது அந்த மாதிரிக் குண்டூசி கள் இல்லே. பாழும் குண்டூசியின் கூரிய முனே என் தோலே ஓயாமல் மெள்ள மெள்ளப் பறண்டிய வண்ணமாக இருந்தது. சற்று அசாக்கிரதையாக அசைய வேண்டியது தான், குண்டூசி முழுவதும் என் விலாவில் பாய்ந்து விடும். நான் வெளியே தெரியாதபடி அதை எடுத்து விட்டேன். உடனே கலவரத்துடன் உணர்ந்தேன், ஆழ்ந்த சிருய்ப்புக் களிலிருந்து இரத்தம் மளமளவென்று பெருகிக் காற்சட்டை யை நனேத்திருந்ததை. நான் உள்ளாடை அணியவில்லே. குசினிக்காரன் உடுப்பு குட்டையானது, இடுப்பு வரை தான் வந்தது. உடம்போடு ஒட்டிக் கொண்டிருந்த ஈரக் காற் சட்டையுடன் நான் எப்படி எழுந்து நடப்பேன்?

நிகழ்ச்சியின் நகைப்புக்குரிய தன்மையைப் புரிந்து கொண்டு அதன் வருத்தம் தரும் வடிவத்தால் ஆழ்ந்த கோபம் அடைந்த நான் மட்டு மீறிக் கிளர்ச்சி பொங்க, தன் பாத்திரத்தை மறந்து விட்ட நடிகனது போன்ற செயற்கைக் குரலில் ஏதோ பேசத் தலேப்பட்டேன்.

என் பேச்சை முதலில் கவனமாகவும் பின்பு வெளிப் படையான விளங்காமையுடனும் சில நிமிடங்கள் கேட்டு விட்டு அவள் சொன்னுள்:

''எத்தகைய ஆடம்பரச் சொற்கள்! நீங்கள் திடீரென்று வேறு ஆளாக மாறி விட்டீர்கள்.''

இந்த வார்த்தைகள் என்னே முடிவாக வீழ்த்தி விட்டன. கழுத்து நெரிபட்டவன் போல நான் பேசாதிருந்தேன்.

''போக நேரம் வந்து விட்டது. மழை பெய்யப் போ கிறது!''

''நான் இங்கே இருக்கிறேன்.''

''எதற்காக?''

நான் அவளுக்கு என்ன பதில் சொல்லியிருக்க முடியும்?

''நீங்கள் என் மேல் கோபம் கொண்டு விட்டீர்களோ?'' என் முகத்தை அன்புடன் நோக்கியவாறு கேட்டாள் அவள்.

''இல்லவே இல்லை! என் மேல்.''

''உங்கள் மேலும் கோபம் கொள்ள வேண்டாம்'' என்று கூறி எழுந்து நின்றாள்.

என்னாலோ, எழுந்திருக்க முடியவில்லை. வெதுவெதுப்பான குட்டத்தில் உட்கார்ந்திருந்த எனக்கு விலாவிலிருந்து பெருகும் என் இரத்தம் ஓடை போன்று களகளப்பது போலவும் மறு கணமே நங்கை இந்த ஒலியைக் கேட்டு, ''என்ன இது?'' என்று வினவுவாள் என்றும் பிரமை உண்டாயிற்று.

''போய் விடு!'' என்று அவளை மனதுக்குள் வேண்டினேன்.

அவள் இன்னும் சில அன்பு கனிந்த சொற்களைக் கருணை கூர்ந்து எனக்குப் பரிசளித்து விட்டு, வடிவமைந்த கால்கள் மேல் இனிமையாக அசைந்தவாறு பள்ளத்தாக்கின் விளிம்பு ஓரமாக நடந்தாள். அவளுடைய ஒசியும் சிறு உருவம் தொலைவில் செல்லச் செல்ல அளவில் குறைவதை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். எனது முதல் காதல் இன்பம் அற்றதாக இருக்கும் என்ற உணர்வின் தாக்குதலால் குப்புற வீழ்த்தப் பட்டு, தரையில் படுத்தேன்.

சந்தேகமின்றி அவ்வாறே நிகழ்ந்தது: அவளுடைய கணவன் கண்ணீரையும் மெல்லுணர்ச்சி உமிழ்நீரையும் இரக்க மூட்டும் சொற்களையும் அகன்ற பெருக்காகக் கொட்டினனும். இந்தப் பிசுபிசுத்த பெருக்கில் நீந்தி என் பக்கம் வர அவள் துணியவில்லையாம்.

''அவன் ஒன்றுக்கும் ஏலாதவன், நீங்களோ, வலியவர்!'' என்று விழிகளில் நீர் மல்கக் கூறினாள் அவள். ''அவன் சொல்லுகிறான், 'நீ என்னை விட்டுப் போனால் வெயில் இல்லாத பூச்செடி போல நான் வாடி மடிந்து போவேன்'... என்று.''

அந்தப் பூச்செடியின் குட்டைக் கால்களையும் பெண்களுடையவை போன்ற தொடைகளையும் தர்பூசனி போல உருண்டையான வயிற்றையும் நினைவு கூர்ந்து நான் கெக்கலி கொட்டினேன். அவனுடைய தாடியில் ஈக்கள் வாசம் செய்தன. அதில் அவற்றுக்குத் தீனி எப்போதும் இருந்தது.

அவள் புன்னகைத்து, மொழிந்தாள்:

''ஆமாம், அவன் சொன்னது வேடிக்கையாக ஒலிக்கிறது, ஆனாலும் அவன் மிகவும் வேதனைப்படுகிறான்!''

''நானும் தான்.''

''ஓ, நீங்கள் இளைஞர், நீங்கள் வலியவர்...''

இந்த சந்தர்ப்பத்தில்தான் வலு இல்லாதவர்களின் பகைவனுக என்னை நான் முதன் முறையாக உணர்ந்தேன். வலுவற்றவர்களின் சூழலில் வலியவர்கள் எவ்வளவு வருந்தத் தக்க முறையில் நிர்க்கதியானவர்கள் என்பதையும் அழிவு விதிக்கப்பட்டவர்களின் பயனற்ற உயிர் வாழ்தலைக் காக்கும் பொருட்டு இதயத்தினுடையவும் அறிவினுடையவும் விலை மிக்க ஆற்றல் எவ்வளவு நிறையச் செலவிடப்படுகிறது என்பதையும் பிற்காலத்தில் அதிக முக்கியமான சந்தர்ப்பங்களில் நான் மிக அடிக்கடி காண நேர்ந்தது.

விரைவில் அரை நோயாளியாக, மூளைக் கோளாறுக்கு நெருங்கிய நிலையில், நான் நகரத்திலிருந்து வெளியேறி, ஓர் இடத்தில் தரிக்காமல் ருஷ்யாவின் சாலைகளில் இரண்டு ஆண்டுகள் சுற்றித் திரிந்தேன். வோல்காப் பிரதேசம், தோன், உக்ரைன், கிரிமியா, காக்கேஷியா ஆகியவற்றைப் பார்வையிட்டேன். எண்ணற்ற அனுபவங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் உள்ளானேன், அதிக முரடாகி, முன்னிலும் அதிக வன்மம் பாராட்டினேன். ஆயினும் இந்த நங்கையின் இன்னுருவை (அவளை விட மேலானவர்களும் அதிக அறிவுள்ளவர்களுமான பெண்களைப் பார்த்தேன் என்றாலும்) அழியாமல் உள்ளத்தில் காப்பாற்றி வைத்திருந்தேன்.

இரண்டு ஆண்டுகளுக்குச் சற்று கூடுதலான காலத்துக்குப் பின், இலையுதிர் பருவத்தில் நான் திப்ளிசில் இருந்த போது அவள் பாரிசிலிருந்து திரும்பி விட்டதாகவும் தான் இருந்த நகரிலேயே நான் இருப்பதை அறிந்து மகிழ்ந்ததாகவும் கேள்விப்பட்டு, இருபத்து மூன்று வயது வலிய இளைஞனை நான், வாழ்க்கையில் முதன் முதலாக உணர்விழந்தேன்.

நான் அவளிடம் போகத் தயங்கிக் கொண்டிருந்தேன், ஆனால் விரைவில் அவளே நண்பர்கள் மூலம் என்னை அழைத்தாள்.

அவள் முன்னிலும் அழகாகவும் இனிமையாகவும் இருப்பதாக எனக்குத் தோன்றியது. முன் இருந்த அதே மங்கை உருவம், கன்னங்களில் அதே மெல்லிய செம்மை, கரு நீல விழிகளில் அதே அன்பு கனிந்த ஒளிர்வு. அவளுடைய கணவன் பாரிசில் தங்கி விட்டானும். அவளுடன் மகள் மட்டுந்தான் இருந்தாள், சுறுசுறுப்பும் ஒயிலும் வாய்ந்தவள், ஆட்டுக் குட்டி போல.

நான் அவளுடைய வீட்டை அடைந்த போது நகர் மீது

இடியும் மின்னலுமாகப் புயல் வீசியது, பெருமழை சோவென்று கொட்டத் தொடங்கிற்று, செயின்டு டேவிட் மலையிலிருந்து பிரசண்டமான ஆறு வீதிக் கற்களைப் பெயர்த்து உருட்டிக் கொண்டு பெருக்கெடுத்து ஓடியது. காற்றின் ஊளையும் நீரின் சீற்றம் மிக்க சளப்பொலியும் எவையோ இடிபாடுகளின் தடதடப்பும் வீட்டை அதிர வைத்தன. சன்னல் கண்ணுடிகள் கணகணத்தன, நீல ஒளி அறையில் பாய்ந்தது, சுற்றிலும் இருந்தவை எல்லாம் அடியற்ற ஈர அகாதத்தில் விழுந்து விட்டன போலப் பிரமை உண்டாயிற்று.

பயந்து போன சிறுமி படுக்கையில் புதைந்து கொண்டாள். நாங்கள் வானின் மின்னல், இடியதிர்ச்சிகளால் கண்கள் கூச, சன்னல் அருகே நின்று எதனுலோ இரகசியமாகப் பேசிக் கொண்டோம்.

''இந்த மாதிரி இடிப் புயலை முதல் தடவையாகப் பார்க்கிறேன்'' என்று காதல் நங்கையின் சொற்கள் அருகே ஒலித்தன.

திடீரென்று அவள் கேட்டாள்:

''என்ன, என் மேல் உங்களுக்கு இருந்த காதல் நோய் தீர்ந்ததா?''

''இல்லை.''

அவள் வியப்படைந்தாள் போலும். முன் போன்றே இரகசியமாகச் சொன்னுள்:

''அட கடவுளே, நீங்கள் தாம் எப்படி மாறி விட்டீர்கள்! முற்றிலும் வேறு மனிதர் ஆகி விட்டீர்கள்.''

சன்னலோரமாக இருந்த நாற்காலியில் மெதுவாக அமர்ந்து, மின்னலின் பயங்கர ஒளியால் கண்கள் கூச, திடுக்கிட்டு விழிகளைச் சுருக்கிக் கொண்டு, கிசுகிசுத்தாள்:

''உங்களைப் பற்றி இங்கே நிறையப் பேசுகிருர்கள். எதற்காக இங்கே வந்தீர்கள்? உங்கள் வாழ்க்கை எப்படி நடந்தது என்று எனக்கு விவரமாகச் சொல்லுங்கள்.''

ஆண்டவனே, இவள்தான் எவ்வளவு சின்னவள், அழகானவள்!

நான் பாவ மன்னிப்பு கேட்பவன் போல என் அனுபவங்களை நள்ளிரவு வரை அவளுக்கு விவரித்துக் கொண்டிருந்தேன். இயற்கையின் பயங்கர நிகழ்ச்சிகள் எனக்கு எப்போதும் கிளர்ச்சி ஊட்டின, உவகைப் பெருக்கால் என் உள்ளத்தை நிறைத்தன. நான் நன்ருகக் கதை சொன்னேன்

போலும். அவளுடைய கவனமும் அகலத் திறந்த விழிகளின் இறுக்கமுள்ள பார்வையும் இதை எனக்கு உறுதிப்படுத்தின. எப்போதாவது மட்டுமே அவள் கிசுகிசுத்தாள்:

''இது பயங்கரம்.''

எனக்கு—கடந்த காலத்தில்—எப்போதும் ஓரளவு மனத் தாங்கல் விளைத்தது, மூத்தவளுக்கு இயல்பான ஆதரவு காட்டும் பாவனையில் அவள் புன்னகை செய்தது ஆகும். ஆனால் இப்போது எனக்கு விடை கொடுக்கையில் அவள் அவ்வாறு புன்னகைக்கவில்லை என்பதைப் போகும் பொழுது கவனித்தேன். கூர்மையான நிலா அரிவாள் தார் தாராகக் கிழிந்த மேகங்களை அறுக்கும் காட்சியை நோக்கியவாறு ஈர வீதிகளில் நடக்குங்கால் எனக்குக் களிப்பினால் தலை கிறுகிறுத்தது. மறு நாள் ஒரு செய்யுள் எழுதித் தபால் மூலம் அவளுக்கு அனுப்பினேன். பிற்காலத்தில் அவள் அதை அடிக்கடி ஒப்பித்ததால் செய்யுள் என் நினைவில் பதிந்து விட்டது:

''அம்மணி!
தங்கள் அன்புக்கும் கனிந்த பார்வைக்கும்
அடிமை ஆனான் தேர்ந்த மாயக்காரன்,
அற்பப் பொருள்கள், ஒன்றும் அற்றவை,
அவற்றைக் கொண்டு சிறு மகிழ்ச்சிகள்
அமைக்கும் இன் கலை
கைவரப் பெற்றவன்!
ஏற்பீர் மகிழ் தரும் அடிமையை!
ஒரு கால், சிறு மகிழ்ச்சிகளைக் கொண்டு
பேரின்பத்தை அவன் படைத்திடலாம்—
ஆக்கவில்லையா ஒருவன் அண்டத்தை
அற்பச் சடப்பொருள் துகள்களைக் கொண்டு?

மெய்தான்! மகிழ்வின்றி அமைந்துளது அண்டம்!
அற்பப் பொருக்குகள் இதன் இன்பங்கள்!
எனினும் இதில் குறைவல்ல வினோதங்கள்,
காட்டாக, தங்கள் பணிவுள்ள அடியான்.
இனும் இதில் உண்டு எழிலார்ந்த ஒன்று,
இங்கு நான் குறிப்பது தங்களையேதான்!
தாங்கள்!
ஆனால்—பேச்சிலேன்!
மலர்களில் வறிய உலகின்
அளைத்திலும் சிறந்த நன் மலராம்
தங்கள் இதயத்தின் முன்
சொற்களாம் கூரற்ற ஆணிகள் பொருள் தருமோ?

இதைச் செய்யுள் என்று சொல்ல முடியாது தான், ஆனால் மகிழ்ச்சியுடனும் உளமாரவும் இயற்றப் பெற்றது இது.

உலகில் எல்லோரிலும் சிறந்தவள், ஆகையால் எனக்கு இன்றியமையாதவள் என்று யார் எனக்குத் தோன்றினாளோ அவளுக்கு எதிரே இப்போது நான் மீண்டும் உட்கார்ந்திருந்தேன். அவள் இள நீல உடை அணிந்திருந்தாள். அவளுடைய உருவத்தின் வனப்பு வரைகளை மறைக்காமல் மணம் கமழும் மென்மையான மேகத் திரையாக அவளைப் போர்த்திருந்தது இந்த உடை. இடைக் குஞ்சங்களுடன் விளையாடியவாறு அசாதாரணமாக சொற்களை அவள் என்னிடம் கூறினாள். ரோஜா நிற நகங்கள் உள்ள அவளுடைய சிறு விரல்களின் இயக்கத்தைக் கவனித்துக் கொண்டிருந்த எனக்கு நான் தேர்ந்த இசைஞனால் அன்பு கூர்ந்து சுருதி சேர்க்கப் பெறும் வயலின் வாத்தியம் என்னும் உணர்வு ஏற்பட்டது. எனக்கு உயிரை விட்டு விட விருப்பம் ஏற்பட்டது, இந்த நங்கையை மூச்சால் எப்படியாவது இழுத்து என் உள்ளத்தில் எப்போதும் இருக்கும்படி வைக்க ஆசை உண்டாயிற்று. களைப்பூட்டும் படி, வலிக்கும் அளவுக்கு விகுவாக முறுக்கேறி என் உடல் இசைத்தது. என் இருதயம் இதோ வெடித்து விடும் என்று எனக்குத் தோன்றியது.

அப்போதுதான் அச்சேறிய எனது முதல் கதையை அவளுக்குப் படித்துக் காட்டினேன். அவள் அதை எப்படி மதிப்பிட்டாள் என்பது நினைவில்லை. அவள் வியப்படைந்தாள் போலும்:

''அப்படியா? நீங்கள் உரைநடை எழுதத் தொடங்கி விட்டீர்களா?!''

கனவின் ஊடாகப் போல, எங்கோ தொலைவிலிருந்து என் காதுக்கு எட்டியது அவளுடைய குரல்:

''இந்த ஆண்டுகளில் நான் உங்களைப் பற்றி நிறைய எண்ணமிட்டேன். நீங்கள் இவ்வளவு நிறையத் துன்பப்பட நேர்ந்தது என் காரணமாகவா என்ன?''

அவள் வாழும் உலகில் துன்பமானதோ பயங்கரமானதோ எதுவும் இல்லை என்று பொருள்படும் எவையோ சொற்களை நான் கூறினேன்.

''நீங்கள் எவ்வளவு இனியவர்...''

அவளைக் கட்டித் தழுவ எனக்கு அறிவு இழக்கும் அளவுக்கு

ஆசை உண்டாயிற்று, ஆனுல் என் கைகள் மட்டித் தனமாக நீண்டவை, அர்த்தமின்றிக் கனமானவை. அவளுக்கு வலி ஏற்படுத்த அஞ்சி அவளது மேனியைத் தீண்டத் தயங்கினேன். அவள் முன் நின்று இதயத்தின் பலத்த அதிர்ச்சிகளுக்கு ஏற்ப ஆடியவாறு முணுமுணுத்தேன்:

''என்னேடு வாழுங்கள்! தயை செய்து என்னேடு வாழுங்கள்!''

அவள் மெல்லென, — கூச்சத்துடனும் — நகைத்தாள். அவளுடைய இனிய விழிகள் என் கண்கள் கூசும்படி ஒளி வீசின. அவள் அறையின் மூலைக்குப் போய் அங்கிருந்து கூறினுள்:

''இப்படிச் செய்வோம்: நீங்கள் நீழ்னி நோவ்கரதுக்குப் போங்கள், நான் இங்கே தங்கி, ஆலோசனை செய்த பின் உங்களுக்கு எழுதுகிறேன்...''

நான் படித்த நவீனம் ஒன்றின் கதாநாயகன் செய்தது போன்று மரியாதையாகச் சிரம் தாழ்த்து அவளை வணங்கி விட்டு வெளியேறினேன். காற்றில் மிதந்தேன்.

குளிர் காலத்தில் அவள் மகளுடன் நீழ்னி நோவ்கரத் நகரில் என்னிடம் வந்து சேர்ந்தாள். ''ஏழை மணந்தால் இரவும் சுருங்கும்'' என்று கிண்டலும் ஏக்கமும் தொனிக்கும் ஒரு ருஷ்யப் பழமொழி உண்டு. இந்தப் பழமொழியின் ஆழ்ந்த உண்மையை நான் சொந்த அனுபவத்தால் சோதித்துத் தெரிந்து கொண்டேன்.

நாங்கள் ஒரு தனி வீட்டை மாதம் இரண்டு ரூபிள் வாடகைக்கு எடுத்தோம். பாதிரியின் தோட்டத்தில் இருந்த பழைய குளியறை அது. நான் முன்னறையிலும் என் மனைவி குளியறையிலும் இடம் வைத்துக் கொண்டோம். குளியறையே விருந்தறையாகவும் பயன்பட்டது. வீடு குடும்ப வாழ்க்கைக்கு அவ்வளவு ஏற்றதாக இல்லை. குளிர் காலத்தில் அதன் மூலைகளிலும் துளை விளிம்புகளிலும் பனி உறைந்து விட்டது. இரவு நேரங்களில் வேலை செய்கையில் நான் என்னிடம் இருந்த எல்லா உடைகளையும் போட்டுக் கொண்டு அவற்றுக்கு மேலே விரிப்பையும் போர்த்துக் கொண்டேன். அப்படியும் கடுமையான கீல்வாத நோய்க்கு ஆளானேன். அந்தக்

காலத்தில் நான் சிறந்த உடல் நலமும் தாங்குதிறனும் பெற்றிருந்தேன், அதைக் குறித்துப் பெருமையும் அடித்துக் கொண்டேன். அந்த நிலையில் நான் இவ்வாறு நோய்க்கு ஆளானது அனேகமாக இயற்கைக்குப் புறம்பாக இருந்தது.

குளியறையில் குளிர் குறைவாக இருந்தது, ஆனால் நான் கணப்பை மூட்டியதும் பூஞ்சணம், சோப்பு, நீராவிக் குளியலில் பயன்படும் மிலாறுகள் ஆகியவற்றின் திணறச் செய்யும் நாற்றம் எங்கள் இருப்பிடம் முழுவதிலும் நிறைந்து விட்டது. அற்புதமான விழிகள் கொண்ட நேர்த்தியான வெண்களிமண் பொம்மை போன்ற சிறுமி இதனால் எரிச்சல் அடைந்தாள். அவளுக்குத் தலை வலித்தது.

வசந்த காலத்திலோ சிலந்திகளும் மர வண்டுகளும் பெருந் திரள்களாகக் குளியறைக்கு வருகை தரலாயின. தாயும் மகளும் அவற்றைக் கண்டு அஞ்சி நடுங்கினார்கள். ரப்பர் சோட்டினால் பூச்சிகளைக் கொல்வது எனக்கு அவசியம் ஆகி விட்டது. எல்டர் மரங்களும் காட்டு ராஸ்ப்பெரிப் புதர்களும் செழித்து வளர்ந்து சிறு சன்னல்கள் மேல் படர்ந்தன. அறை எப்போதும் மங்கலாக இருந்தது. புதர்களைப் பிடுங்கி எறியவோ குட்டையாக வெட்டவோ கூடக் குடிகாரனும் சஞ்சல சித்தம் உள்ளவனுமான பாதிரி அனுமதிக்கவில்லை.

அதிக வசதியான இருப்பிடத்தைத் தேடிக் கண்டு பிடித்திருக்கலாம் தான், ஆனால் நாங்கள் பாதிரிக்குக் கடன்பட்டிருந்தோம், என்னையும் அவனுக்குப் பிடித்திருந்தது, எனவே அவன் எங்களைப் போக விடவில்லை.

''பழகிக் கொள்ளுங்கள்!'' என்றான் அவன். ''இல்லாவிட்டால் கடனைச் செலுத்தி விட்டுப் போங்கள், ஆங்கிலேயர்களிடம் வேண்டுமானாலும் சரி.''

பாதிரிக்கு ஆங்கிலேயர்களைப் பிடிக்கவில்லை. அவன் சொன்னான்:

''இந்த மக்கள் சோம்பேறிகள். பேஷன்ஸ் சீட்டாட்டம் ஒன்று தவிர இவர்கள் எதையுமே கண்டு பிடிக்கவில்லை, இவர்கள் சண்டை போடத் திறமை இல்லாதவர்கள்.''

அவன் பூதாகாரமான சரீரமும் வட்டமான சிவந்த முகத்தில் செம்பட்டைத் தாடியும் உள்ளவன். பெருங் குடியன் ஆதலால் மாதா கோயிலில் வழிபாடு நடத்தி வைக்க அவனால் முடியவில்லை. சிறு கூடான மேனியும் கூரிய மூக்கும் கரு முடியும் காக்கையின் சாயலும் கொண்டிருந்த தையல்

காரி மேல் உள்ள மையலால் அவன் கண்ணீர் வரும் அளவுக்குத் துன்பப்பட்டான்.

அவள் செய்த துரோகங்களை என்னிடம் விவரிக்கையில், தாடியில் வழிந்த கண்ணீரை உள்ளங்கையால் துடைத்துக் கொண்டு அவன் கூறினான்:

''அவள் வஞ்சகி என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் புனிதத் தியாகி பிமியாமாவை எனக்கு நினைவுபடுத்துகிறாள், அதற்காகத்தான் காதலிக்கிறேன்!''

நான் மாதாகோயில் காலண்டரைக் கவனமாகப் பார்த் தேன். இந்தப் பெயர் உள்ள புனிதர் எவரும் அதில் இல்லை.

எனது மதநம்பிக்கை இன்மையால் ஆத்திரம் அடைந்து மத நம்பிக்கைக்கு ஆதரவாகப் பின் வருவன போன்ற வாதங் களைக் கூறி அவன் என் உள்ளத்தை உலுக்கினான்:

''நீங்கள் தம்பீ, நடைமுறை நோக்கிலே இதை ஆலோ சித்துப் பாருங்கள்: நம்பாதவர்கள் பதிற்றுக் கணக்கானவர் கள், நம்புகிறவர்களோ, கோடிக் கணக்கானவர்கள், இது ஏன்? ஏனென்றால் எப்படி மீனால் தண்ணீர் இல்லாமல் வாழ முடியாதோ,அப்படியே ஆன்மா மாதாகோயிலுக்கு வெளியே வாழ்வதில்லை. நிரூபணம் ஆகி விட்டதா? வாருங்கள், இதற்காகக் குடிப்போம்!''

''நான் குடிப்பதில்லை, எனக்குக் கீல்வாதம்.''

உப்பிட்ட மீன் துண்டில் முள் கரண்டியைப் பாய்ச்சி அச் சுறுத்தும் பாங்கில் உயர்த்திய படி அவன் சொன்னான்:

''இதுவும் நம்பாமையின் விளைவு தான்!''

இந்தக் குளியறையில் குடி வைத்ததற்காகவும் சாப்பிட இறைச்சியும் சிறுமிக்கு விளையாட்டுப் பொருளும் வாங்க முடியாததற்காகவும் இந்தப் பாழாய்ப் போகிற, கேலியாகக் குத்திக் காட்டும் ஏழ்மைக்காகவும் காதல் நங்கையின் முன் எனக்கு வந்த துன்புறுத்தும் வெட்கத்தில் உறக்கம் கூடப் பிடிக்கவில்லை. ஏழ்மை என்ற குறை தனி மனிதன் என்ற முறையில் எனக்குக் கலக்கமோ துன்பமோ ஏற்படுத்தவில்லை, ஆனால் என் இனிய, சிறிய கல்லூரி மாணவிக்கும் சிறப்பாக அவளுடைய புதல்விக்கும் இந்த வாழ்க்கை இழிவுபடுத்து வதாகவும் உயிரை வாட்டுவதாகவும் இருந்தது.

இரவு வேளைகளில் என் இடத்தில் மேசை அருகே அமர்ந்து மன்னிப்பு மனுக்களையும் அப்பீல் விண்ணப்பங்களையும் ரத்து

விண்ணப்பங்களையும் பிரதிகள் எடுக்கும் போதும் கதைகள் எழுதும் போதும் நான் பற்களை நெறுநெறுத்து என்னையும் பிற மனிதர்களையும் விதியையும் காதலையும் சபிப்பேன்.

தான் கஷ்டப்படுவதை மகன் காண்பதை விரும்பாத தாய் போன்று பெருந்தன்மையுடன் நடந்து கொண்டாள் என் காதல் நங்கை. இந்த இழிந்த வாழ்க்கையின் போது குறை கூறும் ஒரு சொல் கூட அவளுடைய வாயிலிருந்து வெளிவரவில்லை. நிலைமைகள் எவ்வளவு கடினம் ஆயினவோ அவ்வளவு அதிக உற்சாகமாக அவளுடைய குரலும் அதிக மகிழ்ச்சியுடன் அவளுடைய சிரிப்பும் ஒலித்தன. அவள் காலையிலிருந்து மாலை வரை பாதிரிகள், அவர்களுடைய காலஞ் சென்ற மனைவிகள் ஆகியோரின் உருவப் படங்கள் தீட்டினாள், மாவட்டங்களின் நிலப் படங்கள் வரைந்தாள்—இந்த நிலப் படங்களுக்காக ஏதோ பொருட்காட்சியில் ஜெம்ஸ்த்வோவுக்குப் பொற் பதக்கம் பரிசாகக் கிடைத்தது. உருவப் படங்களுக்கான ஆர்டர்கள் தீர்ந்ததும், வெவ்வேறு துணிகளின் துண்டுகள், வைக்கோல், கம்பிகள் ஆகியவற்றைக் கொண்டு மிக மிக நாகரிகமான பாரிஸ் மோஸ்தர் தொப்பிகளை எங்கள் வீதி மங்கையருக்காகவும் மாதருக்காகவும் அவள் தயாரித்தாள். பெண்களின் தொப்பிகளைப் பற்றி எனக்கு எதுவுமே புரியாது. ஆனால் அவற்றில் படு வேடிக்கையான எதுவோ மறைந்திருந்தது போலும். தான் தயாரித்த விசித்திரமான தலைக்கோலத்தைக் கண்ணாடிக்கு முன் நின்று அளவு பார்க்கையில் தொழிற் சிற்பி வலிப்பு வந்தவள் போல மூச்சுத் திணறும் வரை சிரித்தாள். ஆனால் இந்தத் தொப்பிகள் ஆர்டர் கொடுத்தவர்களை விந்தையான முறையில் பாதித்ததைக் கண்டேன். பல வண்ணக் கோழிக் கூடுகள் போன்ற தொப்பிகளால் தலை அலங்காரம் செய்து கொண்டு ஏதோ தனிப்பட்ட மிடுக்குடன் வயிறுகளைத் துருத்தியவாறு அவர்கள் வீதியில் நடந்தார்கள்.

நான் வழக்குரைஞரிடம் வேலை செய்து கொண்டே வரிக்கு இரண்டு கோப்பெக்குகள் சன்மானம் பெற்று உள்ளூர்ச் செய்தித் தாளுக்குச் சிறு கதைகள் எழுதி வந்தேன். மாலை நேரங்களில் தேநீர் பருகுகையில் வீட்டுக்கு விருந்தினர்கள் எவரும் வந்திராவிட்டால் என் மனைவி ஜார் இரண்டாம் அலெக்சாந்தரைப் பற்றிச் சுவையான கதைகளை எனக்குச்

சொன்னாள். அவன் பெலஸ்தோக் மகளிர் கல்லூரிக்கு வருகை தந்து உயர் குல மங்கையருக்கு மிட்டாய்கள் வழங்கு வானும், இவற்றைத் தின்ற சில கன்னியர் மாயமான விதத் தில் கருவுறுவார்களாம். அடிக்கடி யாரேனும் அழகிய பெண் ஜாரோடு பெலவேழ் அடர் காட்டுக்கு வேட்டைக்குப் போய் மறைந்து விடுவாளாம், பின்பு தலை நகர் பீட்டர்ஸ்பர்கில் அவளுக்குத் திருமணம் நடைபெறுமாம்.

என் மனைவி பாரிஸ் நகரைப் பற்றிக் கருத்தை ஈர்க்கும் விதத்தில் எனக்கு விவரித்தாள். புத்தகங்கள் வாயிலாக, சிறப்பாக மக்சீம் தியூ-கான் இயற்றியுள்ள சிறந்த நூலின் வாயிலாக அந்த நகரை நான் ஏற்கெனவே அறிந்திருந்தேன். என் மனைவி மான்மார்ட்டர் உணவு விடுதிகளிலும் லத்தீன் வட்டாரத்தின் பரபரப்பு மிக்க வாழ்க்கையிலும் பாரிசை ஆராய்ந்து அறிந்திருந்தாள். அவள் சொன்ன கதைகள் மது வைக் காட்டிலும் அதிகமாக எனக்குக் கிளர்ச்சி ஊட்டின. நான் பெண்ணுக்குப் போற்றிப் பாடல்கள் சில இயற்றினேன். பெண் மீது உள்ள காதலின் வலிமையினாலேயே வாழ்க்கை யின் அழகு அனைத்தும் படைக்கப்பட்டிருக்கிறது என்று நான் உணர்ந்தேன்.

தனக்கே நேர்ந்த காதல் அனுபவங்கள் பற்றி அவள் கூறிய கதைகள் எனக்கு எல்லாவற்றையும் விட அதிகமாகப் பிடித்திருந்தன. கவர்ச்சியாய் இருந்தன. வியப்பூட்டும் சுவை யுடனும் ஒளிவு மறைவு இன்றியும் இந்த அனுபவங்களை அவள் விவரித்தாள். அவளுடைய ஒளிவு மறைவின்மை சில சந்தர்ப்பங்களில் எனக்கு மிகுந்த கூச்சம் உண்டாக்கியது. தன் மணமகனை ஜெனரலின் கேலிக்குரிய உருவத்தை, நுண்மை யாகக் கூராக்கப்பட்ட பென்சிலால் படம் வரைவது போல, எளிய சொற்களில் சற்றே நகையாடியவாறு அவள் சித்திரித் தாள். அந்த ஜெனரல் காட்டெருதை ஜாருக்கு முன்னதாகச் சுட்டு விட்டு, காயமடைந்த எருதை நோக்கி, ''மன்னித்துக் கொள்ளுங்கள் மாட்சிமை தங்கிய பேரரசர் பிரானே!'' என்று கத்தினானும்.

நாடு கடந்த ருஷ்யர்களைப் பற்றி அவள் கதைகள் சொன் னாள். மற்றவர்கள்பால் பெரிய மனிதப் போக்கைக் காட்டும் மறைமுகப் புன்னகையை அவளுடைய சொற்களில் நான் எப்போதும் உணர்ந்தேன். சில வேளைகளில் அவளுடைய

ஒளிவு மறைவின்மை வெகுளித்தனமான வெட்கமின்மைக்கு இழிந்தது. அவள் பூனையினது போன்ற கூரிய ரோஜா நிற நாக்கினால் உதடுகளை ருசியுடன் நக்கிக் கொண்டாள், அவளுடைய விழிகள் ஏதோ சிறப்பான வகையில் சுடர்ந்தன. பிறர் பால் அருவருப்புப் பொறி அவற்றில் ஒளிர்வதாகச் சில வேளைகளில் எனக்குத் தோன்றியது. ஆனால், பொம்மைகளுடன் தன்னை மறந்து விளையாடும் சிறுமியாகவே அவளை நான் அடிக்கடி கண்டேன்.

ஒரு முறை அவள் சொன்னாள்:

''காதலில் ஆழ்ந்த ருஷ்யன் எப்போதும் சற்று அதிகமாகப் பேசுகிறான். சொற் பெருக்கு காரணமாக அவனைச் சகிப்பது கடினம் ஆகிறது, சில வேளைகளில் அவன் மேல் வெறுப்பு உண்டாகிறது. அழகாகக் காதலிக்க வல்லவர்கள் பிரெஞ்சுக்காரர்கள் மட்டுந்தாம். காதல் அவர்களுக்கு அனேகமாக வழிபாட்டு முறை.''

இதன் பின் நான் அவள் விஷயத்தில் தன்னடக்கத்தையும் சொற் செட்டையும் மேற்கொள்ளத் தொடங்கினேன்.

பிரெஞ்சு மாதரைப் பற்றி அவள் சொன்னாள்:

''ஆர்வம் பொங்கும் இதயக் கனிவை அவர்களிடம் எப்போதும் காண முடியாது, ஆனால் குதூகலமான, நுட்பமாகப் பண்படுத்தப்பட்ட சிற்றின்பப் பற்றினால் அவர்கள் இதற்கு அழகாக ஈடு கட்டி விடுகிறார்கள். காதலை அவர்கள் கலையாக மதிக்கிறார்கள்.''

இவற்றை எல்லாம் அவள் மிக ஆழ்ந்த முறையில், படிப்பினை நல்கும் தொனியில் கூறினாள். இவை எனக்குத் தேவையாய் இருந்த அறிவியல்கள் அல்லதாம், ஆயினும் இவை அறிவியல்களாக இருந்ததால் அவளுடைய சொற்களை நான் ஆர்வத்துடன் செவி மடுத்தேன்.

''ருஷ்ய மாதருக்கும் பிரெஞ்சு மாதருக்கும் இடையே, பழங்களுக்கும் பழ மிட்டாய்களுக்கும் இடையே உள்ள அதே வேறுபாடு உள்ளது'' என்று ஒரு முறை நிலவு வீசிய இரவில் தோட்டத்துப் பந்தரில் உட்கார்ந்தவாறு அவள் சொன்னாள்.

அவளும் மிட்டாயாகத் தான் இருந்தாள். எங்கள் மண வாழ்க்கையின் முதல் நாட்களில் ஆண் பெண் உறவு பற்றி இன்பக் கற்பனைவாதியான எனது கருத்துக்களை, இயல்பாகவே

உற்சாகப் பெருக்குடன் நான் விளக்கிய போது அவளுக்குப் பெருத்த வியப்பு உண்டாயிற்று.

''இதை நீங்கள் ஆழ்ந்த முறையிலா சொல்லுகிறீர்கள்? நீங்கள் மெய்யாகவே இப்படி நினைக்கிறீர்களா?'' என்று இளநீல நிலவொளியில் என் கைகளில் சாய்ந்தவாறு வினவினுள் அவள்.

அவளுடைய ரோஜா மேனி ஒளி ஊடுருவக் கூடியதாகத் தோன்றியது. வாதா மலரின் வெறியூட்டும், சற்று கசப்பான மணம் அதிலிருந்து வந்தது. அவளுடைய மெல் விரல்கள் என் மயிர்ப் பிடரியைச் சிந்தனையுடன் வருடின. கலவரத்துடன் அகலத் திறந்த விழிகளால் என் முகத்தை உற்று நோக்கி நம்பிக்கை இன்றி முறுவலித்தாள்.

''ஆ, என் கடவுளே!'' என்று கத்தி, தரையில் குதித்து, அறையில் ஒளியிலிருந்து நிழலுக்குச் சிந்தனையுடன் நடக்கத் தொடங்கினுள். நிலவொளியில் அவளுடைய மழமழப்பான தோல் மென்மையாகப் பளிச்சிட்டது. வெறுங் கால்கள் தரையில் ஓசையின்றிப் பட்டன. பின்பு, மீண்டும் என்னிடம் வந்து, அங்கைகளால் என் கன்னங்களைத் தடவி, தாயின் தோரணையில் சொன்னுள்.

''நீங்கள் கன்னியுடன் வாழ்க்கை தொடங்கி இருக்க வேண்டும்,—ஆம், ஆம்! என்னோடு அல்ல...''

நான் அவளை அணைத்துத் தூக்கிக் கொண்ட போது அவள் அழத் தொடங்கி, மெல்லிய குரலில் கூறினுள்:

''நான் உங்களை எப்படிக் காதலிக்கிறேன் என்பதை நீங்கள் உணர்கிறீர்கள், அல்லவா? உங்களோடு நான் அனுபவிக்கும் இவ்வளவு இன்பத்தை முன்பு ஒரு போதும் அனுபவித்தது இல்லை. இது உண்மை, நம்புங்கள்! இந்த மாதிரிக் கனிவுடனும் பரிவுடனும், இந்த மாதிரிக் கவலையற்ற இதயத்துடனும் முன்பு ஒரு போதும் நான் காதலித்தது கிடையாது. உங்களோடு இருப்பதில் எனக்கு ஆச்சரியப்படும் அளவுக்கு இன்பம் உண்டாகிறது, ஆனுலும் நான் சொல்லுகிறேன்: நாம் தவறு செய்து விட்டோம். உங்களுக்கு எப்பேர்ப்பட்டவள் வேண்டுமோ அப்பேர்ப்பட்டவள் அல்ல நான்! அல்லவே அல்ல! நான்தான் தவறு செய்து விட்டேன்.''

அவளைப் புரிந்து கொள்ளாமல் அவளுடைய சொற்களால் நான் மிரண்டு போனேன். கொஞ்சல்களின் இன்பத்

தால் அவளுடைய மனநிலையை விரைவில் மாற்றி விட்டேன். ஆயினும் இந்த விந்தைச் சொற்கள் என் நினைவில் தங்கி விட்டன. இதற்குச் சில நாட்களுக்குப் பின் அவள் பேரின்பக் கண்ணீர் மல்க மீண்டும் துயரத்துடன் இந்தச் சொற்களைத் திரும்பக் கூறினாள்:

''அட, நான் மட்டும் கன்னியாய் இருந்தால்!..''

எனக்கு நினைவு இருக்கிறது, அந்த இரவில் தோட்டத்தில் பனிப் புயல் வீசியது. எல்டர் மரக் கிளைகள் சன்னல் கண்ணாடியில் இடித்தன. புகை போக்கியில் காற்று ஓநாய் போல் ஊளையிட்டது. எங்கள் அறையில் இருட்டும் குளிருமாக இருந்தது. பிய்ந்த சுவர்க் காகிதங்கள் சரசரத்தன.

கொஞ்சம் பணம் சம்பாதித்ததும் நாங்கள் தெரிந்தவர்களை அழைத்துச் சிறப்பான விருந்துகள் கொடுத்தோம். இறைச்சி உண்டோம், வோத்காவும் பீரும் அருந்தினோம், பேஸ்ட்ரிகள் சுவைத்தோம், மொத்தத்தில், இன்பம் துய்த்தோம். என் பாரிஸ் நகர நங்கை ஆர்வத்துடன் நிறையச் சாப்பிட்டாள், ருஷ்ய உணவு வகைகளை விரும்பினாள்: சிச்சூக்—மாட்டு இரைப்பையில் பக்வீட் பொங்கலும் வாத்துக் கொழுப்பும் வைத்த வெஞ்சனம்—மீன் கொழுப்பும் கெளிற்று இறைச்சியும் கொண்டு செய்த பணியாரம், ஆட்டு இறைச்சி சேர்ந்த உருளைக் கிழங்கு சூப் முதலியவை இவற்றில் சில.

''பேராசைக்கார வயிறுகள்'' திருக்கூட்டம் ஒன்றை அவள் அமைத்தாள். வயிறார உண்ணவும் நன்றாக மது பருகவும் ஆசை கொண்ட பலர் இதில் இருந்தார்கள். இவர்கள் உணவு வகைகளின் ருசி சம்பந்தமான மர்மங்களை அழகியல் நோக்கில் நுட்பமாக அறிந்திருந்தார்கள், சொல்லாற்றலுடன் சளைக்காமல் பேசினார்கள். நானோ, வேறு விதமான மர்மங்களில் ஆர்வம் கொண்டிருந்தேன், கொஞ்சமாகச் சாப்பிட்டேன். மீதூண் சுவைக்கும் நிகழ்முறையில் எனக்குக் கவர்ச்சி ஏற்படவில்லை. என் அழகியல் தேவைகளின் வட்டத்துக்கு வெளியே இருந்தது அது.

''இவர்கள் வெற்று ஆட்கள்!'' என்று ''பேராசைக்கார வயிறுகள்'' பற்றி நான் கூறினேன்.

''நன்றாகக் குலுக்கிக் கொட்டினால் எந்த மனிதனும் வெற்று ஆள் தானே'' என்று பதில் அளித்தாள் அவள்.

'' 'ஆடைகளுக்குள் நாம் எல்லோரும் அம்மணமானவர்களே!' என்றார் ஹேய்னே.''

ஐயுறவுவாதப் பாங்குள்ள மேற்கோள்களை அவள் நிறையத் தெரிந்து வைத்திருந்தாள், ஆனால் திறமையாகவும் சந்தர்ப்பப் பொருத்தமாகவும் அவற்றை அவள் எப்போதும் கையாளவில்லை என்று எனக்குத் தோன்றியது.

நெருங்கிய ஆடவர்களைக் ''குலுக்கிக் கொட்டுவது'' அவளுக்கு நிரம்பப் பிடித்தது. இதை அவள் மிக எளிதாகச் செய்தாள். சோர்வறியாத குதூகலமும் சமயோசித சாமர்த்தியமும் பாம்பு போன்று வளைந்து நெளியும் இலாகவமும் வாய்ந்த அவள் மிக உயர்ந்த தரம் அல்லாத மனக் கிளர்ச்சிகளைத் தூண்டி விட்டுத் தன்னைச் சுற்றிலும் ஆரவாரம் நிறைந்த உற்சாகப் பெருக்கை விரைவில் ஏற்படுத்தினாள். ஒருவன் அவளோடு சில நிமிடங்கள் உரையாடினால் போதும், அவனுடைய காதுகள் சிவக்கும், பின்பு அவை ஊதா ஆகி விடும், கண்கள் கனிவுடன் ஈரமாகி முட்டைக்கோசைப் பார்க்கும் ஆட்டினது போன்ற பார்வையுடன். அவளை நோக்கும்.

''காந்தக் கவர்ச்சியுள்ள பெண்மணி!'' என்று வியந்து பாராட்டினான் எவனோ உதவிச் சான்றதிகாரி. இவன் உருப்படாத பிரபு வம்சத்தினன், பாலுண்ணியும் மாதாகோயில் கும்மட்டம் போன்ற பெரு வயிறும் உள்ளவன்.

லித்சேய் என்னும் பிரபு வம்சப் பள்ளியின் முன்னாள் மாணவனும் யாரஸ்லாவல் நகரத்தானும் ஆன ஒரு சணல் முடியன் அவள் மீது செய்யுள்கள் இயற்றினான்—எப்போதும் மூவசைச் சீரில். எனக்கு அவை வெறுக்கத் தக்கவையாகத் தோன்றின. அவளோ, அவற்றைப் படித்துக் கண்ணீர் வரும் வரை கெக்கலித்தாள்.

''நீ இவர்களை எதற்காகத் தூண்டுகிறாய்?'' என்று கேட்டேன்.

''தூண்டில் போட்டு மீன் பிடிப்பது போலவே இது சுவையானது. இதற்குப் பெயர்தான் காதல் பசப்பு என்பது. தன்னை மதிக்கும் ஒரு பெண்கூடக் காதல் பசப்பை விரும்பாமல் இருக்க மாட்டாள்.''

சில வேளைகளில் அவள் என் விழிகளை விழி பொருந்த நோக்கி, புன்னகையுடன் கேட்டாள்:

''பொறாமைப்படுகிறாயோ?''

இல்லை, நான் பொறுமைப்படவில்லை, ஆனால் இதெல்லாம் நான் வாழ்வதற்குச் சற்று இடைஞ்சலாய் இருந்தது. கொச்சைப் பேர்வழிகளை எனக்குப் பிடிக்காது. நான் குதூகலமான ஆள். சிரிப்பு மனிதர்களின் மிகச் சிறந்த பண்பு என்பதை நான் அறிந்திருந்தேன். சர்க்கஸ் கோமாளிகள், திறந்த மேடை நகைச்சுவை நடிகர்கள், நாடக அரங்கின் விகடர்கள் ஆகியவர்களை இயல்பான திறமை இல்லாதவர்களாக நான் மதித்தேன். அவர்களை விட நன்றாகச் சிரிப்பு மூட்ட என்னால் முடியும் என்று உறுதியாக உணர்ந்தேன். எங்கள் விருந்தாளிகளை வயிறுகள் புண்ணாகும் அளவுக்குப் பல முறை சிரிக்க வைத்திருந்தேன்.

''அட கடவுளே!'' என்று வியந்து பாராட்டினாள் என் மனைவி. ''எப்பேர்ப்பட்ட நகைச்சுவை நடிகன் ஆகி இருக்கலாம் நீ! நாடக நடிகன் ஆகு, அரங்கேறு!''

தொழில் முறை அற்ற குழுவினரின் நாடகங்களில் அவளும் திறமையாக நடித்தாள். பெரிய மன்ற நிர்வாகிகள் அவளை நடிக்க அழைத்தார்கள்.

''நான் அரங்கை விரும்புகிறேன், ஆனால் திரை மறைவை அஞ்சுகிறேன்'' என்றாள் அவள்.

விருப்பங்களிலும் எண்ணங்களிலும் சொற்களிலும் அவள் உண்மையைக் கடைப்பிடித்தாள்.

''நீ அளவு கடந்து மிக நிறையத் தத்துவச் சிந்தனை செய்கிறாய்'' என்று எனக்குப் போதித்தாள். ''சாராம்சத்தில் வாழ்க்கை எளியது, கரடு முரடானது. அதில் ஏதோ தனிப்பட்ட உட்பொருளைத் தேடி அதைச் சிக்கலாக்குவது தேவை இல்லை. அதன் கரட்டு முரட்டுத்தனத்தை மென்மை ஆக்கக் கற்பதுதான் தேவை. இதற்கு மேல் எதையும் சாதித்து விட முடியாது.''

அவளுடைய தத்துவத்தில் மாதர் நோயியல் அளவுக்கு மேல் இருந்ததை நான் உணர்ந்தேன். அவளுக்குத் திருமறையாகப் பயன்பட்டது பேறு கால மருத்துவ நூல் என்று எனக்குத் தோன்றியது. கல்லூரிப் படிப்பை முடித்த பின்தான் படித்த முதலாவது விஞ்ஞான நூல் ஒன்று தனக்கு எப்படித் திகைப்பூட்டியது என்று அவளே எனக்கு விவரித்தாள்.

''வெகுளிப் பெண்ணான நான் தலையில் செங்கல் தாக்கியது

போல உணர்ந்தேன். மேகங்களிலிருந்து நான் சேற்றில் தள்ளப்பட்டது போல எனக்குத் தோன்றியது. எதை ஏற்கெனவே என்னுல் நம்ப முடியவில்லேயோ, அதன் மேல் இரக்கத்தால் நான் அழுதேன், ஆனுல்கடுமையானதுஎன்ருலும் திண்ணமான தரையை விரைவில் காலடியில் தொட்டு உணர்ந் தேன். இதனுல் கடவுள் மீது இன்னும் அதிக இரக்கம் உண் டாயிற்று. நான் கடவுளே மிக நன்ருக, நெருக்கமாக உணர்ந்து வந்தேன். திடீரென்று அவர் சிகரெட்டுப் புகை போலக் காற்றில் பரவிக் கரைந்து விட்டார். அவரோடு கூடவே காதலின் சுவர்க்க போகம் பற்றிய கனவும் மறைந்து விட்டது. கல்லூரி மாணவிகளான நாங்கள் எல்லோருமோ, காதலேப் பற்றி மிக நிறையச் சிந்தித்தோம், மிக நன்ருகப் பேசினேம்!''

கல்லூரியிலும் பாரிசிலும் அவளுக்கு ஏற்பட்டிருந்த எல்லாவற்றையும் மறுக்கும் நிஹிலிசம் என்னே மோசமாகப் பாதித்தது. சில சமயம், இரவில் வேலே முடிந்து மேசை அருகி லிருந்து எழுந்ததும் நான் அவளேப் பார்க்கச் செல்வேன்— படுக்கையில் அவள் இன்னும் சிறியவளாக, ஒயிலுள்ளவளாக, அழகியாகக் காணப்பட்டாள்—பார்த்து, அவளுடைய முறிவு ஏற்பட்ட உள்ளத்தையும் சிடுக்கான வாழ்க்கையையும் பற்றிப் பெருந் துயரத்துடன் எண்ணமிட்டேன். அவள் மேல் உண்டான இரக்கம் என் காதலே இன்னும் தீவிரம் ஆக்கிற்று.

எங்களுடைய இலக்கியச் சுவைகள் சமரசப்படுத்த முடியாதபடி வெவ்வேறு புறங்களில்சென்றன: பல்ஸாக்கையும் பிளாபேரையும் நான் பேரின்பத்துடன் படித்தேன். அவளுக்கோ போல் பெவால், அக்தாவ் பெய்லியே, போல் த-கோக் ஆகியோரின் நூல்கள் பிடித்திருந்தன, சிறப்பாக **மங்கை ழிரோ, என் மனேவி.** இந்த நூலே எல்லாவற்றிலும் நுண்ணறிவார்ந்ததாக அவள் கருதினுள். எனக்கோ, அது **தண்டனேகள் குறித்த சட்டத்** தொகுப்புபோன்றுசலிப்பூட்டுவதாக இருந்தது. இவை எல்லாம் இருப்பினும் எங்கள் உறவுகள் மிக நன்ருக அமைந்தன. ஒருவர் மீது ஒருவர் அக்கறையை நாங்கள் இழக்கவில்லே, காமப் பற்று அவிந்து விடவில்லே. ஆனுல் இணே வாழ்க்கையின் மூன்ரும் ஆண்டில் நான் ஒரு விஷயத்தைக் கவனிக்கலானேன்—என் உள்ளத்தில் ஏதோ ஒன்று கடும் வன்மத்துடன் நெறுநெறுத்தது, நாளுக்கு நாள் அதிக உரக்கவும் அதிக உறுத்தலுடனும். நான் இடையருமல்

ஆர்வத்துடன் கல்வி பயின்றேன், புத்தகங்கள் படித்தேன், இலக்கியப் பணியில் ஆழ்ந்து ஈடுபடலானேன். நானும் மனைவியும் அதிகமாகச் சம்பாதிக்கத் தொடங்கினோம், எனவே, பகல், மாலை விருந்துகள் மேலும் அடிக்கடி கொடுக்க எங்களால் முடிந்தது. குறைவாக அக்கறைக்கு உரியவர்களான விருந்தாளிகளின் எண்ணிக்கை இதனால் வளர்ந்து கொண்டு போயிற்று, அவர்கள் எனக்கு வர வர அதிக இடைஞ்சல் செய்தார்கள்.

என் மனைவிக்கு வாழ்க்கை ஒரு வகையான பொம்மைக் காட்சிசாலையாக எதனாலோ தோன்றியது. ''கைகளால் தொடாதிருக்கும்படி வேண்டப்படுகிறது'' என்ற எச்சரிக்கைக் குறிப்பு ஆண்கள் மேல் இருக்கவில்லை ஆதலால் அவள் சில வேளைகளில் மட்டு மீறி அசாக்கிரதையாக அவர்களை அணுகினாள். அவளுடைய ஆவலை அவர்கள் தங்களுக்கு அளவு கடந்து சாதகமாக மதிப்பிட்டார்கள். இந்தக் காரணத்தால் தப்பெண்ணங்கள் ஏற்பட்டன. இவற்றை நான் போக்க வேண்டி இருந்தது. சில சந்தர்ப்பங்களில் போதிய தன்னடக்கம் இன்றியும்,ஒருவேளை எப்போதும் மிகத் திறமைக் குறைவுடனும் நான் இதைச் செய்தேன். நான் காதைப் பிடித்து முறுக்கிய ஒரு மனிதன் என் மேல் குறை சொன்னான்:

''ஊம், நல்லது, நான் குற்றவாளிதான், ஒப்புக் கொள்கிறேன்! ஆனால் என்னைக் காதைப் பிடித்துத் திருகுவதாவது! நான் என்ன,சின்னப் பையனா? இந்தக் காட்டானுக்கு இரண்டு மடங்கு மூத்தவன் ஆயிற்றே நான்! இவன் என்னடா என்றால், என் காதைப் பிடித்து முறுக்குகிறான்! அட, அடித்திருக்கலாமே! அது கொஞ்சத்துக்குக் கொஞ்சம் நாகரிகமாய் இருக்குமே!''

மனைவியின் அன்பனை அவனுடைய தன்மதிப்பின் அளவுக்கு ஏற்பத் தண்டிக்கும் கலை எனக்குக் கைவரவில்லை போலும்!

நான் எழுதிய கதைகள் விஷயத்தில் என் மனைவி பெரிதும் அசட்டை காட்டினாள். அவ்வாறு அவள் செய்தது சிறிது காலம் வரை எனக்குக் கொஞ்சமேனும் வருத்தம் தரவில்லை. நான் ஆழ்ந்த இலக்கியவாதி ஆவேன் என்ற நம்பிக்கை எனக்கே இன்னும் ஏற்படாத காலம் அது. விந்தையான ஏதோ தன்னை மறந்த நிலையின் வெப்ப அலைகளது பெருக்கை

அப்போதே அடிக்கடி உணர்ந்து வந்தாலும் செய்தித் தாளில் நான் செய்த வேலையைப் பிழைப்புக்கு வழி என்று மட்டுமே கருதி வந்தேன். ஆனால் ஒரு நாள், இரவில் எழுதிய **கிழவி இஸெர்கில்** என்னும் கதையைக் காலையில் நான் அவளுக்குப் படித்துக் காட்டிய போது, அவள் ஆழ்ந்து தூங்கி விட்டாள். முதல் நிமிடத்தில் இதனால் என் மனம் புண்படவில்லை. நான் படிப்பதை நிறுத்தி விட்டு அவளை நோக்கியவாறு சிந்தனையில் ஆழ்ந்தேன்.

அற்றலைந்த நீள் சோபா முதுகில் எனக்கு இனிய சிறிய தலையைச் சாய்த்து, வாயைச் சற்றே திறந்தவாறு அவள் குழந்தை போல அமைதியாவும் சீராகவும் மூச்சு விட்டாள். எல்டர் மரக் கிளைகளின் ஊடாகக் காலை வெயில் அறைக்குள் எட்டிப் பார்த்தது. காற்று மலர்கள் போன்ற பொன் நிறப் புள்ளிகள் நங்கையின் மார்பு மீதும் முழங்கால்கள் மேலும் படிந்திருந்தன.

மனத் தாங்கலின் ஆழ்ந்த ஊசிக் குத்தல் வலியால் துடித்த வாறு, என் எழுத்துத் திறன் பற்றிய சந்தேகம் நெஞ்சில் குமைய, நான் எழுந்து ஓசைப்படுத்தாமல் தோட்டத்துக்குச் சென்றேன்.

கடினமான அடிமை உழைப்பிலும் அழுக்கிலும் ஒழுக்கக் கேட்டிலும் வறுமையிலுமோ, அல்லது நடை பிணம் போன்ற, போலித் தற்பெருமை கொண்ட, கொச்சைத்தனம் நிறைந்த செல்வச் செழிப்பிலோதான் மாதர்களை நான் வாழ்ந்த நாட்கள் முழுவதிலும் கண்டிருந்தேன். குழந்தைப் பருவத்தில் எனக்கு ஏற்பட்டிருந்த நேர்த்தியான ஒரே உளப்பதிவு அரசி மர்கோ* பற்றியது. ஆனால் வேறு வித உளப்பதிவுகளின் முழு மலைத்தொடர் அதிலிருந்து என்னைப் பிரித்தது. இஸெர்கீலின் வாழ்க்கைக் கதை மாதருக்குக் கட்டாயம் பிடிக்கும், விடுதலை வேட்கையையும் அழகு ஆர்வத்தையும் அவர்களது உள்ளங்களில் எழுப்பும் என்று நான் எண்ணினேன். ஆனால்— இதோ, எனக்கு மிக நெருங்கியவள் என் கதையால் பாதிக்கப்படவில்லை—தூங்குகிறாள்!

---

* அரசி மர்கோ—மார்கரெட் வலூவா (1553—1615). நவார், பிரான்சு நாட்டு அரசி. பிரான்சின் அரசன் இரண்டாம் ஹென்ரிக்கும் காதரைன் மெடிசிக்கும் பிறந்தவள். அலெக்சாந்தர் டியூமாவினது ஒரு நவீனத்தின் கதாநாயகி. —ப-ர்.

ஏன்? வாழ்க்கையால் என் நெஞ்சில் உருக்கி வார்க்கப் பட்ட மணி போதிய நாதம் உள்ளது அல்லவோ?

இந்த மாது என் இதயத்தால் என் தாயின் இடத்தில் ஏற்கப்பட்டிருந்தாள். படைப்பு ஆற்றலைத் தூண்டும் வெறி யூட்டும் தேனை எனக்குப் பருகக் கொடுக்க இவள் வல்லவள் என்று நான் எதிர்பார்த்தேன், நம்பினேன். வாழ்க்கைப் பாதைகளில் என்னுள் ஏற்றப்பட்டிருந்த முரட்டுத்தனத்தை இவளுடைய செல்வாக்கு மென்மைப்படுத்தும் என்று நான் எதிர்பார்த்தேன்.

இது நடந்தது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு. உள்ளத்தில் புன்முறுவலுடன் இதை இப்போது நான் நினைவுகூர்கிறேன். ஆனால், விரும்பிய நேரத்தில் உறங்க மனிதனுக்கு உள்ள விவாதத்துக்கு இடமற்ற உரிமை அந்தக் காலத்தில் என்னைப் பெரிதும் வருந்தச் செய்தது.

துயர் தரும் விஷயம் பற்றி மகிழ்ச்சியுடன் பேசினால் வருத்தம் மறைந்து விடும் என்று நான் நம்பினேன்.

உலகத்தில் ஒருவன் நுட்பமான தந்திரத்துடன் செய லாற்றுகிறான், மனிதர்களுடைய துன்பங்களைக் காண்பதில் அவனுக்கு இன்பம் உண்டாகிறது என்று நான் எண்ணினேன். அன்றாட வாழ்க்கையின் துன்ப நிகழ்ச்சிகளை உருவாக்கும் ஓர் ஆவி நிலவுகிறது, அது வாழ்க்கையைச் சாமர்த்தியமாகக் கெடுக்கிறது என்று எனக்குத் தோன்றியது. துன்ப நிகழ்ச்சி களின் கண்ணுக்குப் புலப்படாத படைப்பாளியை எனது சொந்தப் பகைவனாகக் கருதி, அவனுடைய சூழ்ச்சிகளில் சிக்காமல் இருக்க முயன்று வந்தேன்.

எனக்கு நினைவு இருக்கிறது, **புத்தரும் அவருடைய வாழ்க் கையும் போதனையும் சங்கமும்** என்ற ஓல்டென்புர்கின் நூலில் ''எல்லா உயிர் வாழ்தலினதும் சாராம்சம் துக்கமே'' என்ற வாக்கியத்தைப் படித்த போது எனக்கு ஆழ்ந்த சீற்றம் பொங்கியது. நான் வாழ்க்கையில் இன்பங்களை மிக நிறைய அனுபவித்து விடவில்லை என்றாலும் அதன் கடுந் துன்பங்கள் விதியாக அல்ல, தற்செயலானவையாக எனக்குத் தோன்றின. ஆர்ச்பிஷப் கிரிசான்பின் **கீழை நாட்டு மதம்** என்ற சிறந்த நூலைக் கவனமாகப் படித்த பின், அச்சம், சோர்வு, துன்பம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பிரபஞ்சம்

பற்றிய போதனைகள் எனக்கு அறவே ஏற்புடையவை அல்ல என்று இன்னும் அதிக ஆத்திரத்துடன் உணர்ந்தேன். மத ஆனந்த பரவச மனநிலையைச் சிரமப்பட்டு அனுபவித்தபின் இந்த மனநிலையின் பயனின்மையால் நான் அவமதிக்கப் பட்டேன். துன்பத்தின் மீது அருவருப்பு எல்லா வகையான துன்ப நிகழ்ச்சிகள் மீதும் உள்ளார்ந்த வெறுப்பை எனக்கு ஏற்படுத்தியது. அவற்றை நகைச்சுவை இசைக் கூத்துகளாக மாற்ற நான் ஓரளவு நன்ருகப் பழகி விட்டேன்.

எனக்கும் என் மனைவிக்கும் இடையே "குடும்பத் துன்ப நாடகம்" உருவாயிற்று, ஆனால் நாங்கள் இருவரும் அதன் வளர்ச்சியை ஒன்று சேர்ந்து எதிர்த்தோம் என்று மட்டும் சொல்வதற்காக இதை எல்லாம் பேசாமலும் இருந் திருக்கலாம் தான். என்னை நானே தேடிக் காண்பதற்காக நான் சென்ற வழியின் அக்கறைக்குரிய வளைவு நெளிவுகளைக் குறிப்பிட எனக்கு விருப்பம் உண்டானதாலேயே நான் கொஞ்சம் தத்துவம் பேசினேன்.

என் மனைவியும் தன் குதூகல சுபாவம் காரணமாகக் குடும்பத் துன்ப நாடகம்—அளவு மீறி "உளவியல் பாதிப்பு களுக்கு உள்ளான" ருஷ்ய ஆடவரும் பெண்டிரும் ஈடுபட வெகுவாக விரும்பும் நாடகம்—ஆட இயலாதவளாக இருந்தாள்.

ஆனால்—சணல் முடியனை முன்னாள் லித்சேய் மாணவனின் சோர்வூட்டும் மூவகைச் செய்யுள்கள் எப்படியும் அவள் மீது இலையுதிர் கால மழை போலப் பாதிப்பு நிகழ்த்தியே விட்டன. அவன் தபால் காகிதப் பக்கங்களில் அழகிய கையெழுத்தில் செய்யுள்களைக் கவனமாக எழுதி நிறைத்து, புத்தகத்திலும் தொப்பியிலும் சர்க்கரைப் பாத்திரத்திலும் —நாற்புறமும் அவற்றை மறைவாகச் செருகி வைத்தான். கச்சிதமாக மடித்த இந்தக் காகிதங்களைக் கண்டு நான் அவற்றை மனைவியிடம் பின்வரும் சொற்களோடு கொடுத் தேன்:

"தங்கள் இதயத்தைத் தாக்குவதற்கான இந்த அடுத்த முயற்சியை ஏற்றுக் கொள்ளுங்கள்!"

கியூபிடின்* காகித பாணங்கள் முதலில் அவனைப் பாதிக்க

* மன்மதன் போன்ற ரோமானியக் காதற் கடவுள்.— மொ-ர்.

வில்லை. அவள் நீண்ட செய்யுள்களை எனக்குப் படித்துக் காட்டினாள். குறிப்பிடத் தக்க வரிகளைக் கண்டதும் இருவரும் சேர்ந்து நகைத்தோம்:

''பகல், இரவு, எப்போதும் சேர்ந்திருப்போம், என்
அகம் உமது அழகை எல்லாம் ஆடியாய்க் காட்டும்:
கை வீச்சு, தலை அசைப்பு, காணலாம் அதில்.
தையலே, புறாப் போலே அகவிடுவீர் நீர்,
பருந்தினைப் போல்—எண்ணத்தால்—பறந்திடு
வேன் நான்.''

ஆனால் ஒரு நாள் முன்னாள் வித்சேய் மாணவனின் இம்மாதிரி அறிக்கை ஒன்றைப் படித்துக் காட்டி விட்டு அவள் சிந்தனையுடன் சொன்னாள்:

''எனக்கு இவன் மேல் இரக்கம் உண்டாகிறது!''

எனக்கு நினைவு இருக்கிறது, நான் இரக்கப்பட்டது அவன் மேல் அல்ல. அந்தக் கணம் முதல் அவள் மூவசைச் செய்யுள்களை எனக்கு உரக்கப் படித்துக் காட்டுவதை நிறுத்தி விட்டாள்.

கவிஞன் எனக்கு ஒரு நான்கு வயது பெரியவன், கட்டுக் குட்டானவன். வாயே திறக்க மாட்டான், போதை தரும் பானங்களில் மிகுந்த பற்று உள்ளவன், ஆணி அடித்தாற் போல உட்கார்ந்திருப்பதில் சூரன். விழா நாளில் பகல் இரண்டு மணிக்கு விருந்துக்கு வந்து இரவு இரண்டு மணி வரை அசைவின்றி ஊமையாய் உட்கார்ந்திருக்க அவனால் முடிந்தது. என்னைப் போலவே அவன் ஒரு வழக்குரைஞரிடம் எழுத்தனாக இருந்தான். நல்ல மனிதரான வழக்குரைஞரைத் தன் மறதிக் குணத்தால் பெரு வியப்பில் ஆழ்த்தினான். வேலையில் அசட்டையாய் இருந்தான். சற்றுக் கரகரத்த கட்டைக் குரலில் அடிக்கடி இப்படிச் சொன்னான்:

''பொதுவாக, இதெல்லாம் வெட்டிப் பேச்சு!''

''ஆனால் எதுதான் வெட்டிப் பேச்சு இல்லை?''

''உங்களுக்கு எப்படிச் சொல்வது?'' என்று கவர்ச்சி அற்ற சாம்பல் நிற விழிகளை விட்டத்தின் பக்கம் உயர்த்தி, சிந்தனை ததும்பக் கேட்டான், அப்புறம் ஒன்றும் பேசவில்லை.

எதனாலோ அவன் மற்றவர்களுக்குக் காட்டுவதற்காகவே போல, சிறப்பாகத் தாங்கக் கடினமான விதத்தில் சலிப்பூட்டினான். எனக்கு எல்லாவற்றையும் விட அவனது இந்தப் போக்

கினால் அதிக எரிச்சல் உண்டாயிற்று. அவனுக்குக் குடியினால் போதை மெதுவாகவே ஏறிற்று. போதை ஏறியதும் கிண்டலாக மூக்கால் செருமினான். இந்தத் தன்மைகளைத் தவிர வேறு எதையும் நான் அவனிடம் காணவில்லை, ஏனென்றால், நிலவும் ஒரு சட்டத்தின் படி மனைவியை நைச்சியம் பண்ணும் மனிதன் கணவனின் நோக்கில் எப்போதும் கெட்டவன்.

உக்ரைனில் ஓர் இடத்திலிருந்து பணக்கார உறவினன் ஒருவன் முன்னாள் லித்சேய் மாணவனுக்கு மாதா மாதம் ஐம்பது ரூபிள் அனுப்பி வந்தான். அந்தக் காலத்தில் இது பெரிய தொகை. விழா நாட்களில் முன்னாள் லித்சேய் மாணவன் என் மனைவிக்கு மிட்டாய்கள் வாங்கி வந்து கொடுத்தான். அவளுடைய பிறந்த நாளில் ஒரு அலாரம் கடிகாரம் பரிசளித்தான்—வெண்கல அடிமரத் துண்டின் மேல் ஆந்தை பச்சைப் பாம்பைக் குத்திக் கிழிப்பது போன்ற உருவம் அமைந்தது.

அந்த அசிங்கம் பிடித்த கருவி வேண்டியதற்கு ஒரு மணி ஏழு நிமிடங்கள் முன்னதாக என்னை எப்போதும் எழுப்பித் தொலைத்தது.

என் மனைவி முன்னாள் லித்சேய் மாணவனோடு காதல் பசப்பை நிறுத்தி விட்டு, ஓர் ஆடவனின் உளச் சீரைக் குலைத்ததில் தன்னைக் குற்றவாளியாக எண்ணிய மாதுக்கு ஏற்ற கனிவை அவனிடம் காட்டத் தொடங்கினாள். அவளுடைய கருத்துப்படி இந்தத் துயரக் கதை எதில் போய் முடிய வேண்டும் என்று நான் அவளிடம் கேட்டேன்.

''தெரியாது'' என்று விடை இறுத்தாள் அவள். ''எனக்கு அவன் விஷயத்தில் குறிப்பான உணர்ச்சி எதுவும் இல்லை, ஆனால், அவனைக் குலுக்கிக் கொட்ட ஆசையாய் இருக்கிறது. அவனுக்குள் எதுவோ உறங்கிக் கிடக்கிறது, அதைத் தட்டி எழுப்ப என்னால் முடியும் என்று தோன்றுகிறது.''

அவள் உண்மை சொல்கிறாள் என்பதை நான் அறிந்திருந்தேன். பேர் பேராக எல்லோரையும் தட்டி எழுப்ப அவளுக்கு ஆசையாய் இருந்தது. இதில் அவள் மிக எளிதாக வெற்றி பெற்று வந்தாள். ஒரு அன்பனை எழுப்பினாள். அவனுக்குள் ஏதோ விலங்கு விழிப்படைந்தது. ஆண்களை மயக்கி வந்த கிரேக்கப் புராண அணங்கான செர்ஸியை அவளுக்கு நினைவுபடுத்தினேன். ஆனால் ஆண்களைக் ''குலுக்கிக் கொட்டும்'' அவளுடைய ஆர்வத்தை இது மட்டுப்படுத்தவில்லை. ஆடுகள்,

எருதுகள், பன்றிகள் ஆகியவற்றின் மந்தை என்னைச் சுற்றிலும் நாளுக்கு நாள் பெருகி வந்ததை நான் கண்டேன்.

தெரிந்தவர்கள் எனது அன்றாடக் குடும்ப வாழ்க்கை பற்றிய திடுக்கிடச் செய்யும் சோகக் கதைகளைத் தாராள மனத்துடன் என்னிடம் கூறினார்கள். நான் ஒளிவு மறைவு இன்றியும் முரட்டுத் தனமாகவும் நடந்து கொண்டேன், கதை கட்டியவர்களை எச்சரித்தேன்:

''நான் உங்களை அடிப்பேன்!''

சிலர் தங்கள் செய்கைக்குப் பொய்யாக நியாயம் கற்பிக்க முயன்றார்கள்; மனத்தாங்கல் கொண்டவர்கள் வெகு சிலர், அவர்களும் நிரம்ப மனத்தாங்கல் கொள்ளவில்லை. என் மனைவி என்னிடம் சொன்னாள்:

''நான் சொல்வதைக் கேள்—முரட்டுத்தனத்தால் நீ எதையும் சாதிக்கப் போவதில்லை, ஆட்கள் இன்னும் மோசமாகப் பேசுவதுதான் விளையும்! நீ தான் பொறுமைப்படவில்லையே!''

ஆம், நான் இளைஞனாகவும் மிகுந்த தன்னம்பிக்கை கொண்டவனாகவும் இருந்ததால் பொறுமைப்படவில்லைதான். ஆனால், சில உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் அனுமானங்களையும் ஒருவன் காதல் நங்கையிடம் மட்டுமே கூறுகிறான், வேறு யாரிடமும் கூறுவதில்லை. பெண்ணோடு உறவாடுகையில் குறித்த நேரத்தில் ஒருவன் தனக்குத் தானே அன்னியன் ஆகி, தெய்வ நம்பிக்கை உள்ளவன் தன் கடவுள் முன்னர் தன்னை வெளிப்படுத்துவது போல அவளுக்கு முன் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறான். பெரிதும் எனக்கு உரிய, எனக்கு மட்டுமே சொந்தமான இந்த எல்லா விவரங்களையும் அந்தரங்கக் கணங்களில் அவள் வேறு ஒருவனுக்குத் தெரிவிக்கக்கூடும் என்று எண்ணிய போது எனக்குக் கஷ்டமாய் இருந்தது. துரோகத்துக்கு மிக நிகரான ஒன்று சாத்தியம் என நான் உணர்ந்தேன். ஒரு வேளை இந்த அச்சமே பொறுமையின் வேராக விளங்குகிறதோ?

இந்த மாதிரி வாழ்க்கை என்னை முடக்கி நான் சென்று கொண்டிருந்த பாதையிலிருந்து பிறழ்விக்கக் கூடும் என்று உணர்ந்தேன். இலக்கியத்தைத் தவிர வேறு எந்த இடமும் வாழ்க்கையில் எனக்கு இல்லை என்று ஏற்கெனவே எண்ணத்

தொடங்கி இருந்தேன். குடும்பத்தில் இருந்த நிலைமைகளில் வேலை செய்வது அசாத்தியமாக இருந்தது.

மனிதர்கள் மீது, உளமார்ந்த அக்கறையையோ மரியாதையையோ இழக்காமல் அவர்கள் விஷயத்தில் பொறுமையைக் கடைப்பிடிக்க வாழ்க்கைப் போக்கில் நான் கற்றிருந்தது பெருத்த சண்டை சச்சரவுகளிலிருந்து என்னைத் தடுத்து வைத்திருந்தது.

கலப்பற்ற உண்மை என்னும் அறிய முடியாத கடவுளுக்கு முன் எல்லா மனிதர்களும் ஏதேனும் ஓர் அளவில் பாவிகள் என்பதையும் நன்னெறியாளர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் மனிதனுக்கு முன் சிறப்பாகப் பாவம் செய்கிறார்கள் என்பதையும் நான் அப்போதே கண்டேன். நன்னெறியாளர்கள் தீமையும் நன்மையும் புணர்ந்ததால் தோன்றிய கலப்புப் பிறவிகள். இந்தப் புணர்ச்சி நன்மையைத் தீமையோ, பின்னதை முன்னதோ செய்யும் பலாத்காரம் அல்ல, மாறாக அவற்றின் முறையான திருமணத்தின் விளைவு ஆகும். முரண்நகைத் தன்மை கொண்ட இன்றியமையாமை இந்தத் திருமணத்தில் பாதிரியின் பாத்திரத்தை வகிக்கிறது. திருமணமோ, புனிதச் சடங்கு ஆகும். அதன்படி இரண்டு ஒளியுள்ள எதிர்நிலைகள் இணைந்து சோர்வூட்டும் மட்டப் பிறவியை அநேகமாக எப்போதும் பெறுகின்றன. சிறுவனுக்கு ஐஸ்கிரீம் பிடிப்பது போல அந்தக் காலத்தில் முரணுரைகள் எனக்குப் பிடித்திருந்தன. அவற்றின் கூர்மை நல்ல மது போல எனக்குக் கிளர்ச்சி ஊட்டியது. சொற்களின் முரண் பாடு உண்மை நிகழ்ச்சிகளின் நெருடான, புண்படுத்தும் முரண்பாடுகளை மென்மை ஆக்கியது.

''நான் போய் விட்டால் நன்றாய் இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது'' என்று மனைவியிடம் சொன்னேன்.

சற்று சிந்தனை செய்த பின் அவள் இசைந்தாள்:

''ஆம், நீ சொல்வது உண்மை! இந்த வாழ்க்கை உனக்கு ஏற்றது அல்ல என்பது எனக்குப் புரிகிறது!''

நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் இறுகத் தழுவிக் கொண்டு சிறிது நேரம் மௌனமாகக் கொஞ்சம் வருத்தத்தில் ஆழ்ந்திருந்தோம். பிறகு நான் நகரத்திலிருந்து வெளியேறி னேன். அவளும் மன்றத்தில் நடிக்கத் தொடங்கி நகரை விட்டுப் போய் விட்டாள். இவ்வாறு முடிவுற்றது என் முதல்

காதலின் கதை — முடிவு மோசமாய் இருந்தாலும் நல்ல கதை.

அண்மையில் என் முதல் காதலி காலமானுள்.

அவளேப் பாராட்டிக் கூறுகிறேன்: அவள் உண்மையான பெண்மணியாக விளங்கினுள்! இருந்ததை வைத்துக் கொண்டு வாழ அவளால் முடிந்தது, ஆனுல் ஒவ்வொரு நாளும் அவளுக்கு விழாவின் தலேக்கு நாளாக இருந்தது. மறு நாள் அசாதாரணமான புதிய பூக்கள் உலகில் மலரும், அபூர்வ சுவாரசியமுள்ள ஆட்கள் எங்கிருந்தோ வருவார்கள், வியப்பூட்டும் நிகழ்ச்சிகள் நடந்தேறும் என்று அவள் ஓயாமல் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

வாழ்க்கையின் இன்பமற்ற கட்டங்களேக் கேலியுடனும் ஓரளவு இகழ்ச்சியுடனும் நோக்கிய அவள் கொசுக்களே விரட்டுவது போல அவற்றை உதறித் தள்ளி விடுபட்டு வந்தாள். மகிழ்ச்சியும் வியப்பும் அடைவதற்கு ஆயத்தமான நிலேயில் அவள் உள்ளம் எப்போதும் துடிதுடித்துக் கொண்டிருந்தது. ஆனுல் இப்போது இது கல்லூரி மாணவியின் பேதைமை நிறைந்த பரவசம் அல்ல, வாழ்க்கையின் ஒளியும் நிழலும் கலந்த பரபரப்பையும் மனிதர்களின் இன்ப-துன்பச் சிடுக்குகள் விழுந்த உறவுகளேயும் கதிரொளியில் புழுதித் துகள்கள் போன்று மினுமினுக்கும் சிறு நிகழ்ச்சிகளின் பெருக்கையும் விரும்பி ரசிக்கும் நபரின் உள நலம் வாய்ந்த மகிழ்ச்சி இது.

அன்பர்களே அவள் நேசித்தாள் என்று சொல்ல மாட்டேன். ஆனுல் அவர்களே ஆராய்ந்து பார்ப்பது அவளுக்குப் பிடித்திருந்தது. தம்பதியருக்கும் காதலர்களுக்கும் இடையே செயற்கையாகப் பொறுமையைத் தூண்டி விட்டும் அன்புப் பிணேப்பை உறுதிப்படுத்தியும் அன்ருட நிகழ்ச்சிப் போக்கைச் சில வேளேகளில் அவள் விரைவுபடுத்தினுள், அல்லது சிக்கலாக்கினுள். இந்த ஆபத்தான விளேயாட்டில் அவள் நிரப்பப் பற்று கொண்டிருந்தாள்.

''காதலும் பசியும் உலகை ஆள்கின்றன, தத்துவமோ, உலகின் துர்ப்பாக்கியம்'' என்ருள் அவள். ''மக்கள் காதலுக்காக வாழ்கிருர்கள், வாழ்க்கையின் யாவற்றிலும் முதன்மை வாய்ந்த செயல் இதுவே.''

எங்களுக்குத் தெரிந்தவர்களில் ஒருவன் அரசாங்க வங்கி அலுவலன். நெடிய, மெலிந்த மேனியினனுன அவன் நாரை

போன்று மெதுவாகவும் மிடுக்குடனும் நடந்தான், கச்சிதமாக உடை அணிந்தான், அக்கறையுடன் தன்னைப் பார்வையிட்டு, தன் கோட்டின் மேலிருந்து தன்னைத் தவிர வேறு எவர் கண்ணுக்கும் தெரியாத துகள்களை வறண்ட மஞ்சள் விரல்களால் சுண்டிப் போக்கினான். சொந்தச் சிந்தனையும் சுவையுள்ள சொற்களும் அவனுக்குப் பகை. அவனுடைய உணர்ச்சி அற்ற, துல்லியமான நாக்கை அவை அருவருத்தன போல் இருந்தது. அவன் ஆழ்ந்த தோரணையில் அறிவுறுத்தும் பாங்கில் பேசினான். எப்போதும் விவாதத்துக்கு இடமில்லாத கருத்தையே வெளியிட்டான். அந்த மாதிரி எதையேனும் சொல்வதற்கு முன்னால், அடர்த்தி அற்ற செம்பட்டை மீசையைச் சில்லிட்ட விரல்களால் சரிப்படுத்திக் கொண்டான்.

''மூலப் பொருள்களைப் பதனிடும் தொழில் துறையில் வேதி இயல் நாளடைவில் மேலும் மேலும் அதிக முக்கியத்துவம் பெறும். மாதர்கள் சபல சித்தம் உள்ளவர்கள் என்று முற்றிலும் நியாயமாகக் கூறப்பட்டிருக்கிறது. மனைவிக்கும் வைப்பாட்டிக்கும் இடையே சட்ட நோக்கில்தான் வேறுபாடு உண்டு, உடலியல் வேறுபாடு கிடையாது.''

நான் மனைவியிடம் ஆழ்ந்த முறையில் கேட்டேன்:

''எல்லாச் சான்றதிகாரிகளும் சிறகுடையவர்கள் என்று வலியுறுத்தும் நிலையில் நீ இருக்கிறாயா?''

அவள் குற்றம் செய்தவள் போன்ற தோற்றத்துடன் துயரக் குரலில் விடையளித்தாள்:

''இல்லவே இல்லை, நான் இந்த நிலையில் இல்லைதான், ஆனால் ஒன்றை மட்டும் வலியுறுத்துகிறேன்: யானைகளுக்கு அரை வேக்காட்டு முட்டையைத் தீனியாகக் கொடுப்பது நகைப்புக்கு இடமாகும்!''

எங்கள் நண்பன் இந்த மாதிரி உரையாடலை ஓரிரண்டு நிமிடங்கள் கேட்டுக் கொண்டிருந்து விட்டு, கூர்ந்த அறிவு துலங்க வாய் மலர்ந்தான்:

''இதை எல்லாம் நீங்கள் முற்றிலும் ஆழ்ந்த தன்மை இன்றிப் பேசுகிறீர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது.''

ஒரு தடவை, மேஜையின் காலில் முழங்காலால் வலிக்கும் படி இடித்துக் கொண்டவன், முகத்தைச் சுளித்து, முழு உறுதியுடன் கூறினான்:

''திட்பம் சடப் பொருளின் விவாதத்துக்கு இடமற்ற பண்பு...''

சில சந்தர்ப்பங்களில், அவனை விடை கொடுத்து அனுப்பி விட்டு, என் மனைவி என்னுடைய மடியில் சாய்ந்து கொண்டு, இன்பக் கிளர்ச்சியும் உற்சாகமும் பொங்க, குதூகலமாக மொழிந்தாள்:

''நீயே பாரேன், எவ்வளவு முழுமையான, எவ்வளவு முற்றுன அசடன் இவன் என்று. எல்லாவற்றிலும் அசடன், நடை, சைகைகள் ஆகியவற்றில் கூட—எல்லாம் அசட்டுத் தனமானவை. எடுத்துக் காட்டான மாதிரி என்ற வகையில் இவனை எனக்குப் பிடித்திருக்கிறது. என் கன்னங்களைத் தடவிக்கொடு!''

முகத் தோலை விரல்களால் பட்டும் படாமலும் வருடிய வாறு, அவளுடைய இனிய விழிகளின் அடியில் சற்றே தென் பட்ட சுருக்கங்களை நான் சீராக்கியதை அவள் விரும்பினுள். கண்களைச் சுருக்கிக் கொண்டு சுருண்டு அவள் பூனைக்குட்டி போல முறுமுறுத்தாள்:

''மனிதர்கள்தாம் எவ்வளவு வியப்பூட்டும்படிச் சுவாரசிய மானவர்கள்! ஒருவன் எல்லோருக்கும் சுவையற்றவனுக இருக்கும் போது கூட, எனக்கு உற்சாகமூட்டுகிறுன். ஒரு டப்பியைத் திறந்து பார்ப்பது போல அவனுக்குள் பார்வை செலுத்த எனக்கு ஆசை உண்டாகிறது. ஒருவர் கவனத்தை யும் கவராத, ஒரு போதும் காட்டப்படாத ஒரு பொருள் அதில் இருக்கலாம், நான் ஒருத்தி மட்டுமே, நானே முதன் முதலில், அதைப் பார்க்கலாமே.''

''ஒருவர் கவனத்தையும் கவராத'' பொருளுக்காக அவள் நடத்திய தேட்டங்களில் இறுக்கம் இல்லை. தனக்குப் பழக்கம் இல்லாத அறைக்கு முதல் தடவை வந்த குழந்தை யினது போன்ற மன நிறைவுடனும் ஆவலுடனும் அவள் தேடினுள். நம்பிக்கைக்கு இடமற்ற வகையில் சலிப்பான மனித னின் மங்கிய விழிகளில் தீவிரமான சிந்தனையைக் காட்டும் பளிச்சிடும் ஒளிர்வைச் சில சந்தர்ப்பங்களில் அவள் மெய் யாகவே தோற்றுவித்தாள், ஆனல், அடிக்கடி அவள் தூண்டி விட்டது, அவளைப் பெண்டாள வேண்டும் என்ற பிடிவாத மான விருப்பமே.

அவள் தன் மேனியை விரும்பினுள். கண்ணுடியின் முன் அம்மணமாக நின்று வியந்தாள்:

''எவ்வளவு இனிமையாக உருவாகி இருக்கிருள்—பெண்! அவளிடம் எல்லாம் எப்படிப் பொருத்தமாக இசைந் திருக்கின்றன!''

அவள் சொன்னுள்:

''நன்ருக உடை அணிந்திருக்கும் போது அதிக உடல் நலமும் வலிமையும் அறிவும் பெற்று விட்டது போல எனக்குத் தோன்றுகிறது!''

இது உண்மை. பாந்தமாக உடை அணிந்திருக்கையில் அவள் அதிகக் குதூகலம் அடைந்தாள், அதிக அறிவுக்கூர்மை காட்டினுள், அவளுடைய விழிகள் வெற்றிப் பெருமிதத்துடன் சுடர்ந்தன. சீட்டித் துணியைக் கொண்டு தனக்கு அழகாக உடைகள் தைத்துக் கொள்ள அவளுக்கு முடிந்தது. பட்டையும் வெல்வெட்டையும் போல அவற்றை அணிந்தாள். எப்போதும் மிக எளிமையாக உடுத்தாலும் சிறப்பாக உடை அணிந்தவள் போல எனக்குக் காணப்பட்டாள். அவளுடைய ஆடை அணிகளை மாதர்கள் வியந்து பாராட்டினுர்கள். அவர்களுடைய பாராட்டுரைகள் எப்போதும் உண்மையாக இல்லாவிடினும் எப்போதுமே மிக உரக்க ஒலித்தன. அவளிடம் அவர்கள் பொருமை கொண்டார்கள். எனக்கு நினைவு இருக்கிறது, அவர்களில் ஒருத்தி வருத்தத் துடன் கூறினுள்:

''என்னுடைய உடை உங்களுடையதைக் காட்டிலும் மும்மடங்கு அதிக விலை உள்ளது, ஆனுல் பத்து மடங்கு மோசமாய் இருக்கிறது. உங்களைப் பார்த்தால் எனக்கு நெஞ்சு வலிக்கிறது, மனத்தாங்கல் உண்டாகிறது!''

மாதர்களுக்கு அவளைக் கண்டாலே கரித்தது. எங்களைப் பற்றி அவர்கள் வம்புக் கதைகள் கட்டினுர்கள் என்று சொல்லவே வேண்டியதில்லை. எங்களுக்குப் பழக்கமான ஒரு துணை மருத்துவச்சி நிரம்ப அழகியவள், இன்னும் அதிகமாக, அறிவற்றவள். இவள் பெருந்தன்மையுடன் என்னை எச்சரித் தாள்:

''இந்தப் பெண்பிள்ளை உங்கள் இரத்தத்தை எல்லாம் உறிஞ்சிக் குடித்து விடுவாள்!''

என் முதல் மனைவியுடன் வாழ்ந்து பல விஷயங்களை நான்

கற்றுக் கொண்டேன். ஆயினும் எனக்கும் அவளுக்கும் இடையே இருந்த சரிப்படுத்த முடியாத வேறுபாட்டின் தீராமை என்னை நெருப்பாய்ச் சுட்டது.

வாழ்க்கையை நான் ஆழ்ந்த பிரச்சினையாகக் கருதினேன். நான் அளவு கடந்து நிறையக் கண்டும் சிந்தித்தும் இருந்தேன். இடையறாத கலவரம் என் உள்ளத்தில் நிறைந்திருந்தது. சுருதி சேராத குழுப் பாட்டுப் போல என் மனத்தில் கூச்சலிட்டுக் கொண்டிருந்தன கேள்விகள். இந்த இனிய நங்கையின் உணர்வுக்கு அறவே புறம்பானவை அவை.

தோற்றப் பொலிவு உள்ளவனும் ஒற்றைக் கண்ணனுமான ஒரு யூதனை, காய்கறிக்காரனிடம் முள்ளங்கி வேர்க் கொத்தைத் திருடியதாகக் குற்றம் சாட்டி, ஒரு நாள் சந்தையில் போலீஸ்காரன் அடித்து நொறுக்கி விட்டான். நான் அந்தக் கிழவனை வீதியில் சந்தித்தேன். மேல் காலெல்லாம் ஒரே புழுதியாக, ஓவியக் காட்சி போன்ற ஒருவகைப் பெருமிதம் துலங்க, அவன் மெதுவாக நடந்தான். அவனுடைய பெரிய கரு விழி வெப்பம் நிறைந்த வெறும் வானத்தைக் கடுப்புடன் நோக்கியது. உடைந்த வாயிலிருந்து மெல்லிய தாரைகளாக நீண்ட வெண் தாடி மீது வழிந்த இரத்தம் வெள்ளி மயிர்களுக்குப் பளிச்சிடும் கருஞ் சிவப்பு வண்ணம் பூசியது.

முப்பது ஆண்டுகளுக்கு முன் நடந்தது இது. ஆனால், ஒலியற்ற கண்டனம் துலங்க வானை நோக்கிய அந்தப் பார்வையை இப்போது இதோ என் கண் முன் காண்கிறேன். கிழவனுடைய முகத்தில் புருவங்களின் வெள்ளி ஊசிகள் நடுங்குவதைக் காண்கிறேன். மனிதனுக்கு இழைக்கப்பட்ட அவமானங்கள் நினைவை விட்டு அகல மறுக்கின்றன—அவை ஒருபோதும் மறக்க மாட்டா!

துயரத்தாலும் சீற்றத்தாலும் சிதைந்து அறவே சாம்பிய உள்ளத்துடன் நான் வீடு திரும்பினேன். இத்தகைய அனுபவங்கள் என்னை வாழ்க்கையிலிருந்து வெளியே நெட்டித் தள்ளின. நான் அதில் வேற்று மனிதன் ஆகி விட்டேன். உலகத்தில் உள்ள எல்லா அழுக்கும் அசட்டுத்தனமும் பயங்கரமும் நெஞ்சத்தை அவமதிக்க வல்ல யாவும் எவனுக்கு வேண்டுமென்றே—அவனைச் சித்திரவதை செய்வதற்காக—காட்டப்படுகின்றனவோ அத்தகைய வேற்று மனிதன் ஆகிவிட்டேன்

நான். எனக்கு மிகவும் நெருங்கியவள் என்னிடமிருந்து எத்தகைய தொலைவில் இருக்கிறுள் என்பதை அந்த நேரங் களில், அந்த நாட்களில் தான் நான் சிறப்பான தெளிவுடன் கண்டேன்.

அடிபட்ட யூதனைப் பற்றி நான் அவளிடம் சொன்ன போது அவள் மிகுந்த வியப்பு அடைந்தாள்:

''ஆக—இதனுலா நீ மனதை இப்படி அலட்டிக் கொள் கிருய்? ஐயையோ, உனக்குக் கடுமையான நரம்புத் தளர்ச்சி!''

பிறகு கேட்டாள்:

''அவன் அழகான கிழவன் என்கிருயே? அவன் ஒற்றைக் கண்ணன் என்ருல் எப்படி அழகன் ஆவாஞம்?''

எல்லா வகையான துன்பமும் அவளுக்குப் பகையாக இருந்தது. துன்ப நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்களைக் கேட்க அவளுக்குப் பிடிக்கவில்லை. மெல்லுணர்ச்சிக் கவிதைகள் அவளுடைய நெஞ்சத்தை அனேகமாகத் தொடவில்லை. மகிழ் பொங்கிய சிறு இதயத்தில் அனுதாபம் அரிதாகவே கிளர்ந்தது. அவளுக்குப் பிடித்த கவிஞர்கள் பெரான்ழேயும் சிரித்துக் கொண்டே வதைபட்ட மனிதரான ஹேய்னேயும் தாம்.

மாய வித்தைக்காரனுடைய எல்லையற்ற திறமையில் குழந்தைக்கு உள்ள நம்பிக்கை போன்ற ஒன்று வாழ்க்கை பால் அவள் கடைப்பிடித்த போக்கில் இருந்தது: காட்டப்பட்ட எல்லா வித்தைகளும் சுவையானவை, ஆனுல் யாவற்றிலும் சுவையானது இனிமேல் தான் வரப்போகிறது. அடுத்த மணியில் அது காட்டப்படும்—அல்லது ஒருவேளை நாளைக்கு, ஆனுல் கட்டாயம் காட்டப்படும்!

தனது சாவின் போதும் இந்தக் கடைசியான, முற்றிலும் புரியாத, வியப்பூட்டும் இலாகவம் வாய்ந்த வித்தையைக் காணலாம் என அவள் முடிவு வரை நம்பிக் கொண்டிருந்தாள் என்று நினைக்கிறேன்.

விளக்கக் குறிப்புகள்

மக்சீம் கோர்க்கி என்னும் புனை பெயர் கொண்ட எழுத்தாளரின் முதல் படைப்பான ஜிப்ஸி என்னும் சிறுகதை 1892ம் ஆண்டில் வெளியான போது அதை இயற்றிய நீழ்னி நோவ்கரத்* தொழிற்சாலைத் தொழிலாளி அலெக்சேய் பெஷ்கோவுக்கு இருபத்து நான்கு வயது. ஆனால் அதற்குள் அவர் கணக்கற்ற சோதனைகளுக்கு உள்ளாகி, எண்ணற்ற துன்பங்கள் பட்டு வளமான வாழ்க்கை அனுபவங்களைத் திரட்டி இருந்தார். இந்த விஷயத்தில் அவருக்கு ஈடாவது அவருக்கு முந்தியவர்களும் சமகாலத்தவர்களுமான எழுத்தாளர்களில் அரிதாகவே எவருக்கேனும் இயன்றிருக்கும்.

வேலை செய்து சம்பாதிக்கும் நோக்கத்துடன் இருபது வயது இளைஞர் கோர்க்கி ருஷ்யாவின் தென் பகுதி முழுவதையும் — உக்ரைன், பெஸ்ஸரேபியா, கிரிமியா, காக்கேஷியா முதலியவற்றை—கால் நடையாகச் சுற்றி வந்தார்...

ருஷ்யாவில் சுற்றித் திரிந்த ஆண்டுகளில் அவர் தமது பாதைகளில் யார் யாரைத் தான் எதிர்ப்படவில்லை!

மனிதர்கள் மீது துடியாக ஆழ்ந்த கவனம் செலுத்துவது கோர்க்கியின் இயல்பாக இருந்தது. எனவே அவர்கள் இந்த இளம் சுற்றுப் பயணிக்குத் தங்கள் உள்ளத்தை விருப்புடன் திறந்து காட்டினார்கள், தங்கள் வாழ்க்கையில் நடந்த பரபரப்பூட்டும் நிகழ்ச்சிகள், வேடிக்கையான சம்பவங்கள், துயரக் கதைகள் முதலியவற்றை அவருக்கு விவரித்தார்கள்.

---

* இப்போது இந்நகரம் அதில் வாழ்ந்த மாமேதை கோர்க்கியின் பெயரைத் தாங்கியுள்ளது.—ப-ர்.

மக்சீம் கோர்க்கியின் முதல் நூல்கள் 1898ல் வெளிவந்தன, **கட்டுரைகளும் சிறுகதைகளும்** என்னும் சிறு தொகுப்புகள் பெருத்த வெற்றி பெற்றன, அந்தோன் சேகவ், லேவ் தல்ஸ்தோய் ஆகியோரின் வரிசையில் கோர்க்கியை வைத்தன.

மக்சீம் கோர்க்கியின் தொடக்ககாலப் படைப்புக்களில் அச்சமற்ற நடப்பியல் உண்மைச் சித்திரிப்போடு, அத்தகைய இடர் மிக்க வாழ்க்கை வாழ்ந்தவர் விஷயத்தில் வியப்பூட்டக் கூடிய உற்சாகப் பெருக்கும் ''துணிவுள்ளவர்களின் வெறிக்கு'' வீரகாவியப் பாங்கில் புகழ்ச்சி பாடலும் இணைந்திருந்தன.

இளம் கோர்க்கியின் புகழ் பெற்ற வீர-கற்பனைப் படைப்புக்களான **ஜிப்ஸி, கிழவி இஸெர்கீல்** இரண்டும் இந்தத் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

கிழவி இஸெர்கீல் என்னும் சிறுகதை மிகச் சுவையுள்ளது, எடுத்துக்காட்டானது. ஒவ்வொரு மனிதனுக்கும் சாத்தியமான மூன்று வழிகளை இந்தப் படைப்பின் மூன்று பகுதிகள் ஒளியுறுத்துகின்றன. தனிமை எல்லாவற்றிலும் பெரிய துன்பம், சாவு கூட அதைவிடக் குறைந்த தண்டனையே என்று போதிக்கிறது லாராவின் வாழ்க்கை வரலாறு. தான்கோவின் எரியும் இதயம் பற்றிய, கதையின் கடைசிப் பகுதி மக்களின் விடுதலைக்காகத் தன்னைப் பலி கொடுப்பது எத்தகைய இன்பம் என்பதை விவரிக்கிறது.

இஸெர்கீலின் வாழ்க்கையை வருணிக்கும் கதையின் மையப் பகுதி கூறுவது என்ன? அருஞ் செயல்கள் ஆற்றும் அதே சமயத்தில் தனக்காக மட்டுமே, சொந்த இன்பத்திற்காக மாத்திரமே வாழ்வது முடியாது, தான்கோவாகவும் லாராவாகவும் ஒரே சமயத்தில் இருக்க முடியாது. ஏன் முடியாது என்றால், இஸெர்கீல் இளமையில் இருந்தது போல வலிமையும் துணிவும் உள்ள நபரின் உள்ளத்தில் அப்போது ''அச்சம் நிறைந்த அடிமைக் குரல்'' ஒலிக்கத் தொடங்கிவிடும்.

''வாழ்க்கையின் அடித் தளத்தில்'' எறியப்பட்டவர்களும் ஆனால் ருஷ்ய சுபாவத்துக்கு இயல்பான பண்புகளை—தொன்று தொட்டு நிலவி வரும் பரந்த மனப்பான்மை, இயற்கைத் திறமை, இன்பம் பற்றிய அமைதியற்ற கனவு ஆகிய

வற்றை—இன்னும் இழந்து விடாதவர்களுமான மனிதர்களைத் தம் சுற்றுப் பயணங்களின் போது கோர்க்கி சந்தித்தார். முதலாளித்துவ சமூகத்தால் விலக்கப்பட்ட மனிதர்களான உரிமைகள் அற்ற நாடோடிகள் பற்றிய கதைகள் (**திருடன், கனவாலவ், அர்லோவ் தம்பதி,** முதலியன) இவ்வாறு தோன்றின.

உரிமைகள் அற்ற நாடோடிகளையும் அவர்களுடைய விடுதலை வேட்கையையும் உடைமைகள் பால் அவர்களுடைய வெறுப்பையும் வாழ்க்கை உண்மையின் தேட்டங்களையும் கோர்க்கி அனுதாபத்துடன் சித்திரிக்கிறார். ஆனால் உரிமைகள் அற்ற நாடோடிகள் கோர்க்கியின் பாராட்டுக்குரிய கதாநாயகர்களாக விளங்கவில்லை. பின்பற்றக் தக்க மாதிரிகளாக அல்ல, மனித சுபாவத்தையும் இயற்கைத் திறமைகளையும் சிறந்த விருப்பங்களையும் திரித்து விகாரப்படுத்திய பழைய உலகின் ''குற்றங்களைக் காட்டும் பொருட் சான்றுகளாக'' அவர்களை உருவகப் படுத்தினார் கோர்க்கி.

சிறுகதை எழுத்தாளர் என்ற முறையில் விதம் விதமான கருப் பொருள்களைக் கொண்டு கதைகள் புனைவது கோர்க்கியின் சிறப்புப் பண்பு. தாழ்நிலையினரின் வாழ்க்கையை நடப்பியல் நோக்கில் சித்திரித்ததோடு கூடவே ''வாழ்க்கையின் உரிமையாளர்களான'' ருஷ்ய வர்த்தகர்கள், பிராந்திய நடுத்தர வகுப்பினர் ஆகியவர்களையும் அவர் காட்டுகிறார், அவர்களுடைய ஊழல்களை அம்பலப்படுத்துகிறார் (**சலிப்பைப் போக்கிக் கொள்ள**).

1905ல் நடந்த முதலாவது ருஷ்யப் புரட்சிக்கு முன் ருஷ்யாவில் தோன்றிய விறல் மிக்க புரட்சி ஏற்றம் எழுத்தாளரும் சமூக ஊழியருமான கோர்க்கி மீது பெருத்த பாதிப்பு நிகழ்த்தியது. உணர்ச்சியூட்டும் **புயற்பறவை குறித்த பாட்டு** உலகப் பிரசித்தி பெற்ற நவீனமான **தாய்** ஆகியவற்றின் வாயிலாக இந்த ஏற்றத்தால் தமக்கு ஏற்பட்ட உள்ளக் கிளர்ச்சியை அவர் வெளியிட்டார்.

வி.இ.லெனினைச் சந்தித்ததும் அவரோடு நட்பாடியதும் கோர்க்கிக்கு நிர்ணயகரமான முக்கியத்துவம் கொண்டிருந்தன. வி. இ. லெனின் எழுத்தாளர் என்ற முறையில் கோர்க்கியின் இயற்கைத் திறமையை உயர்வாக மதித்தார். அவரைப் ''புரட்சியின் வரவை முன்னறிவித்த புயற்பறவை''

என்று அழைத்தார். கோர்க்கி ''தமது மாபெரும் கலைப் படைப்புக்கள் மூலம் ருஷ்யாவினதும் உலகு அனைத்தினதும் தொழிலாளர் இயக்கத்துடன் தம்மை உறுதியாகப் பிணைத்துக் கொண்டார்''* என்று கூறினர்.

ஜிப்ஸி

ம. கோர்க்கி என்ற புனை பெயரில் முதன் முதலில் வெளியான அ. பெஷ்கோவின் படைப்பு. இந்தச் சிறுகதை **கவ்காஸ்** (''காக்கேஷியா'') என்னும் திப்ளிஸ் நகரச் செய்தித்தாளில் 1892ம் ஆண்டு பிரசுரமாயிற்று. ''எல்லாவற்றையும் வெல்லும் காதலின் வெற்றிப் பாட்டு'' என்று விமர்சகர்கள் இந்தச் சிறுகதையைப் பாராட்டினார்கள்.

என் வழித் துணைவன்

இது கோர்க்கியின் வாழ்க்கை நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கதை. கோர்க்கி ஒதெஸ்ஸாவிலிருந்து திப்ளிசுக்குக் கால்நடைப் பயணம் செய்தது 1891, ஆகஸ்டு—நவம்பரில். கோர்க்கியின் வழித் துணைவன் யார் என்பதும் தெரிந்து விட்டது. யாரோ த்ஸு—த்ஸே (த்ஸுலுகீத்ஸே) என்பவன் அவன். **த்ஸ்னேபிஸ் த்ஸுர்த்ஸேலி** என்ற ஜார்ஜியப் பத்திரிகை அலுவலகத்துக்கு இந்தப் பயணம் பற்றிய தனது வாசகத்தை அவன் கொடுத்திருந்தான்.

திருடன்

கரலேன்கோவின் உதவியால் **ரூஸ்கொயெ பகாத்ஸ்த்வோ** (''ருஷ்யாவின் செல்வம்'') என்னும் தலைநகர்ச் சஞ்சிகையில் வெளியிடப் பெற்ற கோர்க்கியின் முதல் படைப்பு.

---

* வி. இ. லெனின், **நூல் திரட்டு** (V. I. Lenin, *Collected Works*, Vol. 16, Moscow, 1967, p. 106). —ப-ர்.

திருடன் செல்காஷுக்கு 'மூல' மாதிரியாக இருந்தவன் ஒதெஸ்ஸா நாடோடி ஒருவன். நிக்கலாயெவ் என்னும் தெற்கத்தி நகரின் மருத்துவமனையில் கோர்க்கி இவனை அறிமுகம் செய்து கொண்டார். மருத்துவமனையில் அண்டைப் படுக்கையில் கிடந்த இந்த ஆள் சொன்ன நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே கோர்க்கி **திருடன்** என்னும் கதையை எழுதினார்.

கிழவி இஸெர்கீல்

மல்தாவிய நாடோடிக் கதைகளின் அடிப்படையில் கோர்க்கி படைத்த மரபுவழி-கற்பனைக் கதை. அந்தோன் சேகவுக்கு எழுதிய கடிதத்தில் கோர்க்கி பின்வருமாறு குறிப்பிட்டார்: **கிழவி இஸெர்கீல்** கதையைப் போல இசைவான வடிவமைப்புடனும் அழகாகவும் எதுவும் எழுத மாட்டேன் என்று தோன்றுகிறது...''

சலிப்பைப் போக்கிக் கொள்ள

ஸ்தெப்பி வெளியில் எங்கோ ஒதுக்குப் புறத்தில் இருந்த சிறு ரெயில் நிலையவாசிகளான இருதயமற்ற, கொடிய நடுத்தர வகுப்பாரின் கேலிகளால் தொல்லைப்படுத்தப்பட்ட தனிக்கட்டையான, துன்புற்ற மாதின் துயர வாழ்வு பற்றியது இந்தக் கதை. தப்ரீன்கா என்னும் ரெயில் நிலையத்தில் 1888ல் நிறுவைப் பணியாளராக வேலை செய்த போது தாம் கேட்ட உண்மை வரலாற்றின் அடிப்படையில் கோர்க்கி இதை எழுதினார்.

இருபத்தறுவரும் ஒருத்தியும்

மக்ஸீம் கோர்க்கியினது வாழ்க்கையின் கஸான் நகரக் காலப் பகுதியைச் சேர்ந்த விவரங்கள் இந்தக் கதையில் அடங்கியுள்ளன. அப்போது அவர் வஸீலி செமியோனவின் பிஸ்கோத்துத் தொழிலகத்தில் வேலை செய்து வந்தார். **எனது**

பல்கலைக் கழகங்கள் என்னும் நூலில் கோர்க்கி எழுதுகிறார்: ''வாழ்க்கையின் இந்தக் காலப் பகுதி **எசமானன், கனவாலவ், இருபத்தறுவரும் ஒருத்தியும்** என்னும் சிறுகதைகளில் என்னுல் சித்திரிக்கப்பட்டுள்ளது. கடினமான நேரம். ஆனுல் போதனை அளித்தது.

வி. இ. லெனினுக்குப் பிடித்த கோர்க்கியின் படைப்புக்களில் இந்தச் சிறுகதை ஒன்று என ந.க. குருப்ஸ்கயா நினைவு கூர்கிருர்.

இத்தாலி பற்றிய கதைகள்

ஜார் ஆட்சி அதிகாரிகளின் தொல்லைகளிலிருந்து தப்பும் பொருட்டு கோர்க்கி வேறு வழியின்றி இத்தாலி சென்று காப்ரித் தீவில் தங்கி இருந்த போது, 1911—1912ல் அவரால் எழுதப் பெற்றவை இந்தக் கதைகள். போல்ஷிவிக் செய்தித் தாளான **ஸ்விஸ்தாவிலும்** (''விண்மீன்'') அக்டோபர்ப் புரட்சிக்கு முந்திய **பிராவ்தாவிலும்** (''உண்மை'') இவை வெளியிடப்பட்டன. மக்சீம் கோர்க்கியின் **இத்தாலி பற்றிய கதைகளை** வி. இ. லெனின் உயர்வாக மதித்தார். அந்த மாபெரும் இலக்கியப் படைப்பாளருக்கு எழுதிய கடிதங்களில் அவருடைய ஒத்துழைப்புக்காக லெனின் நன்றி தெரிவித்தார். ''சிறந்த **கதைகளால்** நீங்கள் **ஸ்விஸ்தாவுக்கு** மிக மிகப் பெரிய உதவி செய்தீர்கள், இது எனக்கு அளவற்ற மகிழ்ச்சி அளித்தது.''

பிறந்தான் மனிதன்

மக்சீம் கோர்க்கியின் **ருஷ்யாவில்** என்னும் சிறுகதைத் தொடரைச் சேர்ந்தது இது.

இந்தக் கதைக்கு ஆதாரம் கோர்க்கியின் வாழ்க்கை நிகழ்ச்சி: 1892ம் ஆண்டுக் கோடை முடிவில் கோர்க்கி காக்கேஷியாவில் சாலை போடும் வேலை செய்தார். அங்கே, ஆள் நடமாட்டம் இல்லாத ஒரு பாதையில் பேறு கால வேதனை தொடங்கி இருந்த ஒரு மாதைக் கண்டு அவளுக்குப் பிரசவம் பார்த்தார்.

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் *மகிழ்வுடன் வரவேற்கும்.*

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" *என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.*

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்
41-B, Sidco Industrial Estate, Ambattur Madras-600 098

ஷோ-ரூம்
6/30, Mount Road, Madras-600 002

கிளைகள்
80, West Tower St., Madurai-625 001
87/89, Oppanakara St., Coimbatore-641 001
Singarathope, Tiruchirappalli-620 008
Cherry Road, Salem-636 001

М. Горький

ИЗБРАННЫЕ РАССКАЗЫ

На тамильском языке

Перевод сделан по книге:
М. Горький. Полное собрание сочинений
в 25-ти томах. М., «Наука»,
1968—1975. Редактор — Г. И. Дзюбенко.

"பனிக்காலம் தேய்ந்து இளவேனில் தொடங்க இருக்கையில், பகலும் இரவும் சமமான விஷுவம் நெருங்கும் பருவத்தில், நீங்கள் பிறந்தீர்கள். பழைய உலகின் மடிவுடனும் புது உலகின் உதயத்துடனும் தொடர்புள்ள உங்கள் வாழ்க்கையை இந்த நிகழ்வுப் பொருத்தம் உருவகப்படுத்துகிறது." பிரெஞ்சு எழுத்தாளர் ரொமான் ரோலானின் இந்தச் சொற்கள், மாபெரும் பாட்டாளி வர்க்க எழுத்தாளரும், சோவியத் இலக்கியத்தைத் தோற்றுவித்தவரும் ஆன மக்சீம் கோர்க்கி (1868—1936) உலக இலக்கியத்தில் வகிக்கும் இடத்தைக் குறிக்கின்றன.

வாழ்க்கையின் வெவ்வேறு ஆண்டுகளில் கோர்க்கி இயற்றிய படைப்புக்கள் இந்தத் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. கோர்க்கியின் உலகப் புகழ் தொடங்கக் காரணமாய் இருந்த, 1890—1900ல் எழுதப்பட்ட கதைகள் ("கிழவி இஸெர்கீல்", "திருடன்", "ஜிப்ஸி"), "இத்தாலியக் கதைகள்", "ருஷ்யாவில்" (1911—1913) ஆகிய தொடர்களைச் சேர்ந்த குறுங்கதைகள், இறுதி ஆண்டுகளில் இயற்றப் பெற்ற சுயசரிதைக் கதைகள் ஆகியன இவை.